

# எழுத்தாளன்

EZHUTHALAN

சிறப்பு மலர்



விலை ரூ. 4-00

தரத்துக்கும் சேவைக்கும்
தக்கதோர் சின்னமாக
விளங்கும் பெயர்

# வின்ஸெண்ட்

ஸோடா, கலர், கிரஷ், கனிச்சுவை பானங்கள்
ரொட்டி, கேக், பிஸ்கட் தயாரிப்பில்
புகழ் பெற்றவர்கள்.
உபசரணை விருந்துகளுக்கு உற்றபணியாளர்கள்

தலைமை நிலையம்: திருச்சிராப்பள்ளி.
கிளைகள்: சென்னை, மதுரை, நெல்லை, சேலம், கோவை, குடந்தை, காரைக்குடி, கடலூர்.

# எழுத்தாளன்
## சிறப்புமலர்

※

நிர்வாக ஆசிரியர்.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்.

துணை.

T. L. பஞ்சாபகேசன்.

குழந்தைப் பகுதி தொகுப்பு.

திருச்சி பாரதன்.

நாடகப் பகுதி தொகுப்பு.

ரா. நீலமேகம்.

ஓவியர்.

லூர்துசாமி.

அச்சகம்.

கண்ணன் அச்சகம்

தேரடிக் கடைத் தெரு. திருச்சி-2.

# பொருள் அடக்கம்

CONNEMARA PUBLIC LIBRARY
7 - NOV 1964
MADRAS

## மலர் மாலை


| என் | தலைப்பு | | | பக்க எண் |
|---|---|---|---|---|
| 1. | தலையங்கம் | — | ... | 1 |
| 2. | மலர்மணம் | — | ... | 3 |


## சிந்தனை மலர்


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நல்ல இலக்கியம் | — வெ. சாமிநாத சர்மா | ... | 4 |
| 2. | த. எ. அசௌகரியங்கள் | — நா. பார்த்தசாரதி | ... | 13 |
| 3. | அரசியல் முறையும் சாதிப்பிரிவுகளும் | — சுகி சுப்ரமண்யம் | ... | 20 |
| 4. | எ. பேச்சிடையே | — தம்பி சீனிவாசன் | ... | 23 |
| 5. | தகுதிப்பாத்திரம் | — ப. தனுஷ்கோடி | ... | 31 |
| 6. | உயர்வும் தாழ்வும் | — கே. ஆர். பசுபதி | ... | 58 |
| 7. | வள்ளுவரின் சொல்வகை | — அரசப்பனூர் | ... | 60 |
| 8. | பழமையும் புதுமையும் | — கா. பொ. ரத்தினம் | ... | 67 |


## கவிதை மலர்


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மூன்று மறுக்கள் | — கவிஞர் நாணல் | ... | 5 |
| 2. | கவிதைப் பிறவி | — திருச்சிற்றம்பலக் கவிராயர் | ... | 5 |
| 3. | திருநாள் | — கலைமோகன் | ... | 6 |
| 4. | மலர்கள் | — நா. ஷேக்மதார் | ... | 6 |
| 5. | போராட்டம் | — சாலை இளந்திரையன் | ... | 7 |
| 6. | தேனருவி | — கோவி. மணிசேகரன் | ... | 8 |
| 7. | பெண்ணமுதே | — என். எஸ். சிதம்பரம் | ... | 9 |
| 8. | பொன்னேஸ்வரி மாலை | — அரங்க சீனிவாசன் | ... | 9 |
| 9. | கம்பன் உலா | — புத்தனேரி சுப்ரமண்யம் | ... | 10 |
| 10. | கவிமணி | — அழ. வள்ளியப்பா | ... | 12 |
| 11. | இரவுத் தாமரை | — தி. கு. நடராஜன் | ... | 17 |
| 12. | கவி | — இளங்கம்பன் | ... | 19 |
| 13. | சொல்லாகுமா ? | — கி. கோவிந்தராஜன் | ... | 76 |

| எண் | தலைப்பு | | பக்க எண் |
|---|---|---|---|

## கற்பனை மலர்

| | | | |
|---|---|---|---|
| 1. | இயல்பு | — ஏ. எஸ். ராகவன் | 18 |
| 2. | மாணிக்கம் | — ரா. உமாமகேசுவரன் | 37 |
| 3. | பதவி உயர்வு | — வல்லிக்கண்ணன் | 44 |
| 4. | சந்திப்பு | — புஷ்பத்துறை சுப்ரமண்யம் | 48 |
| 5. | கெடுவதில்லை | — பரதேசி | 53 |
| 6. | மணம் | — அன்புமணி | 63 |

## எழில் மலர்

| | | | |
|---|---|---|---|
| 1. | உணர்ச்சியில் உதித்த எழில் | — | 25 |
| 2. | பெரிய இடத்துப்பெண் | — S. ரெங்கநாயகி | 27 |
| 3. | சுயநலக்காரன் | — கே. ஜயலட்சுமி | 33 |
| 4. | சிறை காக்கும் காப்பு | — தேவகி | 39 |
| 5. | கோ(பா)லன் | — எம். எஸ். கமலா | 41 |
| 6. | வழிபிறந்தது | — ப. சாவித்திரி | 50 |
| 7. | புனித சேவை | — ராதிகா | 56 |
| 8. | மீனாட்சித் திருமணம் | — ராஜம் கிருஷ்ணசாமி | 65 |

## தெய்வ மலர்

| | | | |
|---|---|---|---|
| 1. | தாயுமானவர் திருக்கோவில் | — ரெட்டியார் | |
| 2. | Rockfort Temple | — L. C. Richard, M A. | |

## எழுத்து மலர்

| | | | |
|---|---|---|---|
| 1. | Some Distinctive Features of Tamil Literature | — Somalay | 77 |
| 2. | World Literary Trends | — S. R. Raghavan | 79 |
| 3. | Divine Art | — Suddhananda Bharathair | 80 |
| 4. | Rama on the Bank of the Kaveri | — G. C. Pattabiram | 81 |
| 5. | Premchand—a Study | — Madan Gopal | 83 |
| 6. | Bharathi | — S. Sathyamurthi | 85 |
| 7. | The Balance | — V. G. Srinivasan | 90 |
| 8. | North and South | — Suddhananda Bharathiar | 91 |
| 9. | To Chandramathi | — Bharathi | 92 |
| 10. | Premchand Letters' Copyright Case | — | 93 |

| எண் | தலைப்பு | | | | பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 11. | The Writer's responsibility | — | Kodumudi Rajagopalan | ... | 96 |
| 12. | Role of Sangam Literature in Cultural Integration | — | Sowmya | ... | 97 |
| 13. | Preface | — | S. Srinivasa Iyengar | ... | 99 |
| 14. | Popularisation of Tamil Literature in the North. | — | Chandan | ... | 100 |


## பாலர் மலர்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | குழந்தைப்பாடல் | — | மயிலை சிவமுத்து | ... | 101 |
| 2. | மழலை மொழி | — | டி. எஸ். மணி | ... | 102 |
| 3. | சிறந்து வாழ | — | இரா. சண்முகம் | ... | 102 |
| 4. | காணாமல் போனவன் | — | தணிகை உலகநாதன் | ... | 103 |
| 5. | கடலும் சூரியனும் | — | கே. கண்ணுசாமி | ... | 106 |
| 6. | சிட்டுவின் ஏமாற்றம் | — | அன்புமணி | ... | 107 |
| 7. | கதிரவன் | — | அழகனார் | ... | 109 |
| 8. | அம்புலியைப்பார் | — | ஆதி சீனிவாசன் | ... | 109 |
| 9. | அன்பு என்றால் என்ன | — | மேரியண்ணா | ... | 109 |
| 10. | மூக்கு கண்ணாடி | — | வே. ஐயாசாமி | ... | 109 |
| 11. | மழையே வருவாய் | — | மு. எ. நம்பெருமாள் | ... | 110 |
| 12. | நானோர் பூக்காரன் | — | தமிழ்ச் செழியன் | ... | 110 |
| 13. | என் கவிதை | — | புவனை கலைச்செழியன் | ... | 110 |
| 14. | ஒருகணம் பொறுத்திடுக | — | நாக. முத்தையா | ... | 110 |
| 15. | மறைந்த விதம் | — | ந. செல்லப்பன் | ... | 111 |
| 16. | சர்க்கஸ் கோமாளி | — | எ. ந. கணபதி | ... | 111 |
| 17. | சீறவும் தெரியும் | — | பூவண்ணன் | ... | 111 |
| 18. | முருகனும் மயிலும் | — | திருச்சி பாரதன் | ... | 112 |


## வாடா மலர்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கவலை மாற்றும் மருத்து | — | பம்மல் சம்பந்த முதலியார் | ... | 71 |
| 2. | பம்மல் சம்மந்த முதலியார் | — | ரா. நீலமேகம் | ... | 71 |
| 3. | நல்வாழ்வு | — | சி. பி. குமாரவேலு | ... | 74 |
| 4. | வாழ்வு அளித்தவர் | — | அஸ்வத்தாமன் | ... | 114 |
| 5. | புனையா ஓவியம் | — | நடராஜன் | ... | 117 |


## இதய மலர்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | தலைமைக் கவிதை | — | கி. வா. ஜகன்னாதன் | ... | 121 |
| 2. | குமரி மாவட்டம் | — | தமிழ் அழகன் | ... | 122 |
| 3. | திருநெல்வேலி | — | துறைவன் | ... | 125 |
| 4. | மதுரை | — | நா. சீ. வரதராஜன் | ... | 126 |
| 5. | இராமநாதபுரம் | — | ஜகன் | ... | 128 |
| 6. | திருச்சி | — | வித்வான் துரைசாமி | ... | 131 |
| 7. | தஞ்சை | — | மா. வரதராஜன் | ... | 132 |
| 8. | தென்னாற்காடு | — | லால்குடி கிருஷ்ணமூர்த்தி | ... | 134 |
| 9. | சேலம் | — | சே. ர. குமாரசாமி | ... | 135 |
| 10. | கோவை | — | கே. சி. எஸ். அருணாசலம் | ... | 137 |
| 11. | வட ஆற்காடு | — | பு. அ. முத்துகிருஷ்ணன் | ... | 139 |
| 12. | செங்கற்பட்டு | — | நாரண துரைக்கண்ணன் | ... | 141 |

தந்தி : குருக்யூர்ஸ். தபால் பெட்டி : 22. போன் : 248.

60 ஆண்டுகளாகப் புகழ் பெற்றது

## குருமருந்துகள்

பற்களின் பாதுகாப்பிற்கு



## குரு பற்பொடி

தயாரிப்பவர்கள்:-

**டாக்டர் A. மதுரம் சன்ஸ்**

**குருமருந்துசாலை, திருச்சி**

★

# தென் நாடெங்கும்

# பிரக்யாதிபெற்ற

# குருமருந்துகள்

★

குழந்தைகளுக்கு

நோய் பாதுகாப்பிற்கு

## குருமருந்துகளே

உத்திரவாதமானவை.

★

- ★ குரு கஸ்தூரி
- ★ குரு கோரோஜனை
- ★ குரு பால் உப்பு பவுடர்
- ★ குரு வேப்பெண்ணெய்
- ★ குரு பாலர் டானிக்

## தலைவலி

மற்றும் சகல

வலிகளுக்கும்



## குருதைலம்

தயாரிப்பவர்கள்:

**டாக்டர் A. மதுரம் சன்ஸ்**

**குருமருந்துசாலை-திருச்சி.**

## மற்றும் பல

## ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

# INDEX TO ADVERTISERS


| No. | Advertiser | Page No. |
|---|---|---|
| 1 | A. V. M. Studio | V |
| 2 | Abbai Maligai | XIX |
| 3 | Aluminium Industries | IX |
| 4 | Ammapettai H. L. Weavers Co-op., P & S. Society Ltd | XV |
| 5 | Arunachalam Chettiar Sons A. P. | 69 |
| 6 | Anupparpalayam Brass Vessel workers Co-op , Society Ltd. | 119 |
| 7 | Arumugham Type Foundry | XVIII |
| 8 | Ashtanga Ayurveda Sala | XII |
| 9 | Bank of Madurai Ltd., | 148 |
| 10 | Bharathi Puthaka Nilayam | 143 |
| 11 | Chain Engineering Co , | II |
| 12 | Chakarapani Chetty & Sons (P) Ltd., G. N. C. | 95 |
| 13 | Chandra Corporation | 73 |
| 14 | Chennimalai Weavers Co-op., P & S Society Ltd., | VI |
| 15 | De-Luxe Photo Service | 120 |
| 16 | Desa Biscuits | |
| 17 | Devarajulu Chetty & Sons | XVI |
| 18 | Erode Weavers Co-op., P & S. Society Ltd , | X |
| 19 | Fertiliers & Chemicals Travancore Ltd., | XIII |
| 20 | German Radio House | XVI |
| 21 | Geetha Paper Agencies | XIV |
| 22 | Gemini Pictures Circuit | I |
| 23 | Hope & Co , | 147 |
| 24 | India Type Foundry | VI |
| 25 | Indo Swiss Synthetic Gem Manufacturing Co., Ltd., | 146 |
| 26 | Kali Aerated Water Works | 143 |
| 27 | Kanaka Soap Works | XVIII |
| 28 | Kandaswami Pillai Son , S. V. | 36 |
| 29 | Karur Vysya Bank Ltd., | XII |
| 30 | Krishnaswamy & Co., | 147 |
| 31 | Dr. Maduram & Sons, A. | XXIV |
| 32 | Madras Type Foundry | III |
| 33 | Madurai District Central Co-operative Bank Ltd., | XII |
| 34 | Madurai Industrial Weavers Co-op.. P & S. Society Ltd., | 147 |
| 35 | Madurai Ponvizha Weavers Co-op., P & S. Society Ltd., | XXVI |
| 36 | Madurai Srinivasaperumal Weavers Co-op., P & S. Society Ltd., | XXVI |
| 37 | Madurai Thiru. Vi-Ka. Weavers Co-op., P & S. Society Ltd., | 146 |
| 38. | Madurai Vasuki Saliar Weavers Co-op., P & S. Society Ltd., | XX |
| 39 | Mettur Chemical & Industrial Corporation Ltd., | IV |
| 40 | Manis Confectionery Works | X |
| 41 | Meenakshi Group of Mills | XIX |
| 42 | Meenakshi Paper Stores | II |
| 43 | Munnal Panchamugha Vinayager East Weavers Co-op., P & S. Society Ltd. | 148 |
| 44 | Mannal Panchamugha Vinayagar West Weavers Co-op., P & S. Society Ltd., | XXVI |
| 45 | Nathan Stores | XIV |
| 46 | Narayanaswami Iyer, P.R. | 3rd cover |
| 47 | Newton Type Foundry | 70 |
| 48 | Norton & Co., | VIII |
| 49 | Palaniappa Bros. | XII |
| 50 | Pasupathi Maligai & Ghee Stores | XX |
| 51 | Perunavalur Timber Stores | XVIII |
| 52 | Puvalur Padmasala Weavers Coop , P. & S. Society Ltd., | 146 |
| 53 | Puvalur Sri Ramakrishna Vilas | 52 |
| 54 | Radio House | IV |
| 55 | Rajendra Tutorial College | Last Cover |
| 56 | Rakkayee Electric Stores | XX |
| 57 | Ramanathapuram District Coop. Central Bank Ltd., | XX |
| 58 | Sabapathi, S. | 144 |
| 59 | Samayapuram - Kannanur Renganatha Weavers Coop. P. & S. Society Ltd., | 52, 148 |
| 60 | Selvam Photo Studio | 144 |
| 61 | Shanmugham & Co., N. V. | XVII |
| 62 | Shenbaka Nadar, AR A. & Valasubramanya Nadar P. V P. Co., | 144 |
| 63 | Sri Rama Vilas Pathirakadai | 70 |
| 64 | Sundara Vilas | 43 |
| 65 | Swami, J. M. | X |
| 66 | South Madras Electric Supply Corporation Ltd., | XV |
| 67 | Sri Sakthi Textiles (P) Ltd., | VII |
| 68 | Solar Furnishers | 70 |
| 69 | "Tamil Nadu" Daily | XIV |
| 70 | Tamilnad H. L. Weavers Coop. Society Ltd., | XI |
| 71 | Tiruchirapalli District Coop. Supply & Marketing Society Ltd , | 146 |
| 72 | Tiruchirappalli Market Committee | 118 |
| 73 | Tiruchy Tutorial College | 145 |
| 74 | Varadarajan Bros, K. R. | 40 |
| 75 | Venkatesh Agencies | 145 |
| 76 | Village Industries Wing | 144 |
| 77 | Vincent & Co., (P) Ltd., | 2nd Cover |
| 78 | Woriur Devanga H. L Weavers Coop. P. & S. Society Ltd., | XIV |

கூட்டுறவே! நாட்டுயர்வு!!

**A. 2383 மதுரை பொன்விழா நெசவாளர்**
**கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிட்.**
**258, ராமனுதபுரம் ரோட், மதுரை-9.**

- 2/40 டைமன் வேஷ்டிகள்
- 2/20 துண்டுகள்
- 2/20 பெட்ஷீட்டுகள்
- 20s கைலிகள்
- 20s கலர் துண்டு மடிகள்

உயர்ந்த ரகம்! உற்பத்தி திறன்!
குறைந்த விலை! கெட்டிச் சாயம்!
ஒருங்கே அமையப்பெற்றது.

N.B.—வியாபாரிகள் ஆர்டர் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

Manufacturers of :—
*Hand Woven, Towels, Bed-Sheets, Dhoties, Kailis, Napkins & Shirtings in all Fancy Designs.*
**A 2383, Madurai Ponvizha Weavers' Co-op. Production & Sale Society Ltd ,**
**258, Ramnad Road, MADURAI-9.**

A. சஞ்சீவி, செயலாளர். P. செல்லையா, தலைவர்.

நல்லதோர் இலக்கிய

# வெளியீடுகளுக்கு

★

# புதுப்புனல் பதிப்பகம்

திருச்சி-2.

நிறுவனம். 21—6—1953.

## மின்னல் பஞ்சமுகவினுயகர் மேற்கு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் No C. 1969

மின்னல். P.O. (வயா) அரக்கோணம். N. A Dt.

★

எங்களிடம் கை தேர்ந்த நெசவாளர்களைக் கொண்டு தயார் செய்த உயர்தரமான 40s × 50″ வேஷ்டிகளும், 40s×50″ 1×12 காடா கர்சிப்பு 40s×50″ 1×18 ஷர்டிங்கு 26s×20s, டவல், கரைமடிகளும் தயார் செய்கிறோம்.

★

உங்கள் தேவைக்கு எங்கள் ஸ்தாபனத்தை என்றும் — மறவாதீர்கள். —

K. R. சஞ்சீவி முதலியார், காரியதரிசி. N. M. கணேச முதலியார், தலைவர்.

கூட்டுறவே! நாட்டுயர்வு!!

கைத்தறி ஆடை அலங்காரங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்

**மதுரை ஸ்ரீ ஸ்ரீனிவாசப் பெருமாள் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட் நெ. A. 2423**

160, கான்பாளையம் 1-வது தெரு, மதுரை-9.

எங்கள் சங்கத்தில் புதிய டிசைன்களில் கவர்ச்சிகரமான தற்காலத்திற்கேற்ற நவநவமான பெம்பர்க் கோடம்பாக்கம், பட்டு தினுசுகளும் 100″×80″ நூல்களில் பலவிதமான அழகிய பார்டர்களில் பேட்டு & கொட்டடி புடைவைகளும், மற்றும் ரவிக்கை தினுசுகளும் தயாராகின்றன.

எங்கள் சொந்த சாயத்தொழிற்சாலையில் அனைத்தும் தயாகின்றன.

உங்கள் திருப்தியே எங்கள் நோக்கம்.

தலைவர் : ரு. தி. சுப்புராமன்.
உபதலைவர் : N. K. வெங்கட்ராமன்.

எங்கள் ஜவுளிகள் எல்லா "கோ-ஆப்-டெக்ஸ் எம்போரியங்களிலும், டிப்போக்களிலும், ஷோ ரூம்களிலும் ஹாண்ட்லூம் ஹவுஸ் மற்றும் ராஜ்ய கைத்தறி மியூஸியங்களிலும் கிடைக்கும்.

THE MADURAI SRI SRINIVASAPERMAL WEAVERS' CO-OPERATIVE PRODUCTION & SALE SOCIETY Ltd. No. A. 2423.
100, Khanpalayam 1-st. Street, Madurai-9.



# மணி வாசகர்

அருள் வடிவே அன்புருவே
அமுதஊற்றே
ஆனந்தக் காட்சிகண்ட
அருள்ஞானக் குன்றே
திருவண்டப் பகுதிதந்த
திருவாத வூர
செந்தமிழ்செய் தவத்தாலே
வந்திட்ட மூர்த்தி
திருவாசக மென்னும்
தெய்வ மறை தந்த
தேசிகனே, எனையாண்ட
தேவ தேவே
குருமணியே தவக்கனலே
உன் கழல்கள் போற்றி
கொஞ்சு தமிழ்ப் பாமாலை
சூட்டிடுவேன் போற்றி

செந்தமிழும் உன் தமிழால்
தெய்வநலம் பெற்றுத்
தேடறிய எம் பெருமான்
திருக்கழல்கள் தம்மை
சிந்தித்து யாம் அழுதால்
பெற்றிடலா மென்றே
தெய்வநெறி காட்டியெமை
உய்வித்திட வென்று
வந்திங்கே வழிகாட்டி
எமையாண்ட நாத
வாதவூர் வந்துதித்த
மணி வாசகனே நின்னை
சந்ததமும் போற்றி உனை
தொழுதடி பணிந்தே
தமிழ்மாலை சூட்டிடுவேன்
குருமணியே சரணம்.

வான்கலந்த வாசகனே
வாதவூர் தேவே
மணி வாசகமே எமக்களித்த
மாமணியே நாத
தேன்கமழும் வாசகத்தால்
சிவபெருமான் தன்னை
சிக்கெனவே பிடித்தெமக்குக்
காட்டவந்த மூர்த்தி
ஊன்கலந்து உயிர்கலந்து
உன் தமிழை ஓதி
ஓயாது அழுது அலற்றி
ஒருமுகமாய் நிற்கத்
தான் கலந்து எம்முன்னே
வழிநடத்த வேண்டும்
சற்குருவே சரணடைந்தேன்
தாளினையே காப்பு.

செட்டி



உ




உலகமெலாம் பெருவியப்பை உலகில் மாந்தர்
உயிர்வாழத் துடிக்கின்ற முனைப்பில்
தோன்றும்
கலகத்தைச், சிறுபிணக்கைக் காதல்
என்னும்
கனிதரும் இன்பத்தைக் கூடி வாழும்
நிலைபேற்றை நிதம்ஆய்ந்து ஆய்ந்து மற்றும்
நினைவயர்ந்து குமைகின்ற மானுடத்தின்
குலமுயரக், குணமுயரக் கொடிதான் ஏந்தும்
குறிக்கொண்ட எழுத்தாளர் ஓர் குலத்தார்!



# தமிழ்த் தொண்டர் திருவடிகளுக்கு



உலக வாழ்வில் ஒரு உண்மையைக் கண்டறிவதற்கு ஒரு சிந்தனையாளன் ஒரு வாழ்க்கையே வாழ வேண்டியிருக்கிறது. சிந்தனை என்பது ஒருவகைத் தவம். தபசி ஒருவனின் நெடிய தவத்திற்குப் பிறகு, ஒரு சித்தி வசமாவது போல, சிந்தனையாளனின் கடும் பிரயாசையின் விளைவாகவே, ஒரு கருத்து, அல்லது ஒரு கற்பனை உதயமாகிறது. சிந்தித்துத் தான் அறிந்த உண்மையை தான் அறிந்த மொழி மூலம், மானிட ஜாதிக்கு அறிவித்துவிட, அவனுக்குக் கிடைத்திருக்கும் வல்லபத்தின் முனைப்பே எழுத்துப்பணி.

உலக வாழ்க்கை என்ற பரிசோதனைச்சாலையில் தன்னையே பரிசோதனைப் பொருளாக வைத்து, தனது உணர்ச்சிகள் என்னும் ரசாயனங்களைக் கொண்டு, தனது சித்தத்தால் ஆராயும் சிந்தனையாளன் செயல் இருக்கிறதே அதுவே அவனது சொந்த வாழ்க்கையாக அமைந்துவிடுகிறது. எந்த நாட்டில் பிறந்தாலும், எந்த மொழியைப் பேசினாலும், சிந்தனையாளன், எழுத்தாளன் வாழ்க்கை, அவனைச்சார்ந்த குடும்பத்தவருக்குத் துன்பமும், துயரமும், வறுமையும், சோகமும், தருவதாக அமைந்து விடுவதைக் காணலாம்.

சிந்தனையாளன் காலத்தையும் உலக நடைமுறை பழக்க வழக்கங்களைப் பொருட்படுத்தாது, தான் எடுத்த அல்லது தொடுத்த சிந்தனையில் ஒன்றி விடுகிறான். அந்த ஒன்றுதல் காலத்தை வெல்லும் ஆற்றலை அவனுக்குத் தருகிறது. புதிய நியதிகளை படைக்கும் பேராண்மையையும் அவனுக்கு வழங்குகிறது.

சித்தம் சிந்தனையில் லயித்திருக்கும்போது, பௌதீக நியதிக்குட்பட்ட இந்தவுடல், அவனது பேச்சு, செயல், கடமை, மாறுபட்டிருப்பதாக, வேறுபட்டிருப்பதாக மற்றவர்களுக்குத் தோன்றுகிறது. அவன்மீது பழியும், இழியும் சூட்டுகிறார்கள். "சுடுதலும் குளிரும் உயிர்க்கில்லை" உடலுக்குண்டு. வேதனையும் துயரும் அவனுக்கில்லை. அவன் குடும்பத்தாரைச் சாடுகிறது. மான அவமானம் அவனுக்கில்லை. அவனது உற்றார் உறவினரைச் சேருகிறது. கலைஞனது குடும்பத்தவர்கள் தான் இதற்கெல்லாம் ஈடுகொடுக்கவேண்டி வருகிறது. போற்றுதலும் புகழ்ச்சியும் கூட கலைஞனை உசுப்பிவிடவோ உற்சாகப்படுத்திவிடவோ முடிவதில்லை.

லௌகீகப் பெருமைகளுக்கோ பாராட்டுக்களுக்கோ தயங்கி நிற்கின்ற பௌதீக அமைப்பைக் கொண்டவனல்ல கலைஞன். அவனது ஆத்மீக பௌருஷத்தின் எல்லைக்கு எடுத்துக் காட்டாக அண்மையில் இரண்டு எழுத்தாளர்கள் நோபல் பரிசையே ஏற்க மறுத்த வியத்தகு செய்தி வெளிவந்திருக்கிறது. முன்னம் ருஷ்ய எழுத்தாளரான போஸ்டர் நாக், தமக்கு வழங்கப்பட்ட பரிசை ஏற்கவில்லை. அந்த மறுப்புக்குப் பின்னனியில் அரசியல் காரணங்கள் உண்டு என்று பேசப்பட்டது. என்றாலும் பரிசை ஏற்பதற்கில்லை என்ற மறுப்பு உறுதியாயிற்றென்பது மறுக்கப்படவில்லை. இவ்வாண்டு பிரெஞ்சு நாவலாசிரியர் ஸார்ட்டர் என்பவர் நோபல் பரிசை ஏற்க மறுத்ததன்றி, அப்பரிசு தமது கொள்கைகளுக்கே மாறுபட்டதென்று சீறியிருக்கிறார். "கிழக்கு மேற்குமாக உலகம் பிளவுபட்டு நிற்கிறபோது மக்களின் வாழ்க்கை முறையில்

அவநம்பிக்கையும், அநாகரிகமும் நிலவி நிற்கும் போது, அமைதிகிட்டுமா என்று மனிதஜாதி ஏங்கும் போது, இப்பரிசு ஏற்பதற்கில்லை என்பதோடல்லாமல், தன்னுடைய லட்சியத்தையும் தெளிவாக்கியிருக்கிறார். மனிதஜாதி அனைத்தும் ஒரு குடும்பம், என்று கருதி உழைக்கும் தன் லட்சியத்திற்கு களங்கம் ஊட்டுவதாக இப்பரிசை நினைக்கிறார். யாரைக் கேட்டுக்கொண்டு பரிசு கொடுக்க முன் வந்தீர்கள் என்று கேட்டுவிட்டு கட்டாயப்படுத்தி பரிசு வழங்கிவிடக் கூடுமென அஞ்சி தனது நடமாட்டத்தையும் கட்டுப்படுத்தி தலைமறைவாகவும் சென்றுவிட்டார் அப்பெருமகனார்.

இச்செய்தி உலகமக்களின் பெரும்பாலோருக்கு ஆச்சர்யம் தருவதாக இருக்கும் ஆனால் தமிழ்ப் பண்பாட்டின் உயிர்த்துடிப்பை சற்று ஆராய்வோர்க்கு இது ஆச்சர்யப்படக்கூடிய செய்திஅல்ல இதற்கு முன்பு எங்கோ கேள்விப்பட்ட செய்தி ஒன்றினைப் போல் தோன்றும். தமிழ் மொழியின் மூலம் தமது அனுபவத்தை, சிந்தனையை, தாம் தெளிந்த உண்மைகளை வெளியிட்ட தமிழ்த் தொண்டர்கள் இந்த இருபதாம் நூற்றாண்டில் உதித்த பேராசிரியர்களையெல்லாம் விஞ்சிநிற்கின்ற அளவிலே உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்து லட்சியப் பிடிப்போடு நின்றிருக்கிறார்கள் என்பது தெரிய வரும். நோபல் பரிசு அல்ல, அதற்குமேல், "இந்திர போக மாளும் அச்சுவை பெரினும் வேண்டேன்" என்று அறிவித்ததும் தமிழ் உள்ளமே என்று அறியும்போது உடல்தொறும் மயிர்க்கூச்செறிவதை அறியலாம்.

தமிழ்மொழி காலத்தால் தொன்மையானது மட்டுமன்றி கருத்தாலும், வளத்தாலும் சிறந்து விளங்கும் தன்மை உடையது. இவ்வறிவுலகம் இன்னும் பலகாலம் புதிது புதிது என்று அறிவிக்கும் கொள்கைகளும் லட்சியங்களும், கண்டுபிடிப்புகளும், வழிகளும் கூட, தமிழகத்தில் தோன்றிய அறிஞர்கள் வெகு காலத்திற்கு முன்பே கண்டுபிடித்து கருணையில் நமக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதும் தெரியவரும். இடைக் காலத்தில் இனம்புரிந்துகொள்ள முடியாமல் நாம் ஏறெடுத்துப் பார்க்காத எத்தனை எத்தனையோ அற்புதங்களை அவர்கள் சொல்லிவிட்டுத்தான் போயிருக்கிறார்கள். காலத்தின் விளக்கத்தால் நாம் சொந்த சரக்கை அந்நிய தராசு கொண்டு எடைபோட்டு அறியும் நிலையில் இருக்கிறோம் என்பது உணரலாம்.

அருள் பழுத்த உள்ளத்தராக, மானிட வர்க்கத்தின் உயர்வுக்காக தாம் கண்ட பேருண்மைகளை தமிழ்மொழி மூலம் உலகுக்கு வழங்கிய பெருமக்கள் நால்வர்களும், ஆழ்வாராதியரும். தமிழ் மொழி பெருமையுடையது இப்பெருமக்களை தம் மக்களாகப் பெற்றெடுத்த காரணத்தால். இவர்கள் மிகவும் உயர்ந்தவர்கள், உயரிய வாழ்க்கை வாழ்ந்து காட்டிய வாய்மையினால். நாம் பாக்கியசாலிகள் இவர்கள் கருத்தை, அனுபவத்தை நேரிடையாக கற்று அறிந்து உணரும் வாய்ப்பும் வசதியும் பெற்றிருக்கும் காரணத்தால், என்று ஒவ்வொரு தமிழ் உள்ளமும் பெருமிதம் அடையலாம்.

மனிதஉயிர்களின் மேன்மைக்காக "யாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற மெய்த் துணிவோடு உண்மைகளை எடுத்தோதிய நாவுக்கரசர், கல்லும் கசிந்துருகும்படி தமிழ்பாடிய அருள் மாணிக்கவாசகப் பெருந்தகை, தம் தமிழால், இறைவனையே பணிபுரியுமாறு ஏவிய சுந்தரர், செந்தமிழுக்கு புத்துயிரும் புதுவளமும் சேர்க்க அவதரித்த திருஞானசம்பந்த பெருமான் ஆகிய தமிழ்த் தொண்டர்களின் திருவடிகளில் எழுத்தாளன் ஒன்பது மலர் கொண்ட மலர் மாலையை வைத்து வணங்குகின்றோம்.

தமிழ் எழுத்தாளனின் வாழ்கையில் எத்தனையோ துயரமும், வேதனையும், திருட்டும், மான அவமானமும் அவன் குடும்பத்தாருக்கு ஏற்பட்டு வருகிறது. வறுமை வாட்டுகிறது. எழுத்தாளன் உள்ளத்திற்கு இதுபட்டு அவனை திசைமாறச் செய்யாவிட்டாலும், பௌதீக உடல் சம்பந்தமட்டில் ஏதும் அறியாத அப்பாவி போல எழுத்தாளனும் அவன் குடும்பத்தாரும் துயரங்களை ஏற்க வேண்டியே இருக்கிறது. உண்மையை உள்ளபடி பேச அவனால் இன்று முடியவில்லை. இருக்கும் நிலையை இல்லை என்று சாதிப்போர் ஒரு பக்கமும், இல்லாததை இருப்பதாக வாதிடுவோர் ஒரு பக்கமும், படைபலத்துடன் சொற்போர் நடத்துவது அரசியலாக விளங்குகிறது. இந்த நிலையில் உள்ளதை உள்ளபடியே சொல்ல நாட்டில் நல்லவர்களை வளர்க்க வேண்டிய கடமை எழுத்தாளர் சங்கங்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கிறது.

உயர்ந்த லட்சியத்தோடு படைப்பு இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்களின் வாழ்க்கைப் பாதை சீர்படவும், சத்திய ஆவேசத்தோடு பேசவும், எழுதவும் மெய்த்துணிவை அருளுமாறு இங்கு வாழ்ந்து அமரர்களாக விளங்கும் தமிழ் தொண்டர்களின் தூய திருவடிகளில் வணங்கிப் பிரார்த்திக்கும்,

தமிழ் எழுத்தாளன்,

*அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்*

ஆசிரியர்,






PUBLIC LIBRARY
7 - NOV 1964

'எழுத்தாளன்' ஒன்பதாவது மாநாட்டுச் சிறப்பிதழ் நமது அருமைத் தலைவர் அமரர் ஜவஹர்லால் நேரு அவர்களின் திருவுருவத்தைத் தாங்கி வெளி வருகிறது. தமது பேச்சாலும் அரசியல் மேதைமையினாலும் சமாதானத் தூதினாலும் இந்த யுகத்தின் தனிப்பெரும் மக்கள் தலைவராக விளங்கினர் நேரு. அது மட்டும் அல்ல. அவர் ஒரு சிறந்த எழுத்தாளர். உலக சரித்திரத்தையே வடித்துத் தந்த அவரது ஒப்புயர்வற்ற நூலும் பாரத நாட்டுச் சரித்திரத்தையே வடித்துத் தந்த மற்றொரு நூலும் காலம் உள்ள வரை மனித இனத்துக்கு வழி காட்டும். 'சாகித்ய அகாடமி' யின் தலைவராக இருந்து இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்தவர் அவர். போற்றுதலுக்குரிய நேரு அவர்களின் திருவுருவம் நமது அன்பின் பிரதிபலிப்பாக அட்டையில் மிளிர்கிறது.



இம்மலரில் வழக்கம் போல் கவிதை, கட்டுரை, கதை, நாடகம், சிறுவர் பகுதி, மாதர் பகுதி என்னும் உட்பிரிவுகள் கொண்டிருந்தாலும் பகுதிகளின் சிறப்பில் பன்மடங்கு கனம் ஏறியிருப்பதைக் காணலாம். குறிப்பாக 'எங்கள் மாவட்டம்' என்னும் கவியரங்கப் பகுதியில் தமிழ் நாட்டு நிலவளமும், கலைவளமும், பிரதேச வழக்கும், பொது இயல்பும் ஒரு தொலை நோக்கி மூலம் கண்முன் நிறுத்தப்படுகின்றன. அந்த அந்த வட்டத்தில் வாழ்ந்த பெருமக்களைப் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ள இப்பகுதி உதவக் கூடுமென்று நம்புகிறோம்

மலரில் சைவக் குரவர் நால்வரின் திருவுருவங்கள் வெளியாகியுள்ளன. சென்ற ஆண்டு வைணவ, சைவ, மத்துவ ஆச்சாரியர்களின் உருவங்களை வெளியிட்டு அவர்களது அருள் நெறியால் தமிழ் செழிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தோம். இவ்வாண்டு கல்லும் கசிந்துருகும் வாசகமும், தெவிட்டா இன்பத் தேவாரமும் தந்து, கொஞ்சும் தமிழாலும், விஞ்சும் தமிழாலும் நெஞ்சை எல்லாம் இறை மணமும் தமிழ் மணமுமாகச் செய்த அருளாலர் ஆசியினால் தமிழ் மொழியில் புதிய வளம் கூட வேண்டுமென இவ்வாண்டு பிரார்த்திக்கிறோம்.

குறிப்பாக இம்மலரில் திரு. சத்யமூர்த்தி அவர்களின் ஆற்றிய சட்ட சபைப் பிரசங்கத்தை ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கிறோம். பாரதியின் நூல்களை அரசாங்கம் பறிமுதல் செய்திருந்த சமயம் கோட்டைக்குள் அச் சிங்கம் கர்ஜித்தது. திரு. எஸ். சீனிவாச அய்யங்கார் அவர்கள் பாரதி நூலுக்கு அளித்த முன்னுரையும் பிரசுரமாகிறது. நாடக பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியாரின் கட்டுரை ஒன்றும் வெளியாகிறது.

எழுத்தாளர்க்குப் பெரும் பிரச்னையாக இருக்கும் 'காபிரைட்' விவகாரம் புகழ்பெற்ற நாவலாசிரியர் பிரேம்சந்த் அவர்களின் எழுத்துக்களையும் விடவில்லை. ரசமான இந்த வழக்கு பற்றிய செய்திகள் எழுத்தாளர்க்குப் பயன் தருவன. திரு. குருபஜன் சந்தன் அவர்கள் வடக்கே நம் இலக்கியம் வளர வேண்டுமென்ற தம் ஆர்வத்தை வடித்துத் தருகிறார் ஒரு கட்டுரையில். திரு. மதனகோபால் அவர்கள் பிரோம் சந்தைப் பற்றிய கட்டுரை ஒன்று உதவியிருக்கிறார்.

மலரின் இதழ்கள் இவை. தேனை அருந்தும் வண்டுகளாகிய கலா ரசிகர்களின் முன் எழுத்தாளன் மலர் மாலையை அன்போடு வைக்கிறோம்.

# நல்ல இலக்கியம்

★

வெ. சாமிநாத சர்மா



திரு. வெ. சாமிநாத சர்மா

**நல்ல** இலக்கியம், எப்பொழுதும் சுரந்துகொண்டிருக்கும் ஓர் ஊற்று: பல்வேறு அறைகளைக் கொண்ட ஒரு மாளிகை; வாழ்க்கையில் வழிதப்பிச் செல்வாரை, வழி திருப்பிவிடும் வழிகாட்டி; உடல் நோயையும் மனவேதனையையும் ஆற்றிக் கொடுக்க வல்ல அருமருந்து.

நல்ல இலக்கியம். நரை, திரை. மூப்புக்கு அப்பாற்பட்டது; காலம் ஏற ஏற புதுமையை வெளிப்படுத்திக்கொண்டிருக்குந்தன்மையது அதில் முக்காலத்தையும் பார்க்கலாம். அதன்மூலம் பலதரத்துச் சான்ருேருடன் உறவுகொள்ளலாம் பலவகை மனிதர்களின் பலவகைச் சுபாவங்களை அறிந்து கொள்ளலாம்!

அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் இணைந்து நிற்கும் காட்சியைக் காணவேண்டுமா? பரம்பொருளுண்மையை உணர வேண்டுமா? இயற்கையன்னை உவந்தளிக்கும் நன்கொடைகளைப் பெற்றுப் பயன் நுகர வேண்டுமா? நல்ல இலக்கியத்தை நாடுங்கள்.

நல்ல இலக்கியத்தைச் சுவைத்து அனுபவிக்க எல்லோராலும் முடிவதில்லை: ஒரு சிலருக்குத்தான் அது சாத்தியமாகிறது. நல்ல இலக்கியத்தைச் சுவைக்க விரும்புகிறவர்கள், வெறும் அறிவுடையவர்களாகமட்டும் இருந்தால் போதாது. நல்ல இதயம் படைத்தவர்களாகவும் இருக்கவேண்டும்.

வெறும் அறிவுமட்டும் படைத்தவன், ஒரு நல்ல நூலை, பலதடவை படித்து நெட்டுருச் செய்திருக்கலாம்; அதன் சொல் நயங்களைப் பிறருக்கு எடுத்துக்கூறும் திறன் பெற்றிருக்கலாம்; அதனை இலக்கணமென்னும் உரைகல்லில் வைத்து தேய்த்துக் காட்டுவதில் புலமை பெற்றிருக்கலாம். இவ்வளவையும் அவன் அந்த நூலை அனுபவிக்காமலே செய்துவிடலாம். ஒரு நூலை அறிவதுவேறு; அனுபவிப்பது வேறு பேச்சளவிலே பழகும் நட்புக்கும் உள்ளத்தோடு ஒட்டிப்பழகும் நட்புக்கும் வித்தியாசமில்லையா?

ஒரு நூலை அனுபவிப்பது என்று சொன்னால், அந்த நூலில் வரும் பாத்திரங்கள், அவ்வப்பொழுது பெறும் உணர்ச்சிகளோடு நமது உணர்ச்சிகள் கலக்கவேண்டும். அதாவது அந்தப் பாத்திரங்கள் எந்த உணர்ச்சியில் ஒரு சொல்லைச் சொல்கின்றனவோ, ஒரு செயலைச் செய்கின்றனவோ, அந்த உணர்ச்சியை நாமும் பெறவேண்டும். ஒரு நூலில் வரும் பல்வேறு பாத்திரங்களின் உணர்ச்சிகளும் பலவகைப்பட்டிருக்குமல்லவா? அந்தந்தப் பாத்திரத்தின் அவ்வப்பொழுதைய உணர்ச்சியை நாமும் அவ்வப்பொழுது உணர்ந்துகொண்டுவந்தால்தான் அந்தப் பாத்திரத்தின் முழுத் தன்மையையும் நாம் நன்கு அறியமுடியும்! குறிப்பிட்ட உணர்ச்சியை அந்தப் பாத்திரம் பெறும்படி செய்த சூழ்நிலையை நாம் தெரிந்துகொள்ளமுடியும். அந்தப் பாத்திரம் கொண்ட உணர்ச்சி சரியா, தவரு என்று தீர்ப்புக் கூறுவதென்பது வேறு விஷயம். தீர்ப்புக் கூறுவதென்பது அவரவருடைய அறிவு அடைந்திருக்கிற பக்குவ நிலைக்கு அந்தப் பாத்திரத்தை இழுத்துக் கொண்டு வந்து நிறுத்திப் பார்ப்பதேயாகும்; அந்தப் பாத்திரத்தை அதன் சுயநிலையில் வைத்துப் பார்ப்பதாகாது.

ஆகவே, ஒரு நல்ல இலக்கியத்தை அனுபவிக்க வேண்டுமானால் முதலாவதாக, ஈரங்கசியும் உள்ளமும், இரண்டாவதாக தெளிந்த போக்குடைய அறிவும் வேண்டும்



சிறப்பு மலர்

# கவிஞர் உலகம்

—※—

உணர்வு என்னும் விமான மேறி மானிடன் நாத வெளி கடந்து நின்று, உண்மையைக் கண்டு, அதனை மானிட மொழியில் சொல்லமுடியாமல், சொல்லத்தவித்து, உளறும் உளரலே கவிதை.

பிரபஞ்சமென்னும் பெரிய பாறையிலே தான் கண்ட தத்துவத்தை உணர்வு என்னும் உளிகொண்டு கவிஞன் என்னும் சிற்பி செதுக்கிய கற்சிலையே கவிதை.

காலத்தை வென்று, தன்னைப் படைத்தோனைவிட வலிமையும், ஆயுளும் உடையதாக, மக்களின் நாவிலே தவழ்ந்து, மனதிலே கோவில் கொள்ளும் இறை சொரூபமே கவிதை.

இந்த உண்மையை தம் சொல்லிலே வடித்த கவிஞர்களின் கவிதைகளை இங்கு காண வாருங்கள் என அழைக்கிறேன்.

-ரெட்டியார்.

# கவிதை மலர்கள்

## மூன்று மறுக்கள்

'நாணல்'

1

இறைவன் முகத்திலே மூன்று மறுக்கள்.
மூன்றில் ஒன்று வெளுப்பு. பனியை
நீண்ட நிலவு நெருப்பிலே வறுத்து
வான்மகள் மார்கழிக் கிழவியின் மடியிலே
கொட்டிய பொறியோ? கொக்கின் சிறகோ?
தாமரை இலைமேல் தவித்திடும் துளியோ?
கடலுக்குள்ளே கண்ணிலாக் கபோதியாய்
ஒளியை நாடி உளைந்து, வயிற்றில்
உறுத்திடும் மணலை ஒதுக்கமாட்டாமல்
சிப்பி ஒன்று தன் உயிரை வடித்துப்
பெய்த நன் முத்தோ? பிறையின் கூனல்
விளிம்பி விருந்து விழுந்த சிதரோ?
கரியைக் கனலால் கட்டி இறுக்கிப்
பாதாளத்துப் பட்டறைப் பாழில்
எரிமலை அரக்கி இயற்றிய வைரமோ?
மல்லிகை இதழோ? இல்லை. பிறகு?
பிறந்தஓர் அறிவைப் பெண் என்றொதுக்கி
அனுதி காலமாய் அடுப்படிப் புகையில்
வேக வைத்த வித்தகர் பேதைமை.

2

மற்றொரு மறுவோ பச்சை. புல்லில்,
காலை வெய்யிலின் கலவிப் போதையில்
மின்னிய மெருகோ? மலைமேல் ஏறித்
தவித்து மழையைத் தாங்கித் தள்ளாடும்
கார்மேகத்தைக் கடைந்த பசுமையோ?
கிளியின் மேனி வானிலே கிறுக்கும்
கோலமோ? வயலில் குனிந்து குலுங்கும்
நெற்பயிர் நெஞ்சிலே நிமிரும் நிறைவோ?
வாழைக் குருத்தோ? தாழையின் மடலோ?
கடலின் சுழலோ? காட்டு நிழலில்
பாறை வெடிப்பில் பதைக்கும் சாரையோ?
தாழைக் கம்பளமோ? தத்துக் கிளியின்
தாவும் உடலோ? தரையின் பொறுமையில்
உருகிய கல்லின் உளத்திலே சிக்கும்
ஒளிமர கதமோ? இல்லையடா, இல்லை.
தாய்மைக் கேங்கித் தளிர்க்கும் வெறியில்
கன்னி ஒருத்தி கைம்மை நரகிலே
காணும் இச்சையின் பயங்கரப் பச்சை.

3

மூன்றும் மறுவின் நிறமோ சிவப்பு.
உதய கன்னியின் இதழொளி வண்ணமோ?
கடல் ஆழத்தில் களித்துத் துவளும்
பவளக் கொடியைப் பட்டை தீர்ந்ததோ?
அந்தி மகளின் அலரி மேலாப்புத்
தென்றலில் சிதறும் தேனொளித் துளியோ?
செந்தா மரையின் சிரிப்போ? அண்டம்
ஆடும் வெளியின் அடங்கா அழலோ?
இல்லை. பிறகு? பெண்ணுடல் பெற்றதால்
பிய்ந்தனள் ஒருத்தி. பேய்க்கை தழுவத்
தேய்ந்து தேய்ந்தவள் திசையெலாம் புகலே
தேடித் தேடிச் சிந்திய கண்ணீர்
வற்றவும் அவள்விழி வடித்த குருதி.

## கவிதைப் பிறவி

திருச்சிற்றம்பலக் கவிராயர்.

இனிய கவிதை எழிற்கவிதை
இதயங் கவரும் கவிதையெனக்
கனியக் கனியப் பாராட்டிக்
களிக்கும் ரசிக! நீபோற்றும்
இனிய கவியும் எழிற்கவியும்
இதயங் கவரும் நற்கவியும்
கனியும், பிறவிப் பேறெய்தும்
கதையை நீதான் அறிவாயோ? 1

வருதுயர் அறியா தலைமீது
வாயைப் பிளந்து வந்தலையும்
ஒருசிறு சிப்பிப் புழுப்பிறவி
உடலில் விண்ணின் மழைத்தாரைச்
சிறுதுளி பட்டுத் தெறித்து விழச்
சிப்பிப் புழுவின் சீவனுக்கே
உறுதுயர் என்றே ஒருநாளில்
உலகோர் மெச்சும் முத்தாகும். 2

கொண்டவன் தன்னோ டுறவாடும்
கூட்டுக் களியின் முயக்கத்தில்
பண்டியிற் புகுந்த பனித்துளியின்
பாதியும் பருத்துத் திரண்டொரு நாள்
முண்டி யடித்து வெளியேற
முனையும் மரண வேதனையும்
கண்டோர் போற்றும் சீராட்டும்
கவினோ டுயிர்க்கும் சிசுவாகும். 3

நீரும் காற்றும் ஒளியுமிலா
நிலத்தின் உந்திப் பிலந்தன்னில்
பாரின் சுமையை முதுகேற்றிப்
பற்பலப் பற்பலப் பல்லாண்டாய்
ஆரும் அறியாக் கடுந்தவத்தில்
அமுந்திக் கிடக்கும் கரித்துண்டு
நீறிக் குமைந்து கனிந்தொரு நாள்
நெஞ்சம் கவரும் மணியாகும். 4

துன்பக் கறையின் வேதனையில்
தொடங்கும் தொலையாத் துயர்தானும்
பின்பொரு நாளில் முடிவெய்திப்
பெறுமோர் கவிதை ஒரு முத்து!
இன்பில் தொடங்கி இதயத்தில்
என்ருே புகுந்த ஓரெண்ணம்
பின்போர் துயருக் காளாகிப்
பிறக்கும் கவிதை ஒரு குழவி! 5

முன்பும் பின்பும் இல்லாது
முதலும் இடையும் கடையாவும்
துன்பே சுமந்து தவம்நோற்றுத்
தோற்றும் கவிதை மாணிக்கம்!
முன்போ பின்போ இடைநிலையோ,
மூன்றும் கலந்த முழுநிலையோ,
துன்பே இன்பின் தொடக்கநிலை!
துயரம் இன்றேல் கவிதையிலை! 6

# திருநாள்!

'கலைமோஹறன்'

திருநா ளின்பத் திருநாளாம்
தீபா வளியெனும் பெருநாளாம்!

கொன்றுன் நரகனை வென்றுன் கொடுமையை
என்றே கண்ணன் கழல்நாடி - தினம்
சென்றே யவன்பெரும் புகழ்பாடி

நன்றே செய்தனன் அன்றே செய்தனன்
இன்றே செய்குவ னெனக்கூறு - நமக்
கென்றே செய்குவ னெனத் தேறு!
திருநாளின்பத்.......................!!

காரிருள் மங்கும் வேளையி லெங்கும்
மாந்தர்க ளெண்ணெயில் நீராடி - தமைச்
சார்ந்தவர் சூழ்ந்திடச் சீராடி

பேரெழில் வண்ணம் சேருடை பூண்டே
பார்வள மோங்கத் தொழுதிடுவார்—அருள்
சேர்ந்திட அன்பில் திளைவார்கள்!
திருநாளின்பத்......................!!

படபடவென்றே வெடிதரும் ஒலியில்
சரசர வென்றுடை இசைகூட்டும் - மக்கள்
பரபர வென்றே நடைஒட்டும்

அடஅட இன்பம் படர்ந்தது இன்றே
அழிந்தது துன்பம் எனஆடும் - களை
பொழிந்திட மன்றில் களைகூடும்!
திருநாளின்பத்.......................!!

# மலர்கள்

(நா. ஷேக் மதார்)

எண்ணிலா நிறங்களைப் பெற்ருேம் - நாங்கள் 1
ஈடில்லா மென்மையும் ஏற்றமாய்ப் பெற்ருேம்
கண்ஏர் அழகினைக் கண்டோம் - அதில்
கமழ்கின்ற மணத்தையும் உள்ளிலே
கொண்டோம்.

இன்சீர் இசைகளில் பாடி - எம்மை 2
இன்புற மகிழ்விக்கும் வண்டுகள் நாடி
அன்பாய் அருகினில் சேர்த்து - அவர்க்கு
அருமையாய் ஊட்டுவோம் தேனிலே தோய்த்து.

தென்றற் காற்றதனுடன் கூடி - நாங்கள் 3
தெருவெங்கும் நறுமணும் வீசுவோம் ஓடி
நன்ருய் அலர்ந்திடும் பூவாய் - நாளும்
நலம் பெற்று பொலிவுற்று விளங்கிடும் பூங்கா.

இல்லான் பெறுபொருள் போன்று - பெண்கள் 4
ஏற்றமாய் போற்றியே பேணுவார் என்றும்
நல்ல இடமவர் போனுல் எம்மை
நலமாய்த் தலைமீது சூடியே போவார்.

கண்ணுக் கழகுற வைப்பார் - தம் 5
கருங்குழல் அழகினை பெருக்க நினைப்பார்
எண்ணும் எங்கள் குணமெல்லாம் - அவர்க்கு
இயற்கையில் உண்டென்று கூறுவர் நல்லார்.

புல்லியர் நல்லோரைச் சேர்ந்து - மிக்க 6
பண்போடு நற்குணம் பெறுவீரே நேர்ந்து
நல்ல மலருடை நாரும் - பூவின்
நறுமணம் புகழையும் பெற்றிடும் நாளும்.

வாசம் கமழ் மலர் மாலை - வைத்து 7
வணங்குவர் கோவிலில் இன்புறு மாலை
நேசம் கிடைத்திடு மென்று - பிறரை
நன்முறை ஏற்பார்கள் மாலைகள் கொண்டு.

ஊட்டிப் பெரியவர் நன்ருய் - எம்மை 8
உயர்வாய் மதிப்பவர் உலகினில் என்றும்
காட்சிப் பொருளென வைத்தே - அவர்
களிப்போ டொருநாள் அழகாய் சமைத்தே

ஒருநாளை வாழ்வுதான் உண்டு - எனினும் 9
ஒப்பிலாச் சிறப்பையும் உயர்வையும் கண்டோம்
பாரினில் வாழ்வது சின்னுள் – எனினும்
பாங்குடன் நீவிரும் வாழ்ந்திடும் நன்ருய்.

# போராட்டம்

★

சாலை இளந்திரையன்

காதலைப் பாடிக் களிப்பை விரித்திடக்
கங்கணங் கட்டுகிறேன் — அதைக்
கண்ட என் உள்ளம் தனக்குள் குளிர்ந்திட
மங்களம் கொட்டுகிறேன்!...
ஆதலி னுலிந்தக் காகித மேடையில்
ஆயிரங் காதல்களைப் — புதி
தான எழிலுடன் அற்புத நற்கவி
யாக்கி நிறுத்திவிட்டேன்.

∴ ∴ ∴

அன்புறுங் காதல் இணைகளைப் பாட்டில்
அமைத்த பெருமையிலே — அவர்
அத்தனை பேரையும் புத்தம் புதுச்செருக்
கோடும் அணுகுகிறேன்:
இன்புறுங் காதல் இருவர் முகங்கள்
இருட்டைப் பரப்புவதேன்? — குறை
ஏதுமிலா அவர் வேதனை யோடென்னை
ஏறிட்டு நோக்குவதேன்!

∴ ∴ ∴

"நீயும் விரும்பினை, நேயன் விரும்பினன்
தீஞ்சுவைப் பொன்மலரே, — உம்மைச்
சேர்த்துவைத் தேன்; புதுச் செந்தமிழ் இல்லறம்
பேணுவீர் என்றிருந்தேன்; —
காயுள் இருக்கும் புளிப்பைக் கடித்தவள்
போல முகஞ்சுளித்தே – அந்தக்
காதலுக் கேகறை ஏற்றினை ஏன்?" எனக்
கண்களில் கேட்டுவைத்தேன்.

∴ ∴ ∴

மாபெருஞ் சோகத் தடங்கள் பதிந்து
மயங்கும் முகத்துடனே — அவள்
வாடிய முல்லை அரும்புகள் தோன்றிட
வாயிதழ்கள் திறந்தாள்
கோபத்தி லும்எழில் வீசும் இளையவள்
கொஞ்சு முகத்தினிலே — இருள்
கூடிக் கிடந்தது, பூவை மறைக்கும்
இலையின் திரளெனவே!

∴ ∴ ∴

"காதலித் தேன்; அவர் கைப்பிடித் தேன்; உயிர்க்
காற்றில் மலர்ச்சியுற்றேன்; — என்னைக்
கண்டெடுத் தேமனக் காவிலிட் டார்மகிழ்
கண்டு மகிழ்சிறந்தேன்; —
சாதலில் லாநெடுஞ் சாலையி லேஇரு
சக்கரங் கட்டிவிட்டோம் — எங்கள்
தாம்பத்தி யப்புது வண்டி பறக்குது
தன்தனி இன்பத்திலே!

"ஐயனே அப்பெருஞ் சாலையில் எம்மெதிர்
ஆரையும் காணவில்லை — பல
ஆயிரம் மைல்களுக்கு ஒன்றிரண் டாகவே
வந்தன வண்டிகளே!
வையக மக்கள்பல் கோடிக ளுள்ளொரு
பத்துப் பனிரெண்டுபேர் – உயர்
வாழ்வெனுங் காதல் வழியில் நடந்தன
ரோ? அதும் இல்லைகொலோ?

∴ ∴ ∴

"யாருமில் லாநெடுஞ் சாலையை யோபெரும்
இன்ப மெனநினைந்தோம்? — என
ஏங்கி இருவரும் தூங்கி வழிந்துகொண்
டேவழி செல்லலுற்றோம்..
பேரிருள் மண்டிய மீப்பெரும் பள்ளங்கள்
இப்புறம், அப்புறத்தே! — கரு
மேகத்தி னூடுஒரு மின்னெனச் சென்றதெம்
பாதை அவற்றிடையே..

∴ ∴ ∴

சென்றுகொண் டேயிருக் கின்ற பொழுதிலச்
செவ்விருட் பள்ளத்திலே — ஒரு
தீனக் குரலொலி கேட்டது; நின்று
செவிகள் திறந்துவைத்தோம்:
"ஒன்றுபட் டோமடி சாவினி லே,இதில்
உள்ளம் உடைகுவதேன்? — என
உள்ளத்தி யோடவன் சொன்னசொல் கேட்டதெம்
நெஞ்சக் கிணற்றுக்குள்ளே!

∴ ∴ ∴

"அண்ணலே நீஎனை அள்ளத் துடித்தனை;
அப்பெரும் பேரருளை — மன
ஆழத்தி லேற்றுனைத் தாவி யணைத்ததென்
ஆசைச் சிறியகரம்!
கிண்ணத்தில் அள்ளிய கீத நலத்தினைக்,
காதல் அமுதத்தினை — வெறிக்
கேட்டினர் சாதிக் கொடுங்கரம் நீட்டிப்
பறித்துக் கவிழ்த்தனரே!

∴ ∴ ∴

"ஒட்டு மரத்தினைப் பேணி வளர்க்கும்
உருண்டை வயிற்றினர்கள் — நமது
உள்ளங்கள் ஒன்றிய காட்சியை, ஏன், வெறுத்து
ஓங்கினர், சாதியினை?
வெட்டுப்பட் டாலும் விடுப்புப் படாதநம்
மெல்லிய உள்ளங்களை — அவர்
வேறு பிரிப்பதில் தோற்றனர்; — வென்றவர்
வீழ்வதென் னேகொடுமை!"

இவ்விதஞ் சொல்லி அரற்றினள் அக்குயில் :
ஏந்தல், அவளகத்தோன். — "அடி
இப்புவி மாந்தரில் பற்பலர் செத்தவர்,
செத்துக்கொண் டேயிருப்போர் ! --
அவ்விதம் வாழ்வதில் ஆர்வமுற் றோரிடம்
ஆப்பிட வில்லையென்றே — மனத்து
ஆறுதல் கொள்ளடி .... "என் றுரைத்தான் ; அவள்
விம்மல் முடியவில்லை.

∴ ∴ ∴

பெண்ணின் குரலிலே விம்மிய சோகப்
பெருக்கென் மனம்பிழிந்தே — அதை
வீசி உதறி விரித்தொரு வேதனை
நீர்த்திரை யாயெடுத்தே
கண்ணை மறைத்தது ; வேறொரு பக்கத்துக்
காட்டைத் துழாவிநின்றேன் — அங்குக்
கண்டதோர் காட்சிஎன் கண்ணிலும் நெஞ்சிலும்
கங்கைக் குவித்ததையா !

∴ ∴ ∴

நீலக் கடலெனும் சாவுக் கிடங்கினை
நோக்கித் தளர்ந்துசெல்லும் — ஒரு
செல்வியின் சிற்றடி யிட்ட தடத்தொடர்
பட்டது கண்களிலே !.
சீலச் சிறுதடம் செப்பிய காவியம்
நின்றது மண்ணினிலே ; — அந்தத்
தேமலர்ச் சித்திரம் சென்றனள், சென்றனள்
நீர்க்கொலை வாயிலிலே !

∴ ∴ ∴

" காசு பணத்தினைச் செல்வமென் றேதொழும்
காசினி யே, உனக்கே — இரு
காதல் மனங்களின் இன்பமே செல்வமென்று
ஆரும் உரைத்திலரோ ?
பேசும் பலர்களும் வெற்றுரை மட்டுமே
பீத்தித் திரிந்தனரோ ? — அந்தப்
பேதைகள், பேதங்கள் தாண்டிப் படர்ந்திடும்
காதல் உணர்ந்திலரோ ?

∴ ∴ ∴

என்னையே செல்வமென்று என்னிடம் சொல்லினர்,
எந்தையும் அன்னையுமே -- இன்றைக்கு
என்னவோ, காசு பணத்தையே செல்வமென்று
ஏதெதோ பேசுகிறார் !
பொன்னில் பொருளில் பெருத்த இவர்கள்
புவியில் உயர்ந்தவராம் ; -- இந்தப்
பொய்கள் தராஉயர் இன்பம் புரியுமென்
அன்பர் இழிந்தவராம் !.

∴ ∴ ∴

இன்பம் குவிக்கும் உயிர்ப்பெருஞ் செல்வத்தை
ஏழையென் றேபழித்தார் ; — பொருள்
என்னும் பிணத்தினை ஏற்றிவைத் தேஅறம்
மாற்றிவைத் தேகுலைத்தார் !
துன்பத்துக் குள்ளெனைத் தூக்கி எறிவதற்கு
அன்பென்று பேர்கொடுத்தார் ; -- உயிர்ச்
சொந்தமில் லாஒரு தோளினி லேஎன்னைத்
தூக்கி லிடத்துணிந்தார் !

சின்ன ஒருவனின் முன்நின்று செத்திடச்
சிந்தை விரும்பவில்லை ; -- என்னைத்
தீண்டத் தகாதவன் தீண்ட எனதுடல்
செப்புப் பதுமையில்லை !
உன்னை அடைக்கல மாயடைந் தேன்கடல்
உத்தமியே !" எனவே விரைந்து
ஓடினள், மூழ்கினள் !.. கண்டஎன் கண்களும்
அக்கட லாயினவே !

நீங்கள் படைத்தஎன் நெஞ்சத் துடிப்பை
நிகழ்த்தி முடித்துவிட்டேன் -- இந்த
நீணிலத் தேஉயர் காதல் கொலையின்
நிகழ்ச்சி முடியவில்லை !
தாங்கிட வில்லைஎன் நெஞ்சும் ; எனதுயி
ரானவர் தங்கநெஞ்சும் -- கவி
தன்னிலில் லாக்கொடும் பள்ளங்கள் வாழ்விலே
உள்ளன வே ; ஐயையோ !..

(வேறு)

யான்படைத்த காதலர்கள் உள்ளம் கேட்டேன் ;
இருசெவியும் இருட்சோகம் நிறையப் பெற்றேன் !
தேன்மணக்கும் கவிக்காதல் புவியில் வந்தால்
தீயையதன் மேல்கொட்ட பலருள் ளார்கள் !..
ஏன், கவிதைக் காதலரை மேலும் மேலும்
இயற்றுகிறோம் ?... சிறுபான்மை யாக உள்ள
தேன்துளிகள் பெருகிவிட வேண்டும் என்னும்
தீராத பேராசையாலே யன்றோ ?...

∴ ∴ ∴

என்கவியே எனைமறித்துப் பேசும் வண்ணம்,
ஏபுவியே, சோகத்தைப் படைக்கின் றாய்நீ !--
உன்பெருமை யானறிவேன்: என்போல் யாரோ
ஒருசிலர்க்கு வழிவிட்டுப், பெரும்பா லார்க்குத்
துன்பமதைச் செய்கின்றாய் ! எங்க ளுக்குள்
தூவுகிறாய், வேற்றுமையை ! — சிலரின் இன்பம்
மன்பதைக்கே இன்பமாய் மலரு மட்டும்
வஞ்சனையில் வீழ்ந்துபடோம், மறக்க
வேண்டாம் !

# தேனருவி

கோவி. மணிசேகரன்

மலையில் பிறப்பது நீரருவி—மனிதர்
மனத்தில் சுரப்பது தேனருவி !
மலையில் பிறப்பது.........
கலையில் ரசிப்பது இசையருவி—இன்பக்
காதல் புசிப்பது இதழருவி !
சிலையில் வசிப்பது அருளருவி—மனிதர்
சிந்தையில் கசிவது தேனருவி !
மலையில் பிறப்பது.........
தர்க்கம் புரிவது நூலருவி—தெய்வத்
தமிழ்பெண் காப்பது கற்பருவி !
சொர்க்கம் பொழிவது வானருவி—மனிதர்
சுந்தர வாழ்வே தேனருவி !
மலையில் பிறப்பது.........

# வசந்தவனப் பெண்ணமுதே!

எஸ். எஸ். சிதம்பரம்

1
திருவரங்கப் பெருமான்மேல்
தீராத காதலுற்ற
திருப்பாவை வித்தகியே!
சீர்க்கோதை நாயகியே!
அருமறைதேர் பெரியாழ்வார்
அகமகிழ வந்ததொரு
பெரும்புகழ்சேர் ஆண்டாளே!
பெரிதும்நீ அருளுவையே!

2
தீங்கின்றி நாடெல்லாம்
திங்கள்மும் மாரிபெய்ய
ஓங்கிஉல களந்ததிரு
உத்தமன்பேர் பாடியதோர்
பாங்குமிகு சுடர்க்கொடியே!
பாம்பணையார் உளமதிலே
ஓங்குமெழிற் சித்திரமே!
உவந்தேநீ அருளுவையே!

3
பூமகளே மாலரங்கப்
பொன்னவனை மாலையிடும்
மாமகளாய்க் கோதையென
வந்தனள்என் றியம்பவளர்
தூமணப்பைம் பூங்கிளியே!
தூயமணிப் பெண்ணரசே!
சேமமிகும் ஆண்டாளே!
சீர்வாழ்வை அருளுவையே!

4
மணங்கமழும் சாந்தணிந்து
மலர்சூடித் தான்மகிழ்ந்து
குணங்கமழும் மாலவர்க்குக்
கோதின்றித் தான்அணிந்த
மணமலரைக் கொடுத்ததொரு
வயிரமெனும் இரத்தினமே!
வணங்கியுன்றன் பதம்விழைந்தேன்!
வளமெல்லாம் அருளுவையே!

5
கண்டுநிகர் தண்டமிழில்
கனிந்துருகி மெய்சிலிர்க்க
வண்டெனவே பண்ணிசைத்த
வசந்தவனப் பெண்ணமுதே!
அண்டரெலாம் வணங்குகின்ற
ஆரணங்கே! உனதுபெருந்
தொண்டுகண்டே உருகுகின்றேன்!
தோகையளே, அருளுவையே!

6
இளந்தளிரே! பசுங்கொழுந்தே!
எழில்வாச நறுமலரே!
வளர்மதியே! செழுங்கதிரே!
மாமணியே! பொன்மயிலே!
உளம் பொங்கும் பேரழகே!
ஓங்கியவர் தமக்குகந்த
களங்கமிலாக் கோதையளே!
கனதனங்கள் அருளுவையே!

7
சொல்லழகும் பொருளழகும்
சுவையழகும் அணியழகும்
வல்லகவி பாடுகின்ற
மாசக்தி தந்திடுவாய்!
நல்லமணிப் பொன்வாக்கும்
ஞானமும்நீ ஈந்திடுவாய்!
சொல்லினிய ஆண்டாளே!
சுகமெல்லாம் அருளுவையே!

மார்கழியைப் பாவைஇசை
மயமாக்கும் திருவினளே!
நேர்கதியே நிறைநிதியாய்
நிலைக்கச்செய் உருவினளே!
பார்மகளே! சீர்மகளே!
பாவிசைக்கும் ஆண்டாளே!
பேர்புகழ்நற் செல்வமெலாம்
பெருமையுடன் அருளுவையே!

★

# பொன்மலைப் பொன்னேஸ்வரி மாலை

"அரங்க சீனிவாசன்"

மாதாவே! உன் தன்
வரவுசெல வுக் கணக்கில்,
ஆதாய ஏட்டில்
அடியேனைச் சேர்க்காமல்,
சேதார ஏட்டினிலே
சேர்ப்பாயோ? சேர்த்தால் என்
போதாத காலமன்றோ?
பொன்மலைப்பொன் னேசுரியே!

பாடாமல், உன்சீர்
பகராமல், உன்அடிகள்
நாடாமல், கூடாமல்
நாய்போல் இருந்தேனை,
"ஏடா! மகனே! நீ
இங்கே வா!" என்னுமல்,
"போடா!" எனில், துணை யார்?
பொன்மலைப்பொன் னேசுரியே!

வாக்கில் இதம் இல்லை;
மனத்தினிலோர் தூய்மையில்லை.
நோக்கில், இனி என்போல் ஓர்
நொய்யவரும் வேறுளரோ?

காக்கிலேயேல், என்மேல்
கருணைக்கண் வைக்கிலேயேல்
போக்கிலி யான் எங்கடைவேன்?
பொன்மலைப்பொன் னேசுரியே!

சொல்லும் பொருளும்
தொடுத்த தமிழ்ப் பாட்டே! உன்
வெல்லும் திருக்கடைக்கண்
வீச்சுக் இலக்காயின்,
கல்லும் கதிர் மணியாம்,
காஞ்சிரமும் சந்தனமாம்,
புல்லும் பொலன் தருவாம்.
பொன்மலைப்பொன் னேசுரியே!

பாவித் துனைவணங்கிப்,
பாவால் தொடை புனைந்து,
சேவித் துனதடியில்
சென்னிவைத்து வாழாமல்,
கோவித் தெழுந்துவரும்
கூற்றுரை, என் வாணுளைப்
போவிததுபோதும்.
பொன்மலைப்பொன் னேசுரியே!

சேதித்தால் என் வினைகள்
தீராவோ? நீ கருணை
சாதித்தால் உன்னைத்
தடுப்பவர் ஆர்? இன்னுமெனைச்
சோதித்தால் எங்கடைவேன்?
தொண்டனுக்குன் அன்புவழி
போதித்தால் ஆகாதோ?
பொன்மலைப்பொன் னேசுரியே!

நாகவிடந் தன்னைவிட
நான்கு பங்குத் தீங்குசெய்யும்
ஏகவிடன் ஆனாலும்
யான்உனது சேயனன்றோ?
சோக இடர் தீர்த்தெனைக்கை
தூக்கிலேயேல், நீ அப்பால்
போகவிட மாட்டேன்காண்!
பொன்மலைப் பொன் னேசுரியே!

காராட்டினைப் போலக்
காசுடையார் பின்சென்று,
பாராட்டிப் பேசிப்,
பனுவல் தொடை புனைந்து,
சீராட்டி வீணே
திரிந்துவிட்டேன் என் வாழ்க்கைப்
போராட்டம் தீராதோ?
பொன்மலைப் பொன்னேசுரியே!

மெல்ல, மது உண்டமந்தி
வேகவிடத் தேள்கொட்ட,
அல்லமதும் உண்டால் போல்,
ஆடிஆலைந் தோய்ந்துவிட்டேன்

வெல்லமது ரம்பொழியும்
மென்சொல்லாய்! என் பிறவிப்
பொல்லமது பொத்திடுவாய்!
பொன்மலைப் பொன் னேசுரியே

நாவிற் புகழ் பாடி
நாடியுனைப் போற்றுமல்,
சாவிற் பிறப்பில்,
தடுமாறித் தத்தளித்தேன்
மாவிற் பனியே! உன்
மாண்அருளால் உன்பாதப்
பூவிற் சரணடைந்தேன்
பொன்மலைப்பொன் னேசுரியே!

தான தவம் செய்தறியேன்;
தக்கவரைச் சேர்ந்தறியேன்;—
ஏன் அதிகம்?—ஈன்ற உன்னை
ஏறெடுத்தும் பார்த்தறியேன்
வானதிசூ டும்பவள
மால்வரைமேல் சூழ்கொடியே!
போனது போகட்டும். வந்(து) ஆள்!
பொன்மலைப் பொன் னேசுரியே!

★

# கம்பன் உலா

புத்தனேரி சுப்பிரமணியம்

கம்பன் உலாவைக் கவியாக்க ஏடெடுத்தேன்;
'வம்பனே நில்'லென்று வானொலிபோல்—பம்பிவரும்

கோபக் குரல்ஒட்டக் கூத்தன் எதிர்நின்று
சாபமிடு வான்போல் தடைசெய்தான்!—'மாபெரிய

மன்னனே! அன்றிஒரு வையம் படைத்தவனே!
என்னைப்போல் கம்பன் இயற்புலவன்!—பின்னை

உலாநூல் எதற்கென்முன். ஒப்பற்ற 'மூவர்
உலாச்செய்த கூத்தன்! உடனே —கலாம்இன்றி

மன்னர் உலாவோ வழக்கம்போல் வாய்ப்பதன்றி
என்ன புதுமை எனவறியேன்!—என்கம்பன்

போலஒரு நற்கலைஞன் போற்றப் படும்பவனி
சாலச் சிறந்த தரமன்றோ?—ஞாலத்தில்

இத்தகைய காட்சி எளிதில் கிடைத்திடுமோ?
வித்தகரே சற்றே விலகியிரும்!—இத்தருணம்

மன்னரெலாம் போற்றும் கவிமன்னன் கம்பனது
தன்னே ரிலாத் தமிழ்ச்சிறப்பை—என்னுள்ளம்

போற்றத் துடிக்கிறது! புத்தம் புதுச்சொற்கள்
ஊற்றெடுத்துப் பொங்கி ஓடிவரும்—ஆற்றலினை

வாழ்த்தி வரங்கொடுப்பீர்! என்றேன் கவிஒட்டக்
கூத்தரும் உள்ளம் குளிர்வுற்றார்!—ஆர்த்துவரும்

ஊர்வலத்தில் கம்பன் உயர்வு தனைமுழக்கும்
ஆர்வஒலி கேட்டேன் அணுகினேன்! – நேர்வழியைக்

காண்கிலேன் மக்கட் கடலில் மிதந்திட்டேன்!
நான்கலைஞன் என்றே நயந்துரைத்தேன்! - ஏன்காணும்

நீரெல்லாம் இந்த நெருக்கடியில் மாட்டுகிறீர்?
வாருமென்று சொல்லி வழிகாட்டிப் — பேரறிஞன்

கம்பன் உலாவைக் கண்ணாரக் காணுமென
என்பால் இரங்கும் சிலரன்பால் – தெம்புடனே

உள்ளமெலாம் பொங்க ஒருச்சாண் உயர்ந்திட்டேன்!
தெள்ளுதமிழ்க் கம்பன் திருமுகத்தில் — துள்ளும்

புலமை ஒளிகண்டு போற்றினேன்: செஞ்சொல்
மலர்மாலை ஏற்று மகிழும் — தலைவா!

வருக! வருக! வரகவியே! நின்றன்
திருவுலாக் காணும் சிறப்பை – வருணிக்க

நாவொன்று போதுமோ? நாளொன்று போதுமோ?
பாவொன்று போதுமோ? பாவலர்முன் — நீவென்று

தில்லைமூ வாயிரவர் சீரங்கத் தார்உன்றன்
வல்லமை கண்டு மயங்கிடவே – நல்லதமிழ்க்

காவியத்தை மக்கள் கருத்தில் அரங்கேற்றி
ஓவியமாயத் தீட்டி உயர்ந்தனையே! — மேவியசீர்

வெற்றிக் களிப்பால் நீ வீதிவலம் செய்வதனைச்
சுற்றிநின்று கண்டு துதிப்போரில் – பற்றுடைய

நற்கவிஞன் யானும் நயனம் இமைக்காமல்
நிற்கின்றேன் பார்இந்த நேர்த்தியினை! — விற்பன்னு!

சோழத்து வேந்தன் குலோத்துங்கன் பட்டத்து
வேழத்து மீது நீ வீற்றிருக்கும் – கோலத்தைக்

கண்குளிரக் கண்டு களிக்கின்றேன் இந்நாட்டு
மண்குளிர வீதி வலம்வந்தாய்! – பண்குலவப்

பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக
காதலுறும் பொல்லாக் கதைசொல்லும் — பாதை

பொதுவில் உலாநூலின் போக்கெனினும் சான்றோய்!
அதுநின் புகழ்க்குரிய தன்றே! — புதுமைக்

கலைஞன் எனும்நிலையில் நின்பெருமை கண்டு
தலையான ஆற்றலினைச் சாற்றும் — நிலைபோற்றி

மெய்ப்பாட் டுணர்ச்சி மிகும்கலைஞன் நீ இன்பம்
துய்ப்பாய் எனநினைத்துச் சொல்கின்றேன் —
[எய்ப்பினினும்

நெஞ்சம் நிறையும் நிகரில் கலைவல்ல
செஞ்சொற் கவிஞர் திலகமே! — அஞ்சாத

கோசலைச் செல்வனது கோதண்டம் போல்வளைந்த
மீசை அழகை வியப்பேனே! — வீசுபுகழ்

மண்ணுலகம் தன்னடக்கம் என்னுமொரு மன்னவனும்
நின்னடக்கம் என்றுரைத்த நெஞ்சழுத்தம் —
[உன்னுவனே!

"மன்னவனும் நீயோ! வளநாடும் உன்னதோ!
உன்னையறிந் தோதமிழை ஓதினேன்!"–என்னுமொரு

தன்மான வேகத் தறுக்கை வியந்தென்ன
சன்மானம் செய்யும் தமிழ்உலகம்! — சொன்மாரி

வாரி வழங்கும் விருத்தத்தில் அம்மம்மா!
சீரிளமை இன்பம் தெரிகிறதே! — பார்வியக்கத்

'தென்ன பராக்கிரம மும்முடிச் சோழன்எனும்
மன்னவன்' பொன்னி வளநாட்டில் — கனகவரும்

தஞ்சைப் பெருங்கோயில் கண்டான் தமிழமுதச்
செஞ்சொற் கலைக்கோயில் செய்தாய்நீ! —
[செஞ்சடையோன்

கற்கோயில் காணுஞ் சிறப்பைக் கவிவடிவச்
சொற்கோயில் கண்டு துலங்கும்காண்!—கற்பனையில்

எத்திக்கும் போற்றும் இராமன் அரசாட்சித்
தத்துவம் கண்ட தமிழ்ப் புலவோய்! — இத்தரையில்

"அந்தமிலாக் கொட்டகையில் அந்தமிலாக்
[கூத்"தென்னும்
சிந்தனைச் செல்வன் திருவாக்கை – முந்தியே

"ஆடரம்பை நீடரங்"கென் றற்புதமாய்ச்
[செப்பியதோர்
நாடகப்பே ராசிரிய நாயகனே! — ஈடறியா

இன்சொல் இராமகதை யேகம்ப நாடகமென்(று)
இன்னொருபேர் ஏற்கும் இசையறிவோம்!–எண்ணிய

பாத்திரங்கள் தம்மைப் படைத்துத் தனித்தன்மை
பூத்திலங்கச் செய்த புகழ்ச்சிற்பி!- யாத்ததொரு

தங்கமணிச் சங்கிலியில் தொங்கும் பதக்கம்போல்
சிங்கப் பிரான் கதையைச் சேர்த்தவனே!–
என்குருவே!

இன்பத் தமிழ்ப் புலமை ஏறே! எழிலார்ந்த
நின்பவனி காணும் நெடுவீதி - என்னதவம்

பண்ணியதோ! நின் உலாப் பார்க்கும் விழியெல்லாம்
புண்ணியம் செய்த பொருளன்றோ!- அண்ணலே!

மாற்றலரும் கண்டு மயங்கும் உலாவதனைப்
போற்றுகிறேன் தெய்வப் புலவோய்!–ஆற்றலுயர்

சொல்லுள்ள மட்டும் இராமனது பேராண்மை
வில்லுள்ள மட்டும் விளங்குமே!- நல்லகவி

கம்பன் உலாக்கண்ட கன்னித் தமிழ் உலகம்
அம்புவியில் என்றும் அறம் வளர்க்கும்-என்பதனைச்

சத்தியமாய்ச் சொன்னேன்; தரணியுள்ள நாள்மட்டும்
முத்தமிழும் வாழ்க முதிர்ந்து!



# கவிமணியும் குழந்தையும்

—]அழ. வள்ளியப்பா[—

பள்ளியிலே சேர்ந்திருநாள் ஆகவில்லை
பாலகனும் வாய்விட்டுப் பாடிக்கொண்டே,
துள்ளிமிக விரைவாக மாலைப் போதில்,
சுறுசுறுப்பாய்த் தன்வீடு திரும்பிவந்தான்.
அள்ளியந்தப் பாலகனை மார்பினோடே
அணைத்தனளாம் அன்னையுமே பூரிப்போடு.
வெள்ளையுளப் பாலகனும், "அம்மா, அம்மா,
விளம்பிடுவேன் ஒருபாட்டு,கேளாய்"என்ருன்

"தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு - அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி.
அம்மா என்குது வெள்ளைபசு - உடன்
அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி.

நாவால் நக்குது வெள்ளைப்பசு - பாலை
நன்ருய்க் குடிக்குது கன்றுக்குட்டி.
முத்தம் கொடுக்குது வெள்ளைபசு - மடி
முட்டிக் குடிக்குது கன்றுக்குட்டி."

கன்றினைப்போல் துள்ளியவா றிந்தப்பாடல்
களிப்புடனே மகன்பாடக் கேட்டதாயும்,
ஒன்றியநல் மனத்துடனே துள்ளலானுள்.
உடனங்கே வியப்புடனே கூறலானுள்.
"இன்மழலை மொழிமேலும் இனிக்கும்வண்ணம்
ஏற்றபொருள், எளியநடை, இன்சொல்கூட்டிக்
கன்னல்நிகர் பாடல்தந்த கவிஞர்தம்மைக்
கண்ணே, நீ அறிவாயோ?" எனவே கேட்டாள்.

அவ்வமயம் அவ்விடத்தே தந்தார்,
"அக்கவிதைத் தமிழறிந்தோர் அறிவார்" என்ருர்.
"அவ்வையுடன் அதிவீர ராமர்தாமும்
அளித்தனரே பலபாடல், சிறுவர்க்கென்றே.
கவ்விலை அவையெல்லாம் குழந்தையுள்ளம்,
களிப்பெதுவும் தோன்றியதோ? இல்லையில்லை.
இவ்வளவில் இருந்தநிலை மாறச் செய்தார்
இனிமைமிகு பாடல்பல இயற்றித்தந்தார்."

தந்தையவர் மெய்மறந்து கூறக்கேட்ட
தாய்உடனே குறுக்கிட்டுப் பேசலுற்ருள்.
"அந்தஒரு பெருங்கவிஞர் பெயரைநானும்
அறியாமல் கேட்டேனே? இல்லைஇல்லை.
செந்தமிழ்த்தாய் நாட்டிலுள்ள சிறுவர்க்கென்றே
செய்தளித்துக் காணிக்கை செலுத்திநின்ருர்
சிந்தைமகிழ் வாடாத மலரும்மாலை
தேசிக விநாயகத்தை அறியார்யாரோ?

சிறுபிள்ளை கவிமணியைத் தெரிந்துகொண்டால்,
சிறப்பன்ருே என்றெண்ணிக் கேட்டுவைத்தேன்.
குறுக்கிட்டுத் தாங்களுமே பதிலுரைத்தீர்,
குற்றமில்லை; நம்குழந்தை சிலநாட்சென்ருல்,
அருமைமிகு கவிமணியின் பெருமையெல்லாம்
அடுக்கடுக்காய் எடுத்துரைக்கும்; ஐயமில்லை.
கரும்பொக்கும் அவர்கவிகள் பிள்ளையுள்ளம்
கவர்வதுபோல் எவர்கவிதான் கவரும்?"என்ருள்.

## தாய் மேலும் கூறுகிருள் :

சின்னச் சின்னச் சிறுவரெல்லாம்
சேர்ந்து பாடலாம்—அவர்
செய்தளித்த பாட்டைப் பாடிக் கூடி ஆடலாம்.
அன்னை, தந்தை, சுற்றமெல்லாம்
மகிழ வைக்கலாம்—பல
ஆயிரம்பேர் கேட்டே மனம் மயங்க வைக்கலாம்.

ஆட்டுக் கிடாய்ப் பாண்டியனும்
நாயும் வந்திடும்—கூட்டில்
அடைத்த புலிக் கண்ணிரண்டும் பந்த மாகிடும்.
சாட்டைஅடி பட்டுப் பட்டுக் குதிரை புலம்பிடும்—புல்
தனது சரிதம் கூறி நம்மை வியப்பி லாழ்த்திவிடும்.

தீயுமில்லை, புகையுமில்லை தெருவில் சென்றிடும்--நல்ல
சிங்கார மானசைக்கிள் வண்டி காணலாம்.
வாயுவேக மாகவானில் வட்ட மிட்டிடும்–அந்த
வான வூர்தி கூறும் அகிம்சை வழியில் செல்லலாம்.

பவழக்காரத் தெருவில் காணுப்
பவழம் தேடியே--அதைப்
பச்சைக் கிளியின் சிவந்த மூக்கில்
பார்த்து வியக்கலாம்.
துயில் துறந்து, கண்மலர்ந்து அரசெழுந்திட--அங்கே
சுற்றுப் புறக் காட்சிகாட்டிச் சொக்க வைக்கலாம்.

எலிக்கும் எலிக்கும் கலியாணம்
இனிது காணலாம்--அதில்
எத்தனையோ எலிகள் வகை தெரிந்து கொள்ளலாம்.
சலிப்பில் லாமல் உதவுகின்ற
நமது கைத்திறன்--ஆஹா!
சலிப்பே யின்றிக் கூறக்கேட்டுக்
களிப்புக் கொள்ளலாம்.

தாயின் வாக்குப் பொய்க்கவில்லை. அவள் எதிர் பார்த்தபடியே பத்து வயதானதும், அப்பையன் நண்பர்களோடு சேர்ந்து நாவினிக்கப் பாடுகிருன் கவிமணியின் அருமை பெருமைகளை.

சின்னஞ் சிறியோர் நாமெலாம் சேர்ந்து பாடி மகிழவே
இன்ப மான கவிதைகள் இயற்றித் தந்த கவிமணி!
பள்ளி தோறும் பிள்ளைகள் பாடிப் பாடித் தினமுமே
துள்ளிக் குதிக்கச் செய்திடும் தூய மனிதர் கவிமணி!

குழந்தை உள்ளம் குளிரவே கொஞ்சுகின்ற முறையிலே
பழகு தமிழில் பாடல்கள் பலவும் தந்த கவிமணி!

மலரும் தொடுத்த மாலையும் வாடிப் போகும். ஆயினும்
மலரும் மாலை யும்என வாடி டாத நூலையே
எங்க ளுக்குத் தந்தவர். இன்பம் பொங்கச் செய்தவர்,
தங்க மான கவி மணித்
தாத்தா வைநாம் போற்றுவோம்.

# இன்றைய தமிழ் எழுத்தாளனின் அசௌகரியங்கள்

நா. பார்த்தசாரதி.

## மூன்று கோணங்கள்

இந்தத் தலைப்பையே 'இன்றைய தமிழ் எழுத்தாளனின் சௌகரியங்கள்' அல்லது 'சௌகரியக் குறைவுகள்' என்று அமைத்திருக்கக் கூடாதா? என்பதாக இதைப் படிக்கிறவர்களுக்கு ஒரு கேள்வி கேட்கத் தோன்றும். கேட்கத் தோன்றுவது நியாயமாயிருக்கலாமே ஒழிய அப்படிக் கேட்பது நியாயமாயிருக்கவே முடியாது. 'சௌகரியங்கள்'- என்று தலைப்பில் வந்திருந்தால் இன்றைய தமிழ் எழுத்தாளனுக்கு ஏதோ சௌகரியங்கள் இருப்பதாக நாமே ஒப்புக் கொண்டுவிட்டாற் போலத் தோன்றும். 'சௌகரியக் குறைவுகள்'– என்று தலைப்பில் வந்திருந்தாலோ இன்றைய தமிழ் எழுத்தாளனுக்கு அதிக சௌகரியங்கள் இல்லாவிட்டாலும் ஏதோ ஓரளவு குறைந்த சௌகரியங்கள் சில இருப்பது போல ஒப்புக்கொண்டு விட்டதாக முடியும். இன்றைய தமிழ் எழுத்தாளனுக்கு அசௌகரியங்கள் மட்டுமே நிறைய இருப்பதாகச் சொல்ல விரும்புகிற இந்தக் கட்டுரையின் நோக்கத்துக்குப் பழுதுவராத வண்ணம் மேற்படி தலைப்பையே தேர்ந்தெடுக்க நேர்ந்தது. தொல்காப்பியரும், திருவள்ளுவரும், கம்பரும், இலக்கிய இலக்கணங்களைப் படைத்த காலத்தில், இத்தனைவிதமான காப்பிரைட், ராயல்டி, தொந்தரவுகளும், அபிப்ராய பேதங்களும், அவர்களைப் பாதித்திருக்க நியாயமில்லை. அவர்களுடைய அமர இலக்கண இலக்கியங்கள்-அவர்களே எழுதிய-அல்லது அவர்களுடைய அருமை மாணுக்கர்கள்-எழுதிய ஏட்டுச்சுவடிகளிலிருந்து பிரதி செய்து கொள்ளப்பட்டோ-மனனம் செய்யப்பட்டோ பரவின. இன்றைய இலக்கிய கர்த்தாவோ தன் படைப்பை ஓராயிரம் பிரதிகள் அச்சிடுவதற்குத் தகுந்த பதிப்பாளரைத் தேடுவதிலிருந்து ஒவ்வொரு முயற்சியிலும் படிப்படியான சிரமங்களை அடைய வேண்டியவனுக இருக்கிருன். தான் எந்தத் தமிழ் மொழியில் எழுதுகிருனே, அதே தமிழைத் தாய்மொழியாகவுடைய படிப்பறிவுள்ள மக்கள் ஆங்கிலப் புத்தகங்களில் மோகம்கொண்டு - தமிழ் வெளியீடுகளையும், புத்தகங்களையும், புறக்கணிப்பதையும், அலட்சியப்படுத்துவதையும் பார்த்துச் சகித்துக் கொள்வதுடன் அதை ஓரளவு மன்னிக்க வேண்டிய தர்ம சங்கடமான நிலைமையும் இன்றைய தமிழ் எழுத்தாளனுக்கு இருக்கிறது. இன்றைய தமிழ் எழுத்தாளனின் அசௌகரியங்கள் மூன்று கோணங்களில் அவனை நோக்கி வருகின்றன. முதலாவது பத்திரிகைகளிலும், வெளியீடுகளிலும், அவன் அடைகிற அசௌகரியங்கள். இரண்டாவது புத்தகப் பதிப்பிலும், அவற்றின் விற்பனையிலும் அவன் அடைகிற அசௌகரியங்கள். மூன்ருவது இந்த நூற்ருண்டின் ஐசுவரிய மோகினியும் ஜனரஞ்சக ராணியுமாகிய சினிமாச் சிங்காரியினுல் அவன் அடைகிற அவமானங்கள். 'இந்த மூன்று துறைகளிலிருந்தும் தமிழ் எழுத்தாளன் ஏதாவது சில சௌகரியங்களையும் அடையலாமல்லவா?'-என்று நீங்கள் கேட்க நினைப்பீர்கள். ஆனுல் இந்த மூன்று துறையிலிருந்தும் ஒரு தமிழ்எழுத்தாளன் அடைகிற சௌகரியங்களைக்காட்டிலும் அசௌகரியங்களே அதிகமாகவும், கடுமையாகவும் இருப்பதால், சௌகரியங்களை ஒரு பொருட்டாக மதித்துக் கணிக்க வழியில்லாமல் போகிறது. ஏறத்தாழ மூன்றரைக் கோடி அல்லது நாலரைக் கோடி எண்ணிக்கையுள்ள தமிழர்கள் பர்மா, மலாயா, இலங்கை, தென்னுப்பிரிக்கா, உள்படப் பல இடங்களில் பரவிக் கிடக்கிருர்கள். ஆயினும் ஓர் தமிழ் எழுத்தாளனின் இலாப நஷ்டக் கண்ணேட்டத்துடனே பார்த்தால் - இந்த நாலரைக்கோடி மக்களடங்கிய மொழி சிறுபான்மையினர் பேசும் சிறுபான்மை வசதிகளடங்கிய சிறிய மொழியாகவே தோன்றுகிறதெனலாம்.

## பத்திரிகை - வெளியீடுகள்

தமிழினத்தைச் சேர்ந்த — உயர் வர்க்கத்தாரும். உயர் மத்திய தர வர்க்கத்தாரும் தங்கள் வீட்டிலுள்ள சமையற்காரர்கள், கார் டிரைவர், வேலைக்காரர்கள் படிப்பதற்காகத்தான் தமிழ்ப் பத்திரிகைகளையும், வெளியீடுகளையும், உள்ளே நுழையவிடுகிற பாவத்தைச் செய்ய வேண்டியிருக்கிறதென்று நினைக்கிருர்கள். தாய் மொழி, தாய் மொழிப் பத்திரிகைகள், தாய் மொழி எழுத்தாளர்கள், தாய் மொழி இலக்கியம்—என்கிற கோணத்தில் இந்த உயர் வர்க்கத்தாரிடமும், உயர் மத்தியதர வர்க்கத்தாரிடமும், தேசிய உணர்ச்சி, சுயாபிமானம், எல்லாம் பூஜ்யமாகவே இருக்கிறது. மில் தொழிலாளி முனிசாமிக்கும், அட்டெண்டர் அங்கப்பனுக்கும், புதுமைப்பித்தனைப் பற்றியோ, திரு. வி. க.வைப் பற்றியோ தெரிந்திருக்கும். அதே சமயத்தில் அரங்கநாதன் ஐ. ஸி. எஸ்.ஸுக்கும், மானேஜிங் டைரக்டர் மார்க்கசகாயத்துக்கும் ஆங்கில பாஷையின் அடிமட்டத்திலிருக்கும் ஏழாந்தர, எட்டாந்தர ஆசிரியனைக்கூடத் தெரிந்திருக்குமே ஒழியச் சுய பாஷையின் முதல்தரமான ஓரிரு ஆசிரியர்களின் பெயர்கள்கூடத் தெரிந்திருக்காது. இந்தநிலை கடந்த பத்தாண்டுகளில் ஓரளவு மாறியிருக்கிறது என்ருலும் இன்னும் நன்ருக– இன்னும் விரும்பத்தக்க விதத்திலே மாறி வளர வேண்டும். சொந்த பாஷையில் நன்ருகப் பேசத் தெரியாமலும், நன்ருக எழுதத் தெரியாமலும் அரைகுறைகளாக இருப்பதையே இன்னும் கௌரவமாகக் கொண்டாடிக்கொள்கிற 'பெரிய மனுஷாள்' இங்கே இருக்கிருர்கள், தேவன், கல்கி கிருஷ்ணமூர்த்தி, கி.வா.ஜ. போல் எழுத்தாண்மையும், தகுதியுமுள்ளவர்கள், ஆசிரியபீடத்தில் அமர்ந்து செங்கோல் நடத்தியகாலம் போக, இரண்டொரு வாக்கியங்கள்கூட எழுதத் தெரியாத - பத்திரிகை முதலாளிகளே-சௌகரியத்துக்காகவும், கௌரவத்துக்காகவும்-ஆசிரியராகிற அல்லது அந்த முதலாளிமார்களின் பிள்ளைகளோ, மாப்பிள்ளைகளோ, மைத்துனர்களோ அந்தப் பதவிக்கு வாரிசாக்கப்

படுகிற பரிதாபகரமான நிலை இங்கே இருப்பதைக் காண்கிறோம். இதனால் இலக்கிய வர்க்கம் என்கிற ஒரு வலிமைவாய்ந்த இனம் உருவாகாமல் தனித்தனியாகச் சிதறிக் கிடக்கிற தமிழ் எழுத்தாளர்களின் சக்தியும், திறமையும் வீணாகிறது. அவர்களுடைய உழைப்பும், திறமையும் மிகவும் மலிவான விலைக்கு வாங்கப்படுகின்றன. இன்ன எழுத்தாளர் எழுதுவதனால் இந்தப் பத்திரிகை விற்கிறது–இன்ன எழுத்தாளர் எழுதுவதனால் இந்தப் பத்திரிகைக்கு மதிப்பு—என்று எழுத்தாளர்கள் பத்திரிகைக்கு 'குட்வில்' (Good will) சம்பாதித்துக் கொடுக்கிற நிலை வரவேண்டும். அப்படி நிலை இருந்தாலும் தமிழ்ப் பத்திரிகை முதலாளிகள் அதை மறைத்து விட முயல்வார்கள். "எம், ஜி. ஆர்-மாறு வேடங்களில் நடித்த எட்டுப் படங்கள் யாவை? சிவாஜி கணேசன் சீறிக்கொதித்து வசனம் பேசிய செந்தமிழ்த் திரை ஓவியங்கள் என்னென்ன?" — என்று நேயர்களின் சினிமா ஞானத்துக்குக் கேள்வி போட்டு — எண்பதாம் பக்கத்தில் விடை தலைகீழாகப் பிரசுரிக்கப்பட்டிருப்பதாய்ப் பெருமைப்படுகிற ஒரு பத்திரிகையும், ஆட்டுக்குட்டி, கோழி, குயில், மயில்; கழுதை, குதிரை, எருமை இவைகளைப்பற்றி எந்தெந்தத் தமிழ்த் திரைப் படத்தில் பாடல்கள் வருகின்றன என்ற மாபெரும் உண்மையை ஆராய்ந்து தொகுத்து வாசகர்களுக்கு அளித்து திரைத் துணுக்கு நல்கும் ஒரு செந்தமிழ் ஏடும், பாதாம் அல்வா, சுண்டல், முறுக்கு இவைகளை விற்பதாக எந்தெந்த நடிகர்கள் எந்தெந்தப் படத்தில் வேஷம் போட்டிருக்கிறார்கள் என்ற பேருண்மையைக் கண்டு பிடித்துச் சொல்லும் ஒரு பத்திரிகையுமாக, சினிமாவுக்கு 'மாலிஷ்' போடும் கைங்கரியத்தில் இறங்கியிருக்கும் தமிழ்ப் பத்திரிகைகளை இப்போது அதிகமாகப் பார்க்கிறோம். உண்மைக் கதை என்ற பெயரிலும், மர்மக் கதை என்ற பெயரிலும் பல ஆங்கிலக் குப்பைகளை அப்படியே மொழி பெயர்த்துத் தள்ளுகிறார்கள். பத்திரிகை எந்த பாஷையில் வெளிவருகிறதோ அந்த பாஷையிலேயே சுயமாகக் கதை எழுதுகிறவர்களும், இலக்கிய விற்பன்னர்களும் நிறைந்திருக்கும்போது முழுக்க முழுக்க ஆங்கிலத்திலிருந்தோ, இந்தியிலிருந்தோ, மொழி பெயர்த்தவற்றைக்கொண்டே தமிழ்ப் பத்திரிகைகள் காலந்தள்ளப் பார்ப்பது ஆண்மையற்ற பலவீனமான காரியம் அல்லவா? இதனால் சுயமாக எழுத முடிந்த எத்தனை எழுத்தாளர்கள் நஷ்டப்படுவார்கள்?

இனி இன்னொரு விஷயம். காலுக்குத் தகுந்த மாதிரிச் செருப்புத் தைப்பதற்குப் பதில் செருப்புக்குத் தகுந்தாற்போலக் காலைக்குறைக்கும் திருப்பணியிலும் சில தமிழ்ப் பத்திரிகைகள் ஈடுபட்டிருக்கின்றன. கதைகளுக்காகவோ, விஷயங்களுக்காகவோ, படங்களை வரையாமல், படங்களுக்காகக் கதைகளையும், விஷயங்களையும் சிதைத்துச் சித்திரவதை செய்யும் காரியத்திலும் சில தமிழ்ப் பத்திரிகைகள் ஈடுபட்டுள்ளன. கதைகளுக்கும், விஷயங்களுக்கும் நடுவில் ஹாஸ்யத் துணுக்குகளும், 'ஜோக்'குகளும் வெளியிடுவதற்குப்பதில்-'ஜோக்'குகளுக்கும் ஹாஸ்யத்துணுக்குகளுக்கும் நடுவே வெளியிடுவதற்கேற்றபடி கதைகளைத் தட்டிக் கொட்டி உருக்குலைத்து—அதை எழுதியவருக்கே 'தான் எப்படி எழுதியிருந்தோம்'—என்று அடையாளம் கண்டுபிடிக்க முடியாதபடி—வெளியிடும் பத்திரிகைகளும் தமிழ்நாட்டில் உள்ளன. ஒரு சமயம் ஒரு தமிழ் வாரப்பத்திரிகையில் யாரோ ஒரு குஜராத்திப் பிரமுகரின் பெயருக்குக் கீழே அழகான செந்தமிழ் நடையில் அகில இந்திய அரசியல் பிரச்னை ஒன்றைப் பற்றிய கட்டுரை வெளியாகியிருந்தது. அந்தப் பிரமுகர் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையைக் குறிப்பிட்ட பத்திரிகைக் காரியாலயத்தார் தங்கள் வாசகர்களுக்குத் தமிழாக்கி அளித்திருக்கிறார்கள் என்ற குறிப்புக்கூட அதில் இல்லை. இதே போல ஓர் தமிழ் எழுத்தாளர் தமிழில் ஒரு கட்டுரை எழுதி அதன் மொழி பெயர்ப்பு ஆங்கில இதழ் ஒன்றில் வெளிவருமானால் — அந்தக் குறிப்பிட்ட எழுத்தாளருக்கு ஆங்கிலம் தெரியாது என்பதுபோல் அறிவிக்கும் பாணியில் அது மூலத்திலிருந்து மொழி பெயர்த்தது தான் – என்பதை ஒத்த வாக்கியமொன்றை அந்தக் கட்டுரையின் முகப்பில் சேர்த்திருப்பார்கள். மைனாரிட்டி மொழியினருக்குள்ள தாழ்வு மனப்பான்மைக்கும், மெஜாரிட்டி மொழியினருக்குள்ள உயர்வு மனப்பான்மைக்கும் எத்தனை வித்தியாசம் பாருங்கள்!

உயரிய எழுத்துத் திறமையும், இலக்கிய காம்பீர்யமும் – உள்ள இடத்தில் வசதிக் குறைவும் போதிய பொருள் வளமின்மையும் – வசதிகளும், போதிய பொருள்வளமும் உள்ள இடத்தில் தகுதி அறியாமையுமாக – இருக்கிறது நிலைமை. பத்திரிகைகள் நாவலுக்குப்பத்தாயிரம், சிறுகதைக்கு ஐயாயிரம், நாடகத்துக்கு நாற்பதாயிரம் என்று அறிவிக்கும் இலக்கியப் போட்டிகள் எல்லாம் — படாடோபமாகவும், எழுத்தாளனை - அசல் எழுத்தாளனை அவமானப் படுத்துவனவாகவும் உள்ளன. போட்டி முடிவுகளிலும், பரிசுத் தேர்வுகளிலும் பட்சபாதமான நீதிபதிகளின் தீர்ப்புக்கள் வெளியாகின்றன. எழுத்தாளர் இனத்தின் இலக்கிய கௌரவத்தைக் காப்பாற்றும் விளைவுகள் பெரும்பாலும் இந்தப் போட்டிகளால் ஏற்படக் காணோம். பத்திரிகைகளில் தமிழ் எழுத்தாளனின் எழுத்துச் சுதந்திரத்திற்கும் குறைவான இடம்தான் உண்டு. கதாநாயகன் சிகரெட் பிடிப்பதாகவோ, அல்லது மது அருந்துவதாகவோ, ஒரு பெண்ணிடம் முறை தவறி நடக்க முயன்றதாகவோ — ஒரு கதையில் கற்பனை செய்தால் — "வர வர இந்த ஆள் ரொம்ப 'சீப்' ஆக எழுதத் தொடங்கிட்டான்"—என்று நினைக்கிற மனப்பான்மை சிலரிடம் இருக்கிறது. கண்முன்னால் நாம் காண்கிற யதார்த்த வாழ்க்கையிலே, புகைபிடிக்கிறவன், தெரிந்தே மது அருந்துகிறவன், யாருக்கும் தெரியாமலே திருட்டுத் தனமாக மது அருந்துகிறவன், மனைவியை அடித்து நொறுக்குகிற முரட்டுக்கணவன், கணவனை அடிக்கிற ராட்சஸ மனைவி, விபசாரம் செய்கிற ஆண் மகன், அதே காரியத்தைச் செய்கிற பெண் மகள் எல்லாரும்தான் இருக்கிறார்கள். இவர்களது குணங்கள் அல்லது அதிகுணங்கள் - இலக்கியத்தில் யதார்த்த இலக்கியத்தில் ஓரளவு இடம் பெறுவது எப்படித் தவறாகும்? மனித வாழ்க்கையின் ஒவ்வொரு கோணத்திலும் உள்ள மறைமுகமான யதார்த்த உண்மைகளைக்கூட எழுத்துக்கு விஷயமாகத் தேடும் சௌகரியமும்உரிமையும், அமெரிக்காவிலும், ருஷ்யாவிலும், பிரிட்டனிலும், பிரான்ஸிலும், உள்ள எழுத்தாளனுக்கு இருக்கிறது. தமிழ் எழுத்தாளனுக்கு அத்தனை சுதந்திரம் ஏற்பட்டுவிடவில்லை என்றாலும் அவசியமான சில சின்னஞ் சிறு உரிமைகள் கூடக் கிடைக்கவில்லை. அசட்டுத்தனமான ஒரே வகைத் தியாகங்கள், கல்யாண மாப்பிள்ளைத் தகராறுகள், முக்கோணக் காதல்கள், காலேஜ் காதல்கள், ஏழைமைத் துன்பங்கள், திரும்பத் திரும்ப மெரீனா கடற்கரையைச் சுற்றிவரும் தொடர் கதைகள் - இவைகளோடு தமிழ் எழுத்தாளன் அடங்கிவிடலாமா?

## புத்தக பதிப்பும் - விற்பனையும்

புத்தகப் பதிப்பையும் அதன் விற்பனையையும் பொறுத்தவரை ஒரு தமிழ் எழுத்தாளனுக்கு என்னென்ன அசௌகரியங்கள் இருக்கின்றன என்பதை இனிமேல் கவனிக்கலாம். மாதக்கணக்கில் அல்லது வருடக்கணக்கில் உறக்கம் விழித்து இராப்பகலாக உழைத்து உருவாக்கிய ஒரு நாவலை அல்லது ஆராய்ச்சி நூலை - எந்தப் பத்திரிகையிலும் தொடர்ந்து வெளியிடாமல் நேரடியாக அப்படியே புத்தகப் பதிப்பிற்குக் கொடுத்துப் புத்தக விற்பனையின் மூலமே பரிபூரணமான இலாபமும் பயனும் அடைகிற சௌகரியம், மில்லியன் கணக்கில் புத்தக விற்பனை நடைபெறுகிற அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளிலுள்ள ஓர் எழுத்தாளனுக்கு உண்டு. தமிழ் எழுத்தாளன் ஒரு சிறந்த நாவலை உருவாக்குவதற்குப் படுகிற சிரமமும் உழைக்கிற உழைப்பும், அந்த நாவல் பத்திரிகையில் தொடராக வெளிவந்து அதன் மூலம் கிடைக்கிற ஊதியத்தால் நிவர்த்தியாகாததுடன் அதே நாவல் புத்தக வடிவில் பதிப்பிக்கப்பட்டுக் கிடைக்கிற ஊதியத்தினாலும் கூட நிவர்த்தியாவதில்லை. பத்திரிகையில் வெளியாகாமல் தனியாகவே – நேரடியாகப் புத்தகத்துக்குக் கொடுத்துவிட்டாலோ-உழைத்த உழைப்பில் நாலில் ஒரு பகுதிக்குக் கூட ஊதியமாகிற வருமானம் கிடைக்காது. தானே முதல் போட்டு அச்சிட்டு பைண்ட் செய்து – புத்தக வியாபாரம் பண்ணிச் செழிப்பான இலாபமடைகிற எழுத்தாளர்கள் மிகமிகக் குறைவு. அப்படியே இருந்தாலும் புத்தகத்தை அச்சுக்குக் கொடுத்துப் பிழை திருத்தி - வெளியிடுகிற வரைதான் அந்தச் சாமர்த்தியம் எல்லாம். விற்பனைத் திறன் அதாவது‘மார்க்கெட்டிங்எபிலிடி’வேறுவகையானது. ஓடியாடி அலைந்து லைப்ரரி ஆர்டர்களையும் பள்ளிக்கூட ஆர்டர்களையும் வாங்குவதற்குப் பாடுபட்டுக் கொண்டிருந்தால் எழுதும் திறனும் சிந்தனை ஆற்றலும் குன்றும். எனவே கற்பனா சக்தியும் சிருஷ்டித்திறனும் உள்ளவனான எழுத்தாளன் ஒருவன் தன்னுடைய புத்தகத்தைத் தானே வெளியிடும் சிரமத்தையோ, விற்பனை செய்யும் சிரமத்தையோ மேற்கொள்ளாமல் - சிரமத்தையும், அதன் அபரிமிதமான இலாபத்தையும் சேர்த்தே ஒரு பதிப்பாளரிடம் விட்டுவிட வேண்டியிருக்கிறது. பதிப்பாளர் முதற்பதிப்பு – ஆயிரம் பிரதிகள் – இரண்டாம் பதிப்பு ஆயிரம் பிரதிகள் -- மூன்றாம் பதிப்பு – அதே ஆயிரம் பிரதிகள் - என்று சம்பிரதாயமாகச் சொல்கிற அந்த ஆயிரம் பிரதி உண்மைக்கே எழுத்தாளன் தன்னைத் தியாகம் செய்தாக வேண்டியிருக்கிறது. எவ்வளவு வேகமாகவும், சுறுசுறுப்பாகவும், விற்றாலும் அந்த ஆயிரம் பிரதிகளும் விற்று முடியக் குறைந்தபட்சம் ஒரு வருஷத்திலிருந்து ஒன்றேகால் வருஷம் வரை ஆகிறது. அப்படி விற்கிற விற்பனைத் தொகையிலிருந்து எழுத்தாளனுக்குக் கிடைக்கிற பகுதியைக் கூட்டிக் கழித்து ஈவு வைத்தால் – பன்னிரண்டு மாதம் அல்லது பதினைந்து மாதம் ஓர் எழுத்தாளன் சுமாராக வாழ்க்கை நடத்துவதற்தக் கூடப்போதுமான தொகையாக அது இராது.

ஏழை இனமாகிய எழுத்தாளர் இனத்தின் இந்தப் புத்தக வெளியீட்டுத் தொழிலுக்கும், விற்பனைக்கும் கூட இப்போது வேறு ஒருவிதமான போட்டி முளைத்திருக்கிறது. இந்தத் துறைக்குச் சிறிதும் தொடர்பில்லாத அரசியல் செல்வாக்கும், சந்தர்ப்ப சூழ்ச்சிகளும் இப்போது இதனுள்ளும் ஓரளவு புகுந்திருக்கின்றன. பல பொதுக்கூட்டங்களிலும், திறப்பு விழாக்களிலும், முன் தயாரிப்பில்லாமலும், கருத்துச் செறிவில்லாமலும் தங்களுக்குத் தோன்றுகிறபடி மந்திரிகளும், பிரமுகர்களும் பேசுகிற பேச்சுக்களைக் குறிப்பெடுத்துக் கட்டுரைபோலாக்கி அவற்றையும் புத்தகமாகத் தொகுத்து- அந்த மந்திரிகள்பேரிலும், பிரமுகர்கள்பேரிலும் விலை வைத்து விற்பனைக்கு அனுப்புகிறார்கள். சிருஷ்டித் திறன் ஒன்றையே பலமாக வைத்துக்கொண்டு இலக்கியம் படைத்து வைத்திருக்கிற எழுத்தாளனின் புத்தகமும், மந்திரியின் பேரோடும், பிரமுகரின் பேரோடும் செல்வாக்கைப் பலமாகக் கொண்டு வெளியாகிற புத்தகமும்-போட்டியிட்டால் லைப்ரரிக்காரர்கள் முதலிய எல்லாரும் மந்திரி பேரில் வந்திருக்கிற புத்தகத்தைத்தான் முதலில் வாங்கப் பார்ப்பார்கள். அரை ரூபாய் விலையுள்ள புத்தகத்துக்கு ஆயிரம் ரூபாய் செலவழித்து வெளியீட்டு விழா வைப்பதன் மூலம் செல்வாக்கைத் தேடுகிறார்கள். ‘பெர்ரி மாஸானும்’, ‘ஏர்ல் ஸ்டான்லி கார்டினரும்’ கூடக் கடல் கடந்து வந்து இரண்டொரு மாதங்களில் ஆயிரமும்–இரண்டாயிரமுமாகப் பிரதிகள் செலவழிகிற இந்தத் தமிழ் நாட்டில்—சுய பாஷையில் வெளியாகிற முதல்தரமான புத்தகம்கூட ஆயிரம் பிரதி விற்றதென்ற கௌரவத்தை அடையப் பல மாதங்கள் அல்லது சில வருடங்கள் ஆகின்றன. புத்தகங்களை மதித்துப் பரிசுகள் வழங்குகிற மாநில, மத்திய அரசாங்கங்களின் அமைப்புக்களில் கூட ஒருதலைப்பட்சமான தேர்வுகளும், அரசியல் அந்தரங்கத்தைச் சேர்ந்த செல்வாக்குகளும் புகுந்து வேலை செய்வதாகச் சொல்லப்படுகிறது. ஐம்பது மில்லியன் பிரதிகள், நூறு மில்லியன் பிரதிகள் என்று பிரமிக்கத்தக்க விதத்திலே பிரதிகள் விற்பனையாகிற அகில உலக எழுத்தாளனின் நடுவில் வைத்துப் பார்க்கிறபோது ஆயிரம் பிரதிகள் முக்கால் வருடத்திலும், முழு வருடத்திலுமாகத் தீர்கிற தமிழ் எழுத்தாளனின் இடம் மிகமிகச் சிறியது. ஆனாலும் இந்தச் சிறிய இடத்தில் கூடத் தமிழ் எழுத்தாளன் அடைகிற அசௌகரியங்களே அதிகம்.

ஆயிரம் பிரதிகள் ஒரு வருடத்தில் விற்றாலும்–அப்படி விற்ற பிரதிகளில் எழுத்தாளனுக்குச் சேர வேண்டிய ஊதியப் பகுதி வந்துசேர அதற்கப்புறமும் மூன்று வருடங்கள் பிடிக்கும். அப்படி வந்தாலும் முழுத் தொகையாகவோ முழுப் பகுதியாகவோ கிடைக்காது. முதற்பதிப்புத் தீர்ந்தபின் முறையான முன்னறிவிப்போடு—இரண்டாம் பதிப்பு உரிய காலத்தில் வெளிவராது. பல நல்ல புத்தகங்கள் முதற்பதிப்போடு நின்றுபோவதும் உண்டு. சில புத்தகங்கள் முதற்பதிப்பு ஒரு பெயரிலும், இரண்டாம் பதிப்பு வேறொரு பெயரிலுமாக வெளிவந்து வாசகர்களை மருட்டும். சாதாரண மக்களின் கைக்கெட்ட முடியாத உயரத்துக்கு விலை வைக்கப்பட்டிருப்பதும் தமிழ்ப் புத்தகங்களின் குணாதிசயங்களில் ஒன்று. ஒருவேளை விலை குறைவாக வைக்கப்பட்டால் கூடுதலான பிரதிகள் விற்பனையாகலாமோ என்னவோ? இப்படிச் சில காரணங்களாலே ஒரு தமிழ் எழுத்தாளன் வாழ்க்கைக்கு நிரந்தரமான வருவாயைத் தரும் மார்க்கமாகப் புத்தகப் பதிப்பையும் நம்புவதற்கில்லை. தன் புத்தகத்தைப் பதிப்பிப்பதைவிட எந்தப் புத்தகத்தையாவது வியாபாரம் செய்தாலோ, கடை விரித்தாலோகூட ஒரு தமிழ் எழுத்தாளனுக்கு அது இலாபகரமான தொழிலாயிருக்கும் போல் தோன்றுகிறது. புற்றீசல் போல் வந்து ஹார்பரில் இறங்கும் பத்து ஆங்கில நாவல்களை வாங்கிக் கடை விரித்தால் கிடைக்கிற கமிஷன்கூடச் சொந்தப் புத்தகத்தின்

ராயல்டியைவிடக் கூட இருக்கலாமென்று ஒரு தமிழ் எழுத்தாளன் உறுதியாக நம்பலாம். ஒரு மைனரிட்டி மொழியில்—அகில உலகக் கண்ணேட்டத்தில் மிகச் சிறிதாகிய தமிழைப் போன்றதொரு மைனரிட்டி மொழியில் - எழுத்தாளனுயிருக்கிறவனுக்குப் புத்தகப் பதிப்பிலும் விற்பனையிலும்கூட இத்தனை அசௌகரியங்கள் உள்ளன. இனிமேல் திரைப்படத் துறையைப் பற்றிக் கவனிக்கலாம்.

## திரைக்கதை — வசனம்

வடக்கே ஓடிச்சலித்து 'ஸெகண்ட் - ஹாண்ட்' ஆகிப்போன வங்காளிக் கதைகளும், இந்திக் கதைகளும், மராத்திக் கதைகளும், தமிழில் படம் எடுப்பதற்காக விலைக்கு வாங்கிக்கொண்டு வரப்படுவது மரபாகி விட்டதனுல் - தமிழிலேயே சுயமாகப் பிறந்து தமிழிலேயே மூச்சுவிட்டுக் கொண்டிருக்கிற சுயபாஷைக் கதைகள் திரைப் படத்துக்கு லாயக்கில்லை என்று 'பிரஷ்டம்' செய்யப்பட்டாயிற்று. அதே சமயத்தில் சுயபாஷையில் வெளியாகின்ற நாவல்கள், சிறுகதைகள், தொடர்கதைகளிலிருந்து ஐடியாக்கள், வசனங்கள், உணர்ச்சிகரமான கட்டங்கள், முடிவுகள், ஆகியவற்றைத் திருடிப் புகுத்திக் கொள்கிற காரியத்தைச் சில திரைப்பட வசனகர்த்தாக்கள் கூசாமல் செய்து கொண்டிருக்கிருர்கள். 'காப்பிரைட்' சட்டமோ மயிரிழை அளவுதான் எழுத்தாளனின் உரிமையைக் காப்பாற்றுகிறது. எப்படித் திருடினுல் 'காப்பிரைட் கேஸ்' வராது என்கிற விஷயத்தை முன்கூட்டியே தேர்ந்த வக்கீல் ஒருவரிடம் கலந்தாலோசித்துக்கொண்டுதான் - அப்புறம் கதை திருடுகிறவர்களும் திருடுகிருர்கள். "ஸிங்கிள் ஐடியா ஒரே மாதிரி இருக்கறத்துக்காகக் கேஸ் ஒண்ணும் போடறத்துக்கில்லே. வேறே ஏதாவது உங்க கதையிலேருந்து திருடிருக்கானுன்னு சொல்லுங்க...'' - என்று பாதிக்கப்பட்ட எழுத்தாளனை வக்கீல் கேட்கும்போது, 'இந்தப் பாழாய்ப் போன 'காப்பிரைட் ஆக்ட்' இத்தனை பலவீனயாகவா இருக்கிறது?' - என்று எழுத்தாளன் மனம் நைந்துபோவதைத் தவிர வேறு வழியில்லை.

கதை திருடுகிற கயவர்கள் - திரைக்கதை வசனம் டைரக்ஷன்–என்கிற பெயருடன் 'காடிலாக்' காரில் சவாரி செய்து கொண்டிருக்க - அவனுக்குத் திருட்டுக் கொடுத்த எழுத்தாளன் விசுக்கு விசுக்கென்று கால் நோக வக்கீல் வீட்டுக்கு நடைபோட வேண்டியிருக்கிறது. திரை நடிகர்களுக்குக் கறுப்புப் பணம் இரண்டு லட்சமும் வெள்ளைப்பணம் இரண்டு லட்சமுமாக வாரி வாரிக் கொடுக்கிற தமிழ்ப்படாதிபதிகள் தப்பித்தவறி ஓர் எழுத்தாளனிடம் திரைப்படத்துக்குக் கதைகேட்க வந்துவிட்டாலோ, அறுநூறு, எழுநூறு பக்கமுள்ள ஒரு முழுக் கதையை - இருநூற்றைம்பது ரூபாய்க்கோ முந்நூறு ரூபாய்க்கோ – பேரம் பேசுகிருர்கள். ஹிந்திப் படத்திலிருந்து 'டப்' செய்கிற கதைக்குக்கூட – வெறும் கதை உரிமைக்காக மட்டுமே இருபத்தையாயிரம் முப்பதாயிரம் கொடுக்கிற படாதிபதிகள் – இரவு பகலாக உறக்கம் விழித்து எழுதிய ஒரு முழு நாவலை இரு நூறுக்கும், முந்நூறுக்கும் எப்படித்தான் கூசாமல் கேட்கிருர்களோ? ஆகவே அற்புதமாகவும், மிக வேகமாகவும் வளர்ந்திருக்கிற தமிழ் சினிமா உலகிலும் சுயபாஷையின் இரண்டொரு முதல்தரமான எழுத்தாளர்களுக்குக்கூடச் சௌகரியமோ, இலாபமோ, விளையவில்லை. அப்படி அல்லாமல் ஓரிரு ஏற்பாடுகள் நியாயமாக முடிந்தாலும்கூடத் திரைப்படத்திலோ, அதன் விளம்பரங்களிலோ; 'இன்னுர் எழுதிய இன்ன நாவலிலிருந்து இந்தப்படம் தயாரிக்கப்பட்ட'தென்று மூலக் கதையின் பெயரும் மூலக் கதாசிரியனின் பெயரும் விளம்பரப்படுத்தப் பெருமலேயே இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன.

கதைகளையும் ஐடியாக்களையும் திருடுவதில் தேர்ச்சி பெற்றுவிட்ட ஓர் திரைக்கதை வசனகர்த்தாவின் சமீபத் தயாரிப்பாகிய படம் ஒன்று ஐந்தாறு தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகளிலிருந்தும், தொடர்கதைகளிலிருந்தும், நாவலிலிருந்தும், கொஞ்சம் கொஞ்சமாகத்திருடி ஒட்டுப்போட்ட கதையாக இருந்த காரணத்தால் - அந்த ஐந்தாறுபேரும் தனித்தனியாக மேற்படியாருக்கு நோட்டீஸ் விட்டிருக்கிருர்கள். "இந்த மூலக்கதை நான் எழுதினதே இல்லை. நாலு வருஷத்துக்கு முன்னுடி ... வன்னு ஒருத்தர் அவசரத்துக்கு எங்கிட்டக் கொஞ்சம் பணம் வாங்கிட்டு ஒரு கத்தை ஸ்கிரிப்ட்டை வாரிக் கொடுத்திட்டுப் போனுரு. அப்பாலே அவர் இறந்து போயிட்டாரு. நான் அதுலே ஒரு ஸ்கிரிப்ட்டைத் திருத்தி ஒழுங்கு பண்ணி இந்தப் படமா எடுத்திருக்கேன். என் மேலே தப்புச் சொல்றத்துக்கு ஒண்ணுமே இல்லிங்க''- என்று எதிலிருந்தும் திருடாமல் சொந்தமாகத் தயார் செய்த ஒரு சரட்டை விட்டு நோட்டீஸ் விட்டிருக்கிற ஐந்தாறு பேரையும் சமாளித்துப் புளுகிக் கொண்டிருக்கிருராம் அந்தத் திரைக்கதை + வசனம் + டைரக்ஷன் + தயாரிப்பு + ஆளர். தமிழ் எழுத்தாளர்கள் இந்த விதமாகத் திரைப்படத் துறையிலும் அசௌகரியங்களையே அடைகிருர்கள். இதைத் தவிர இலக்கிய வளமும், கதா பாத்திரங்களை அமைப்பதில் தேர்ச்சியும் உள்ள தமிழ் எழுத்துலக ஜாம்பவான்கள் கூடத் திரைப்படத் தயாரிப்பாளர்களால் அவமானப்படுத்தப் படுகிருர்கள்.

''எங்களுக்கு இலக்கியமும் வேண்டாம்! வெங்காயமும் வேண்டாம். 'பாக்ஸ் ஆஃபீஸ் ஹிட்' ஆகிற மாதிரி ஒரு படத்தைத் தயாரிக்கணும். அதுக்குத் தகுந்த மாதிரி யார் எழுதருனே, அவனைவச்சு எங்க காரியத்தை நாங்க முடிச்சுக்குவோம்'–என்று வறட்டுக் கர்வம் பேசுகிற படாதிபதிகளைப் பார்த்துத் தமிழ் எழுத்தாளனின் ஏழை இதயம் நீண்ட நாட்களாகக் கொதிப்படைந்து போயிருக்கிறது. பத்திரிகை வெளியீடுகளிலும், புத்தகப் பதிப்பு விற்பனையிலும், திரைப் படத் துறையிலும், அடைகிற அசௌகரியங்களைவிடச் சொந்தமாகவே தமிழ் எழுத்தாளனுக்கு ஓர் அசௌகரியமும் உண்டு. அதுதான் ஒற்றுமையின்மை. எந்த ஒரு தமிழ் எழுத்தாளனும் தான் கஷ்டப்படுகிறபோது கூடத்தன் னேடுஃபீல்டில்[இருக்கிற சகஎழுத்தாளனின் அநுதாபத்தையோ, ஆதரவையோ பெற முடிவதில்லை, அவ்வளவேன்? 'தார்மீக ஆதரவு' என்று சொல்லப்படும் (Moral Support) கூட ஒரு தமிழ் எழுத்தாளனிடமிருந்து மற்ெருரு தமிழ் எழுத்தாளனுக்குக் கிடைக்குமென்று உறுதியாகவோ, நம்பகமாகவோ, சொல்லிவிட முடியாதபடி இருக்கிறது இன்றைய நிலைமை. எல்லா அசௌகரியங்களையும் விடப் பெரிய அசௌகரியம் இது ஒன்றுதான் என்று நினைக்கிறேன் நான்.

சங்கங்களும், மன்றங்களும், மாநாடுகளும், கருத்தரங்குகளும் ஒன்று கூட்டுகிறபோது, ஃபிஸிகலாக

ஒரே மேடையில் சேர்ந்து பேசியும், சேர்ந்து உட்கார்ந்தும், சேர்ந்து உணவருந்தியும் ஒருமைப்பாட்டைக் கடைப்பிடிப்பதுபோலக் காண்பித்துவிட்டாலும், தமிழ் எழுத்தாளர்களுக்குள்ளே தேவைக்கு அதிகமான அபிப்ராயபேதங்களும். போட்டி பொருமைகளும் நிறைந்திருக்கின்றன என்பதை நாசூக்காக மறைத்துவிடுவதற்கோ, மழுப்பிவிடுவதற்கோ இல்லை.

எல்லா மொழி எழுத்தாளர்களுக்கு உள்ளேயும் இப்படி அபிப்ராயபேதங்களும், போட்டி பொருமைகளும் இருக்கின்றனவே! தமிழ் எழுத்தாளர்களுக்குள் இருப்பதும் இயல்புதானே?'' - என்று நீங்கள் கேட்கலாம். பாதிக்கிற அபிப்பிராய பேதங்கள், பாதிக்காத அபிப்ராய பேதங்கள் – என்று இரண்டுவிதம் உண்டு. தமிழ் எழுத்தாளர்களுக்குள் இருக்கிற அபிப்ராய பேதங்களோ தனித்தனியாக ஒவ்வொருவரையும், மொத்தமாகப் பலரையும் இலக்கிய வாழ்வில் பாதிக்கிற அபிப்ராயபேதங்களாகவே இருக்கின்றன. அதனுல்தான் இந்த அபிப்ராய பேதமும் தமிழ் எழுத்தாளனின் மிகப் பெரிய அசௌகரியங்களில் ஒன்று என்பதாகக் குறிப்பிட்டேன். எதிர்காலத்தில் வருகிற தமிழ் எழுத்தாளனுக்கு இந்த எல்லா அசௌகரியங்களும் நீங்கிவிடும் என்று கூறுவிட்டாலும் ஒரு சில சௌகரியங்களாவது கிடைக்குமென்று நாம் இப்போதே ஓரளவு 'ஆப்டிமிஸ்டிக்' ஆக நினைத்துத்தான் ஆகவேண்டியிருக்கிறது! வேறென்ன செய்யலாம், சொல்லுங்கள்!

# இரவுத் தாமரை

**தி. கு. நடராசன், (குமுதன்)**

★

தண்ணீரில் வாய்விரித்துக் குடியி ருப்பேன்
தங்கம்போல் நிறம்பூசி அந்தி வீட்டில்
வெண்ணிலவை எதிர்பார்த்து விழியால் மேய்வேன்
வட்டம்போல் நீர்வேலி அமைத்து ஒற்றைத்
தண்டுக்கால் ஊன்றிவான உலகைப் பார்த்துத்
தணல்பரிதி முகம்கண்டால் செத்துப்
[போவேன் !
மண்ணில்செம் மண்ணைப்போல் வண்ணம்
[கொண்டும்
மண்ணில்நான் வரமாட்டேன் ! நீரே வீடு !

எப்பொருட்கும் நிழலுண்டு ! அஃறி ணைக்கும்
இவ்வுலகில் நிழலுண்டு ! வானில் மீன்கள்
கொப்பளிக்கும் நேரத்தில் என்மு கத்துக்
குளிர்நிழலைக் காண்பதற்கு இல்லை ! மேகம்
துப்பிவைத்த மழைநீரில் காத லால்என்
தோட்டத்தைப் போட்டிருப்பேன் ! செந்தூ
[ரந்தான்
எப்போதும் இருக்கும்பெண் இதழில் கொஞ்சம்
என்னிதழைக் கொடுத்தளித்து வைத்தி
[ருப்பேன் !

உழைக்கின்ற குடும்பத்தில் இரவு நேர
உழைப்பாளி நான் ! எனது தொண்டே
[தொண்டு !
அழைத்துநான் நிலவுப்பூ வைஎன் கையில்
அணைத்துஇச் சென்று ஒரு முத்தும் தந்து
குழைந்திடுவேன் ! கும்மிருட்டுக் குளிரில் தூங்கிக்
குவிந்துவிழும் தாமரையைக் கேலி செய்வேன் !
அழுகின்ற அந்தியினில் வண்டு தொட்டு
ஆர்ப்பாட்டம் செய்கின்ற மேடை நான்தான் !

பட்டினத்தார் பாட்டினத்தார் ! நானே காஞ்சிப்
பட்டுஇனத்தார் ! மென்மையான பெண்ணி
[னத்தார்
பட்டினத்தார் ! பாட்டுதனைப் பாட வைக்கும்
பாட்டினத்துப் பட்டுப்பூ இனத்தார் ! வானப்
பட்டினத்தார் நிலவின்கை பட்டுக் காதல்
பட்டினத்தில் கால்வைத்த மாலைக் கோலப்
பட்டினத்தார் ! மொட்டவிழ்க்கும் தாம ரைபோல்
பட்டவிழ்க்கும் பெட்டிவைத்த தட்டினத்தார் !

அல்லென்ற இரவில் 'இ' எனசி ரிப்பார்
அல்லியென்றார் எனை ! எல்லே யில் 'எல்'
[லென்றால்
செல்லென்ற செய்தியினைக் காற்றில் வண்டு
செவிக்கனுப்பும் ! கீழ்த்திசையில் நெருப்பு
[வட்ட
வில்லைக்குத் தூதனுப்பி நானும் கொஞ்சம்
விடியல்வரை உயிர்கொள்ள தோழி இல்லை !
இல்லையென்றால் யார்வருவார் ! ஏதோ நானும்
இருக்கின்றேன் ! குமுதம்நான் ! வருவேன்
[நாளை !

# இயல்பு

★ ஏ. எஸ். ராகவன். ★

வளைந்து வளைந்து செல்லும் அந்த ஒற்றையடிப் பாதையில் ஒரு மாட்டு வண்டி போய்க்கொண்டிருக்கிறது. முடிவற்ற பாழுக்குள் புதைந்து போவதைப் போல அந்தப்பாதை மேலே, மேலே நீண்டுகொண்டே இருக்கிறது.

செம்மண்ணும் கருவேல மரக் கூட்டங்களுமாக இருந்த காட்டுப் பகுதியைக் கடந்த பிறகு இங்கும் அங்குமாகத் தலைநீட்டும் குன்றுகள் தென்படுகின்றன.

அதோ ஒரு வீடு. செங்கல்லால் கட்டப்பட்ட அந்த வீடு இரண்டு குன்றுகளுக்கிடையே அமைந்திருக்கிறது. அதன் பின்புறம் ஒரு தூங்கு மூஞ்சி மரம் விண்ணை அளாவி நிற்கிறது. மாட்டு வண்டியில் வருவோரை வரவேற்பவைபோல தூங்கு மூஞ்சி மரத்தின் உச்சாணிக்கிளையில் பத்துப்பன்னிரண்டு காக்கைகள் சிறகடித்துப் பறந்து உற்சாகமாகக் குரல் கொடுக்கின்றன. அன்று காலையிலிருந்தே அங்கே உற்சாகம் தான். புண்ணியாவாசனமோ, நாமகரணமோ அன்று கண் திறந்திருந்த நான்கைந்து காக்கைக் குஞ்சுகளின் பொருட்டு மரத்தின் உச்சி அல்லோல கல்லோலப் படுகிறது.

"குஞ்சுங்களைப் பாத்தீங்களா?" தாய்ப் பறவை கேட்கிறது.

"பார்க்காம இருப்பேனு ?...... அந்தச் சின்னக் கண்களைப் பார்... இப்போதே இறக்கை முளைத்துவிட்ட மாதிரியில்லே துடிக்கிறான்!" தந்தை விமர்சிக்கிறது.

"இவன் ரொம்பக் கறுப்பு...." என்கிறது 'தாய்ப் பறவை ஒரு குஞ்சைச் சுட்டிக் காட்டி.

"கறுப்பா இருந்தா என்னவாம்?" என்கிறது தந்தைப் பறவை.

உண்மையில் அந்தக் கருப்புக் குஞ்சு காக்கைக் குஞ்சு அல்ல என்பது அந்த அன்புள்ளங்களுக்குத் தெரியாது! எங்கிருந்தோ ஒரு குயில் தன் முட்டையை இந்தக் கூட்டில் இட்டுவிட்டுப் போயிருந்தது. ஆயினும் என்ன? குயிலின் குஞ்சு அங்கே சம அந்தஸ்தைப் பெற்று வளரும்.

மாட்டு வண்டி நிற்கிறது. அதற்குள்ளிருந்து ஒரு வயதான அம்மாள் முதலில் இறங்கி, பிறகு கை கொடுத்து ஒரு இளம் பெண்ணைக் கீழே இறக்குகிறாள். பாவம், அந்தப் பெண் நிறை கர்ப்பிணி!

வீட்டின் சொந்தக்காரனும், சொந்தக்காரியும் அந்த இருவரையும் மாறி மாறிப் பார்க்கிறார்கள்!

"சௌக்கியமா, மருதை?" பெரிய அம்மாள் விசாரிக்கிறாள்.

"இருக்கிறோம்மா... இதென்ன திடீர்னு சொல்லாம கொள்ளாம சின்ன எசமானி அம்மாளோடு இந்த ஏழையின் குடிசைக்கு..." என்கிறான் மருதை.

"விவரமெல்லாம் சொல்கிறேன்... இப்போதைக்கு இந்த இக்கட்டிலிருந்து நீதான் காப்பாற்ற வேண்டும்..."

"சொல்லுங்கம்மா... இந்த உடம்பு பண்ணை வீட்டுச் சொத்து."

"மருதை, நம்ம குடும்பத்துக்கே பெரிய தலைகுனிவு வரும்படியா ஆகிவிட்டது..." பெரிய அம்மாள் குரலைத் தாழ்த்தி அவன் செவியில் ஏதோ கூறுகிறாள். மடியிலிருந்து பணக் கத்தை ஒன்று அவன் கைக்கு மாறுகிறது. "நான் சொன்னதெல்லாம் தெரிந்ததா?... குழந்தை இங்கே உன்னிடம்தான் வளர வேண்டும்— வெளியே மூச்சு விடக்கூடாது."

மருதை தலையாட்டுகிறான். அவன் பெண்டாட்டி பணக் கத்தையைக் கண்டதும் முகம் மலர்கிறாள்.

சிறிது நேரத்தில் அந்த இளம் பெண் மற்றொரு இளம் பெண்ணைப் பெற்றெடுக்கிறாள். கையும் காலும், விழியும் மூக்கும் ராஜாத்தி மாதிரி!

தூங்கு மூஞ்சி மரத்தின் உச்சாணிக் கிளையில் ஒரு பெரிய காக – சம்மேளனமே கூடிவிட்டதுபோல கூச்சல், மகிழ்ச்சிப் பெருக்கு! கீழேயோ பரம ரகசியமாக ஒரு ஜீவனின் வருகைக்குத் திரையும் கூலியும்!

வண்டி திரும்பிப்போகிறது. இளம்பெண் தலையை வெளியே நீட்டுகிறாள். பெற்ற மனம் அல்லவா! "மருதை, குழந்தைக்கு சுந்தரி என்று பெயர் வை," என்கிறாள்.

"ஆகட்டும்மா", என்கிறான் மருதை.

வண்டி மறைகிறது.

"ஐய, பண்ணையோட யோக்யதை இப்படியா போகணும்?" என்று வலிப்புக் கொண்டவள் போல நகைக்கிறாள் மருதையின் மனைவி.

"சும்மாவா? பணம் இல்லே பணம்!" என்கிறான் மருதை.

"ஆமாம்...பெரிய பணம்!.... ஆயிர ரூபா போதுமா இதுக்கு?"

"சும்மா இரு... இன்னும் எத்தினி ஆயிரம் வருதுன்னு பாரு!"

தொட்டிலில் கிடந்த குழந்தை பாலுக்கு அழுகிறது.

"தொண்டையைப் பாரு, எட்டு ஊருக்குக் கேக்கிற மாதிரி அலறுது!" என்று முண முணக்கிருள், அவள்.

தூங்குமூஞ்சி மரத்தின் உச்சியிலே குயிலின் குஞ்சுக்கும் ராஜ உபசாரம். அந்தக் காக்கைக்கு யாரும் மூட்டைப் பணம் கொண்டுவந்து தரவில்லே. விசுவாசமுள்ள எந்த குடும்பத்தின் பொருட்டாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பணி அல்ல அது. காக்கையின் இயல்பு – சுபாவமான அன்பின் பரிணமம் — அங்கே பார்ப்புக்களின் அலகுகளுக்குள் இரையைத் திணிக்கிறது.

நாட்கள் ஓடுகின்றன,

ஒரு நாள் மரத்தின் உச்சியில் பத்துப் பன்னிரண்டு காக்கைகள் கூடி 'கா, கா' என்று துயரக் குரல் கொடுக்கின்றன.

"அந்தக் கறுப்புப் பயலேக் காணேம்", என்கிறது தாய்ப் பறவை.

"நேற்று சாயந்திரம்கூட இருந்தானே?" என்கிறது தந்தைப் பறவை.

ஒரு கூட்டம் புறப்படுகிறது அவனைத் தேடி. ஆனல் அவன் எப்படி அகப்படுவான்? இரவோடு இரவாக குயில் வந்து தன் குஞ்சை எடுத்துச் சென்றுவிட்டதை அந்தக் காக்கைகள் எங்ஙனம் அறியும்?

தூங்கு மூஞ்சு அழுகிறது.

கீழே வீட்டில் ஒரே உற்சாகம். ஒரு வண்டி வந்து நிற்கிறது அங்கே. ஒரு வயதான அம்மாள் இறங்குகிருள். "வாங்கம்மா..." என்கிருன் மருதை.

"இதுதான் குழந்தையா?"

"ஆமாம்மா....பண்ணே வீட்டுச் சொத்து."

வந்தவள் குழந்தையின் சாமுத்ரிகா லட்சணங்களே அலசி அலசிப் பார்க்கிருள். குழந்தை விழிக்கிறது. இரண்டு வயதுப் பெண்ணுன அதற்கு இந்த உலகின் விபரீத நோக்கங்கள் என்ன தெரியும்!

மடியிலிருந்து ஒரு கத்தை பணத்தை எடுத்து நீட்டுகிருள் அந்த அம்மாள். "இந்தா ஆயிர ரூபா" என்கிருள்.

மருதை வாங்க மறுக்கிருன்.

"ஆயிர ரூபா போதாதா?.... இந்தா இன்னெரு நூறு ரூபா.... அதுக்கு மேலே தரமாட்டேன்" என்கிருள் வந்தவள்.

"பண்ணே வீட்டுச் சொத்தும்மா, குப்பை மேட்டுச் சரக்கு இல்லே," என்கிருன் மருதை.

"அது தெரியுது....சம்மதமா இல்லியா?" என்கிருள் அந்த அம்மாள்,

பணம் கை மாறுகிறது. குழந்தை அழுகிறது. வண்டி புறப்படுகிறது. மருதையும் அவன் மனைவியும் தங்கள் பேரத்தை எண்ணிச் சிரிக்கிருர்கள்.

தூங்கு மூஞ்சி மரம் விண்ணே அளாவி நிற்கிறது. அதில் கூடு கட்டியுள்ள பறவை இனம் உயரப் பறக்கிறது. அதன் கீழ் வீடு கட்டியுள்ள மனித இனம் மண்ணில் புரள்கிறது.

# கவி!

— கவிஞர். இளங்கம்பன் —

கன்னிப் பருவ எழிலேந்திக்
கருத்தை ஈர்க்கும் பொற்பதுமை!
மின்னிம யக்கும் மேனியுடன்
மெல்ல நடக்கும் பாங்கினிலே
பொன்னெளி வீசி மின்னலிட
புன்னகை யோடு கைவீசி
என்முன் தோன்றி அவள்நின்ருள்
என்னே மறந்தே நான்நின்றேன்!
இல்லே இல்லே இல்லே என
இருந்தே ஒசிந்த இடையழகும்!
வில்லே வெல்லும் வெல்லுமென
விந்தைபுரிந்த விழியழகும்
முல்லே முல்லே முல்லே என
முறுவல் உமிழ்ந்த பல்லழகும்
தொல்லே தந்த நிலேயினிலே
தோகை அழகில் நான் விழ்ந்தே.

நெஞ்சைக் கொண்ட அழகுருவே!
நேரிழையே உன் வரவென்னே!
பஞ்சும் அஞ்சும் அடிநோவ
பாவாய் யாரைத் தேடுகிருய்!
சொஞ்சொல் லால்உன் இசைபாடும்
சிறியேன் என்னேக் கூடாயோ?
பஞ்சை, வறியேன், கேட்கின்றேன்
பெண்ணே! நீயார் சொல்லென்றேன்.
சுமை சுமையாக இன்பத்தைச்
சேர்க்கும் பெண்ணுள் திருவென்ருள்!
உமையாள் சேர கேட்கின்றேன்.
உன்றன் தொழிலும் யாதென்ருள்!
குமையும் கவலே பிணிவறுமை
கொல்லும் கொடிய நிலேயினிலும்
அமைதியை வேண்டும் கவிஎன்றே
அகல விழித்தேன்: அவளில்லே!

# அரசியல் முறையும் சாதிப் பிரிவுகளும்

★

டி. என். சுகி சுப்பிரமணியன்

சாதி முறையாகப் பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்று நான்கு வர்ணங்களைப் பிரித்துள்ளார்கள். இந்தப் பிரிவு முறை உத்தியோகம் கல்வி கலாச்சாரம் எதற்கும் பொருந்தக் கூடிய மனப் பிரிவுகள்; இனப்பிரிவுகள், இவை குலப் பிரிவுகள் இல்லை; இவை குணப் பிரிவுகள் என்று உணர்தல் வேண்டும்.

முன்னாளில் பிறந்த இப்பாகுபாடு சிந்திக்கத் தெரியாத இந்நாள் பிராம்மணரல்லாதாருக்கு நெஞ்சைப் புண்படுத்துகிறது. இனத்தளவாகப் பிரிவு செய்யப்பட்டது தவறு என்று கூச்சலிட்டு சாதி ஒழிப்புக்கு ஆரவாரம் செய்கிறார்கள். இவை சாதியால் வந்த சழக்கில்லை, மன ஈடுபாட்டினால் வந்த மாயப்பிரிவு. இப்பிரிவு, இந்நாள் அரசியல் வாழ்வு வரை, உலகம் முழுமையும் நிலவி நிரம்பி இருக்கிறது என்பது எனது சித்தாந்தம்.

கூடிச் சேர்ந்து சேரி சேரியாக வாழ்ந்து விட்டதால் இன தர்மம் பிறந்தது; தெருவும் வீதியும், திருமணமும், தேரும் திருவிழாவும், நமது சாதிப் பிரிவை வளர்த்தது என்பது அறியாமையால் கூறும் அரிய வாதம்.

அறிவு, ஆற்றல் இரண்டின் அடிப்படையால் மனம் எங்கு எதன்மீது ஈடுபாடு கொள்கிறது என்பதை அறியவே பிரிவென்னும் கோட்பாட்டில் சாதி பிறந்தது. தொழிற் திறமைதான் சாதிக்குள்ளான ஆதிகாரணம். ஒவ்வொரு மனித மனமும் எப்பிரிவுக்குள் பெரும்பாலும் நிகழ்கிறதோ அஃதுவே இனப் பிரிவு. உதாரணம் ஒன்று சொல்லுகிறேன்.

இனத்தளவில் இந்நாளில் சமையல் வேலை செய்யும் பிராம்மணனைச் சூத்திரன் என்றே கொள்ளவேண்டும். அவனே, தன் திறமையை உணவு விடுதியாக மாற்றி, வாணிபம் செய்து பொருள் ஈட்டினால், வைசியன் ஆகின்றான். இவ்வாறு இல்லாமல் போரில் இணைந்தோ, நாட்டின் விடுதலைக்காகத் தியாகியாக மாறியோ, தடியடி பட்டு சிறை செல்லும்போது அவன் க்ஷத்திரியன் ஆகின்றான். குடும்பம், நாடு, மதம் என்னும் தடைகளை மறந்து உலகம் உவப்ப பாடுபடும்போது அவன் நிஜ பிராம்மணன் ஆகின்றான். குலத்திலே பிராம்மணத்துவம் இல்லை. குணத்திலும் மனத்திலும்தான் இருக்கிறது என்பதை அறிஞர்கள் என்றுமே உணர்வார்கள்.

இதுபோன்றே இனத்தளவில் சூத்திரனாக மதிக்கப்படுபவன், கல்வியிலும் கலாச்சாரத்திலும் நம்பிக்கைகொண்டு தேச சேவை செய்வானேயானால் அவனைவிடச் சிறந்த பிராமணன் வேறு எவரும் இல்லை. வாய்ப்புகளையும், குடும்ப பரம்பரை வழக்கங்களையும், தொழில் முறைகளையும் ' தூ ' வென உதறி எறிந்துவிட்டு உயர்பவனே மேலான குணமும் குலமும் உள்ளவன். ஆதி திராவிடர்கள் என முன்னால் ஒதுக்கப்பட்ட சூத்திர குலத்திலிருந்து, அற்புதமான பிராம்மணோத்தமர்கள் சமூக நன்மைக்கும்- நாட்டு நலத்திற்கும் இந்நாளில் செயலாற்றுவதைக் காணுகிறோம். இனத்தளவே பிராம்மணன் எனப் பெருமை பேசிக்கொண்டு குணத்திலே சூத்திரனுக்கும் கீழான செயலில் ஈடுபடுவதையும் நாம் பார்க்கிறோம். இனத்தளவில் சூத்திரன் என்னும் பிரிவிலிருந்து செயலளவில் பிராமம்ணனாக உலவும் மக்களையும் பார்க்கிறோம்.

ஒவ்வொரு மனிதனிடமும் பிராம்மண- க்ஷத்திரிய - வைசிய - சூத்திர-இயல்புகள் நான்கும் இருக்கின்றன. ஒவ்வொரு துறையிலும் அவனது இயல்புகள் மிகுந்தும் குறைந்தும் வெளிப்படுகின்றன. வேதங்கள்-புராணங்கள் இவற்றைப்படித்துவிட்டதால் அறிவுமிகும் என்பதைப் பிராம்மண தத்துவமாகச் சிலர் நினைக்கிறார்கள். க்ஷத்திரிய தர்மமாகப் போர்புரியும்போது எதிரியின் கொடுமைகளை வெல்வதும் பிராமணத்துவம். அதற்குரிய பொருள்களைத் திரட்டும் வேலை வைசிய தர்மத்தைச் செய்கிறது. ரோடு - பாதை - உடல் உதவிகளைச் செய்யும் படையே சூத்திர தன்மை வாய்ந்தது. எந்த அலுவலகத்துள்ளும் எந்தக் குடும்பத்துள்ளும் எந்த தனி மனிதனுக்குள்ளும் இந்த நான்கு வகைத் தன்மைகளும் பரிபூரணமாக இருக்கின்றன.

உலகத்தின் சரித்திரம்-ஆட்சி முறைகளை நாம் அறிந்தவர்கள். --குருமார்கள் அதாவது அறிவின் சக்தியால் நாட்டை ஆண்ட காலத்தையும் அறிவோம். உலகத்திலுள்ள பற்பல நாடுகளையும்

பிராம்மண சக்தி ஆண்டது; இதனை உலகம் முழுமையும் அறியும். இச்சக்தியை வரவர க்ஷத்திரிய சக்திகள் -- அதாவது அரச பரம்பரையினர் பிராம்ணர்களின் ஆலோசனையுடன் ஆண்டு வந்ததும் அந்த ஆட்சி முறையும் முற்றுப்பெற்று வருவதைப் பார்க்கிறோம். தற்சமயம் உலகம் முழுமையும் வைசிய ஆட்சி - வியாபாரிகளோ பணம் படைத்தவர்களோ ஆள்வதைப் பார்க்கிறோம். அமெரிக்க சித்தாந்தம் உலகத்திற்குத் தேவையா --- ரஷ்ய சித்தாந்தம் தேவையா என்று முடிவுகட்டத் தெரியாமல் வைசியர்கள் ஆட்சி முறையில் இன்றைய உலகம் இருக்கிறது.

பிராம்மணர்கள் -குருமார்கள் ஆட்சியிலே பொதுமக்கள் உழைப்பாளிகள் எவருக்குமே பிரதிநிதித்துவம் இல்லாமற்போய்விட்டது. அரசர்கள் ஆட்சியிலே வீரத்திற்கு முதலிடம் தந்தனர். அடுத்து பிராமம்ண நம்பிக்கையுள்ள அறிவுக்கும்-ஆனால் நாட்டிலுள்ள வைசியர்களுக்குத்தான் சலுகை அதிகம். வைசியர்கள் தங்கள் பொருள் வலுவினால் உடல் வலுவை வெல்லும் வீரத்தையும் பிராம்மண விவேகத்தையும் வென்று, பொதுமக்களையே பெரியமனிதர்களாக ஆக்கிவிட்டார்கள்! அறிவும் வீரமும் தோல்விபெற்று உழைப்புக்குத் தலைவணக்கம் செய்யத் தொடங்கிற்று அரசியல் உலகம். வைசிய ஆட்சி ஆகையால் எந்தத் தொழிலுக்குப் பணம் உதவினால் பணப்பை பெருகுமோ எவர் எவரை எவ்வழி திருப்திப் படுத்தலாமோ அவற்றைச் செய்து வந்தார்கள். வைசியர்கள் பணக்குவியல்கள்மீது இந்நாளில் சோதனை தொடங்கிவிட்டார்கள்! இதுதான் ஜனநாயக அரசியல் ஆதிக்கத்தின் புதிய விழிப்பு காலம். ஜனநாயக உலகத்தில் பலரை வதைத்து பலருக்கும் பயன்படவேண்டிய செல்வத்தை ஒருவர் பதுக்குவது தீமையென்னும் தத்துவத்தை நாம் கண்முன் காணத் தொடங்கிவிட்டோம். இன்று இதுதான் உழைப்பாளிகள் நடத்தும் சூத்திரர்கள் நடத்தும் உயரிய ஆட்சி முறைக்கு வித்திடுகிறோம் என்று பொருள் கொள்ளவேண்டும். ஜனநாயகப் போர்வைக்குள்ளே ஏழை மக்களின் ஜனநாயகம் என்ற மாமந்திரத்துள்ளே அறிவைவிட-வீரத்தைவிட தனி மனித சுதந்திரம் பெரிதெனத் தம்பட்டம் அறையப்படுகிறது. அறிவையும்-வீரத்தையும் கொண்ட ஆட்சியாளர்களைவிட வாணிப ஆட்சியாளர்கள் புத்தியில் குறைவாளர்கள். வீரத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள்; ஆனால் பணத்திலே அசையாத நம்பிக்கையுள்ளவர்கள். பணமில்லாத ஏழைகளுக்குப் பணத்தாசையும் சிறிது பதவி ஆசையும் - சிறிது வாழ்க்கை வசதிகளையும் தந்து தந்து தங்கள் ஆட்சியைப் பலப்படுத்திக் கொள்கிறார்கள். ஜனநாயக ஆட்சி என்பது வியாபாரிகள், வியாபாரிகளுக்காக நடத்தும் ஆனால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளாத ஆட்சிமுறை. இலாபமில்லாத எந்தத் தொழிலையும் இலட்சியத்தைக்கருதி ஜனநாயக ஆட்சிசெய்யாது. அவ்வாறு ஆட்சி செய்தால் அது ஒரு சிலரைத் திருப்தி படுத்த எழுந்த திரைச்சீலைகள். ஜனநாயக ஆட்சியிலே பாடப் புத்தகங்கள் பெருகும்; பள்ளிகள் பெருகும்; படிப்பின் தரம் பெருக முடியாது. இங்கு படிப்பு வழியாகவரும் பணப் பெருக்கமே முக்கிய முதலீடு. வெறும் கல்விக்காக கலைகள் ஆத்ம சுகத்திற்காகக் கோயில்கள் என்பதை பிராம்மண ஆட்சி காலத்தில் ஒப்புக்கொண்டது போல இந்நாளில் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இன்றைய வாணிப ஆட்சியிலே சைவ-வைஷ்ணவ திருக்கோவில்களின் மாட வீதியின் வீடுகளில் அநாகரீகமான கடைகள் நடத்தப்படும். திருக்குளங்களில் வளர்க்கப்படும் மீன்களை விலை கூறி விற்பனை செய்வார்கள். மதமும்., மக்களும் வாணிபப் பொருள்!

எந்தக் கலைக்கூடத்துள்ளும், எந்தக் கல்விக்கூடத்துள்ளும் வைசியர்கள் ஆட்சியே நிலைக்கிறது. அங்கு வீர வணக்கம் செய்யும் வீரர்களோ, ஞான வணக்கம் செய்யும் ஞானிகளோ முதல்வர்களாக இல்லை. ஒன்றைப் பத்தாகப் பெருக்கும் யந்திரம் போன்றவர்களே - ஒரு மாணவனுக்குப் பதில் ஓராயிரம் மாணவனைப் பயிற்றுவிக்கும் கல்லூரிகளை நடத்தும்-வைசிய மனப்பான்மையில் நடத்தப்படும் கல்லூரிகளையே பார்க்கிறோம். அறிவு வாணிபப் பொருள்-வீரம் வாணிபப் பொருள் என்ற புதிய உலகத்துள் நாம் வாழுகிறோம் தொழில்-உழைப்பு இவையும் வாணிபப் பொருளே என்பதுதான் கம்யூனிசம். இந்த நல்லெண்ணத்தின் வித்துதான் இந்நாள் கூட்டுறவு சங்கங்களின் பெயர்களாகப் பரிணமிக்கின்றன. தனியுடைமை என்ற மதிப்பீடு போய் சர்க்கார் உடமை என்னும் முத்திரைக்குள் வருகின்றன. கூட்டுறவில் நம்பிக்கையில்லாத அறிவின் ஆதிக்கமும் - வீரனின் ஆதிக்கமும் - வாணிப ஆட்சியிலே கூட்டுறவில் நம்பிக்கை வைத்தே ஆகவேண்டும். எப்படியேனும் பொருளீட்டலே நாட்டின் தர்மம். அரசாட்சி என்பது, பிறநாட்டைக் கொள்ளையடித்து நடத்தமுடியாத அறிவியல் ஆட்சியாக வளர்ந்துவிட்டது. எனவே அவனவன் நாட்டுக்குள் பொருளீட்டுவதே பொதுமக்களின் கடமை. அவர்கள் பணமே அவர்களுக்குப் பலம் என்னும் எண்ணத்தை வலுப்படுத்தினால்தான் சூத்திர மனம்கொண்ட உழைப்பாளிகள் திறமையுடன் உழைப்பார்கள்.

எனவே கூட்டுறவு எண்ணம் வலுவாகக் கிளைக்கிறது. இக்கூட்டுறவுக் கழகங்களுக்குள் வைசிய சாணக்கியர்கள், தங்கள் அறிவாலும் - பங்குப் பணம் என்ற பணத்தொகை மிகுதியாலும் அரசர்கள் போன்ற ஆதிக்கத்தை புகுந்து நடத்துகிறார்கள். கூட்டுறவுக்குள்ளேயும் மன்னர் ஆட்சி, குருக்கள் ஆட்சியும் சிறிது நடைபெறுவதை பதவிகளாலும் பங்களாக்களின் வசதியிலும் இன்றும் பார்க்கிறோம். ஜனநாயகப் போர்வைக்குள் வாணிப ஆட்சி-சூத்திரர்களையே உழைப்பாளிகளையே பெரு

வாரியாக நம்பி நடைபெற்று வருகிறது. அறிவாட்சியும் ஒருசில நூறு ஆண்டுகள் வாழ்ந்து விடைபெற்றது; அரசர்களின் கட்சியும் இப்படியே பல நூருண்டுகள் வாழ்ந்து போயின. தற்சமயம் வாணிபர்கள் ஆட்சி (அதனுல்தான் போலும் காந்தியடிகள் வாணிபர்கள் குலத்திடை பிறந்தார் போலும்) - நடைபெறும் ஜனநாயககாலம். அவரைவிடத் திறமையாக தமது நம்பிக்கையை விற்றவர்கள் எவரும் இந்த நூற்ருண்டில் இல்லை. காரணம் ஜனநாயகம் என்னும் வாணிப ஆட்சிக் காலத்தின் தொடக்கத்திலே நாம் வாழுகிருேம். எந்த ஆட்சியும் பன்னெடுங்காலம் பன்னெடும் நூருண்டுகள் வாழ்ந்துதான் மறையும். மற்ற ஆட்சிக்கு வழி விடும்.

அமெரிக்காவும் பொது மக்கள் உழைப்பாளிகள் கூட்டுறவால் உலகம் நல் வாழ்வு வாழலாம் என்பதை உலகத்திற்குக் காட்டுகிறது. பறைசாற்றுகிறது.

ரஷ்யாவும் பொதுமக்கள் உழைப்பாளிகள் கூட்டுறவால் உலகம் நல்வாழ்வு வாழலாம் என்பதை உலகத்திற்குக் காட்டுகிறது. பறைசாற்றுகிறது.

பிராம்மணர்கள் ஆட்சி — குருமார்கள் ஆட்சி காலத்தே அரசர்கள் வீறுகொண்டெழுந்து வீழ்த்திஞர்கள். இதே போன்று அரசர்கள் ஆட்சியை வைசிய மக்கள் பொருளாதார வீறுகொண்டு விழிப்புடன் வீழ்த்திவிட்டார்கள். அறிவு வீரத்திற்கு அடிமைத் வீரம்-பொருளுக்கு அடிமை என்று ஆட்சி செய்யும் உலகத்துள்ளே நாம் இருக்கிருேம்.

இது உலகத்தின் அரசியல்நிலை மட்டுமன்று; ஒவ்வொரு மனிதன் வாழ்க்கைநிலையும் இதுவாகவே இருக்கிறது. ஒவ்வொருவனும் பிராம்மணனுகவே வாழ ஆசைப்படுகிருன்; முடியாதபோது சாந்தத்தை மறந்து கோபத்திலும் குருதி வேட்கையாலும் க்ஷத்திரியனுக (அரசனுக) மாறுகின்ருன். அரசபோகம் கிடைக்கத் தவறுமானுல் பண பலம் பெற்று எவற்றையும் விலைக்கு வாங்கும் பெர்மிட் லைசென்ஸ் என்னும் வாணிப உலகத்துள் ஈடுபடுகிருன். முடிவிலே பணத்தையும் அழித்து உழைப்புத்தான் உயர்வு என்ற அடிநிலைக்கு வந்து நிற்பான். இந்நிலை எய்த இன்னும் பல நூருண்டுகள் பிடிக்கலாம்.

தனி மனிதர்கள் வாழ்க்கையிலே ஒவ்வொரு நாளும் இந்நான்கு வர்ணத்திலும் உழல்பவர்கள் கோடி கோடிப் பேர்கள் இருக்கிருர்கள். நானும் நீங்களும் ஒவ்வொரு வர்ணத்தின் இயல்புகளுக்குள் அன்ருடம் வாழ்கிருேம். உழல்கிருேம்.

புகழ்பெற்ற துறவிகளிடையே சூத்திரர்களைப் பார்த்திருக்கிறேன். பிச்சைக்காரர்களிடையே பிராம்மணர்களைப் பார்த்திருக்கிறேன். பாங்கி முதலாளிகளிடையே பிராம்மணர்களைப் பார்த்திருக்கிறேன். உடலால் தொழில் செய்யும் சூத்திரர்களிடையே பிராம்மணர்களையும் பார்த்திருக்கிறேன்.

பெரியார் எனப்போற்றப்படும் ராமசாமி நாய்க்கரை வைசியரிடையே பிறந்த க்ஷத்திரியன் எனப் போற்றலாம். அவர் வீரன், ஆனுல் விவேகியல்ல. ஆனுல் ஒருநாளும் அவர் சூத்திரனுக மாறமாட்டாத சுகபோக அரசியல் அரசன்தான்.

சூத்திரர்களிடையே பிராம்மணன் உருவாகி இருக்கமுடியும் என்பதைச்சொல்லுவது குருஷ்ஷேவ் உருவம்.

வைசியர்களிடையே பிரமம்மணன் உருவாகி இருக்கமுடியும் என்பதைச் சொல்லுவது கென்னடியின் உருவம்.

சூத்திரர்களிடையே பிராம்மணன் உருவாகி இருக்கமுடியும் என்பதைச் சொல்லுவது எலிஸபெத்துவின் உருவம்.

பிராம்மணர்களிடையேயும் பிராம்மணன் உருவாக முடியும் என்பதுதான் ஜவஹர்லாலின் உருவம். அறிவாலும் – வீரத்தாலும் – பணப் பெருக்க வாணிபச் செழிப்பாலும் வளர்ந்தவர் சூத்திரனைப் போன்று உழைத்து உழைத்து நால்வகையினரிலும் சிறந்த பிராம்மணன் ஆனுர்! வாய்ப்பும் வசதியும் வளர்ச்சியும் மிக்க நேருஜியே சூத்திரர்களிடையேயும் பிராம்மண பிரம்மா உருவாகமுடியும் உயர முடியும் என்பதை உணர்ந்தார். காமராஜருக்கு வணக்கம் கூறுகிறது உலகம்.

இது என்ன ஆட்சிமுறை? இது என்ன அரசியல் உலகம். இன்றும்புரியாது இந்த நூற்ருண்டிலும் புரியாத புதிர், காமராஜரின் செந்தண்மை பூண்ட அந்தணத்தன்மை.



# எழுத்தாளர் பேச்சிடையே

★

**தம்பி சீனிவாசன்**

*வாசகர்களை மகிழ்விக்கும் எழுத்துத் திறமை கொண்ட இலக்கியகர்த்தாக்கள் சொல்வன்மையும் வாய்ந்தவர்களே என்பதை இந் நிகழ்ச்சிகள் விளக்குகின்றன.*

சில ஆண்டுகளுக்கு முன்பு, சென்னையில் நடைபெற்ற ஒரு தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில் தலைசிறந்த எழுத்தாளர்கள் கலந்துகொண்டனர். அவர்கள் பேச்சின் நடுவே உதிர்ந்த ரசமான சில வற்றை இங்கே கொடுக்கிறேன்.

### மிகையாகாது

மகாநாட்டை ஆரம்பித்து வைத்த ராஜாஜி அவர்கள் பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் உள்ள வேற்றுமையைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார். அப்போது மேடையிலே பேசும் தமிழுக்கும் சாதாரணமாக உரையாடும் போது பேசும் தமிழுக்கும்கூட வேற்றுமை இருக்கிறது என்று குறிப்பிட்டார். "தினசரி வாழ்வில் பழக்கமில்லாத பல சொற்களை மேடையிலே சாதாரணமாகக் கேட்கலாம். "மிகையாகாது" என்ற சொல்லைச் சொல்லாமல் எந்தச் சொற்பொழிவும் நிறைவேருது" என்று சிரிப்பிடையே கூறினர்.

சில நிமிஷ நேரங் கழித்துப் பேசிய திரு. நாரண துரைக்கண்ணன் அவ்வாறே தமது பேச்சிடையே தம்மை அறியாமல் "மிகையாகாது" என்ற சொல்லை உதிர்த்து சபையில் பெரும் சிரிப்பை எழுப்பினர். பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களும் அச்சொல்லை இருமுறை பயன் படுத்தத் தவறவில்லை.

ஆனல் அதற்குப் பின்னும் மறுநாளும் பேசியவர்கள், சபையில் சிரிப்பு மூட்டுவதாக நினைத்துக் கொண்டு வேண்டாதபோதெல்லாம் இச்சொல்லைப் பிரயோகித்து அலுப்பு உண்டாக்கினர் என்று சொன்னல் அது மிகையாகாது!

### நெல்லைத் தமிழ்

தமிழ் உச்சரிப்பு சில மாவட்டத்திலிருப்போருக்குத்தான் ஒழுங்காக வருகிறது. தஞ்சைக்குத் தெற்கிலிருப்போரின் உச்சரிப்பு ஒழுங்காக இல்லை என்று ராஜாஜி குறிப்பிட்டார். 'ழ' வும் 'ள' வும் அவர்கள் வாயில் ஒழுங்காக வராது. உதாரணமாக எழுத்தாளர் என்பதை அவர்கள் அவசரத்தில் 'எகுத்தாளர்' என்று சொல்லிவிடுவார்கள் என்று பரிகசித்தார்.

அந்தச் சமயத்திற்குப் பலர் சிரித்தபோதிலும், பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் அதற்குத் தகுந்த பதில் கொடுத்து, திருநெல்வேலிக் காரரின் தமிழ் ஆர்வத்தை விளக்கியபோது எல்லாரும் வாய் புதைத்திருந்தனர். ஆனல் பேராசிரியர் பேச்சைக் கேட்க ராஜாஜி அவர்கள் அங்கு இல்லை.

### மன்னரிடையே மந்திரி

மகாநாட்டு மேடைமீது "தேனர் தமிழ் வளர்க்கும் பேன மன்னர்களே வருக" என்று வரவேற்று எழுதியிருந்தது. அதைக் குறிப்பிட்டு திரு. சி. சுப்பிரமணியம், "இந்த மன்னரிடையே மந்திரியாகிய என்னைப் பேசுமாறு மன்னர்கள் தலைவர் கல்கி பணித்தார். மன்னர்கள் மகாநாட்டில் எனக்கு என்ன வேலை? ஆனல் மன்னரின் ஆணைக்கு உட்பட்டுப் பேசுகிறேன்" என்ருர்.

ஆரம்பத்தில் மகாநாட்டுத் தலைவர் கல்கி அவர்கள் "இப்போது கனம் நிதி மந்திரி அவர்கள் பேசுவார்கள். எழுத்தாளராகிய நமக்கு அவர் நிறைய நிதி அளிக்காவிட்டாலும் நிறைய விஷயங்களாவது பேசுவார்" என்ருர்.

ஆனல் அந்தக் கெட்டிக்கார மந்திரி, தாம் நிதிமந்திரி என்ற ஹோதாவில் வரவில்லை, வெறும் கல்வி மந்திரி என்ற நிலையில்தான் மகாநாட்டுக்கு வந்திருக்கிறேன் என்று குறிப்பிட்டார்!

அதோடு வார்த்தையிலும் செட்டாக இருந்து, இரண்டு மூன்று நிமிஷத்தில் பேச்சை முடித்து விட்டார்!

### "ஒருவளை" ஒதுக்க வேண்டாம்

பேராசிரியர் சேதுப்பிள்ளையவர்கள் தாம் சமீபத்தில் அகில உலகச் சிறுகதைப் போட்டிக்கு வந்த ஆயிரத்தைந்நூறு தமிழ்க் கதைகளைப் படித்தபோது நேர்ந்த அநுபவங்களைக் கூறினர். எழுத்தாளரில் பலர் " ஒருத்தி " என்று எழுதுவதற்குப் பதில் "ஒருவள்" என்றே எழுதுவதாகச் சொன்னர்.

பிறகு இதைப்பற்றித் தாம் ஆராய்ந்து திரட்டிய சில செய்திகளைச் சொல்லி, கன்னடத்தில் ஒவ்வனு ஒவ்வளு என்ற சொற்கள் இருப்பதையும் பழங் கன்னடத்தில் ஒருவன் ஒருவள் என்ற சொற்கள் வழக்கத்திலிருந்ததையும் ஆதாரம் காட்டினார். "தமிழர்கள் எத்தனையோ பேர்களைத் தம்மிடையே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஒருவனைமட்டும் ஏன் ஒதுக்கவேண்டும்! அவளை யும் சேர்த்துக்கொள்ளலாம் என்று நான் யோசனை கூறுகிறேன்" என்றார்.

## பிரசாரத்தில் ஏமாறாத ஜாதி

இரண்டாம் நாள் நடவடிக்கைகளிடையே தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கு அமெரிக்கச் செய்தி இலாகா நூற்றியொரு புத்தகங்களைப் பரிசாக வழங்கியது. அமெரிக்கச் செய்தி ஸ்தாபனத்தின் சார்பில் அவற்றை வழங்கிய திரு. சிவப்பிரகாசம் அவர்கள் அப்புத்தகங்கள் அமெரிக்க இலக்கியத் தின் ஒரு துண்டே தவிர, பிரசாரம் செய்யும் நூல் ஒன்றுகூட அவற்றில் இல்லை என்றார்.

நன்றியுடன் புத்தகங்களைப் பெற்றுக்கொண்ட திரு. கல்கி பதிலளிக்கும்போது, "நண்பர் சிவப் பிரகாசம் இவ்வளவு ஜாக்கிரதையாய்ப் பேச வேண்டியதில்லை. இந்த நூறு புத்தகங்களும் பிரசார நூலாயிருப்பினும் நாங்கள் படிப்போம். அவை எப்படி எழுதப்பட்டுள்ளன என்று பார்ப் போம். ஆனால் பிரசாரத்தால் ஏமாந்துவிட மாட் டோம். பிரசாரத்தால் ஏமாறாத ஜாதி எங்கள் தமிழ் ஜாதி. ஜெர்மானியர்களை ஹிட்லரும், ருஷ்யர் களை கம்யூனிஸ்ட் கட்சியும், வேறு வேறு பகுதி மக்களைப் பலரும் பிரசாரத்தால் கவர்ந்துள்ளனர். வட இந்திய மக்கள்கூட பிரசாரத்தில் மயங்கிவிடு வர். ஆனால் தமிழ் மக்களிடையே துவேஷத்தை யும் நாஸ்திகத்தையும் அதர்மத்தையும் பிரசாரம் செய்தவர்கள் தோற்று ஓடிப்போய்விட்டார்கள். நான் முப்பது வருஷ எழுத்து அனுபவத்தில் கண்ட முடிவு இது" என்றார்.

## கம்பனின் சிறுகதைகள்

பேராசிரியர் அ. சீனிவாசராகவன் கம்பரும் ஒரு சிறந்த சிறுகதை ஆசிரியர் என்ற செய்தியை வெளியிட்டார். மகாபவியின் கதை தற்காலச் சிறந்த சிறுகதை ஒன்றைப் போல் திடீரெனத் தொடங்குகிறது; விருவிருவென்று கதையின் முக் கிய சம்பவங்கள் சொல்லப்படுகின்றன. சம்பாஷ ணைகள் மட்டும் கொஞ்சம் நீளம்; பிறகு கதை முடி வோ சடக்கென்று முடிகிறது. இவ்வாறு ராமா யணத்தில் கம்பர் கையாளும் பல உததிகளைக் காட்டி, தற்காலச் சிறுகதை ஆசிரியர்கள் கம்ப ரிடம் பல விஷயங்களைக் கற்றுக்கொள்ளலாம் என்று கூறினார்.

## கடைசியாக...

"விஞ்ஞானமும் தமிழும்" என்ற பொருள் பற்றி பங்களூர் நீ. ரா. சீனிவாசன் பேச எழுந்தார். தாம் தயாரித்து எழுதிவந்திருப்பதைப் படித்தால் அதிக நேரம் ஆகுமாதலால் முக்கியமான சில விஷயங்களைப் பற்றிமட்டும் சுருக்கமாகப் பேசி நிறுத்திவிடுவதாகக் கூறிப் பேச்சைத் தொடங் கினார்.

ஆனால் அவர் பேச்சு சுலபத்தில் முடியவில்லை. எழுதியதை மட்டும் பேசியிருந்தால்கூட சீக்கிரம் முடிந்திருக்கும். சபையோரின் மனநிலையை உணர்ந்தார் தலைவர் கல்கி. ஒரு சமயம் நீ. ரா. சீனிவாசன் ஒரு வாக்கியத்தைச் சொல்லிமுடித்துக் கொஞ்சம் தயங்கியபோது, "கடைசியாக......" என்று அடுத்த வாக்கியத்துக்கு அடி எடுத்துக் கொடுத்தார்! கொல் என்ற சிரிப்பு எழுந்தது சபையில். சீனிவாசன் அவர்களும் அதில் கலந்து கொண்டு, "கடைசியாக..." என்றே தொடங்கி ஒரு வாக்கியம் பேசிவிட்டு பேச்சை முடித்துக் கொண்டார்.

## எழுத்தாளர் உயர்ந்தனர்

மகாநாடு செண்ட் மேரீஸ் மண்டபத்தில் தொடங்கி, மகாஜனசபையில் நடைபெற்று, பின் னர் சென்னை காஸினோ தியேட்டரில் முடிந்தது. ஞாயிற்றுக்கிழமை மாலைக்காட்சி என்றால் நல்ல பண வசூல் சேரக்கூடிய காட்சி. அந்தக் காட்சி யின் உயர்ந்த வகுப்பை (சுமார் 220 பேருக்கு) சினிமா அதிபர் திரு. நாகிரெட்டி எழுத்தாளர் களுக்குத் திறந்துவிட்டார். வந்தவருக்குச் சிற் றுண்டியும் வழங்கினார்.

அவருக்கு நன்றி தெரிவித்த எழுத்தாளர் சங் கத் தலைவர் கல்கி "எழுத்தாளர் நிலை உயரவேண் டும் உயரவேண்டும் என்று நாம் இன்றும் நேற்றும் பேசிக்கொண்டிருந்தோம். இதோ நமது நண்பர் நாகி ரெட்டி நமது நிலையை இன்று உயர்த்தி, பால்கனியில் வைத்துவிட்டார்" என்று சொல்லி அனைவரையும் புன்னகையில் ஆழ்த்தினார்.



# உணர்ச்சியில் உதித்த எழில்

★

உலகம் முழுவதிலுமுள்ள ஊனமுற்ரோர் அனைவருக்கும் ஹெலன் கெல்லர் வாழ்க்கை நம்பிக்கையும் ஊக்கமும் ஊட்டும். அவரது வாழ்க்கை உண்மையில் ஒரு வரலாறு போலத் தோன்றும். குழந்தைப் பருவத்திலேயே கண்ணையும் காதையும் இழந்தவர். ஆனல் தம் ஊனங்களை எல்லாம் வெற்றி கண்டு உலகப் புகழ் பெற்ற எழுத்தாளராகவும், சொற்பொழிவாளராகவும் உயர்வடைந்தார். உயிர்களிடம் கருணை காட்டும் தனிப்பெரும் தாயாக விளங்குகிருர்.

ஹெலனின் 10-வது வயதில் அவரது வியப்பூட்டும் வரலாறு தொடங்கியது. விக்டோரியா மகாராணி, ஹெலனைப் பற்றிக் கேட்டறிந்து அவரது பெயரை ஒரு கப்பலுக்குச் சூட்டினர். வெள்ளை மாளிகைக்கு ஹெலனை அழைத்து உபசரித்தார், யு. எஸ். ஜனதிபதி கிளீவ்லண்ட். பின்னர் வந்த பிற ஜனதிபதிகளும் இவ்வாறே சிறப்புச் செய்தனர். ஹெலனுக்குப் பதினன்கு வயதாகியிருக்கையில் அவரைப்பற்றி புகழ் பெற்ற அமெரிக்க எழுத்தாளர் மார்க் ட்வைன் எழுதுகையில், "மனித உணர்ச்சியில் பூத்த ஒரு புது எழில்; மனித மலரில் முகிழ்த்த ஒரு புது மணம்" என்று வருணித்தார். 19-வது நூற்ருண்டின் கவர்ச்சி மிக்க இரண்டு மனிதர்களில் ஹெலன் கெல்லர் ஒருவர்: இன்னெருவர் நெப்போலியன் என்றும் இவர் குறிப்பிட்டார்.

"உங்களது சாதனையின் கதை உங்கள் சிறந்த அறிவுக்கும் பண்புக்கும் மட்டும் நினைவுச் சின்னமாக விளங்கவில்லை. பல நாடுகளிலும் உடல் ஊனத்தால் வாடுவோருக்கும், ஊனமுற்ரோரின் வாழ்வை வளப்படுத்த உதவ முயல்வோருக்கும் நிலையான உற்சாகம் ஊட்டுவதாகவும் இருக்கிறது" என்று ஹெலன் கெல்லருக்கு ஜனதிபதி ஐஸன்ஹாவர் எழுதினர்.

ஹெலன் கெல்லர் 1880-ல் அலபாமா மாநிலத்திலுள்ள டஸ்கம்பியா என்ற ஊரில் ஒரு பண்ணையில் பிறந்தார். இவரது தந்தை பத்திரிகாசிரியராகவும் ராணுவ அதிகாரியாகவும் இருந்தவர். பிறந்த 19-வது மாதத்தில், கடும் மூளை சுரம் கண்டது; அது, குழந்தை ஹெலனைக் குருடாகவும் செவிடாகவும் ஊமையாகவும் செய்துவிட்டது.

தன்னந்தனியான இருண்ட மவுன உலகில் வாழ்ந்த இவர் அடங்காப்பிடாரியாக, பண்பில்லாத சிறுமியாக வளர்ந்தார். இவரது வருங்காலத்தையே இருள் கவ்விக் கொண்டுவிட்டது போல் தோன்றிய சமயத்தில் இவரது வாழ்வில் ஆன் சல்லிவன் என்ற இளம் ஆசிரியை குறுக்கிட்டார். ஆற்றல்மிக்க இந்தப் பெண்மணி பாஸ்ட்டன் நகரிலுள்ள பெர்க்கின்ஸ் குருடர் கழகத்தில் ஒரு ஆசிரியை.

ஹெலனுக்கு 7 வயதுகூட நிரம்பவில்லை. ஆதரவற்ற, பிறரை நம்பி வாழவேண்டிய நிலையிலிருந்த குழந்தை விரைவில் தன்னம்பிக்கையும் புத்திகூர்மையும் மிக்கவளாக மாறினள். இந்நிலையை அடைய அவளது சொந்த அறிவு மட்டும் காரணமல்ல; இவரது ஆசிரியையின் மேதையும் காரணமாகும்.

"என் இன்பங்களிலும் விருப்பங்களிலும் அலாதியான பரிவு கொண்டாள், மிஸ். சல்லிவன்; அது ஏன் என்று என்னல் விளக்கமுடியாது. குருடர்களுடன் நீண்டகாலம் கொண்டிருந்த தொடர்பு காரணமாக இருக்கலாம். என் கல்வியின் முதல் சில ஆண்டுகளை மிகவும் அருமையானதாகச் செய்தவை, எனது ஆசிரியையின் மேதையும் நிறைந்த பரிவும், அன்பும் சாமர்த்தியமுமே" என்று அவர் எழுதியிருக்கிருர்.

அவருக்கு புள்ளி எழுத்துக்களை கற்றுக்கொடுத்தவர், ஆன் சல்லிவனே. இரவும் பகலும் அயராது உழைத்து, ஒரு வார்த்தையை பல மணி நேரம் எழுதி எழுதி, ஹெலன் பேசக் கற்ருர்; காலப் போக்கில் சொற்பொழிவு ஆற்றும் ஆற்றலும் பெற்ருர். ஆங்கிலம் படிப்பதுடன் மட்டும் அவர் திருப்தி அடையவில்லை. லத்தீன், ஃபிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளையும் அவர் கற்ருர்.

எட்டு வருடங்கள் இவரும் ஆன் சல்லிவனும் மிகக் கடுமையாக, கொஞ்சம்கூடச் சோர்வின்றி உழைத்தனர். இறுதியில் ஹார்வர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ராட்கிளிஃப் மகளிர் கல்லூரியில் சிறப்புடன் பட்டம் பெற்ருர், ஹெலன்.

ராட்கிளிஃப் கல்லூரியில் இரண்டாவது ஆண்டு படித்துக்கொண்டிருக்கையில், 'என் கதை' என்ற ஒரு சிறு சுயசரிதம் எழுதினர். 'நான் வாழும் உலகம்', 'இருளிலிருந்து மீண்டேன்', 'என் மதம்', 'நட்டாறு', 'நாம் நம்பிக்கை கொள்வோம்' ஆகிய மற்ற நூல்களையும் அடுத்தடுத்து அவர் எழுதினர். இவரது குழந்தைப் பருவத்தின் கதை பிராட்வே நாடகம் ஒன்றிலும், சினிமாப் படத்திலும் — 'அதிசயப் பெண்' என்ற பெயரில் — இடம் பெற்றுள்ளது.

ஹெலன் கெல்லர், நிறை வாழ்வு வாழ்ந்திருக்கிறார். சிறப்பான இலக்கிய நடையைப் பெற்றிருக்கிறார். ஒலி அசைவின் மூலம் இசையை ஆழ்ந்து அனுபவிக்கிறார். கவிதை, இலக்கியம், கலைகளையெல்லாம் பெரிதும் ரசிக்கிறார். சினிமாவுக்கும் நாடகங்களுக்கும் செல்கிறார். இவருக்குத் துணையாகச் செல்பவர் புள்ளி எழுத்துக்கள் வாயிலாக கதைச் சுருக்கத்தைத் தெரிவித்துவிடுகிறார்.

தம் கைகளால் தொட்டுப் பார்த்தும் உணர்ந்தும் சிற்பக் கலையை இவரால் ரசிக்கமுடிகிறது. தொட்டுப் பார்த்தும் முகர்ந்து பார்த்தும் அறியும் உலகில் இவர் வாழ்கிறார். முகத்தைக் காட்டிலும் கைகள் ஒருவரின் குணப் பண்பின் ரகசியங்களை மிகத் தெளிவாகக் காட்டிவிடுகின்றன என்று கூறுகிறார். இவர் சில முறை ஒருவரைச் சந்தித்தால் போதும்; கைக் குலுக்கலின் மூலமே அவரை இன்னாரென்று அடையாளம் கண்டுபிடித்து விடுவார்.

முகரும் உணர்ச்சியைத்தான் மிஸ். கெல்லர் பெருமளவு நம்பியிருக்கிறார். நடந்து செல்லும் பொழுது கதவுகளிலிருந்து வரும் வாசனையைக்கொண்டு, 5-வது சாலை எது, மற்ற நியூயார்க் தெருக்கள் எவை என்று தாம் கண்டுபிடித்துச் சொல்ல முடியுமென்று இவர் கூறுகிறார்.

ஹெலன் கெல்லருடன் பஸ்ஸில் பிரயாணம் செய்த போது நிகழ்ந்த சம்பவம் ஒன்றை எழுத்தாளர் வான் வைக் புரூக்ஸ் எடுத்துரைக்கிறார். பிரயாணம் செய்யும் பொழுது தன்னைச் சுற்றிக் கூட்டம் இருக்கவேண்டுமென்று இவர் ஆசைப்படுகிறார். பஸ்ஸில் ஒரு வர்ணம் அடிப்பவர் இருக்கிறார் என்று திடீரென கெல்லர் சொன்னார். 20 அடி தூரத்தில், ஒரு மூலையில் வீட்டுக்கு வர்ணம் பூசுபவர் ஒருவர் உட்கார்ந்திருந்தார்.

''வாழ்க்கை ஒரு துணிச்சல் மிக்க வீர முயற்சி அல்லது ஒன்றுமில்லை'' என்று மிஸ். கெல்லர் கூறுகிறார். தம் வாழ்க்கை துணிச்சல் மிக்க வீர முயற்சியாக விளங்குமாறு இவர் செய்தது, உலகனைத்தும் அறிந்த ஒரு பெரும் வரலாறு.

ஆழ்ந்த பரிவு, நிறைந்த பாசம், நல்ல நகைச்சுவை இவற்றின் உறைவிடம், ஹெலன் கெல்லர்; ஷேக்ஸ்பியரின் இலக்கியங்களைச் சிறப்புறக் கற்ற ஒரு அறிஞரை ஒரு முறை கெல்லர் கண்டார். மறைந்த நாடக ஆசிரியர் வாழ்க்கை பற்றி நடக்காத பல விஷயங்களை நடந்ததாகக் கல்லூரி ஆசிரியர்கள் கதை அளக்கும்படி விடாதீர்கள் என்று அந்த அறிஞர் கெல்லருக்கு எச்சரித்திருந்தார். ஷேக்ஸ்பியருக்கு ஞானஸ்னானம் நடந்தது, அவர் திருமணம் புரிந்துகொண்டார், காலமானார் என்பவைதாம் நமக்குத் தெரிந்தவை என்றார் அவர். ''நல்லது. வாழ்க்கையின் இன்றியமையாத பணிகளையெல்லாம் ஷேக்ஸ்பியர் செய்திருப்பதாகத் தோன்றுகிறதே'' என்பதே கெல்லர் அளித்த பதில்.

இவர் தம்மிடம் கழிவிரக்கம் கொண்டதாக அறிகுறியே கிடையாது. அவர் இரக்கம் கொண்டதெல்லாம் மற்றவர்களிடம்தான்—குருடர்களிடமும் செவிடர்களிடமும்தாம். இரண்டாவது உலகப் போரின்போது ஆஸ்பத்திரிகளுக்கெல்லாம் ஹெலன் கெல்லர் சென்று, காயமுற்ற நூற்றுக்கணக்கான பேர்களுக்கு ஆறுதல் சொன்னார். உலகனைத்திலுமுள்ள ஊனமுற்றவர்களுக்கும் துன்பப்படுபவர்களுக்கும் மன உறுதியும், நம்பிக்கையும், உற்சாகமும் ஊட்டியுள்ளார், ஹெலன் கெல்லர் அம்மையார்.

பிணியாளருக்காக உழைக்கத் தம் வாழ்வனைத்தையும் அர்ப்பணித்திருக்கிறார். ''என்னுடைய குறைபாடுகளைப் பற்றி நான் எண்ணிப் பார்ப்பது மிக அரிது. இவை என்னை ஒருநாளும் சோகமுறச் செய்ததில்லை. சில சமயம் ஏதோ ஒரு வேட்கை தோன்றி மறைகிறது. ஆனால் அது தெளிவற்றது. மலர்களிடையே வீசும் காற்றைப் போன்றது. காற்று வீசிவிட்டுப் போய் விடுகிறது. மலர்கள் திருப்தியடைகின்றன'' என்று அவர் கூறுகிறார்.

உடல் ஊனங்களை எதிர்த்து கடும் போராட்டம் நடத்தவேண்டியிருந்த கெல்லர் அம்மையாரின் உற்சாகம் மிகவும் அற்புதமானது. ''வளர்ச்சிக்கும் சுய மேம்பாட்டுக்கும் மகிழ்ச்சியே வித்து. உலகில் மகிழ்ச்சி என்பது மிகவும் முக்கியமான சக்தி. இதைக் காணாதவன் வாழ்வில் சுவையையே இழந்துவிடுகிறான்'' என்று இவர் கூறுகிறார்.

இவர் போகுமிடங்களிலெல்லாம் ''இருள் அகன்று ஒளி வீசுகிறது; கர்வமும் வெறுப்பும் கரைந்துபோகின்றன. அன்பு வளர்ந்தோங்கி ஒளிர்கிறது'' என்று சொல்லலாம்.

# பெரிய இடத்துப் பெண்

★

S. ரெங்கநாயகி

ஜனகம் யோசனையோடு அமர்ந்து கிடந்தாள். அவளுடைய இரண்டாவது பிள்ளை ரகுவிற்கு விவாகம் பேசி முடித்துவிட்டார்கள். கல்யாணப் பெண் ராஜிக்கு தாய் இல்லை எனினும் அவள் தந்தை ராகவன் மறு விவாகம் செய்துகொள்ளவில்லை. தன் ஒரே பெண் ராஜியையும் ஒரே மகன் குமாரையும் அன்போடு வளர்த்து வந்தார். பெரிய வேலையிலிருந்தவர். ராஜியும் அழகு நிறைந்து, நன்றாகப் படித்துமிருந்தாள். இவ்வளவு நல்ல அம்சங்களுடன், பெரிய இடத்துப் பெண் தங்கள் வீட்டிற்கு நாட்டுப் பெண்ணாக வருவதில் ஜனகத்திற்கு யோசனைதான்.

ஜனகம் கணவனை இழந்துவிட்டிருந்தாலும் இரண்டு பிள்ளைகளிடமும் அவள் அன்பு கண்டாள். பெரியவன் சங்கரனும், சின்னவன் ரகுவும் ஒற்றுமையுடன் தாயைப் பேணி வந்தனர். பெரிய நாட்டுப் பெண்ணாக கமலம் வந்தாள். அவளுக்கு ஒரே பிள்ளை சேகர். குடும்பம் பழையபடிதான் நடந்து வந்தது. இரு பிள்ளைகளின் சம்பாதிப்பு இருந்தும், குடும்பச் செலவை கட்டி இழுப்பது சிரமமாகத்தான் இருந்தது. என்றாலும் ஜனகம் தளர்ந்து விடவில்லை. ரகுவிற்கு விவாகம் செய்துவைப்பதையும் தன் கடமையாகக் கொண்டாள். அவனுடைய புத்திசாலித்தனத்திற்கோ, அழகிற்கோ ராஜியை அவனுக்கு மணம் முடித்து வைக்க ராகவன் முன்வந்தார்.

"பெரிய மாட்டுப் பெண்ணை சம்சாரி வீட்டிலிருந்து எடுத்தாள். சின்னவளோ பிறந்த வீட்டுக்கு செல்லப் பெண். நன்றாகப் படித்தவள். கணவனை தன் வீட்டோடு அழைத்து வைத்துக்கொண்டு விடுவாள்..." ஊரார் இவ்விதம் கூறினர்.

ஜனகத்திற்கு மனத்தோடு இதே யோசனைதான். ஆயின் தானாக வந்த பெரிய இடத்துப் பெண்ணை விடவும் மனமில்லை. ரகுவிற்கோ ராஜியைப் பார்த்ததுமே மயக்கம்.

"என்னடா ரகு, பெரிய இடமாக இருக்கின்றதே!" ஜனகம் கேட்டாள்.

"அதனால் என்னம்மா வந்துவிட்டது? நம் வீட்டிற்கு வந்துவிட்டால் நாம் கொண்டுவரும் வழியில் அடங்காப் பெண்ணும் நேராகி விடுவாள்" ரகு கூறிவிட்டான்.

மகனுக்குப் பிடித்த பிறகு ஜனகம் மேலும் ஒன்றும் கூற விரும்பவில்லை. ரகு, மனைவி வீட்டோடு போய்விட்டாலும் சங்கரனோடு இருந்துவிடலாம், அவன் கைவிடமாட்டான் என ஜனகமும் விவாகத்தை நிச்சயித்துவிட்டாள்.

விவாகம் விமரிசையாக முடிந்தது.

ரகுவை எந்த நிமிடத்திலும் ராஜி தன் வீட்டோடு அழைத்துச் சென்றுவிடலாம் என அனைவரும் எதிர்பார்த்ததற்கு மாறாக, ராஜி விவாகம் முடிந்த மறுநாளே மாமியார் வீட்டோடு வந்துவிட்டாள். 'அம்மா' எனக் கூப்பிட்டுக் கூப்பிட்டு வளைய வந்தபோது ஜனகம் உள்ளம் குளிர்ந்துவிட்டாள். கமலத்தைப் போலில்லாமல் ராஜி எல்லோருடனும் பேசிப் பழகினாள் வீட்டின் போக்கை அறிய முற்பட்டாள்.

ரகுவும் ஆனந்தம் கொண்ட வேளையில்தான் ராஜியின் போக்கு வீட்டிலிருந்தோருக்கு சற்று வெறுப்பை தர ஆரம்பித்தது.

"மன்னீ, இதென்ன சேகருக்கு இப்போது படிப்பு சொல்லித்தர ஆரம்பித்துவிட்டீர்களே! மணி எட்டாகப் போகிறது, மச்சினர் ஆபீசுக்குக் கிளம்பி விடுவாரே!" ராஜி கமலத்தின் அருகில் வந்து கூவினாள். சேகர் இரண்டாம் வகுப்பு படித்து வந்தான். அவனுக்கு கமலம் வீட்டில் வேறு சொல்லித்தர வேண்டும்.

கமலத்தை ஜனகம்கூட கடிந்ததில்லை. "அதற்கு என்ன பண்ணுவது? ஒவ்வொரு நாளும் கைக்கு டிபன் செய்துதர முடிகிறதா? ஹோட்டலில் வாங்கி சாப்பிட்டுக்கொள்ள வேண்டியதுதான்" கமலம் இருந்த இடத்தைவிட்டு எழுந்திருக்காமலே பதில் கூறினாள்.

"ஹோட்டலுக்கு எதுக்கு செலவு? காசு செலவழித்தும் வயிறும் நிரம்பாது" என்று கூறிய ராஜி மற்றொரு அடுப்பைப் பற்றவைத்தாள். மைதா மாவைக் கரைத்து தோசை வார்க்க ஆரம்பித்துவிட்டாள். கமலம் இருந்த இடத்தைவிட்டு நகரவில்லை.

ஜனகம் பூஜை அறையிலிருந்துவந்தாள். "நீ நகர்ந்துகொள், நான் வார்க்கிறேன்."

"உங்களை யார் எழுந்து வரச்சொன்னது? பூஜையிலிருப்பவர்களை எழுப்பினால் எங்களுக்குத்தான் பாவம். நீங்களும் முழு மனதுடன் பூஜையில் ஈடுபட வேண்டியது அவசியம். பிள்ளை பாசம் குறுக்கிடக் கூடாது," ராஜி கூறிவிட்டு அடுப்புக் காரியத்தில் முழுதும் ஈடுபட்டாள்.

ஜனகம் அதிர்ந்து நின்றுவிட்டாள். பதில் சொல்ல துணிவில்லை. பூஜை இடத்தை நோக்கி கால்கள் நகர்ந்தன. கமலம் எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

அன்று மாலை சேகர் விளையாடிவிட்டு வீட்டினுள் நுழைந்ததுமே ராஜி அவனை அருகில் அழைத்தாள். "சேகர், புத்தகத்தை எடுத்துவா இங்கே."

சேகர் ராஜிக்குப் பணியாமல் தாயை நோக்கினான். "அம்மாவை என்னடா பார்வை? புத்தகத்தை எடுத்து வரப் போகிறாயா இல்லையா?" ராஜி போட்ட கூச்சலில் சேகர் நடுங்கிவிட்டான். கைகள் தாமாகவே புத்தகங்களை எடுத்தன. ராஜியே அவனை அருகில் உட்கார வைத்து பாடம் சொல்லிக் கொடுத்துவிட்டாள். சேகர் பயந்து பணிவோடு அமர்ந்து பாடங்களைக் கற்றான், குழந்தைக்கு பாடம் சொல்லித்தரும் வேலை விட்டது என கமலம் குதூகலித்தாள். ஆனால் மறுநாள் காலை ராஜி அவளிடம் டிபன் செய்து கணவனுக்குத் தரும் படி கட்டளையிட்டுவிட்டாள்.

மாலை சேகர் ஸ்கூலிலிருந்து வந்ததும், "இன்று ஸ்கூலில் என்ன பாடம் நடந்தது?" என ராஜி கேட்ட போது அவன் பதில் கூற முடியாது தவித்தான். ராஜி, வகுப்பில் அவன் கவனம் செலுத்தாததைப் புரிந்து கொண்டாள். இனி தினமும் மாலையில் வகுப்பில் படித்ததைக் கூறவேண்டுமென ராஜி கட்டளையிட்டாள். சேகர் அம்மாதம் வகுப்பில் முதலாவதாக நின்றான்.

மாதம் முதலில் வழக்கம்போல் இரு சகோதரர்களும் வீட்டுச் செலவிற்கென சம்பளத்திலிருந்து ஒரு பகுதியை கொடுத்தனர். ஜனகம் அதை வாங்கி அலமாரியில் வைத்தாள்.

"அம்மா, எவ்வளவு இருக்கிறது என்று பார்த்தீர்களா?" கேட்டபடி ராஜி வந்துவிட்டாள்.

"எதற்கு எண்ணவேண்டும்? வழக்கப்படிதானே இருக்கும்!" ஜனகம் கூறியும் ராஜி பணத்தை எண்ணி வைத்தாள். பிறகு எல்லோரிடமும் கூறினாள், "பணம் அலமாரியிலேயே பெட்டியில் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் ஒரு நோட்டு இருக்கிறது. பணத்தை எடுத்து யார் செலவு செய்தாலும் கணக்கு நோட்டில் எழுதி மிகுதியையும் குறிக்கவேண்டும்" என்றாள் கண்டிப்பான குரலில்.

அனைவரும் ராஜியை ஒருவிதமாகப் பார்த்தனர் வீட்டிற்கு வந்த மூத்த மாட்டுப்பெண்ணே பணத்தைப் பற்றி ஒன்றும் கூறவில்லை; நேற்று வந்தவள் இவள், தன் அதிகாரத்தைக் காட்டுகிறாளே!

ராஜி அதோடு நிறுத்தவில்லை. தினமும் இரவில் கணக்கு நோட்டைப் பிரித்து கணக்கு பார்த்தாள். சரியாக எழுதாதவர்களை கோபித்தாள். அவள் கோபத்திற்கு பயந்தோ, அல்லது கணக்கு எழுத சோம்பல் காரணமாகவோ, வீட்டிலுள்ளோர் மெள்ள மெள்ள தாங்களே பணமெடுத்து செலவு செய்வதை நிறுத்தினர். செலவுகளுக்கு ராஜியே பணம் தந்து, கணக்கும் எழுதிவிட்டாள். ஆயின் ஒவ்வொரு செலவின் போதும் ராஜியின் கேள்விகளுக்கு பதில் சொல்லி பணம் எடுப்பதுபெரும் பாடாக இருந்தது. சங்கரன் அடிக்கடி இதுபற்றி தாயிடம் கூறி சினந்தான்.

கறிகாய் வாங்கிவந்தால் குற்றம் குறைகள் கூறுவாள் ராஜி. சங்கரன் அவளை எதிர்த்து வாய் திறக்க நினைக்கும்போது "இந்த வெண்டைக்காய் பிஞ்சாக நன்றாக இருக்கிறது; விலையும் மலிவாக வாங்கிவிட்டீர்களே" என்று கூறிவிடுவாள். சங்கரன் மௌனியாகி விடுவான்.

சங்கரனுக்குமட்டும் தம்பியின் மனைவி ராஜி இவ்வளவு அதிகாரத்தைச் செலுத்துவதும், அவளுக்கு எல்லோரும் அடங்கிப்போவதும் பிடித்தமாக இல்லை. ராஜியை கோபிக்க துணிவில்லை. தாய், தம்பி மீது இருந்த பாசம் தனித்து பிரிந்துபோகவும் இடம்தரவில்லை.

"அம்மா, இப்படி ராஜி விடுவது நன்றாகயில்லை. எல்லோரையும்விட சின்னவள் அதிகாரத்தைக் காட்டுகிறாள். நீ வாய் திறந்து கோபிக்காமல் இருக்கிறாயே!" சங்கரன் அடிக்கடி சினந்தான்,

"நான் என்னடா பண்ணட்டும்? பெரிய வீட்டுப் பெண். நான் வாயை திறக்க முடியுமா? ரகுவே அதட்டிக் கூற பயப்படுகிறானே?" ஜனகம் மெல்லிய குரலில் கூறுவாள்.

"அம்மா என்மீது பழியை போடாதே. பெரியவளான நீ தான் அவளை அடகக வேண்டும்" ரகு கூறுவான்.

ராஜியின் அதிகாரப் போக்கு ஒருவருக்கும் பிடிக்கவில்லை. எதிர்த்துக்கூறவோ துணிவில்லை. ரகுவையும் அழைத்துக்கொண்டு அவள் தன் பிறந்த வீட்டோடு போய்க்கொள்ளட்டும் என்றுகூட ஜனகம் நினைக்க ஆரம்பித்துவிட்டாள். ராஜியை எதிர்க்க சங்கரன் சந்தர்ப்பம் தேடிக்கொண்டிருந்தான்.

அன்று வந்த விவாகப் பத்திரிகை வீட்டில் ஒரு கலவரத்தை ஏற்படுத்தி விட்டது.

"யாருக்குடா விவாகம்?" ஜனகம் கேட்டாள்.

"நம் அத்தையோட மாப்பிள்ளை சேஷாத்ரி இருக்கானே அவனுடைய தம்பி நாராயணனுக்கு விவாகம்" சங்கரன் கூறினான்.

அருகில் நின்றிருந்த ராஜி சிரித்துவிட்டாள். "சரி, சரி, பத்திரிகையை மூலையில் வைத்துவிட்டு சாப்பிட வாருங்கள்"

அவள் கூறியதைவிட அவள் சிரித்தது சங்கரனுக்கு ரோஷமாக இருந்தது. "மூலையில் வைக்கும்படி அப்படி என்ன வந்து விட்டது?"

"அத்தையின் மாப்பிள்ளைக்கு தம்பி என்றால் கிட்டின உறவா? அல்லது போகப் போகிறோமா?" ராஜி சொன்னாள்.

சங்கரன் இந்த விஷயத்தில் எப்படியும் ராஜியை எதிர்த்து விடுவதென நிச்சயித்துவிட்டான். "அது யாராக இருந்தாலும் சரி, இந்த விவாகத்திற்கு கண்டிப்பாக போயே ஆகவேண்டும்."

"அவசியமில்லை என்றுதான் நான் சொல்லுவேன். அத்தையின் உறவே விட்டுப்போய்விட்டது. ஏதோ மரியாதைக்காக வந்துள்ள கடிதம் இது. உங்கள் இருவர் விவாகத்தின்போதுகூட அவர்கள் வரவில்லை." ராஜி தொடர்ந்தாள்.

"விட்டுப்போன உறவை நாம் கூட்டி வைப்பதில் தவறில்லை, நாங்கள் போனால் சந்தோஷப்படுவார்கள்." சங்கரன் பிடிவாதத்தில் நின்றான். "ரகு, இன்றே லீவிற்கு நீயும் மனு போட்டுவிடு......"

"அவர் எதற்கு? நம் குடும்பத்தில் ஒருவர் போனால் போதுமே!"

"யார் யார் போகவேண்டுமென எனக்குத் தெரியும். இதில் ஒருவரும் தலையிட வேண்டாம்" சங்கரன் குரலில் அழுத்தம் இருந்தது. ராஜியை எதிர்க்க துணிவு கூட்டிக்கொண்டிருந்தான் அவன்.

சகோதரர்கள் இருவரும் ஆபீசுக்குப் போய்க் கொண்டிருந்த நேரத்தில் சங்கரன் ரகுவிற்கு உபதேசம் செய்துகொண்டே போனான். "என்னடா இது, மௌனச் சாமியாராக நிற்கிறாய்? வீட்டில் ராஜியின் அதிகாரம் கேட்பாரற்று உச்சியில்நிற்கிறது. நீ எதிர்க்க நடுங்குகிறாய்........."

"இல்லை அண்ணா, இந்த விவாகத்திற்கு........"

"போக அவசியமில்லை என்பது எனக்கும் தெரியும். ஆனால் ராஜியை எதிர்க்கும் போரில் வெற்றிதேடி வரும் நேரத்தில் நான் பின்வாங்கத் தயாராக இல்லை. நீயும் எனக்கு ஒத்துழைக்கவேண்டும்."

ராஜியோ மாமியாரிடத்தில் முறையிட்டாள். "என்னம்மா இது, நீங்களும் வாயே திறக்கவில்லையே! அப்படிப்பட்ட அவசியமான விவாகமா?"

"நான் என்னம்மா பண்ணட்டும். அவன் பிடிவாதம் பிடிக்கிறானே!"

மாலை ராஜி கணவனிடம் கூறிப்பார்த்தாள். சகோதரனின் பக்கபலத்தில் அவனும் துணிவாக ராஜியை எதிர்த்தான். ரயில் சார்ஜுக்கென ராஜியை பணம் கேளாமல் சகோதரர்கள் கடன் வாங்கிக்கொண்டு கிளம்பிவிட்டனர்.

ராஜியின் மனத்தில் இனம் புரியாத சங்கடம். அவள் ஒருவருடனும் பேசவில்லை. மௌனமாக அமர்ந்து கிடந்தாள். இரவு தூக்கமும் இல்லை. "ராஜி ஒரே நாளில் அடங்கிவிட்டாளே!" கமலம் மாமியாரிடம் கூறி குதூகலித்தாள்.

பொழுது விடியும் நேரத்தில் இப்படியொரு செய்தி வரும் என ஒருவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. ராஜி படுக்கையைவிட்டு எழுந்திருந்தும் மந்தமாக அமர்ந்து கிடந்தாள். கமலம் சிரித்துக்கொண்டாள்...! அப்போதுதான் அந்த செய்தி வந்தது. சங்கரனும் ரகுவும் சென்ற ரயில் விபத்துக்குள்ளாகிவிட்டது. சகோதரர்கள் இருவரும் ஒன்றாகவே மேலுலகம் சென்றுவிட்டனர்.

"ஐயோ!" என்ற ஓலக்குரலுடன் துடிதுடித்து நின்றாள் ஜனகம். "நான் வேண்டாமென சொன்னேனே!" என்று இனி ராஜி ஏசிக்காட்டுவாள். அந்த பேச்சை வேறு கேட்கவேண்டுமே, ஈஸ்வரா!

"பாட்டி, சித்தி மயக்கமாக விழுந்துவிட்டாள்" சேகர் வந்து கூறினான். ஜனகம் ஓடினாள். ராஜிக்கு தன் நினைவே இல்லை. கமலம் ஒரு மூலையில் கதறிக் கொண்டிருந்தாள்.

மறுநாள் ராஜி கண்விழித்தபோது தன் தந்தையும் சகோதரனும் அருகில் இருப்பதைக் கண்டாள். அவர்களைக்கண்டதும் அழுது துடித்துவிட்டாள். அவர்கள் அவளைத் தேற்றினர். ராஜி எல்லாவற்றையும் கூறி விடுவாள் என ஜனகம் எதிர்பார்த்தாள். ராஜியோ தான் தடுத்ததைப்பற்றி ஒன்றும் கூறவேயில்லை. கமலத்தின் தந்தையும் வந்துவிட்டார். கமலம் ஒரு மூலையில் முடங்கிக்கிடந்தாள்.

"ராஜி, நீ நம் வீட்டுக்கு வந்துவிடு. எல்லாம் அங்கேயே பார்த்துக்கொள்ளலாம்" அவள் தந்தை ராகவன் கூறினார்.

"வேண்டாம் அப்பா, அங்கு வந்தால் மன்னியும் மாமியும் வரமாட்டார்கள். இங்கேயே பார்த்துக்கொள்ளலாம்" ராஜி இவ்விதம் கூறினவள் எல்லாவற்றிலும் பங்கெடுக்கவும் ஆரம்பித்துவிட்டாள்.

"இது என்ன துணிச்சலோ! இப்படி துளியும் வருத்தமேயில்லாமல் சுற்றுகிறாளே" துக்கத்திற்கு வந்தவர்கள் பேசினர்.

எல்லாவற்றையும் கவனித்துவந்த ராஜி, மாமியாரின் ஒரு போக்கைமட்டும் வெறுத்து வந்தாள். பிள்ளைகளை நினைத்து கதறித் துடித்தவள் ராம சாஸ்திரிகள் வந்த நேரங்களில்மட்டும் ஏதோ ரகசியம் பேசி வந்தாள். ராஜி அதைப்பற்றிக் கேட்டும் அவள் சொல்லவில்லை.

காரியங்கள் முடிந்ததும் கமலத்தின் தந்தை பரசுராமன் ஜனகத்திடம கூறினார், "கமலத்தை நான் அழைத்துப் போய்விடுகிறேன். ஆனால் அதற்குமுன் அவளுக்கும் சேகருக்கும் சேரவேண்டிய பங்கை பிரித்துக் கொடுத்துவிட்டால் நல்லது. நானோ சம்சாரி. பணத்தை செலவழித்து அடிக்கடி என்னால் வரமுடியாது"

ஜனகம் விதிர் விதிர்த்து நின்றாள். ராஜி மன்னியை நோக்கினாள். கமலம் தந்தையை ஆதரிப்பவளாகத் தெரிந்தது.

"மன்னீ, போகத்தான் வேண்டுமா?"

"பின்னே போக்கிடம் ஏது?" கமலம் கூறினாள். ராஜியின் அதிகாரம் இனி கிடையாது. பெருத்த நிம்மதி.

ராஜி சேகரை அணைத்துக்கொண்டாள். கண்களிலிருந்து கண்ணீர். "சேகரை நன்றாகப் படிக்கவைக்க நினைத்தேன்".

**கமலத்தின் மனத்தில் சற்று உரசல். ராஜியின் மிரட்டலுக்கு பயந்துதான் சேகர் நன்ருகப் படிக்கிருன். தந்தையோடு கிராமத்துக்குப் போய்விட்டால்..........**

ராஜி தன் கையினுலேயே பாகம் பிரிக்க ஆரம்பித்தாள். பாத்திரம் பண்டங்கள் எல்லாமே இரண்டு பாகமாகிவிட்டன. ஜனகம் உள்ளக் குமுறலோடு அமர்ந்து கிடந்தாள்.

"மன்னி, போஸ்டாபீஸில் மச்சினர் பெயரில் பணம் இருக்கிறது. நீங்கள் வாரிசுதாரர் எனக் காட்டி பணம் பெற்றுக்கொள்ளலாம்." ராஜி கூறினுள்.

"போஸ்டாபீஸில் பணமா?" கமலம் அதிசயித்துக் கேட்டாள்.

"ஆமாம் மன்னி, இதில் என்ன ஆச்சரியம்? மாசத்திற்கு ஒரே ஒரு சினிமா, பிற்பகலுக்கு வீட்டு டிபன் என்றெல்லாம் கட்டுப்படுத்தினுல் பணம் மீறுமே! அதை என்ன செய்வது? இவர்கள் முன்பு எப்போதோ ஆரம்பித்திருந்த கணக்கில் கட்டி வந்தேன்"

பரசுராமன் கமலத்தின் காதோடு கிசு கிசுத்தார் "மேலும் பணம் இருக்கப் போகிறது, யோசித்துக் கேள் உன் தங்கை சீதாவின் விவாகத்திற்காவது உதவும்"

கமலத்தின் சாமான்கள் வண்டியில் ஏற ஆரம்பித்தன. ராம சாஸ்திரிகள் உள்ளே வந்தவர் ஜனகத்தை நோக்கி, "கிளம்பலாமா, இன்றைக்கே நாள் நன்ருக இருக்கிறது. அவர்கள் அவசரப்படுகிருர்கள்" என்ருர்.

ஒன்றும் புரியாமல் ராஜி மாமியாரை நோக்கினுள். ஜனகமோ தன் புடவைகளை ஒரு பையில் திணித்துக் கொண்டு தள்ளாடியபடி வாசலுக்குச் சென்ருள்.

"அம்மா, எங்கே போகிறீர்கள்?" ராஜி கர்ஜித்தாள்.

ஜனகம் ஒரு அடி மேலே வைக்கமுடியாமல் திணறினுள். கண்களில் நீர் முட்டியது. கால்கள் தள்ளாடின. நின்ற இடத்தில் நின்றுவிட்டாள். "ஒன்றுமில்லை ரா...ஜி..." பேசவும் இயலவில்லை.

ராஜி சாஸ்திரிகளை கடுமையாகவே நோக்கினுள். "என்ன விஷயம்?"

"புதியதாக ஒன்றுமில்லை. உலகத்தில் நடக்கக் கூடியதுதான். ஜனகத்தின் தலைவிதி இப்படியிருக்குமென ஒருவரும் நினைக்கவில்லையே! மணியான இரு பிள்ளைகள் ஒரே நேரத்தில் தாயை பரிதவிக்க விட்டுச் சென்றுவிட்டார்கள்.... கமலமும், நீயும் பிறந்தகம் சென்றுவிடுவீர்கள். ஜனகத்தின் பங்கிற்கு சாமானும் கிடையாது. பாழும் வயிற்றுக்கு பதில் சொல்ல வேண்டுமே! உடலை உழைப்பதாகக் கூறினுள். கலெக்டர் துரைசாமியின் வீட்டில் சமையலுக்கு......"

சாஸ்திரிகள் வார்த்தைகளை முடிக்கவில்லை. ராஜி மாமியாரின் கை பையை வெடுக்கென பிடுங்கினுள். பிறகு "அம்மா, உள்ளே போங்கள்....ம், போங்கள் உள்ளே!" என்ருள்.

வழக்கம் போல் அவளுடைய அதிகாரக் குரலுக்குப் பணிந்து விட்டாள் ஜனகம், மெள்ள உள்ளே சென்ருள்.

"சாஸ்திரிகளே, மகனை பறிகொடுத்து நொந்து கிடப்பவர்களிடம் இவ்விதம் நடந்து கொள்ளாதீர்கள். சமையல்காரி கிடையாது என கலெக்டர் வீட்டில் சொல்லிவிடுங்கள்" எனக்கூறிய ராஜி உள்ளே விரைந்தாள்.

"அம்மா, உங்களை யார் இந்த ஏற்பாட்டை செய்யச் சொன்னது? நான் இருக்கும் போது உங்களுக்கு என்ன வந்துவிட்டது?" மாமியாரிடம் கோபிக்க ஆரம்பித்துவிட்டாள் ராஜி.

ராஜியின் தந்தை ராகவன் ஜனகத்திடம் கூறினர், "ஆமாம்மா, ராஜியோடு நீங்களும் எங்கள் வீட்டோடு வந்து விடுங்கள். வீடு சத்திரம் போல் பெரியதாக இருக்கிறது"

ராஜி விருட்டென திரும்பி தந்தையை நோக்கினுள். "எதற்கப்பா நாங்கள் அங்கு வருவது? இந்த வீட்டில் எனக்கு பாதி பங்கு உண்டு. அந்த பங்கில் என் மாமியாருக்கு பூரண சுதந்திரம் உண்டு. எனக்கு என் மாமியாரும், என் மாமியாருக்கு நானும் இருக்கும் வரை நாங்கள் அநாதைகளல்ல. ஒருவர் வீட்டில் போய் நிற்க வேண்டிய அவசியமில்லை, நிர்ப்பந்தம் இல்லை" எனக்கூறியவள் ஜனகத்தை நோக்கினுள்.

"அம்மா, பிள்ளை பிராயத்தில் குழந்தைகள் தாயின் அரவணைப்பில் நிற்க, முதிர்ந்த பிராயத்தில் தாய் பிள்ளைகளின் அரவணைப்பில் நிற்கிருள். விதியின் செயல் காரணமாக காத்து நிற்க பிள்ளைகள் ஒருவரும் இல்லாத நிலைமை ஏற்பட்டால், பிள்ளையின் பாதி அம்சமான மாட்டுப்பெண் அந்த கடமையை ஏற்கிருள்........ அம்மா, நான் படித்திருப்பது நல்லதாகிவிட்டது. உங்கள் பிள்ளை செய்து வந்த கடமையை நான் ஏற்க நிச்சயித்துவிட்டேன் இன்றே வேலைக்கு மனு போட்டுவிடுவேன். நீங்கள் எனக்கு உதவியாக என்னுடன் இருங்கள். இந்த வீடு நம் குடும்பத்தின் புகலிடமாகவே இருக்கட்டும்" என்ருள்.

"ராஜி!" ஜனகம் மருமகளை அணைத்து கண்ணீர் விட்டாள். உணர்ச்சியுடன் கலந்த கண்ணீர்.

ராகவனும் பரசுராமனும் திகைத்து நின்றபோது சற்று மௌனமாக இருந்த கமலம், விடுவிடுவென வாசலுக்குச் சென்று வண்டியிலிருந்த சாமான்களை இறக்கி உள்ளே எடுத்துவர ஆரம்பித்தாள்.

"என்ன கமலம் இது?" பரசுராமன் கேட்டார்.

"எங்கள் குடும்பத்தோடு இருக்கவே நிச்சயித்து விட்டேன், அப்பா!" கமலம் கூறினுள்.

"மன்னி, நம் குடும்ப ஒற்றுமையை நீடிக்க நீங்கள் ஒத்துழைப்பது குறித்து மகிழ்ச்சி" எனக்கூறிய ராஜி ஆனந்தத்துடன் சேகரை அணைத்து முத்தமிட்டாள். பிறகு "ஏய் சேகர், இங்கேயே நிற்காதே, போய் படி" என ராஜியின் குரல் கிளம்பிவிட்டது.

பெரிய வீட்டுப் பெண் ராஜியின் அதிகாரக்குரல் இன்னமும் அந்த இல்லத்தில் கேட்கிறது.

# தகுதிப் பாத்திரம்!

★

ப. தனுஷ்கோடி

"பாத்திரமறிந்து பிச்சை இடு!" என்று சொன்னார்கள். இதற்கு, "மனிதன் தகுதியைப் பார்த்து பரிசு கொடுக்கவேண்டும் என்பதுதான் அர்த்தம்" என்று எனது அருமை நண்பர் புலவர் குப்புரத்தினம் பொருள் கூறினார். கவி நயம் செறிந்த கம்பருக்கும், வழியோடு செல்லும் வம்பருக்கும் ஒரே தினுசில் அன்பளிப்பு செய்யமுடியுமா? —செய்யலாமா? என்பது அவரது வாதம்.

ஆனால் நாலாம் வகுப்பு படிக்கையிலேயே எனது ஆசிரியர் சொல்லிக்கொடுத்த பாடம் வேறு மாதிரி இருந்தது இன்னும் நினைவில் இருக்கிறது. அவர் அப்போது சொன்ன கதை இதுதான்:

செல்வச் செறுக்கு மிகுந்த சீமான் ஒருவர், தம்பிடி நாணயமாகத் தருமம் செய்வதற்குப் பதிலாக, காலணாவாக கண்டவர்களுக்கெல்லாம் கொடுத்து வந்தாராம். அது தரித்திரம் பிடித்த வறியவன் ஒருவனுக்கு சகடயோகமாக மாறிப் போயிற்று! தம்பிடி பிச்சை ஏற்பவன் பசிக்குச் சோறு வாங்கித் தின்பானாம். காலணா பெற்ற பிச்சைக்காரன், அதைக்கொண்டு ஒரு தூண்டில் முள் வாங்கினானாம். பிறகு மீன் பிடித்து விற்றானாம். அப்புறம் மீன் கடையே வைத்தானாம். இப்படி படிப்படியாக வளர்ந்து பெரிய சீமானாகி விட்டானாம். பாத்திரமறியாமல் பிச்சையிட்ட பழைய பணக்காரன் ஓட்டாண்டியாகி வறுமையில் உழன்றானாம்.

இந்தப் பகுத்தறிவு காலத்தில் இந்தக் கதையை எதிர்த்து எத்தனையோ வாதிட முயல்வார்கள். பிச்சைக்காரன் ஒவ்வொருவனையும் எடைபோட்டு தர்மம் செய்யமுடியுமா? என்று கேட்கலாம். அல்லது அதற்காக தர்மம் செய்யாமலேயே இருந்துவிட முடியுமா? என்றும் கேட்கலாம். அந்த நாளில் அந்தச் சிறு வயதில் இப்படி எல்லாம் வாத்தியாரை எதிர்த்துக் கேட்கும் துணிவு எங்களில் யாருக்கும் இல்லை. ஆகவே பசுமரத்தாணிபோல் பால்யத்தில் மனதில் பதிந்த கருத்துக்கள் அழியாமல் இன்னும் இருக்கிறது.

இது எப்படி இருந்தாலும் இத்தனை பல ஆண்டுகளுக்குப் பிறகு அனுபவம் கற்றுத் தந்த அறிவு இன்னொரு மாதிரியாகக் காணப்படுகிறது. பாத்திரமறிந்து பிச்சையிடு என்பது அணா பைசா விவகாரம் மட்டுமல்ல; சிபாரிசு செய்வது முதல் மற்ற எல்லா உதவிகளையுமே குறிக்கும் என விரிவாகப் பொருள் கொள்ளலாம். அதில் தவறில்லை. நாம் நம்மில் சற்றுத் தாழ்ந்தோருக்கு - அல்லது நமக்கு சரிசமமானவருக்குச் செய்யும் எந்தச் சிறு உபகாரமும், "பாத்திர மறிந்து" செய்யும் வரம்பின் பாற்பட்டதே எனலாம்.

அப்படிப் பார்க்கும் போது நாம் சிபாரிசு செய்த நபர், நம் நம்பிக்கைப் பாத்திரமற்ற முறையில் முறை தவறி - ஒழுங்கு தவறி பிற்காலத்தில் நடந்துகொள்வாரானால், அதனால் நம் மதிப்பு குறைவது ஒருபுறமிருக்க, மனவேதனை அடைய நேரிடுகிறதே அது சொல்லவொண்ணாத துயரம்!

"ஏற்பது இகழ்ச்சி!" என்ற மூதுரைக்கிணங்க நம்மைச் சார்ந்தோர் சிலர் வறுமையில் துயரப்பட்டும் வாய்விட்டுக் கேளாது மானமுடன் வாழ்கின்றனர். அத்தகையோரின் அடக்கம் கண்டு மகிழ்ந்து, மனமார பொருளும், துணியும், பிறவும் வலிய உதவி புரிகிறோம். நல்லவர்கள், நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அத்தகைய உதவி நிலைத்து நிற்பதில்லையே என்பதை நினைக்க வருத்தமாக இருக்கிறது. ஆம்; அதை ஒழுங்கான முறையில் வைத்துக் காப்பாற்றிக்கொள்ளவோ, பயன்படுத்திக்கொள்ளவோ அவர்களால் இயலுவதில்லை. பொறுப்பில்லாமல் வீண் விரயப்படுத்தி விடுகிறார்கள். பொருள்களை பாதுகாக்கத்தவறி காணாமல் அடித்துவிடுகிறார்கள். கஷ்டப்படுகிறவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டேதானிருக்க நேரிடுகிறது. "தான் தேடாப் பொருளுக்கு மாற்றுமில்லை; உறையுமில்லை" என்பது இதுதானோ?

எதுவாகவேணும் இருக்கட்டும். நாம் செய்த உதவி அவர்களிடம் ஒட்டவில்லையே என்பதை நாம் நினைத்து வேதனைப்படாமலிருக்க முடிகிறதா? "நீங்கள் செய்ய நினைக்கும் கடமையைச் செய்யுங்களேன்; பின் விளைவைப்பற்றி நீங்களேன் ஆராயவேண்டும்?" என்கிறார்கள். எப்படி முடியும்? நாம் கொடுப்பது நமக்கு இலவசமாக வந்தது அல்லவே! சிறுகச் சிறுகப் பாடுபட்டுச் சேர்த்ததாயிற்றே! அது நியாயமான வகையில் பகிர்ந்துண்ணும் பரந்த நோக்கத்தில் செய்த கடமையாயிற்றே! கேவலம் விரதச்சோற்றை காக்கைக்கு

வைத்து அது அதை ஒருநாள் எடுக்கத் தவறிவிட்டால், விரதம் விடமுடியாமல் எவ்வளவு சங்கடப்படுகிறோம்? அதுகூட இந்த ஆறறிவுமனிதனுக்கு இருக்கக்கூடாதா?

பெரியவர்கள் புராணம் சொல்லிக் கேட்டிருக்கிறேன். பார்வதியும் பரமசிவனும் பூவுலக மக்களுக்குப் படியளந்துகொண்டு வந்தார்களாம். வழியோடு போன வறியவன் ஒருவனை லட்சாதிபதியாக்க வேண்டும் என பார்வதி தேவிக்கு ஆசை வந்ததாம். ஆனால் அது அவனுக்கு ஒட்டாதே என்று பரமசிவன் தடுத்தாராம். பரீட்சித்துப் பார்ப்போமே என்று லட்சரூபாய் பணமுடிப்பு ஒன்றை பார்வதி வீசி எறிந்தனளாம். அந்த ஏழையோ, அதுவரை தடம்பார்த்து நடந்து வந்தவன், கொஞ்சதூரம் கண்ணை மூடிக்கொண்டுதான் நடந்து பார்ப்போமே என்று குருடனாக மாறினானாம். பணமுடிப்பும் தாண்டியது. அதிர்ஷ்டமும் போய்விட்டது.

இந்தக் கதையை இந்தக் காலத்தவர் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்; தெரியும்! அரிசிக்கு ஆலாய்ப் பறக்கும் கஷ்டமும், சர்க்கரைக்குப் படும சிரமமும் எல்லாருக்கும் நன்றாகத் தெரியும். ஒன்றுக்கு இரண்டுவிலை கொடுத்து, ரகசியமாகத் தேடிப் பிடித்து வாங்கிக்கொண்டுபோய் வீட்டிலே போட்டால் அங்கு என்ன நடக்கிறது? அரிசிச் சோற்றை எலி பூனை தின்னவும், சிந்திய சர்க்கரையை எறும்புகள் இழுத்துச் செல்லவுமான காட்சி தானே பெரும்பாலும் காணப்படுகிறது? எவ்வளவு கருத்தற்ற தன்மை? இதையே பணமாக அவர்களிடம் கொடுத்து, பொருள்களை அவர்களாகவே வாங்கிக் கொள்ளச் செய்யுங்கள். அப்போது குப்பையில் சிதறிய கடுகும், காய்ந்த கருவேப்பிலைகளும் கூட, ஒருநாள் தாளிதத்துக்காக சிக்கனமாக பயன் பட்டுவிடக் கூடும்!

எதற்காக இவ்வளவும் சொல்ல வருகிறேன் என்றால், எதிலும் பொறுப்புணர்வு அல்லது கடமையுணர்வு ஏற்பட வேண்டுமெனின், அது அவரவர்கள் சொந்த உழைப்பில் இருந்தால்தான் சாத்தியமாகும் என்பதற்காகவே! பெற்ற பிள்ளையாக இருந்தாலும் அவனுக்கா பாடுபட்டுப் பிழைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படாத வரையில், பெற்றோர் என்ன உதவி செய்தும் ஆதரவு காட்டியும் ஏதும் பயனில்லை; பயனற்ற அவ்வுதவி பாத்திரமறிந்து செய்யாத வெற்றுதவி தான்!

பிச்சை என்பது திருவோட்டில் மட்டும் இல்லை. ஏழை சீமானாகியதும், சீமான் ஏழை ஆனதும், "பாத்திர" கோளாறு அல்ல. குடிப்பவனுக்கும், சூதாடுபவனுக்கும் என் கடமை என்று யாரும் தர்மம் செய்யமாட்டார்கள். பாத்திரமறிந்து செயல்படுவதென்பது நம் உழைப்பின் ரத்தம், எங்கு சென்றாலும் நம் எண்ணப்படி - நம் விருப்பப்படி நல்ல வழியில் உபயோகமாகவேண்டும் என்பது தான் நம் கருத்தாக இருக்க வேண்டும். நாமாகச் செலவழித்தாலும் சரி; பிறர் மூலமாகச் செலவழித்தாலும் சரி; அக்கிரமமாக - அநியாயமாக - தவறானதாக - பொறுப்பின்மையாக செலுத்தப்படாமல் கண்காணித்துக் கொள்வதும் நம் கடமை தான்!

நம் உதவி அப்படி தகுதியற்ற வழியில் விரயமாக்கப்படுவதாக உணர்ந்தால் அப்பாத்திராம் அப்பிச்சைக்கு லாயக்கு இல்லை என்பதை தாராளமாக முடிவு கட்டி விடலாம்! தவறில்லை.

பொன்னுடை போர்த்தி தங்கத்தாம்பாளத்தில் பொற்காசுகளாக கம்பருக்குக் கொடுப்பது போலவே, வழியில் செல்லும் கல்லாத வம்பருக்கும் கொடுக்கலாம். அதை அவர்கள் எவ்விதம் பயன்படுத்துகின்றனர் என்பதுதான் கேள்வி. அதைத்தான் பாத்திரமறிந்து இடு என்கிறோம்.

பாத்திரம் எந்தப் பாத்திரமாக இருந்தாலும் பரவாயில்லை. களிம்பு ஏறாத பாத்திரமா என்பதை மட்டும் நாம் கவனித்துத்தான் ஆகவேண்டும்.

முதல் தடவை, இரண்டாம் தடவை தெரியாமலிருக்கலாம். குற்றமில்லை. "சும்மா வந்தது; சும்மா போய்விட்டது; நம்ம தரித்திரம் நம்மை விடுமா?" என்று வேதாந்தம் பேசுவோருக்கு, தெரிந்தே தானம் செய்துகொண்டிருப்பது நம் மடமை அல்லவா? "பலனை எதிர்பாராதே; கடமையைச் செய்!" என்பது பொருந்துமா? நமக்கா பலனை எதிர்பார்க்கிறோம்? இல்லையே! வயலுக்கு உரம் போட்டால், பயிர் விளைகிறதா என்று கணக்குப் பார்ப்பது தவறா?

பிச்சைக் காசைக் கொண்டு பணக்காரன் ஆனது பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை, உதவிப் பணத்தையும், சிபாரிசுக் கடிதத்தையும். துர்விநியோகப்படுத்தி கெட்டழிகிறானே அவனைப் பற்றிக் கவலைப்படுவோம்! அப்படிப்பட்ட பாத்திரமறிந்தபின் பிச்சை இடுவதை நிறுத்துவோம்! அது நமக்கும் நல்லது. அவர்களும் திருந்த உதவியவர்களாவோம்!

பார்வதி பரமசிவன் கதை இதைத்தான் நமக்கு உணர்த்துகிறது!



# சுயநலக்காரன்

★

கே. ஜயலக்ஷ்மி

"சார், தந்தி!"

சைக்கிள் மணி அலறியது.

'பாண்ட்'டில் ஒற்றைக்காலை விட்டுக் கொண்டிருந்தான் லக்ஷ்மணன். அப்படியே தெருப்பக்கம் ஓடிவந்தான். அவன் எதிர்பார்த்துக்கொண்டுதானே இருந்தான்!

காகிதம் கைமாறியது.

'சரக்' பரபரத்த விழிகள் கண்ட வாசகம்.

'சுபத்ராவுக்கு ஆண் குழந்தை பிறந்து, தாயும் சேயும் சுகம்!'

இன்னொரு காலிலும் 'பாண்ட்'டை மாட்டிக்கொண்டு நேராகக் கண்ணாடிக் கெதிரில் போய் நின்றான். உள்ளம் உற்சாக மிகுதியால் உயர உயரப் பறந்தது.

'டேய், லக்ஷ்மணா!' நீ 'அப்பா' வாகிவிட்டாயடா! கங்கராஜுலேஷன்ஸ்' தனக்குத்தானே வாழ்த்திக் கொண்டான்.

'குபுக்' கென்று முன்னே வந்து குதித்தது நினைவு!

'இவ்வளவு நேரம் இதேபோல் ராமனுக்கும் தந்தி வந்திருக்கலாமே!'

ஐந்து நிமிஷத்திற்கே குறைவாகத்தான் ஆகியிருக்கும். தெருவையே கிடுகிடுக்க வைத்து விட்டு புறப்பட்டு விட்டது ஸ்கூட்டர்.

ஆச்சர்யப்படவேண்டாம். லக்ஷ்மணன் சென்று கொண்டிருப்பது ராமனின் வீட்டுக்குத்தான்.

இருவரும் நண்பர்கள். உதவி என்றால் ஊரை விட்டே ஓடிவிடும் கூட்டத்தைச் சேர்ந்தவர்களல்ல. உயிரைக் கொடுத்து உயிரைக்காக்கும் உண்மையான நண்பர்கள். ஆரம்பப்பள்ளியில்,

"டேய், லக்ஷ்மணா! உன் வாயைக் காட்டு".

"நீ முதலில் உன் வாயைக் காட்டு".

அவன் கையில் இருந்த சாக்லெட் இவன் வாயில் விழுந்தது. இவன் கையிலிருந்த சாக்லெட் அவன் வாயில் விழுந்தது. நாவுகள் இனிப்பைச் சுவைத்தன சப்புக்கொட்டி.

"எனக்குப் பிறந்த நாள் டா ராமு!

"அட, எனக்கும் தானடா!"

ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டார்கள் தாங்கொணாத மகிழ்ச்சியுடன்.

இப்படித் தொடங்கிய நட்பு, அடையாறு ஆலமரத்தைப் போல் வேரூன்றி தழைத்துப் படர்ந்து, முதிர்ந்து நட்புக்கே ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துவிட்டிருந்தது. ஒரே கல்லூரி, ஒரே அலுவலகம். எல்லாமே அவர்களுடைய எண்ணப்படியே நடந்துவிட்டது. இவைகளையெல்லாம் விட அதிசயம் இருவரின் திருமணமும் கூட ஒரே நாளில், ஒரே ஊரில், ஒரே சத்திரத்தில், ஒரே பந்தலிலும் நடந்தது தான். இதற்காக இவர்கள் சம்பந்தப்பட்டவர்களைப் படுத்திவைத்திருக்கிற பாடு!

திருமணம் முடிந்த எட்டாவது மாதம் இருவருமே தம் தம் மனைவிகளை பிறந்தகத்துக்கு அனுப்பிவைத்தார்கள். பிரசவத்திற்காகத்தான். அதற்குப் பிறகு நண்பர்கள் நாட்களை எண்ணிக்கொண்டுதான் இருந்தார்கள்.

லக்ஷ்மணனுக்கு இன்று தந்தி வந்துவிட்டது ராமனுக்கு? கட்டாயம் வந்தே இருக்கும். இருக்க வேண்டும்.

தெரு முகப்பில் திருப்பினான் ஸ்கூட்டரை. குறுக்கே பாய்ந்து ஓடியது ஒரு சின்னஞ்சிறு வெள்ளாட்டுக்குட்டி. அதற்குத் தன் பிஞ்சு உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஆசையில்லை. ஆசையை அறிகிற வயது இல்லை. சாவைக்கண்டு அஞ்சாத யோகியாய் துள்ளி ஓடிய குட்டியைக் காப்பாற்ற சடக்கென்று 'பிரேக்' போட்டான் லக்ஷ்மணன்.

நிறுத்த உதவிய 'பிரேக்' மறுபடியும் கிளம்ப மறுத்து சண்டித்தனம் செய்தது. அத்துடன் மன்றாடி ஒருவழியாக அதை வழிக்குக்கொண்டுவர பத்து நிமிஷங்கள் பிடித்தன.

ராமன் வீட்டு வாயில்போய் ஸ்கூட்டரை நிறுத்தவும், ராமன் தந்திச் சேவகனிடமிருந்து தந்தியை வாங்கிப்பார்க்கவும் சரியாக இருந்தது. நான்குபடிகளை ஒரே தாவலாகத் தாவி நண்பனருகில் போய் நின்றான் லக்ஷ்மணன். அதே விநாடி ராமனின் கையில் படபடத்துக்கொண்டிருந்த தந்தி — அதாவது காகிதம் அவன் கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்தது.

குனிந்து அதை எடுத்தான் லக்ஷ்மணன்.

"பிரசவத்தில் ஏற்பட்ட எதிர்பாராத கோளாறினால் சுசீலா இறந்துவிட்டாள். உடனே வரவும்"

நண்பனின் முகத்தைப் பார்த்தான் லக்ஷ்மணன். அது முகமாகவா இருந்தது? அடுத்த விநாடி "ராமா"! என்று அவன் அலறிய அலறலில் அந்த வீடே கிடுகிடுத்தது.

## 2

"லக்ஷ்மணா!"

"சொல்லு!"

"நீ சுபத்ராவை வரவழைக்கப் போகிறாயா இல்லையா?"

"இல்லை!"

"ஏன் இல்லை?"

"அது உனக்கே தெரியும்!"

"வர வர உன்மேல் எனக்கு வெறுப்பு அதிகரித்துக் கொண்டே வருகிறது."

"எனக்கும் அப்படித்தான்!"

"என்ன, உனக்கும் அப்படித்தான்? இத்தனைப் பிடிவாதமாக நீ இருப்பாய் என்று நான் நினைக்கவே இல்லை."

"நானும் தான்!"

"லக்ஷ்மணா!"

"போதும் நிறுத்து ராமு! நீ பிடிவாதம் பிடிக்கலாம், நான் மட்டும் பிடிக்கக்கூடாதோ?"

"கூடாது!"

"ஏன் கூடாது?"

"நீ என்னைவிடச் சின்னவன். நான் சொன்னால் கேட்கவேண்டும்."

"நீ பிறந்த தேதி எனக்குத் தெரியாதாக்கும்?"

"தேதியை விட்டுத்தள்ளு. பெயரால் நீ எனக்கு இளையவன் தானே?"

"ராமு!" நண்பனை இறுக அணைத்துக் கொண்டான் லக்ஷ்மணன்; அவன் இதயம் வேதனை தாங்காமல் துடி துடித்தது. "நான் சொல்வதைக் கேட்க மாட்டாயா ராமு?" நண்பனின் தாடையைப் பிடித்துக் கொண்டு ஒரு தாய்க்குரிய பாசத்துடன் கேட்டான்.

"என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய் லக்ஷ்மணா! என்னால் என் சுசீலாவை மறக்கவே முடியவில்லையே!" பரிதாபமாகக் கூறினான் ராமன்.

"எத்தனை நாளைக்கு இப்படியே இருக்கப் போகிறாய்? அதையாவது சொல்!"

"என் ஆயுள் முடியும் வரையில் இப்படியே இருந்துவிடுவது என்பது தான் என் தீர்மானம்."

"ரொம்பசரி! என்னுடைய தீர்மானத்தையும் சொல்லிவிடுகிறேன், கேட்டுக்கொள்! நீ அனுபவிக்காத இன்பமாகட்டும், துன்பமாகட்டும் நானும் அனுபவிக்க முடியாது. இனிமேல் உன்னை நான் மறுமணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்த மாட்டேன்! நீயும் என்னை சுபத்ராவை அழைத்து வரும்படி வற்புறுத்தக்கூடாது. தெரிந்ததா?"

"என் சுசீலா இந்த உலகத்தைவிட்டே போய் விட்டாள். உன் சுபத்ராவோ உன் வம்ச விளக்கை கையில் ஏந்திக்கொண்டு உன் அழைப்புக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறாள். நம் இருவரையும் ஒன்றுபடுத்திப் பேசுகிறாயே லக்ஷ்மணா, இது சரியா?"

"எனக்குத் தெரியாத விஷயத்தைச் சொல்லி விட்டதாக எண்ணமோ உனக்கு? சுசீலா இல்லை. அதை நானும் மறுக்கவில்லை. நீ ஏன் கௌரியை மணந்து கொள்ளக்கூடாது? கௌரியைப் பிடிக்க வில்லையா விட்டுத்தள்ளு, வேறு எந்தப் பெண்ணை யாவது பார்த்து மணந்துகொள். உனக்கு மனைவியாக என்று ஒருத்தி உன் வீட்டுக்குள் அடியெடுத்து வைக்கிறாளோ, அன்றுதான் என் மனைவியாக சுபத்ராவும் என் வீட்டுக்குள் நுழைய முடியும். உனக்கு இல்லாத வாழ்வு, எனக்கு இருக்கக்கூடாது! நினைவிலிருக்கட்டும்."

"ஓர் பெண்பாவத்துக்கு நானும் காரணமாகத்தான் வேண்டுமா!"

"நான் ஆகும்போது நீ ஏன் ஆகக்கூடாது?"

"லக்ஷ்மணா!"

"போதும், அப்பனே! இந்த ஒரு வருஷகாலமாக உன்னுடன் இப்படிப் பேசிப்பேசியே என் தொண்டை புண்ணாகி விட்டது. பேசியது போதும் சும்மாயிரு. உனக்காக என்று மனம் மாறி நீ மறுமணம் செய்து கொள்ள விரும்புகிறாயோ, அப்போது செய்துகொள். நீ மணம் செய்துகொண்ட மறுநாள் நானும் சுபத்ராவை அழைத்துக் கொள்கிறேன். அதுவரையில் அவள் பிறந்தகத்திலேயே இருக்கட்டும்." இதைச் சொல்லி விட்டு வெறுப்புடன் எழுந்தான் லக்ஷ்மணன்.

## 3

அன்றைய தபாலில் வந்த அந்தக் கடிதத்தை மறுபடியும் படித்தான் ராமன்.

"......அநேக நமஸ்காரம். எப்படி எழுதுவது, என்ன எழுதுவது என்றே புரியவில்லை. அவருக்கு கடிதங்கள் எழுதி எழுதி விரல்கள் தேய்ந்துவிட்டன. ஒவ்வொரு கடிதத்திற்கும் பதிலும் வராமலில்லை. ஆனால் எல்லாம் ஒரே வாசகம், 'காலம் வரும், எழுதுகிறேன், காத்திரு. இதைப் படித்துப்படித்து அலுத்துவிட்டது. தாய்மை மலர்ந்து ஓராண்டு முடிவடைந்துவிட்டது. இன்னமும் நான் பிறந்தகத்திலேயே இருக்கிறேன். உற்றாரும் ஊராரும் சும்மாயிருப்பார்களா? பைசா செலவில்லாமல் எனக்கு ஊரார் வழங்கிய பட்டம் 'வாழா வெட்டி!' இதை ஒரு பெண்ணால் எப்படி ஏற்க முடியும்? அதுவும் அன்பும் பண்பும் நிறைந்த ஒருவரை மணந்து கொண்டிருக்கையில்!

எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. வேறு வழியில்லாமல் இந்தக்கடிதத்தை எழுதுகிறேன். சுசீலாவை நானறிவேன். அவளிடத்தில் தாங்கள் வைத்திருந்த பிரேமையின் தன்மையையும் நானறிவேன். தங்களால் சுசீலாவை மறக்க முடியாது என்பதையும்நான் ஒப்புக்கொள்ளுகிறேன். இருந்தாலும், எனக்காக, எனக்கு வாழ்வளிப்பதற்காக வேறு ஒரு பெண்ணை மணந்து கொள்ளத்தான் வேண்டும்.

உங்களுடைய உறுதி பாராட்டக் கூடியதுதான். இருந்த போதிலும் எனக்காக பெரிய மனது வைத்து, அதை விட்டுக்கொடுக்க வேண்டுகிறேன். நீங்கள் ஆண்மகன். பெண்களுக்கு இல்லாத சில உரிமைகள் உங்களுக்கு உண்டு அதன்மூலம் வாழ்வுக்காக ஏங்கும் ஏதேனும் ஓர் பெண்ணுக்கு வாழ்வளிப்பதன் மூலம் எனக்கும் வாழ்வளியுங்கள். அதற்காகத் தங்களை சுசீலாவை மறந்துவிடும்படி நான் கூறவில்லை. அவளுடைய நினைவு தங்களுடைய இதயத்தில் நீங்காத 'காதல் ஜோதி'யாக நீக்கமற நிறைந்து நிற்கட்டும்.

உங்களுடைய ஒரு அபலைச்சகோதரிக்காக, அவள் பெற்ற மதலைக்குத் தந்தை பாசம் கிடைப்பதற்காக தங்களுடைய சொந்த விருப்பத்தை தியாகம் செய்ய வேண்டுமாய் யாசிக்கிறேன். அண்ணா! எனக்கு வாழ்வுப் பிச்சை அளிப்பீர்களா? இல்லாவிடில் கூடிய சீக்கிரத்தில் நான் சுசீலாவிடம்தான் போகவேண்டும்.

சகோதரி

சுபத்ரா.

'ஐயோ, சுசீலா!' வாய்விட்டுக் கதறினான் ராமன். 'உன்னை மறக்க எத்தனை சிபார்சுகள்! அப்படியும் என்னால் உன்னை மறக்க முடியவில்லையே!'' உன்னை எனக்காக இல்லாவிட்டாலும் சுபத்ராவுக்காக மறக்கத்தான் வேண்டும் போலிருக்கிறதே, என்ன செய்வேன் சுசீலா! நான் மறைந்து, நீ இருந்திருந்தால் உன்னை யாரும் இப்படி நிர்ப்பந்திக்க மாட்டார்களே! ஆண்களுக்கு இல்லாத அந்த உரிமை பெண்களுக்கு இருக்கிறது. அதனால்தான் பெண்கள் இழந்து விட்ட தன் கணவரின் நினைவிலேயே வாழ்கிறார்கள். வாழ முடிகிறது. அதனால்தான் பெண் இனம் உயர்ந்து வரவும் முடிகிறது. நான் பாவி! ஆணாகப் பிறந்து விட்டேன். அந்த உரிமை எனக்கு இல்லாமற் போய் விட்டது. அதை காக்கும் உறுதி என் இதயத்திற்கு இருந்தும் அதை நடத்திக்காட்ட உரிமையின்றி துன்பப்படுகிறேன் சுசீலா! துன்பப்படுகிறேன்!'' அழாமல் அழுதான் ராமன். ஆண்மகன் அழலாமா?

இரண்டு தினங்கள் அலுவலகத்திற்கு விடுமுறை போட்டுவிட்டு சிந்தித்தான், சிந்தித்தான் அப்படிச் சிந்தித்தான்! வாழாமலிருக்க வகைதேடி சிந்தித்தான். முடிவு கண்டானில்லை. அவன் விருப்பப்படி நடக்க வேண்டும் என்றால், தன் விருப்பத்தையே லட்சியமாகக் கொள்ளவிரும்பினால், அவன் ஒரு சுயநலக்காரன்தான். நட்பைப் பெருமைப்படுத்துவதற்காக லக்ஷ்மணன் இருக்கும் தன் வாழ்வையே இல்லாமல் செய்துகொண்டு துறவு வாழ்க்கை நடத்துகிறான். இவனைப்போல் அவனும் சுயநலக்காரனாக மட்டும் இருந்திருந்தால்....? இருக்கவேண்டும் என்றுதான் இவன் விரும்பினான், அவன் அப்படி சுயநலம் உள்ளவனாக இருக்கவில்லையே! இருக்க விரும்பவில்லையே!

நட்பை மையமாக வைத்து இருவரையும் எடை போட்டால லக்ஷ்மணன்தான் உயர்ந்து நிற்கிறான். நட்புக்காக, சுயநலத்தை விட்டவன். ராமனோ...? தலை குனியத்தான் வேண்டியிருந்தது. நண்பனுக்காக, அவனிடம் கொண்டுள்ள நட்புக்காக இவனும் சுயநலத்தை விட்டுவிடத்தான் வேண்டும். நட்பை மதித்துப் போற்றுகிற பெருமை லக்ஷ்மணனுக்கு மட்டும் உரிமையானதல்லவே! லக்ஷ்மணனுக்காக, சுபத்ராவுக்காக, நட்புக்காக இதை அவன் செய்துதான் ஆகவேண்டும். வேறு வழியில்லை. இவனைப் பொருத்த வரையில் இது ஒரு தியாகம் தான்.

இவனுக்காக லக்ஷ்மணன் தன் வாழ்வையே தியாகம் செய்துகொண்டு வருகிறானே! அவனுக்காக இவன் இல்லாத ஒரு வாழ்வை ஏற்படுத்திக்கொள்ளுகிற தியாகத்தையேனும் செய்ய வேண்டாமா?

லக்ஷ்மணனிடம் சென்று ஒருவார்த்தை சொன்னால் போதும். மற்றபடி எல்லா காரியங்களையும் அவனே செய்து விடுவான். தன்னுடைய இந்தச் செயலின் மூலம் லக்ஷ்மணன் மட்டும் வாழ்வு பெறவில்லை. சுபத்ராவும் பெறுகிறாள்.

இருவரின் நிறைவுக்காகத் தன் லட்சியத்தை அழித்துக்கொள்ள முன்வந்தான் ராமன். இந்த முடிவுக்கு வந்த பிறகுதான் அவனுக்கு லக்ஷ்மணனின் நினைவும் வந்தது. நொடிக்கு நூறு தடவை வந்து போகும் லக்ஷ்மணனை இரண்டு நாட்களாக எங்கே காணவில்லை? இவன் மனத்துடன் போராடிக் கொண்டிருக்கையில், அவன் ஏதேனும் நோயுடன் போராடிக் கொண்டிருக்கிறானோ! நினைவு நீண்டு கவலையாக உருவெடுத்தது. நட்பின் நெருக்கம் உந்தித்தள்ளியது. கிளம்பிவிட்டான் தன்னையே நொந்தவண்ணம்.

## 4

ஸ்கூட்டரை விட்டு இறங்கியதுமே அவனை வரவேற்றன, மூடியிருந்த கதவும் பூட்டியிருந்த பூட்டும்.

''இதற்குள்ளாகவா அலுவலகம் சென்றிருப்பான்''? வினாவின் குடைச்சலுக்கு பதிலை யோசிக்கப் பொறுமையில்லை. அலுவலகம் நோக்கிச் சென்றது ஸ்கூட்டர்.

மணி ஆகவில்லையாதலால் யாரும் வந்திருக்கவில்லை. வேலைக்காரப் பையன் மட்டும் வந்திருந்தான். அவனிடம் சென்று கேட்டான்.

''எம். லக்ஷ்மணன் வந்துவிட்டாரா பாபு?''

'' இல்லிங்க சார்.''

'' எங்கே போயிருப்பான்? ஒருக்கால் திடீரென்று மனம் மாறி சுபத்ராவை அழைத்துவரச் சென்றிருப்பானோ? ஆண்டவனே, அப்படியிருந்தால் உனக்கு எவ்வளவு நன்றி செலுத்தினாலும் போதாது! சிந்தனையில் லயித்து மௌனமாக நின்றுகொண்டிருந்தவனிடம், '' சார்! உங்களுடைய மேஜையின் மேல் உங்களுக்கு ஒரு கவர் வைத்திருக்கிறதுங்க.'' என்று கூறினான் பாபு.

விரைந்தான் ராமன், மேஜையை நோக்கி.

திருச்சி நகரத்தின்
சிறந்த பாத்திரக்கடை

பித்தளே
தாமிரம்
வெண்கலம்
எவர்சில்வர்

★

முதலிய எல்லா வகைப்
பாத்திரங்களுக்கும்
நம்பிக்கையும் நாணயமும்
உள்ள இடம்

★

திருநெல்வேலி
பாத்திரக்கடை

★

சி. வ. கந்தசுவாமி பிள்ளே சன்
பாத்திர வியாபாரம்,
142, பெரியகடை வீதி,
திருச்சிராப்பள்ளி-8.

கவரைக் கையில் எடுத்ததுமே அவனுடைய கவலேகளெல்லாம் ஓடி ஒளிந்தன, லக்ஷ்மணனின் கையெழுத்து தெரியாதா என்ன! "சுபத்ராவை அழைத்துவரத்தான் திடீரென்று கிளம்பிப் போயிருக்கிருன். நான் கவலேப்படப் போகிறேனே என்று எனக்குக் கடிதம் எழுதிவைத்துவிட்டுப் போயிருக்கிருன். அவன் சுபாவமே இப்படித்தான். நினேத்ததை உடனே செய்துவிடுவான். யோசிக்கிற பழக்கமே அவனிடம் கிடையாது. இரண்டு நாட்களாக நான் வேலேக்கு வராததால் கடிதத்தைப் பார்க்க முடியவில்லே." எண்ணங்களின் அசுர சுழற்சியில் திக்கு முக்காடினுன் ராமன். கவரை உடைத்து கடிதத்தை எடுத்துப் படிக்கக்கூடத் தோன்ருமல், எதிர்பாராமல் கிடைத்த உற்சாகத்தில, தன் லட்சியம் அழிக்கப்படவேண்டிய அவசியமில்லே என்கிற நிம்மதியில், பெருமிதத்தில் பூரித்து, அதை அணு அணுவாக அனுபவித்தபடி நின்ருன்.

'சுசி! உன்னே நான் மறக்கவேண்டியதில்லே. உன் நினேவை இதய ஓரத்தில் ஒதுக்கவேண்டியதில்லே. இதற்குப் பெரிதும் உதவி விட்டான் லக்ஷ்மணன். நான் அதிர்ஷ்டசாலியடி சுசீலா! என் லட்சியம் பிழைத்து விட்டது. விருப்பமில்லாத வாழ்வில் என்னே ஈடுபடுத்திக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் நீங்கிவிட்டது!' நிலேகொள்ளாத உவகையில் உள்ளம் துள்ளியது.

"என்ன, சார்! கையிலே கடிதத்தை வைத்துக் கொண்டு பிரித்துப் பார்க்காமல்......" டைப்பிஸ்ட் நாகநாதன் ஆச்சர்யமாகக் கேட்டபடியே உள்ளே வந்துகொண்டிருந்தார்.

"இதோ!" என்றபடி கவரை உடைத்தான். கடிதத்தை எடுத்துப் படித்தான்.

"......டேய், ராமு!

நீ ஒரு சுயநலக்காரன். உன் விருப்பத்தை விட்டுக் கொடுக்கமாட்டாய். சுபத்ராவும் ஒரு சுயநலக்காரி. என்னுடன் வாழ்ந்து தான் ஆகவேண்டுமென்கிற தனது விருப்பத்தை விட்டுக் கொடுக்கமாட்டாளாம். நீங்கள் இருவரும் இவ்வளவு சுயநலப் பேயாக இருக்கும் போது நான் மட்டும், அதற்கு எதிர்மாருக இருப்பதெப்படி? நானும் ஓர் சுயநலக்காரனுகிவிட்டேன். வேறு வழி? நீங்களிருவரும் உங்களுடைய லட்சியத்தைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே கண்ணுங்கருத்துமாக இருக்கும் போது நான் மட்டும்......?

மூளேயைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே! நான் ராணுவத்தில் சேர்ந்துவிட்டேன்!

சுயநலக்காரன்,

லக்ஷ்மணன்.



# உழவு மாணிக்கம்

★

ரா. உமாமகேசுவரன்

கிராமத்து நடுக்களத்திலிருந்து 'ஐயோ! ஐயோ!' என்ற அலறல் சப்தம் கேட்டது.

ஒரு பக்கம் வானிலே வெண்ணிலா பவனி வர ஆரம்பித்துவிட்டது. மற்ருெரு பக்கம் வேலே செய்து விட்டுக் களைப்புடன் வீடு திரும்பும் தொழிலாளர் கூட்டம்.

களத்தை நோக்கி ஓடுவதற்குள் ஒரு பயங்கரக் கூட்டம் தடி, குச்சி முதலியவைகளுடன் பழனியின் வீட்டை நோக்கி ஓடியது. அவர்களுடைய வேகம் ஆற்றல் என்னை பிரமிக்கச் செய்தது. நவகாளி மாதிரி ஏதேனும் வெறிச்செயல். அசம்பாவிதம் நிகழாமல் இருக்கவேண்டுமே என்று தெய்வத்தைப் பிரார்த்தித் தேன். அன்று அவ்வளவு சிரத்தையுடன் அவர்களைத் தடுத்திராவிட்டால் பழனியின் வீடு சூரையாடப் பட்டிருக்கும்; தீயில் வெந்து சாம்பலாயிருக்கும்.

என்னுடைய குத்தகைக்காரன் மாணிக்கம் வைக் கோல் மீது கிடத்தப்பட்டிருந்தான். அவனது இடது தோளில் அரிவாள் வெட்டு தெரிந்தது. சிவப்பு மசி போல் இரத்தம் சொட்டு சொட்டாக வயல் வரப்பு இவைகளின் மீது சிந்தியிருந்தது என் பரபரப்பை அதிகரிக்கச்செய்தது.

ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்த மாணிக்கமும் பழனி யும் ஏன் இப்போது வேற்றுமை பாராட்டத் தொடங் கினர் என்பது எனக்கு விளங்காத புதிர். அண்ணன் மாணிக்கம் படித்தவன் அல்ல. தம்பி பழனி படித்தவன்; இருந்தும் அஹிம்சையைக் கைவிட்டான். என்னுடைய வண்டியில் மாணிக்கத்தை டவுன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றேன். இரவு வீட்டிற்குத் திரும்பிய வுடன் போலீஸ்காரர் வந்து எங்கள் ஒவ்வொருவரையும் சிற்சில கேள்விகள் கேட்டுவிட்டுப் பிறகு டயரியில் குறித்துக்கொண்டு போனுர்.

உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை என்ற கொள்கையை வம்ச பரம்பரையாகக் கடைப்பிடித்து வாழ்ந்து வந்தனர் மேக்குடி கிராமத்தார். மாணிக்கம், பழனி இருவரும் உண்மையான உழவர்கள்.

மகாயுத்தம் வந்தது. விலைவாசிகளும் விஷம் போல ஏற ஆரம்பித்தன. வாழை, கரும்பு, நெல் பயிர்களின் விவசாய வருமானம் அதிகரிக்கவே ஒவ்வொருவரும் விவசாயத்தில் ஊக்கமாக ஈடுபடலா யினர்.

இவ்வளவு வருடங்களாக என்னிடம் நேர்மையாக நடந்து வந்த பழனி நெறி தவற ஆரம்பித்தான். அதனுல்தானே என்னவோ நான்கு வருடங்களுக்கு மேலாகவே பயிர்கள் பாலில்லாப் பச்சிளங் குழந்தை களைப் போல் வாடலாயின.

களஞ்சியத்து நெல்லில் பத்து கலம் குறைந்தது. புயல் வீசியதைக் காரணமாக வைத்துக்கொண்டு குத்தகை நெல் சரிவரக் கொடுக்கவில்லை. அவ்வருடம் புயலால் நெற்பயிர்களுக்குச் சேதமில்லை என்ற உண்மை கிராமத்தார் ஒவ்வொருவரையும் நான் விசாரித்த பிறகு தெரிந்தது. இதற்காகச் சென்னை காரியாலயத்தில் "லீவ்" எடுத்துக்கொண்டு கிராமத் துக்கு வந்தேன்.

மாணிக்கம் நேர்மையாக நடந்து கொண்டு நெல் கொடுத்ததற்காக அவனை ஏளனம் செய்து அவ மரியாதையாகவும் பேசினுன் பழனி. கிராம விஷயங் களில் நல்ல பெயர் எடுப்பது சிரம சாத்தியமான ஒரு காரியம். நாம் சாதுவாக இருந்தால், அசடு, இளிச் சவாயன் என்று பட்டம் சூட்டுவார்கள். கண்டிப்பாக நடந்து கொண்டால் அரக்கத்தன்மை உடையவன் என்பர். இருதலைக் கொள்ளி எறும்பு நிலைதானே!

பழனி முன்னுக்கு வரவேண்டும் என்று என் தந்தை ஒரு ஜோடி உழவு மாடுகள் வாங்கிக் கொடுத்து ஒரு வேலி நிலத்தையும் சாகுபடி செய்யக் கொடுத் திருந்தார். சிலநாளில் அவன் நெறிதவற முற்பட்டான். பிறகு பொய் பேசினுன். திருடுவதற்கும் ஆரம்பித்தான். எனக்குத் தெரியாமல் என் சொத்தை சுரண்டும் அளவிற்குத் துணிந்துவிட்டானே அந்த அயோக்யன் என்று ஆத்திரம் அனலென வீசியது.

நேரில் அவனைக் கூப்பிட்டு விசாரித்து நற்புத்தி புகட்ட எண்ணினேன். அண்ணனை வெட்டிவிட்டுத் தலை மறைவாக அல்லவோ இருக்கிருன். ஒரு மாத அவ காசம் கொடுத்துப் பார்த்தும் அவன் வரவில்லை. பொறுமை இழந்த நானே நிலத்தை மாற்றி மாணிக்கத் திடம் ஒப்படைத்தேன்.

ஆத்திரத்தில் மாணிக்கத்தை வெட்டியது இந்தக் காரணத்தைக் கொண்டுதான் என்பது சில நாட்க ளுக்குப் பிறகு தெரிந்த உண்மை. எவ்வளவு நாட் களுக்கு ஒளிந்துகொண்டு மனிதர் கண்ணில் அகப் படாமல் வாழமுடியும்.

நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து பாடு படும் உழவன் மாணிக்கம். அவனுக்குச் சொந்தமா னது என்று சொல்லிக்கொள்ள ஒரு ஜோடி காளைமாடு களும் ஒரு கூரை வீடும்தான். அவனுடைய சொல் லும் செயலும் கொள்கைகளும் உழவர் குலத்திற்கே பெருமை தேடித்தந்தன.

முதல் வருடம் நீரில்லாத நிலத்துப் பயிர்கள் வாடின; காய்ந்து தீய்ந்து போயின; அடுத்த வருடம் பூச்சி உபத்திரவம்; அதற்கு அடுத்த வருடம் பெரு வெள்ளம், புயல் இப்படியாக விவசாயியின் வாழ்க்கை வளத்தைவிட வறுமையே அதிகம் கண்டது. இதில் இவனுக்கு மட்டும் என்ன விதிவிலக்கா?

இவ்வளவு இடுக்கண் ஏற்பட்டும் தெய்வம் காக்கும் என்ற தளராத நம்பிக்கையுடன் சலியாது உழைத்து வந்தான். மாணிக்கம் உழவுத்தொழில் உயர்ந்தது என்ற மனப்பான்மை உள்ளவன். பழனியோ உழவுத் தொழிலை இழி தொழிலாகக் கருதியவன். "உழைத்து உழைத்து உடல் மெலிந்ததே தவிர வேறு என்ன சுகம் கண்டோம்" என ஏங்கினான் பழனி. நம்முடைய உழைப்பின் பயனை அனுபவிப்பதும் உண்டு களிப்பதும் யார்? கரைமேல் நின்று கொண்டிருக்கும் பண்ணையார் தானே? எனத் தோன்றியது அவனுக்கு.

குடும்பத்தில் அண்ணன் தம்பிகளுக்குள் அபிப்ராய பேதம் முற்றவே பாகப்பிரிவினை செய்யவேண்டுமென்று பழனி அண்ணனைப் பலவந்தம் செய்தான்.

இவ்வளவு இன்னல்கள் இழைத்த கயவனுக்கு உதவி செய்யவேண்டும் என்று என் காலடியில் வந்து விழுந்தான் மாணிக்கம். கிராமத்தார் எல்லோரும் பஞ்சாயத்து கூடி நல்நடத்தை ஜாமீன் எழுதி வைத்து பழனியைச் சிறையினின்றும் மீட்டு வந்தோம். என்னிடம் கடனாக வாங்கிய ஆயிரம்ரூபாயையும் இதுவிஷயமாகச் செலவு செய்து தம்பியைக் காப்பாற்றினான்.

நாயினும் கேடுகெட்ட அந்நன்றியறிதலற்ற பழனி சில நாட்களில் தீயவர் சிநேகத்தில் அகப்பட்டுக் கொண்டு தினந்தோறும் கிராமத்திலிருந்து டவுனுக்குப் போக ஆரம்பித்தான்.

வெகு மாதங்களாக வேலை தேடி அலைந்து ஒரு பழைய லாரி வாங்கினான். அதற்கு ஒரு ட்ரைவரையும் கிளீனரையும் அமர்த்தினான். அப்போது அவன் பட்ட கஷ்டங்களுக்கு ஒரு அளவே இல்லை. ஒருவேளை சாப்பாட்டிற்குக் கூட வருமானம் போதவில்லை. எல்லாம் சம்பளத்திலும் ரிப்பேரிலும் செலவழிந்தது. வசை மொழியும் அவமரியாதையும் கிடைத்தது. மின்னல் வேகத்தில் அவன் மனதில் ஆனந்த மூட்டும் மேக்குடி கிராம வாழ்க்கையின் இன்பக் காட்சிகள் தோன்றி அவனை சித்திரவதைக் குள்ளாக்கின. பசுமை தரும் சோலைகளும் நெல் வயலும் கரும்பும் வாழையும் நிறைந்த கிராமத்தில் அவன் திருப்திகரமான வாழ்வு நடத்த வந்தான். இப்போதுதான் கிராம வாழ்வின் உண்மை உயர்வையும், நகர வாழ்க்கையின் வெளித் தோற்றத்தையும் புரிந்துகொண்டான். தன் வாழ்நாள் முழுதும் இப்படி அடிமை வாழ்வே நடத்தும்படி ஆகிவிடுமோ என எண்ணி வருந்தினான்.

மாணிக்கம் உண்மையில் மாணிக்கமேதான். உழவர்களை உய்விக்கும் பொருட்டு உயிரையும் விடத் தயாராக இருந்தான். கூட்டுறவு முறை சாகுபடியை முதல் முதலில் பரிக்ஷார்த்தமாக நடத்தி அதில் வெற்றியும் கண்டான். விவசாயத்தில் விஞ்ஞான முறைகளையும் புகுத்தி விளைச்சலை அதிகரிக்கச்செய்தான். அவன் ஜப்பானிய முறையில் சாகுபடி செய்து 12000 பவுண்டு தான்யம் அறுவடை செய்தது, விவசாயிகளின் சரித்திரத்தில் பொன்னேடுகளில் பொறிக்கப்பட வேண்டிய விஷயம்.

அன்று மாணிக்கம் தன் வீட்டில் நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்தான். அப்போது பழனியை இருவர் தூக்கிக் கொண்டுவந்து பெஞ்சின் மீது போட்டனர். குடித்துவிட்டு லாரியை ஓட்டி வந்த பழனி மரத்தின் மீது மோதிக்கொண்டு விழுந்ததில் மண்டையில் பலத்த காயம் ஏற்பட்டு இரத்தம் வெள்ளம் எனப் பாய்ந்தது. அதைக்கண்ட மாணிக்கம் பதறிப் போனான். அன்றே சென்னைக்கு அவனை எடுத்துச் சென்றனர். இரண்டு மாதங்களுக்கு மேலாக சிகிச்சை நடைபெற்றது.

காயம் நன்றாக ஆறியவுடன் தலைக்கட்டு அவிழ்க்கப்பட்டது. பழனிக்குப் புத்தி வந்தது. கண்ணீரால் அண்ணன் கால்களைக் கழுவினான். "இப்போதுதான் அண்ணா உழவுத் தொழிலின் பெருமையை முழுதும் உணர்ந்தேன்" என்று கண்ணீர் வடித்து அவன் அண்ணனிடம் அழுத காட்சி ஒரு கதாசிரியனுக்கோ, கவிஞனுக்கோ அல்லது சைத்திரீகனுக்கோ நல்ல கலை விருந்தாகும். இருவர் உடலிலும் சகோதர பாசம், இரத்தபாசம் ஊறியது. ஒருவரை ஒருவர் மார்புறத் தழுவினர். சகோதரர் இருவரும் கூடினர். கூட்டுமுறை விவசாயமும் ஆரம்பிக்கப்பட்டது. டவுனுக்குப்போய் வேலை செய்து சம்பாதிக்கலாம் என்று நப்பாசை கொண்டிருந்த கிராமத்து மக்கள் வேறு சிலரும் பழனியின் பாடத்தைப் பார்த்து உழவுத் தொழிலின் பெருமையை அறிந்துகொண்டனர். அவ்வருடம் நடைபெற்ற விவசாயப் போட்டியில் 'உழவு மாணிக்கம்" என்ற பட்டம் சர்க்காரால் வழங்கப்பட்டது.

வானம் பார்த்த பூமியில் வான் மழை கண்ட பயிரைப் போல எல்லோர் மனமும் களி வெறி கொண்டது; ஆனந்த நடமிட்டது; இன்பத்தால் எக்களித்தது.

மாணிக்கம் என்ற பெயருக்கு "உழவு மாணிக்கம்" என்ற பட்டப்பெயர் எவ்வளவு பொருத்தம் பார்த்தீர்களா!

"வாழ்க உழவு மாணிக்கம்!"



# சிறை காக்கும் காப்பு

தேவிகா

★

"என்ன லீலா, நீயாக சிரித்துக் கொள்கிருய்?" என்று தன் அறைத் தோழியை வினவினுள் உமா.

"உமா, இன்று காலேஜில் ஒரு வேடிக்கை. அந்த மனேகர் இல்லை. எப்போது பார்த்தாலும் பெரிய பெரிய இலக்கிய கர்த்தாக்களின் நூல்களையெல்லாம் கையிலே வைத்துக்கொண்டு. எல்லாம் சுத்த ஹம்பக். உண்மையில் அதிலே ஒருவரி கூட அவன் படித்திருக்கமாட்டான். இன்றும் அப்படித்தான். "பாரடைஸ் லாஸ்ட்" என்ற புத்தகத்தை வைத்துக் கொண்டிருந்தான். அதிலே ஒரு கேள்வியைக் கேட்டேன் பார். ஒன்றுமே புரியவில்லை. திரு திரு வென்று விழிக்க ஆரம்பித்துவிட்டான். தான் பெரிய மேதாவி என்று அவனுக்கு எண்ணம். சரியானபடி இன்று மட்டம் தட்டிவிட்டேன்."

"சே, என்ன லீலா இது. அவன் படிக்கிருன், படிக்காமற் போகிருன். உனக்கு ஏன் வீண் வம்பு. நாம் படிக்க வந்திருக்கிருேம். பிறர் விஷயத்தில் நாம் ஏன் அனுவசியமாகத் தலையிடவேண்டும்?"

"நீ சுத்த பயந்தாங்கொள்ளி உமா. நான் கேள்வி கேட்டதில் என்ன தப்பு? அவன் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தால்நானு பொறுப்பு? சரி, வா. எனக்கு சில சாமான்கள் தேவைப்படுகிறது. ஷாப்பிங் செல்லலாம்" என்ருள் லீலா.

அவள் எப்போதுமே இப்படித்தான். மிகவும் துடுக்குக்காரி. வித விதமாகக் கவர்ச்சியாக உடை அணிவாள். சக மாணவர்களிடம் சகஜமாகப் பழகுவாள். பிடிக்காதவர்கள் என்ருல் அஞ்சாமல் எதையாவது கூறி மானத்தை வாங்கிவிடுவாள். அவள் தோழி உமாவோ, இதற்கு நேர் எதிர். மிகவும் அடக்கமான சுபாவம். பெண்களிடம் கூட அனுவசியப் பேச்சு வைத்துக் கொள்ளமாட்டாள். அவ்வப்போது தன் தோழியைக் கண்டிப்பாள். அதையெல்லாம் லீலா லட்சியம் செய்யமாட்டாள்.

வழியில் ஒரு வாலிபன் இவர்களையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தான். "என்ன மிஸ்டர், விழிகள் தெறித்து விழப்போகிறது ஜாக்கிரதை." என்று கூறிவிட்டு மேலே நடந்தாள் லீலா. அன்று அவளுடன் கடைக்குப் போய்விட்டு வருவதற்குள் உமாவிற்குப் போதும் போதுமென்ருகிவிட்டது. அறைக்குத் திரும்பியதும் 'உஸ் அப்பாடா' என்று கட்டிலின் மேல் விழுந்தாள் உமா. "அம்மா, தாயே. இனிமேல் நான் கடைக்கு உன்னேடு வரமாட்டேன். இன்னிக்கு நான் பட்டபாடு என் ஜன்மத்துக்கும் போதும்." என்ற உமாவை நோக்கிக் கலகலவென சிரித்தாள் லீலா. "உமா, ஐயோ உமா, உன்னைப்போல் உம்மனு மூஞ்சியாக என்னுல் இருக்கமுடியாதம்மா." என்ருள்.

மறு நாள் மாலை. கல்லூரி காம்பவுண்டிற்குள்ளேயே அகதா கிறிஸ்டியின் துப்பறியும் நாவலில் ஆழ்ந்திருந்தாள் லீலா. புதர் போல் அடர்ந்த செடியின் பின்புறம் அமர்ந்து நாவலை ரஸித்துப் படித்துக் கொண்டிருந்த அவள் செவிகளில் யாரோ இருவர் பேசிக்கொள்வது விழுந்தது. உற்று கவனித்தாள்.

"டேய், கறுப்பு திராட்சைப் போன்ற அவள் விழிகளைச் சுழற்றி சுழற்றிப் பேசுகிற அழகே போதும்டா. சீமைத்தக்காளி போல் என்ன செழுமை, என்ன செழுமை."

"யாரைச் சொல்கிருய். இரண்டு பெண்கள் இணைந்தே இருக்கிருர்களே, உமா, லீலா என்று. அதிலே யாரைப்பற்றிக் கூறுகிருய்?"

"டேய், இன்னெரு முறை கூருதே உமாவைப் பற்றி. அவளைப்பற்றி பேசுவதற்கே நடுக்கமாக இருக்கிறது. நான் சொல்வது லீலாவைப்பற்றி. மிகவும் ஜாலியான ஆசாமி. இன்று அவளை சினிமாவிற்குச் செல்ல அழைக்கப் போகின்றேன். முடிந்தால் அப்படியே பீச்சுக்கும்......"

"அடே. வெர்ரிகுட் மனேகர். மானுக்கு வலை விரிக்கிருய் என்று சொல். நீ அவளைக் காதலிக்கிருயா என்ன?"

"சே, காதலாவது ஒன்ருவது. இப்படிப்பட்ட பெண்களைக் காதலித்து மணம் செய்து கொள்ள முடியுமா என்ன? சும்மா வெறும் பொழுது போக்கு..."

"மிஸ்டர், மிகவும் நன்ருக இருக்கிறது பேச்சு. உன்னுடைய பொழுது போக்கிற்கு விளையாட்டுக் கருவியாக என்னைப் பயன்படுத்திக் கொள்ளலாம்

போன் நெ. { கடை : 682
வீடு : 584

# K. R. வரதராஜன் & பிரதர்ஸ்,

கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள்,
7, பஞ்சவர்ணசுவாமி கோவில் தெரு,
**உறையூர் P. O., திருச்சிராப்பள்ளி-3.**

எங்களிடம்
பிரசித்திபெற்ற உறையூர் 100 நெ. சேலைகள் பலவித பார்டர்களிலும் பல கலர்களிலும் உத்திரவாதமுள்ள சாயத்துடன் 6, 7, 8, 9, 10 கெஜங்களிலும் தயாரிக்கப்படுகிறது.

★

சரியான அகலம் நீளத்திற்கு பெயர்பெற்றவை.

எங்கள் விசேஷ தயாரிப்புகள்
**நூல், பம்பர்க் & ரயான் சேலைகள்.**

என்று பார்த்தாயா? நான் ஒரு தமிழ்ப் பெண். இவ்வளவு கேவலமாகப் பேசியதற்கு உன்னைப் பிரின்சிபாலிடம் காட்டிக் கொடுத்து டிஸ்மிஸ் செய்துவிடச் சொல்லலாம். ஆனால் அதன் பிறகு உன் வாழ்க்கையே பாழாகிவிடும். போ. இனியாவது இதுபோல் நடந்து கொள்ளாதே.'' என்று காளியைப் போல் எதிரில் வந்து நின்ற லீலாவைக் கண்டதும் இருவரும் ஓட்டம் பிடித்தனர்.

உடலும் உள்ளமும் சோர தன் அறைக்கு வந்த லீலா தலையணையில் முகம் பதித்து விம்மி விம்மி அழலானாள்.

''லீலா, லீலா! என்னம்மா இது? ஏன் அழுகிறாய்?'' என்று பரிவுடன் தன்னை வந்து உமா எழுப்பியதும்தான் சுய நினைவடைந்தாள்.

''உமா, உமா, என்னை மன்னித்து விடு. என் போக்கைக் கண்டித்து நீ பேசும் போதெல்லாம் அதை அசட்டை செய்து உன்னையும் கேலி செய்ததற்கு இன்று சரியானபடி பாடம் கற்றுக்கொண்டேன். என்னைப்பற்றி மாணவர்களிடம் எத்தகைய அபிப்பிராயம் நிலவுகிறது என்பதை இன்று கேட்க நேர்ந்தது. என் நெஞ்சே வெடித்துவிடும்போல் இருக்கிறது உமா.'' என்று தோழியின் கரங்களைப் பிடித்துக்கொண்டு விம்மியவள் அன்று நடந்த நிகழ்ச்சியை விவரித்துக் கூறினாள்.

''அழாதே லீலா. இளைஞர்கள் அதுவும் கல்லூரி மாணவர்கள் சலன சித்தம் படைத்தவர்களாகத்தான் இருப்பார்கள். வாழ்க்கையே ஒரு விளையாட்டுதான். நாம்தான் அவர்களிடம் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும். இல்லாவிட்டால் அவமானப்பட வேண்டியதுதான். இதைக் கனவு போல் மறந்து விடு. இனியாவது ஜாக்கிரதையாக இரு.'' என்று அவளைத் தேற்றினாள் உமா.

லீலா மறுநாள் முதல் உமாவைப் போல் அடக்கமாக மாறிவிட்டதைக் காணக் கல்லூரியே ஆச்சரியப்பட்டது. அதன் ரகசியத்தை மனோகரும் அவன நண்பனும் மட்டுமே அறிவர்.



# "கோ(பா)லன்"

★

எம். எஸ். கமலா

இரவு ஒரு மணி, மங்கிய நிலவு. அடர்த்தியாய் வளர்ந்திருக்கும் மரங்களுக்கிடையே நடந்துகொண்டிருக்கிறான் கோலன். முழங்காலுககு மேல் எடுத்துக் கட்டிய முரட்டு வேட்டி. மார்புடன் ஒட்டிக்கொண்டிருக்கும் அழுக்கேறிய பனியன். வலது விலாவிற்குக் கீழ் இடையில் சொருகியிருக்கும் கத்தி. புழுதி படிந்து பண்பாடற்று பறக்கும் செம்பட்டைக் கூந்தல். உன்னிப்பான பார்வை. உறுதியான நடை. தைரியமாய் நிமிர்ந்து நடப்பவன்.

நடந்துகொண்டிருக்கும் கோலனுக்கு நடு நடுவே ஏப்பம் வந்துகொண்டிருந்தது. அச்சமயத்தில் புளிப்பாய் ஓக்காளமும் வந்தது. ஒரே ஒரு குடுவை நாட்டுச் சாராயம் குடித்திருந்தான். உடலில் தெம்பும் ஹுஷாரும் இருக்கவேண்டுமென்று. கல்வியறிவில்லாவிடினும் எதையும் சிந்தித்து சீர்தூக்கிப்பார்த்து, பலாபலன்களின் முடிவை ஆராய்ந்தறிந்து, தன்னுள் திட்டம் வகுத்துக்கொண்டுதான் தன் தொழிலிலிறங்குவான். அது அவனின் இயற்கை குணம். அவன் கூட்டாளிகளுக்கு அவனமேல் அபார நம்பிக்கை. கண்ணிற்ககப்படா கடவுளின் மேலிருக்கும் நம்பிக்கைக்கும் மேற்பட்டதெனலாம்.

வீரனும் இருளனும் கோலனுக்கு இடும் பணியில் கவலையற்று இருப்பதுமன்றி நம்பிக்கையுடனுமிருப்பார்கள். அவர்களில்லாவிட்டாலும் கோலன் வேலையை சுலபமாய் முடித்துக்கொண்டு வந்துவிடுகிறான். அவன் நிதானத்தை இழக்கமாட்டான். அவர்களிருவருக்கும் வெறும் ஆசை ஒன்றுதானே ஒழிய நிதானமோ, காரியத் திறமையோ கிடையாது.

கோலன் நடந்துகொண்டிருக்கிறான். மங்கிய நிலவில் இருள் கோலங்கள் அவனை கோலங்காட்டிக் கொண்டிருந்தன. அவன் செவியில் மாத்திரம் இருளனின் குரல் "கோலா! இரவு இரண்டு மணிக்குமுன் அவன் வீட்டுக்கு வரமாட்டான், கிளப்பில் அதிக விலையுள்ள மருந்தை குடிச்சுகிட்டே சீட்டாடிக்கொண்டிருப்பான். பணமெல்லாம் ஆகிவிட்டால் வெறும் கையை ஜோபியில் திணித்துக்கொண்டு தந்தானப் பாட்டும் பாடிகிட்டே வருவான். அந்நேரம்வரை எந்த பொம்புள்ளைதான் நெதமும் காத்திருக்கும்? அது சமையல் பண்ற அறைக்கு பக்கத்து அறையில் படுத்துக்கிட்டு தூங்கும். நீ புழக்கடை பக்கமிருந்துதான் போகவேண்டும். புழக்கடை மிகப் பெரியது. அங்கு செடியும் கொடியும் புதருமாய் இருக்கும். அங்கே நீ போனால் யார் கண்ணிலும் படமாட்டாய்' சமையல் அறை சன்னல், மழைக்கும் வெயிலுக்கும் காஞ்சி இரும்புக் கம்பிகள் எல்லாம் தளர்ந்து இருக்கிறது. சாமர்த்தியமாய் வேலை செஞ்சே, காலஞ்சு கம்பிகளை பிடுங்கி விடலாம். அப்புரம் சொல்லவேண்டாம். உன் வேலையை முடிச்சிகிட்டு மாந்தோப்புக்கு வந்துசேரு."

அவன் நிமிர்ந்துபார்த்தான். ஜன்னல் கதவுகள் திறந்திருந்தன. நெற்றியில் முத்து முத்தாய் கஷ்டத்தின் அறிகுறிகள் பளிங்கு மணிபோல் மின்னின. இடையிலிருக்கும் கத்தியை ஒரு முறை தடவிவிட்டுக் கொண்டான். அவன் மனம் அவனுடன் பேசியது.

"கோலா! உன் திட்டத்தின்படி சந்து பொந்துகள் வழியாய் வந்து சேர்ந்தே. சீக்கிரம் சன்னல் கம்பிகளைப் பிடுங்கி எறிந்து சமையல் அறையில் குதித்து ஏதாவது சந்தடிச் செய். அவள் வந்து கதவைத் திறப்பாள். கத்தியைக் காட்டி பயமுறுத்தி, இருளன் சொன்ன பொற்தாவடத்தைப் பறித்துக்கொள்; அவள் திகைப்பிலிருந்து மீண்டு கூவுவதற்குள் நீ இருளில் மறைந்துவிடு."

ஊருக்கு வெளியிலிருந்த அந்தத் தெருவில் வெகு வீடுகள் தூக்கத்திலாழ்ந்து கிடந்தன. சில வீடுகளிலிருந்து மின் விளக்குகளின் ஒளி சன்னல்கள் வழியாய் சாலையைப் பிளந்துகெண்டிருந்தன. அந்த நள்ளிரவில் கோலன் செல்ல நினைத்த வீடு அவனுக்காகவே போலிருந்தது.

மங்கிய ஒளியில் அந்த வீடு முடங்கிக் கிடக்கும் ஆமையைப் போலிருந்தது. இருளன் சொன்னபடி வீட்டின் பின்புரம்வந்தான். நெடியமரங்கள். தென்னை, மா, பலா, அதைத் தவிர ஏதேதோ, சின்ன சின்ன செடிகள், சமயலறைக்கருகில் கூட்டம் கூட்டமாய் வாழை மரங்கள். மெல்ல சன்னற் கம்பிகளைப் பிடித்து அசைத்தான். உள்ளேயிருந்து பேச்சுக் குரல் கேட்டது. அவன் திகைத்து நின்றான். அவன் திட்டங்கள் அடியுடன் தரைமட்டமாகியது போல தோன்றியது. உள்ளேயிருந்து சீற்றத்துடன் பேசுவது தெரிந்தது. அவனுக்கு மகிழ்ச்சிதாங்கவில்லை, உள்ளே வந்திருப்பவர்கள் வெளியில் சென்றால், தன் வழியில் யாரும் குறுக்கிடமாட்டார்கள் என்று தோன்றியது. சற்றே தயங்கி நின்றான்.

குரலில் பயம், பேச்சில் வேதனை மிளிர, ஒரு பெண் குரல். கோலனின் நரம்புகளில் சூடேறின. மோப்பம் பிடிக்கும் நாயைப்போல சன்னலருகில்போய் இமைப்பொழுது சன்னல் கம்பிகளை உற்றுப் பார்த்தான். உடனே நான்கு கம்பிகளை, உலர்ந்த மரக்கிளைகளை அனுயாசமாய் உடைத்தெறிவதுபோல் பிய்த்தெறிந்தான். ஒரே எட்டில் சன்னல் வழியாய் சமையலறையில் குதித்தான். அடுத்த அறையிலிருந்து பேச்சுகள் பொரி பறந்தன.

"வேண்டாம். நான் சொல்வதைக் கேளுங்கள்." பெண் குரல்.

"குடுக்கிறயா ? இல்லையா?" ஆண்குரல்.

"உனக்கு அத்தனை நெஞ்சழுத்தமா? கொடுத்துத் தானாக வேண்டும். இல்லையா உன்னை கொன்னு..."

"என்னைக் கொன்னாலும் கொடுக்கமாட்டேன். சூதாடுவதில் இருக்கும் சுகம் குடித்தனத்தில் இல்லை. அழகழகாய் பொருள்கள் வாங்கி ஆனந்தமாய் வாழலாம் என்ற ஆசையில்லை. பெரியவர்கள் சேர்த்து வைத்த பொருள்களை கற்பூரமாய் கரைத்தாயிற்று."

"அட சீ! அதிகப்பிரசங்கியாய் பேசாதே! என் சந்தோஷம்தான் உன்னுடையது. நான் எதை விரும்புகிறேனே, அதை நீ செய்யவேண்டும். பாரத நாட்டு பதிவிரதையின் பண்பு அதுதான்."

"உங்கள் செல்வத்தையெல்லாம் இழந்தீர்கள். நான் ஒன்றும் சொல்லவில்லை. என் பிறந்தகத்தார் ஸ்ரீதனமாய் கொடுத்த நிலத்தையும் விற்றீர்கள், நான் அதில் குறுக்கிடவில்லை. ஆனால்......ஆனால்......நாம் அழிவதற்கு முன் அதோ தொட்டிலில் படுத்திருக்கிறானே உலகை சரியாய் அறியாத ஜீவன், அவனை நடுத்தெரு நாராயணனுக்க விரும்பாது தான் பெட்டியிலிருக்கும் நகைகளை உடலில் சுமக்கிறேன். உள்ளத்தில் வேதனை. உயிரின்மேல் வெறுப்பு மிருந்தாலும் அந்த சிறு துளிரின்மேல் என்னையும் அறியாமல் அதீதமான பாசம் அடித்துக் கொள்கிறது. நாம் சொத்தையும் சுகத்தையும் இழந்துவிட்டாலும் உலகில் அறிவுவளரும் வரையாவது அவன் நடுத்தெரு நாராயணனுகக் கூடாதல்லவா? வேண்டாம், அந்த பாழும் சூதாட்டம். வீட்டில் படுத்துக் கொள்ளுங்கள். சமைத்து வைத்த பண்டங்கள் ஆறி அவுலாய் போகிறது. நான் சொல்வதைக் கேளுங்கள்" என்று அழுதுகொண்டே திணறித் திணறிச் சொன்னாள்.

"என் தேவைக்கில்லாத நகை உனக்கெதற்கடி கழுதை. நல்லதனமாய் கேட்டால் நாலு முழம் லெக்சர் அடிக்கிறயா? என்னைவிட நகையும் அந்த நசுக்கானும் பெரிதாகிவிட்டதா? அவன் கழுத்தை முறித்து எறிந்து, உன் கழுத்திலிருக்கும் அதைப் பறித்து சென்றால்தான் உன் இந்த வாய் அடங்கும்" என்று இரண்டடி முன் வைத்தான். சமையலறையில் நின்று இப் பேச்சுகளைக் கேட்ட கோலன் உடல் பதறியது. கை இடையிலிருந்த கத்தியை உருவியது.

"கடைசீ முறையாய் கேட்கிறேன். கொடுக்கிறயா? இல்லையா?

"மாட்டேன். மா....ட்...டே....ன்! இது என் பிறந்தகத்தார் போட்டது. இது என்னுடையது. மறைவில் நின்ற கோலனின் மெய் சிலிர்த்தது. அவள் குரல் இனிமையாய் பரிதாபத்திற்குரியதாயிருந்தது. அவள் கணவனின் மேல் அவனுக்குக் கோபம் வந்தது.

"இது உன்னுடையதா? என்னடி பிதற்றுகிறாய்? இத்தனை நாள் உண்டது யார் சொத்து? என் பணமல்லமா ?"

"ஏன் இப்படி அநியாயம் பேசுகிறீர்கள்? நான் மாத்திரம் உங்கள் நலனுக்காக பாடுபடவில்லையா? இந்த சங்கிலிதான் இனி நமக்கு ஆபத்திற்கு உதவுவது. நீங்கள் குடிக்கிறீர்கள், சூதாடுகிறீர்கள். உங்களுக்கு நன்மை, தீமை, மனைவி, மைந்தன் என்ற அறிவு மழுங்கிவிட்டது. இந்த நரகத்தில் நான் நாசமாக வேண்டியதுதானு? உங்கள் காலைப் பிடித்து வேண்டுகிறேன். நான் சொல்வதை கேளுங்கள்."

பளீரென்ற ஓசை. அதைத் தொடர்ந்து அந்த இனிய குரலிலிருந்து சோக ஒலி, தழதழத்த குரலில் வேதனை பீறிட்டது. கோலனின் உள்ளம் துடித்தது. அடியுங்கள். கொல்லுங்கள். என் நகையை மாத்திரம் கொடுக்க மாட்டேன்."

"கொடுக்க மாட்டாயா? பிசினாரிப் பிணமே!" என்று மறுபடியும் அடித்தான். அவள் அடியைப் பொறுக்காது வீறிட்டழுதாள். இருவரும் சச்சரவு செய்வது கேட்டது.

"என்னை விடுங்கள், என்னை விடுங்கள். ஐயோ அம்மா!" கோலனின் கண்கள் சிவந்தன. அவன் தன் வலது கையை இறுக மடக்கி பிடித்துக்கொண்டான்.

"உன் கழுத்தை நெறித்து எடுத்துச் செல்வேன். என்னடி செய்வாய்?"

"எதற்காக எடுத்துப்போவது? சூதாட்டத்தில் தோற்கவா?" அவள் விக்கி விக்கி அழுதபடியே சொல்லிக்கொண்டே போனாள். "குழந்தைக்கு இருமல் மருந்து வாங்கிவந்து கொடுத்தீர்களா? ஒரு நல்ல புடவை உண்டா? கட்டியவள் செத்தாளா? இருக்கிறாளா? என்ற எண்ணம் கிடையாது. இனி தெருத்தெருவாய் பிச்சை யெடுத்துத்தான் பிழைக்க வேண்டும்."

"இந்த விரலத்தனை பெரிய மனிதனுக்காக எனக்கு கொடுக்க மாட்டாயா? இரு, இவனையே ஒழித்து விடுகிறேன்."

"ஐயோ! அவனை ஒன்றும் செய்யாதீர்கள்" என்று அலறும்போது குழந்தை வீறிட்டலறும் ஒலியும் கோலனை பிடித்து உலுக்கியது அவனால் பொறுமையுடன் நிற்க முடியவில்லை. அவன் குழந்தையை கழுத்தை நெறித்து கொல்வது போல் உருவகம் தோன்றியது. தன் வலிவை எல்லாம் திரட்டிக்கொண்டு கதவை ஓர் உதை உதைத்தான். கதவு திறந்து கொண்டது. அவள் பிள்ளையை மார்புடன் அணைத்துக் கொண்டு சுவற்றின் மூலையில் பதுங்கி மார்பு விம்மி விம்மித் தாழ கண்களில் பயம் பீறிட அவனை பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் வாய் மாத்திரம் "குழந்தையை ஒன்றும் செய்யாதீர்கள்" என்று தன்மேல் பாயும் கணவனை வேண்டிக் கேட்டுக்கொண்டிருந்தது. அவன் முரட்டுத்தனமாய் அவள் கழுத்திலிருந்த சங்கிலியை பிடித்துக்கொண்டு திரும்பினான், எதிரில் முரட்டு கோலன்.

"யாரடா நீ?" என்றான்.

கோலன் வாயால் பதில் சொல்லாமல் அவன் கன்னத்தில் தன் பலம் கொண்ட மட்டும் பளீரென்று

# கைத்தறியை ஆதரியுங்கள்

பிரசித்தி பெற்ற உறையூர் 100 நெ. சேலைகள் பல கலர்களிலும்
பலவிதமான பேட்டுகளில் தயாரிக்கப்படும்.

## 6, 7, 8, 9 கெஜங்களிலும்

சரியான அகலம் நீளத்தில் எங்கள் தயாரிப்புகள் பேர் பெற்றவை.

## நூல் ரேயான் சேலைகள்

எங்கள் விசேஷத் தயாரிப்பு ★ தாங்கள் பரிந்து வாங்கக்கூடியவை.

வியாபாரிகளுக்கு முக்கியமாக எங்கள் விற்பனை.

# சுந்தர விலாஸ்

த. பெ. எண். 231, பஞ்சவர்ண ஸ்வாமி கோவில் தெரு,

உறையூர், [போன் : 454] திருச்சிராப்பள்ளி-3.


ஓர் அறை விட்டான். அவன் துடித்து சாயப்போனான். அவன் தலையைப் பிடித்து இழுத்து ஓர் குத்துவிட்டான் முதுகில். அவன் கீழே சாய்ந்தான்.

"பொம்பிள்ளையை அடிக்கிறயா? அதிலும் கழுத்து சங்கிலிக்காக பெத்த பிள்ளையை கொல்லப் பாக்கிறயா? திருட்டுக் களுதே. உனக்கு மானமில்லையா? சீ! வெக்க மில்லாத மனுசன். இங்கே கொடு அந்த சங்கிலியை, எழுந்திருந்தே, கொன்னுபுடுவேன்'' என்று அவன் கையிலிருந்த சங்கிலியை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டான். அவன் நடுங்கியபடி வீழ்ந்து கிடந்தான். அவள் செயலற்றவளாய் பல்லியைப்போல் சுவற்றில் ஒட்டிக்கொண்டாள்.

"படித்தவனுக்கு சூதாட்டமும் குடியும் தொழிலா? பொஞ்சாதி குழந்தையை காப்பாத்த வக்கில்லாதவன் அவங்க நகையை பிடிங்கிக்கிட்டுப் போறயா? திருட னுக்கும் கடையன்...'' என்று சுவற்றுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் அவளருகில் சென்று அவளை இமைப் பொழுது உற்றுப் பார்த்தான், இருபது வயதிற்கு மேலிருக்கும். அவள் கண்களில் வெறுப்பும், அச்சமும் சுழன்றன. கன்னங்கள் கண்ணீரில் நனைந்திருந்தன. இடையில் குழந்தை அலறியபடி இருந்தான்.

"இந்தாம்மா உன் சங்கிலி'' என்று அவளிடம் கொடுத்தான் கோலன். கீழே விழுந்திருந்தவன் எழ முயற்சித்தான். "இதென்னவென்று தெரியுமல்லவா?'' என்று இடையில் சொருகி இருந்த கத்தியை இழுத்து காட்டினான். அவன் அவனை வெட்டி விடுவான் போல் பார்த்தான். "அசைந்தாயோ தீர்ந்தது. உன் மூளை பறந்து போகும் பத்திரம்'' என்று உறுமினான் கோலன்.

அவன் நடுங்கினான், இந்தம்மாளின் மேல் கை வைத்ததாகவோ, வீட்டிலிருந்து ஏதாவது வெளியில் எடுத்துச்சென்றதாகவோ தெரிந்ததோ உன் உயிரை எடுத்துவிடுவேன்'' என்று அவன் முகத்தருகே கத்தி யை ஆட்டினான். அவன் நடுங்கியபடி தலையசைத் தான்.

கோலன் அவள் புறம் திரும்பி "பயப்படாதே! தைரியமாயிரும்மா!'' என்றான்.

அவள் பயந்தபடியே தலையசைத்தாள். அவன் கண்களில் நன்றி படர்ந்தது. அவன் கத்தியை இடையில் சொருகி நடக்கத்தொடங்கினான். அவள் ஹீனச்வரத்தில்,

"யார் நீங்கள்...?''

"நானு... நான்...'' கோலன் முகம் வெளிர்ந்தது. "என்னை 'கோ(பா)லன் என்பார்கள். தைரியமாயிருங் கள்'' என்று அந்தமங்கிய நிலவொளியில் தலைகுனிந்த படி பின்புறத் தோட்டத்தில் நடந்து சென்றான்.

---

# பதவி உயர்வு

★

வல்லிக்கண்ணன்

'சதானந்தா மெடிக்கல் ஸ்டோ'ரில் வேலை பார்த்துவந்த ராஜாராமனுக்கு அவ்வேலையில் அலுப்புத் தட்டி விட்டது.

'பேரு தான் சதானந்தா ஸ்டோர். உண்மையில் கடை அழுது வழிகிறது. வியாபாரம் பிரமாதமாக இல்லை. ஆனால் நமக்கோ வேலை அதிகம்' என்று அவன் முனங்கிக் கொண்டிருந்தான்.

'காலை எட்டரை மணியிலிருந்து ராத்திரி எட்டரை வரை உழைத்தாக வேண்டும். கணக்கு எழுதுவது, கடிதப் போக்குவரத்து, கடை தேடி வருகிற மருந்து ஏஜண்டுகளைச் சமாளிப்பது ; இன்னொரு ஆள் இருக்கிறானே, அவன் வெளியே எங்காவது போய் விடுகிற சமயத்தில் மருந்து விற்பனையை கவனித்துக் கொள்வது– இப்படி பலபட்டறை மணியம் தான் நம் வேலை. ஓய்வு நேரம், சாப்பாட்டு வேளை. டிபன் சமயம் எல்லாம் இருக்கின்றன. அதெல்லாம் சும்மா பேருக்குத் தான்' என்று அவன் புலம்புவது வழக்கம்.

'நான் இங்கே வேலையில் சேர்ந்து மூன்று வருஷம் ஆகிறது. சம்பள உயர்வு, போனஸ் கீனஸ் என்று ஒரு எழவும் கிடையாது. தொலையட்டும். ஒரு மாதம் ஒன்றரை மாதம் லீவு எடுத்துக்கொண்டு ஹாயாக ஊர் சுற்றப் போக ஏதாவது வழி கிடைக்குமா என்றால், ஊஹூங், அந்தப் பேச்சே கிடையாது மனுஷன் எதுக்காக ஐயா உழைக்கணும்?' இதுவும் அவனுடைய குறைபாட்டு ஒலிபரப்பின் பாணிகளில் ஒன்று தான்.

'ஆகையினாலே நான் முடிவு பண்ணிவிட்டேன்: இந்த வேலைக்கு ஒரு கும்பிடு போட்டு விடுவது என்று தான். இதிலென்ன பிரமோஷனா, பென்ஷனா–அதெல்லாம் பாழாகிவிடுமே என்று கவலைப்படுவதற்கு?' என்றும் சொல்லிவந்தான்.

இப்படி ராஜாராமன் சொல்லத்தொடங்கி ஏறக் குறைய ஒரு வருஷம் ஆகிறது. எனினும் அவன் அந்த அலுவலை விட்டுவிடவில்லை. கையில் இருக்கிற கொழுக்கட்டையை வீசி யெறிந்துவிட்டு, தடபுடல் கபேயின் கண்ணாடி அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இனிப்பு மிட்டாய்களைப் பார்த்துப் பார்த்து ஏங்குவது புத்திசாலித்தனம் ஆகாது என்ற எண்ணம் உடையவன் அவன். வேலை கிடைப்பதென்ன சுலபமாகவா இருக்கிறது இந்தக் காலத்திலே?' என்று பலரும் அவனிடமே அடிக்கடி சொல்லியிருக்கிறார்களே. அதற்காக அவன் புலம்புவதை விட்டுவிடவில்லை. புலப்பம் மனித உரிமை. ராஜாராமன் மட்டும் அதை ஏன் விட்டு விடவேண்டும்?

அன்றும் அவன் வழக்கம் போல், முதுகெலும்பு இல்லாதவன் மாதிரி, நாற்காலியில் சாய்ந்து கிடந்தான். அப்பொழுது பிற்பகல் மணி இரண்டு இருக்கும். கடையில் உள்ள மற்றொரு ஆள் எங்கோ வெளியே பணவசூலுக்காகப் போயிருந்தான். சாயங்காலம் தான் திரும்பி வருவான் முதலாளி ஐயா நாலு—நாலரை மணிக்கு வருவார். சாமான்கள் வாங்குவதற்கு என்று விசேஷமாக யாரும் அந்த நேரத்தில் வர மாட்டார்கள், நல்ல வெயில் வேளை, மண்டையைச் சுட்டுப் பொசுக்குவது போல் வெயில் காய்ந்து கொண்டிருந்ததனால், எல்லோரும் வீட்டுக்குள்ளேயே சோம்பிக் கிடக்க விரும்புவார்கள் 'உண்ட கிறக்கம்' வேறு உடலை அசத்தும். அவனுக்குக்கூட சுகமாகப் படுத்துத் தூங்கவேண்டும் போல்தான் இருந்தது. ஆனால், சம்பளத்துக்கு ஒரு இடத்திலே வேலைபார்க்கிற போது உடல் சௌகரியங்களைக் கவனிக்க முடியுமா?

இவ்விதம் மனசை எண்ணங்களில் மேய விட்டு விட்டு, கண்களை அரைவாசி மூடிக்கொண்டு கிடந்த ராஜாராமன் வியப்புறும்படி ஒரு காரியம் நடந்தது.

வெளியே வெயிலிலிருந்து யாரோ படிக்கட்டில் ஏறியதனால் அந்தக் கட்டிடத்தினுள் மந்தமான ஒளி வீச்சு பரவியது. கண்ணாடி பீரோவில் பளிச்சிட்ட வர்ண நிழல் உருவம் அவனை வாசல் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தது.

வாசல் படியில் வந்து நின்ற யுவதி ஒருத்தி அவன் பார்வையில் படவும், 'சரிதான். சோப்பு, பவுடர் அல்லது தலைவலி மாத்திரை என்று ஏதாவது வாங்க வந்திருப்பாள்' என்று நினைத்தான் அவன். உடனே பரபரப்படைந்து நிமிர்ந்து உட்கார்ந்தான்.

அவனது பரபரப்பையும் செயல் வேகத்தையும் கவனித்து நின்றவளின் கண்களில் குறும்புத்தனம் ஒளி சிந்தியது. இதழ்களில் புன்னகை லேசாகத் தோன்றி உடனே மறைந்துவிட்டது. அவள் தன்னையே பார்த்தபடி நிற்பதை விரும்பாத ராஜாராமன் 'என்ன? என்ன வேணும்?' என்று கேட்டான்.

'இங்கே வேறே யாரும் இல்லையா?' என்று கேட்டுக் கொண்டே அவள் உள்ளே அடி எடுத்து வைத்தாள்.

'இல்லையே... யாரைப் பார்க்கணும்?'

'யாரையும் பார்க்க வேண்டாம். சும்மாகேட்டேன்' என்று சொல்லிவிட்டு, அவள் அங்கு சுவர்களில் தொங்கிய காலண்டர் படங்களை ஒவ்வொன்றாகப் பார்க்கும் அலுவலில் ஈடுபட்டாள்.

'உங்களுக்கு என்ன வேண்டும்?' என்று விசாரித்தான் அவன்.

அவள் பதில் சொல்லாமல் காலண்டர்களையும் மருந்துகளின் விளம்பரத்திற்காக வைக்கப்பட்டிருந்த பட அட்டைகளையும் நிதானமாகப் பார்த்து ரசித்தாள். பிறகு அலமாரிகளில் கண்ணாடியின் பின்னே இருந்த மருந்து பாட்டில்களைப் பார்வையிட்டபடி அசைந்து நகர்ந்தாள்.

அவள் போக்கு அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. பொறுமையைச் சோதித்து எரிச்சல் தருவதாகவும் அமைந்தது. அவளது அழகும் அலங்காரமும் அசைவுகளும் கண்களுக்கு விருந்தாக விளங்கின. அவளுக்குப் பதினாறு அல்லது பதினேழு வயசு இருக்கலாம். 'பள்ளிக்கூடப் படிப்பை முடித்துவிட்டு, பொழுது போகாததனால் இப்படி சுற்றிக்கொண்டிருக்கிறாள் போலும்! அதற்கு இது என்ன எக்ஸிபிஷனா?' என்று முனங்கியது ராஜாம உள்ளம்.

'உங்களுக்குப் பொழுது போகவில்லை போலிருக்கு. அதற்கு பொருட்காட்சி பக்கம் போனால் சௌகரியமாக இருக்கும். மருந்துக் கடையிலே என்ன வேடிக்கை இருக்கும்?' என்று அவன் சொன்னான்.

கொஞ்சம் துணிச்சலாகத்தான் பேசி விட்டான். 'பின்னே என்ன? முதலாளி வந்தால் அவருக்கு நானல்லவா பதில் சொல்லவேண்டியிருக்கும்' என்று அவன் மனம் பேசியது.

அவள் தலையைத் திருப்பி அவனை நோக்கினாள். அவன் முகத்தில் என்ன கண்டாளோ? தானாகவே சிரித்துக்கொண்டு, முகம் திருப்பி, வேறொரு அலமாரி பக்கம் சென்றாள். ஒரு பெரிய பாட்டிலைக் காட்டி 'இது என்ன விலை?' என்றாள்.

அவன் அறிவித்தான்.

அவள் மற்றும் பல மருந்துப் புட்டிகளைச் சுட்டிக் காட்டி, ஒவ்வொன்றின் விலையைப் பற்றியும் விசாரிக்கவே, அவனுக்கு கோபம் வந்தது. 'நீங்க மருந்துவாங்க வந்ததாகத் தோணலே. ஏன் இந்த வீண் விசாரிப்பு எல்லாம்?' என்றான்.

அவள் மறுபடியும் அவன் முகம் நோக்கி முறுவலித்தாள். தான் மட்டுமே அறிந்துள்ள ரகசியத்தை எண்ணிச் சிரிக்கும் சிறுபெண் போல்தான் தோன்றினாள் அவளும்.

ஆனால் அவள் சிரிப்பு அவன் எரிச்சலை வளர்த்து விட்டது. 'நீங்கள் இங்கே வந்ததை விட, ஏதாவதொரு ஜவுளிக்கடைக்குப் போயிருக்கலாம். அங்கே உங்கள் இஷ்டம் போல் துணி வகைகளை எல்லாம் புரட்டிப் பார்த்து பொழுது போக்கிவிட்டு, எதையும் வாங்காமலே வெளியேறலாம்!' என்றான்.

அவள் கலகலவெச் சிரித்தாள். ஜலதரங்கத்தின் இனிய நாதம் போல் ஒலித்தது அது. 'உங்கள் தூக்கத்தை கெடுத்துவிட்டேனே என்ற கோபம் உங்களுக்கு. இல்லையா?' என்றாள். அவள் கண்களில் குறும்புத்தனம் அதிகமாக ஒளி வீசிக்கொண்டிருந்தது இப்போது.

அவனுக்கு ஆத்திரம் வந்தது. எவளோ ஒருத்தி கடையினுள் வந்து இப்படி எல்லாம் நடப்பது என்றால்? 'வெயிலில் போக விரும்பாதவர்களுக்கு இளைப்பாற ஏற்பட்ட மடம் இல்லையே இது?' என்று கடுகடுப்பாகச் சொன்னான் அவன்.

'உங்களைப் போல் உள்ளவங்க வேலை பார்க்கிற கடை சீக்கிரம் உருப்பட்டு விடும்! கடையிலே உட்கார்ந்து தூங்குவது, வருகிறவங்ககிட்டே வள் வள்னு எரிந்துவிழுகிறது. இப்படி இருந்தால் வியாபாரம் வளரவா செய்யும் என்று அவள் சொன்னாள்.

அவள் குரலில் கோபமும் இல்லை; குளுமையும் இல்லை. சாதாரண உண்மையை எடுத்துச் சொல்லும் சகஜத் தன்மைதான் ஒலித்தது அதில். அவனைப் பார்த்துவிட்டு, தானாகச் சிரித்துக்கொண்டே அவள் வெளியே நடந்தாள். அந்தப் பார்வையில் கடுமையுமில்லை; இனிமையும் இல்லை. ஆயினும் வேடிக்கை எதையோ கண்டு மகிழும் உள்ளொளி தோன்றி மறைந்தது போலிருந்தது.

'சனியன்! தரித்திரம்!' என்று முணுமுணுத்தான் ராஜாராமன். 'எல்லாம் நாகரிகம் படுத்துகிற பாடுதான். பள்ளிக்கூடத்தை எட்டிப்பார்த்துவிட்டு வந்தாலே, பெண்களுக்கு அகந்தையும் அதிகமாகி விடுகிறது. தான் என்கிற கர்வம்!' என்று அவன் மனம் ஏசிக்கொண்டிருந்தது.

வழக்கமான நேரத்திற்கு முதலாளி வந்தார். அவர் வந்த சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தப் பெண் திரும்பவும் வந்தாள்.

'இவள் ஏன் இப்பவும் வருகிறாள்?' என்று முனங்கினான் ராஜாராமன். மனதுக்குள் தான்.

முதலாளியோ முகம் மலர்ச்சியுற, 'வெயிலில் எங்கேயம்மா போயிருந்தே சாந்தா?' என்ற அன்பான விசாரிப்புடன் அவளை வரவேற்றார்.

'அட முதலாளிக்கு வேண்டிய பெண்ணா?' என்று அதிசயித்து நின்ற ராஜாராமனின் முகத்தில் ஒரு கணம் தேங்கியது அவள் பார்வை.

'ஒரு சிநேகிதியை பார்க்கப் போனேன். போகிற வழியில் நம்ம கடையையும் பார்த்து வைக்கலாமே என்று நினைத்தேன்...'

அவளுடைய குறுகுறுக்கும் கரிய விழிகள் ராஜாராமனை அளவிட்டன. அவன் முகத்தில் குழப்பம் படிந்தது. இவள் எல்லாவற்றையும் சொல்லிவிடுவாளோ என்ற அச்சம் ஏற்பட்டிருந்தது. அவள் மோகனப் புன்னகையோடு தன் பார்வையை மீட்டுக்கொண்டாள். 'இந்தக்கடையிலே வேறு ஆளே கிடையாதா அப்பா?' என்று விசாரித்தபடி அங்கே கிடந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்தாள்.

ராஜாராமன் திடுக்கிட்டான். அவன் நெஞ்சு 'திக்திக்'கென்று துடிக்கத் தொடங்கியது. ஒரு மணி நேரத்துக்கு முந்திதான் சாமர்த்தியமாக நடந்து கொண்டதாகநம்பியது உண்மையில் முட்டாள்தனமாக

அல்லவா முடிந்து விட்டது! இவள் முதலாளியின் மகள் என்று தெரிகிறதே. சரிதான். நாமாக வேலையை விட்டுவிடலாம் என்று வருஷக்கணக்கில் சொல்லிக் கொண்டிருந்தோமே. இப்பொழுது வேலை தானாகவே நம்மைவிட்டுப் போகப் போகிறது! — அவனுடைய மனம் வேகமாகத்தான் வேலை செய்தது.

'நம்ம ராஜாராமனைத் தவிர இன்னொரு ஆள் உண்டு. அவன் பணவசூலுக்காக வெளியே போயிருக்கிறான்' என்று முதலாளி சொன்னார்.

'இவர் தான் ராஜாராமனுக்கும்?' என்று கேட்டாள் குமரி. அவளது விஷமக் கண்கள் அவன் பக்கம் பாய்ந்து மீண்டன.

அவனைக் குத்தி இழுத்தது போல் பட்டது அந்தப் பார்வை. 'எலியோடு விளையாடும் பூனை மாதிரி, இவள் வேடிக்கைக் காட்டுகிறாள். இவளுக்கு இது நல்ல பொழுது போக்காக இருக்கிறது போல் தோணுது' என்று ராஜாராமன் நினைத்தான்.

சாந்தா என்ன நினைத்தாளோ, ஏது திட்டம் போட்டாளோ; அவன் எதிர்பார்த்தபடி அவனைப்பற்றி முதலாளியிடம் சொல்லவில்லை. அதையும் இதையும் பார்த்துவிட்டு, எதைப்பற்றியோ பேசிவிட்டு, சிறிது நேரத்திலேயே அவள் கிளம்பிப் போனாள். போகிற பொழுதும் அவள் பார்வை ராஜாராமனின் பார்வையை வம்புக்கு இழுத்தது. விஷமச் சிரிப்பு மட்டும் அவள் முகத்திலிருந்து அகலவே யில்லை.

அவள் போனபிறகு முதலாளி, தந்தையின் பெருமையோடு, தன் மகளைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார். 'சாந்தா இதுவரை அவள் ஆச்சி வீட்டிலிருந்து படித்துக்கொண்டிருந்தாள். எப்பவாவது இந்த ஊருக்கு வந்தாலும், நம்ம கடைக்கு வந்ததில்லை. அதனாலே நீ அவளைப் பார்த்திருக்க முடியாது' என்றும் சொல்லி வைத்தார்.

அப்படி பார்த்திருந்தால்தான் நான் புத்திகெட்டத்தனமாக அவளிடம் பேசியிருக்க மாட்டேனே என்று எண்ணிக் கொண்டான் ராஜாராமன். தன்னைப் பற்றி அவள் தந்தையிடம் 'ரிப்போர்ட்' செய்யவில்லை என்பதனால், நடந்ததை இனியும் சொல்லாமலே விட்டுவிடுவாள் என்று எவ்வாறு தீர்மானிப்பது? பிறகு அவள் தனியாகத் தன் தந்தையிடம் குறை கூறினாலும் கூறலாம். இவ்விதம் அவன் எண்ணினான். முடிவில், 'சொன்னால் சொல்லிவிட்டுப் போகிறாள்! அவர் என்ன நம்ம தலையையா சீவி விடுவார்? வேலைக்கு சீட்டுக் கிழிப்பார். அவ்வளவு தானே?' என்று தன் மனசைத் தானே தேற்றிக்கொண்டான்.

அவன் எண்ணியபடி எதுவும் நடக்கவில்லை. ஆனால் புதுமைகள் நிகழலாயின.

மறுநாள் முதலாளி அறிவித்தார்: 'சாந்தா கடையிலேயே இருந்து காரியங்களை கவனிக்க விரும்புகிறாள். அவளுக்கும் பொழுது போகவேண்டும் அல்லவா? பெரிய நகரங்களில் பெண்கள் பலரகமான அலுவல்களிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். மேல் நாடுகளில், கல்லூரியில் படிக்கிற பெண்கள்கூட ஓய்வு நேரத்தில் கடைகளில் அமர்ந்து வியாபாரத்தைக் கவனித்துக் கொள்கிறார்களாமே? சாந்தா என்னவெல்லாமோ சொல்கிறாள்!'

முதலாளி சதானந்தம் பிள்ளைக்குத் தன் மகள் மீது ஏகப்பட்ட பிரியமும் பெருமையும் இருந்தது என்பதை அவர் பேச்சு புலப்படுத்தியது. அவர் தனது செல்வ மகளின் விருப்பத்துக்கு மாறாக எதுவும் செய்யமாட்டார் என்றும் தோன்றியது.

'சரிதான். அவள் விஷயங்களைப் புரிந்துகொண்டதும், தூங்கி வழியும் இந்தச் சோம்பேறி மாடன் தேவையில்லை; நானே எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ள முடியும் என்று சொல்லிவிடத் திட்டமிட்டிருப்பாள்' என்று ராஜாராமன் நினைத்தான். அதனால் சாந்தா மீது அவனுக்கு வெறுப்புதான் ஏற்பட்டது.

சாந்தா, தந்தை இல்லாத வேளையில், அவனிடம் சொன்னாள்: 'நான் உங்களை கண்காணிக்க வந்திருப்பதாக நீங்கள் நினைக்க வேண்டியதில்லை. எனக்கு சும்மா இருப்பதே பிடிக்காது. பொழுது போகவேண்டும் அல்லவா? அதற்காகத்தான் இங்கு வேலை செய்ய வருகிறேன். புதிதாக வந்து சேருகிற ஒரு ஆளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியவற்றை எல்லாம் நீங்கள் தான் எனக்குக் கற்றுத் தர வேண்டும். முதலாளியின் மகள் ஆயிற்றே என்ற மரியாதை தயக்கம் எதுவும் காட்ட வேண்டாம்.'

அவள் சுலபமாகச் சொல்லிவிட்டாள். ஆனால், மீனைப் பிடிக்க விரும்புகிறவன் தூண்டிலில் ஆசையைத் தூண்டும்படியான பொருள் எதையாவது வைப்பது போல்தான் இதுவும் என்று அவன் கருதினான். அதனால், அவளுடைய விளையாட்டுப் பேச்சையும், சிரிப்பையும் அவனால் ரசிக்க முடியவில்லை; ஆதரிக்கவும் முடியவில்லை.

ஒரு நாள் அவன் டிபன் சாப்பிட்டுவிட்டுத் திரும்பியதும், அவள் எளிதாக நினைத்துச்சொன்ன ஒரு விஷயம் அவனுக்கு ஆத்திரம் ஊட்டியது. ஒரு மருந்தைக் கொடுப்பதற்குப் பதிலாக வேறொரு மருந்தை ஒரு ஆளுக்குக் கொடுத்துவிட்டதாக அவள் சொன்னாள். இரண்டுக்குமுள்ள விலை வித்தியாசத்தினால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை விட, அவள் கொடுத்து அனுப்பிய மருந்து விளைவிக்கக்கூடிய ஆபத்துதான் பயங்கரமாகப்பட்டது அவனுக்கு. அதற்காக அவளைக் கடிந்து கொண்டான.

சிரித்துக் கொண்டிருந்த சாந்தாவின் மலர்ந்த முகம் சடக்கென வாடிக் குவிந்தது. அவள் அழுது விடுவாளோ என்றுகூட அவன் எண்ணினான். அவள் உதடுகளைக் குதப்பிக்கொண்டு, மெதுவாகப் பேசினாள்: 'நான் விளையாட்டுக்கு...'

'மருந்து விஷயத்திலே விளையாட்டு என்ன, வேடிக்கை என்ன? எதுக்காக மருந்தை மாற்றிக் கொடுத்து வேடிக்கை பண்ணணும்?'

'இல்லை. நான் விளையாட்டுக்குச் சொன்னேன். சரியான மருந்துதான் கொடுத்தேன்' என்று அவள் தீனமாகச் சொன்னாள்.

ராஜாராமன் அவள் முகத்தையே பார்த்தான். விளையாட்டுப் பிள்ளையான அவளிடம் என்ன சொல்வது என்றே அவனுக்குப் புரியவில்லை, சிரிப்பதா அழுவதா என்றுகூடத் தோன்றவில்லை.

அவள் அப்புறம் ஒன்றும் பேசவில்லை. பிறகு சில தினங்கள் வரை சிரிக்கவுமில்லை, கேலி பேசவுமில்லை.

ராஜாராமனுக்குக் கூடப் பரிதாபமாக இருந்தது. ஏன் என்று அவன் மனதார வருந்திய தடவைகள் பலவாகும், தன் தந்தையிடம் சொல்லி அவள் இன்னும் அவனை வேலையை விட்டு விரட்டாமல் இருக்கிறாளே என்ற அதிசய உணர்வும் அவனுக்கு ஏற்பட்டுக்கொண்டிருந்தது.

நிச்சயம் தனக்கு வேலை அன்றோடு தீர்ந்தது என அவன் எண்ணவேண்டிய அவசியம் வேறொரு நாள் ஏற்பட்டது. அன்று அவன் அல்மாரி மேல் தட்டிலிருந்து ஒரு மருந்துப் புட்டியை எடுத்தான். அதைப் பெற்றுக்கொள்வதற்காக அருகே நின்ற சாந்தா வேகமாகக் கையை நீட்டினாள். அதனால் அவன் விரல்கள் தடுமாற, பாட்டில் கீழே விழுந்து உடைந்து, மருந்து பூராவும் நாசமாகி விட்டது, அம் மருந்தின் விலை எட்டு ரூபாய்தான். எனினும், தனது கவனக் குறைவுக்காகத் தன்னை முதலாளி வெகுவாகக் கடிந்து கொள்வார் என்று அவன் பயந்தான்.

சாந்தா 'ஐய்யய்யோ!' என்றாள். அந்த இடத்தைச் சுத்தப் படுத்தினாள். அவள் வேறெதுவும் பேசாமல் இருந்ததும் அவன் மனசுக்குச் சங்கடம் விளைவித்தது.

முதலாளி வந்ததும், தரையில் கறை பட்டிருந்த இடம்தான் அவர் கண்களில் முதலாகப் பட்டது. 'இங்கே என்ன சிந்தியது?' என்று கேட்டார்.

ராஜாராமன் எச்சிலைக் கூட்டி விழுங்கிக்கொண்டு 'வந்து...மருந்து பாட்டில் தவறி விழுந்து உடைந்து போச்சு' என்று ஆரம்பித்தான்.

அதற்குள் சாந்தா குறுக்கிட்டாள். 'அது என் தப்புதான் அப்பா. நான் பராக்குப் பார்த்துக்கொண்டு எடுத்தேன், சரியாகப் பிடிக்காததினாலே, பாட்டில் விழுந்து விட்டது' என்றாள்.

'அடாடா!' என்றார் சதானந்தம் பார்த்து எடுக்கனும் அம்மா, கண்ணாடி சீசா இல்லையா?' என்றார். பிறகு, 'உம் போகுது, கண்ணாடி காலிலே கையிலே குத்தி உனக்கு ரத்தம் கித்தம் வரலியே?' என்று பரிவோடு விசாரித்தார்,

ராஜாராமன் தனக்கு ஏற்பட்ட திகைப்பிலிருந்து மீள்வதற்குக் கொஞ்ச நேரம் பிடிக்கத்தான் செய்தது. அவளுக்குத் தன் நன்றியை எவ்விதம் தெரிவிப்பது என்று புரியாமல் திகைத்தான் அவன் அவனது பார்வை இயல்பாக அவள் முகத்தை நாடியது.

அவன் பார்வையை எதிரேற்ற அவள் விழிகளில் வர்ணிப்புக்கு எட்டாத அழகையும் ஒளியையும் காந்தக் கவர்ச்சியையும் ராஜாராமன் கண்டான். அவை மட்டும்தானா? பேச முடியாத பேச்சை எல்லாம் ரகசியமாய் எடுத்துச் சொல்லும் அதிசயத்தையும் அக்கண்கள் பெற்றிருந்தன. அவற்றை வியந்த வண்ணம் அவன் நின்றான.

மகிழ்வும் நாணமும் மிக, சாந்தா சிரித்துக் கொண்டே தலைகுனிந்தாள்,

அதன் பிறகு, கடையில் ராஜாராமனைத் தவிர வேறு யாரும் இருக்கமாட்டார்கள் என்று நிச்சயமாகத் தெரிந்து வைத்திருந்த வேளைகளில் மட்டுமே ஆஜராகும் வழக்கத்தை சாந்தா மேற்கொண்டாள். அவ்வாறு அவள் வருவதும், வீணாகச் சிரிப்பதும், அர்த்தமும் அவசியமும் இல்லாத பேச்சுகள் பேசிப் பொழுது போக்குவதும் அவனுக்குக் கசப்பு அளிக்கவில்லை. அவள் செய்யும் காரியங்கள் எல்லாம் மிகவும் இனியவையாகத்தான் தோன்றின அவனுக்கு.

மிகமிக இனியதான ஒரு காரியத்தையும் சாந்தாவே முயற்சி எடுத்து மங்களகரமாக முடித்துவைத்தாள். அவளுக்கும் அவனுக்கும் நிகழ்ந்த திருமணம்தான் அது. மகளின் சந்தோஷம்தான் முக்கியம் என்று கருதிய தந்தை அவள் அபிப்பிராயத்துக்குக் குறுக்கே நிற்கவில்லை.

முதலாளியிடம் வெறும் கணக்குப் பிள்ளையாக இருந்த ராஜாராமன் முதலாளியின் மருமகப்பிள்ளையாக உயரநேர்ந்தது அவன் வாழ்க்கையில் பெரிய முன்னேற்றம் தானே?

'எரிந்துவிழும் சோம்பேறியான எனக்கு இந்த உயர்வை அளிக்க உன் மனம் எப்படித்தான் ஒப்பியதோ, சாந்தா?' என்று அவன் ஒரு சமயம் அவளிடம் சொன்னான்.

'எல்லாம் காரியத்தோடுதான். உங்களை அதிகாரம் செய்து வேலை வாங்கும் உரிமை வேண்டாமா எனக்கு? அதற்குத்தான்' என்று கூறி, குறும்பாகச் சிரித்துத் தன் அகன்ற கரிய கண்களைக் குறுக்கிக் கொண்டே அவள் அவனைப் பார்த்தாள்.

'சரிதான், ராணியம்மா!' என்றான் அவன். 'உன் கண்கள் தான் முதலிலேயே என்னை அடிமையாக்கி விட்டனவே!' என்றும் சொன்னான்.

'அடிமையாக்கினவா? அருள் புரிந்தனவா?' என்று கேட்டாள் அவள்.

'ஏதோ ஒன்று, அல்லது இரண்டும்தான் என்றே வைத்துக்கொள்ளேன்!' என்று கூறி லேசாகச் சிரித்தான் ராஜாராமன்.

உவகை துள்ள 'களுக்'கெனச் சிரிப்பு உதிர்த்தாள் சாந்தா.

# சந்திப்பு

★

புஷ்பத்துறை சுப்பிரமணியம்

பட்டுவைப் பார்த்துவிட்டுப் போன பையன் 'பெண் பிடித்திருக்கிறது' என்கிற தகவல் கொடுத்தான். அந்த சந்தோஷச் செய்தி பெண் வீட்டிலே பரபரப்பையும் திருப்தியையும் தந்தது.

செய்தியைக் கேட்ட பட்டுவின் அக்கா தங்கத்தின் உள்ளம் உவகையால் தாவிக் குதித்தது. பின்னப்பட்டிருந்த பட்டுவின் பின்னலை அவிழ்த்து மறுபடியும் சரியாக வகிடு எடுத்து விறுவிறுப்புடன் வாரிப் பின்னினுள்; மலரை வைத்தாள். நெற்றியின் நடுவே சிவந்த குங்குமத்தைத் தீட்டினுள். கன்னத்தில் திருஷ்டிப் பொட்டு இட்டாள். புன்னகை குலுங்கும் பட்டுவின் முகத்தைத் தன் முகத்தோடு ஒட்ட வைத்துக்கொண்டு சகோதர பாவத்தைக் காட்டினுள் தங்கம். ஒரே வடிவம். ஒரே அமர்க்களம். ஆனுல் வேறு வேறு முகபாவம்!

உள்ளேயிருந்து பீறிட்டு வெளிவரும் அழகை அடக்க முயற்சிக்கும் புதிதாக மலர்ந்த செந்தாமரை போன்றது பட்டுவின் முகம். உள்ளே அழுகியிருந்தும் அதை வெளிக்காட்டாமல் அடக்கி மேலே சிரிப்பதுபோல தோன்றும் வெண் தாமரை போன்றது தங்கத்தின் முகம்.

தங்கம் பட்டுவுக்கு ஐந்து வருஷம் மூத்தவள். ஒரே அச்சில் எழுதப்பட்டவர்கள்போல ஒற்றுமை கொண்ட அந்த சகோதரிகளை வாழ்க்கையில் ஏதோ வேறுபடுத்துவது போலக் காணப்பட்டது...

மாஞ்சோலைகளும், தென்னந் தோப்புகளும் அடர்ந்த கிராமம் கூத்தூர். ஊரிலிருந்து ஆற்றுக்குச் செல்லும் பாதை அந்த அடர்ந்த தோப்புகளின் நடுவேதான்.

பட்டுவுக்குக் கல்யாணம் நிச்சயமானது பற்றிய அரட்டை அந்த ஆற்றின் படித்துறையிலே பலமாக அடிக்கப்படும் துணிகளின் சப்தத்தையும் மீறி எட்ட எதிரொலித்தது.

"வரன் எவ்விடம்?" என்று ஆவலோடும் அக்கரையோடும் கேட்டது ஒரு வயதான குரல். "பட்டுவுக்கென்ன? ஒரே அதிர்ஷ்டம்" "பையன் ராஜாபோல இருக்கானும்" என்று தன் குறை தொனிக்கப் பேசியது இன்னெரு குரல். "ராஜா போல இருந்தா ஆச்சா? சொத்து என்ன? அதைச் சொல்லு" என்று அதட்டியது ஒரு பயங்கரக் குரல்.

"ஆமாம் அவள் அக்கா சமாசாரமென்ன..." என்று வம்பளக்கத் தொடங்கியது ஒரு வாயாடியின் குரல்.

இவ்வாறு கலகலப்போடும் பேரிரைச்சலோடும் விளங்கிய அந்தத் துறையில் இயற்கைக்கு விரோதமாக திடீரென்று நிசப்தம் நிலவியது. 'கசுமுசு' வென்று காதைக் கடித்துவிட்டு 'கம்' மென்று இருந்தார்கள் அந்தப் பெண்மணிகள். எட்டத்திலே வந்துகொண்டிருந்த ஒரு தோற்றத்தைக் கண்டு அவர்களின் விஷமக்கண்கள் எக்களித்தன.

கரை இறங்கினதும் திட்டுத் திட்டாகப் பல் இளிப்பதுபோல் வெள்ளை நிறத்தை வெளிப்படுத்தும் ஒரு பழைய புடவையைக் கட்டிக்கொண்டு சரியாக வாரப்படாமல் காற்றில் சில மயிர் பறக்கவலுவிலே வரவழைத்துக்கொண்ட புன்சிரிப்போடு தளர்ந்த நடையுடன் இடுப்பிலே குடமேந்தி தண்ணீர் எடுக்க வந்தாள் தங்கம்.

படித்துறைக்கு தான் வந்திருந்தும் ஊரார் தங்கையின் கல்யாணத்தைப்பற்றி விசாரிக்காதது அவளுக்கு அதிசயமாகவே இருந்தது. தண்ணீர் எடுத்துக் கொண்டு வீடு திரும்பியபோது, கரையிலே எழுந்த "இவளிடம் போய் கேட்பதா?" என்ற வார்த்தை அவள் காதில் விழுந்ததும் அவள் முகம் காலவிஷம் உண்டதுபோல நீலம் பாரித்தது. சொல்ல முடியாத வேதனை அவள் உள்ளத்தின் உடலின் ஒவ்வொரு அணுவையும் முள்போல் தைத்தது. நடைப் பிணமாக வீடு திரும்பினுள்.

ஃ ஃ ஃ

விவாக ஏற்பாடுகளெல்லாம் வெகு துரிதமாக முன்னேறிக் கொண்டிருந்தது. திருமண நாள் நெருங்க நெருங்க பட்டுவின் மனதிலே இன்பக் காய்ச்சல் பரவிக்கொண்டே வந்தது. தங்கத்தின் மனதிலும் தாளமுடியாத ஒரு காய்ச்சல் பெருகிக் கொண்டே வந்தது. அதுவும் 'இவளிடம் போய்க் கேட்பதா' என்கிற ஆற்றுத் துறையிலே எழுந்த பேச்சு அவள் உள்ளத்தை அறைந்து அறைந்து மறைந்து கிடந்த அவளுடைய தீர்க்க முடியாத ஆவலையும் எரிச்சலையும் எரிமலை போலெழுப்பி கொழுந்துவிட்டெரிய வைத்தது. அந்த நாளில் தான் மணப் பெண்ணுக இருந்த காலத்திலே;— பிரிக்காதப் புத்தகத்தைப்போல, புதிதாக வர்ணம் பூசிய பொம்மைபோல நிறைந்த மனதுடன் கிளறிய இன்பத்தை வெட்கத்தால் வெளியே காட்ட

முடியாமல் தத்தளித்த அந்த இன்பத் திண்டாட்டத்தை நினைத்தாள். கல்யாண நாட்களிலே உற்சவ விக்ரஹம்போல் வேண்டியும் வேண்டாததும் இருந்த பிறர் சு ம த் தி ய மரியாதைகளையும் வேஷங்களையும் ஏற்று பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைந்ததை நினைத்தாள். கணவன் அவள் காதலன் அருகிலே இருக்கும் ஆர்வத்தால் எதையும் மறந்து அவன் அன்பு முழுக்காட்டத்திலே எப்போதும் களித்திருந்த அந்த ஆனந்தமயமான நாட்களை நினைத்தாள். நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

அவள் மீது அத்தனை பிரேமை வைத்திருந்த கணவன் அவளைவிட்டு எங்கே ம றை ந் தா ன், எதற்குச் சென்றான், ஏன் அவளையும் கூட அழைத்துச் செல்லவில்லை என்பது அவள் உள்ளத்தை அரித்தெடுத்துக்கொண்டிருந்த வருத்தம்.

விஷம் ஏறுவதைப்போல் அவள்பட்ட கஷ்டம் அளவை மீறியது. அவளால் பொறுக்க முடியவில்லை. யாரிடமும் சொல்லத் துணிவும் இல்லை. தேம்பித் தேம்பி அழுதாள். திண்றினாள், தணிக்க முடியாத உணர்ச்சி அவளைத் தகிக்க ஆரம்பித்தது.

பட்டுவின் கல்யாணம் இனிதே நடந்தேறியது. அன்றிரவு மேளதாளமெல்லாம் ஓய்ந்து, ஊர்சப்தம் அடங்கிக் கிடந்தது. கல்யாணப் பொலிவிலே புது மெருகேறி பொங்கிய மகிழ்ச்சியிலே தன்னையும் மறந்து அயர்ந்து கிடந்தாள் பட்டு. தங்கமோ தாபத்தின் வேகத்தை சகிக்க முடியாமல் துடித்துக்கொண்டிருந்தாள்.

அன்று பௌர்ணமி இரவல்ல. வெகு நேரம் கழித்து அர்த்த சந்திரன் உதயமானான். காலம் கழித்து வந்த தவறை மறைத்து தான் நல்லவன் என்று காட்டிக்கொள்வதுபோல் மே க ங் க ளின் இடையே ஓடி ஓடி ஒளிந்துகொண்டிருந்தான்.

தங்கத்தின் கண்கள் தூக்கத்தை வரவேற்கத் த யா ரா க இல்லை. எந்த சூன்யப் பிரதேசத்திலிருந்தோ அழைப்பு வருமென காத்திருந்தன அவை.

வீட்டின் பின்புறத்திலே உள்ள வாய்க்கால் அமைதியாகத்தான் ஓடிக்கொண்டிருந்தது. அங்கிருந்துதான் தங்கத்திற்கு அழைப்பு வந்தது.

நள்ளிரவாகி ஒரு ஜாமம் இருக்கும். எந்தக் காட்டிலோ நரிகள் ஊளையிட்டன. நாய்கள் குலைத்தன. சிள் வண்டுகளின் ஓயாத ஓலம் சூழ்நிலையை சோகமயமாக்கியது. 'சல சல' வென்று இலைகள் உதிர்வதுபோல் லேசான சத்தம் எழுந்தது. வாய்க்கால் கரையில் இருந்த கல்லின்மீது வந்தமர்ந்தாள் தங்கம்.

அவள் உள்ளமுருகி கண்ணீர் பெருக்கியது ஆற்றிலே பெ ரு வெ ள் ள ம் புரண்டோடிவிடும் போலாகிவிட்டது. ஆற்றோடு அதன் நீரோடு கவலையும் கரைந்துவிடுமா என்ன ?

கொத்துக் கொத்தாக கண்ணீர் உகுத்தாள். நெஞ்சு விம்மி விம்மி கனத்தது. அந்த அபலையின் விம்மல் பயங்கரமாக அந்தப் பிராந்தியத்தில் எதிரொலித்தது. அதை அவள் கணவன் செவி மடுப்பானா ? அவன் திரும்பி வந்து அவளை ஆட்கொள்ளப் போகிறானா ? அதில் ஒன்றும் அவளுக்கு நம்பிக்கை இல்லை.

ஓடும் தண்ணீரோடு கலக்கும் கண்ணீர்போல தானும் அதனுடன் கலந்தால்...... அது அவள் துடிப்பு.

தாபம் நிறைந்த கண்களோடு எதிரே பார்த்தாள். சல்லடைக் கண் வழியாக தெரிவதுபோல ஒரு தெளிவற்ற தோற்றம் அவளுக்குத் தென்பட்டது. அவள் தேடிய தெய்வம் பிரத்யட்சமாயிற்று!

"தங்கம்! தங்கம்!"

"யார்? நீங்களா!"

"ஆமாம் நானேதான். ஏன், சந்தேகமா? வேண்டுமென்றால் என்னைத் தொட்டுப்பாரேன்."

"நான் ஒன்றும் உங்களைத் தொடப்போவதில்லை. நீங்கள்தான் இத்தனை நாளாக என்னைத் தனியாக விட்டு எங்கோ போயிருந்தீர்களே?"

"செய்த தவறை உணர்ந்து உன்னை அழைத்துப்போகவே வந்திருக்கிறேன்."

"நிஜமாகவா?"

"சத்தியமாக."

"இதோ வந்துவிட்டேன்."

"ஆனால்... தங்கம் ஒன்று மறந்துபோனாயே."

"என்ன?"

"இந்த சந்தர்ப்பத்திலா? தங்கையின் கல்யாணம்......"

"எனக்கென்ன?...... நான் தனிமையில்படும் துன்பம் தங்களுக்குத் தெரியாது. உங்களை நான் விடப்போவதில்லை" என்று ஆ வே ச த் து ட ன் கணவன் காலடியைப் பற்றிக்கொண்டாள்!

மிருத்யுவின் கோர அமைதி அங்கே மண்டிக் கிடந்தது. தங்கம், அவள் கணவன் இருவரும் சூக்ஷ்ம உருவத்தில் ஒன்றாகி முடிவில்லாத நீண்ட பிரயாணம் செய்யத்தலைப்பட்டார்கள்.

# வழி பிறந்தது

★

ப. ஸாவித்திரி

சென்னையில் புதிதாகக் கட்டப்பட்ட வீடுகள். ஒரே வரிசையில் ஆறு வீடுகள் இருந்தன. அவற்றில் இரண்டாவது வீட்டிற்கு நான் குடிபோனேன். ஒரு வாரத்தில் வலதுபுற வீட்டிற்கு குடி வந்து விட்டனர். யார் என்று அறிய வாசல் பக்கம் நடைபோடலானேன். அப்போது நடு வயது தம்பதிகள் இரு சிறு பையன்கள் யாவரும் வந்து இறங்கினர். அதே சமயம் எங்கோ மணி ஒலி கேட்கவே அந்த தம்பதிகள், நல்ல சகுனம்; இந்த வீட்டில் வந்து நமக்கு பேரன் பிறக்கணுமென்று இருக்கிறது; ஒரு நல்ல நாள் குறிப்பிட்டு லக்ஷ்மியை அழைத்து வர வேண்டும் என்று பேசிக் கொண்டனர்.

மறுநாள் கடைசி வீடான இடதுபுற வீட்டிற்கு ஒரு தம்பதி இரு சிறுமிகளுடன் குடி வந்தனர். ம்... நம்ம கர்மம் தொலைக்க இந்தக் கோடி வீடு தான் சரி. ஊர் அறியும் முன்பு அந்த அசட்டுப்பெண்ணை கூட்டி வர வேண்டும். கர்மம் தொலைஞ்சதும் இந்த ஊரை விட்டே போகவேண்டியது தான்' என்றனர். ஒரு குடும்பத்தில் என்ன மகிழ்ச்சி! மற்ற குடும்பத்தில் என்ன சோகம்! இறைவா, இதுதான் உன் திருவிளையாடலா என எண்ணமிட்டுக் கொண்டே உள்ளே சென்றேன்.

மற்றவர் விஷயத்தில் தலையிடுவது தவறு என்று தெரிந்தும் ஏனோ பாழும் மனம் அவ்விரு வீடுகளையும் கவனிக்கத் தொடங்கி விட்டது. அதற்கேற்றாப்போல் அவ்விரு வீடுகளிலும் பேசும் பேச்சுகளும் தெளிவாக என் காதில் விழுந்தன.

வலது பக்க வீட்டில் பெண்ணை புக்ககத்திலிருந்து வரவேற்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. 'வாசல் பக்க உள் காற்றோட்டமானது. அங்கு பங்கா இருப்பதால் குழந்தை லக்ஷ்மிக்கு சௌகரியமாக இருக்கும். அங்குள்ள அலமாரியில் குழந்தை துணி, பால் முதலியன வைக்கலாம். தவிர வாசல் ரூமிற்கு லக்ஷ்மியின் சினேகிதிகள் சுலபமாக வந்து போகலாம். பொழுது போகாவிட்டால் ஜன்னல் பக்கம் நின்று வாசலைப் பார்த்தால் ஆச்சு.' இப்படிப் பேசிக் களித்து முன் அறை தயாராகி விட்டது.

இடது பக்க வீட்டிலும் அறை தயாராகியது. ஆனால் என்ன வித்தியாசம்! பின்பக்க அறை பொறுக்கி எடுக்கப்பட்டது. 'யார் கண்ணிலும் படாமலிருக்கட்டும். இரண்டாம் பேர் அறியாமல் வயிற்றிலிருந்து விழுந்தால் சரி. பூர்வ ஜன்மத்தில் யாரை இழிவு படுத்தினேனோ! பாவம் யாரை விட்டது?' இப்படி சலிப்புப் பேச்சு அங்கிருந்து மெதுவாக எழும்பியது.

இடையில் நான் இரண்டு நாள் வெளியூர் சென்று இருந்தேன். திரும்பி வந்ததும் இருபக்க வீடுகளிலும் பெரிய பூட்டு தொங்குவதைக் கண்டு திடுக்கிட்டேன். உள்ளே நுழைந்து சில மணி நேரங்களில் இடது பக்க வீடு திறக்கப்படும் ஓசை கேட்டேன். உடனே 'வஸந்தா! சீக்கிரம் உள்ளே வா, யாராவது பார்த்துவிடப் போகிறார்கள். இந்த அறையிலேயே இரு. என்ன வேணுமானாலும் என்னைக் கேள் தருகிறேன்.' என்றது தாயின் குரல். 'நான் மோசம் போனேன் அம்மா! என் தவறால் உங்களுக்கு தீராத துன்பத்தை ஏற்படுத்தி விட்டேன் அம்மா, மன்னிப்பு கேட்கவும் அருகதையற்றவள் நான்' என்ற விசும்பல்-சரி, 'சரிசெய்வதையும் செய்துவிட்டு மாய்மாலம் வேறா' என்ற தந்தையின் கடுஞ்சொல் 'ஏற்கனவே நொந்து இருக்காள். புண்ணில் வேலை விட்டுக் கிளறாதேங்கோ' என்ற தாயின் அன்புச்சொல், எல்லாம் மெதுவாக ஆனால் தெளிவாகக் கேட்டன.

மறுநாள் வலது வீட்டிலும் பெண்ணை அழைத்து வந்து விட்டனர். ஆனால் குதூகல வரவேற்பு! வாசலிலேயே லக்ஷ்மியை நிற்கவைத்து ஆரத்தி எடுத்துப் பாடினார்கள். திருஷ்டி கழித்தார்கள். உள்ளே கூப்பிட்டு வாசல் அறையில் உட்கார வைத்தார்கள். காப்பி வேணுமா? மெது பகோடா சாப்பிடறயா? சுட சுடத் தோசை வாத்துத் தரட்டுமா? இது அம்மாவின் குரல். குழந்தையை நிம்மதியாய் கொஞ்சநேரம் விடு, பிறகு உன் அன்பைப் பொழியலாம், லக்ஷ்மி படுத்துக்கோம்மா, விசிறியைத் திருப்பட்டுமா? ரொம்ப காற்றடித்தால் போத்தட்டுமா? என்று அப்பா தொண தொணக்க ஆரம்பித்து விட்டார். மாலையில் லக்ஷ்மியின் சிநேகிதிகளின் பரிகாசப் பேச்சும் கலகலப்பும் சொல்லிமுடியாது.

எப்படியோ லக்ஷ்மி, வஸந்தா இருவரும் என்னிடம் பழக, தம் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ள ஆரம்பித்து விட்டனர். நான் வாங்கும் பத்திரிகைகளும், அவர்களது ஒத்த வயதும் இப் பழக்கத்

திற்கு மூலகாரணமாயின. வளைகாப்பு, சீமந்தம் என்ற பல சடங்கு லக்ஷ்மிக்கு செய்யப்பட்டது. அப்போது அவள் வீட்டில் ஒரே அமர்க்களம். அவள் கணவனுடன் கொஞ்சிப் பேசுவதும் களுக் களுக் என சிரிப்பதும் குழந்தையைப்பற்றி அவர் கள் குழந்தைகள்போல் பேசுவதும் எல்லாம் தூய மண வாழ்வின் மேன்மையை பறை சாற்றுவது போலிருந்தன.

ஆனால் உள்ளேயே அடைபட்டிருக்கும் வஸந்தாவுக்கு நான் ஒருத்திதான் வெளி உலகம். 'அக்கா! குழந்தை பிறந்தால் அதை எப்படி வளர்ப்பது? என் தாய் தந்தையர் குழப்பம் எப் படி நீங்கும்? எப்படி நான் காலம் தள்ளுவது? எனக்கு வழி கிடையாதா' என அழுது புலம்பும் அப் பேதைப் பெண்ணின் வருத்தம் என்னை உருக்கி விட்டது.

இரண்டு பேருக்கும் ஆஸ்பத்திரியில்தான் பிரசவம் நடந்தது. ஆனால் என்ன வித்தியாசம்! லக்ஷ்மியைப் பார்க்க பலர் போனார்கள். வஸந்தா வைப் பார்க்க தற்செயலாய் வந்த மூன்றும் மக்க ளையும் அவள் சந்தேகக் கண்களோடு பார்த்து நடுங்கினாள்.

இரண்டுபேருக்கும் ஆண் குழந்தைதான் பிறந்தது. லக்ஷ்மியின் குழந்தைக்கு ராகவன் என்ற நாமகரணம் சுற்றத்தார் புடைசூழ தாய் தந்தையர் கண்டு களிக்க, சிறந்த விருந்துக் கிடையே நடந்தது. வஸந்தாவின் வீட்டிலோ எப்போதும் கதவு அடைப்புதான். குழந்தை அழு தாலும் வாயைப் பொத்தினாள் பாட்டி.

லக்ஷ்மி வீட்டில் சதா பாட்டு, சிரிப்பு, தபால் படித்தல், இன்னும் கொஞ்சநாள் போகட்டுமே, அதற்குள் மாப்பிள்ளை அவசரப்படுகிறாரே என்ற சொல், இப்படி காதில் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

வஸந்தா வீட்டில் காய்கறிக்காரி, மோர்க் காரி முதற்கொண்டு 'குழந்தைக்கு அப்பா இல் லையா? ஏன் அம்மா வரவே இல்லை, கடுதாசி யாலும் போட்டாரா' என்று கேள்விகளும், தாயும் மகளும் சேர்ந்து உள்ளே பதுங்கிக் மறுவ தும், தலையில் துணியைக் கட்டிக்கொண்டு கிழவர் குறுக்கும் நெடுக்கும் நடப்பதும் என்னை என் னவோ செய்தன.

ஒரு நல்ல நாளில் பலவித பணியாரங்களு டன் லக்ஷ்மியையும் குழந்தையையும் அவர்கள் வீட்டில் சேர்க்க பெற்றோர்கள் கிளம்பிவிட்டனர்.

அதே நாளில் வஸந்தா வீட்டில் பேச்சு மூச்சு இல்லை. பின்பக்கம் கிணற்றடியில் வஸந்தா அழுதுகொண்டிருந்தாள். கைக் குழந்தையுடன் பெற்றோர்கள் உள்ளே கல்லாய் உட்கார்ந்திருந் தார்கள். நிலைமையை ஊகிக்க எனக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. தவறு செய்வது சகஜமே. ஆனால் அதை மன்னிப்பது தெய்வத்தன்மையன்றோ! ஏதோ உள்ளுணர்வு என்னைத் தட்டி எழுப்பியது. வஸந்தா வீட்டிற்குப் போனேன், அப் பெண்ணை என் வீட்டுக்கு அழைத்து வந்தேன். என்னிடம் நம் பிக்கையுள்ள அவள் பெற்றோர் ஒன்றும் சொல்ல வில்லை. குழந்தைக்குத் தயாராய் காய்ச்சிருந்த பாலை புகட்டி, தாலாட்டுப் பாடினேன். குழந்தையும் கட வுளும் ஒன்று என்பார்கள். என்னைப் பார்த்து சிரித் தது. கை கால் ஆட்டிற்று. சிறிது நேரத்தில் ஆழ்ந்து தூங்கி விட்டது.

வஸந்தாவிடம் ஆதரவுடன் பேசலானேன். அவளைக் கெடுத்தவன் பெயர், விலாசம் அறிந் தேன். அவன் இவளை மனைவியாக ஏற்றுக்கொள்ள மாட்டான்; எல்லாம் ரகசியமாகவே நடந்தது என் றெல்லாம் புலம்பினாள் அப்பேதை. மேலும், 'அவன் மணமானவன்; ஏதோ என் சபலத்தில் அவன் ஆசை வார்த்தையில் ஒரு நிமிடம் என்னைப் பறி கொடுத்தேன். அதன் சுமை என் வாழ்வையே பாழாக்கி விட்டது' என்று கதறினாள் உள்ளம் உடைந்த அப்பெண். 'வாழ்வு முழுவதும் உண்மை யாக இருப்பேன். ஏதோ என் பெற்றோர்களுக்கும் சிறிது சொத்து உண்டு. ஏதாவது வேலை செய்து என் பொழுதைப் போக்க வேண்டும். என் தாயார் தகப்பனாரை சந்தோஷமாய் வைக்க வேண்டும். என் குழந்தையை நேர்மையாக வளர்க்க வேண்டும். என் சகோதரிகளாவது மண வாழ்வில் ஈடுபட்டு என் பெற்றோர் குறையைப் போக்க வழி செய்ய வேண்டும்' என்றெல்லாம் ஆவேசம் வந்தவள் போல் பேசினாள். எந்த ஊரில் இருக்கப் பிரியப்படு கிறாய் என்றதற்கு, "யாதும் ஊரே" என்று சொல்லி இந்த ஊரே தேவலை அக்கா, உங்கள் பாது காப்பு இருக்கும்போது என் வேலையைச் செய்ய தடை என்ன? என்றாள்.

மறுநாளே வஸந்தா வீட்டிற்கு கடிதம் வந்தது. 'போஸ்ட்' என்ற வார்த்தையும் வஸந்தா என்ற பெயரையும் தெருவே கேட்டது. அவ்வீட்டில் ஒரே பரபரப்பு. வஸந்தா அழுவதைக் கேட்டு தெருவில் சில பெண்மணிகள் அவர்கள் வீட்டிற் குள் நுழைந்தனர். நான் வஸந்தாவின் கடிதத்தை ஒரு நிமிடத்தில் படித்துவிட்டேன். எழுதியது நான் தானே. உடனேயே அங்கு போய் ஆஸ் பத்திரியில் பார்த்துவிட்டு வா, அதனால்தான் அவர் இதுவரை உன்னையும் குழந்தையையும் பார்க்க வரவில்லை போலும் என்று சமாதானம் செய்தேன். தெரு ஜனங்களும் திருப்தியாய் போய்விட்டனர். வஸந்தா குடும்பத்தினர் ஒரு மாதம் வெளியூர் பிர யாணம் செய்து விட்டு திரும்பினர். பெற்றோர் முகத்தில் உறுதி. வஸந்தா விதவைக் கோலத்தில் அதாவது திலகமில்லாமல் வந்தாள். சில நாட்

Phone: No 92. Tel: SAREES.

PUVALUR SRI RAMAKRISHNA VILAS

*Producers of*

High Class Handloom Sarees, Dhoties, Cholies etc.,

75, BIG SOURASHTRA STREET,

Post Box No. 210

WORIYUR, :: TIRUCHIRAPALLI-3.

★

Best Quality Handloom Sarees
Dhoties & Cholies in 5 to 10 Yards
100 Counts are Available Ex-Stock.

**FAST COLOURS!** **CHEAP RATE!**

**SATISFACTION SURE!**

களில் அவள் வீட்டில் தையல் மெஷின் ஓசை ஒலிக்கத் தொடங்கியது. அவ்வொலியில் வஸந்தா தன்னை மறந்தாள்.

ஒரு நாள் என்னிடம் ஓடி வந்தாள். 'அக்கா, உங்கள் திட்டம் எங்கள் வாழ்வையே திருப்பி விட்டது. இப்படியே தூய வாழ்வு வாழ உறுதிகொண்டு விட்டேன். பெண்ணின் கற்பு எத்தனை உயர்ந்தது! எத்தனை விலை மதிக்க முடியாத மாணிக்கம் அது! அதைப் பேணி வளர்க்க வேண்டும், இதை உணர்ந்து கொரண்டேன் அக்கா' என்று உருகினாள் வஸந்தா.

'சகோதரி! வருந்தாதே-உன் தவறை உணர்ந்ததும் அல்லாமல் வருத்தமும் படுகிறாய். இனி நல் வாழ்வு வாழ உறுதி பூண்டாய்-உதவிக்குத் தையல்மெஷின் வாங்கினாய். பாரதநாட்டுப் பண்பு உன்னிடம் பூரணமாய் ஜொலிக்கிறது. நீயும் அன்னையின் பெண்தான். தமிழ்நாட்டு வீரமணிதான். சமூகம் உனக்கு ஒரு தீங்கும் செய்யாது' என்றேன். அப்போது கோவில் மணி ஒலித்தது. பாலகன் தவழ்ந்து வந்து வஸந்தாவின் காலைப் பிடித்திழுத்தான். தெளிவு பெற்ற வஸந்தா குழந்தையை வாரி அணைத்து உச்சி முகர்ந்தாள். தாய் என்ற பாவனையில் கம்பீரமாய் தன் குழந்தையுடன் வீடு போனாள். அக்காட்சி அவள் ஓர் நல்ல பெண் என்ற உண்மையை எனக்குப் புலப்படுத்தியது.



# நம்பினோர் கெடுவதில்லை

★

"பரதேசி"

"தபால் வந்ததா?"

"ஏன் தினமுந் தபாலை எதிர்பார்க்கிறீர்கள்?"

"ஏதாவது நல்ல பலனைக் கருதித்தான்."

"நீங்கள் தாம் கர்மயோகியாயிற்றே!... பலனைக் கருதாமல் தான் செயல்புரிய வேண்டும் என்பீர்களே!"

"ஆமாம்! அதுவும் உண்மைதான்; ஆனால் தேதி இருபதுக்கு மேலாகிவிட்டதே!... சொச்சநாள் ஓட வேண்டாமா?"

"அப்படியானால் நாட்களையெல்லாம் நீங்கள் திட்டம் போட்டுத்தான் இதுவரை ஓட்டி வருகிறீர்களா?"

"நான் எந்தத் திட்டம் வகுத்தாலும் அதைத் திட்டிக் கொண்டே இருப்பது உன் வேலையாக இருக்கும் போது..."

"சரி... சரி... உங்களிடம் நான் விவாத அரங்கைத் தொடங்கவில்லை. இதோ உங்கள் தபால்......"

—ஐந்தாறு புத்தக அஞ்சல்களும் இரண்டொரு கார்டுகளும் ஒரே ஒரு உள்நாட்டு உறைக் கடிதமும் இருந்தன. அவைகளால் தானே தன் கணவனுக்கு மீண்டும் தபால் செலவு ஏற்படுகிறதென்கிற வெறுப்புடன் அவைகளை வீசி எறியாத குறையாகப் போட்டு விட்டு நீலா உள்ளே எழுந்து சென்றாள்.

உள்நாட்டு உறைக்கடிதம் - ஆயுள்காப்புக் கழகத்திலிருந்து 'பிரீமியம்' கட்டாததால் 'பாலிஸி' செத்து விடும் எனப் பயமுறுத்தும் இறுதி எச்சரிக்கை.

கார்டு - எந்த ஜன்மாந்திரத்திலோ யாருக்கோ வாங்கிக் கொடுத்த புத்தக பாக்கி ரூபாய் முப்பதையும் சில்லரையையும் உடனே அடுத்த தபாலில் அனுப்பி விட்டு மறு வேலை பார்க்கும்படியும் இல்லையானால் மேலிடத்து ஆதரவு மூலம் சம்பளத்திலிருந்து வசூலித்துக் கொள்ள நேரிடுமென்றும் பயமுறுத்தல்.

மற்றொரு கார்டு - சகோதரியின் கடிதம் - வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்து விடுபட முனையும் அவள் மைந்தனின் வேதனைகள்.

இன்னொரு புத்தக அஞ்சல் — 'பிரசுரிக்க இயலாமைக்கு வருந்தும் பத்திரிகையாளன் முத்திரை பதித்த தன்வினை — தன்னையே சுடத் திரும்பி வந்திருக்கிறது — இன்னும் இரண்டு ஓசிப் பத்திரிகைகள் - சந்தாச் செலுத்தாமலேயிருந்தும் தம்நாட்டு மகிமையை எழுத்தாளனின் இதயத்தில் பதியவைக்க அந்நிய நாட்டுப் பிரசார இலாகா வழங்கும் வெளியீடு - நல்ல அழகிய படங்களுடன் ஆர்ட் அட்டையுடன்.

மற்றொன்று விலைபோகாத சொந்தச் சகோதரப் பத்திரிகை-லட்சியத்துக்காக உயிரை வைத்துக் கொண்டிருப்பது — கோரியுள்ள சந்தா பாக்கி விபரக் கடிதம்.

இன்னொன்று திருமண அழைப்பு- "வேணு-நீலா" திருமணத்துக்குப் பத்து வருடங்களுக்கு முன்பு நேரில் வந்திருந்து ஐம்பது ரூபாய் ரொக்கப்பரிசளித்த நண்பர் தற்போது ஒரே புதல்வியின் திருமண விழாவில் பங்கு கொள்ள அழைத்திருக்கிறார்.

- தர்ம சங்கடமான நிலை. நேரில் போய் வருவது அவசியந்தான், ஆனால் நாலு குழந்தைகளுடன் நீலாவையும் அழைத்துக்கொண்டு போய் வருவதென்றால் செலவு ஐம்பது ரூபாய்க்கு மேலாகுமே!... அதை விடப் பத்து ரூபாய் மணியார்டர் செய்து மணமக்களை வாழ்த்தமுடிந்தால் அதுவே எவ்வளவோ பெருமையாக இருக்குமே!- எப்படிப் பெருமையாக இருக்கும்? பத்து ரூபாய் தான் பெரிசா?- நேரில் போயிருந்து மணமக்களைக் கண்ணாரக்கண்டு வெறும் மஞ்சள் அட்சதை போட்டு மனமார ஆசிர்வதித்து விருந்துண்டு வந்தால் நண்பனுக்கும் மகிழ்ச்சியாயிருக்கும் — நாளை இன்னொரு தடவை அந்தப்பக்கம் போக நேரும்போது பயப்படாமல் ஓடி ஒளியாமல்-சந்து பொந்துகளில் திரும்பாமல்- தாராளமாகப் போய் வரலாம்!....

வேணு எண்ணங்களில் ஆழ்ந்து விட்டான்!

எண்ணங்களை மட்டும் முதலீடு செய்து எழுதிப் பிழைக்க முனைந்த தவறு செய்த எண்ணிறந்த இளம் எழுத்தாளர்களுள் அவன் முதிய இளம் எழுத்தாளன். இருபது வருடகாலமாக எழுதிப் பிழை செய்கிற அப்பாவி அவன்.

"நீங்கள் மட்டுமாவது நேரில் போய்வந்து விடுங்கள்!- அப்படியே மதுரையில் அந்த 'ரகசிய வெளியீடுகள்' உரிமையாளரையும் பார்த்து "நாடோடி மோகினி" எப்போது வெளிவரும்?... ஒரு நூறு ரூபாயாவது அட்வான்ஸ் தருவாரா? என்று பார்த்து வாருங்கள்!"

"சேசே!....நீலா!.... வரவர நீ மோசமான யோசனை சொல்ல ஆரம்பித்துவிட்டாய்! - உள்ளூர்ப் பத்திரிகைக்கே நான் தபால் மூலம் கட்டுரை அனுப்புகிறவன்—வெளியூரில் எங்கோ கல்யாணம் விசாரிக்கப் போன இடத்தில் பதிப்பக உரிமையாளரைப் போய் நேரில்பார்ப்பதா?.... எழுத்தாளனும் 'எக்ஸ்ட்ரா'

அடிக்கடியும் எப்போதுமே எதிரில் போய் முதலாளிகளைப் பார்ப்பது ஆபத்தாயிற்றே!''

"அதுசரி! நீங்கள் போய் வருவது முடிவாகி விட்டதா?..."

"எப்படி முடிவு செய்ய முடியும்?... இப்போது தானே பத்திரிகை வந்திருக்கிறது!- இதைக்காட்டி எங்கேயாவது கடனில் பரிசுப்பொருள் ஏதாவது வாங்க வேண்டும்!''

"பாருங்கள்-'நாடோடி மோகினி' வெளி வந்திருந் தால் அதில் ஒரு பிரதியை மணமக்களுக்குப் பரிசாக அனுப்பிவிட்டு இருந்திருக்கலாம்!''

"மறுபடியும் அதையே ஏன் பேசுகிருய்?.... வேறு ஏதாவது நல்ல புத்தகம் கிடைக்காமல் போகிறதா?.... மணிமொழிப் பதிப்பகத்தில் எனக்கு வேண்டியவரிருக் கிருர்-அவர் மூலம் ஏதாவது நல்ல புத்தகமாக ஒன்று வாங்கி வருகிறேன் - ஆமாம்... போக்கு வரத்துச் செலவுக்கு வழி செய்ய வேண்டுமே!''

"அதற்கும் யாரையாவது நண்பர்களைப் பாருங்க ளேன்!''

"வீட்டிலுள்ள 'நண்பி'யை விடவா?''

"ஆளைப்பாருங்கள்! அதெல்லாம் முடியாது. குழந் தையை ஆசைப்படுகிருளே என்று நான் கவரிங் செயினுக்கு ஆர்டர் கொடுத்து விட்டேன். அவளுக்கு மாமா கொடுத்த பரிசு அது... வி.பி.பியில் நீங்கள், அங்கே போனதும் இங்கே வந்து நிற்கும்!''

"வந்தாலென்ன!... ஒரு வாரம் வைத்திருக்கச் சொல்லு!... அதற்குள் சிறுகதைப் போட்டி முடிவு தெரிந்துவிடாதா?''

"ஆமாம்!... ஆமாம்!.. அதில் முதல் பரிசை உங்களுக்காகத் தான் ஒதுக்கி வைத்திருக்கிருர்கள்!....''

"போய் முதலில் உன் வாயைக் கழுவு! அப சகுனம்போல் எதுவும் பேசாதே!... கடைசிபட்சமாக மூன்ருவது பரிசு வந்தால் கூட ஐநூறு ரூபாய் வரும்!''

"வரட்டுமே!.... வந்த பின்பு நூறு ரூபாய்க்குப் பரிசுப் பொருளை வாங்கிக்கொண்டு நண்பரின் பெண்ணை யும் மாப்பிள்ளையையும் பார்த்து வந்தாற்போதாதா?... அப்போது நானும் கூட வர முடியுமே!''

"அதுவும் நல்லது தான்!... ஆனுல் ஒரு வேளை அப்படி ஏதும் பரிசு வ்ராமற் போனுல்...... பிறகு சமயத்தில் ஐம்பது நூறு கொடுத்து உதவுகிற நண்ப னின் பொல்லாப்பையுமல்லவா விலைக்கு வாங்கவேண்டி யிருக்கும்!''

"ஓஹோ!... அதுதான் இவ்வளவு அக்கறையா?.... உங்களுக்கு அந்த நண்பரிடமும் தொகை பெற வெட்கமாயில்லையா?.... பயன் கருதாமல் பணிபுரியும் லட்சணம் இவ்வளவுதானு?...''

"நீலா!... வரவர உன் வாய் அதிகமாகப் பேசு கிறது!... நண்பர்கள் என்ருல் எங்களுக்குள் ஆயிரம் கொடுக்கல் வாங்கல் இருக்கும் — அது பற்றிப் பேச நீ யார்?''

— "நான் யாரா?... அதனுல் தான் என்னிடம் குழந்தையின் 'செயின்' பணத்தைக் கேட்கிறீர்களா?''

— இதைக் கேட்டதும் வேணுவின் மூக்கின் மேல் எங்கிருந்தோ கோபம் வந்து இறங்கிற்று.

"ஏ மூடமே!... குழந்தை உனக்குத் தான் சொந்தமா? எனக்கு மட்டும் சொந்தமில்லையா? நீ இன்று கவரிங் செயின் வாங்கிப் போடத் துடிக் கிருய்... நான் அசல் (22 காரட்) தங்கத்திலேயே சங்கிலி வாங்கிப்போடுவேன் தெரியுமா?''

"தெரியுமே! இதோ என் கழுத்தைப் பாருங்கள்!... இந்தத் தாலிக்குப் பக்கத்தில் கண்ணுக்குத் தெரியா மல் நெளிந்து கொண்டிருக்கும் அத்தனையும் நீங்கள் வாங்கிப் போட்டவை தானே!''

— வேணுவின் கோபம் மூக்கு நுனியிலிருந்து வலது கைவிரல்களின் நுனிக்குத் தாவிற்று—"ஐயோ!'' என்று அலறியபடியே நீலா கீழே அமர்ந்தாள். தப்பி யோடும் குற்றவாளியின் நிலையில் வேணு எங்கோ சென்றுவிட்டான்.

ஃ ஃ ஃ

ஸ்ரீரங்கத்தின் கீழ அடைவெளிஞ்சான் இடத்தில் ஐந்தாறு ஒண்டுக் குடும்பங்களிடையே வேணு - நீலா தம்பதிகளும் உயிர் வாழ்ந்து வந்தார்கள். சீர்திருத்த முறையில் கலப்பு மணஞ் செய்து கொண்ட அவர்கள் சிறிது காலம்வரைக்கும் உல்லாஸ வாழ்க்கை நடத்தி விட்டுப் பின்பு சமூகத்தில் புரையோடிப் போன சம்பிரதாயச் சிக்கல்களின் காரணமாக யாரோடும் ஒட்ட முடியாமல் ஒதுங்கியே உயிர் வாழத் தொடங் கினுர்கள். ஹரிஜன நல இலாகா ஆரம்பப்பள்ளி யொன்றில் ஆரம்ப ஆசிரியையாகப் பணி புரியும் அவளின் நிலையான வருமானந்தான் அந்தக் குடும்பத்தின் அரிசி — விறகு — இருப்பிடப் பிரச்னை களுக்கு வகைசெய்து வந்தது. வெறும் எண்ணங்களை இழையாக்கித் தறிபோட்டு கதை, கட்டுரை, கவிதை களாக்கித் தன் சரக்குக்குரிய இடம் இது என்றறியாமல் விலாசந் தெரிந்த பத்திரிகைகளுக்கெல்லாம் வாரந் தோறும் எழுதி எழுதிக் கடனைக் குவித்துக்கொண்ட வேணு கடைசியில் சமீபத்தில்தான் ஒரு வக்கீல் குமாஸ் தாவிடம் நகலெடுக்கும் துணை ஊழியனுக வேலைக்கு அமர்ந்தான். கையில் காசிருந்தால் வெற்றிலை பாக்குக் கடைகளில் தொங்கும் பத்திரிகைகளையெல்லாம் வாங்கிக் குவிக்கத் தொடங்குவான் - அவைகளை எங்கோ இரவல் வாங்கி வந்ததாகப் பொய் சொல்லிவிட்டுப் பின்பு-கடை சியில் உண்மையை ஒப்புக்கொண்டு விடுவான்.

"இப்படி அறுபது பைசாவும் ஒரு ரூபாயும் கொடுத் துப் பத்திரிகை, புத்தகங்கள் வாங்கி வருகிறீர்களே! இதனுல் நம் வயிற்றுப் பசி நீங்குமா? அரிசி விற்கும் விலையில், பருப்பு விற்கும் விலையில், எண்ணெய் விற்கும் விலையில் நீங்கள் இப்படிச் செய்யலாமா?'' என்று சாப்பிட்ட பின்பு நீலா சாந்தமாகக் கேட்பாள்.

வேணு தன்தவறையுணர்ந்து மனம் வருந்துவான். "என்ன செய்வது நீலா? என் கையில் பணமிருந்தால் எனக்கு அறிவுப்பசியைத் தீர்க்கத்தான் தோன்றுகிறது-வயிற்றுப்பசி நினைவிலிருப்பதில்லை-இனி இப்படிச் செய்யவில்லை" என்று அவன் குழந்தைபோல் தன் தவறை ஒப்புக்கொள்ளும்போது நீலாவின் கண்கள் குளமாகிவிடும்

'போனால் போகிறது! நம் காலமெல்லாம் இப்படியேவா போய்விடும்? என்றோ ஒரு நல்ல நாள் வரத்தான் வரும். அப்போது நீங்கள் கைநிறையச் சம்பாதிப்பீர்கள்!... போனால் போகிறது!" என்று சமாதானம் செய்வாள். இந்தச் சமாதானத்தின் பரிசாக இன்னுங் கொஞ்சம் அதிகப் பொறுப்பை வேணு அவள் தலையில் சுமத்துவான். இப்படியேதான் காலம் சென்றுகொண்டு இருந்தது.

ஃ ஃ ஃ

கோபத்தில் வீட்டைவிட்டுக் கிளம்பிய வேணு நகரத்தின் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியின் உட்புறமாக ஸ்ரீரங்கம் ரயில் நிலையத்துக்கு வந்தான். சீஸன் டிக்கட்காரர்களும் 'இது நேரான வழியல்ல' என்ற போர்டைக் கண்டு குறுக்குவழியென்று புரிந்துகொண்டு செல்கிறவர்களும் மற்றப் பிரயாணிகளுமாக ஸ்ரீரங்கம் ரயில் நிலையம் பரபரப்பான சூழ்நிலையிலிருந்தது. வேணு பிளாட்பாரத்தினுள் நுழைந்தபோது வடக்கேயோ தெற்கேயோ வண்டி ஒன்று புறப்படும் நிலையிலிருந்தது. எவ்வித நோக்கமுமில்லாமல் வேணு நகரும் வண்டியினுள் தாவினான். பிறகுதான் தெரிந்தது - வண்டி வடக்கே போகிறதென்று. வழக்கமாக அவன் குளிக்கவரும் வழியையெல்லாம் கடந்து வண்டி நீண்ட மரவட்டையாகப் பாலத்தின் மேலூர்ந்து கொண்டிருந்தது கொள்ளிடப் பாலத்தின் மேல் செல்லும்போது வேணுவின் மனம் பழைய பள்ளத்தாக்குக் கதைகளில் சுவை தேடிற்று.

"சீ! பிரமனே சதிசெய்து விட்டான்! வாழ்வில் ஏற்றத்தாழ்வும் வறுமை பெருமையும் அமைய அவன் தானே காரணம்!" என்றது மேலெழுந்தவாரியாக விமர்சனம் செய்யும் ஒரு குரல். "உன் சோம்பேறித்தனத்துக்குப் பிரமன் எப்படிக் காரணமாயிருக்க முடியும்? உழைப்பும் நேர்மையும் உயர்வதற்குரிய வழிகளாயிற்றே! உன்னை யார் உழைக்க வேண்டாமென்றார்கள்? உன்னை யார் மனைவியின் ஊதியத்தில் வயிறு வளர்க்கச் சொன்னார்கள்?" – மற்றொரு குரல் எதிர்வாதம் புரிந்தது.

"இல்லை; ஒருநாளும் இல்லை ... நான் தன்மானம் உள்ளவன் – அவள் உழைத்து அதன் மூலம் வரும் ஊதியம்கொண்டு பிழைக்க நான் ஒருநாளும் விரும்பியதில்லை. ...."

"நீ விரும்பினாயோ – இல்லையோ! நடப்பது அதுதானே!"

"இல்லையே! நானுந்தான் உழைக்கிறன் - பிடிக்காத வேலையொன்றைச் செய்து மாதம் ரூ. ஐம்பது கொண்டு வருகிறேன். ......."

'வெட்கமாயில்லை? உன் ஐம்பது ரூபாய் உன் ஒருவனுக்கே போதாதே? மேற்கொண்டு உன் தபால் செலவு; பத்திரிகைகளில் பெயர் தேடும் புகழாசை? கண்டதையெல்லாம் வாங்கிக் குவிக்கும் சிறுபிள்ளைத்தனம். இத்தனைக்கும் ஈடுகொடுத்துத் தானும் உழைத்து நீ செய்த பழிபாவங்களுக்குத் தானும் பொறுப்பேற்றுத் தன் பெற்றோர் உற்றார் உறவினரைக் கைவிட்டு நீயே கதியென்று ஒருத்தி உன் முன்னேற்றப் பாதையில் துணிந்து தன்னைப் பலி கொடுத்தாளே!...... அவள் நிலையைச் சிந்தித்துப் பார்த்தாயா? ..."

–வேணுவின் உள்ளத்தில் பலவீனமான பகுதியொன்று இருந்தது. அங்கேதான் அந்தராத்மாவின் இந்தச் சுடுகணை பாய்ந்தது.

அவனால் பதில் சொல்ல முடியவில்லை. உத்தமர் கோயிலில் நிற்பதற்காக வண்டி மெதுவாக ஊர்ந்தது. வண்டி நிறை பின்புதான் இறங்க வேண்டும் எனும் நியதியைப் பொருட்படுத்தாத எத்தனையோபேர் வண்டியிலிருந்து குதித்தோடினார்கள். வேணுவும் அப்படியேஇறங்கினான் - ஆனால் சிறு தவறு நேர்ந்துவிட்டது... நல்ல வேளையாகச்சிறு தவறுதான்... பிளாட்பாரத்தில் விழுந்த வேணு நினைவிழந்தான்!

ஓடும் ரயில்களை ஓடவிட்டு, ஓடவேண்டிய கார்களைத் தடுத்து வைக்கும் 'லெவல் கிராஸிங்' கதவுகளைப் பாராட்ட யாராவது விழா நடத்தினால் வேணு தாராளமாக நன்கொடை தருவான்!....

அடிபட்ட வேணுவை அன்று ஸ்ரீரங்கம் ரயில் நிலையத்தின் ஆதரவில் முதலுதவி தந்து திருச்சி பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்க அப்படிக் காத்திருந்த தனி நபரொருவரின் கார்தான் உதவி செய்தது.

வேணுவுக்குப் பெரிய மனிதர்களின் அந்தஸ்து வந்துவிட்டது ...அவன் நினைவு திரும்ப மூன்று வாரத்துக்கு மேலாகி விட்டது. இடையில் அவன் சாதாரண எழுத்தாளன்தானென்றாலும் அவனுக்கு நேர்ந்த இந்த மிகச் சாதாரண விபத்து பத்திரிகைகளின் 'சுடச் சுட' பகுதியில் நல்ல மதிப்பைப் பெற்றுவிட்டது. மதுரையிலிருந்து நண்பன் குடும்பத்துடன் வந்து பார்த்துப் போனதும், என்றோ ஏப்பம் விட்டதாக எண்ணிய "நாடோடி மோகினி"யின் பிரசுரகர்த்தர் "ரகசிய வெளியீடுகள்" உரிமையாளர் அந்தக் கதையைத் திரைப்படமாக்கத் திட்டமிட்டு கதைக்குரிய வெகுமதியாக ரூபாய் ஆயிரத்தையும் வெள்ளைப் பணமாகவே பாங்க் டிராஃப்ட் மூலம் வழங்கியதும் நினைவு திரும்பிய பின் படிப்படியாக வேணுவுக்குத் தெரிய வந்த விஷயங்கள்!...

"விழுந்தது விழுந்தேன்!.... ஒரு காலையாவது இழந்திருக்கக் கூடாதா?"—என்றான் சிரித்தபடி வேணு.

"ஏன்? வாழ்நாள் முழுவதும் என் தோளில் சவாரி செய்ய ஆசையாக்கும்?"—என்றாள் நீலா.

"அப்படியானால் இரண்டு கால்களையுமல்லவா இழந்திருக்க வேண்டும்?... அதற்காகச் சொல்லவில்லை .."

"நீங்கள் எதற்காகவும் அப்படிச் சொல்லவேண்டாம்—உங்களுக்கென்ன; எழுத்திருக்கிறது.... எழுத வாய்ப்பிருக்கிறது...." என்றாள் தன்னையும் மீறிய பெருமையுடன்-சிறிது பொறுமையுடன்-நீலா.

வாசலில் 'தபால்' என்ற குரல் கேட்டது. ஒரு கத்தையுடன் தபால்காரர் உள்ளே வந்தார். மூன்று மணியார்டர்கள்—ஏழெட்டு கார்டுகள்—இரண்டு கவர்கள்—ஐந்தாறு புத்தக அஞ்சல்கள்.

'எழுதிப் பிழைக்க முடியாது!' என்று யார் சொன்னது? வேணு எழுதித்தான் பிழைக்கிறான். அவன் எழுத்துக்கு இருபது வருட வறுமைத் தவம் உதவி புரிந்து வருகிறது. நாற்பது வருட வாழ்க்கை அனுபவம் உரமிட்டு வருகிறது! நீலாவுங்கூட வெளியில் வேலைத் தொல்லையில்லாமல் மனையரசியாகவே விளங்குகிறாள்!

# புனித சேவை

★

ராதிகா

தனக்கும் இவ்வுலகத்துக்குமுள்ள தொடர்பை சிந்தித்து, உலகுக்கும் நன்மை உண்டாகும்படி எழுதுவது தான் கண்யமும் கட்டுப்பாடும் கொண்ட சிந்தனையாளரின் சிறப்பாகும். வாழ்க்கை வெறும் வரவு செலவு பட்டியல்தான். அதுவும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் துன்பம்தான் மிஞ்சும்; ஆயினும் வாழ்க்கையில் உலகத்துடன் எதிர்த்துப்போராடத் துணிபவர்கள் ஓரளவுக்கு தம் வலிமையை எவ்வழியிலாவது பெருக்கிக்கொள்ள வேண்டும். நம்மால் வளரப்படும் சமுதாயம் வளமான பகுதியில் அன்போடுகூடிய இன்ப புரியிலே வாழ வேண்டும், ஆத்திரமும் அடிமைத்தனமும், பொறாமையும் போட்டியிட்டு வளரும் சமூகத்திலே கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று இருக்கும் தற்கால சூழ்நிலையிலே மக்கள் அவர்களையறியாமலே பலவித தாழ்மையான மனக் கிளர்ச்சிகளுக்குள்ளாகி, தாழ்ந்து போய், படுகுழியிலே வாசம் செய்வதை தடுத்தாக வேண்டும்.

மகிழ்ச்சி, கோபம், வேடிக்கை, வேதனை, கிளர்ச்சி இத்யாதி எத்தனையோ உணர்வுகளால் உழன்று கொண்டிருக்கிறது உலகம். மடமையில் சூழ்ந்திருக்கும் எண்ணற்ற மக்கள் எவ்விதக் குறிக்கோளுமின்றி இயக்கப்பட்டு வருகின்றனர். அப்படியும் சிலர் நம்மால் உலகுக்கு முடிந்த நன்மையைச் செய்யவேண்டும் என்றால் ''வேண்டாம் நீ செய்வதால் மட்டுமே சமூகம் சரிப்பட்டுவிடுமோ ! கஷ்டம் விடிந்துவிடுமோ ! அவரவர் வேலையை அவரவர் செய்தால்தான் உலகம் உருப்படும்.'' வலிய ஏன் வீண் கஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டு ஏன் நாம் துன்பப்படவேண்டும்'' என்று நன்மை செய்ய வருபவரையும் தடுத்து நிறுத்தும் பிரகிருதிகள் இல்லாமல் இல்லை. மீறினால் ஏச்சும் பேச்சும். அதற்காக விடுவதா? போராடித்தான் ஆக வேண்டும்.

சிலருக்கு செய்யவேண்டுமெனத் தோன்றும். சோம்பல் சூழ்ந்துகொள்ளும். அதையும் மீறி இலட்சியப்பாதையிலே இறங்குபவர்கள் விவேகத்துடன் எல்லை கட்டிக்கொள்ளவேண்டும். வெறி, சோம்பல், மடமை இவைகள் பல நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக பரிணமித்து மனித உருவுடன் இணைந்து அந்த பரிதாபத்துக்குரிய மிருகத்தை மனிதப் பண்புகளுடன் வாழவிடாமல் வதை செய்யும். அவற்றை விவேகத்துடன் அகற்றிட வேண்டும்.

''எப்போதும் உன்னைப்பற்றி நினைப்பது தவறு. எதிலாவது உன் இதயத்தை இழப்பதுதான், தன்னைப் பற்றிய எண்ணத்தை மறப்பதுதான் இன்பத்தின் அடிப்படை'' என்பதை மறக்கக் கூடாது. அதனால் தான், தியாகம் என்ற பேரின்பம் வாழ்வில் உயர்ந்து நிற்கிறது. சுதந்திரமற்றவர்கள் என்ன செய்வது? அதற்கு மிகச் சுலபமான வழி, ஆனால் பலன் பெரிது. உழைப்பு கடினமல்ல. செயலின் மூலம் வெளியில் சென்று உதவ இயலாதவர்கூட தங்கள் எழுத்தின் மூலம் மனிதப் பண்பை நிலைநாட்டி சமூகம் முன்னேற வேண்டும் என்றே தோன்றியுள்ள இந்தப் புனிதமான எழுத்துக்களை. அதைக் களங்கம் என்ற புகை மூடிய இருண்ட குகையாக்காமல் தெய்வ சாந்நித்யம் கமழும் இடமாகக் கருதி, அமைதியாகவும் ஆறுதலாயும் வழிகாட்டும் ஒளியாயும் கைக்கொள்ளவேண்டும்.

கடவுள் சந்நிதானம் களிப்பை உருவாக்கும் இடமல்ல. கவலையைத் தணிக்கும் இடம். குறைபட்ட உள்ளங்கள் தங்கள் மனச் சுமையைத் தீர்த்துக்கொள்ளக் கூடுமிடம்.

அந்த லட்சியம் கற்பனைதான். மனித சமுதாயம் தான் அதை அடைய வேண்டும் என்று அமைத்துக் கொண்ட உன்னதமான இலட்சியம். உயர்ந்த பண்புகள். ஒழுக்கம், தேர்ச்சி, மகிழ்ச்சி, நிம்மதி, ஒழுங்கு, கருணை-கட்டுப்பாடு திறமை, உண்மை இவைகளின் கூட்டுச் சரக்கே கடவுள் சந்நிதானம். அந்த லட்சியத்தை நாம் அடைய வேண்டும் என்பதைத்தான் ஆண்டவனை நாம் அடைவது என்று சுருக்கிச் சொன்னார்கள் முன்னோர்கள். அதைப்போல எழுத்தை நாம் இறைவன் சந்நிதானமாகவே எண்ணிப் புனித கைங்கர்யமாய் கைக்கொள்ள வேண்டும். அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து இழுத்து ரயிலை நிறுத்துவது போல சமுதாயத்தின் அழுக்காறுகளைத் துடைத்து நிறுத்த வேண்டும்.

துடிக்கத் துடிக்க வாட்டி வதைக்கப்படுபவர்கள் எதிர்க்கும் சக்தியை இழந்துவிடும்போது சிந்திக்கத் தொடங்கிவிடுகின்றனர். ஒழுக்கத்தோடு வாழ உபதேசங்களைத் தெரிந்துகொள்வது மட்டுமே போதாது. உரமுள்ள நெஞ்சும் வேண்டும். சமுதாயத்தில் சாக்கடை என்பதைக்கண்டு அதை அப்படியே விட்டு விட முடியுமா ? அதை அடிக்கடி சுத்தப்படுத்தினால்தானே நல்லது ? அதுபோல கீழ்த்தரமான எண்ணங்களில் அமிழ்ந்து தடுமாறும் மக்களை நல் முறையில் திருப்ப, பண்பு வளரும்தன்மையில் எழுதி மக்களது தன்மைக்கு வழிகாட்ட வேண்டும்.

விரலில் புண் என்பதால் கையையே வெட்ட முடியுமா ? ஆனால் புரையோடாமல் பார்க்க வேண்டியது முறைதானே ! புற்று நோய் என்றால் உயிரோடு புதைக்க முடியுமா ? அழுகிப்போன உள்ளம் படைத்தோர் கையில் சிக்கினால் ஆசிரமங்கள் கூட ஆபாசக் கூடங்களாக மாறும்-என்பது விளக்கத் தேவையேயில்லை. மலிவும் மன நெகிழ்வும் கூடிய மட்ட ரகங்-

களில்தான் பலரும் மனதை செலுத்துகின்றனர்' மெருகு-முலாம்-கலப்பு இமிடேஷன் பெயர் மினுமினுப்பு, வார்த்தைகளின் வார்த்தை ஜாலம் இவைகளில்தான் இதயம் மயங்குகின்றது சிலருக்கு. இந்த நிலையில் நன்மை தீமை தெரியாத மக்களுக்கு நன்மை என்ற கசப்பு மருந்தை அளித்து, வாழவைக்கவேண்டுமானால் கசப்பான உண்மையை விளக்க, கசப்பு மருந்தை தேனில் குழைத்து தருவதுபோல அன்பு வழியுடன், எவர் மனதையும் புண்படுத்தாத வகையில் எடுத்துரைத்து குறிப்பாக சொல்வதை சிறிது மறைத்து சிறிது விளக்கி அவர்களாகவே புரிந்து கொள்ளும்படி விளக்க வேண்டும். சொல்லும் சொல் ராமபாணம் போல் தன் இலக்கை மாறாமல் பாய்ந்து நலப்படுத்துவதாய் இருக்க வேண்டும். சமூகத்தில் விழுந்து உழலாமல் பட்டுப் படாமலும் உலகைப் பார்ப்பவர்களால்தான் அனுபவித்து எழுத முடியும். போட்டோ எடுக்க வேண்டுமானால் எதிரே நின்றுதான் எடுக்கவேண்டும். இதே வகையில் எழுத்தாளரும் சமூகத்திலிருந்து ஒதுங்கி நடு நிலைமையில் இருந்து சிருஷ்டி படைப்பின் கரையில் நின்று நோக்கில் அனுதாபமும் ஆதரவும் கொண்டு பார்த்துவர வேண்டுமேயன்றி அதில் ஊன்றி மூழ்கிவிடக் கூடாது.

எழுத்தாளர்கள் ஊதுவத்திபோல தன்னை தியாகம் செய்துகொள்ளும் சுபாவம் படைத்தவர்கள். கடவுள் சந்நிதானத்தில் வைத்திருக்கும் ஊதுவத்தியாகத்தான் திகழ வேண்டும். சில சமயம் ஆபாசமான சம்பவங்கள்போன்ற செய்தியை வரையும்போது அவர்கள் சவக்குழிக்கருகே வைத்துள்ள ஊதுவத்திக்குச் சமானமாக ஆகிறார்கள். சவக்குழி நாற்றம் போக்க முயல்வது நல்லது ஆயினும் அந்த துர்வாடையிலேயே தானும் ஐக்கியமாகிவிடாமல் தம்மைக் காத்துக்கொள்ளும் துணிவும் விவேகமும் பட்டும் படாமல் தாமரை இலைத் தண்ணீர்போன்ற தன்மையும் கொண்டிருத்தல் வேண்டும்.

மனிதர்களை, எழுத்தாளர்கள் மிருகங்களாக ஆக்குபவரல்ல. மிருகங்களையும் மிருகக் குணமுள்ளவரையும் மனிதப் பண்புள்ளவராக்கும் சக்தி பெற்றவர்கள், அந்த வல்லமையை ஆண்டவனிடம் இறைஞ்சிப் பெற்று எழுத்தில் காட்டக்கூடியவர்கள்.

மயில் ஏன் இருக்கிறது ? கண் உள்ளவர் பார்த்து மகிழ ! குயிலின் குரலில் ஏன் அத்தனை இனிமை ? அதன் குரல் கேட்பவர் மகிழ்ந்து மெய் சிலிர்க்கத்தானே? குயிலின் குரல் கேட்டு மகிழ்பவர் நிறம்கண்டு மெய் சிலிர்ப்பார்களா ? மயிலின் ஆடல்கண்டு மயங்குபவர் அதன் குரல் கேட்டு பரவசமுறுவார்களா ? அதேபோல வாழ்வில் இன்பம் துன்பம் இரண்டுந்தான் இணைந்து நிற்கிறது. சமூகத்தில் குறைபாடுகளும் நிறைந்த பயனும் இணைந்துதான் இருக்கும். எல்லாமே பூரண பலமாய் உயர்ந்துவிட்டால் மமதையும் அட்டகாசமும் பொறுக்க முடியுமா ? பசுமை நிறைந்த வயலும் நிலவொளி வீசும் நீலவானும் இருப்பானேன்? ரசிக்கும் இதயம் படைத்தவர்களைத் திருப்திப்படுத்த ! இருண்ட குடிசைகளும் மருண்ட வாழ்வும் கண்ணீரே ஜீவனாகவுமுள்ள மக்களுக்கும் வாழ்க்கை எதற்கு ? சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு வேலை கொடுக்கத்தான்; ஆனால் மற்ற எதற்காகவும் இல்லாது தனக்காகமட்டுமே வாழ்பவர்கள் இவற்றால் என்றுமே மகிழ்வோ இரக்கமோ கொள்ள முடியாது. அவர்களால் உலகுக்குப் பயன் ஏதும் கிடைக்கவும் இயலாது. கர்வம் அல்லது கண்ணீர் இரண்டில் ஒன்றைத்தான் உண்டாக்கியிருக்கிறது உலகம் என்பதை மறக்கக்கூடாது. எனவே மக்கள் நிலை பண்பும் பாசமும் கொண்டு முன்னேற சிந்திப்போம் ; செயல்படுவோம். எழுத்தாளர்கள் ஒன்றுபடுவோம்.

## பீப்பாய்க்குள் பிரபஞ்சம்

கோலோன் - (டாட்) - விண்வெளிப் பயண முயற்சிகளில் எதிர்ப்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்குத் தீவிர ஆராய்ச்சிகள் நடத்துவதற்காக ஒரு பிரம்மாண்டமான உலோகப் பீப்பாய்க்குள் ஒரு "குட்டிப்பிரபஞ்ச"த்தை மேற்கு ஜெர்மன் விஞ்ஞானிகள் உருவாக்கி வருகிறார்கள். வலிமையான உலோகத்தில் 40 அடி உயரத்தில் இந்த பீப்பாய் அமைந்திருக்கிறது. மின்சார பம்பு மூலமாக இதனுள்ளிருக்கும் காற்று முழுவதையும் வெளியேற்றிப் பீப்பாயைச் சூனியமாக்குகிறார்கள். பிறகு அதற்கு வானவெளியிலுள்ள சூழ்நிலை, வெப்ப நிலை ஆகியவற்றை அப்படியே அமைக்கிறார்கள். இந்தக் குட்டிப் பிரபஞ்சத்திற்குள் உறைநிலைக்குக் கீழ் 330 டிகிரி பாரன்ஹீட் வரை வெப்பநிலையை ஏற்படுத்தலாம். இவ்விதம் உருவாக்கப்பட்ட செயற்கைப் பிரபஞ்சத்தில் வானவெளி ஆராய்ச்சிகளை நடத்துகிறார்கள்.

# "உயர்வும், தாழ்வும்"

★

கரூர் கே. ஆர். பசுபதி

" இருளிலிருந்து ஒளிக்கு இட்டுச்செல்!
பொய்யிலிருந்து உண்மைக்கு இட்டுச்செல் "
- இது ரிக் வேதம் !

இதைத் தமிழ்ப்புலவர்கள் ஒப்பற்ற முறையில் விளக்கியுள்ளனர்.

சங்ககாலப் புலவர்கள் காட்டிய பாதை, இன்றைய தமிழ்ச்சமுதாயம் இழந்த நாகரீகமாகும்.

" புலமை " என்ற சொல் "புலம்+மை " என்பதாம். "புலம்" என்றால் தடம்; வழி. "மை" என்றால் இருள்; மயக்கம். புலமை என்றால் இருளில் ஒளி காட்டுவது ; மயக்கந் தெளிவித்து வழி காட்டுவது என்று பொருள்.

வேத விளக்கத்தை ஒரு சொல்லால் குறித்துக்காட்டும் இணையற்ற சொல்லே புலமை! இதைச் செய்யும் கருவியே புலவன் !

இப்படிப்பட்ட புலவனின் பாடலைக் கொண்டே ஒரு சமுதாயத்தின் உன்னதமான வாழ்வை, சிந்தனையை, நாகரீகத்தை அளந்துவிடலாம்.

வரலாறு விளக்கிக்காட்ட முடியாத, அதற்குரிய வாய்ப்புகளற்ற காலத்தில், தமிழன் எதைச் சிறந்ததென்று கருதினன்? எதை ஒதுக்கினன்? எவ்வாறு வாழ்ந்தான்? அவன் உள்ளக்கிடக்கை என்ன? என்பதை அவன் பாடிய பாடல்களே சான்று கூறி நிற்கின்றன.

"புலமை" என்ற சொல்லுக்கு விளக்கந் தந்தபடியே தமிழர்கள் வாழ்ந்தார்களா ? ஆம்! என்றே விடை வரும்

பொய்யிலிருந்து உண்மைக்கு வழிகாட்டுவதே புலவன் வேலை. காசுக்காகப் பொய் கூறும் தொழில் அன்றைய தமிழ்ப்புலவனுக்குக் கிடையாது! சங்க காலப் புலவனுக்குக் கிடையாது! பிறர் புகழ வேண்டுமென்பதற்காக இருண்ட பகுதிக்கு இட்டுச் செல்லும் பாடல்களையோ, மக்களுக்கு மயக்கமூட்டும் பாடல்களையோ அவன் பாட மாட்டான்! இச் சகம் பாடி இகசுகம் நாடி, இறைவனைப் புகழாத பரம்பரை, சங்கப்புலவர் பரம்பரை! அவர்கள் " நா" "செந்நா."

பாட்டைப் பாருங்கள்.

"பீடு இல் மன்னர் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யாது ஆகின்று எம் சிறு
செந் நாவே." - புறம்-148

இல்லாததைக் கூறாத நா, செந்நா! அடக்கமுடன் கூறிக்கொள்ளுகின்றார் 'சிறு செந்நா' என்று வன்பரணர்!

இந்தப் புலவர்களை வைத்தே தமிழ் நாகரீகத்தை அளக்க வேண்டும். இவர்களே சான்றோர்.

பொய் கூறாத, பொய்யா மொழிப் புலவர்கள்! இதுவே அவர்கள் உயர்வென்று கருதியது!

இன்றைய புலவருலகில் இது பெரிதும் இல்லையென்று கூறுவதில் உரத்த எதிர்ப்பு வராதல்லவா?

அன்றைய புலவன் எதைத் தாழ்வு என்று கருதினன் என்பதையும் காணலாம்!

நாம் எதை இன்று தாழ்ந்தது என்று கருதுகிறோம்?

இந்தக்கேள்விக்கு நேரான விடை கிடைக்காது. ஒன்று மட்டும் உறுதி. அன்றைய புலவன் எதைத் தாழ்ந்தது என்று எண்ணினனோ, அதையே உயர்ந்தது என்று கருதும் மனோபாவமே அழுத்தமாக இருக்கும்!

அன்றைய தினம் ஒருவனிடம் "தா" என்று கேட்டால் இழிவு!

இன்றோ கேட்டு வாங்கும் வேளை! வேலையுங் கூட!

அன்றைய உலகம் எதைக் கேவலம் என்று கருதியதோ அதுவே இன்றைய தினம் ஒரு கலையாகப் பயிலப்பட்டு வருகின்றது!

அன்று "தா" என்பது கேவலம்! அதாவது இப்படித்தான் வாழ வேண்டும் என்று இலக்கணங் கூறிய உலகு அது!

இன்று எப்படியாவது வாழவேண்டும் என்று அதற்காகவே திரியும் உலகு இது.

தனக்குச் சமமாக உள்ளவனிடம் கேட்கும் போது "தா" என்று சொல்கிறுன்! சற்று உயர்ந்தவனிடம் கோரும்போது "ஈ" என்கிறுன்!

உயிர் எவ்வகையிலும் காக்க வேண்டும் என்ற நிலையில், அதற்காக ஒன்றை அவசியம் பெற்றுக வேண்டும் என்ற நிலையில், எப்படியும் வாழ்ந்தாக வேண்டுமென்ற நிலையில், தனக்குத் தேவையான ஒன்றைப் பிறனிடமிருந்து, ஒத்த முறையில் "தா" என்று கேட்கிறுன்.

உயர்ந்தவனிடம், மேட்டுக்குடி மகனிடம், "ஈவாயாக" என்று இரத்தல் மிகவும் இழிவாகக் கருதப்பட்டது!

மானத்தைவிட்டுக் கேட்டும், இல்லை என்று சொல்வது அதைவிடக் கேவலமாம்!

முன்னிற்கும் முகம் பார்த்துக்"கொள்" எனக் கொடுப்பதே உயர்வாகும்! அதையும் வேண்டாம் என்று மறுப்பது அதைவிட உயர்வாகும்!

ஒருவனுக்கு ஒன்று கொடுப்பது அன்று அவ்வளவு சுலபமல்ல! ஒன்று வேண்டுமென்று கோருவதும் ஒருவன் உயர்வாகக் கருதவில்லை!

இதைப் பெறுகிறேமே என்ற மன வருத்தம் வாங்குவோனுக்குச் சிறிது கூட வராமல் தரும் கலையை அன்றைய சமுதாயம் வளர்த்து வந்தது!

தண்ணீர் தந்தால் பசு பிழைக்கும். ஆனுல் தண்ணீர் கோரினுல் மானம் போய்விடுமோ என்றஞ்சியவன் அன்றைய தமிழன்.

> "ஆவிற்கு நீர் என்று இரப்பினும் நாவிற்கு
> இரவின் இளி வந்தது இல்" —குறள்

மானத்தை இழந்து ஒரு பொருளைக் கேட்பது இழிவு!
கேட்டும் இல்லையென்பது அதைவிட இழிவு!
குறிப்புணர்ந்து தருதல் உயர்வு!
அதை வேண்டாமென்று மறுத்தல் அதைவிட உயர்வு!

இத்தனையும் தாண்டி, கொள்வோன் மனம் நோகாமல் பெறவைப்பது சாதாரணமானதல்ல!

இன்றைய உலகம், தமிழ்ச் சமுதாயம் இழந்த கருந்தனம் இது! இத்தகைய நாகரீகம் தமிழகத்தைத் தவிர எங்கும் காண்பதரிதாம்!

> "ஈ என இரத்தல்
> இழிந்ததன்று அதன் எதிர்
> ஈயேன் என்றல்
> அதனினும் இழிந்ததன்று
> கொள் எனக் கொடுத்தல்
> உயர்ந்ததன்று அதன் எதிர்
> கொள்ளேன் என்றல்
> அதனினும் உயர்ந்ததன்று" —புறம்- 204

நாம் இழந்துவிட்ட நாகரீகம் நான்கடிகளில் கூறிவிட்டனர்! மீண்டும் தலை தூக்குவோமா?



## ஒரே தண்டவாளத்தில் ஓடும் இரயில்!

எஸ்ஸென் - (டாட்) - ஒரே தண்டவாளத்தில் ஓடும் இரயில்கள் மிக விரைவில் மேற்கு ஜெர்மனியில் போக்குவரத்துக்கு விடப்படவிருக்கின்றன.

ஸ்விடனைச் சேர்ந்த ஆக்ஸல் எல். வின்னர் கிரென் என்ற பெரிய வணிகர் இந்த நூதன இரயிலைக் கண்டு பிடித்தார். இந்த ஒரே தண்டவாள இரயில் போக்குவரத்து முறையை இப்போது முதன் முதலாக மேற்கு ஜெர்மனியின் தொழில் நகரமான எஸ்ஸெனில் அமைத்து வருகிறார்கள். போக்குவரத்து அதிகமுள்ள பகுதியில் 12 அடி உயரத்தில் ஒற்றைத் தண்டவாளத்தில் இந்த இரயில் ஓடும். 100 பேர் செல்லக்கூடிய இரயில் கார்கள் இந்த இரயில் தொடரில் இணைக்கப்படும். இரயில் ஏற 800 கெஜ தூரத்திற்கு ஒரு மேடை அமைக்கப்படுகிறது. இந்த இரயில் மணிக்கு 50 மைல் வேகத்தில் செல்லும். போக்குவரத்து நெருக்கடியைச் சமாளிக்க இது பெரிதும் உதவும்.

# திருவள்ளுவரின் சொல்வகை

★

புலவர் சி. அரசப்பனூர்

திருவள்ளுவர் முக்காலத்திற்கும் உரிய கருத்துக்களைத் தெளிவாகச் சொன்னவர். அவரால் எழுதப்பட்ட கருத்துக்கள் இந்த நூற்றாண்டிலும் பயன்படக் கூடியன. இன்றையத் தலைவர் என்று சொல்லக்கூடியவர்களில் பலர் தாம் விரும்பிச் சொல்லி வளர்த்த கருத்துக்களைத் தாமே புறக்கணிக்கின்றனர்; மறுக்கின்றனர். இதுவா மெய்யறிவு?

வள்ளுவர் எதையும் எண்ணிச் சொன்னதால், அந்தப் பொருளின் பெருமை சிறப்படைகின்றது. ஒவ்வொரு சொல்லையும் இடமறிந்து பொருள் பெருமை அறிந்து தக்க உவமையுடன் கையாளுவதால் இன்றும் அதன் பெருமையை நாம் உணர முடிகின்றது.

நம் காலம் ஜனநாயக காலம். இக்காலத்தில் எந்த இயக்கத்தினர் தம் கருத்துக்களை எழுத்தின் மூலம் அல்லது பேச்சின் மூலம் நன்ருக விளம்பரம் செய்கின்ருர்களோ அவர்களே மக்களால் மதிக்கப்படுகின்றனர்; தேர்தல் காலங்களில் பெருவெற்றியும் உறுகின்றனர்.

எழுத்து நிதானமாகச் சென்று எண்ணத்தை மாற்றிச் செயலுருவம் கொடுக்கும்.

பேச்சு அப்படியல்ல. பேச்சின் தரத்திற்குத் தக்கபடிக் கூட்டத்தாரை உணர்ச்சி வயமாக்கிச் செயலுக்கு உடனே தூண்டி விடும். அத்தகைய பேச்சாளர்கள் எத்தகைய சொற்களைக் கையாள வேண்டும்? இக் கேள்விக்கு திருவள்ளுவரின் பதில் என்னவென்று பார்ப்போம்.

## 1. மழலைச் சொல்

தம் மக்கள் பேசும் சிறுசொல் பொருள் புரியாவிட்டாலும் மிகுந்த இன்பம் தருவது. இசைக் கருவிகளில் மிகவும் இனிமையான ஓசையைத் தருவன குழலும் யாழும். ஆனுல், தம் குழந்தைகளின் பேச்சு குழலையும் யாழையும்விட இனிமை தருமாம். இப்படிச் சொல் முழு வடிவம் பெறுமுன்பே அதற்கு இனிமை கற்பிக்கிருர். பிள்ளை நம்பிள்ளையாய் இருக்க வேண்டும்! அப்போதுதான் அந்த மழலை மொழி பொருள் விளங்கும்! இப்படி, ஒரு சொல் மனித வாழ்க்கைபோல் வள்ளுவருக்குத் தென்படுகிறது.

## 2. இனிய சொல்

மக்களின் அறத்தில் ''இனிய சொல்'' சொல்லுவதும் ஒன்று. முடிந்தவர் தக்கார்க்கும், வறியர்க்கும் கொடுக்கலாம். பொருமையும், பேராசையும், கோபமும், கடுஞ் சொல்லும் இல்லாத நற்செயலே 'அறம்' என்று கூறுகின்ருர். எனவே, இனிய சொல் கூறலே அறம். விரும்பிக் கொடுப்பதினும் முகம் மலர்ந்த இனிய சொல் சிறந்ததாம்! இனிய சொல்லர் என்றும் துன்புறுதலும் இல்லை; வறுமையுறுதலும் இல்லை. ஒரு மனிதனுக்குச்சிறந்த அணி அடக்கமும் இனிய சொல்லுமாகும்.

இனிய உளவாக இன்னுத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. —100

என்ற குறள் யாவரும் சொல்லக் கூடியதே.

## 3. பணி மொழி

எப்போதும் மனிதன் அடக்கமாக இருக்க வேண்டும். ஐந்து புலன்களும் வேண்டுங்கால் பணிபுரியவும் வேண்டாக்கால் அடங்கிக்கிடக்கவும் வேண்டும். ஐந்து புலன்களில் எதை அடக்காவிட்டாலும் 'நாவடக்கம்' மிகவும் முக்கியமாகும்.

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. —127

இக்குறள் பணிமொழியை வற்புறுத்துகிறது.

நல்நடத்தைபற்றிக் கூறும்போதும் கடுஞ் சொல்லைக் கூறுவதைக் கண்டிக்கின்ருர். பொறுமைக் குணத்தை வற்புறுத்திக் கூறும்போது பிறர் இகழுரையைப் பொறுக்கவேண்டுமென்று கூறுவதிலிருந்து அதன் முதன்மை தெரிகிறது.

வேண்டாத சொற்களாக வள்ளுவர்: இகழுரை, புறங்கூறல், கடுஞ்சொல், பயனில சொல், பொய்யுரை முதலியவற்றைக் கூறுகின்ருர். இல்லிலும், மேடைகளிலும், நண்பர் உரையாடலிலும் எப்போதும் இக்குறைபாட்டை நீக்க வேண்டும். ஆனுல், மனிதன் பேசாதிருக்க முடியுமா? படித்ததையும், எண்ணி எண்ணிச் சிந்தித்துத் தான் கண்ட முடிவையும், கண்டு கேட்டதையும் எழுதா

மலும் சொல்லாமலும் இருக்கமுடியுமா? நிச்சயம் முடியாது. கோடிக் கணக்கான மக்கள் இன்றும் எழுதாமல் வாழுகின்றார்கள்! ஆனால், பேசாமல் வாழுவார் உண்டா?

குழந்தைப் பேச்சு பெற்றோருக்குப் பேரின்பம் தருகின்றது. காதலர்களுக்குப் பேச்சின்றி முடியுமா? மேடைப் பேச்சாளர்களுக்குப் பேச்சே கலை. அக் கலைக்கே அவர் வாழ்வு. அவர் வாழ்வை வளம் படுத்துவதும் வறுமைப் படுத்துவதும் பேச்சே. வாணிகர்கள் பேச்சால் பெரும் பொருள் திரட்டு கின்றனர். மருத்துவர் மருந்தால் பாதி நோயை யும், இன்னுரையால் பாதி நோயையும் குணப் படுத்துகின்றார். வழக்குரைஞர்களுக்கோ பேச்சில் பொருள்மட்டுமா? புகழும் தேங்கிக்கிடக்கின்றது. சட்ட சபையும், பாராளு மன்றமும் நல்ல பேச்சாள ரின் நல்லுரையில் மயங்கிக்கிடக்கின்றது. இத் தகைய பேச்சு உயர்வடைய வழி என்ன?

## 4. பயன் சொல்

சொற்களுக்கு முழு வாழ்க்கை உண்டு. மனித வாழ்வைக் காட்டிலும் பெருவாழ்க்கை உண்டு தமிழ்ச் சொற்களுக்கு. அவற்றை நுட்பமாக உணர்ந்து பேசவேண்டும்; எழுத வேண்டும்.

'சொல்லுக சொல்லிற் பயனுடைய, — 200

என்ற திருவள்ளுவர் சொல் பயனுடையது. பயனு டைய பேசுகின்றவர் புகழப்படுவார்.

## 5. வாய்மை மொழி

நாம் எப்போதும் வாய்மையே பேசவேண்டும். காந்தியடிகளும் 'சத்தியம் அஹிம்சை என்றுமே என் வாழ்வின் அடிப்படை' என்றார்கள். தீமையற்ற சொற்களைச் சொல்லவேண்டும். மனம் அறிந்த பொய்யைச் சொல்லக்கூடாது. குற்றமற்ற பொய் மெய்யுரையாகும் என்ற வள்ளுவரின் கருத்தை உலகமே சிந்திக்க வேண்டும்.

மனத்தொடு வாய்மை மொழியில் தவத்தொடு
தானஞ்செய் வாரிற் தலை. —295

எல்லாவித அறத்தையும் இழுத்துக்கொண்டுவரும் தலைப்பு மணிக்கயிறு வாய்மை. மெய்யால் நிலைத்த புகழும் கிடைக்கும். உடல் தூய்மை நீரால் கிடைக்கிறது. அகத் தூய்மையை மெய் யுரையால் அறிகிறோம். எனவே, மெய்யுரைதான் ஒருவனை மேலாக்கும் ஏணிப்படியாகும். மனிதன் உயர இதைத்தவிர வேறு வழியே கிடையாது. உலகப் பொருளில் தானே ஒளிரும் பொருள்களும் உண்டு சூரியனைப் போல. ஒளியை ஏற்று ஒளிரும் பொருள்களும் உண்டு சந்திரனைப்போல. ஒளியை விழுங்கி இருந்தவண்ணமே இருக்கும் பொருள் களும் உண்டு மண்போல. நற்குணம் நிறைந்தவர் வாய்மை மொழியால் பிறருக்கு விளக்காக ஒளிரு கின்றார்.

'மனிதன் அகல் போன்ற ஒளியை இமய ஒளியாக உயர்த்த முயலவேண்டும். அப்போது தான் அவனை உலகம் அறியும்' என்ற நாடக ஆசிரியர் பெர்னார்ட்ஷா கருத்தையும் ஒப்பிட்டு மகிழலாம்.

## 6. சுருக்கமான சொல்

வீட்டிலும் நாட்டிலும் சுருங்கப் பேசுகின்றவர் களையே விரும்புவார்கள். இனிய பேச்சு; எளிய பேச்சு; மெய்யான பேச்சு; சுருக்கமான பேச்சால் மேலும் பொலிவுறும். இனியசொல்கூட நீட்டித்துப் பேசும்போது அழகு குறையும். உண்மையைக் கூட நீட்டி நீட்டிச் சொல்ல எத்தனிக்கும்போது வன்மை குறையும். எனவே, சுருக்கமான திட்ட மான பேச்சு பெருமை பெறும்.

திருவள்ளுவர் அமைச்சரின் இயல்பைக் கூறும்போது,

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு. —634

என்றார். வழவழாப் பேச்சு கூடாது. இனிமையாக அதே சமயத்தில் தெளிவாக உறுதியுடன் திட்ட மாக அமைச்சர் எதையும் சொல்ல வேண்டுமாம்! ஆளுக்கொரு அர்த்தம், பொழுதுக்கொரு பொருள் கொள்ளும் விதத்தில் பொறுப்பானவர் பேச்சு பேச்சு இருக்கக்கூடாது. தற்காலத்தில் கட்சித் தலைவர்களும் இதில் கவனம் செலுத்தினால் நாடு நலமுறும்.

## 7. வலிய சொல்

இக்காலப் பேச்சாளர் மிகவும் கவனிக்க வேண்டியது இதுதான். நன்மையும் தீமையும் பேச்சால்தான்.

ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு. —642

நம் எல்லா நலத்தையும் காப்பது நாநலந்தான். நம் பேச்சு கேட்கின்றவர்களைப்பிணிக்கவேண்டும். அது மயக்கமாக இல்லாமல், உள்ளத்தில் சென்று தங்க வேண்டும். முடியும்போது, "பேச்சு முடிந்து விட்டதே என்று கேட்பவர் ஏங்க வேண்டும். பேச்சால்" கூட்டத்தார் உணர்ச்சி வயப்பட்டு அழியும் உணர்ச்சி அலையாகப் போகக்கூடாது. உள்ளுணர்ச்சியில் நல்லுணர்ச்சிகளைத் தூண்டி விட்டுச் செயலுக்குத் தயார் செய்ய வேண்டும். மனதைப் பண்படுத்திச் சில நல்ல கருத்து விதை களைத் தெளிக்க வேண்டும். தாமே அறிவைக்

கூராக்கிப் பின் மழுங்க அடித்துவிடக் கூடாது. கூர்மையுடன் செல்லும்படிப் பேச்சை முடிக்க வேண்டும்.

> கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
> வேட்ப மொழிவதாம் சொல். —643

இக்குறள், பேச்சாளர் இதயத்தை என்றும் அலங்கரிக்க வேண்டும். 'எந்த இடத்தில் எந்தச் சொல்லைச் சொல்ல வேண்டும்' என்பதுதான் சொல்லின் வன்மையாகும். ஒரு சொல்லைப் போட்டால் அந்த இடத்தில் வேறு எந்தச் சொல்லைப் போட்டாலும் சரிப்படாத, பொருள் நிறைந்த பொருத்தமான சொல்லையே இடவேண்டும். நம் சொல்லைப் பிறர் கேட்கவேண்டும் என்று விரும்புவது இயல்பு. அதே போல் பிறர் சொல்லையும் நாம் விரும்பிக் கேட்டுப் பொருள் கொள்ள வேண்டும். அத்தகைய வல்லோர் சொல்லை உலகமே கேட்டு நடக்கும்! சில சொல்லில் வலிய கருத்தைத் தெரிவிக்க அறியாதவர்கள்தான் நீட்டிப் பேசுவர். நம் மனதில் இருக்கும் கருத்தைப் பிறர் மனங்கொள்ளக் கூற வேண்டும். திரிபுணர்ச்சிக்கு இடங்கொடுக்கக்கூடாது. வாசனை அற்ற மலருக்கு மதிப்புண்டா? அதே போலத்தான் பல கற்றும் பிறர் மகிழப் பேசத் தெரியாதார் நிலை.

## 8. நகைச் சொல்

எத்தகைய கருத்தைத் தெரிவித்தாலும் நன்ருகப் புரிந்து, பிறருக்குப் புரியச் சொல்ல வேண்டும். எத்தகைய உண்மையாயினும் சுருங்கக் கூறினும் நகைச்சுவை அற்ற பேச்சு களைப்பையே உண்டாக்கும். கேட்கின்றவர் களைப்படைந்து விட்டால் பேச்சிற்குப் பயனுண்டோ? எனவே, இடை இடையே நல்ல பொருத்தமான உயர்தரமான நகைச்சுவையைக் கலக்கவேண்டும். நகைச்சுவை களைப்பைப் போக்கும். மேலும் மேலும் சொல்வனவற்றைக் கேட்கும் மன இளக்கத்தையும் தெளிவையும் கொடுக்கும். மனவிசாலம் நகைச்சுவையால் ஏற்படும். அறிவு விசாலம் நல்ல நூற்களை ஆழ்ந்து கற்பதாலும் தியானத்தாலும் ஏற்படும்.

தெய்வப்புலவர் திருவள்ளுவர் தூதுவர் இயல்பைக் கூறும்போது இதை விளக்குகின்ருர்.

> தொகச் சொல்லித் தூவாத நகச்சொல்லி
> நன்றி பயப்பதாம் தூது. —685

எனத் தூதுவர் சுருக்கமாகவும் இனிமையாகவும் நகைச்சுவை மெல்லிய அளவில் மின்னிப் பொலியுமாறு கூறவேண்டும்.

இத்தனை திறமையும் பேச்சாளன் பெற்றுங் கூடச் சபையின் இயல்பை அறிந்து கொள்ளவில்லை யென்ருல், வெற்றி பெற இயலாது. எளிய கூட்டமென்ருல் அதற்குத்தகவே பேச வேண்டும். புலமைமிக்க கூட்டமென்ருல் அறிஞரும் வியப்புறும் வண்ணம் சிலபல ஆராய்ச்சிக் கருத்துக்களைத் தூண்டும் விதமாகக் கூறவேண்டும். முந்திரிக் கொட்டைத் தளத்தை அறவே விடவேண்டும். அழைத்துத் தலைவர் அறிமுகம் செய்தபின் காலமறிந்து இடமறிந்து பேசவேண்டும். ஐம்புலன்களும், மனத்தின் சிந்தனையும் ஆண்டுபலவாகச் சேகரித்த நற்கருத்துமணிகளை வாரிக் கொடுக்கும் வள்ளல், வாய். எனவே, நாக்கு பெருமை பெறுகிறது. வளரும் பயிரை மேலும் வளர்க்க அளவே நீர் விடுதல்போல மனித உணர்வை மெல்லிதாக வளரும் வகையில் பேச்சு அடுக்கடுக்காக ஒலி உயர்ந்து உணர்வுயர்ந்து அறிவு நிலைக்கு அழைத்துப் போகும் வகையில் அமைய வேண்டும். நல்லோர்க்குச் சமாதி நிலையே கைகூடுவதுண்டு! பேச்சால்.

அமிழ்தத்தைச் சாய்க்கடையில் ஊற்றலாமா? அதேபோல் நல்ல கருத்துக்களை எளிய சபையில் ஒருவர் இருவர் கூட்டத்தில் கொட்டக்கூடாது.

சபையைக் கண்டு அஞ்சாமல் சபையை அலட்சியப்படுத்தாமல் பேசும் மொழி இயல்பறிந்து கேட்கும் மக்களை பண்பறிந்து பேசி வெற்றி பெறுவோமாக!



# மணம்

★

அன்புமணி, எம். ஏ.

அலுவலகத்தில் அமைதியாக வேலை செய்து கொண்டிருக்கும்பொழுது காலை சுமார் 11 மணிக்கு திடீரென ஒரு கார் மோதிய சப்தம் காதில் பட்டது. வழக்கம்போல் காரும் லாரியும் இடித்துக்கொண்டன என்று எண்ணினேன். தெருவில் ஒரே அலங்கோலம், எழுந்திருந்து தாழ்வாரத்திற்கு ஓடிப் பார்த்தேன். ஒரு சிறு குழந்தையின்மேல் பிளெஷர் காரின் வலதுபுற முன் சக்கரம் ஏறியிருந்தது. சுற்றி 10 பேர் நின்று குழந்தையை எடுக்க முயன்றனர். டிரைவர் காரை பின் வாங்கி ஓட்டிச் செல்ல முயன்றான். அடுத்து நின்றவர் தடுத்தும்கூட பயனில்லாமல் கார் பறந்து விட்டது. பெண்குழந்தையின் மேல் சக்கரம் ஏறி வயிறு நசுங்கி விட்டது. இரத்தம் தோய்ந்து கிடந்தது. உடம்பு இடது புறம் சாய்ந்திருந்தது. தலையில் அணிந்திருந்த மல்லிகைப் பூ அருகில் கிடந்தது. அதன் மணம் வீசியது.

"கொலைக்காரனை ஏன் விட்டீர்கள்?"

"படுவாப்பயலை கொன்றிருக்க வேண்டும்"

"கார் நம்பரைக் கவனித்தீர்களா?"

"ஆம், பார்த்து குறித்திருக்கிறேன்—3940"

"ஓ. டிரைவரையும் தெரியும், நம்முடைய கடைவீதியில் கடம்பனாரின் கார்"

"எங்கே ஓடினானும்"

"போலீஸ் ஸ்டேஷனுக்கு"

"குழந்தை யாருடையதோ!"

"தெரியவில்லையம்மா, பாவம்!"

"முகத்தை சரியாகப் பாருங்கள்!"

"பாப்பாவா! குழந்தைபோலிருக்கின்றதே!"

"மல்லிகைப் பூ மணக்கின்றது!"

"ஐயோ, என் சகுவா!"

ஓடிவந்தாள் ஒரு தாய். இல்லை தன் பிள்ளையில்லை. "அடி சகு எங்கேடி இருக்கே?" தங்கள் தங்கள் பிள்ளைகளைத் தேடினார்கள் நிலைகெட்ட தாய்மார்கள். விழுந்த பிள்ளையின் தாய் நாலாவது வீட்டில் முன்னாள் தான் பிரசவமாகி எழுந்து நிற்க முடியாமல் படுத்து கிடந்தாள்.

"தெருவில் என்னடா கூச்சல்?" என்று மூத்த பையன் கிட்டுவைக் கேட்டாள் தாய். படுக்கையிலேயே தன் சிசுவிற்கு பாலூட்டிக் கொண்டிருந்தாள். சிசுவின் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்து கொண்டிருந்தது. "ஏதோ குழந்தைமேல் கார் ஏறிவிட்டதாம், ஒரே கூட்டம். உள்ளே போக முடியவில்லை". "ஐயோ, பாவம்! யார் குழந்தை? சரசு எங்கே? அவளை உள்ளே கூட்டிக்கொண்டு வந்துவிடு." ஓடினான் கிட்டு சரசைத் தேடிக்கொண்டு "சரசு! சரசு!" குரலைக் கேட்டதும் குழுமியிருந்தவர்கள் விலகினார்கள். "சரசுவா? பார்" என்றனர். குழந்தையின் ஆடையைப் பார்த்ததும் "என் தங்கை போலிருக்கின்றது" என்று அருகில் சென்று முகத்தைப் பார்த்தான்." "ஐயோ, சரசு!" திரும்பி ஓடினான் தன் அம்மாவிடம், "அம்மா! அம்மா! சரசுமேல்தானம்மா கார் ஏறிவிட்டது" ஐயோ! அம்மா! என்று தாய் ஓலமிட்டாள். "இப்போதானடா தலையில் மல்லிகைப் பூவைச் சூட்டி அனுப்பினேன். என் கண்ணே! தங்கையைப் பார்த்துக்கோ என்று சொன்னேனேடா!" எழுந்திருந்து உட்கார முயன்றாள். பல வீனத்தால் எழ முடியவில்லை. அழுதாள். "ஐயோ! அப்பாவிற்கு சொல்லியனுப்பு. குழந்தையைத் தூக்கி என்னிடம் கொண்டுவரச் சொல்லேன்!" அலறினாள். "மல்லிகைப் பூ வாசனையாய் இருக்கிறது. நீயும் வைத்துக்கொள் என்று எனக்கும் வைத்துவிட்டுப் போனாளே! ஐயோ"! வீட்டில் பெண்களும் தாய்மார்களும் கூடினர். "என்னம்மா, பாவம்! பிரசவத்தோடு இது நேரிடவேண்டுமா?" "ஐயோ கடவுளே! என்னைத் தூக்கிக்கொண்டு போங்கள்! என் சரசைப் பார்க்க வேண்டும்." "நீ எப்படி போகப் போகின்றாய்?" "என் சரசுவை தூக்கி வாருங்கள். என் பக்கத்தில் போடுங்கள், என் கண்ணே!" "போலீஸ் வரும்வரை குழந்தையை எடுக்க முடியாதாம்." "ஆ.... ஐயோ? சரசு தெருவிலா அனாதையாய் கிடக்கிறாய்! உன்மேல் வண்டி வந்து ஏறிவிடுமே!" என்று அழுது புரண்டாள் தாய். மல்லிகைப் பூவின் மணம் வீச வீச அவள் உணர்ச்சி ததும்பியது.

மழை தூர ஆரம்பித்தது. அப்பனும் வந்துவிட்டார். "என் குழந்தை மழையில் நனைகிறதே, அவளை ஒரு துணியால் மூடிவையுங்கள்" என்று கெஞ்சினாள் தாய். தகப்பன் போர்வையை எடுத்துக்கொண்டு வெளியே ஓடினார். அதற்குள்ளாக அக்கம் பக்கத்தார் ஒரு தடுக்கைக் கொண்டுவந்தனர். அந்த இளம் பிணத்தை சுற்றி நின்ற அனுதாபிகளும் மழையைக் கண்டு நழுவினர், தன்னந்தனியே கிடந்தது குழந்தை. வழிப்போக்கர் நின்று சிறிது நேரம் பார்த்துவிட்டு நகர்ந்தனர், சிலர் குனிந்து தடுக்கின் அடியில் கூர்ந்தும் கவனித்தனர், எப்பொழுது ஆக்ஸிடெண்ட் ஆனது? என்று வினவ "காலையில்தான். ஆனால் போலீசார் வராமல் பிணத்தை எடுக்க முடியாதாம்" என்று பதிலுரைத்தனர். "போலீசா வரப்போகின்றது? ஹூம். டிரைவர் எங்கே? அவனை அரஸ்ட் செய்யவேண்டும் முதலில்." டிரைவர் இந்நேரம் சரிக்கட்டியிருப்பான் ஆட்களை. ஆக்ஸிடெண்ட் ஆக்ஸிடெண்ட்தான்.

"அப்படியாவது சொல்லித் தொலைக்கட்டுமே, குழந்தையை எடுத்து தாயிடம் ஒப்புவித்துவிடலாமே!" மழை விடட்டும் வந்துவிடுவார்கள். "மழைவிட்டது". ஓடினன் தந்தை போலீஸ் ஸ்டேஷனுக்கு. சப் இன்ஸ்பெக்டர் வர மறுத்தார். "டிராபிக் இன்ஸ்பெக்டர் வர வேண்டும், அதற்காக காத்துக்கொண்டிருக்கிறேன்" என்று கூறினர். "வரட்டுமே, குழந்தைக்கு ஆக்ஸிடெண்ட் ஆன இடம் அப்படியே இருக்கின்றது!" "இடம் இல்லை ஐயா! குழந்தையை வைத்துத்தான் சில முடிவுக்கு வரவேண்டும்." "எனக்கு அதெல்லாம் தேவையில்லையய்யா, குழந்தைமேல் தப்பு. ஒத்துக்கொள்கிறேன். நான் எடுத்துக்கொண்டுபோய் தாயிடம் காட்டவேண்டும், என் பிள்ளையை." "உன்னோடு சரியாய்விடுமா? சட்டப்படி டிரைவர் குற்றவாளியா? இல்லையா? அதை நிரூபிக்க வேண்டுமே! அனுமதிக்க முடியாது. ஏய் 104, போ, குழந்தையை எடுத்துக்கொண்டு போய்விடப் போகின்றனர். காவலில் நில்." 104 தொப்பியும் தடியுமாக போலீஸ் ஸ்டேஷனை விட்டு வெளியே சென்ருன். மழை பெய்துகொண்டிருந்தது. "விடட்டும் சார், போகிறேன்" என்ருன் 104. புறப்பட்ட தகப்பனையும் நிறுத்திவிட்டான்.

காவலனும் தந்தையும் மழைவிட்டதும் ஆக்ஸிடெண்ட் ஆன இடத்திற்கு வந்து சேர்ந்தனர். தடுக்கு நீக்கப்பட்டிருந்தது. "இதோ கான்ஸ்டபிள் வந்துவிட்டாராம். குழந்தையைக் கொண்டு வருவார்கள்" என்றுகிட்டு ஓடோடி தாயிடம் நல்ல வார்த்தை கூறினன். ஆனல் மாலையிருட்டு நெருங்கிவிட்டது. குழந்தையைச் சுற்றிலும் கூட்டம் அதிகரித்தது. ஒரு காஸ்லைட் வாடகைக்குப் பிடித்து குழந்தையருகே வைத்தான் தகப்பன். தாணுக்காரன் ரோட்டோரத்தில் ஒரு கடையில் அமர்ந்தான். நின்று ஓய்ந்துவிட்டன அவன் கால்கள். பிறகு 8 மணிக்கு வந்தார் டிராபிக் இன்ஸ்பெக்டர். கூடவே சப்இன்ஸ்பெக்டரும் மற்ருெரு கான்ஸ்டபிளும் வந்தனர். ஒரு நீண்ட அளவு நாடா வைக்கொண்டு சாலையை குறுக்கும் நெடுக்கும் அளந்தனர். குழங்தையை மையமாகவும், ஓரமாகவும் பாவித்து அடிக்கணக்குப் போட்டனர். "குழந்தையை யார் ஒருபக்கம் திருப்பிவிட்டது?" என்ருர் சப்இன்ஸ்பெக்டர். "யாரும் திருப்பவில்லை, கார் பின் வாங்கியதும் குழந்தை ஒருபக்கம் சாய்துகிடந்த அதே நிலைதான் இப்போதும்" என்றனர் பார்த்திருந்தவர்கள். "இருக்கமுடியாது, குழர்தை தன் முதுகின்மேல் மல்லாக்காய்தான் கிடந்திருக்க வேண்டும். யார் திருப்பிவிட்டது?" என்ருர் இன்ஸ்பெக்டர் மறுபடியும் உரக்க. குழு மௌனமாயிருந்தது. "குழந்தைதான் காரில் ஓடி முட்டியிருக்க வேண்டும். இல்லையேல் அள்ளைப்புரமாக கிடப்பது ஏன்?" என்று சப்தமாக சொல்லிக்கொண்டார். "இதென்ன மல்லிகைப்பூ! அதிர்ச்சியில் அதுவும் விழுந்துவிட்டது" என்று பொதுவில் அறிவித்தார். ஆனல் அந்த மணத்தோடு குழந்தையின் பிரேதம் தன் சுயமணத்தை வெளியிடத் தொடங்கிவிட்டது. "இன்ஸ்பெக்டர் சார், குழந்தையை இப்போதுகொண்டு போகலாமா?" என்று கெஞ்சினன் குழந்தையின் தகப்பன். இன்ஸ்பெக்டர்சார் கான்ஸ்டபிளைப் பார்த்தார். அவன் கண்ணினல் சைகை காட்டினன். 'சரி, கொண்டு போகலாம்" என்று உத்திரவிட்டார் இன்ஸ்பெக்டர், கடைக்காரன் செய்துகொண்ட புண்ணியம். உடனே குழந்தையை பாடையில் கிடத்தி மணக்கும் மலர்களால் அதனைக் குவித்து மறைத்து காஸ்லைட் முன்செல்ல காடு கொண்டுபோய் சேர்த்தனர். அழுது அழுது உறங்கிவிட்ட தாய் வெளிச்சத்தினல் திகைத்து முழித்து குழந்தை திரும்புவதைக் கண்டு அலறினள். தன் பக்கத்தில் சரசு அன்று காலை வைத்துவிட்டுச் சென்ற மல்லிகை மணமிழந்து வாடிக்கிடந்தது. தன் மல்லிமொக்கு சரசுவும் வதங்கிவிட்டாள். ஆனல் வீடெல்லாம் மல்லிகைப்பூ மணம் கமகமவென்று பொங்கி நிறைந்தது.



## வெயில் புகாமல் இருக்கும் புதுவகை முகப்பு!

கோலான்—(டாட்)—உலகில் இதுவரைக் கண்டிராத நூதனமான முகப்புத் தோற்றத்துடன் மேற்கு ஜெர்மனியிலுள்ள கோலோன் பல்கலைக் கழகத்தின் புது நூலகக் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. தேன்கூட்டிலுள்ள சிற்றறைகள் போல் தோற்றமளிக்கும் வகையில் சிறுசிறு அறைகளுடன் முகப்பு அமைந்திருக்கின்றன. முகப்பு அறை ஒவ்வொன்றின் நீளம் 3 அடி; அகலம் $3\frac{3}{4}$ அடி; கனம் 20 அங்குலம். இந்த சிற்றறைகளை ஒன்றின் மேல் ஒன்ருய் அடுக்கடுக்காக அமைத்திருக்கிருர்கள். சூரிய வெளிச்சம் நேரடியாக கட்டிடத்திற்குள் புகாதபடி, சிற்றறைகள் சற்று சாய்வாக உள்ளன. நூலகத்திலுள்ள அரிய நூல்கள்மீது வெயில் பட்டு நாசமாகிவிடாமல் இந்த புதுவித அமைப்புப் பாதுகாக்கிறது. 15 இலட்சம் புத்தகங்கள் கொண்ட இந்த நூலகத்திற்கான இந்தப் புதிய கட்டிடம் 8 அடுக்குகள் கொண்டது. இது 1965-இல் கட்டி முடிக்கப்படும்.

# மீனாட்சித் திருமணம்

★

ராஜம் கிருஷ்ணசாமி

நமது குடும்பத்தில் திருமணம் நடைபெறுகிறது என்றால் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் ஆனந்தம். குடும்பத்தார் அனைவரும் திருமண நிகழ்ச்சிகளில் ஒரு மனதுடன் ஒன்றுபட்டு நிற்கிறோம். வீட்டை அலங்கரிப்பதிலிருந்து நம்முடைய கௌரவத்திற்கு ஏற்றவாறு செலவு செய்து திருமணத்தைச் சிறப்பிக்கிறோம்.

நமது ஊரிலே தேர் திருவிழா என்றால் ஒரு குடும்பமட்டுமல்ல ஒவ்வொரு வீட்டையும், தெருவையும் அலங்கரித்து அழகுபடுத்துகிறோம். வருகிறவர்களுக்கெல்லாம் உணவு படைத்து மகிழ்கிறோம். சிறுமை எண்ணங்கள் நம்மைவிட்டு மறைந்து விடுகிறது. இது மட்டுமல்ல, மண்ணுலகம் விண்ணுலகமாகவும் நாமெல்லாம் தேவர்களாகவும் மாறி விளங்குகிறோம். இத்தகைய மாற்றங்கள் நம் மனதிலே தோன்றுவதற்கு அடிப்படை தெய்வீகத் திருமண நிகழ்ச்சிகளேயாகும். திருவிழா என்றால் அந்த ஊரிலே கோயில்கொண்ட எம்பெருமானுக்குத் திருமணம் நடத்தி வைக்கிறார்கள் என்பது பொருள். திருமணம் நடைபெற்ற பின்னரே தேர்மீது சுவாமி பவனி வரும் காட்சி ஆரம்பமாகிறது. தெய்வத் திருமணங்கள் மக்கள் மனதை ஒன்றுபடுத்துகின்றன. உயர்வு தாழ்வு பேதம் போக்குகிறது. எல்லோருக்கும் சம சந்தர்ப்பமும், சம நீதியும் வழங்கும் பாங்கும் திருவிழாவில் காண்கிறோம். மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு மகத்தான வலிமை வாய்ந்த தேரை நடத்திச் செல்வது அனைத்தும் ஊரே ஒரு குடும்பம் என்பதை நினைவுபடுத்துவதாக அமைகிறது.

வாழ்க்கையிலே ஒரே ஒரு தரம் மணமகனாக மணமகளாக இருக்கும் வாய்ப்பு ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருக்கும், ஏற்படும். ஆனால், நமது நகரில் கோவில் கொண்டிருக்கும் எம்பெருமானுக்கு வருடந்தோறும் திருமணம் நடத்தித் தேர் இழுப்பது என்பது எதற்கு? தெய்வத் திருமணத்தில் அந்த ஊரில் உள்ள மக்கள் மட்டுமல்ல, சுற்றுப்புறத்திலுள்ள அத்தனை மக்களும் சேர்ந்து ஆனந்தமாக, ஒற்றுமையாக, ஒரு குடும்பத்தவர் போல பழக, ஒன்றுபட்டு நின்று, செயற்கரிய செயலை செய்து முடிக்கும் ஆற்றல் நமக்குண்டு என்பதை நினைபடுத்திக்கொள்ள உதவுகிறது. மக்கள் மனதிலே உற்சாகம், ஆனந்தம், பெருமிதம், ஒற்றுமை உணர்வு, வாரி வழங்கும் வள்ளன்மை இத்தனையும் ஏற்படுவதற்குத் தெய்வத் திருமணங்கள் நிலைக்களனாக அமைகிறது.

நாம் நடத்தும் தெய்வத் திருமணத்திற்கே இத்தனை சிறப்பும், ஆன்ம லாபமும், உலகாயத பயனும் இருக்கிறதென்றால், இறைவன் நம்பொருட்டு மண்ணகத்தில் மனித உரு தாங்கிவந்து தனது திருமணத்தை நடத்தினால் அதன் சிறப்பை அளவிட்டுக் கூறமுடியுமா?

மதுரைமாநகரத்தில் என்றும் இமையாத கண் படைத்து தனது அடியவர்களை தன் கண் பார்வையாலே காத்துவரும் அம்மை மீனாட்சியின் திருமண வைபவத்தை இப்பொழுது நினைத்தாலும், கேட்டாலும், படித்தாலும் நமது உள்ளம் அடையும் ஆனந்தத்திற்கு அளவேது?

உமா தேவியை வழிபட, உபதேசம் பெற்ற "விச்சுவாவசு" என்ற பக்தை மதுரைமாநகர் வந்து கடுந்தபங்கள் செய்தார். தேவியும் மனமகிழ்ந்து தெரிசனம் தந்தார். மீனாட்சியம்மை தன் கண்களுக்குத் தெரிசனம் கொடுத்தவடிவிலேயே தன் புத்திரியாக வந்தருளவேண்டும் என்று வரமும் பெற்றார் விச்சுவாவசு அம்மை.

இந்த விச்சுவாவசு அம்மையே சோழ மன்னனான சூரசேனன் புதல்வி. காஞ்சனமாலையாகப் பிறந்து மதுரையையாண்டுவந்த பெரும் பாக்கியவானும் சிவ பக்தனுமான மலையத்துவஜ பாண்டியனை மணந்து இல்லறம் நடத்திவரலானாள். மலையத்துவஜ பாண்டியன் சொக்கலிங்கப் பெருமானிடம் மிகவும் ஈடுபாடு உடையவன். மனுநெறி தவறாது செங்கோலோச்சி வந்தான்.

பாண்டிய மன்னன் மலையத்துவஜனும் அவன் மனைவி காஞ்சனமாலாவும் நெடுநாள் புத்திரப்பேறு இன்றி வருந்தினார்கள். பற்பல யாகங்கள் நடத்தினார்கள். இறுதியில் புத்திரகாமேஷ்டி யாகமும் நடத்தினார்கள். மீனாட்சியம்மன் காஞ்சனமாலாவுக்கு, முன் ஜன்மத்தில் கொடுத்த வாக்குறுதியின்படி, அன்று விச்வாவசு அம்மையின் கண்களுக்குத் தோன்றியதுபோல மூன்று வயது குழந்தையாக, மூன்று தனங்களுடன் யாக குண்டலத்தில் வத்து தோன்றினாள். குழந்தையைப் பெற்றவளுக்கு உடலில் தோன்றும் மாறுதல்கள் அனைத்தும், காஞ்சனமாலாவுக்குத் தோன்றியது. காஞ்சனமாலாவும் பெருமகிழ்வோடு தனது புத்ரியை எடுத்தணைத்தாள்.

மன்னன் மலையத்துவஜ பாண்டியன் மனதில் பெரிய ஏமாற்றமும், வருத்தமும் ஏற்பட்டது. புத்திரப்பேறுவிற்காக அவன் செய்த தவம், புத்திரியாக வந்து கிடைத்தது ஒரு பக்கம். அந்தக் குழந்தைக்கோ மூன்று தனங்கள், மற்ற மன்னர்கள் ஏளனம் செய்யும்படி அமைந்திருக்கிறதேயென்று பெரிதும் வருந்தினான். அரசனது குறையைக் கேட்டு சோமசுந்தரப் பெருமானே அசரீரியாகப் பேசினார், மன்ன ! புத்ரி கிடைத்ததற்காக வருத்தப்படாதே. உன் புத்திரிக்குத் தடாதகைப் பிராட்டியார் என்று நாமம் சூட்டுவாயாக, புத்திரனுக்குக் கற்பிக்கும் அத்தனை சாஸ்திரங்களும் அஸ்திர சாஸ்திரங்களும் இந்தக் குழந்தைக்குக் கற்

பித்து முடியும் சூட்டுவாயாக. மூன்று தனங்கள் இருப்பதைக்கண்டு வருந்தாதே. அவள் தனக்குற்ற நாயகனைக் காணும்போது மூன்ருவது தனம் மறைந்துவிடும் என்று கூறியது கேட்டு. மன்னன் மகிழ்ச்சி கொண்டு தானதருமங்கள் நடத்தி நாட்டு மக்களை ஆனந்தத்தில் ஆழ்த்தினுன்.

தன் மகளுக்கு அரசர்க்குரிய எல்லா சாஸ்திரங்களையும் வில்வித்தைகளையும் கற்பித்தான். இளவரசு பட்டமும்கட்டி இறைவன் திருவடியை மலையத்துவஜன் அடைந்தான். தந்தைக்குப் பிறகு தானே அரசுரிமை ஏற்று நீதி தவருது தடாதகை பிராட்டியார் அரசு செலுத்தியதோடு ஆலவாயமர்ந்த சொக்கலிங்கப்பெருமானை தவருது போற்றித் துதித்து வந்தாள். தடாதகைப் பிராட்டியாரின் ஆட்சியில் நீதி நெறி நின்றது. "கன்னி நாடு" என பாண்டிய நாடு பல்லோராலும் போற்றப்பட்டது. மக்கள் செல்வமும் கீர்த்தியும் பெற்று நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழ்ந்து வந்தார்கள்.

தனது மகளுக்கேற்ற மணாளனைத் தேடி மணம் புரிவிக்க வேண்டுமே என்ற கவலை காஞ்சனமாலைக்கு வந்தது. தன் மகளிடம் திருமணத்தைப்பற்றிப் பேசினுள். தாயே எனக்கு மணம் நடக்கவேண்டிய காலத்து சிறப்பாக நடைபெறும். அதற்கு முன் நான் திக்விஜயம் செய்து வரவேண்டும் என்பது என் ஆசை. எனக்கு விடை தரவேண்டும் என வேண்டினுள். காஞ்சனமாலாவும் விடை கொடுக்க "சுமதி" என்ற அமைச்சருடன் நால்வகைச் சேனையும் அணிவகுத்துச் செல்ல, தடாதகைப் பிராட்டியார் திக்விஜயம் செய்தாள். வடநாட்டில் பல மன்னர்கள் எதிர்த்து தோல்வியுற்றனர். தடாதகைப் பிராட்டியாரின் போர் ஆற்றலையும், சேனு பலத்தையும் கேள்விபட்டு பல மன்னர்கள் தேவியிடம் வந்து சரணமென நின்ருர்கள். எதிர்த்து போர் புரிவரே இல்லாது பிராட்டியாரின் சேனை விம்மும் தோள்களார்ப்ப எதிரே இருந்த கைலாயங்கிரியைப் போய் வளைத்துக்கொண்டது. இதனையறிந்த நந்தி தேவர் பூத கணங்களை பிராட்டியாரின் சேனை மீது ஏவினுர். வந்த பூத கணங்களை தக்க அஸ்திரத்தால் பிராட்டியார் வெற்றிக்கொள்ளவும், நந்திதேவர் சிவபெருமானிடத்து நேரே சென்று முறையிட்டார். எல்லாவற்றையும் அறித்த எம்பெருமான் தானே போர்க்களத்துக்கு வந்து பிராட்டியாரின் ஆற்றலை அறிந்தார். தன் கருணை விழியால் பிராட்டியாரை நோக்கினுர். அப்பொழுது பிராட்டியாரின் உடலிலே ஒரு மாற்றம் ஏற்பட்டது. மூன்ருவது தனம் மறைந்தது.

சிவபெருமான் முன்னிலையில் நாணம் பொங்க பிராட்டியார் பூமியை நோக்கி நின்ருர். பிராட்டியாரின் உள நெகிழ்வைக் கண்டு, எம்பெருமான் தேவி! நீ திக்விஜயத்திற்குப் புறப்பட்டவுடனே உன்னுடனே நாமும் உன்னைப் பின் தொடர்ந்து புறப்பட்டோம். நீ திரும்பி மதுரை செல்வாயாக. வரும் சோமவாரத்தில் உன்னை வந்து மணம் புரிவோம் என்ருர்.

தேவியார் தன் சேனைகளை மதுரைக்குத் திரும்புமாறு கட்டளையிட்டார். கயிலை வரை சென்று வெற்றிக்கொடி நாட்டிய கன்னி தடாதகைப் பிராட்டியாருக்கு மகத்தான வரவேற்பு மதுரை மக்கள் தந்தார்கள். தங்கள் அரசியாரை மணக்க சிவபெருமான் மதுரைக்கு வரப்போகிருர் என்று அறிந்து அவர்கள் அடைந்த ஆனந்தத்திற்கும், மகிழ்ச்சிக்கும் எல்லையேது? திருமணச் சேதி நாடெல்லாம் அறிவிக்கப்பட்டது. தேவர்கள், மூவர், முனிவர், ஞானிகள், மன்னர் மன்னர், மக்கள் அனைவரும் மதுரைக்கு வந்து சேர்ந்தார்கள். மதுரை மக்கள் தம் தம் வீட்டையும், நகரையும் அலங்கரித்தார்கள். தங்கள் தங்கள் விட்டில் திருமணம் நடப்பதுபோல வந்தவர்களையெல்லாம் வரவேற்ருர்கள். சிவ கணங்களைக் கண்டதும் சிறப்பாக வரவேற்றனர். மாப்பிள்ளை வீட்டார்களல்லவா? குபேரன், புலித்தோலை இடையில் அணிந்த பொன்னுர் மேனியனை மணமகனுக அலங்கரித்தான். பாண்டிய நாட்டிற்கு கைலயங்கிரி வாசன் மணமகனுக வந்து சேர்ந்தார். மகத்தான வரவேற்புடன் மதுரை மக்கள் மணமகனை வரவேற்ருர்கள். பூலோக கைலாசமாக மதுரைமாநகரம் திகழ்ந்தது.

திருமணக்கூடம், வேள்விக்கூடம் தனித்தனியாக அலங்கரிக்கப்பட்டது. ஓம குண்டங்களின் வரம்புகளோடு வேத ஆகம விதிமுறைப்படி கண்ணுடி, இடபம், விளக்கு, திருமகள் வடிவான பாவை, சாமரம் வலம்புரிச் சங்கு. சுவத்திகம், நிறைகுடமென்னும் அஷ்ட மங்களப் பொருள்களும் அமைத்தனர். உயர்ந்த பீடங்கள் மணமக்கள் கொலுவிருக்க அமைக்கப்பட்டது. வேதாங்கம் ஆறும், கால்களாகவும், பிரணவம் அழகிய பொற்பீடமாகவும், நான்கு வேதங்களே முத்துவினுல் கோத்த வடங்களாகவும் அமைத்ததுபோல் பொற்றவிசு ஒன்றும் அமைத்தார்கள்.

நான்கு மறைகள் முழக்க. இன்னிசை நாதம் எழ, மங்கள கீதங்கள் பாட, மாதொரு பாகனுய் நின்ற எம்பெருமான் மணமேடைக்கு வந்து அமர்ந்தார்.

குறித்த நேரத்தில் தடாத்கைப் பிராட்டியாரை திருமால் அழைத்து சிவபெருமானுடைய சிவந்த திருக்கரத்தில் வைத்து வேதமந்திரம் சொல்லித் தாராதத்தம் செய்துகொடுத்தார்,

பிர்மதேவன் முறைப்படி ஓமம் வளர்த்து செய்ய வேண்டிய கிரிகைகளை குறைவின்றி செய்துமுடித்து திருமங்கல நாண் எடுத்து எம்பிரானிடம் கொடுத்ததும் வேதம் முழங்க, கீதங்களார்ப்ப. விண்ணகத்தோரும், மண்ணகத்தோரும் வாழ்த்த, தடாதகைப் பிராட்டியார் திருக்கழுத்தில் மங்கள நாண் சூட்டி, திருக்கரம் பற்றினுர் சிவபெருமான். திருமணத்திற்கு வந்தவர்களுக்கெல்லாம் பரிசு வழங்கினுர் எம்பெருமான். வயிருர உணவு படைத்தார்கள். சிவகணங்களுக்கென சமைக்கப்பட்ட உணவில் ஒரு பகுதிகூட செலவாகாமல் இருப்பதை எம்பெருமானிடம் தடாதகைப் பிராட்டியார் முறையிட, அருகே இருந்த குண்டோதரனை எம்பெருமான் அனுப்ப, குணடோதரன் அங்குசமைத்து வைக்கப்பட்டிருந்த உணவுடன் சமையலுக்கு வைக்கப்பட்டிருந்த அனைத்தும் சாப்பிட்டுவிட்டு தன்பசி தீரவில்லையே என்று, கதற செய்வதறியாது பிராட்டியார் எம்பெருமான் முன்வந்து அடிபணிந்து செய்திசொல்ல, சிவபெருமான் குண்டோதரன் பசி தீர்த்ததும், அவன் குடிப்பதற்காக தனது தலைமீது இருக்கும் கங்கையை வைகையாகப் பெருக்கெடுத்து ஓடும்படி செய்ததும் மீனுட்சி திருமணத்தின் சிறப்பான கட்டங்கள். சிவபெருமான் சுந்தரபாண்டியன் என்ற பெயருடன், பிராட்டியாருடன் இல்வாழ்க்கை நடத்தி ஆலயத்துள் ஒன்றிவிட்ட நிகழ்ச்சியை எத்தனைதரம் படித்தாலும் கேட்டாலும், மகிழ்ச்சி பொங்காத இதயம் உண்டா?

# பழமையும் புதுமையும்

★

பேராசிரியர் க. பொ. ரத்தினம்

"கூர்நாடகம், பட்டிக்காடு, காட்டு மிராண்டி, பத்தாம்பசலி..." என்றிவ்வாறு பழமையைப்பழிக்கிறர்கள். "நவயுகம், மறுமலர்ச்சி, முற்போக்கு........" என்று பலவாறு புதுமையைப் புகழ்கிறர்கள், பழமையையும் புதுமையையும் எல்லாத் துறையிலும் முட்ட விடுவது வேடிக்கையாக இருக்கிறது. "காவோலேவிழக் குருத்தோலே" நகைப்பது போன்றது இது.

புதுமையில் மோகம் கொள்வது மக்களியல்பு. "புதியன கண்டால் விடுவரோ புதுமை பார்ப்பார்" என்று கம்பர் இதற்கு ஒரு 'சூடுங்' கொடுத்தார். புதுமை மோகம் பழமையைப் பழியாமல் இருத்தல் வேண்டும். பழமையைப் பழித்தலே புதுமையெனக் கொள்ளும் அளவுக்குப் புதுமை மோகம் வீறுகொள்ளுதல் கூடாது.

இனி, "பேயொடு பழகினும் பிரிவரிது" என்பது போலப் பழமையிலே பித்துக் கொண்டு புதுமையை வெறுப்பதும் கூடாது. "புதுமை கூடாதது; பழமை தான் நல்லது" என்பதும் அறியாமையேயாகும்.

இந்தப் பழமை-புதுமைப் போட்டி பண்டுதொட்டு இன்று வரையும் நடந்து வருகிறது. இனியும் நடந்து கொண்டுதான் இருக்கும். இது முறையாக நடந்தால் முன்னேற்றம் உண்டாகும். ஒன்றையொன்று அழிக்க முயன்றல் கேடுதான் உண்டாகும்.

பழமை-புதுமைப் போட்டி அளவின்றி மோதினல் வாழ்வின் சில துறைகளில் அதிக தீமையை விளைக்காது. எனினும், இலக்கியம் போன்றகலேத்துறைகளில் இது வேடிக்கையாக மாத்திரமன்றி வினையாகவும் ஆகிவிடும்.

இன்று தமிழ் கூறு நல்லுலகிலே தமிழ் இலக்கியத்துறையில் இப்போட்டி காட்சியளிக்கிறது. "பழமை வேண்டாம்; பழமையைத் திரும்பியும் பார்க்க வேண்டாம்; இடைக்கால நூல்களை ஒதுக்கிவிடல் வேண்டும். புதிய முறையிலேதான் இலக்கியம் வளர வேண்டும். விரும்பியபடி எழுதலாம்; பாடலாம். பேசுதல் போல் எழுதும் உரிமையும் வேண்டும்," என்ற குரல் அளவுக்கு மிஞ்சிக் கேட்கிறது.

"பாரதியாரே புதுமையின் முதல்வர்; அவர் எளிய இனிய நடையிற் பாடினர்; எழுதினர். பழைய மரபை முற்றக மாற்றிவிட்டார்" என்று சிலர் சொல்கிறர்கள். இப்படிச்சொல்கிறவர்களிற்பலர் பாரதியாரை நன்கு அறியாதவர்கள்; அவர் போற்றிய இலக்கிய நூல்களை நன்கு படிக்காதவர்கள்; படிக்கும் விருப்பமுமில்லாதவர்கள்.

பாரதியார் புதுமைக் கவிதான். "சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற் புதிது சோதி மிக்க நவகவிதை" என்றும் அவர் தம் கவிதை பற்றிப் பாடியிருக்கிறர். எனினும், அவர் பழமையை அடியோடு வெறுத்தொதுக்கவில்லை; பழைய புலவர்கள் சென்ற பாதையில் அடியெடுத்து வைக்காமல் விடவுமில்லை; இலக்கியச் சொற்களைக் களைந்து கிராமியச் சொற்களையும் பேச்சு வழக்கிலுள்ள சிதைந்த சொற்களையும் வேண்டுமென்றே கலந்து பாடவுமில்லை.

தமிழிலே இடைக்காலத்திலே தோன்றிய நூல்களைத் தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களாகப் பிரித்துளர். இவற்றுளே பஞ்சகம், தசாங்கம், திருப்பள்ளியெழுச்சி, நவரத்தினமாலே, நான்மணிமாலே முதலியன சில. இந்தப் பிரபந்தங்களை எல்லாம் இவற்றின் அமைப்பு முறை சிறிதும் பிறழாமற் பாரதியார் பாடியுள்ளார்.

"இனிய நீர்ப் பெருக்கினை! இன்கனி வளத்தினை!
தனி நறு மலயத் தண்காற் சிறப்பினை!
பைந்நிறப் பழமை பரவிய வடிவினை!" (வந்தே)

"வெண்ணிலாக் கதிர் மகிழ் விரித்திடு மிரவினை!
மலர் மணிப் பூத்திகழ் மரன் பல செறிந்தனை!
குறுநகை யின்சொலார் குலவிய, மாண்பினை
நல்குவை யின்பம், வரம்பல நல்குவை!" (வந்தே)

என்று இவ்வாறெல்லாம் பாடியவர் பாரதியார். பழைய இலக்கியங்களைப் பயின்றவர்களுக்கு இவற்றிலுள்ள இலக்கியச் சொற்களின் உயர்வும், பழந்தமிழ்நடைப் பொலிவும் நன்கு புலனுகும்.

திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் எனும் நூல்களைப் படித்துப் படித்து நெஞ்சைப் பறிகொடுத்தவர் பாரதியார். இவற்றில் அவருக்கு இருந்த ஆராமையே.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்
போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்
கணுமே பிறந்ததில்லை; உண்மை வெறும்
புகழ்ச்சியில்லை"

என அவர் உள்ளத்திலிருந்து முகிழ்த்தது.

திருக்குறள் தமிழிலுள்ள அற நூல்களுக்குத் தலைமையாக விளங்குவது; சிலப்பதிகாரம் பெருங்காப்பியம் சிறுகாப்பியம் என்பவற்றுக்கு நடு நாயகமாக மிளிர்வது; கம்பராமாயணம் இடைக்காலத்தெழுந்த காவியங்களின் முன்னணியிலுள்ளது. இவற்றைப் பாரதியார் போற்றியதால் இவற்றைப் போன்ற ஏனைய இலக்கியங்களை அவர் வெறுத்தார், ஒதுக்கினர், என்று

கூறலாமா? அவற்றையும் அவர் ஏற்றுக்கொள்ளும் உளப்பாங்கு உடையவரே. இதற்குச் சான்று கூற அவர் பாடிய பிரபந்தங்கள் மட்டுமே போதும்.

இடைக்காலத்திற் கோவைகள், அந்தாதிகள்; பிள்ளைத் தமிழ், சிலேடை வெண்பாக்கள், தல புராணங்கள் முதலிய பலவற்றைப் புலவர்கள் பாடினுர்கள். "இப்படைப்புக்கள் பயனற்றவை; ஒருவரைப் பார்த்து ஒருவராகப் பாடிக்குவித்தார்கள்; இவற்றை ஒழித்துவிட்டாலும் நட்டமில்லை; வெறுஞ் சொல் விளையாட்டிலும் சித்திரக் கவிகளிலும் காலத்தை வீணாக்கினர்" என்று கருதுகிறவர்கள் தொகை இப்பொழுது பெருகுகிறது. "தமிழிலக்கியத்திற் பிரபந்தங்கள் இனத்துக்கு இனம் நூற்றுக் கணக்கில் இருக்கின்றன. இவை கூறும் அடிப்படை பொருள்களிலோ இவற்றின் அமைப்பு முறையிலோ வேறுபாடு காணப்படவில்லை," என்றும் இவர்கள் குறை கூறுகின்றனர்.

இந்தக் குற்றம் இப்பொழுதுள்ள புது இலக்கியத் துறைகளுக்கு இல்லையா என்று பார்ப்போம். முதலில் சிறுகதையை எடுப்போம். மாதத்துக்கு நூற்றுக்குக் குறையாமற் சிறுகதைகள் வெளியாகின்றன. இவற்றின் அமைப்பு முறையில் வேறுபாடுண்டா? இதுவரையில் எழுதப்பட்ட வரதட்சணைக் கொடுமையைப் பற்றிய கதைகளும், கல்லூரிக் காதற் கதைகளும் அளவிலாதன. இவற்றில் வரும் பெயர்களையும் இடங்களையும் தள்ளிவிட்டு நிகழ்ச்சிகளை முன்னும் பின்னுமாக மாற்றி வைத்துப்பார்த்தால் எல்லாம் ஒரு மாதிரித்தான் இருக்கும். ஆம், கோவைகளையும் கலம்பகங்களையும் அந்தாதிகளையும் பாடியவர்கள் ஊர் பெயர்களை மாற்றிப் பாடிய கதைதான் இந்தச் சிறு கதைகளின் கதையும். இக்காலத்துத் தோன்றும் பாடல்கள், கட்டுரைகள், நவீனங்கள் முதலியனவும் இந்தக் குற்றத்துக்கு விலக்கானவையல்ல. இனி ஆயிர வருடக் கணக்கில் வேறுபாடுள்ள இரு வருணனைகளை நோக்குவோம்.

1. சந்தனமுஞ் செண்பமுந், தேமாவும் தீம்பலவும், ஆசினியும் அசோகமும், கொங்கும் வேங்கையுங் குரவமும் விரிந்து, நாகமுந் திலகமும், நறவுந் நந்திரியும், மாதலியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாலலும் பைங்கொன்றையொடு பிணிய விழ்ந்து, பொரிப்புள்கும் புன்னாகமும் முருக்கொடு முகைசிறந்து, வண்டறைந்து, தேனார்ந்து, வரிக்குயில்கள் இசைபாடத் தண்டென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழிலது நடுவன், ஒரு மாணிக்கச் செய்குன்றின்மேல், விசும்பு துடைத்துப் பசும்பொன் பூத்து வண்டு துவைப்பத் தண்டேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்; கண்டு பெரியதோர் காதல் களிகூர்ந்து, தன் செம்மலர்ச் சீறடிமேற் சிலம்பு கிடந்து சிலம்பு புடைப்ப, அம்மலரணிக் கொம்பர் நடை கற்பதென நடந்து சென்று, நறைவிரி வேங்கை நாண்மலர் கொய்தாள்."

2. "காவேரிதீரம் அமைதி குடிகொண்டு விளங்கிற்று. உதயசூரியனின் செம்பொற் கிரணங்களால் நதியில் செந்நீர்ப் பிரவாகம் பொன்னிறம் பெற்றுத்திகழ்ந்தது. அந்தப் புண்ணிய நதிக்குப் 'பொன்னி' என்னும் பெயர் அந்த வேளையில் மிகப் பொருத்தமாய்த் தோன்றியது. சுழிகள்-சுழல்களுடனே விரைந்து சென்று கொண்டிருந்த அந்தப் பிரவாகத்தின்மீது காலை இளங் காற்று தவழ்ந்து விளையாடி இந்திரஜால வித்தைகள் காட்டிக்கொண்டிருந்தது. சின்னஞ் சிறு அலைகள் ஒன்றோடொன்று லேசாக மோதியபோது சிதறிவிழுந்த ஆயிரமாயிரம் நீர்த்துளிகள் ஜாஜ்வல்யமான ரத்தினங்களாகவும், கோமேதகங்களாகவும், வைரங்களாகவும், மரகதங்களாகவும் பிரகாசித்துக் காவேரிநதியை ஒரு மாயாபுரியாக ஆக்கிக்கொண்டிருந்தன.

முதலாவது வருணனை இறையனார் அகப்பொருளுரையிலிருந்தெடுக்கப்பட்டது. இயற்கைச் சூழலை அழகிய பொருள் பொதிந்த செந்தமிழ்ச் சொற்களால் ஆசிரியர் தீட்டிக் காட்டியுளர். இது ஏறக்குறைய ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது. இரண்டாவது வருணனை கல்கியின் பார்த்திபன் கனவு எனும் நூலிலுள்ளது. காவேரியாற்றுச் சூழலை வருணிக்கிறது. நமது தலைமுறையில்-சில ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது. இறையனார் அகப்பொருளுரையிலுள்ள வருணனையை இப்பொழுது பழையது என்று ஒதுக்கிறார்கள்; கல்கியின் வருணனையைப் புதியது என்று போற்றுகிறார்கள். காலந்தான் இதற்குக் காரணமாகவிருக்கிறது.

இப்பொழுது கதைகள் எழுதுவோர், கார், ஆற்றோரம், படமாளிகை, விளையாட்டிடம், வேலைக்களம், கல்லூரி முதலியவற்றைக் களமாகக் கொள்கின்றனர். இன்னும் சில ஆண்டுகளின்பின் தமிழ் எழுத்தாளர்களுடைய வருணனைகள் ஆகாயவிமானம், வான்வெளி, செம்மதிகள், கோள்கள், சந்திரமண்டலம் முதலியனவற்றை நிலைக்களனுகக் கொண்டு தோன்றலாம். இந்த வர்ணனைகளுடன் ஒப்பிடும்பொழுது கல்கியின் வருணனை பழையதாகப் போகும். எப்படிக் கல்கியின் வருணனையைப் பலர் இப்பொழுது போற்றுகிறார்களோ அப்படியே இறையனார் அகப்பொருளுரையிலுள்ள வருணனையும் அக்காலத்திற் பலர் போற்றியிருப்பார்கள்; இன்னுஞ் சில ஆண்டுகளில் பின்னர்த் தோன்றும் வருணனையும் அக்கால மக்கள் போற்றுவார்கள். எப்படி இப்பொழுது இறையனார் களவியலுரை வருணனையைப் பழைய வருணனை என்கிறோமோ, அப்படியே கல்கியின் வருணனையும் பழையன என எதிர்கால மக்கள் கூறுவர்,

நூல்களைப்பல்லாயிரக்கணக்கில் அச்சிட்டு வெளிப்படுத்தும் வாய்ப்பு இப்பொழுது உண்டு. இதனுல் இலக்கியப் படைப்புக்கள் பல்லாயிரக்கணக்கான மக்களை அடைகின்றன. மக்கள் பலர் படிக்க வசதியுண்டு. இப்பொழுது போலப் பத்திரிகைகள் இலக்கியப் பணி செய்யும் நிலைமை முன்னர் இல்லை.

முன்னுள்ளவர்கள் ஏட்டிலே தங்கள் படைப்புக்களை எழுதி வள்ளல்கள் அரசர்கள் முதலானோருடைய அவைகளில் நிறைவேற்றுதல் மூலமே தங்கள் படைப்புக்களை வெளி உலகுக்கு அறிவித்தனர். நல்ல படைப்புக்களை ஆக்கிய புலவர்களை மக்களுந் தலைவர்களும் போற்றினர். நல்ல படைப்புக்களை எழுதிப்படித்தும் பரப்பியும் வந்தனர். நூல்களை அமைக்கும் இலக்கிய மரபுகள் நிலைத்தன. இப்பொழுது சிறுகதை, நவீனம் முதலியனபோல அக்காலத்தில் 96 வகைப் பிரபந்தங்

களும் புதிதாகத் தோன்றி நிலைத்தன. இந்த உண்மையையும் இலக்கியப்படைப்பிற் சில காலத்திற் பொருளும், சில காலத்திற் சொல்லும் ஒன்றைப் பார்க்க ஒன்று முதலிடம் பெறுவது வழக்கமானதே எனும் உண்மையையும் நாம் நன்கு அறிந்து கொண்டால் இடைக்காலத் தெழுந்த இலக்கியங்களில் வெறுப்பு உண்டாகாது. சங்க காலத்திற் சொல்லும் பொருளும் சமமாக உரிய இடம் பெற்றன. இடைக்காலத்தில் சொல்லும் பொருளும் கூடிய இடம் பெற்றது. இப்பொழுது பொருள், சொல்லிலும் முதன்மைபெறல் வேண்டும் எனும் கருத்து உண்டாகியிருக்கிறது.

இக்காலத்தில் சித்திரம், சிற்பம், வரலாறு முதலியனபற்றிய பழைய பொருள்களை அரும்பாடு பட்டுத் தேடிக் காட்சிக்கு வைக்கிறார்கள். பூமியையுங் கடலையும் தோண்டிப் புதைபொருள்களை எடுத்துப் போற்றிப் பல உண்மைகளை வெளியிடுகிறார்கள். எனவே, இடைக்கால இலக்கியங்களை ஒதுக்கி அழித்துவிட எண்ணுதல் பொருத்தமானதா? தமிழ் இலக்கிய வரலாற்றையும், தமிழ் மக்களின் வரலாற்றையும் முறையாக உள்ளபடியே உணர்பவர்கள் எக்கால இலக்கியத்தையும் ஒதுக்க விரும்பமாட்டார்கள். இலக்கியம் எந்தக் காலத்திலே தோன்றியதாயினும் அதில் அம்மொழியினைப் பேசுவோர் போற்றிப் பாதுகாத்தற்கு வேண்டிய பகுதிகள் இருக்கும். மக்கள் வாழ்வில் சுவடுகளும், எண்ணங்களின் பதிவுகளும், சூழலில் தடங்களும் சிறிதேனும் அமையாமல் எவ்வித இலக்கியமும் தோன்றாது.

"ஆராய்ச்சியால் இப்பொழுதுநாம் அறிவும் தனித் தமிழ்ப் பண்பாடுகளுக்கு-தமிழன் பெருமைக்கு-மாறான கருத்துக்களைச் சில இலக்கிய நூல்கள் கொண்டிருக்கின்றனவே, அவற்றை ஒதுக்க வேண்டாமா?" எனின் "வேண்டாம்" என்றே கூறுவோம். வேற்றரசுகள் நம் நாடுகளை ஆண்டகாலத்தில் எழுதப்பட்ட எத்தனையோ பழஞ் சின்னங்களை ஏன் போற்றுகிறோம்?

இலக்கியங்களிலுள்ள தமிழ்ப்பண்புக்கு மாறுபட்டவற்றை அறிந்துகொள்ளும் அறிவை மக்களிடையே உண்டாக்குதலே நோக்கமாயிருத்தல் வேண்டும். இப்படி உண்டாக்கினால் மக்கள் எதைப் படித்தாலும் 'மெய்ப்பொருள்' காணும் ஆற்றல் பெறுவார்கள்.

இடைக்காலத்தில் இலக்கியங்களைப் படைத்தவர்களுடைய புலமைத் திறத்திலும் தமிழ் அறிவின் தகுதியிலும் எவ்வித குறைபாடுமில்லை. ஆனால், இன்று இலக்கியங்களைப் படைப்பவர்கள்-சிறப்பாகச் சிறுகதை நவீனம் முதலியவற்றை எழுதுவோர்-எழுத்துப்பிழை, சொற்பிழை, வாக்கியப்பிழை முதலியன இன்றி எழுதவும் வேண்டுமென்பதைச் சிறிதேனுங் கருதி எழுதுகிறார்கள் என்று கூறல் முடியாது.

அடிமைப்படாமல் இடையீடின்றி வளர்ந்துவரும் மொழிகளில் இந்தக்குறை அதிகமாகக் காணப்படவில்லை. அம்மொழிகள் வழங்கும் நாடுகளிற் பிழையின்றிச் செம்மையாக எழுதப் பழகுவதற்குப் பயிற்றும் நிலையங்களும் பலவுள.

நமது தமிழ் மொழியில், பிழைமலிய எழுதுவது பெருமையாகவும், ஒரு கலையாகவும் மாறிவிடுமோ என்று எண்ணும் அளவுக்குச் சோர்வு தோன்றியுளது. "பழமையை வெறுக்கிறோம், புதுமையில் மோகங் கொள்ளுகிறோம்" என்ற போலிக்கூச்சலுடன் போதிய பயிற்சியின்றிப் பிழைமலிய எழுதுவோர் நாடோறும் பெருகுகின்றனர். "பொருள் விளங்கினாற் போதும், எப்படியும் எழுதலாம்" என்ற கொள்கை வேரூன்றி விடாமற் பாதுகாத்துக் கொள்ளுதல் மொழியில் முறையான வளர்ச்சியை விரும்புவோர் முதற்கடமையாகும்.

இக்கடமையை நிறைவேற்றத்தக்க ஆற்றலும் வாய்ப்பும் தமிழ்ப் புலவர்களிலும் பார்க்கத் தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களுக்கு இப்பொழுது உண்டு. இதனை அவர்கள் நிறைவேற்றுவதற்கு முன்வருதல் வேண்டும். அவர்களை ஊக்குதற்குத் தமிழ்ப்புலவர்கள் முயலுதல் வேண்டும்.

பழமையுடன் புதுமையும் ஒன்றி இசைந்து மலர வழி வகுத்தலே தமிழுக்கு வாழ்வும் வளமும் அளிக்கும் செயலாகும்.

கைராசியுள்ள
மலைவாசல் பாத்திரக்கடை
அனைவரின் ஆதரவைப் பெற்றது.
★
உங்கள் விருப்பத்திற்கேற்ற
வெண்கலம், பித்தளை, தாமிரப்
பாத்திரங்களும்
மீனாக்ஷி மெட்டல் இண்டஸ்ட்ரீஸில்
தயாராகும்
எவர்சில்வர் பாத்திரங்களும்
எங்களிடம் கிடைக்கும்.
★
A. P. அருணாசலம் செட்டியார் சன்ஸ்,
மலைவாசல் பாத்திரக்கடை,
திருச்சிராப்பள்ளி-2.
தந்தி : ஹால்மார்க். போன்: 2088.



Furniture
FOR
Quality & Elegant
*Please Contact*
**SOLAR FURNISHERS**
18-A, BROADWAY,
**MADRAS-1.**
Phone No. 29455.

★

Suppliers to
All Leading Firms,
Govt. Depots, Southern Railway,
School & Colleges,
Panchayat Unions etc.

நவீன முறைகளில்
நாகரிக அமைப்புகளில்
நல்ல ரக அச்செழுத்துக்களை
தயாரிப்போர் :
**நியூட்டன் டைப்பவுண்டரி**
ஆபீஸ் : [தந்தி: "NEWTYPES"] பாக்டரி :
80, வாலாஜா ரோட், 754, 755, திருவல்லிக்
சென்னை-2. கேணி ஹைரோட்,
போன் : 86725. சென்னை-5.
போன் : 88309.

நியூட்டன் டைப் பவுண்டரியில் தயாராகும் எழுத்துக்களின் தன்மையை எல்லா அச்சக உரிமையாளரும் நன்கறிவர். அவை நீடித்து உழைக்கக்கூடியவை. உயர்ந்த மெட்டலினுல் தயாரிக்கப்படுபவை.

"கைராசி" பொருந்திய பட்டு ஜவுகளுக்கு சிறந்த இடம்
**G. R. சீனிவாசன்,** ஜவுளி வியாபாரம்,
10, தேரடிக்கடைத் தெரு, திருச்சிராப்பள்ளி-2.

கைராசி ! ஸ்ரீ ராமஜெயம் கைராசி !!
கைராசியுடன் உங்கள் விருப்பத்திற் கேற்றவாறு
எல்லாவிதமான
**பித்தளை, தாமிரம், வெண்கலம், எவர்சில்வர்**
பாத்திரங்கள் ஒரே விலைக் கொள்கையில் வாங்க
சிறந்த இடம் :
**ஸ்ரீ ராம விலாஸ் பாத்திரக்கடை**
545, தேரடிக் கடைத் தெரு (மலைவாசல் சமீபம்)
திருச்சிராப்பள்ளி-2.
போன்: ஷாப் 2309 — ரெசிடென்ஸி 2696

சிறப்பு மலர்

# நாடக உலகம்

—※—

உலகமே ஒரு நாடக மேடை. நாம் அனைவரும் நடிகைகளே. எல்லாம் வல்ல இறைவனே நடிகன். இறைவன் நம்மை ஆட்டிப்படைக்கும் தத்துவத்தை கண்முன் காணவைக்கும் அஷ்டாவதானமே நாடகம்.

நாடகம் கவலையைத் தீர்க்கும் மருந்து என்றார் நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார். நாடகமும் கூத்தும் நமது பாரம்பர்யமான செல்வங்கள். இவைமட்டும் இல்லா திருக்குமானல்... இதற்கு மேல் சிந்திக்க முடியவில்லை. மனித ஜாதி வைத்தியம் பிடித்து அலைந்து கொண்டிருக்கும். நாடகம் ஒரு கலாசாலையாக இருந்து மனிதனுக்கு வாழக் கற்றுக்கொடுத்து வருகிறது.

எந்த வீட்டில் தான் நாடகம் நடக்கவில்லை. ஒவ்வொருவரும் எத்தனை எத்தனை விதமாக மாறி மாறி நடிக்கிறோம். நாம் ஒவ்வொருவருமே சிறந்த நடிகைகள் என்பதில் சந்தேகமில்லை.

ஐந்து அங்கம் கொண்ட நாடகம் ஆரம்பமாகிவிட்டது. காட்சியை எழுத்து மேடையிலே காணுங்கள்.

—ரெட்டியார்.

# கவலை மாற்றும் மருந்து நாடகம்

### நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார்

நம் பாரத நாட்டில் பெரியோர்கள் பலர் துறவு பூண்டதாக அறிகிறோம். காரணம் என்ன? உலக வாழ்க்கையில் பொங்கித் ததும்பிய துக்ககரமான சம்பவங்கள் அன்றோ?

சம்சாரம் என்னும் சாகரத்தில் துக்கம் என்னும் நீர் நிரம்பியிருந்த காரணத்தைக் கண்டதனால்தானே புத்தர் பகவான் துறவியானார்!

உலகில் தன் ஆயுட்காலத்தில் துக்கம் அனுபவிக்காத மனிதனே கிடையாது. அந்தத் துக்கத்தை மறந்து மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்றே மனிதன் விரும்புகிறான். எனவேதான் அவனுடைய மனம் வேடிக்கை-விநோதங்களை இயல்பாகவே நாடுகிறது. அப்படிப்பட்ட விநோதங்களில் மிக முக்கியமானது நாடகம். இது சங்கீதம், நடனம் முதலிய பல கலைகளையும் தன்னுள் அடக்கியுள்ளது.

பெரும்பாலான மக்கள் நாடகம் காண விரும்புவது அந்தக் கலையின் திறத்தைக் கணிப்பதற்காக அல்ல; தம்முடைய கவலையை மறப்பதற்காகத்தான் செல்கின்றனர். ஆகவே பார்ப்போரின் உள்ளத்தைப் பரவசப் படுத்தும் முறையில் நாடகங்கள் இருக்கவேண்டும்.

ஆங்கிலத்தில் நாடகங்கள் எல்லாம் இரண்டு பிரிவாகப் பகுக்கப்பட்டுள்ளன. துக்ககரமாக, முடியும் நாடகங்கள் 'டிரேஜடி' (Tragedy) என்றும் மகிழ்ச்சிகரமாக முடியும் நாடகங்கள் 'காமெடி' (Comedy) என்றும் பெயர் பெறுகின்றன. நம் நாட்டில் இந்தப் பிரிவினை கிடையாது. எந்த நாடகமும் துக்ககரமாக முடியக்கூடாது என்பது நம் நாட்டின் கோட்பாடு. அதாவது துக்ககரமான நாடகமாய் இருந்தாலும் முடிவிலே ஆனந்தம் வந்துவிட வேண்டும்!

அறுபது வருடங்களுக்கு முன்பாக "சாரங்கதரன்" என்ற நாடகத்தைத் தமிழில் எழுதினேன். மனித சுபாவத்தை ஒட்டி அதனைத் துக்ககரமாகவே முடித்தேன். அதனை முதல் முதல் எங்கள் சபையார் பெங்களூரில் நடித்துக் காட்டினார்கள். சாரங்கதரன் வெட்டுண்டவுடன் நாடகத்தை முடித்தோம். திரை விழுந்தது. சபையிலே இருந்தவர்கள் ஒரே ஆரவாரம் செய்தனர். என்னவென்று விசாரித்தோம். "நாங்கள் நாடகத்தைப் பார்த்துவிட்டுத் துக்கத்துடன் வீட்டுக்குப் போக விரும்பவில்லை. "சாரங்கதரனுக்கு உயிர் கொடுங்கள்" என்று சிலர் கூச்சலிட்டனர்! குழப்பத்தை அடக்க முடியவில்லை. உடனே அவசர அவசரமாக ஒரு நடிகனுக்கு ரிஷிவேடம் போட்டுச் சாரங்கதரனுக்கு உயிர்கொடுக்கச் செய்தோம்! சாரங்கதரனாக நடித்த நான் உயிர் பெற்று எழுந்தவுடன் சபையோர் மிகுந்த குதூகலத்துடன் கைகொட்டிக் களிப்படைந்தார்கள்.

ஆகவே மனிதர்கள் விரும்புவது எப்போதும் ஆனந்தமே அன்றித் துக்கமல்ல! ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. "நீ சிரித்தால் உன்னுடன் உலகம் சிரிக்கும்; அழுதாயானால் நீ மட்டும் தான் தனியே அழவேண்டும்"— இந்தக் கருத்துடைய பொன் மொழியின் நுட்பத்தை நாம் உணர்ந்து போற்றத்தானே வேண்டும்!

(நடிகன் குரல் 1958)

# நாடகத் தந்தை பம்மல் சம்மந்த முதலியார்

—[ரா. நீலமேகம்]—

1957 செப்டம்பர் மாதம் சென்னையிலே சந்தடி மிகுந்த ஆச்சாரப்பன் முதலி தெரு, 70-ம் எண் வீட்டு வாசலில் நான் நின்று கொண்டிருந்தேன். மாடி வீடு. தெருவில் இருந்த சப்தமும், சந்தடியும் இல்லாமல் அமைதிகுடி கொண்டிருந்தது அங்கு.

"ஐயா !..." என்று குரல் கொடுத்தேன். சற்று நேரத்திற்குப் பிறகு ஒரு அம்மாள் வந்தார்கள்.

"யார் நீங்கள் ?" என்று வினவினார்கள்.

"நான் திருச்சியிலிருந்து வந்திருக்கிறேன். நாடகக் கலைஞர் சங்கத்தின் பொதுச் செயலாளர். ஐயாவைப் பார்க்கவேண்டும். இன்று வருவதாக எழுதியிருக்கிறேன்" என்றேன்.

"மேலே போய் இருங்கள்... ஐயா வருவார்கள்" என்று சொல்லி மாடிக்குச் செல்லும் படியைக் காட்டினார்கள். ஒவ்வொருபடியிலும் நான் அடி எடுத்து வைத்த போது நான் எனது நாடகக் கலையில் ஒவ்வொருபடி முன்னேறுவதாக ஓர் உணர்வு தோன்றியது.

மாடியில் ஓர் சிறிய 'ஹால்'. ஆடம்பரமான அலங்காரங்களோ, படாடோபமான ஆசனங்களோ ஒன்றும் அங்கு இல்லை. ஹாலின் ஓர் சுவரை ஒட்டி பழைய கால "கால் ஹார்மோனியப் பெட்டி ஒன்று காக்கி உறையைப் போர்த்திக் கொண்டு காட்சியளித்தது. அதன் மேல் சிறு தலைஅணை சுற்றிய பாய் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. சுற்றி இருந்த சுவரில் பல பல புகைப்படங்களும், பாராட்டு இதழ்களும் கண்ணாடி அணிந்து காட்சி கொடுத்துக் கொண்டிருந்தன.

அவற்றைப் பார்க்கப் பார்க்க எனக்கு வியப்புத் தாங்கவில்லை. நாடகக் கலையின் நெடுஞ் சரிதமே நிழல் படமாய் காட்சி கொடுப்பதாகவே எண்ணினேன். அத்தனையிலும் நாடகப் பேராசிரியர் பல பல பாத்திரங்களாக வடிவெடுத்துக் காணப்பெற்றார். கண்டு கண்டு களிப்பெய்திக் கொண்டே நான் அமர்ந்திருந்த சூழ் நிலையை மீண்டும் ஓர் கண்ணோட்டம் விட்டேன்.

அங்கு வருவதற்கு சில மணி நேரங்களுக்கு முன் தான் திரு. வி. சி. கோபாலரெத்தினம் அவர்களுடைய இல்லத்திற்குச் சென்றிருந்தேன். அவர் போற்றி

பாராட்டி மிக உயர்வாக பேசியுள்ள நாடகமேதை இருக்கும் இடமா இவ்வளவு எளிமையாகக் காட்சி ஆகிறது! என்று தீவிர ஆலோசனையில் இறங்கினேன்.

இதற்குமுன் பல நாடகமேதைகள் (தாங்களாகவே நினைத்துக்கொண்டிருக்கும்) வீட்டிற்குச் சென்றிருக்கிறேன். அவர்கள் தங்களுக்காக ஏற்படுத்திக்கொண்டிருந்த ஆடம்பரச் சூழ்நிலைக்கும் இதற்கும் எவ்வளவு வேறுபாடு.........?

சற்று நேரத்தில் பத்துப் பனிரெண்டு வயதுடைய ஒரு பையன் கையைப்பிடித்து அழைத்துவர மெதுவாக அடிமேல் அடியெடுத்து வைத்து மெலிந்த ஓர் உருவம் நான் இருக்கும் ஹாலுக்கு வந்தது. வந்தவரைப் பார்த்தபடி அமர்ந்திருந்தேன். நான் பார்க்க வந்தவர் வருவார் என்று காத்திருந்தேன்.

பெரியவரை அழைத்துவந்த பையன் அறிமுகப் படலத்தைத் தொடங்கினான்.

"தாத்தா!.......இவரு திருச்சியிலேயிருந்து உங்களைப் பார்க்க வந்திருக்காராம்......." என்று கூறிக் கொண்டு நான் இருந்த பக்கம் கைநீட்டினான்.

"அப்படியா!......நீலமேகமா?" என்றார் அந்தப் பெரியவர். திகைத்து எழுந்து நின்றேன். என்னை அறியாமலேயே என் கரங்கள் குவிந்தன, அவர் முகத்தை வெறித்துப் பார்த்தபடி நின்றேன்.

தமிழ் உலகம் தலைமேல் வைத்துக் கொண்டாடி வரும் முத்தமிழ் காக்கும் பம்மல் சம்பந்த முதலியார் இவர்தானா? கற்பனைக்கு எட்டாத காட்சியாகவல்லவா இருக்கிறது! என்று திகைத்து நின்றுகொண்டிருந்தேன்.

"அப்பா! நீங்கள் எழுதியிருந்த கடிதம் வந்து சேர்ந்தது......உங்களைப் பார்க்க ஆசைதான்...நாடகத்திற்கு யார் என்ன செய்தாலும் அவர்களை எல்லாம் பார்க்கவேண்டும் என்ற ஆவல்தான்...... ஆனால் என்ன செய்ய?.......என் கண் பார்வையை இழந்துவிட்டது?......." என்று மொழிந்தார். ஒவ்வொரு வார்த்தையிலும் நடுக்கம்..........

இவ்வார்த்தைகளைக் கேட்டபோது என் கண்கள் கலங்கின. என்ன பேசுவது என்றே புரியவில்லை எனக்கு.

"தம்பி! அவரை உட்காரச் சொன்னாயா?" என்றார் பையனைப் பார்த்து.

அப்பொழுதுதான் நானும் நின்றுகொண்டிருக்கிறேன், அவரும் நின்று கொண்டிருக்கிறார் என்பது நினைவிற்கு வந்தது.

"ஐயா! நான் உட்காருகிறேன். நீங்கள் முதலில் அமருங்கள்" என்று சொல்லிக்கொண்டே அருகில் இருந்த நாற்காலியை இழுத்துப்போட்டு அவரை அணைத்தபடி நாற்காலியில் அமர்த்தினன்.

அமர்ந்த அவர் தனது மெலிந்த கைகளால் என் கண்ணங்களைத் தடவினார். இரு கைகளையும் பற்றிக் கொண்டார். என் மெய்சிலிர்த்தது. ஓர் புத்துணர்ச்சி பரவுவதை உணர்ந்தேன்.

"அப்பா! பார்க்க முடியாவிட்டாலும் உன்னை உணரமுடிகிறது. உட்கார்...... உங்கள் சங்கம் நன்றாக நடக்கிறதா?......நிறைய நாடகங்கள் அரங்கேற்றுகிறீர்களா?" என்றெல்லாம் பரிவுடன் விசாரித்தார். தக்க பதில்களை தகுந்தபடி கூறினேன்.

"ஐயாவிடம் நாங்கள் வெளியிடும் மலருக்கு ஓர் கட்டுரை வாங்கிப் போகத்தான் வந்தேன்......."

"எழுத நிறைய இருக்கிறது. எழுதமுடியவில்லையே!" ஏக்கம் தொனித்தது அவர் குரலில்.

"நீங்கள் சொல்லுங்கள், நான் எழுதிக்கொள்கிறேன்" என்றேன் ஆர்வத்துடன்.

"அதிக நேரம் பேசவும் முடியவில்லை. எழுதவும் முடியவில்லை. ஆனால் சொல்லவேண்டியது அதிகம் இருக்கு" என்றார்.

அதற்குமேல் அவரை வற்புறுத்த மனமின்றி, தங்கள் ஆசிமொழிகளையாவது கூறுங்கள் என்றேன்.

"ஆசிகூற அவ்வளவு உயர்ந்தவனா நான்?" என்றார் தன்னடக்கத்துடன்.

"உங்களைவிட இந்தக் கலையில் உயர்ந்தவர் யார் இருக்கிறார்கள்? எங்களை ஆசீர்வதியுங்கள். புத்திமதிகளைக் கூறுங்கள்" என்றேன் உணர்ச்சிபொங்க.

"உங்கள் அன்பு அளவற்றதாக இருக்கிறது, நான் முக்கியமாக ஒன்றிரண்டு கூறுகிறேன் எழுதுங்கள். கடைசியில் நான் கையெழுத்திடுகிறேன்" என்றார்.

கூறத் தொடங்கினார். எழுத ஆரம்பித்தேன்.

"....கண்பார்வை ஏறக்குறைய முற்றும் குறைந்து போன என்னுடைய 85வது வயதில் கட்டுரை ஒன்று எழுத அசக்தனாய் இருக்கின்றேன். ஆயினும் என் ஆசை ஒன்றுண்டு. அதைக்கூற விரும்புகிறேன். தற்காலம் இப்படிப்பட்ட அமெச்சூர் நாடக சங்கங்கள் தமிழ் நாடகத்திற்குச் செய்ய வேண்டிய பெரும் தொண்டு ஒன்றுள்ளது. அதாவது, ஆதிகாலத்தில் தமிழ் நாடகங்களில் இருந்த பல குற்றங்கள் பெரும்பாலும் இதுவரையில் நீக்கப்பட்டிருந்தபோதிலும் இன்னும் சில குற்றங்கள் இருக்கின்றன; அவைகளை ஆராய்ந்து அறிந்து, அக்குற்றங்களையும் நீக்கி தமிழ் நாடகங்கள் உலகில் உள்ள மற்ற எந்த பாஷைகளில் உள்ள நாடகங்களைப் பார்க்கிலும் எவ்விதத்திலும் குறைந்தவைகள் அன்று என்னும் பெயரைச் சீக்கிரம் கொண்டுவர வேண்டியதுதான்................"

அன்பன் தமிழ் ஊழியன்

என்று கூறிமுடித்தார். வாசிக்கச் சொன்னார். கேட்டு விட்டு இன்னும் சிலவற்றையும் சேர்த்துக்கொள்ளச் சொன்னார்.

"இங்கே கொடுங்கள் கையெழுத்திடுகிறேன்" என்று சொல்லி கடிதத்தை வாங்கினார். பேனாவைக்

கொடுத்தேன். "எங்கே போட? இடத்தைக் காண்பியுங்கள்" என்ருர் அவர் கையைப்பிடித்து கையெழுத்திட வேண்டிய இடத்தில் வைத்தேன். மெதுவாக – முதலாவதாக எழுதக் கற்றுக்கொள்ளும் சிறு குழந்தை விளம்புவதுபோல – நிதானமாகக் கையெழுத்திட்டார் 'ப. சம்பந்தம்' என்று. கடிதத்தைக் கையில் பெற்றுக் கொண்ட நான் சாஷ்டாங்கமாக அவர் காலில்விழுந்து வணங்கினேன்.

"எழுந்திருப்பா....எழுந்திரு.......நன்ருகவாழ்வாய். கலை கைகூடிவரும்" என்று ஆசி கூறிக்கொண்டே என்னைத் தழுவிக்கொண்டார்.

பிறகு அரைமணி நேரம் நாடகக் கலையைப்பற்றி பல கேள்விகள் கேட்டேன் அவற்றிற்கெல்லாம் பதில் கூறினுர்கள்.

இச்சம்பவம் என் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்தது. பல பாடங்களையும் கற்றுத்தந்தது.

நாடகப் பேராசிரியர் ப. சம்பந்த முதலியார் என்று மக்களும், அரசும் பாராட்டி மகிழும் பெரும்பேருபெற்ற பெரியவர், சற்றும் ஆடம்பரமின்றி அமைதியாக, ஆனல் அந்தத் தள்ளாத வயதிலும் நாடகக் கலைக்காக தான் கொண்டிருந்த ஆர்வத்தில் சிறிதும் குன்ருமல், இன்னும் நாடகம் வளரவேண்டும், குறைகள் நீக்கப்பட்டு உலகில் உயரவேண்டும் என்ற குறையாத ஆசையை தன்னுள் அடக்கிக்கொண்டு. காலம் கரைத்துவரும் உடலுடன் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிருர் என்பதை உணர்த்தியது அச்சம்பவம்.

அப்போது அவருக்கு வயது 85. அந்த ஆண்டு ஆகஸ்ட் 1957ல்தான் சென்னை அரசினர் பாராட்டி சிறப்புப் பதக்கம் வழங்கி இருந்தார்கள்.

அதன் பிறகு 1959ல் பாரத அரசாங்கம் நாடகத் தமிழுக்கு ஆற்றிய தொண்டினைப்பாராட்டி அவருக்கு "பத்மபூஷண்" பட்டம் வழங்கிற்று.

நாடகப் பேராசிரியர் திரு. ப. சம்பந்த முதலியார் கல்லூரியில் பயின்று பட்டங்கள் பெற்றவர், சட்டத் தொழிலை மேற்கொண்டு நியாயவாதம் செய்து தொண்டாற்றியவர். ஆனல் அவரது புகழுக்கு, நாடகக் கலைக்கு அவர் ஆற்றிய தொண்டுகளே காரணமாகும். அவர் 109 நூல்கள் எழுதினுர். அவற்றில் 97 நாடகங்கள். அந்த நாடகங்களில் பாத்திரமேற்று நடித்துக் களிப்பூட்டினுர். தன் நாடகங்களைப் பிறரைக்கொண்டு நடத்தவும் செய்தார். ஏறத்தாழ 5500 இடங்களில் அவர் நாடகங்கள் நடிக்கப்பட்டன. பல நாடகங்கள் திரைப்படமாகவும் ஆக்கப்பட்டன.

அவர் நாடகம் எழுதி நடித்தகாலம் நாடகக் கலை அதிகம் வளர்ச்சி பெற்றிராதகாலம். "பாமரக்கலை" என்று ஒதுக்கப்பட்டிருந்த காலம்.

இவருடைய முயற்சியால் "சுகுண விலாச சபை" உருவாயிற்று. படித்துப் பட்டம்பெற்றவர்கள், பேரறிஞர்கள் பங்குகொண்டு சிறப்பிக்க வழிவகை செய்து பொது மக்களிடையே ஓர் மறுமலர்ச்சியை, கிளர்ச்சியை ஏற்படுத்தினுர். நாடகக் கலையின் உண்மையான சிறப்பை நாட்டினர் அறியும் நல்ல நாளும் பிறந்தது.

இவ்வாறு 65 ஆண்டுகளுக்கு முன்பே நாடகக் கலைக்கு நல்ல முன்னேற்றத்தை உண்டாக்கி, இன்றைய நாடக வளர்ச்சிக்கு அடிகோலிய திரு. சம்பந்த முதலியார் அவர்கள் 24–9–64 அன்று நம்மையெல்லாம் விட்டுப்பிரிந்து அமரராகி விட்டார்கள்.

நாடகத் தந்தை இன்னும் எட்டாண்டுகள் இருந்திருந்தால் நூற்ருண்டுவிழாக் கொண்டாடியிருக்கலாம். அவர் மறையும்போது அவருக்கு வயது 92.

மறைந்துபோன அம்மேதையின் நினைவை நெஞ்சிலிறுத்திக் கொள்ளும் எந்த எழுத்தாளரும், எந்த நடிகரும் அவர் இறுதிவரை கொண்டிருந்த ஆசை – அதுதான் முன்னே கூறியிருப்பதுபோன்று – தமிழ் நாடகம் குறைகள் நீங்கி உலகிலுள்ள எல்லா பாஷைகளிலும் உயர்ந்தவை என்ற பெரும்புகழை அடையும்படி செய்யப் பாடுபடுவதேயாகும்.

இதுவே நாம் அவருக்குச்செலுத்தும் அஞ்சலிகள்.

அவர் பூத உடல் மறைந்துவிட்டாலும் தமிழ் அன்னையின் பாதகமலங்களில் பல நாடக மலர்களைத் தூவி பூஜித்துக்கொண்டு வாழ்ந்துவந்த பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகங்கள் என்றும் நிலையாக நிற்கும் நாடகச் சரிதத்தில் அவர் ஓர் வாடாமலராகவே விளங்குவார்.


திருச்சி மலைவாசல் எவர்சில்வர் பாத்திரக்கடை

உங்கள் தேவைகளுக்கான எவர்சில்வர் பாத்திரங்களுக்கு சிறந்த இடம்

**சந்திரா கார்ப்பரேஷன்**

எவர்சில்வர் பாத்திர வியாபாரம்,

46-B, சின்னகடை வீதி, மலைவாசல், திருச்சிராப்பள்ளி-2.

# நாத்தி தந்த நல்வாழ்வு

★

சி. பி. குமாரவேல்

பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| கருப்பையா | — | |
| மாணிக்கம் | — | கருப்பையா மகன் |
| முருகையா | — | கருப்பையாவின் சம்பந்தி |
| சம்பந்தம் | — | ஓர் பெரிய மனிதர் |

காட்சி 1

[கருப்பையா வீடு. இரவு வெகு நேரமாகியும் தன் மகன் மாணிக்கம் வீட்டிற்கு வரவில்லை. அவன் வரவை எதிர்பார்த்து வாசலில் நிற்கிறார். மாணிக்கம் வந்து நுழைகிறான்.]

**கருப்பையா;** (அதட்டியபடி) டேய் மாணிக்கம்! நில்லுடா.

**மாணிக்கம்;** ஏன்.........?

**கரு:** ஏன்னு என்னைக் கேக்கிறே- காலையிலே வீட்டை விட்டுப் புறப்பட்டவன் இப்போ இராத்திரி 12 மணிக்கு வரே. எங்கேடா போறே நித்தம் இப்படி?

**மா.** எங்கேயோ போறேன்.

**கரு:** ஏண்டா வீட்டுக்கு அடங்காமே வீணு கண்ட கண்ட பெண்களோடேயெல்லாம் சுத்திக்கிட்டு காவிப்பய, உருப்படாத பயன்னு ஊரிலே பேரெடுத்துக்கொண்டு அலைஞ்சதை சகிக்க முடியாமேதானேடா ஒரு கல்யாணத்தைச் செஞ்சு வச்சோம். இன்னமும் திருந்தாமே இப்படி சுத்தினு என்னடா செய்யிறது? கட்டின பெண்டாட்டியை வீட்டிலே கண்கலங்க வச்சுட்டு சந்நியாசியாட்டம் சத்திரத்தை சுத்திக்கிட்டிருக்கிறது உனக்கு நல்லாயிருக்காடா? இல்லே உனக்கு நல்லாயிருக்கான்னு கேக்கிறேன்.

**மா:** (அசட்டுச் சிரிப்புடன்) யாரு–யாருக்காக கல்யாணம் செஞ்சாங்கன்னு நினைச்சுப் பாத்தா நீங்க என்னை இப்படிக் கேக்கமாட்டிங்க.

**கரு:** அடப்பாவி! என்ன சொன்னே? ......பெண் பாபம் பொல்லாதுடா - நீ அழிஞ்சு போவே.........

**மா:** (சிரித்து) முற்றுந்துறந்த முனிவருக்கு நான் பிள்ளையா பிறந்திருந்தால்லே நீங்க கொடுக்கிற சாபம் எனக்குப் பலிக்கும்!

**கரு:** என்ன சொன்னே...... (பதறியபடி) ஆ...ஆ...ஏ மங்கம்மா.......மங்கம்மா....

**மா;** இதுக்கெல்லாம் அம்மாவை ஏம்பா கூப்பிட்றீங்க. அவங்க பாவம்...... நானு உங்களை எனக்கு கல்யாணம் செஞ்சு வைக்கச் சொன்னேன்...... ...ம்.......... கேக்கிறதுக்கு பதில் சொல்லுங்க ?

**கரு:** ம்...... இல்லே......

**மா:** என்னைக்கேட்டு பொண்ணு பாத்திங்களா ?

**கரு:** இல்லே.........

**மா;** அம்மாவுக்கு... அதாவது உங்க சம்சாரத்துக்கு வீட்டு வேலை செய்ய முடியலேன்னு உதவிக்கு ஆள் வேணும்னு எனக்கு கல்யாணம் செஞ்சு வச்சிங்க...... இல்லியா ?

**கரு:** என்னடா இப்படி பேசுறே...

**மா:** நான் கேக்கிறதுக்கு முதல்லே பதில் சொல்லுங்க...

**கரு:** உன்னைப் பெத்த அம்மா இல்லியாடா: அவ கஷ்டபடலாமா ?

**மா:** யாரு கஷ்டப்படணுன்னு சொன்னுங்க.. இப்ப அதுக்குத்தான் உங்க வீட்டு வேலைக்கேத்தாப்பிலே நல்லா வேலை செய்யற பொண்ணு பாத்து முடிவு செஞ்சிங்க......

**கரு:** உங்கிட்டே சொல்லாமே நாங்களாவா முடிவு செஞ்சிட்டோம்...... ஏன்டா இப்படி வீண் பழி சுமத்தறே......

**மா:** நான்தான் எனக்குகல்யாணம் வேணுன்னு சொன்னேனே கேட்டிங்களா......

**கரு;** உன்னைப் பெத்த தாயும் தகப்பனும் நீ நல்லா இருக்கத்தானேடா எதையும் செய்வாங்க.

**மா:** நான் நல்லா இருக்கிறதுக்கு கல்யாணம் செய்தா எனக்கு பிடித்த பொண்ணைல்லே செய்திருக்கணும் நீங்க ஆட்சி செய்ற குடும்பம் ஒழுங்கா நடக்கிறதுக்காக வீட்டுக்குசம்பளமில்லாத வேலைக்காரியை தேடிப்பாத்து நிச்சயம் செஞ்சுக்கிட்டு தாலி கட்டுடானிங்க...... என்னைப் பெற்று வளர்த்த நன்றிக் கடனுக்காக நீங்க சொன்னதைத் தட்டாமச் செஞ்சேன்.

**கரு:** அப்படி கட்டுப்பாடா இருக்கிறவனு இருந்தா அப்பவேல்லடா இதைச் சொல்லியிருக்கணும், நீ இப்ப சொல்றது அந்த பொண்ணு அப்பனுக்கு தெரிஞ்சா முதுகுத் தோலை எடுத்துப்பிடுவான் எடுத்து......

**மா:** (போய்க்கொண்டே) என்னைக் கூப்பிட்டு கேக்கிற போது பல்லு உடையருப்பிலே பதில் கொடுக்க எனக்குத் தெரியும்...... நீங்க உங்க வேலையைப் பாருங்க.

**கரு:** என்ன சொன்னே.... என் வேலையையா பாக்கச் சொல்றே.

காட்சி 2

**சம்பந்தம்:** என்ன கருப்பையா பிள்ளை......

**கரு:** யாரு... வாங்க... வாங்க... என்னமோ என் தலை எழுத்து கடைசிகாலத்திலே நரக வேதனைப்படுறேன்... நீங்க தேர்தல் விஷயமாத்தானே வந்தீங்க....

**சம்:** நாளை மறுநாள் தேர்தல் பாருங்க, இன்னைக்கே எல்லாருகிட்டேயும் சொல்லி வச்சுட்டாத்தானே, தேவலாம்.

கரு: ஆமா.... ஆமா..., செய்யுங்க ... நானே.... அதெல்லாம் என்னோடே போகட்டும்... போங்க போயி காரியத்தைப் பாருங்க...

சம்: ஆமா.... கருப்பையா பிள்ளை.. உங்களோட நரக வேதனை ஊரெல்லாம் தெரிஞ்ச விஷயமாப் போச்சு. நாம செய்யற தப்புக்கெல்லாம் தலையெழுத்துன்னு சொல்லிட்டா போதுமா? பெத்த பிள்ளையா இருந்தாலும் இந்தக் காலத்துப் பசங்க கிட்டே கேட்டுத்தான் செய்யணும்... இப்பனுலும் என்னதான் உன் மனசிலே நினைச்சுக்கிட்டிருக்கேன்னு கேட்கிறதுதானே...

கரு: கேக்காமேயா இருந்தேன். கேட்டேனே ... சொத்தைப் பிரிக்கணுமான்னு கேட்டேன். தொழில் செஞ்சு வைக்கணுமான்னு கெஞ்சினேன். எதுவும் வேண்டான்னுட்டான். நெருங்கிப் பிடிச்சுக் கேட்கிறபோது வீட்டிலே தங்கச்சியை வச்சுக்கிட்டு தனக்கு கல்யாணம் செஞ்சது தப்பு... பட்டம்மாவுக்கு கல்யாணம் நடந்தாத்தான் அவனும் அந்த பொண்ணோடே வாழ முடியும்னுன்.

சம்: அதுவும் நியாயந்தானே .... ரத்த பாசத்திலே கேட்டிருக்கான். அதுலே நீங்க செய்தது தப்புத்தானே ...

கரு; உடனடியாத்தான் பாங்கிலே இருந்த பணத்தை எடுத்து அடுத்த மாதத்திலே பட்டம்மாளுக்கு கல்யாணத்தை முடிச்சு வைச்சேன். அப்பறமும் வேதாளம் முருங்கை மரத்திலே ஏறின கதையா மறுபடியும் சத்திரத்துத் திண்ணையே கதின்னு கிடக்கிருனே பாவி...என்னோடே மானம் போகுதுய்யா.

சம்: உங்க பிள்ளையில்லே, உங்களாட்டமே பிடிவாதம் பண்ருன். நீங்களும் சின்ன வயசுலே கொஞ்ச பாடா படுத்திருக்கிங்க... உங்க வீட்டுக்கு மருமகளா வந்திருக்கிற பொண்ணு கடவுள் அவதாரம்... தங்கமான குணம்... அடக்கமா இருந்து தன்னோடே கஷ்டத்தை வெளியே சொல்லாமே உங்க குடும்ப கவுரவத்தை காப்பாத்திக்கிட்டிருக்கு.

கரு: பெண்கள் ஊமையா இருந்தாலும் இந்தக் காலத்துக்கு நல்லதில்லீங்க.

சம்; ஏன் கருப்பையா பிள்ளை உங்க மகளைக் கட்டின சம்மந்திக்கு உங்க பிள்ளையாண்டான் விஷயம் தெரியாதுன்னு நினைக்கிறேன். வீட்டுக்கு வந்த மருமகளை வாழா வெட்டியா வீட்டிலே வச்சிருக்கிறது தெரிஞ்சிருந்தா பட்டம்மாளை அவங்க சம்பந்தம் செஞ்சிருப்பாங்கன்னு நினைக்கிறீங்களா?

கரு; தெரியாதுய்யா.... அவருக்கு உண்மையிலேயே தெரியாது. இந்தப்பய பேச்சை நம்பி மருமக வாழணும்னு நினைச்சு இருக்கிற பணத்தை தண்ணியா செலவழிச்சு மகள் கல்யாணத்தை முடிச்சேன். இந்த படுபாவி மறுபடியும் எங்களை பழி வாங்குருனே... நான் என்ன பண்ணுவேன்.

காட்சி 3

[சலங்கை ஒலிக்க வாசலில் வண்டி வந்து நிற்கிறது]

சம்: யாரு வண்டிலேருந்து இறங்குறது?

கரு: அது என்னோடே சம்மந்திதான்!

சம்: அவரு பின்னுலே இறங்குறது உங்க மாப்பிள்ளை மாதிரியில்லே இருக்கு.. அடடே உங்க மக பட்டம்மாளும்லே வருது! ... என்ன முழிக்கிறீங்க? — அவங்க வரது உங்களுக்கு தெரியாதா?...

கரு: (தயங்கியபடி) வாங்க சம்மந்தி.... வாங்க... வாங்க....

முருகையா: ஏய் கருப்பைய்ா பிள்ளை.... உம்மை நான் ஊர்லே பெரிய மனுஷன், ஒழுங்கான குடும்பம்னு நினைச்சேன். ஒருத்தன் வீட்டிலே இருக்கற பெண்ணை பணத்துக்காக கல்யாணம் செய்து கொண்டாந்து வாழ விடாம சிறை வைச்சிருக்கிறதை எத்தனை நாளைக்கித்தானையா மூடி மறைக்க முடியும்... இப்படிப்பட்ட குடும்பத்திலே இருக்கிற பொண்ணை நாங்கமருமகளாக்கினதுஎங்க உற முறைக்கு தெரிஞ்சா எங்களை ஒதுக்கி வச்சிடுவாங்கய்யா தெரியுமா?.... இந்தா இருக்கு உம்ம பொண்ணு .. நீர் கொடுத்த சீர் வரிசை எல்லாம் இதோமூட்டையா கொண்டாந்திருக்கேன். இன்னையோட நம்ம உறவை ரத்து செய்துக்கறேன்.

கரு: சம்மந்தி... சம்மந்தி... உங்க காலைப் பிடிச்சுக் கேட்டுக்கிறேன். எம் பொண்ணு வாழ்க்கையை வீணடிச்சுடாதீங்க சம்மந்தி...

முரு: அதுதான் நடக்காது, நீ ஒரு நடத்தை கெட்டவன். உம் மகன் ஒரு காலிப்பய.. உம் பொண்ணு..

மாணி: (கோபமாக) மாமா... நிறுத்துங்க உங்க பேச்சை... என் தந்தையை எதுவேணும்னுலும் சொல்லுங்க... என்னை என்ன வேணும்னுலும் திட்டுங்க... ஆனு என் தங்கையை எதுவும் சொன்னிங்க எனக்கு கெட்ட கோபம் வரும்...

முரு: ரோசம் உள்ள நல்ல குடும்பத்திலே பிறந்தவனு இருந்தா அழகான மனைவியை விட்டிலே வச்சுட்டு இப்படி ஊர் சுத்துவியா?.... உண்மையிலேயே உன் தங்கை வாழணும்னு நீ உன் மனைவியோட குடுத்தனம் செய்யணும். இல்லே உன்னோடே தங்கையை உன் வீட்டோட வச்சுக்க... ஊர் வாயை மூட எங்களாலே முடியாது..

மாணி. எங்கப்பாவைப் போல நானும் பிடிவாதம் பிடிச்சவன்தான். என் தங்கச்சிக்காக என்னை அலட்சியம் செய்த எங்கப்பாவையும் அவரோட சம்மந்தியையும் சும்மா விட்டுட்டு... குடுத்தனம் நடத்துறேன்... இப்ப உங்களுக்கு திருப்திதானே...

முரு: திருப்திதானுன்னு வார்த்தைலே சொன்னு மட்டும் போதாது மாப்பிள்ளை... உங்க பெண்சாதியை இப்பவே எங்க கண்ணுக்கு முன்னுலே கூட்டிக்

கிட்டு உங்க தங்கச்சியோட கோவிலுக்கு புறப்பட்டுப் போகணும். அப்பத்தான நாங்க உங்களை நம்புவோம்.

மாணி: இவ்வளவுதானே... அமர்தம்... அ ம ர் த ம்... இன்னைக்கு பிரமாதமா மணப்பொண்ணு மாதிரி டிரஸ்' பண்ணிக்கிட்டு வா. தங்கச்சி பட்டம்மா கூட இன்னைக்கு கோவிலுக்குப் போகலாம்...

[எல்லோரும் சிரிப்பு]

முரு: பேஷ் மாப்பிள்ளை பேஷ்....

*[மாணிக்கம், அமிர்தா, பட்டம்மாள், அவள் கணவன் அனைவரையும் ஏற்றிக்கொண்டு வண்டி புறப்படுகிறது.]*

கரு: சம்மந்தி, உங்களாலே ஓர் நல்ல காரியம் நடந்திருக்கு இன்று.

முரு: சம்மந்தி... நீங்க உங்க பையனுக்கு கல்யாணம் செய்துவைச்சுட்டு சங்கடப்பட்டுக்கிட்டிருக்கிறதை உங்க மக பட்டம்மா நேத்துத்தான் சொல்லிச்சு. அதுக்கப்புறம் என்னுலே ஒரு நிமிஷம்கூட இருக்க முடியலே. உங்களைப் போல உங்க பிள்ளை மாணிக்கமும் பிடிவாதக்காரர்ன்னு கேள்விப்பட்டேன். அப்படியிருந்தா அந்தப் பொண்ணு வாழ்க்கை என்னுகிறது? ஏதாவது நல்ல முடிவு செய்யணும்னு தவிச்சேன், என் மகனும், உங்க மகள் பட்டம்மாளும் சேந்து எனக்கு பாடம் சொல்லிக் கொடுத்து இப்படி நடிக்கச் சொன்னுங்க... போட்ட நாடகம் வெற்றியடைஞ்சு வீட்டிலே மனக் கவலையோடு இருந்த அமிர்தம் மாணிக்கத்தோடு சந்தோஷமாப் போறதைப் பார்த்ததும் என் மனசு மகிழ்ந்தாப்பிலே உங்க மனசும் பூரிச்சிருக்கும்... நான் உங்களை பேசியதெல்லாம் நடிப்புத்தான்னு நினைச்சு என்னை மன்னிச்சிடுங்க சம்மந்தி.. உங்க மகள் -என் பெண் நாத்தி செய்த காரியம்தான் இப்ப என் மகளுக்கு நல் வாழ்வு பிறந்திச்சு.

கரு: சம்மந்தி.... உங்களுக்கு நான் என்றைக்கும் கடமைப்பட்டவன். நரகத்திலே இருந்த என்னை கரை சேர்த்ததை என்னுலே மறக்கவே முடியாது. அதனுலே நீங்கதான் என்னை மன்னிச்சுக்கணும்.

முரு: நாத்தினுருக்கு வாழ்வு அளித்த உங்க பெண்ணை வாழ்த்துங்க.

கரு: அவ என் பெண்ணு!... தங்கம்தான்...

---

# சொல்லெல்லாம் சொல்லாகுமா?

—(கரூர். கி. கோவிந்தராசன்)

சொல்லெல்லாம் முருகனின் சொல்லாகுமா ? — தமிழ்ச்
சொல்லெல்லாம் அழகென்னும் பேராகுமா ?
அருளெல்லாம் முருகனின் அருளாகுமா ? --நம்
பொருளெல்லாம் துணைநின்று நமைக்காக்குமா ? (சொல்)

அழகெல்லாம் முருகனின் அழகாகுமா ? -- அந்த
அழகென்னும் இளமையும் நிலையாகுமா ?
கழலெல்லாம் முருகனின் கழலாகுமா ? -- மலர்ப்
புகழெல்லாம் முருகனின் புகழாகுமா ? (சொல்)

மொழியெல்லாம் நம் தமிழ் மொழியாகுமா ? — அந்த
மொழியெனும் துணைக்கொரு முருகாகுமா?
விழியெல்லாம் பன்னிரு விழியாகுமா ? — அந்த
விழியினில் விளைந்திடும் வேலாகுமா ? (சொல்)

முகமெல்லாம் மூவிரு முகமாகுமா ? — அது நம்
முருகனின் திரு முகம் போலாகுமா ?
அகமெல்லாம் அவன் அருள் வரவேணுமா ? — அனு
தினமெல்லாம் அவன் புகழ் பாடித் தீருமா ? (சொல்)

மலையெல்லாம் பழனி மலையாகுமா ? — அந்த
மலைமீது குடிகொள்ளும் சிலையாகுமா ?
விலையில்லா மாணிக்கத் திருவாகுமா ? — அது
நிலையில்லா நம்வாழ்கைத் துணையாகுமா ? (சொல்)

# Some Distinctive Features of Tamil Literature

*"Somalay"*

★

The Tamil scholars and writers are often accused of parochialism, of regional loyalties and of crooked thinking. Propagandists of English and of Hindi are strange bed-fellows in this campaign to assail Tamil intelligentsia as "persons blinded by narrow passions". It is even argued that the Tamils have no sense of time or space. The limitations of Tamil vocabulary and its inadequacy for translation are frequently pointed out.

In this article, it will be my endeavour to make it clear that neither the Tamil language nor its literature. support any of the above allegations even in a slight degree.

Tamil has been the first Indian language to attain its present form and to have a continuous literary tradition going to back to over three milleniums. Of this, all the Tamils are justifiably proud. This is indeed a proud achievement, considering the fact that Urdu, for instance, took its grammar from Sanskrit, its vocabulary from Persian and Turki and its script from Arabic.

Narrowness or regional preferences and prejudices are nowhere found or preached in Tamil literature. A good number of Tamil works of literary merit have, right from the pre-historic era, emphasised the oneness of humanity and the need for a world outlook. The *Purananuru* says that each part of the world is as good as one's own home and that all human beings are kinsmen. The *Thirukkural* refers to the world, as the Lord's greatest creation. *Peria Puranam* opens with the word "World" (Ulagam). This concept of one world and of humanity finds its echo in Kamban and in many other Tamil scholars.

The historic unity of India is a theme abundant in Tamil literature. The eternal snow of the Himalayas is referred to in Tamil works of over two thousand years ago. The great rivers-especially Mother Ganga, descending from the snows, fertilising a thousand miles of the northern plains — are sacred, cleansing, life-giving. There are umpteen references to the Ganga even in the earliest stages of Tamil literary history, viz., the age of *Pattinappaalai*.

The importance of the holy city of Varanasi (Benares) is inscribed in scores of Tamil books, beginning with *Manimekalai*, *Kalithogai* and *Perunkathai*. Tamil proverbs about the Ganga and Varanasi are too many to be mentioned here. The *Thevaram* refers to shrines all over India and a staunch Saivite is expected to cover Ceylon and Nepal also in his pilgrimage.

Linguistic fanaticism is least found among the Tamils. In support of this contention stand out several facts. The Tamils have a habit of learning other people's languages with the result that the others never find it necessary to learn Tamil. In all the towns and cities of Tamilnad, the English newspapers predominate. With all their love of Tamil, the Tamils hesitate to send their children to Tamil medium colleges.

Translation of books from other languages is always welcomed in Tamil. This has been going on from the earliest times. One of the oldest Tamil works, the *Tholkappiam* has framed the rules for adapting foreign words in the Tamil language.

Many a friend has told me that the Tamils have a knack of expressing their point of view, in a long-drawn-out manner. This may be true of the Tamil epics, which are based on Sanskrit originals. But classics and other works of Tamil literature exercise the utmost economy in the use of words. The "solladaivu" or compilation of words used in some of these works is sufficient to prove that something like a basic English existed in the Tamil language in the Sangam era.

The great didactic works like *Aathisoodi*, *Konrai vendhan*, *Nazvazi* preach ethics. They

not only plead for plain living and high thinking, but also convey in the minimum number of words the maximum of advice on men and matters, society and good conduct.

Words — each of them having different shades of meanings — find place in many of the Tamil literary works.

The scientific background of Tamil scholarship even in ancient days is discernible in the *Thirukkural* — in its division into three main parts, the sub-division of each part into chapters, of each chapter into ten Kurals. And each Kural consists of two lines — the first of four syllables and the second of three.

The scientific outlook of the Tamils is also found in their treatment of grammar under Ezuthu, Sol, Porul, Yappu, Ani; in their division of land into Paalai, Marutham, Neithal, Mullai and Kurinchi categories and in the division of Sangam literature into *Aham* or subjective poetry and *Puram* or objective poetry. It is also evident in the anthologies of Tamil literature — collections of poems composed by different persons and properly compiled. classified and edited. Even from the dawn of literature, Tamil writing has been the creation not exclusively of the scholar and the professional writer; its contributors have been drawn from varied walks of life. Writing has been a hobby of persons in other professions as is suggested by Kaniyan (Astrologer) Poonkunranar, Koolavanigan (Grocery Merchant) Saathanar and other names.

In his recent book, INDIA AND PAKISTAN A Political Analysis, Hugh Tinker, Professor of Politics, University of London, makes this observation:

> There are still Westernised politicians (such as C. Subramaniam) who speak more fluently in English than in their "native" tongue; at any rate, for political purposes, they like to introduce long quotations from Tamil poetry, to demonstrate their facility in their own language. (P. 135)

This criticism is most unfair. A person quotes most from the sources he is familiar with viz., the long and frequent Sanskrit quotations of President Radhakrishnan, the Latin and French quotations of European scholars. Even in the States, I have come across hundreds of persons who proudly claim to be Latin to the last drop of their blood. Professor Tinker is unlikely to know that quotations from Shakespeare and other giants of English literature are almost the rule in Tamil speech as well as in Tamil writing.

Most foreigners and North Indians hesitate to believe that Tamil could have been in vogue as a developed language two thousand years ago. They just ignore the claim as unscientific. But they forget that scientists and geologists have recorded the story of the earth for over hundreds of thousands of years.

A deep study of this subject will go a long way to understand the Tamil point of view and to appreciate the rich heritage of Tamil. Such a study will help to slow down the trenchant expression of definite, strong and wrong views.



# WORLD LITERARY TRENDS

*By*

S. R. SRINIVASA RAGHAVAN

★

Literature, as it is recognised, always points to the intellectual standards of a community, a race, or a language, and languages develop in their strength and sensitiveness according to the mental development of the community using it.

Within the limited sphere of this earth, the advancement of so-called science is said to have conquered time and space, and this is true to a certain extent.

Man's corporeal mould is bounded by space and time and though he could live like a god, he has to die like a man. Ultimately man's greatest achievement belongs to the thought-world, an abstract phenomenon, probably truer and sustained than the rational world about which we fight with each other and kill each other.

It will be a little curious, but at the same time very intensely true, that man is not the only creature living in this planet and such wonderful things like the African lion, the Bengal tiger, the Minah, the cuckoo, the mango tree, the gooseberry, the apple orchard and myriads of living things are his compeers; and he has to share his pleasures and pains with all of them.

Somehow man is so intensely interested in organizing his own society in the best possible manner, experimenting this system and that, swearing by one and another, that all the beauty, magnitude, variety and song of creation is lost on him. And in the greatest cities he has built, there is disaster death, disease and squalor. He seems to be still at the beginning of time; at Ur of the Chaldees, at Harappa, at Sparta, at Rome, at Alexandria, where men had lived equally well, equally civilised, with drains and bathing ghats! But unfortunately drains, bathing ghats, gold ornaments, nylon sarees, aeroplanes and motorcars are not civilisation. They nauseate, give misery, smell badly, result in disasters and pollute the cleanliness of God's atmosphere.

⁂ ⁂ ⁂

The greatest literature of man, contemporaneously, points to this great truth at which we have arrived after going through the abolition of monarchy, the Industrial Revolution, Darwinism and Marxism. Aldous Huxley's "Means and Ends" and "The Perennial Philosophy" have arrived at this conclusion. Einstein's last words were expressive of an awe at the cosmic phenomenon called the universe and he perhaps felt that his petty equations could not go far since they were based on assumptions.

⁂ ⁂ ⁂

The Indian heritage has been quite rich and we need not grope as the West gropes. We have simply to look back and ponder. The nuclear age has perhaps heralded a new era wherein man has been compelled to sit and contemplate.

Both ancient Tamil and Sanskrit literature exhibit an awareness of the limitations of man and, the nature of his flesh and mind have been thoroughly analysed. There is nothing fresh for you to do. Instead of moving on a chariot with a wooden wheel, you may perhaps ply a motor car with a Dunlopillo seat and rubber tyres and an engine running on petrol. But your flesh and blood, your arterial system, the eye that sees, the ear that hears, are all the same — perhaps vulgarised by the civilization you have created; losing their sensitiveness.

⁂ ⁂ ⁂

Modern Indian literature is in a half-way house - having a weak link with traditions, not having a full awareness of the morrow into which we are being forcibly pushed, half by circumstances, half by foolishness. A friend of mine

used to tell me that we have come into the age of reason and have left behind the age of emotion. I used to wonder what this "reason" was! Perhaps the seventy-six motor cars, and the seventy-six guns booming to celebrate the seventy-sixth birthday of Tim — Tom — Tum, the extra-ordinary political panjundrum!

⁂ ⁂ ⁂

Even the attainment of Aldous Huxley, perhaps the most civilised man among humanity on date, is negative. He has pointed for us the zero position. So we are left behind by him to perform adventures in the positive field. From a state of distraction in which we are wallowing we have been directed towards a position of concentration.

The literature of man is over. The literature of the Minah and the Charvaka, of the horse and the elephant, of the perennial rivers and mountains and so on have to be explored intensely and with one-pointedness.

All your history is a dirty record exhibiting very poor understanding of the nature of things. Singing the praises of a Napoleon, a Hitler or a Tartar king or a cosmonaut is not history.

Humanity has to probe with its intuitive faculty, cutting down its mind which has landed it on the brink of a precipice.

Enrichment of any literature is possible only when the thinking faculty of man has intense powers and has an ability to see through transient processes and lay its hand on the permanent verity. Dag Hammerskjoeld's 'Vagmarken' has uprooted the tares and sown the wheat. He was a Norwegian serving as the Secretary-General of the UNO in New York city and his diary has shocked the world by revealing that he was also a "saint", if you like the word.

There is a destiny for man. He should not destroy himself. He should watch and wait. He should be passively alert and aware.



# ECSTASY OF DIVINE ART

Kavi Yogi Shuddhananda Bharati

Love bursts into a psychic flame
The flame flows into songful name
The blessed name of Divine Supreme
Builds up Art from a Poet's dream.

The music of the Inner Light
The voice of the heart in calm delight
Dances in the flowing flute
And tunes the harp of the living Art

The Vedic Art was born from ×Aum
The songster's art was born from +Ram
Sukha's lines were born of ⊕Shyam
The song of life was born from: ‖ prem.

Like stars above from azure heights
Beauty springs from silent depths

Of a trance beyond days and nights
Known only to divine adepts.

The Poet gives himself and enjoys
His pains and sacrifice
So that mankind may rejoice.
His soul breathes in his voice.

O world, save the poet from agony
The Poet shall save thee from ruin
This Existence is his symphony
It sings in sea and wind and rain.

× Aum is the humming Symphony of the Soul
\+ Ram is the expression of Self delight
⊕ *Shyam* is the play of Self Delight in all beings
‖ Prem is the psychic love that is the fountain of that Delight.

# RAMA

## on the Bank of the Kaveri

★

G. C. Pattabiram

After hearing the story of Rama from Narada, Valmiki who was attracted by the qualities of Rama wrote his immortal Sanskrit epic Ramayana and made Rama, an ideal hero. Rama attracted from the beginning all the Hindus as they found in him the ideal of Dharma personified. They took him to be Dharma incarnate. Kalidasa again could not resist the charm of the character of Rama and he again wrote his epic Raghuvamsa with Rama as its hero.

Rama who was immortalised in the Gangetic delta by Valmiki and Kalidasa became popular in Tamilnad also. Rama cult was popularised in the South first by the Alwar saints. Perialwar, Kulasekhara Alwar, Nammalvar and Thirumangai Alwar have sung the greatness of Rama in musical Tamil songs that form part of Divya Prabanda which is considered by Vaishnavites as Tamil Veda. They have declared Rama as none other than their Ishta Devata Narayana. Kambar who was later to Alwars was also attracted by this Adarsha Purusha and wrote his Rama Katbai in enchanting Tamil. It is a superb epic famous for its diction, poetry and music. Kambar wrote the story of Rama, the ideal hero, to prove that it is possible for a man to practice all the principles that were enunciated by Thiruvalluvar in his sacred Thirukural which is more sacred to Tamils than the Vedas.

The Tamil mind has always set high store by ethics. The ideal of recititude, of fidelity to the spouse, of wealth untainted by foul means and of ultimate renunciation of worldly ties have always had an irresistable appeal to the Tamils. Un chastity even of the mind is repugnant to the Tamil tradition. The ideal of monogomy to which Rama pledged himself and the beautiful and clear love at first sight episode which occured at Mithila before Rama on Sita by prowess have endeared him to the heart of the Tamil people to whom he is no longer an alien Avatar.

After the Tamil bard Kambar had sung the epic the Chola artists were attracted towards the hero of the epic. They have immortalised Rama in murals and sculptors have captivated Rama's inimitable form in stone and bronze. We have many beautiful Chola bronzes of Rama on the bank of the river Kaveri. They are now found in the temples of Vilanagar, Thillaivilagam, Vaduvur, Mudikondan, Thirucherai, Adambar and Akkur, all in Tanjore District. These beautiful images of Rama with Tribanga form radiate the message of beauty to the artistic minded and of infinate grace to the devout and the pious. In Tiruvahindrapuram, near Cuddalore in South Arcot District, we have fine Rama bronze that inspired Vedantadesika to write his Raghuvira Gavyam. There is a rare bronze of Viswarupa Hanuman in a small temple at Ananthamangalam near Thirukadayur in Tanjore District that reminds us of the brilliant description of Hanuman's Viswarupa in Kamba Ramayanam.

The immortal Tamil poet Kambar was captivated by the beauty of Rama's personality which was ever berore his mind's eye. He described him as beauty unbounded which cannot be delianated by art by its finate means. On seeing these charming bronzes we wonder whether Kambar was not after all wrong in saying so. The image of Sita is also artistic and lovely like a lyric. The charming and graceful form of Rama and the purity of character as described by Kambar, have attracted the Tamil artists to such an extent that they converted their pet Tamil God Muruga into Danush Subramania and modelled his image on Rama with his graceful form. This beautiful sculputre at Thiruvayaru near Tanjore and bronze at Sayakadu in Kaveripatnam (near Mayuram) of Silappadikaram fame are artistic and unique and it is a bold experiment in art and religion. This image of Danush subramania is a bridge between Tamil and Sanskrit, north and south, saivite and Vaishnavite religions.

In Tamilnad we have many temples dedicated to the worship of Rama and among them the most famous and artistic is in Kumbakonam, the city of temples. This temple was built by the Tanjore king Achyuta Naik to house the Rama images that were found in a tank bund. This temple is famous for Nayak sculptures that illustrate the episodes of Ramayana. Chief among them depict the coronation of Sugriva and Vibhishana. There are beautiful sculptures of Rama, Sita, Laskhmana, Hanuman,

Rathi and Manmatha, that bring out the salienh features of the Nayak art. We have also in this temple paintings that illustrate the story of Ramayana. Though this temple is not an ancient one, still it has attained popularity because of its artistic beauty. After Kambar, Thyagaraja and Arunchala Kavirayar populairsed the cult of Rama by their lyrical Kritis. There is a tradition that Thyagaraja used to visit this temple for inspiration to sing the greatness of Rama in his musical compositions. Another temple dedicated to Rama is in Maduranthakam near Chingleput. It has become famous as it attracted the respect of the English collector Col. Place who has made many endowments for the temple. To commemorate an incident in Col. Place's life still the God is known as "Erikatha Raman."

Rama has become Kaveri Thira Rasika. He has become native to the soil of Tamilnad and has found a permanent home in the hearts of the Tamils. His myriad names have found their way into every household — Kalyanarama, Kothandarama, Venkatarama, Sitarama, Ramachandran, Ramasamy etc., are but a few of the many names commonly heard in Tamilnad. He is perhaps more popular in Kaveri delta than in the Ganga and Godavari deltas which are conneted with his life. Numerous artistic Chola bronzes of Rama are found in Tanjore District and not in Nasik or Ayodhya. I have visited both the places and I was disappointed not to find a single image of Rama that can inspire love and reverance like the beautiful Chola bronzes of Rama. Kala Rama temple at Nasik & Lakad Mandir and Kanakha bhavan at Ayodhya cannot stand comparison with the Rama temples at Kumbakonam or Maduranthakam that are majestic and artistic. There is nothing in Ayodhya or Nasik now to impress us about its past glories. The only thing that attracts us there are the rivers Sarayu and Godavari. The Chola bronzes of Rama inspire us and bring us back vivid memories of the enchanting face of Rama as described by Kalidasa, Valmiki and Kambar.



# NATIONAL INTEGRATION

SUBRAMANIA BHARATHI occupies an unique place in Tamil literature. Very rarely does a poet command the layalty of both the classes the and the masses, as Bharathi has done.

Bharathi was a nationalist first and a nationalist last. Knowing first-hand the socio-economic degradation into which the country had been plunged by the alien rule, he realized that nothing short of total freedom would save the country. He was impatient and driven with a sense of urgency, he sang of revolution and revolt.

Barriers of traditions and conventions did not deter him. He clearly saw that economic salvation was the only answer the country needed.

He went all out against communalists and prophets of dissension. To him India was one and indivisible and he sang of her greatness and glory. He was an incorrigible optimist and his conviction in the ultimate victory of the fighters for freedom was supreme. He visualised the "Free India" and spoke of the wounderful times ahed. He had a deep reverence for our culture and heritage of which he was himself become a part. Never once did he speak of any particular part of the country. To him India was everywhere and everythings.

# PREMCHAND – A STUDY

By MADAN GOPAL
(*Author of "Munshi Premchand - A Literary Biography"*)



Often compared to Gorky and Tolstoy, Premchand was not only a versatile writer of short stories, novels, dramas and essays, but was also an active participant in the country's liberation movement. His pen sang of the brave deeds of the common people, marvelled at their struggles against the vicissitudes of deprived youth and forlorn old age, encouraged them in their periods of despondency and wept with them in their sorrow. Premchand rebelled against narrow religious bigotry and, while fighting back the concerted onslaught of the conservatives, he imbued a whole generation with the ideas of a new social order of justice and equality. In depicting the life of Indian peasantry, Premchand actually revealed the heart of India under foreign rule-battered, gory, tenaciously eking out a living, but with an immense capacity to encompass all the sorrows and joys of human existence, bowing before tradition and, at the same time, raising the banner of revolt against injustice.

All of Premchand's characters were taken from real life, and were not imaginary. For instânce, Bechanlal, who provided the model for Vishal Singh, seem to have the same person who was the headmaster of the Gorakhpur School where Premchand worked for over four years immediately before resigning in connection with the non-cooperation movement. The principal traits of his character have been corroborated by those who knew Bechanlal — and Premchand.

How he conceived his characters has been explained by Premchand himself. He took them for life. When in the late twenties a group of powerful critics maligned Premchand and alleged that his *Premashram* was a mere rehash of *Resurrection* that *Rangabhoomi* was based on *Vanity Fair* and that his *Kayakalp* was modelled on the *Eternal City*, Premchand stated his side of the case. Sophia's character, he said, was not based on that of Amelia of *Vanity Fair* but on the famous Annie Besant.

In regard to the character Surdas — the immortal character of Hindi literature–Premchand observed in course of a public address that the germ of this mighty character was provided by a blind beggar who used to sit on a culvert outside his native village of Lamhi, situated on the outskirts of Banaras. In his childhood days, Premchand had seen him running after the passersby, shouting "ek paisa, ek paisa". He must have seen the beggar in the last two decades of the nineteenth century. Years rolled by, but Premchand treasured the picture of this blind beggar in his memory. He even provided nourishment. For, one of Premchand's friends who was a small official in the district court at Gorakhpur has told me that Premchand used to "frequently visit a blind neighbour of his, and used to hold long conversations and also take down notes." This must have been during 1916 to 1921. Premchand thus treasured and nourished the picture of this blind character for more than a quarter of a century and made him the hero of *Rangabhoomi*!

Premchand worked hard, very hard. And it would be necessary to mention that he made copious changes and corrections in his first draft. These changes related not only to chiselling the language but also to reweaving the plots and links between two consecutive chapters. Sometimes, scenes after scenes would be deleted or substituted by others. So radical were the changes at times that those changed the draft completely.

As stated above, he wrote *Chaugan - i - Hasti* in Urdu. Then he translated it into Hindi, and it was published as *Rangabhoomi*.

Even names of the principal characters were at times changed, as the work on the novel progressed. The name originally proposed for his novel *Gosha-i-Afiat* (or *Premashram*), for instance, was "Naskaam". The names originally proposed for *Kayakalp* were "Maya Swapn", "Asadhya Sadhana" or "Artnad". In the case of his novel *Karmabhoomi* even the names of principal characters were proposed Amarnath and Samarnath. These names cccur in more than half of the manuscript of the novel. In the final version, however, these were changed to Amarkant and Samarkant!

A much more striking fact is that Premchand, the greatest Hindi and Urdu writer, wrote the synopsis and guide lines of characters in English!

Premchand's earliest novels—*Asrar-i-Maabid Hum Khurma-o Hum-Savab* (or *Prema*) and *Kishna*—were written from 1903 to 1908 when he was a teacher at Chunargarh Pratapgarh or undergoing training for the junior certificate teacher's course at Allahabad or, a little later, as a school teacher at Kanpur.

In 1910, we find Premchand doing some serious thinking about the factors that retarded the growth of Urdu novel. The result of his thinking was reflected in his next novel, *Jalva-i-Isar* (letter published as *Vardan*), which was to be the first one to project "social" themes.

Premchand's next novel, *Bazaar-i-Husn* (or *Sevasadan*) written five years later (1917—18) was the first major novel that established him as an outstanding novelist in Hindi and Urdu. It appears to have been planned as a longish short story. When, however, he had completed some hundred pages, Premchand felt that he was heading towards a really good novel and confided in his closest friend Nigam that this would be a success. This indeed proved to be so. Its success encouraged him to attempt yet another one, namely *Gosh-i-Afiat* (or *Premashram*), and later on *Chaugan-i-Hasti* (or Rangabhoomi).

The three major novels mentioned above were written first in Urdu, but their publication in Urdu posed a problem. As a result these were published first in their Hindi garb-years before the Urdu publishers took them up.

Premchand's subsequent major(non-serialised) novels, namely *Kayakalp*, *Ghaban*, *Karmabhoomi* and *Godan* were written originally in Hindi, and translated subsequently into Urdu by the author himself.

He told one of his admirers in 1930 that he devoted his mornings to the writing of original novels in Hindi and the evenings to translating from Hindi into Urdu — at times sitting on a chatai and pouring over his typical kayasth Munshi's desk, and at others in his favourite posture of lying prostrate his legs swinging to and fro in the air, Premchand humming verses from such favourites as Iqbal.

# Get by heart every song of

# ★ BHARATHI

S. Sathyamurthi



*Almost forty years ago Sri Sathyamurthy on the floor of the Madras Legislaitve Council was dinning into the ears of an intractable "transferred half" consisting of people of our own country the greatness of Bharathi.*

*He was speaking on the no-confidence motion against the then Ministry headed by the Rajah of Panagal. It was Sathyamurthy's maiden speech in the Council and it was appropriate that he should champion the cause of the school children who were being denied the inspiration of Bharathi's songs.*

*Five years later in the same House, Sathyamurthy returned to the theme when the Police seized copies of Bharathi's songs. Speaking on an adjournment motion on this subject Sathyamurthy sought to tell the legislators more about the literary genius of the fiery patriot.*

*We reproduce here* **excerpts from the proceedings of the Legislative Council (1928)** *when Sri Sathyamurthy moved an adjournment motion regarding the seizure of copies of Bharathi's songs by the Police. The motion was carried.*

SRI S. SATHYAMURTHI: "Mr. President, Sir, I beg leave to move that the business of this House do stand adjourned to consider a matter of urgent public importance, namely, the recent action of the City Police in entering upon and searching the premises of the Hindi Prachar Sabha on the High Road, Triplicane, for copies of Bharathi's songs, and seizing nearly two thousand copies of the same.

"Sir, in support of this motion, I do not think I need advance, elaborate or detailed arguments. For, I know, Sir, I am not exaggerating the feeling of any Member of this House who is a Tamilian, or who knows Tamil, or who is a patriot, or who is not afraid of patriotism, when I say that one wants no arguments to support this vote of censure on the action of the Madras Government in having acquiesced in or directed the City Police to seize what will remain, in spite of the Madras Government's activities, so long as the Tamil language lasts or a single Tamilian exists, as the most priceless and patriotic songs in that great language.

**Priceless heritage**

" Sir, late Subrahmanya Bharathi was a man on whose tongue the Goddess Saraswathi can honestly be believed to have danced the dance of patriotism. If he had been born in any free country, why in any country of the world except India, that man would have been made the Poet Laureate of that country, would have been given honours and titles by a Government which knows how to respond to the feelings of the people, and would have lived and died among the most honoured of the nation. But, Sir, being the slave

country that we are, he had to live as an exile in Pondicherry, enjoying the hospitality of the French Government, and die a broken wreck, because he found no use for himself under the auspices of this Government. But, Sir, martyrs and patriots before him have gone to the same fate. Subrahmanya Bharathi lived and died a patriot. I want to repeat, Mr. President, that so long as the Tamil language lasts, you may confiscate all the copies which exist—even as our sacred vedas were handed down from generations to generation, for a aeons, without a single piece of writing, by the memory of our ancient Hindu ancestors, even as Macaulay was able to repeat every line of Milton's 'Paradise Lost'. I have no doubt, that so long as single Tamilian lives, these songs will remain the priceless heritage of the Tamil race. I can inform this house, Mr. President, after this ill-advised action of the Government, we are starting a propaganda for getting by heart every song of Subrahmanya Bharathi, and although the Hon. the Law Member and the Hon. the Home Member may between them confiscate every printed word of those patriotic songs, human ingenuity has not yet invested any machinery which is able to confiscate thoughts and memories. Thoughts and memories will flourish, and wherever the Hon. the Law Member or the Home Member goes, they will hear only these songs, sung, and they will have to apply cotton wool to their ears if they want to save themselves from being polluted by hearing these brave and patriotic songs.

### Soul-stirring songs

"Sir, the origin of this action is not even complimentary to this Government. This Government is here governing the bulk of the Tamilians in whose language these poems are written. These poems are a quarter of a century old. For nearly twenty-five years, these songs have been sung throughout the Province, and I appeal to my hon. friend the Chief Minister, who I know is a very good student of Tamil whether he has not heard and enjoyed these songs, whether he has not heard and felt his pulse beat quicker, and his blood run warmer in his veins, when these magnificent, soul-stirring songs were sung. I am sorry my two other friends who crossed the floor are not here. If they were here, they dare not contradict me when I say that some of the election methods by which they came to this very Council, which gave them the opportunity to cross the floor and become Ministers, were these patriotic songs sung by boys and girls in public meetings. Sir, do you know that in this Tamil country, if you want to get up a magnificent meeting, if you want to sustain the interest of the audience, the most usual method is to get these songs sung? I wish I had the voice to sing a few of those songs here, which will melt even the stony hearts of the hon. the Law Member and the Home Member. I will read some of them, and even a prosaic reading of these songs will melt the hearts of these people.

### Why copy Burma Government?

"Sir, it seems to me that for this Government to obey the dictates of the Burma Government as if they have no opinion of their own in the matter, is in consistent with a Government which has any sense of self-respect about it Sir, the origin of this is the notification published by the Burma Government at Rangoon on the 7th August 1928 in the Police Department.

### Seditious Matter

The say: " In exercise of the powers conferred by section 99-A of the Code of Criminal Procedure, 1898, the Governor-in-Council hereby declares to be forfeited to His Majesty all copies wherever found of the booklet in Tamil entitled 'The National Songs, Parts I and II' composed and published by C. Subrahmanya Bharathi in the Bharathi's Ashram at Triplicane, Madras, on the ground that it contains seditious matter, the publication of which is punishable under section 124-A of the Indian Penal Code as tending to excite disaffection towards the Government established by law in British India. " Sir, section 99-A of the Criminal Procedure Code, which is one of the effects of the recommendations of Press Act Repeal committee over which some of our countrymen went enthusiastic, says when a local Government passes the order the Police may seize the same wherever found in British India and any Magistrate may authorize any Police Officer to enter upon and search for the same in any premises. Now I want to know from the Hon. the Law Member or whoever is in charge of this department and is going to reply to me, why this notification was published in the *Fort St. George Gazette*, dated 11th September 1928. Is there any rule by which notifications of local Government are automatically republished in the *Fort St. George Gazette*? I know of no such rule. The only rule or practice I know of, is that the resolutions and notifications of the Government of India, published

in the *Gazette of India* are republished by the Madras Government in the *Fort St. George Gazette* for the information and guidance of the people of this Province. There is no rule which requires, so far as I know, the republication in the *Fort St. George Gazette* of this order of the Burma Government. I should like to know why the local Government published this order.

**Next Stage**

"The next stage, Sir, comes when the police applied for a warrant before the Chief Presidency Magistrate to search those premises and to seize those copies. The application was made by Mr. Saptur Hussain, Inspector, Intelligence Department. The application says: 'I beg to submit that under notification, in G. O. Ms. No. 739, Public, dated the 7th August 1928 of the local Government, Burma, republished by the local Government of Madras in the *Fort St. George Gazette*, dated 11th September 1928, the booklet styled 'the National Songs, Parts I and II' by C. Subrahmanya Bharathi have been forfeited to His Majesty under section 99-A of Criminal Procedure Code. I request this Honourable Court to issue a warrant authorizing me to enter upon and search for the same in (1) Hindi Prachar Press, Triplicane, (2) Bharathi's Ashrama, Talayari street, (3) O. N. Dandapani and Company, where such booklets are reasonably suspected to be stored. With regard to this application for warrant, Mr. President, I want to know whether this action was taken by the Commissioner of Police at his own instance and on his own responsibility, or whether the Member of Government in charge of the Police had any knowledge or notice of it. If he had no knowledge or notice of it, I want to know whether it is the Police of the Madras Government that in first class political matter like this, seizure of proscribed literature under orders of another local Government, the Police are going to be allowed to act on their own responsibility, without so much as by your leave of the Government. Then, Sir, I want to know whether the order was applied for by the police after taking the permission of Government or at least letting them know that they propose to do it. On that, Sir, the Chief Presidency Magistrate passed this order:

"Whereas complaint has been made before me of the possession of undermentioned prescribed booklets and it has been made to appear to me that the production of the copies of the said booklets is essential to the inquiry now being made into the said offence......'

'It is not clear, Sir, what the offence referred to is. Whatever it is the facts are the Police did apply for and the Magistrate issued a warrant, and as many as two thousand copies of this book have been seized and forfeited to His Majesty and kept in the Record Office of the Chief Presidency Magistrate.'

**Human aspect overlooked**

"Apart from the political or literary aspect of this matter, Mr. President, there is the human aspect about it. This man Subrahmanya Bharathi, as I have said, died a broken man, a poor man, leaving behind him a widow and two daughters whose only means of subsistence is the proceeds of the sales of these books, and some friends have offered themselves to publish these books and to remit the profits out of those sales for the maintenance of this family of this great but poor man. As a consequence, the Bharathi Ashram and the Hindi Prachar Sabha in Triplicane are spending and have spent money on this publication, and after selling these publications they are going to send the profits for the maintenance of the widow and the daughters of this great and patriotic man. It is consistent with charity or good sense or even ultimately the sense of honour of this Government that they should seek to deprive a widow and two fatherless children of their only means of subsistence in order that they may pursue the Burma Government's vendetta against 'high and patriotic literature of this kind? Apart from anything else, that must appeal to every Hon. Member of this House. Are you going to punish the widow and the daughters of Subrahmanya Bharathi, because he wrote patriotic songs and punish them in this mean and despicable manner by depriving them of their livelihood? It is contemptible it is unworthy of any Government which wants to call itself civilised or self-respecting or honourable.

**Absurdities of Dyarchy**

"Then, I want to point out, Mr. President, that in this matter, the anomalies and absurdities of dyarchy have been shown in excelsis. My hon. friend the Chief Minister a few months ago, in answer to question on the floor of this House, said that his Government had no objection to the teaching or singing of Bharathi's songs in Government and aided schools in our presidency. Look at the action of the Hon. the Education Minister. He knows Tamil, he knows the songs, and the Council thanks him for his act of patriotism by which he allowed these songs to be sung in the

schools provided by the Government. He sits there, he is still the Chief Minister and the most powerful minister, he makes and unmakes ministeries at his will; and yet with all his great powers of formation, destruction and reorganization, this great minister is unable to influence his two colleagues who are now sitting to the right and left of him, the Hon. the Home Member and the Hon. the Law Member, who do not say a word to the Chief Minister but listen to the Burma Police directing the Madras Police to seize by warrant and forfeit to His Majesty those very books which the hon. the Chief Minister thinks furnish the intellectual pabulum to our young children and on which they could be reared as honourable citizens but when it comes to the reserved half it is to be forfeited (Laughter). I do not know whether it is a matter for laughter or tears. That is for him to decide. But if I were the Hon. the Chief Minister, I would rather be a dog and bay at the moon than be such a Minister as to be compelled to look on when his own colleagues snap their figures at him saying "You may sing Bharathi's songs in schools and colleges but we will forfeit them". I will not say anything more about him; for he is the only good man in the whole piece. Let us go to the villain of the piece, the Hon. the Home Member and the Hon. the Law Member and both of them are Indians I believe they have not given up their claim to be called Indians. The Hon. the Law Member was till the other day sitting on this side or that side of the House, and I know he is a very good speaker in Malayalam, one who is listened to with respect. Supposing there are patriotic songs in Malayalam of the nature, I am going to read presently, does he think that he will forfeit those songs because a neighbouring Government called them seditious? And what about the Home Member? He represents Islamic culture there; he is there to protect Islamic interests; he is there not for any other reason but to see that the great Islamic culture is preserved intact from the invasion of the secular Government. Is it consistent with Islamic culture which is based on democracy, charity and free thinking, that he should be a party to this deliberate and wicked attempt at poisoning the intellect of the nation at its very fountain source and telling the people, 'You shall not become patriotic, you shall not become proud of your country, you shall not love your country, but you always shout with me that we will be slaves, that Britain shall rule over the slaves? If that is their attitude I can understand their action. If on the other hand these gentlemen claim to be the patriots, I put it to my friend the Law Member—he is not a lawyer listening to the arguments of another lawyer on the other side vigorously taking notes and answering arguments by counter-argument, that he should keep his heart open, his brains open, if he can, to listen to us and convert himself and have the courage to get up and say 'Mr. President, I am ashamed of the action of the Madras Government; I shall recall the order.' I do not think he will rise to that occasion but still I hope he will offer to do so. (A voice; 'Hoping against hope'.)

**Precious treasures**

"Then, Sir, what are these songs? I am not going to dwell on their seditious nature, under your ruling. I merely want to tell the House these are songs with the like of which one is familiar in English literature, such as praising the country, praising her natural beauties, praising her great heroes, and heroines, praising her great achievements, expressing unmitigated love for the motherland, expressing joy in her present and hope in her future. Are these unworthy of any nation? These have been prescribed, I have got copies here and I can make a present of them to the Hon. the Home Member or the Law Member. I will make a present of them to the Council Library, and if the police want them they can go and search there and take them. I shall read from the first books of songs in order to convince the House that there was no need for the Government to confiscate this literature—

வந்தே மாதரம் என்போம்
மாநிலத் தாயை வணங்குது மென் போம் (வந்தே)
ஜாதிமதங்களைப் பாரோம்— உயர்
ஜன்மமித் தேசத்தி லெய் தினராயின்
வேதியராயினுமொன்றே -- அன்றி
வேறு குலத்தினராயினு மொன்றே (வந்தே)
ஈனப் பறையர்களேனும்—அவர்
எம்முடன் வாழ்ந்திங்கிருப்பவ ரன்றோ?
சீனத்தராய் விடுவாரோ? பிற
தேசத்தார் போற்பல தீங்கிழைப்பாரோ
(வந்தே)

"We will worship our Mother, we will not mind to which caste or which religion, our fellow citizens belong; if they are born in this country, all of them are our brothers even if they are called Pariahs; are they foreigners?

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும்
தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்
இந்த ஞானம் வந்தார்பின் நமக்கெது
வேண்டும் (வந்தே)

'I commend these lines to the particular attention of the hon. the Law Member and the Chief Minister and the Home Member. If we are united we can live; if we are not united we are all equally humiliated. Treasury Bench and the opposition alike (Laughter). Then I appeal to the Tamilians. Have you heard any more inspiring lines than these? I have not.

> செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
> தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
> தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
> சக்தி பிறக்குது மூச்சினிலே—எங்கள்
> (செந்தமிழ்)

"I do not know, Sir, if there is any Tamilian in this House or outside whose heart will not melt at these songs. I ask them to remember this, that these songs are now declared forfeited to His Majesty by the action of a Government which are to a certain extent kept in those treasury benches by us, the music of it is so great that even a halting reader of those songs like myself can make an appeal to the members here.

I have listened to the hon. the Law Member shouting here yesterday; he was not even read these songs, but still he has forfeited the book. I can understand if the Government has chosen one of these songs or two and said that those songs should be forfeited. They have not done anything of the kind. These two volumes consist of some of the most moving songs on our religion and letters, apart from pure patriotism.

**What they sang**

I shall finish by referring to similar songs in English literature which Englishmen sing in their country, which they sing even in our own country in private dinner parties and other places. They sing of the glories of England 'Britain shall rule the waves, Britain shall never be slaves - but Indians shall always be slaves. That is the burden of their songs, if they are to be judged by the results of the actions. Lord Tennyson sang:

> "At her girdle clash
> The golden Keys of the East and West;
> Her mailed hand keeps the keys
> Of such teeming destinies."

William Blake wrote--

> "Their mighty wings stretch from East to West.
> Their nest is in the sea, but they shall roam
> Like eagles for the prey."

Then England's message in Parker's words:

> "Then Courage, all brave mariners
> And never be dismayed
> Then be bold—work for gold
> When the stormy winds do blow."

Lord Tennyson says:

> "The fleet of England is her all in all
> Her fleet is in your hands,
> And in her fleet her fate."

**Look at the difference**

"I want to point out three capital differences between the English nationalistic literature and ours. English nationalistic literature boasts of its own strength and speaks of the confusion and destruction of their enemies. 'God save the King, send victorious, happy and glorious and confound his enemies.' That is the Englishman's song. The Englishmen's psychology is that God has to deal with only two categories, England and her subjects on the one hand and her enemies on the other. That is God must give up all His other work and constantly save England and confound her enemies. Humanity has come under these two categories, England and her subjects on the one hand or England and her enemies on the other. Whereas the message of Subrahmanya Bharathi is the message of all races, of poets, philosophers and seers of all nations.

Let India be free and happy and the other nations of the world be free and happy. Is it for preaching this message of peace on earth and goodwill to all men that the Madras government which does not understand the A B C of patriotism or nationalism have ventured to lay its profane hand on this sacred literature? We are constantly told that we are a nation of many races and creeds. Bharathi was a Brahman by birth, and I appeal to non-Brahmans in the South—several of them were his friends and I do not want to name them — to say whether throughout his literature, there is a single trace of caste or communal bias or superiority or inferiority. He talks only of Indians as a whole, he knows no distinction of class or creed, race or religion. He is the most cosmopolitan that I know of among modern authors. Is it for preaching this harmony among men that his books are sought to be forfeited by this Government? It seems to me that this action of the Government cannot be justified on any basis whatever, either of duty or of reason.

*Madras Information—Dec. '62.*

# THE BALANCE

"REDDIAR"

★

*Translated by V G. Srinivasan*

I was rummaging lumber room in my house one day, I came across an old balance. "This seems to be a good balance! How it came to be here without my knowledge?" I was talking in sotto voce.

"Must you necessarily know all things?" I heard a voice so saying. I was taken aback. The balance in front of me was interrogating thus.

"No, not so; somehow I thought so; that is all," I blabbered. "Why such a blabbering for this? Why did you not tell me that you must know it definitely?" said the balance.

The balance talks! I was overwhelmed with amazement to hear and see it talk I then made up my mind and said, "Kindly do say something about your goodself." "Why something? I shall tell you a lot. To say about myself will in no way be honourable. Even then, I may tell you about myself to such an informal extent as and when two strangers introduce themselves to one another when they meet for the first time. May I do likewise?" said the balance.

"Yes, by all means and as you like it," replied I.

The balance spoke thus.

"You know that once our patriots were in exile at Pondicherry. At that time I was one of those who kept them company. The hand of the king of poets, Bharati, had blessed me with its touch. Bharati has also written about me. That is a long story." So saying the balance gave out a sigh.

There and then I lay prostrate in front of the balance. "Without understanding your greatness I had put you in this lumber room. Kindly excuse me for the wrong I have done to you. Have mercy upon me. I have read with pleasure all that Bharati has written about you. When and how did you arrive at this poor fellow's cottage? Kindly inform me," I observed in an imploring tone.

"Well put, Pandya!" said the balance patting me on my back and continued. "As soon as Bharati went away from Pondicherry the company of patriots was disbanded. Only Bapu stayed there. All the time he was engrossed in philosophical discussions. None cared for me. The houseowner one day espied me. Bnt how could I talk to him. It might end in misery to open one's mouth before the underserving. So I came to a conclusion within myself. My resolution was this– to keep a vow of silence till the proper time came. I had been waiting for many years in expectance of the proper time. I changed hands and at last came to this town. Your little son bargained with a paper merchant and bought me for a price. He had left me here. I expected for long your coming and I suppose only to-day Fortune has smiled on me."

I came down from the lumber room. I gave a good wash to the balance and made it bright and clean. I applied sandal paste and vermilion to it and placed it in a good place. Then I observed with due humility, "What then shall I do? Kindly dictate."

The balance said, "Many people come to you daily. They move with you closely and converse with you freely. Pegging upon a particular subject they ask you your opinion on it. You also ask them to give you their opinions. Do you know with which things as standard measurements an opinion is given? Likes, friendship and consideration are the basic standards with which an answer is given. And above all the balance has the qualification to dole out judgement dispassionately. In those days Kings who held sway over this land had the figure of the balance engraved in their courts of justice, so that all might know that their judgement was as unbiased and neutral as the pointer in the balance. Even to day one can see likewise in the courts in the Red Fort at Delhi and at Fatehpur Sikri. What you have to do is only this. Open a shop, place me there in it and you sit beside me. Then you will understand justice, uprightness and logic. You will inherit all things good and auspicious."

"Amen," said I.

# NORTH AND SOUTH

★

*Kavi Yogi Suddhananta Bharati*

India is one North or South East or West. God is our guardian force in all directions. There is Kailashnath in the North, Kasi Visvanath in the East, Somnath in the West and Ramnath in the South. Indian culture is harmonised by these spiritual centres by inter-pilgrimages. Ramayana and Mahabharata have been the two dynamic currents of Hindu culture everywhere. We see their influence throughout South East Asia. Valmiki, Tulsidas, Kamban, Bhaskar and Ezuttachan are the master poets of the Sanskrit, Hindi, Tamil, Telugu and Malayalam languages and all of them have sung the glory of Rama in thrilling metres. Millions of Indians bear the name of Rama, Laxman, Sita, Hanuman, Bharata, Arjun, Krishna, Dharma, Rukmini, Radha etc. everywhere in India. A pilgrim from Kasi brings Ganga to Rameshwaram for the worship of Ramnath. Thus India is united in spiritual ideals-ideologies. Politics has divided India into narrow linguistic circles. There are some who create a difference between North and South. They suppose that the North dominates the South. This is not the Truth. Both have distinct merits which can unite them by an interchange of cultures. Politics divides and culture unites. It is want of a strong cultural understanding that keeps us strangers to each other.

North India is a synthesis of Bengal, Uttar Pradesh, Punjab, Rajputana, Maharashtra and Madhya Pradesh. Each region has contributed men of genius to Indian culture. Bengal has given us Chaitanya, Ramprasad, Vidhyapati, Raja Ram, Ramakrishna, Vivekananda, Keshav Chandra, Tagore and Aurobindo. Their teachings are common to all humanity. The whole world hails the wisdom of Tagore, Aurobindo, Ramakrishna and Vivekananda. Maharashtra has given us Tukaram, Ramdas, Shivaji, Tilak and Ranade. Gujarat has given us Dayananda and Gandhiji who are world personalities. Mahatma Gandhi is adored all over the World as the unique Apostle of Ahimsa. Punjab has given us Guru Nanak, Guru Gobinda Singh, Lalaji, Ramathirtha, Swami Shraddhananda, Radhaswami and other epoch making personalities Rajputana has given India Rana Pratap, Mirabai, Padmini and a galaxy of heroes and poets. We recognise the merits of Kabir, Surdas, Ravidas and Tulsidas and sing their songs with delight in Madras.

But are the songs of South Indian poets sung in the North? Do North Indians know the excellence of our South Indian Art and literature? If not today, it must be tomorrow that the North knows and assimilates what the South has to give.

There are treasures and treasures of cultural wealth in the South which can benefit the North. Let us have a bird's eye view of South India.

We see here fine temples with admirable architectural beauty which draws the attention of East and West. The display of art in the pillars of Meenakshi Temple at Madurai, the rare specimens of divine architecture adorning the temple at Rameswaram, Srirangam, Perur, Madyarjunam, and the beautiful paintings and sculptural works in the palaces of Tanjore, Ramnad, Madurai, Mysore, Hampi, Vijayanagar bring fame and name to Indian Art. The frescos of Chittanavasal, Ajanta and Ellora draw the admiration of all the nations. The literary contributions of Kambar, Valluvar, Avvaiyar, Appar, Manikkavachakar, Sundarar, Sambandar, Nammalwar, Andal, Thyagaraja, Dikshitar, Sama Sastri, Kavi Kunjarar, Vedanayakam, Meenakshi Sundaram Pillai, Bharati, Purandaradas, Ramdas, Vemanna and Pothana are still to be recognised by the World at large. Of course, the Tirukural of Valluvar has been recognised as the World's best guide to perfect life by such eminent persons like Mahatma Gandhiji, Pope and Aeriel. It has been translated into many Indian and European languages. But we have yet to throw light upon this unique Book of Knowledge and many other works of Indian poets and saints. I have made a collection of more than hundred great men and women of South India who can very well compare merits with the tallest personalities of the World. In Tamil, Telugu, Malayalam and Kannada we have

a rare collection of works by enlightened poets and thinkers that can bring glory to India.

North India has Himalayas, Ganges and Tulsidas. South India has Agastya Hills, Cauvery River, Kamban, Temple-art and Gold mines. It has a salubrious climate and saintly atmosphere suitable for spiritual practices. South India vibrates with the yogic energy of thousands of sages and saints and seer poets. North and South when they fully understand each other can unite like two poles of a dynamo to build up a strong nation o Divine Culture and soul-ful unity. Then th curtain between North and South shall be removed and both can meet amicably.



# TO CHANDRAMATI

*(C. Subrahmanya Bharati)*

1. Innocent pretty little babe, Chandramati,
Endearing pupil of my eye!
Honey satitiate to my desires!
Pleasant moonlight to my eyes!
The crest within the venomous snake,
Is said, a stone precious is hid;
Within my vicious heart, so, grows up
A resplendent form thine.

2. Beauty thine is beyond describe; thou art
The crowning glory of clan feminine!
Amazing mystery thou art, mine,
Joyful child enchanting!
As one drowned in the floods
Who forgot the art of swimming,
O, Goddess of Light, surpassing flame!
Am lost in the depths of a trance.

3. In the dark deep ocean I espy
The long and black tresses thine:
In the beauteous full-bright silver moon
Discern I thine face serene:
In the expanse of wisdom high above
Shines forth thine Light of knowledge:
The march of seasons changing often
Thine immense Love expounds.

*Translated by V. G. Srinivasan*—(சந்திரமதி பாட்டு)

# PREMCHAND LETTERS' COPYRIGHT CASE

*( Here is an interesting case of infringement of copyright. Though the case was finally compromised to the satisfaction of the complainant, the issues involved therein are of considerable importance to authors in general. A brief account of the case is given below; it is hoped this will be of some interest to our readers.* **—Editor.** *)*

★

The Sahitya Akademi Award for "Premchand Kalam-ka-Sipahi", which was adjudged the best Hindi book of the year, was not awarded to author Amrit Rai, son of the great Premchand, because of a court injunction issued at the instance of Madan Gopal, another authority on the life and works of Premchand.

**The Authors**

The author Amrit Rai, the younger son of Munshi Premchand, in October 1962 published a set of ten books, nine of them by Premchand and a biography entitled "Premchand Kalam-ka-Sipahi."

Madan Gopal, who graduated from St Stephens College in Delhi in 1938, got interested in the works of Premchand and with a view to projecting a true-to-life image he started working on his life and works. He brought out a book of abuot 120 pages, on the life and works of Premchand.

The idea of a larger book was conceived while the introductory book was being written. In writing it, Madan Gopal had laid hands on letters written by Premchand to his friends and relations. Madan Gopal took it up as a mission of his life and collected a large number of letters, from whomsoever and from whichever place he could get them.

The collection that Madan Gopal made proved to be a literary treasure. After a laborious and exhaustive research a compilation of some 300 pages of typescript in Hindi was made. Arranged chronologically, it gave the skeleton of Premchand's biography.

In January 1959, Premchand's son, Amrit Rai, approached Madan Gopal for a copy of the typescript.

A little later Amrit Rai visited Madan Gopal in Delhi and discussed the terms on which he could get Madan Gopal's work on the letters of Premchand. The terms were ultimately agreed upon by Amrit Rai after prolonged correspondence.

In the light of this agreement, dated November 30, 1959, Madan Gopal sent his compilation of letters to Amrit Rai. This typescript not being adequate, according to Amrit Rai, the latter asked for photostatic copies of originals with Madan Gopal, Photostatic copies were also supplied by Madan Gopal, as desired by Amrit Rai.

On October 8, 1962, Amrit Rai published a set of ten books, including two volumes of *Chitthi Patri*, a biography *"Premchand — Kalam ka Sipahi"* and seven books containing short stories, essays and novels of Premchand.

Amrit Rai did not mention the name of Madan Gopal as co-compiler on the two volumes of "Chitthi Patri" as specifically agreed upon. However, he did offer a sum of one thousand rupees for the labours put in by Madan Gopal in preserving the letters and gave some excuse for not giving Madan Gopal's name as co-author of the two volumes of *Chitthi Patri*.

In his biography "Premchand — Kalam Ka Sipahi", Amrit Rai had made copious use of letters that were made available to him by Madan Gopal. In fact, Madan Gopal claimed in his plaint in the court that ninety percent of the letters

quoted in the biography were taken by Amrit Rai from the typescript given to him by Madan Gopal under the specific agreement of November 30, 1959, for use in two volumes of letters. And Amrit Rai admitted that without these letters, a biography of Premchand could have been written but would have been "lame and lifeless". Not only did Amrit Rai not get the permission of Madan Gopal for reproducing these letters in his award winning biography, the use of which fell outside the agreement, but he did not even acknowledge the help taken from Madan Gopal's typescript.

Upon this Madan Gopal protested to Amrit Rai and asked for a settlement of the issue under the clauses of the agreement, informing Amrit Rai that, if forced, he would go to a court of law. Amrit Rai replied that Madan Gopal had no right whatsoever in the letters collected by him, that such rights vested in the recipients of letters and not the compiler.

In March 1963, Madan Gopal decided to move the court to have the agreement of November 30, 1959, implemented, namely the printing the name of Madan Gopal on the two volumes of *Chitthi Patri*, payment of royalties at the agreed rates and due acknowledgement to Madan Gopal in the preface to the book of the help derived by Amrit Rai from Premchand's letters collected by Madan Gopal.

The decision to move the court coincided with the announcement of the Sahitya Akademi awards, including the book in which Madan Gopal's copyright material had been used. Madan Gopal asked for an ad interim injunction to be issued by the court directing Amrit Rai not to receive the award and restraining the Sahitya Akademi from giving the award. This was given on March 11. Amrit Rai moved the court for a vacation of the injunction but failed and the award on the Hindi book was the only one which was not given away on March 15.

In his reply to the complaint by MadanGopal, Amrit Rai admitted to the court that he had received the letters referred to, but contended that the copyright in the letters did not vest in anybody except in the sons of Premchand, that the agreement of November 30, 1959, was invalid, that he was entitled to use the letters written by his father in any manner he liked.

In his re-application Madan Gopal said that Premchand's letters, when written, were pieces of ordinary day-to-day correspondence, and assumed the character of a literary work only when collected and arranged in a particular order by the application of the results of research conducted by him and of his learning and knowledge on the subject, his literary skill, mental labour and intelligence.

By writing duly signed by him Amrit Rai had assigned the copyright, if he had any, in favour of Madan Gopal.

Also, according to Madan Gopal, 90% of the letters printed in "Premchand Kalam Ka Sipahi" are copied out verbatim from his compilation of letters and Amrit Rai could never have written his biography without using the manuscript supplied by Madan Gopal.

During the lifetime of Premchand, and after his death, according to Madan Gopal, neither Premchand nor his successors ever claimed any rights whatsoever in the letters written by Premchand, in spite of the fact that some of these were published, within their knowledge from time to time – since 1927.

According to Madan Gopal, for writing "Premchand Kalam Ka Sipahi," Amrit Rai had used material entrusted to him by Madan Gopal for publication, in violation of the express assurance given by Amrit Rai, that the publication of the letters shall always be subject to the will and consent (of Madan Gopal).

On July 17 the honourable court framed the issues which included: whether Madan Gopal had a copyright in the letters collected by him, whether Amrit Rai had infringed the copyright claimed by Madan Gopal, what was the effect of the infringement of copyright on the Sahitya Academy Award, etc.

**Compromise Petition**

In their five page compromise petition filed on July 24 the two parties (Madan Gapal and Amrit Rai) stated that they had earlier agreed to publish the letters of Munshi Premchand in their joint name but, due to certain misunderstandings, Amrit Rai was led to publish the books in his own name and also used some of the letters in the book "Premchand Kalam Ka Sipahi."

The misunderstandings having now been cleared, Amrit Rai agreed to reprint the title page with Madan Gopal's name as co-author of the two volumes of *Chitthi Patri* and to pay him the royalties at the agreed rates. He also agreed to suitably acknowledge, in the preface to *Premchand-Kalam Ka Sipahi* thanks for the help rendered by Madan Gopal.

The text of the note of acknowledgement in *Premchand-Kalam Ka Sipahi* and of prepatory notes to be added to preface of *Chitthi Patri* were annexed to the compromise petition.

Amrit Rai has now brought out the revised edition of two volumes of "Chitthi Patri" on the title page of which Madan Gopal's name is mentioned as co-author. The revised edition also carries a prepatory note by Madan Gopal.

In the revised preface of the book *"Premchand-Kalam Ka Sipahi"* Amrit Rai has inserted the following paragraph :

"Here I wish to express my heart-felt gratitude to friend Madan Gopal who wrote the first book in English in 1944 on Premchand's services to Hindi literature. Ever since 1944 Shri Madan Gopal has been continuouly engaged on the works of Premchand. His attempt is laudable. Numerous extracts in this book have been taken from the letters of Premchand collected by Madan Gopal. This compilation of letters is the result of 20 years of labour of Madan Gopal. If I had not had access to Madan Gopal's collection of letters my book would have been-very incomplete."

Incidentally, Madan Gopal's 462 page book in English entitled "Premchand - A Literary Biography" has now been published by Asia Publishing House. The book written independently and at the same time as "Premchand: Kalam-Ka-Sipahi" and submitted to the Publishers in May 1962, has been praised by Amrit Rai as "a laudable attempt by Madan Gopal."




TELE { PHONE NO. 35. GRAMS : " AUTOSPARES "

BRANCHES { TANJORE TIRUNELVELI

H. O. : MADURAI

**G. N. CHAKRAPANY CHETTY & SONS (PRIVATE) LTD.,**

AUTOMOBILE DEALERS & ENGINEERS,

Post Box No. 29

CANTONMENT : : TIRUCHIRAPALLI.

# THE WRITER'S RESPONSIBILITY.

( *Kodumudi Rajagopalan* )

★

We have been living, as we all know, through a period of intense perplexity, a period in which the individual has been tremendously occupied with not only himself but also with the society where he is also the moving force of it. Although it is a state of mind which has been especially acute among men and women of intellectual pretensions, and so among our writers, the malady has by no means been confined to them. It has been one of the reasons why our poets have felt impelled to draw so heavily upon a private imagery which could mean nothing to the reader who had no means of knowing what had been passing through the poet's mind. We read many novels intensely autobiographical; novels written about a central figure who was the author himself, novels which did not look out upon life, but in which the writer's attention was directed within himself.

That period of perplexity has by no means ended, but it is by no means unreasonable to assume that as the spirit of negation subsides, as there is growing recognition of the need for identification with forces greater than one can find within himself, there will be a lessening of morbid introspection among our writers. Seventeen years ago, we have attained freedom from foreign domination. Since then, this fact, of course, has been an impelling force in that direction, but that has been merely a temporary stimulus, and must be replaced, when that stimulus is gone, by something within the individual himself.

In the shape of books to come we shall observe a reawakened sense of the writer's responsibility to the reader. I mean responsibility in terms of communication. It is definitely clear that the tide has set in against *esoteric and obscure*. We are emerging from a period of intense experimentation in all the arts. During such periods the artist tends to become oblivious of his social function. There is a stoppage of that *"fluid"* running between the writer and his reader. In a *stream* from which they both draw strength and *which is "the sense of a shared experience, a common fund of understanding a fund of sufferings and longings realised in common"*

There is, no doubt, a kind of necessary alternation in this turning away from public acceptance and the subsequent return to it. In the experimental period, art renews itself, works upon new techniques, and widens its horizons. During this time, it scorns the applause of the multitude, addresses itself to the chosen few, and finds their approval sufficient. Unfortunately for the public, when such fundamental changes in mood and in the approach to art are in the air, it is, in most cases, the more vigorous, the more original, the more adventurous minds which carry the new trends to their extremes. The wider public which the experimenters might have reached gives its attention to inferior stuff. It turns to the lesser craftsmen who speak a language which it can understand. It accepts the shoddy and the pattern-made, because it feels at least that the creator is speaking to it in terms of its experience and expectation as well as of his own, as if compounded of his very life-blood !

When the experimenters have accomplished their work of cutting away the dry rot of outworn attitudes and forms, art is ready to turn outwards again and to re-establish the connection between itself and the social order, in which, to fulfil its function completely, it must play its part. This is already happening. Literature, in common with the other arts, is reaching out towards a wider audience, coming closer again to its beliefs and aspirations. And when it does that, a vital current begins to vibrate. It is in such times that art enters upon its great periods. *"We have been resting in the trough of the wave, the horizon blotted out; but we shall once again be carried to the crest."*

The most powerful or satisfying writings are obviously those in which we see people develop and change, for better or worse, as we see them do in life.

"Art begins in the irresponsible imaginations of the people, like a spring in a mountain waste; the spring rises amid rocks, trickles and forms a rivulet, swells into a stream and after many wanderings, perhaps after a sojourn in artificial ponds and basins, it returns to earth whence it came."

---

# ROLE OF SANGAM LITERATURE IN CULTURAL INTEGRATION

★

By SOWMYA

In India for centuries past religion and culture have transcended all linguistic barriers and unified the people all over the country right from the Himalayas in the North down to the Cape Comorin in the South.

Vedic religion held its sway over the people till the advent of Buddhism and Jainism, which found ardent adherents even in the far South. Then came Sankara who gave a new impetus to Hindu religion. Two centuries later Ramanuja's *Vishistadvaida* philosophy became equally popular throughout the country. Still later Madhwa's *Dwaida* philosophy too caught the imagination of the people in the North. All these three great men came from the South and traversed the entire country right from Rameswaram in the South to Badrinath in the Himalayas. Though the philosophies propounded by them widely differed from each other, all of them sprang from the same root - viz; *Upanishads*, *Brahma Sutras* and *Bhagavath Geetha*, which form an integral part of Hindu religion.

People of the land to whichever denomination of the Hindu religion they belong, are bound together by the silken thread of the basic tenets of Hindu religion, which form the fabric of the traditional culture of the country.

Linguistic diversity is not a thing which has suddenly sprang up. It has been there from time immemorial. But it was never an impedement to the spreading of culture and forging unity among the people of diverse dilects in the various parts of the country. The languages of the various regions have played their role fairly well in carrying the message to the common folk.

In carrying out this magnificent task, Tamil has played a leading role, perhaps next only to Sanskrit. The greatness of a language lies not only in its antiquity and vastness of its literature but also in the breadth of vision. A literature which remains circumscribed, not extending its vision beyond the periphery of its own soil ill serves its own people. Judged by these standards the ancient Tamil classics occupy a unique position unmatched by any other language of the country.

We are of course familiar with the sayings of *Alwars* and *Nayanmars*, who have sung in praise of places of religious importance in the North. Tamil literature of the post-Prabandam era is even richer in this respect. But the role played by the Tamil language as a vehicle of cultural and religious integration of the people in the pre and early Christian era is lost in obscurity.

Few outside the circle of scholars are aware of the fact that the earliest Tamil literature now extant contains reverential references to our ancient epics and Puranas.

As an instance at point I would like to narrate here an interesting incident that took place about a year ago. Shrimathi M. S. Subbulakshmi, who gave a music recital over A.I.R. from Delhi, in the National programme, concluded her concert with a piece from *Silappadikaram* – the three stanzas beginning with the words 'மு-உலகும் ஈர் அடியான்' in *Aaichiyar Kuravai*. The rendering of the song was so soul-stirring that at the conclusion of the recital the listeners were left with tears of joy trickling down their cheeks. Those who missed the announcement went with the impression that the piece was from the hymns of Alwars. Some of those who did listen to the announcement that the piece was from "*Silappadikaram*" were inclined to doubt the correctness of the announcement! It was a great surprise and revelation to many that such a highly emotional song in praise of Lord Narayana occupies a place of pride in the two thousand year old Tamil classic

*Silappadikaram*

North Indian friends, who enjoyed the music as much as others did were simply astounded when I explained to them the text and date of the composition If the core of the Hindu religion and culture had taken a deep root in the South as to be reflected in a popular Tamil classic written two thousand years ago, how many centuries would it have taken for it to reach that stage? they asked. I left the answer to their imagination.

. *Silappadikaram* is replete with numerous such references and reflections. Sangam literature, anterior to *Silappadikaram*, abound in such references. Numeous episodes from Ramayana and Mahabaratha are referred to in அகநானூறு (*Ahananuru)* and புறநானூறு (Purananuru). All the Avataras of Lord Vishnu are mentioned in பரிபாடல் (Paripadal), அகநானூறு (*Ahananuru,*) புறநானூறு (Purananuru) and other works. Sacred rivers and mountains in the North such as Ganges and Himalayas come in as worthy comparisons with those in the South. In one or two places there is even the mention of Mouriya kings.

By comparison Tamil stands far far ahead of all other Indian languages in this respect. These go to enhance the greatness of Tamil, the oldest of the living languages of this country. It is high time that this aspect of the greatness of the Tamil language is made widely known not only to the people in the North but to our own brethren in Tamil Nad. This is a fit subject for deep study by research scholars. If such a study has already been made - I believe it is so - early steps may be taken by the Tamil Writers' Association to publicise it once again.

# THE WORLD IS SWEET

This world is sweet. The space herein hath sweetness.
The wind is sweet.
The fire is sweet The water is sweet. The earth is sweet.
The sun is good and the moon is good.
The lights of the heavens are all very sweet.
The rain is sweet, the lightning is sweet; the thunder is sweet.
The ocean is sweet. The mountian is sweet. The forest is sweet.
The rivers are sweet.
The metal, the tree, the shrub, the creeper,
The flower, the fruit unripe and ripe are sweet. The birds are sweet.
The reptiles are good.
The beasts are all sweet.
And the fish are good.
The men are the sweetest.
The male is good: the female is good.
The child is bliss.
Youth is sweet. Old age is good.
Life is good. Death is sweet.

The body is good. The senses are the sweetest.
Life is tasteful.
The mind is honey. Intelligence is honey. Sentience is nectar.
Sentience alone is nectar.
Sentience is God.

—*Bharathi*

# PREFACE

★

The new spirit of Indian Nationalism that is effecting such a wonderful transformation of Indian life and character finds in Tamil land its aptest expression in the late C. Subramania Bharathi. That gifted poet has gathered with loving hands the sweetest and most radiant flowers of India's truest mind, heart and soul and made of them a garland of imperishable song to be laid at the feet of Bharata Mata. Seldom has the Muse's inspiration been as authentic and pure and passionate as in his case. The brief biographical notice written by my friend Sriman Somasundara Bharathi gives one an idea of the ease and spontaneity of the poet's genius. But for the irresistable impulse to burst into song Subramania Bharathi's checkered life and straitened means might have damped the ardour of his soul. His verse has the singular quality of being clear as a mountain stream; withal it is mystic as the sea or a mountain summit of an evening. It is beautiful as a bird, swift of wing, exquisite in poise, picturesque in plumage and soul-stirring in its cadence. His songs of patriotism which are and should be on every one's lips–and particularly on the lips of every woman and child are his greatest service to his country. Patriotism becomes real and potent only when it is linked to the witchery of liquid song, and the late Subramania Bharati's work in this direction is both unique in quality and varied and rich in quantity. The humble folk in a far away village in Tinnevelly or Madura, the busy-labourers in a crowded city, the strenuous middle classes and the ease-loving aristocracy have all alike in his poems, a golden key to the still locked chamber of their and their country's happiness.

No education can be considered to be "National" which does not give the first place to the training of our emotions, to the rousing of our imagination, to the strengthening of our will and to the purifying of our soul. Nor can he be held to be an able or wise man, who is indifferent to National songs and who does not realise that a passionate love of his country and of his country men is his most elementary duty. We have boasted enough of our ability and intelligence-ability and intelligence that move one to deep pity. We have been founder of displaying our ability to divide ourselves or to differ from one another than of our ability to stand firm and united. We have been prouder of our ability to speak or write correct and even ornate English, than of our ability to speak or write ordinary Tamil. We have been far more enamoured of the English Muse, of Shakes–peare and Wordsworth, than of Indian Muse, of Kalidasa or Kamban. It is only right that at this season, an authorised and complete edition of Subramania Bharati's work should be undertaken. It is not only the best monument to the memory of a great Tamil Poet, but is the most stimulating contribution to the formation of Indian mind and character. And I fervently hope that the entire youth of Tamil land, that is being "educated" to-day in westernized schools and colleges will make it their religious duty to learn and recite the National songs of Subramania Bharati.

*The above preface was written by S. Srinivasa Iyengar on 20-2-1922 for the book of Bharathi's National Songs.*



# Popularisation of Tamil Literature in the North

*By*

GURBACHAN CHANDAN, *Secretary, Adbi Majlis, New Delhi.*

Tamil is one of the oldest and richest Indian languages. Its protagonists had set in a chain of academies, the Sangams, which produced great classics, even before the dawn of the Christian era. Its writers of yore envisaged the essential unity of India so often wrongly attributed to the British. The Sangam literature is stated to be inter alia eminent for its secularism as against the poetry of later ages. Again, Tamil is believed to be the first among the Indian languages employed for translations or adaptations of the epics which represent the spirit and the spiritual unity of India.

These are a few of the shining points which emerge before a stranger on a first brief look at the great Tamil language. Each one of them has volumes to unfold to the people of the country at large. But, unfortunately, we in Delhi, the capital of India, which now inhabits several thousand Tamilians, have pretty few occasions to have such luck from its own writers and scholars. There may be some society or group of Tamil litterateurs in this big and expanding city but its activities are hardly known or made known to the non-Tamilians. This can be said about other regional languages too. But that will only deepen the sense of loss.

The South Indians here, it appears, live in a Tamil Nad of their own. Not that they are shy of organisation. The example of Madrasi Education Society has elicited appreciation from several impartial observers. This body which started with one teacher and one student over 40 years ago, is today running five schools with about 4500 students. True, that it is mainly for Madrasi children but people from other parts of India do attend its functions and benefit shows in great numbers.

Recently, the Tamilians here have set on to fulfil their long standing need of a South Indian temple in Delhi. The first ceremony for building a Skanda temple at a cost of Rs 12 lakh was performed on Adi Krittikai in early August 1964. That will provide for their typical aradhana, abhishekam and archana for worship of their deity. But the worship of Goddess Saraswati is no less important.

The Vedas, the epics and the Ramayana reveal that the people in the North were well conversant with the traditions and customs of the Tamils and so also were the Tamils with those of the North Indians. That knowledge and communication are today far less than desirable. There is a wall of scepticism and reluctance. The old rich classics of Tamil literature seem to have become the close preserves of the Tamilians. Even the moderns, Subramanya Bharati, the greatest Tamil poet of this century and R. Krishnamurti "Kalki", father of modern Tamil prose, have less admirers in Delhi than say T. S. Eliot and Aldous Huxley. The translations of selected Tamil works into Hindi have hardly gained any popularity.

For our cherished objective of national integration, we today want nationalism of minds and hearts. This can be brought about effectively through literature. People should be encouraged to study the regional languages. They should be able to quote from Tholkappiyam and Thirukural as readily as from Aristotle and Plato. The literature of the country has first to cross the regional boundries in order to transcend the international frontiers. The major responsibility of this task must be borne by the scholars and writers of a language which merits expansion.

A place like Delhi should have temples of literature and learning of the languages of the Southern, Western and Eastern regions of the country. The Tamilians may like to give the lead. A Madrasi Sahitya Sabha devoted to the promotion of South Indian literature could perhaps do the job. It should raise a House of Saraswati with a good library of translated Tamil works, facilities for learning Tamil language and opportunities to promote it. It should be a Sangam for writers and scholars from all parts of the country. Its scope and field of work should be vaster than Dakshin Bharat Hindi Pracharni Sabha and the Indian Sahitya Akademi. Its doors should be open to all who want to learn, study and discuss Indian literature. It should rather be so provided as to become more useful for the non-Tamilians. The management should invite the non - Tamilians to present their own works. They should be encouraged to collaborate with Tamil scholars to translate Tamil works. Earnest members should be offered facilities to visit the South for specific projects.

Tamilians will always sing praises of Tamil literature, not out of provincial attachment but because they know and realize the virtues of its beauty. Why should not the non-Tamilians also offer their tributes. The Goddess must have more worshippers.

# குழந்தை இலக்கிய உலகம்

——[o]——

குழந்தை தெய்வமாகப் பிறக்கிறது. மனிதனாக வளர்கிறது. மீண்டும் தெய்வ நிலைக்கு உயருகிறது. இது வாழ்க்கையின் தத்துவம்.

குழந்தையின் சொல்லிலே கள்ளமில்லை. செயலிலே கபடமில்லை. தெய்வத்தன்மை ஒளி வீசக் காண்கிறோம். ஆன்றவிந்தடங்கும் சான்றோரும் விருப்பு வெறுப்பற்ற அந்த உயர் நிலையைப் பெறுகிறார்கள்.

தெய்வமாகத் தோன்றும், தெய்வ மணம் நுகரும் குழந்தைகளின் மன நிலையைப்பெறத் துடிக்கும் இலக்கிய உள்ளங்கள் சில இங்கே சந்திக்கின்றன. முதுமை கொண்ட அனுபவத்தின் பெருமை கண்ட பெரியார் மயிலை சிவமுத்து அவர்களும் குழந்தையாக நின்று அனுபவம் பேசி எழில் பரப்புகிறார்கள். குழந்தை உள்ளம்படைத்த பெரும் புலவர்கள் பலர் இந்த தொகுப்பில் நின்று பேசுகிறார்கள். குழந்தைக் கவிஞர் திருச்சி பாரதன் பக்குவமாகத் தொகுத்த இத்தொகுப்பிலே தெய்வ மணம் வீசுவதை நான் நுகர்ந்து மகிழ்ந்தேன். நீங்களும் வரலாமே! வாருங்கள்.

—ரெட்டியார்.




கட்டுரை :

# என் மனதைக் கவர்ந்த குழந்தைப் பாடல்

**தமிழ்ப்பெரியார் மயிலை. சிவமுத்து**

நான் குழந்தையாக இருந்தபோது என் அன்னையார் எனக்குப் பல குழந்தைப் பாடல்களைச் சொல்லி எனக்கு மகிழ்ச்சியை அளித்திருக்கிறார். 'கை வீசம்மா கை வீசு – கடைக்குப் போகலாம் கை வீசு' என்று சொல்லி எங்களை எல்லாம் கையை மேலும் கீழுமாக வும், இந்தப் புறமும் அந்தப் புறமுமாக ஆட்டச் சொல்லுவார்கள்.

நாங்களும் அந்தப் பாட்டைச் சொல்லிக் கொண்டே எங்கள் கைகளை அந்தப் புறமும் இந்தப் புறமும் வீசுவோம்.

"கையை வீசிக்கொண்டு நீ எங்கே புறப்படுகிறாய்?" என்று என் அன்னையார் என்னைக் கேட்பார்கள். நான் உடனே "கடைக்குப் போகிறேன்" என்று மிடுக்காகக் கூறுவேன்,

"கடைக்குச் சென்று நீ என்ன வாங்கி வருவாய்?" என்பார்கள். நான் "மிட்டாய் வாங்கி மிடுக்காய்த் தின்பேன்" என்பேன்.

"நீ இன்னும் என்ன என்ன வாங்குவாய்" என்று என் அன்னையார் என்னைக் கேட்பார்கள். நான் "மாம்பழம் வாங்கி மகிழ்வாய்த் தின்னுவேன். பொம்மைகள் வாங்கிக் கொலுவில் வைப்பேன்" என்று ஆசையோடு சொல்வேன்.

அப்போது என் அன்னையார் "நீ சொல்லியது போலவே மிக மிகப் பழங்காலத்திலே குழந்தைகள் பலப் பலப் பண்டங்கள் வாங்கத் தம்கைகளை வீசிக் கொண்டு கடைக்குச் சென்று அவைகளையெல்லாம் வாங்கி வந்ததாக ஓர் அன்னையார் பாடியிருக்கிறார்கள். அந்தப் பாடலை நான் உனக்கு இப்போது சொல்லுகின்றேன்" என்பார்கள்.

*"உங்கள் மனதைக் கவர்ந்த குழந்தைப் பாடல் எது?" என்று மயிலை சிவமுத்து தாத்தா அவர்களைக் கேட்டோம். நம் எல்லாருக்குமே பிடித்தமான இனிமையான பாடலைப் பற்றி அருமையான கட்டுரை மூலம் இங்கே பதில் சொல்லி இருக்கிறார்கள்.*

நானும் அந்தப் பாடலைக் கைவீசிக்கொண்டே பாடுவேன். அந்தப் பாடல் கீழ்வரும் பாடலேயாகும்.

கைவீசு அம்மா கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு
மிட்டாய் வாங்கலாம் கைவீசு
மெதுவாய்த் தின்னலாம் கைவீசு
பழங்கள் வாங்கலாம் கைவீசு
பாங்காய்த் தின்னலாம் கைவீசு
காய்கள் வாங்கலாம் கைவீசு
சமைத்துத் தின்னலாம் கைவீசு
பொம்மை வாங்கலாம் கைவீசு
பூவைச் சூடலாம் கைவீசு.

இந்தப்பாடலை என் மனைவியார் என்குழந்தைகளுக்குப் பாடிக்காட்டி கைவீசச் சொல்லுவதுண்டு. இப்போது என் குழந்தைகள் தங்கள் குழந்தைகளுக்கு இந்தப் பாடலைப் பாடிக்காட்டிக் கைவீசச் சொல்லி வருகின்றார்கள்.

இந்தப்பாடல் இப்போது அரசாங்கப் பாடபுத்தகத்திலேயும் அச்சேறியிருக்கின்றது. நான் என்னுடைய எழுபத்துநான்காம் வயதில் இதனைப் படித்துப் பார்க்கின்றேன்.

"கைவீசம்மா" என்னும் தலைப்பிலிருந்தே இது குழந்தைகட்கு நல்ல உடற்பயிற்சியை அளிக்கும் பாடல் என்பது தெரிகின்றது. ஒன்று இரண்டு மூன்று என்று சொல்லிக் கையை ஆட்டுவதைவிடக் குழந்தைகள் இந்தப் பாடலைப் பாடிக்கொண்டு நடக்கும் போது போர்வீரனைப்போல் கையை வீசிச் செல்வது குழந்தைகளுக்கு மிக்கமகிழ்ச்சியை அளிக்கும்.



கடைக்குப் போகும்போதும் பள்ளிக்குச் செல்லும் போதும் பிற இடங்கட்குச் செல்லும்போதும் அந்தந்த இடத்துக்குத் தக்கபடி குழந்தைகள் அந்தப் பாடலைக் கூட மாற்றிப் பாடித் தம் கைகளை வீசிச் செல்லலாம்.

"பள்ளிக்குச் செல்லலாம் கைவீசு
பாடங்கள் படிக்கலாம் கைவீசு" என்றோ

"கோயிலுக்குச் செல்லலாம் கைவீசு
கோபுரத்தைக் காணலாம் கைவீசு"

என்றோ குழந்தைகள் பாடி மகிழலாம் என்பது என் நினைவுக்கு வருகின்றது.

அன்றியும் மிட்டாய் வாங்கினால் அது செரிக்கும் படி அதனை மெதுவாக மென்று தின்ன வேண்டும் என் பதனையும் பழங்கள் வாங்கினால் அவைகளைத் தோலை நீக்கி சுவைத்துச் சாப்பிட வேண்டும் என்பதையும் இந்தப் பாடல் குழந்தைகளுக்கு அறிவிக்கின்றது.

காய்களைச் சமைத்தே தின்ன வேண்டும் பச்சையாகத் தின்னலாகாது என்பதையும், பொம்மைகளை உடைக்காமல் கொலுவில் வைத்து அவைகட்குப் பூமாலை சூட்டலாம் என்பதையும் குழந்தைகளுக்கு இந்தப் பாடல் நன்கு தெரிவிக்கின்றது.

மேலும் இந்தப் பாடல் ஆண் குழந்தைகளுக்கும், பெண் குழந்தைகளுக்கும் ஏற்றதாக இருக்கின்றது. இந்தப் பாடலில் மதச் சார்பு சிறிதும் இல்லை.

இன்னும் இந்தப் பாடல் பழங்காலத்துக்கு ஏற்ற தாக இருந்ததோடு, இந்தக்காலத்துக்கு ஏற்றதாகவும் இனி வருங்காலத்துக்கும் ஏற்றதாகவும் இருக்கின்றது.

மற்றும் இந்தப் பாடலை வேறு மொழிகளில் மொழி பெயர்த்தாலும் கூட இரஷ்ய நாட்டுக் குழந்தைகளானாலும் அமெரிக்க நாட்டுக் குழந்தைகளானாலும் இங்கிலாந்து நாட்டுக் குழந்தைகள் ஆனாலும் அவர்கட்கும் இந்தப் பாடல் ஏற்றதாகவே இருக்கும்.

எனவே இஃது ஓர் உயிருள்ள பாடலாக அமைந்திருக்கின்றது. இத்தகைய பழம் பாடல்கள் நம் நாட்டிலே பலப்பல இன்றும் வழங்கி வநகின்றன. இந்தக் காலத்திலும் ஒருசில மேதைகள் உணர்ச்சி ததும்பும்படியான உயிருட்டப் பாடல்களைப் பாடியிருக்கின்றார்கள்.

'பூவே உன்னைப் படைத்தவர் யார்? புதுமணம் உள்ளே நுழைத்தவர் யார்?' என்று தொடங்கும் மணியரசர் பாடலும், "சின்னச் சின்ன எறும்பே. சிங்காரச் சிற்றெறும்பே" எனறு தொடங்கும் காவேரிப் பாக்கத்தார் பாடலும், கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, குழந்தைக் கவிஞர், பெ. தூரன் போன்றோர் பாடியுள்ள பாடல்களும் நல்ல கவி நயமுடையனவாக விளங்குகின்றன. இன்னும் சிலர் இவ்விதம் கவிநயமுடைய பாடல்களைப் பாட முயன்றும் வருகின்றனர்.

இதே சமயத்தில் வேறு சிலர் குழந்தைகள் நலனைச் சிறிதும் எண்ணாமல் பெரியோர்கட்கும் புரியாத கடினமான சொற்களை அமைத்துக் குழந்தைப் பாடல்கள் என்னும் பெயரால் நூற்றுக்கணக்கான பாடல்களை வெளியிட்ட வண்ணமிருக்கின்றனர்.

குழந்தைப் பாடல்கள் இவ்விதம்தான் இருத்தல் வேண்டும் என்னும் திட்டம் அரசாங்கத்தினிடம் இல்லை. ஆனால் அவைகளைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் மட்டும் நல்ல பயிற்சியைப் பெற்றிருக்க வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகின்றது.

எனவே திருச்சி எழுத்தாளர் சங்கத்தார் போன்றோர் தாங்கள் வெளியிடும் மலரின் வாயிலாக இந்தக் குறைகளை எடுத்துத் தெரிவிப்பார்களானால் பெரிதும் நலமாக இருக்கும்.

# மழலை மொழி

[டி, எஸ். மணி]

1. சின்னத்தம்பி மழலைமொழி
சிரிக்க வைக்குதடா — அது
உன்னைப் பெற்ற அப்பா அம்மா
உலகம் போற்றுதடா!

2. கன்னித்தமிழ் மழலைமொழி
கவர்ந்து இழுக்குதடா — அது
தன்னை மீறி சிரிக்க வைக்குந்
தன்மை கொண்டதடா!

3. கள்ளமில்லா மழலைமொழி
கவலை போக்குதடா — அது
கால மெல்லாம் நினைவி ருக்கும்
காட்சி கொண்டதடா!

4. இன்பந்தரும் மழலைமொழி
என்னை மயக்குதடா — அது
என்றும் கூடி சுவைக்க நமக்கு
இறைவன் தந்ததடா!

# சிறந்து வாழ....

[இரா. சண்முகம்]

உண்மை சொல்ல வேண்டும்
ஒன்றி வாழ வேண்டும்
நன்மை செய்ய வேண்டும்
நலிவு போக்க வேண்டும்!

அறிவை வளர்க்க வேண்டும்
அகந்தை நீக்க வேண்டும்
பெரியோர் போற்ற வேண்டும்
பிழைகள் உணர வேண்டும்!

பண்பு செழிக்க வேண்டும்
பழிகள் நீக்க வேண்டும்
அன்பு கொழிக்க வேண்டும்
அமைதி நிலைக்க வேண்டும்!



நாடகம் :

# காணமல் போனவன்

காட்சி 1

ரமணி : கண்ணு! கண்ணு! (உரக்க) ஓ கண்ணு!

கண்ணன் : யாரு! ரமணியா? ஏன் இப்படிக் கத்தறே, நான் என்ன செவிடா?

ரம : பின்னே என்ன; எவ்வளவு நேரம் காத்துக் கிட்டு இருக்கேன்? பள்ளிக்கூடத்துக்கு நாழி யாச்சே!

கண் : உஸ்! பள்ளிக்கூடம் என்கிற பேரே எடுக் காதே.

ரம : என்ன கண்ணு! இப்படி பேசறே.

கண் : எனக்குப் பள்ளிக்கூடமின்னு கொஞ்சங்கூடப் பிடிக்கலே. பாடமின்னுலே வேப்பங்காயைக் கடிக்கிற மாதிரி.........

ரம : 'விளக்கெண்ணெயை'க் குடிக்கிற மாதிரி இருக்குதோ?

கண் : ஆமாம் ரமணி. நாம்பபாட்டுக்கு சினிமா, பார்க்கு, சர்க்கஸ் என்று இல்லாம, பாடம், புத்தகம், கணக்கு, ஆமணக்குன்னு கஷ்டப்படப் பிடிக்கலே.

ரம : கண்ணு! நீ பணக்கார வீட்டுப் பிள்ளையாச் சேன்னு இப்படியெல்லாம் பேசறியா?

கண் : பின்னே என்ன! எங்களுக்கு இருக்கிற சொத்து நாலு தலைமுறைக்கு வருமின்னு எங்க பாட்டியே சொல்லி இருக்காங்களே.

ரம : என்னதான் சொத்து இருந்தாலும் படிப்பு இல்லாம வீட்டுச் சொத்து, சுதந்தரத்தை எல்லாம் எப்படிக் காப்பாற்ற முடியும்?

பள்ளிக்கூடத்துக்குப் போவது என்றால் சில குழந்தைகளுக்கு விளக்கெண்ணெ குடிப்பது போல! கண்ணனுக்கும் அப்படித்தான்! ஆனால், அவன் எப்படி திருந்துகிறான் என்பதை விளக்கும் அழகான நாடகம்.

கண் : அதுக்கென்ன ரமணி! யாராவது கணக்குப் பிள்ளையையும் வேலைக்காரன்களையும் வைச்சுகிட்டாப்போவுது!

ரம: கண்ணு! நீ பேசறது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கலே. படிப்பு இல்லாட்டி நமக்கும் பிராணிகளுக்கும் என்ன வித்தியாசம்?

கண்: ரமணி! நீ என்ன சொன்னாலும் சொல்லிக்கோ. எனக்குப் பள்ளிக்கூடமின்னு பைத்தியமே பிடிச்சுடும்போலஇருக்குது. அப்பப்பா! இலக்கணத்திலே உயிரும் மெய்யும் கத்துகிறதுக்குள்ளே என் உயிரே போய்விடும்போல இருக்குது.

ரம : கண்ணு! இலக்கணமின்னு உனக்கு இப்படி வெறுப்பா இருக்குது. எதையும் ஆசையோடு படிச்சா சுலபமா இருக்குமின்னு நம்ப தமிழ் வாத்தியார் சொல்லுவாரே.

"இன்பம் இன்பம் இலக்கணமே
அன்பாய்க் கற்கின் அரைக்கணமே"

என்று மன்றத் தாத்தா மயிலை சிவமுத்து அவர்கள்கூடக் கூறுவாரே, உனக்குத் தெரியாதா?

கண்: ரமணி, நீ என்ன சொன்னாலும் இப்போ என் மூளையிலே

தணிகை உலகநாதன்



ஏருது. இலக்கணம் ஒரு தலைவலி! அதைப் போய் இன்பம் என்கிருயே. நீ வேணுமானுல் பள்ளிக்கூடம் போ. என்னை ஒண்ணும் தொந் தரவு செய்யாதே!

ரம: கண்ணு! அப்படியெல்லாம் பேசாதே. அன் ருட பாடத்தை அன்ருடம் படி. படிக்கப் படிக்க உனக்குப் படிப்பு தானே வந்திடும்.

கண்: உம். எனக்காவது படிப்பாவது! வர்ரதா வது! ஆ-மா-ம்! இன்னிக்கி என்னு பள்ளிக் கூடம் போகத்தான் வேணுமா.

ரம: பின்னே! பள்ளிக்கூடத்திலே கல்வி அதிகாரி வர்ராறே. உனக்குத் தெரியாதா?

கண்: ஐயையோ! — அம்மாடியோ! ரமணி! நீ போ, நான் பின்னுலே வர்ரேன்.

ரம: சும்மா, வா கண்ணு! சேர்ந்தே போகலாம்.

கண்: ரமணி! எனக்குப் பயமா இருக்கிறது. நான் ஒண்ணும் படிக்கிலே. கல்வி அதிகாரி ஏதாச்சி கன்னு பின்னுன்னு கேள்வி கேட்டாருன்னு என்னு செய்யறது.

ரம: கல்வி அதிகாரி மொதல்லே கண்ணனைத் தான் தேடிவந்து கேள்வி கேட்கப் போருராக் கும். போடா பயந்தாங்கொள்ளி.

கண்: நான்தான் சொன்னேனே, பின்னுலே வர் ரேன்னு. ஏன் இப்படி என் உயிரை வாங்கறே.

ரம: சரி! கண்ணு. நேற்று வகுப்பிலே உலகப் படம்போட்டுக்கிட்டு இருந்தியே, அந்தப்படம் இருந்தால் கொஞ்சம் கொடேன். அதைப் பார்த்து நானும் ஒரு படம் போட்டுக்கிறேன்.

கண்: (சிரித்துக்கொண்டே) அது வேணும்பா! அந்த உலகப்படம் நல்லா இருக்குதா பாருங் கோன்னு வாத்தியார் கிட்டே காட்டினேன். உடனே வாத்தியார் ஒரே உருண்டையா இன் னெரு உலகப்படம் போட்டு, இந்தாடா மார்க் குன்னுரு.

ரம: ஓஹோ! (சிரித்துக்கொண்டே) கோழிமுட்டை போட்டாரா? சரி, நான் வர்ரேன். கண்ணு! நீ சீக்கிரமா பள்ளிக்கூடம் வந்திடு.

கண்: (சலிப்புடன்) அதுக்கென்ன! வந்தால் போவுது. (மணியடித்தல்)

ரம: அதோ! அதோ! மணியடிக்குது, கண்ணு. நான் போய் வர்ரேன். (போகிருன்)

கண்: போய்வா ரமணி. (தனக்குள்) இன்னிக்கா வது, போறதாவது. உம், மட்டந்தான்.

காட்சி 2

நீலா: (கதவைத் தட்டுதல்) மாலதி! மாலதி!

மாலதி: யாரது நீலாவா.........வா வா நீலா!

நீலா: கண்ணன் இல்லையா அக்கா.

மா: கண்ணன் இன்னும் பள்ளிக்கூடத்திலிருந்தே வரலையே நீலா.

நீலா: என்ன! அவன் பள்ளிக்கூடத்துக்கே வர லையே.

மா: கண்ணன் பள்ளிக்கூடம் வரலியா?

நீலா: ஆமாம்.

மா: பள்ளிக்கூடத்துக்குத்தானே போனுன். இன் னிக்குக் கல்வி அதிகாரி வர்ரதாகூடச் சொன் னுனே.

நீலா: கல்வி அதிகாரி வந்தது என்னவோ நிசந் தான். ஆனுல் உங்க தம்பி கண்ணனைத்தான் காணும்.

மா: ஐயோ, கண்ணன் எங்கே போயிட்டான். யாராவது பிள்ளை பிடிக்கிறவங்க கையிலே....

நீலா: அப்படியெல்லாம் ஒண்ணும் இருக்காது அக்கா. நீங்க கவலைப்படாம போலீசுக்குப் 'போன்' செய்து பாருங்க. கண்ணன் கட் டாயம் கிடைப்பான்.

மா: சரி நீலா. நீயும் கண்ணனை வழியிலே எங்கே யாவது பார்த்தா 'உன்னை வீட்டிலே தேடிக் கிட்டு இருக்காங்கன்னு' சொல்லு.

நீலா: அப்படியே செய்யறேன் மாலதி அக்கா. நான் போய்வர்ரேன். விளக்கு வைக்கிறதுக் குள்ளே எங்க அம்மா வீட்டுக்கு வந்துடனும்னு சொன்னுங்க.

மா: போய் வா நீலா.

காட்சி 3

[அண்ணன் முத்து வருதல்]

முத்து: என்னம்மா, மாலதி! என்னமோ வருத்த மா இருக்கறே?

மா: நம்ப கண்ணனைக் காணும் அண்ணு. பள் ளிக்கூடத்துப் பிள்ளைகளெல்லாம் வந்து விட்டார்கள். கண்ணன் மாத்திரம் வரவே இல்லை.

முத்: என்னம்மா! ஹெட்மாஸ்டருக்கு போன் பண்ணக்கூடாது?

மா: போன் பண்ணிப்பார்த்தேன் அண்ணு. அவன் காலையிலிருந்து பள்ளிக்கூடத்திற்கே வரவில்லையாம்.

முத்: பின்னே......?

மா: அவன் வகுப்பு பிள்ளைகளையும் கேட்டேன். அவர்களும் அவனைப் பார்க்கவே இல்லையின்னுட்டாங்க.

முத்: இரு, நான் போலீஸுக்கு போன் செய்யறேன்.

மா: போலீசுக்குக்கூடப் போன் செய்தாச்சு அண்ணு. அப்பாவும், அம்மாவும் ஊரிலே இல்லை. எங்கேயாவது குளம்குட்டைப் பக்கமா போயிருப்பானேன்னு சந்தேகமா இருக்குது. அண்ணு ஆ... அண்ணு எனக்கு என்னமோ மயக்கமா வருது அண்ணு......ஆ...ஆ...

முத்: ஐயையோ மாலதிக்கு மயக்கம் வந்துடுத்தே! ஏ ரமா! ரமா! இங்கே வா.
[வேலைக்காரப் பெண்ணை அழைத்தல்]

ரமா: என்னங்க எசமான்.

முத், ஓடிப்போய் இரண்டு தலையணையைக் கொண்டுவா. மாலதி மயக்கம் போட்டு விழுந்துட்டா. கூடவே ஒரு டம்ளர் தண்ணியும் கொண்டுவா.

ரமா: இதோ வந்துட்டேன் எசமான் (ஓடுதல்)
[சிறிது நேரம் அமைதி]

முத்: (ஆத்திரத்துடன்) என்ன ரமா! மாடி அறையிலே இருந்து தலையணையைக் கொண்டு வர்ரத்துக்கா இவ்வளவு நேரம்? (உரக்கக் கூப்பிடுதல்) ஏ ரமா! என்ன பண்றே? இலவ மரத்திலே ஏறி காய் பறிச்சி பஞ்சு எடுத்து தலையணை தைச்சுக்கிட்டு இருக்கயா?

ரமா: (பெருமூச்சு விட்டுக்கொண்டே) வந்துங்க...

முத்: என்ன வந்து...தலையணை எங்கே ரமா? சும்ம ஓடி வர்ரியே?

ரமா: வந்து...... தலையணை எடுக்கப்போனேனு? வந்து......வந்து....

முத்: வந்து... மண்ணுங்கட்டி. அந்த தண்ணீரை எடு மெதுவா. கொஞ்சமா கையிலே ஊத்து. மாலதி முகத்தில் அடிப்போம். மாலதி மாலதி.

மா: (கண்ணை சிறிதாக விழித்து மெல்லிய குரலில்) அண்ணு......கண்ணன்....கண்ணன்

முத்: கண்ணன் வருவான் மால்தி. நீ கவலைப் படாதே. ஏய் ரமா, மரமா நிக்கறயே. போய் தலையணையைக் கொண்டுவா.

ரமா: அதான் சொல்ல வந்தேன் எசமான்.

முத்: என்ன சொல்ல வந்தே...... சொரக்காய்க்கு உப்பு இல்லேன்னு சொல்லவந்தயா?

ரமா: படுக்கை அறையிலே பாம்புபோல புஸ்.... புஸ்னு சத்தம் கேட்குது.

முத்: என்ன ரமா...

ரமா: அதனுலதான் ஓடிவந்துட்டேன். ரெண்டு தலையணைக்கு நடுவிலே இருந்து நல்ல பாம்பு போல நல்லா மூச்சு வந்ததைப் பார்த்தேன்.

முத்: அப்படியா! சத்தம் போடம வா. மாலதி நீ அப்படியே இரும்மா. இதோ அந்தப் பாம்பை தீர்த்து கட்டிவிட்டு வந்துடறேன். ஏ, ரமா! எங்கே, அந்த தடியை எடுத்துவா.

ரமா: எசமான்......நானு? (தயங்குதல்)

முத்: அடே, பயந்தாங்கொள்ளி! தடியைக் கொண்டுவந்து என் கையில் கொடு.

மா. அண்ணு பாம்பு. ஜாக்கிரதை அண்ணு.

முத்: கையிலே தடி! அதன் தலையிலே அடி. ஒரே அடி. நீ கவலைப்படாதே மாலதி. (படுக்கைஅறையில் நுழைகிற காலடிச்சத்தம். சிறிய குறட்டை ஒலி [கேட்கிறது) மாலதி! மாலதி! பாம்பை அடிச்சுட்டேன். ஓடி வாயேன். ரமா நீயும் ஓடி வாயேன்.

மா: எங்கண்ணே பாம்பு.

முத்: இதோ தலையணைக்கு நடுவிலே புஸ்புஸ்னு மூச்சு விடுதே.

ரமா: ஏயப்பா! கருநாகம் மாதிரி சத்தம் வருதே.

முத்: கத்தரிக்கா நாகம்! பார்த்தயா மாலதி. நம்ப கண்ணன் குறட்டைவிடுகிறுன், இரண்டு தலையணைக்கும் நடுவிலே புஸ்புஸ்னு.

மால: கண்ணு! கண்ணு! என்னடா இது. தலையணைக்கு நடுவிலே ஒளிஞ்சிகிட்டு தூங்கறியா

கண்: (விழித்துக்கொண்டே) யாரது மாலதி அக்காவா! உம்...ம். (திமிர் முறித்தல்)

முத்: என்னடா கண்ணு! உன்னை எங்கெல்லாம் தேடறது. இங்கே தூங்குறேன்னு சொல்லிட்டுத் தூங்கப்படாதா?

மால: ஏண்டா என் கண்ணு! நீ இன்னிக்குப் பள்ளிக்கூடம் போகாவிட்டால் என்கிட்டே சொல்லக்கூடாதா? 'லீவ் லெட்டர்' எழுதி இருக்கலாமே! உன்னைத் தலைமையாசிரியரும் தேடிக்கிட்டு இருக்கிறுர். போலீசும் தேடிக்கிட்டு இருக்குது.

முத்: மாலதிக்கும் பெரிய மயக்கமே வந்துடுத்து!

கண்: அக்கா! அண்ணு! என்னுலே எல்லாருக்கும் எவ்வளவோ தொல்லை! இனிமே நான் ஒழுங்கா பள்ளிக்கூடம் போவேன். நல்லா படிப்பேன்.

முத்: கண்ணு! உன் வகுப்பு வாத்தியாரையே பிரைவேட்டுக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். நாளையிலிருந்து நம்பவீட்டுக்கே வரப்போருரு. நீ நல்லா படிச்சுக்கோ.

மால: எங்க கண்ணன் இனிமே நல்லா படிப்பான். ஒழுங்கா பள்ளிக்கூடம் போவான். ஏ, ரமா! சூடா மூன்று கப் காபி கொண்டுவா.



**சிறுவர் கதை:**

# கடலும் சூரியனும்

**கே. கண்ணுச்சாமி**

முன்னொரு காலத்தில் சூரியனுக்கும் கடலுக்கும் பெரிய சண்டை வந்துவிட்டது. அப்போது சூரியன் கடலை நோக்கி "ஏ கடலே, உன்னை பூமியிலேயே இல்லாதபடி ஆக்கிவிடுகிறேன் பார்..." என்று கோபத்துடன் கூறியபடி தனது உஷ்ணமான கிரணங்களைக் கடலில் பாய்ச்சினான்.

> கடல் நீரை சூரியன் ஆவி ஆக்குகிறது அல்லவா? ஆனால், கடல் வற்றுவது இல்லையே, அது என்? பதில் வேண்டுமா? இதோ ஒரு சுவையான கற்பனைக் கதை.

சூரியனின் வெப்பத்தை தாங்க முடியாமல் கடல்நீர் ஆவியாக மாறி கொஞ்சம் கொஞ்சமாக வானத்தை நோக்கிச் செல்ல ஆரம்பித்துவிட்டது. சூரியனின் வெப்பம் அதிகரிக்க அதிகரிக்க கடல்நீர் வற்ற ஆரம்பித்துவிட்டது வானத்திலே கடல் நீராவி கருமையான மேகமாக குவியத்துவங்கிற்று.

கடலானது கடவுளிடம் ஓடிச்சென்று முறையிட்டது.

"கடவுளே, சூரியன் என்னைக் கொஞ்சம் கொஞ்சமாக கொன்றுகொண்டிருக்கிறான். நீங்கள் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும். இல்லாவிட்டால் அப்புறம் என்னை உயிரோடு பார்க்க முடியாது" என்று கடவுளிடம் கூறி அழுதது.

"கடலே, பயப்படாதே. உன்னை நான் காப்பாற்றுகிறேன்..." என்று அபயம் தந்தார், கடவுள்.

பிறகு காற்றை அழைத்து "காற்றே' சூரியன் கடல் நீரை ஆவியாக மாற்றி கரிய மேகக் கூட்டமாகத் தன்னிடம் வைத்திருக்கிறான். நீ உடனே சென்று அந்த மேகக்கூட்டங்களை கலைத்து இழுத்துக் கொண்டுபோய் மலைமுகடுகளில் மோத விடு..." என்று உத்தரவிட்டார்.

உடனே காற்று சூரியனிடமிருந்த மேகங்களைக் கலைத்துச் சென்று மலைமுகடுகளில் மோத விட்டது. மலையில் மோதிய மேகங்கள் மழையாகப் பொழிந்தன.

மழைநீர் அருவியாக ஓடி ஆறாக மாறி கடலிலே போய் விழுந்தது.

இந்தவிதமாக கடலிலே இருந்து நீராவியாகி, வானத்திற்குப் போன நீர் திரும்பவும் கடலுக்கே வந்து சேர்ந்தது.

சூரியன் திரும்பத் திரும்ப கடல் நீரை தன் வெப்ப சக்தியால் நீராவியாக்கிக்கொண்டிருந்தான்.

ஆனால் காற்றோ விடாமல் மேகங்களை மலைமுகடுகளில் மோதவிட்டு மழைபொழியச் செய்து கொண்டே இருந்தது.

அதனால்தான் கடல்நீர் இன்னும் வற்றாமல் இருக்கிறது!





# சிட்டுவின் ஏமாற்றம்

அன்புமணி

★

**அடுத்தவர்கள் துன்பப்படுவது சிலருக்கு வேடிக்கையாக இருக்கும். லதாவும் அப்படித்தான் ஒரு காட்சியை ரசித்தாள். ஆனால், அதே லதா கடைசியில் புழுப்போல் துடித்தாள். ஏன்? ஏன்?. கதையைப் படியுங்கள்.**

"அண்ணா, நான் சொன்னேனல்லவா? இன்று பாருங்கள்" என்றாள் லதா. குமார் உடனே அறையின் மேலே கண்களை நிமிர்ந்து பார்த்தான். சிட்டுக் குஞ்சுகள் "கீச் கீச்" என்று பசியினால் கத்திக்கொண்டு கிடந்தன. தாய் கீழே பறந்துவந்து பருக்கைகளைப்பொறுக்கிக்கொண்டு மேலேசென்று கூண்டிற்குள் மறைந்தது. அமைதி நிலவியது. பிறகு குஞ்சுகள் கூண்டின் ஓரத்தின் மேல் வந்து அமர்ந்தன. தாய்க்குருவி சடசடவென்று கூண்டைச் சுற்றிலும் பறந்து கொண்டிருந்தது. குஞ்சுகளை கூண்டிலிருந்து கிளப்ப முயற்சிப்பது போல் தோன்றியது.

"அண்ணா, பார். இதோ, இன்னும் கொஞ்ச நேரத்தில் இரண்டும் பறந்துவிடும்" என்று மறுபடியும் சவால் விடுத்தாள், லதா. அவள் சொன்னாற் போல் இரண்டு சின்னஞ்சிறுசுகளும் படபட வென்று கூண்டைவிட்டு மேலெழுந்து சிறு வட்டமிட்டு மறுபடியும் கூண்டில் விழுந்தன.

தாய்க்குருவி அறையின் மூலையில் ஒரு படத்தின் மேல் உட்கார்ந்து கூண்டைக் கவனித்தது. பின் வேகமாய்ப் பறந்து கூண்டினை அடைந்தது. கேட்கணுமே குஞ்சுகளின் ஆர்ப்பாட்டத்தை!

அதற்கு மேலிருந்தது லதாவின் கொட்டம். துள்ளினாள். "பேஷ், பேஷ்!" என்று ஒரே கூச்சல். குஞ்சுகள் பயந்தே போயிருக்கும்! வெளியே வர அன்று மறுபடியும் அவை துணியவில்லை.

மூன்றாம் நாள்...

குஞ்சுகள் கூண்டைவிட்டு சிறிது தூரம் பறக்க முயற்சித்தன. கூண்டிற்கு அடியே சுவரில் ஒரு நிலைக் கண்ணாடி. அதன் முன் தான் லதா நின்று தன்னை சிங்காரித்துக் கொள்வாள். குஞ்சுகளில் பெரியது நேரே கீழ் வந்து கண்ணாடியின் மேல் விளிம்பில் மிகவும் சாமர்த்தியமாக இறங்கியது. இறங்கிய வேகத்தில் தலைகீழே வால் மேலே 'பல்டி'யடிக்கும் தருணம்; சமாளித்துவிட்டு மேலே அண்ணாந்து பார்த்தது. கூண்டு வெகு தொலைவில் காணப்பட்டது. "மறுபடியும் இத்தனை உயரம் எழுந்தாக வேண்டுமே! சிறிது இளைப்பாருவோம், கீச்" என்றது. "நான் இங்கே இருக்கிறேன், பார். மேலே எப்படி எழுந்து பறப்பது? கீச்" என்று அதன் சகோதரி கூண்டிலிருந்து பதில் உச்சரித்தாள். தாயோ கண்ணுக்கு அகப்படவில்லை.

தன் கால்களுக்குக் கீழே என்ன? பார்ப்போம், என்று பெருங்குஞ்சு தன் கால்களால் இருகப்பிடித்துக்கொண்டு உடலைச் சாய்த்தது கீழ் நோக்கி. உடனே தன்னைப்போல் ஒரு குருவி தன்னருகில் நின்று தன்னைப் பார்ப்பதுபோல் பிரமை. "கீச்" என்று ஒரு கொத்து கொத்திவிட்டு சரேலென்று ஒரேடியாக மேல் கிளம்பி கூண்டைச் சேர்ந்தது. தன் தங்கையிடம் "கீச் கீச்" என்றது. "உன்னைப் போல் ஒன்று அங்கும் கண்டேன். இதென்ன ஆச்சரியம்! அப்படி ஒன்றும் உண்டா?" மறுபடியும் பார்க்க அதன் ஆவல் நெஞ்சை அள்ளியது. இப்பொழுது பயமென்பதே துளியும் காணோம்! "சர்" என்று கீழே பறந்து வந்து நிலைக் கண்ணாடியின் மேல் ஓரத்தில் அமர்ந்தது. உடனே தன் உடலைத் தாழ்த்தி உற்றுநோக்கியது. அந்தோ, அடுத்தவன்



மறுபடியும் தன்னை எதிர்த்து முட்டி நின்றான். 'கீச்' என்று கத்தி தன் வாலையும் விரித்து ஒரே கோபத்துடன் கொத்தியது. எதிரியும் அதே சமயத்தில் தன் மூக்கைக் கொத்தவே பெருங்குஞ்சுக்கு கோபம் மேலிட்டது.

"அப்படியா, இதோ, உனக்கு இன்னொரு கொத்து" ஆஹா... தன் மூக்குதான் வலிக்கத் தொடங்கியது. எதிரி முறைக்க முறைக்கப் பார்த்தது.

"வா, கொத்து பார்க்கலாம்! ஏன் சும்மா நிற்கின்றாய்? பயந்து போய்விட்டாய் அல்லவா? ஊம்...கொத்து." பெருங்குஞ்சு கொத்தியது, எதிரி பதில் கொடுக்கத் தயங்கவில்லை. கொத்துக்குக் கொத்து சரமாரியாகப் பொழியவே மூக்கில் ரத்தம் பீறிடத் தொடங்கியது. பெருங்குஞ்சுக்கு மகிழ்ச்சி, எதிரி மூக்கை உடைத்துவிட்டோமே என்று. ஆனால் தன் மூக்கில் இரத்தம் வழிந்து வலிக்கத் தொடங்கியதும் "நாளை உன்னைக் கவனித்துக் கொள்ளுகிறேன்" என்று எச்சரிக்கை செய்து பறந்தோடியது தன் கூண்டிற்கு.

அதற்கு ஏற்பட்ட காயத்தைக் கண்டு தங்கைச் சிட்டு 'வீச், வீச்' என்று கத்தியது. "அதன் மூக்கை உடைத்துவிட்டேன்!" என்றது பெருங் குஞ்சு. "ஐயோ உன் மூக்கில் வழிகிறதே இரத்தம்!" என்றது தங்கை. பெருங்குஞ்சு தன் உடலைக் குலுக்கியது. நெஞ்சை நிமிர்த்தி "நாளை தீர்த்துவிடுகிறேன் பார்" என்றது.

மறு நாள் காலை.... ...

பறந்து இறங்கியது கண்ணாடியின் மேல். எதிரி காத்துக்கொண்டு இருந்தது போல் குத்துச் சண்டை உடனடியாக ஆரம்பித்தது. குத்துக்கு குத்து பலமாகவே "கீச் கீச்" என்று பெருங்குஞ்சு வெற்றி முழக்கம் செய்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் பெருங்குஞ்சு மண்டையிலிருந்தும் இரத்தம் பீறியது. "எதிரி இன்றைக்குத் தொலைந்தான்" என்று ஆவேசம் கொண்டு அதனை 'பீட்' அடித்துத் தள்ள வேண்டுமென்ற முயற்சியில் முழு மூச்சுடன் தாக்கவே எதிரி கீழே விழுவதை பெருங்குஞ்சு கண்டு பெருமூச்சுவிட்டது. 'பொத்' என்று பெருங்குஞ்சு கீழே விழுந்து துடித்தது. மயங்கியது.

பெரிய குஞ்சு கண்ணாடியில் தெரிந்த அதனுடைய உருவத்தோடு சண்டை போட்டு வந்ததைத் தொடர்ந்து பார்த்து வந்தாள், லதா! அவளுக்கு 'சினிமா' பார்ப்பது போல் அது வேடிக்கையாக இருந்தது.

அந்தக் குஞ்சு கண்ணாடியில் மோதி மூக்கு உடைந்ததைக் கூட அவள் வேடிக்கையாகத்தான் ரசித்து வந்தாள். ஆனால், குஞ்சு மயங்கி விழுந்த போதுதான், லதாவின் மனதில் 'சுரீர்' என்று வலிப்பது போல் இருந்தது.

"ஐயோ! கண்ணாடியில் மோதிக் கொண்டால் வலிக்கும் என்று நமக்குத் தெரியும். ஆனால் அந்த குஞ்சுக்குத் தெரியாதே! அது அவஸ்தைப்படுவதைப் பார்த்து ரசித்தோமே! இப்போது, அது மயங்கிவிட்டதே!" என்று லதாவின் மனதின் ஒரு மூலையில் புலம்பல் குரல் கேட்டது.

"ஒரு வேளை இந்த சிட்டுக் குஞ்சு இறந்துவிட்டால், அதற்கு நானும்தானே பொறுப்பு?"

இப்படி எண்ணும்போது லதாவின் உடல் முழுவதும் நடுங்கியது. உடனே மயங்கிக் கிடந்த குஞ்சை தாவி ஓடிப் போய் தூக்கினாள். அணைத்து எடுத்துக்கொண்டு அண்ணன் குமாரிடம் ஓடினாள்.

"அண்ணா! இந்தக் குஞ்சைக் காப்பாத்தணும். இல்லாட்டி, நானும் ஏங்கியே அதுபோலவே செத்துப் போயிடுவேன் அண்ணா" என்று குலுங்கி-குலுங்கி அழுதாள். அண்ணனை இழுத்துக் கொண்டு டாக்டர் வீடு நோக்கி பறந்தாள்!

லதாவின் செய்கையைப் பாராட்டுவதுபோல் சின்னக் குஞ்சுவும் தாய் சிட்டுவும் 'கீச்-கீச்' என்று கத்தின!





# ஞான சம்பந்தர்

சிவமாய் நின்ற தனிப்பொருளின் சின்னக் குழந்தை நீயானாய்!
அவமே நின்ற அடியேனும் உனைப்போ லாக ஆவல்கொண்டேன்
தவமே இல்லை என் செய்வேன் தடித்த மகனாய் யானானேன்
புவனம் நிறைந்த புண்ணியமே! புகலாய் அடியேற் கொருமாற்றம்.

என்றன் குழவி யேனும்இனிது இன்பத் தமிழால் உனைப்போல
மன்றில் வருமென் றுவல்கொண்டேன் மண்ணாயிற்றவ் வெண்ணமுமே
குன்றில் அமரும் கோமானாய்க் குலவும் ஞான சம்பந்தத்
தென்றல் போல்வாய்! யான் வேண்டும் வரமொன் றீவாய் தீந்தமிழே!

பலவும் பேசிப் பயனென்ன பால்வாய் ஞானப் பண்மணியே!
குழவும் உமையின் ஞானப்பால் குடித்தாய் இன்பம் வடித்தாயே
உலகில் இனிமேல் உதிக்கின்ற ஒவ்வோர் குழவி தானுமுன்றன்
அலகில் கவியால் நீயாக அருளல் வேண்டும் அவ்வளவே!

— வித்வான், வி. துரைசாமி.



# குழந்தைக் கவிஞர்கள்
## கவியரங்கம்

**பன்னிரண்டு கவிஞர் தரும்**
**பாடல் சுவையில் களித்திடவே**
**சின்ன சின்ன சிட்டுகளே**
**திரண்டு வருவீர் மகிழ்வுடனே.**

## கதிரவன்

-: அழகனார் :-

காலம் தன்னை அளந்திடும்
கதிரோன் வருகை தருகிறான்;
நீல வானின் அடியிலே
நீந்தி மேலே வருகிறான்!

இருளை ஓட்டி ஒளியினை
எங்கும் தந்து வருகிறான்;
பெருகும் இனிய ஒளியிலே
பூத்த மலராய் விரிகிறான்!

தங்கக் கதிரை விரித்தவன்
தகத கத்து வருகிறான்;
எங்கும் ஒளியை வீசியே
உலகைக் காண வருகிறான்!

பார்க்கும் கண்கள் கூசிட
பளப ளப்பாய் வருகிறான்;
வார்த்த வெள்ளித் தகடுபோல்
வையம் வாழ வருகிறான்!

## அம்புலியைப் பார்!

∴ ஆதி சீனிவாசன் ∴

அப்பா 'நிலவைப்' பாரென்பார்
அம்மா 'அம்புலி' பாரென்பார்
தப்பு என்றே தாத்தாவும்
'சந்திரன்' மேலே பாரென்பார்!

இத்தனை பேரும் ஏ! நிலவே
யார்தான் உனக்கு இட்டனரோ?
அத்தான் உன்னை அன்போடு
அழைக்கும் பேரும் வேறுண்டோ!

சூரியன் போல வானத்திலே
தொங்கிக் கொண்டு இருக்கின்றாய்!
சூரியன் போலச் சுடுவதில்லை
சுகமாய் இருக்கும் உன்னொளியே!

இரவில் எட்டிப் பார்க்கின்றாய்!
எங்கே போனாய் பகலெல்லாம்?
தெருவில் திரியும் வெண்ணிலவே
திருடன் பயமே கிடையாதோ?

## அன்பு என்றால் என்ன?

'மேரியண்ணா'

அன்பு கொள்ள வேண்டும் — அதில்
இன்பம் உண்டு நாளும்;
துன்பம் செய்த லின்றி – உலகத்
தொண்ட ராக வேண்டும்!

புத்தர், இயேசு, காந்தி — இவர்
கண்டு சொன்ன உண்மை;
உத்த மராய் வாழ — அன்பு
உடைய ராதல் வேண்டும்!

அன்பு என்ப தென்ன — அதை,
அடைவ தெங்கன் என்றால்,
ஒன்று சொல்வேன் கேட்பீர் — அந்த
உண்மை வழி ஏற்பீர்!

ஈதல் அன்பு ஆகும் — பிறர்
இடர்கள் நீக்கல் அன்பே;
சாதல் இல்லை அன்பில் — ஒரு
சாட்சி தானே நேரு!

## மூக்குக் கண்ணாடி.

வே. ஐயாசாமி

வட்ட வட்டக் கண்ணாடி
வண்ண வண்ணக் கண்ணாடி.
முட்டை போலக் கண்களைப்
பெரிதாய் காட்டும் கண்ணாடி!

தாத்தா மூக்கு மேலேதான்
தாவி நிற்கும் கண்ணாடி
வாழ்த்து கூறும் பெரியவர்
வளர்ச்சி காட்டும் கண்ணாடி!

தாத்தா கண்ணில் மாட்டினால்
தடையில் லாமல் படிக்கிறார்!
எனது கண்ணில் மாட்டினால்
ஏனோ எழுத்து தெரியலை!





# மழையே வருவாய்!

மு. எ. நம்பெருமாள்.

மழையே நீயும் வருவாயே
மக்களுக் கின்பம் தருவாயே
தழைகள் செழித்திட வருவாயே
தருமம் நிலைத்திடச் செய்வாயே.

குடிக்கும் தண்ணீர் ஆவாயே
குளிக்கும் தண்ணீ ரும்நீயே
துடிக்கும் மீன்கள் துள்ளிவரத்
தோன்றும் நீர்நிலை யும்நீயே.

சிற்றில் சிதைத்திட வருவாயே
சிறுவர் குதித்திடப் பெய்வாயே
பற்றிய காகிதப் படகுவிடப்
பாய்ந்தே யோடி வருவாயே.

பஞ்சமும் பசியும் பறந்திடவே
பாரினில் செல்வம் கொழித்திடவே
நெஞ்சம் மகிழ்ச்சி கொண்டிடவே
நிதமும் அழகாய்ப் பெய்வாயே!

# என் கவிதை!

புவனை கலைச் செழியன்

1. படிக்கப் படிக்க இனித்திடுது!
பாடப் பாடச் சுவைதருது
துடிக்கத் துடிக்கச் செய்திடுது!
துடிப்பும் சற்றுப் பெருகிடுது!

2. ஓடும் நீர்போல் ஓடிடுது!
ஒழுங்காய் ஓடி நின்றிடுது!
சாடிச் சாடிக் குதித்திடுது!
தத்தித் தத்தித் தவழ்ந்திடுது!

3. வார்த்தையில் கோவை பளிச்சிடுது!
வண்ணக் கலவை சேர்த்திடுது!
பார்த்ததை மனதில் பதித்திடுது!
பழகிய மயில்போல் நடமிடுது!

4. அருமைக் கவிதை இதுவன்றோ?
அழகிய கவிதை இதுவன்றோ?
பெருமைக் குரியோர் இவ்விதமே
புகன்றிடக் கவிதைகள் இயற்றிடுவேன்!

# நானோர் பூக்காரன்

தமிழ்ச் செழியன்

ஐயா நானோர் பூக்காரன்
அழகிற் கரசி மணவாளன்
பெய்யாப் பனியின் குளிரெல்லாம்
பெய்யக் கொடுக்கும் கைகாரன்.

மல்லிப் பூவை விரிக்கின்றேன்
மனத்துக் குள்ளே சிரிக்கின்றீர்
சொல்லிப் போடு விலையொன்று
சுற்றிச் சுற்றி வருகின்றீர்.

கட்டுக் கதம்பம் விற்கிறவன்
கல்லாச் சிறுவன் என்றொருசொல்
கொட்டிப் போகும் பெரியவரே
கொஞ்சம் நின்று செவிசாய்ப்பீர்.

கட்டிப் போடும் கதம்பமிதன்
கதையைக் கொஞ்சம் கேட்டறிவீர்
பட்டு ரோஜா மலருண்டு
பச்சை இலையும் இதிலுண்டு.

உழைப்போர் வாழ்வில் சிலபேர்கள்
உண்போர் உலகில் பலபேர்கள்
உழைப்போர் எல்லாம் ரோஜாப்பூ
உண்போர் மணமில் இலையாவார்.

கல்லாச் சிறுவன் தானய்யா
கற்றோர் அறிய மறந்துவிட்ட
பொல்லா உண்மை அதற்கொருமெய்ப்
பொருளாய் வந்தோன் நானய்யா.

# ஒரு கணம் பொறுத்திடுக

நாகமுத்தையா

ஆசை மிக்க ஓர்தொண்டன்
அல்லும் பகலும் ஆண்டவனைப்
பாச மோடு தொழுதுவந்தான்
பகவான் வரவைக் கண்டிடவே!

ஒருநாள் அவன்முன் ஆண்டவனும்
அழகாய்க் காட்சி அளித்தாரே!
'கூறாய் உன்றன் விருப்பத்தைக்
கொடுப்பேன் இக்கணம்,' என்றாரே!

'கோடி வருடம் தங்கட்கோர்
கணமே ஆகும் என்பார்கள்
கூடிச் சொல்லும் வார்த்தைகளில்
குற்றம் உளதோ?' எனக்கேட்டான்

'குற்றம் துளியும் கிடையாது
கோடி வருடம் என்மட்டில்
ஒற்றைக் கணமே ஆகு'மென
உரைத்து நின்றார் ஆண்டவனும்!

'கோடி ரூபாய் தங்கட்கோர்
பைசா வுக்கே ஒப்பென்று
கூடிச் சொல்வார் வார்த்தைகளில்
குற்றம் உளதோ?' எனக்கேட்டான்.

'குற்றம் துளியும் கிடையாது.
கோடி ரூபாய் என்மட்டில்
ஒற்றைப் பைசா தா'னென்றே
உரைத்து நின்றார் ஆண்டவனும்!





'அன்பின் உருவே, ஆண்டவனே
அடியேன் மகிழ ஓர்பைசா
என்பால் தருதல் வேண்டு'மென
இறைஞ்சி நின்ருன் அத்தொண்டன்!

'நிச்சயம் தருவேன்' எனச்சொல்லி
நிபந்தனை ஒன்று போட்டாரே!
'அச்சிறு பைசா அடைவதற்கே
ஆகும் ஓர்கணம்' என்ருரே!

ஓர்கணம் என்ருல் வருடங்கள்
ஒற்றைக் கோடி ஆகுமெனத்
தெரிந்து கொண்ட அத்தொண்டன்
தேம்பித் தேம்பி அழுதானே!

# மறைந்த விதை

[ந. செல்லப்பன்]

பச்சைக் கிளியொன்று வந்ததடா — ஆலம்
பழத்தைச் சுவைத்தது தின்றதடா
மிச்சத்தைத் தரையில் எறிந்ததடா — அங்கு
விதைகள் சிதறிக் கிடந்ததடா.

மழைத்துளி பூமியில் விழுந்ததடா — உள்ளே
மண்ணில் விதைகள் மறைந்ததடா.
தழைத்திடும் செடியங்கு நின்றதடா — நிழல்
தந்திடும் மரமாய் வளர்ந்ததடா.

சின்னஞ் சிறுவிதை உள்ளிருந்து — நிழல்
செய்யும் பெருமரம் வந்ததடா
சின்னஞ் சிறுபிள்ளை. உன்னிடமும் — பயன்
செய்யும் பெருந்திறன் உள்ளதடா.

# சர்க்கஸ் கோமாளி

— எ. ந. கணபதி

கையைக் காலை ஆட்டிடுவான்
கழுத்தை லேசாய்ச் சாய்த்திடுவான்
பையப் பைய நடந்திடுவான்
பல்டி அடித்தே நின்றிடுவான்

ஒட்டுப் போட்டுத் தைத்ததொரு
உடையை அணிந்தே வந்திடுவான்
பட்டுப் பட்டென மற்றவரை
மட்டை ஒன்ருல் அடித்திடுவான்

தொப்பி தன்னைக் கழற்றிடுவான்
தூர எறிந்தே நகைத்திடுவான்!
குப்புறத் தரையில் படுத்திடுவான்
குட்டிக் கரணம் போட்டிடுவான்!

பல்லைப் பல்லைக் காட்டிடுவான்;
பாட்டுக் கூடப் பாடிடுவான்!
எல்லா மக்களும் நகைத்திடவே
இன்னும் பலப்பல செய்திடுவான்!

# சீறவும் தெரியும்

பூவண்ணன்

"நிலமே உன்னிடம் நிறைந்த குணங்கள்
பலவே! நீதான் பண்பின் உறைவிடம்.
சலசல வென்றே சடுதியில் ஓடும்
வளமிகு ஆறுவுன் வண்ண மேனியை
அறுத்துச் செல்லும், ஆயினும் அதனைப்
பொறுத்துக் கொள்வாய்; வருத்தம் கொள்ளாய்.
பருத்தவுன் உடலில் பதிந்து வாழும்
பெருத்த மரங்கள் பிழைத்தல் வேண்டி,
வேரால் துளைக்கும்; விளையும் துன்பம்.
சீருய்; திட்டாய்; சிறுமதி கொள்ளாய்!
தாயைக் குழந்தை கடித்தால், தாயும்
பேயாய் மாறிப் பிள்ளையை அடிக்குமோ?
இரும்பால் உனது இதயந் தன்னை
வருந்தக் குத்துவர் வையக மக்கள்
அருந்த நீரை அளிப்பாய்; அன்றிப்
பொருந்தாச் செய்கை புரிந்ததும் உண்டோ?
ஏரைக் கொண்டு சீருடல் தன்னைக்
கீறுவர் மக்கள்; கிளறுவர் பின்னும்.
அதையும் பொறுக்கும் ஆற்றல் பெற்ருய்
விதையை ஒன்று நூருய்ப் பெருக்குவாய்.
பொறுமை மலையின் பொன்ருச் சிகரமே,
சிறிதும் சீறத் தெரியா நிலமே"
எனவே நிலத்தை யாவரும் புகழக்
கணமே நிலந்தான் சீறி, நெளிந்தது.
மாடிகள் சரிந்து மண்மே டாயின;
காடுகள் அழிந்தன; கழனிகள் பிறழ்ந்தன;
ஆடவர், பெண்டிர், அருமைக் குழந்தைகள்
வீடுகள் இடிய, வீழ்ந்தனர், மாய்ந்தனர்.
மாடுகள் பசுக்கள் மற்றுள உயிர்கள்
மேடுக ளோடு மேடுகள் ஆயின.
எங்கும் அழுகை! எங்கும் அவலம்!
எங்கும் பிணங்கள்! எங்கும் கோரம்!
பொறுமை நிலமே, ஒருகணம் சீறப்
பூகம் பந்தான் சோகந் தந்தது.
குணங்கள் பெற்ருேர் கோபம் கொள்வது
கணமே ஆயினும் கஷ்டம் பெரிதே!
"பொறுமைக் கடலே, பூமித் தாயே;
அருமை மக்களை அலறவைத் தாயே!
போதும் தாயே, வேதனை போதும்;
போதும் தாயே, சோதனை போதும்;
சீறும் தொழிலிலும் சிறந்தனை நீயே!
ஆறுக, தாயே! அடைந்திடு அமைதி!
ஆற்றல் தன்னை அறிந்தோம் தாயே,
சீற்றம் வேண்டாம். சீக்கிரம் நீக்கு!
அடைக்கலம் நாங்கள், அவனித் தாயே!
அன்பாய் முன்போல் காப்பாய் நீயே!"
என்று வேண்டினர், யாவரும் ஒன்ருய்.
நன்று புரியும் நானிலம் சிரித்து,
சீறுதல் ஒழிந்தது; ஆறுதல் கொண்டது!
மாறுதல் கண்டு மகிழ்ந்தனர் மக்கள்!





# முருகனும் மயிலும்

திருச்சி பாரதன்

கயிலை மலையின் மீதொரு நாள்
    கடுங் குளிரிலே
கணப தியாம் பிள்ளை யாரும்
    துள்ளி ஆடினார்!
வயிறு குலுங்க ஆட்டம் ஆடி
    நடுந டுங்கவே
வந்த குளிரைப் போக்கி டவே
    ஆட்டம் ஆடினார்!

அந்த வேளை கந்த வேலும்
    ஓடியே வந்து
"அன்பு அண்ணா ஆசை அண்ணா
    அழகுத் தம்பியின்
சொந்த வேலை ஒன்றி ருக்குது!
    சற்று கேளுமே!
சோகம் தீர்த்து உதவி செய்து
    பின்பு ஆடுமே!"

என்ற உடனே பிள்ளை யாரும்
    ஆட்டம் நிறுத்தினார்!
இளைய வரின் பேச்சைக் கேட்க
    அருகினில் வந்தார்!
"உன்ற னுக்கு வந்த சோகம்
    உரைத்தி டுவாயே!
ஒருநொ டியில் தீர்த்து வைப்பேன்
    உற்றது யாது?"

என்று கேட்ட பிள்ளை யாரின்
    கால்கள் பற்றியே
இன்பத் தாலே தங்க வேலன்
    முகம் மலர்ந்தனன்!
"நன்று அண்ணா சொல்லு கின்றேன்
    நலிவு போக்குவீர்!
நான்தி னமும் உலகம் பலவும்
    சுற்றிப் பார்க்கவே

அழகு மிக்க துணைவன் ஒருவன்
    தேர்ந்தெ டுப்பீரே!
அதிக தூரம் நடப்ப தாலே
    கால்கள் வலிக்குது!
பிழைகள் அறியா நீங்கள் இன்று
    பிரிய நண்பனை
பொறுக்கித் தருதல் வேண்டும் அண்ணா
    பெரிதும் அவசரம்!

கந்தன் சொன்ன உடனே அண்ணா
    கணபதி யாரும்
களிற்றுக் குரலில் கூச்சல் போட்டார்
    கயிலை அதிர்ந்தது!
விந்தை! சிறிது நேரந் தன்னில்
    வெற்று இடத்திலே
விதம் பலவாம் மிருகம் பறவை
    வந்து கூடின!

காளை மாடு எதிரே வந்து
    கனைத்து நின்றது!
"கண்டால் அப்பா வருத்தங் கொள்வார்
    கடுகிப் போய்விடு!"
வேலை அதிகம் என்று மழுப்பி
    காளை விரைந்தது!
வேக முடனே சிங்கம் அருகே
    ஓடி வந்தது!

"அன்னை ஏறி அமரும் உன்னை
    நானும் விரும்பவோ?
அந்தோ பாவம்! விலகிப் போவாய்!"
    அடுத்த கணத்தினில்
கன்னங் கரிய நிறத்தில் சிறிய
    காகம் வந்தது!
"கண்டால் சனீசு வரனின் கோபம்
    கனலாய் மாறுமே!"

என்று சொல்லி கந்தன் காகம்
    தன்னை அனுப்பினான்!
எதிரே கருடன் நிற்கக் கண்டான்
    இனிது குலவியே
"எந்தன் மாமா கண்ணன் உன்னில்
    ஆசை கொண்டவர்!
எனவே அன்புக் கருட னாரே
    அகன்று செல்லுவீர்!"

இனிய குரலில் பேசும் குயிலும்
    பறந்து வந்தது!
"இதனை நானே விரும்ப மாட்டேன்
    என்றான் வேலவன்!
புனித மான நன்றிக் குணத்தைப்
    பெற்ற பைரவர்
பிரிய மில்லை என்ற பதிலால்
    பிரிந்து சென்றனர்!

ஆடி ஆடி அசைந்து வந்த
    அழகு மயில்தனை
ஆசை யுடனே வேலன் தாவி
    அணைத்துக் கொண்டனன்!
"ஓடிச் செல்ல மயிலின் உதவி
    ஒன்று போதுமே!
உலகில் எனக்கு வேறு துணையில்
    விருப்பம் இல்லையே!"

என்று சொன்ன கந்தன் பேச்சை
    இதயம் மகிழ்ச்சியால்
ஏற்றுக் கொண்டார் பிள்ளை யாரும்
    இரண்டு கணத்தினில்
நின்ற மயிலின் பாதத் தடியில்
    நீண்ட நாகமும்
நேராய் வந்தே கடிக்கத் துணிந்தே
    நேரம் பார்த்ததே!

கண்டான் வேலன் கோபங் கொண்டான்
    கரத்தின் வேலினால்
கண்டம் இரண்டு துண்டாய் ஆக்க
    கருத்து கொண்டனன்!



"கொண்ட கோபம் பொறுப்பாய் தம்பி
கொடுமை செய்வதோ?
குழந்தை உள்ளம் பெற்ற நாமும்
குருதி காண்பதோ?

பொறுமை யாலே பாம்பு மயிலை
கடிக்கத் துணிந்தது!
புதிய பாடம் அதற்கு நாமே
புகட்டல் நேர்மையாம்!

நீராசை கொண்டு மயிலின் அடியில்
நின்று எந்நாளும்
நிலவும் உலகில் வாழ்வோர் தமக்கு
நீதி சொல்லணும்!"

பிள்ளை யாரின் சொல்லைக் கேட்டு
பிழை பொறுத்தனன்
பெருமைக் குரிய பார்வ தியின்
அருமைப் புதல்வனும்!

துள்ளி மயிலின் மீதில் அமர்ந்தே
தூரம் பறந்தனன்!
துரோகப் பாம்பும் நெஞ்சம் வருந்தி
துடித்து நின்றது!

தம்பி போன பாதை பார்த்த
பின்னர் பிள்ளையார்
தனக்கும் உதவிக் காக மிருகம்
ஒன்றை விரும்பினர்!

எம்பிக் குதித்து மூஞ்சூ றவரின்
எதிரே நின்றது!

இரண்டு சொட்டு விழியில் கண்ணீர்
ஏந்தி நின்றது!

"அழகு இல்லா என்னை விரும்ப
ஆட்கள் இல்லையே!
ஆத லாலே பிள்ளை யாரே
அடைந்தேன் தொல்லையே!

உலகில் வாழ்ந்தும் பயனே இல்லை
உள்ளம் வாடிடும்
உணர்ச்சி அறிந்து எனக்கு நீங்கள்
உதவ இயலுமோ?

பானை வயிற்றுப் பிள்ளை யாரும்
இதனைக் கேட்டனர்
பரிதா பத்தால் மனம் இளகி
பரிவாய்க் கூறினர்:

'யானை முகத்தான் எனக்கு நீதான்
யாவும் மூஞ்சூறே!
ஏனோ அழுகை துடைத்துக் கொள்வாய்
இன்பம் இனிமேலே!'

எளிய மிருகம் மூஞ்சூ றின்மேல்
ஏறி அமர்ந்தனர்!
எட்டி எட்டி மெதுவாய்க் கிளம்பி
எங்கும் சுற்றினர்!

எளிமை இரக்கம் உதவும் தன்மை
எல்லாம் பிள்ளையார்
இடத்தில் இருந்து நாமே கற்று
இனிதே விளங்கணும்!



கிரேக்க தேசத்திலிருந்த ஸாந்தஸ் என்ற பணக்காரன் ஒருவனுக்கு ஈசப் என்ற ஓர் அடிமை இருந்தான். ஒருநாள் ஸாந்தஸ், உலகத்திலேயே உயர்தரமான சாப்பாடு தயாரிக்கும்படிச் சொன்னான். ஈசப், நாக்குகளை பலவகைகளாகத் தயாரித்து, எஜமானனுக்கு விருந்திட்டான். ஸாந்தஸ் அந்தச் சாப்பாட்டைக் குறை கூறியபொழுது ஈசப் சொன்னான்.

"பிரபு! நாக்கைவிட மேலான பொருள் எதுவுமே இல்லை. நாக்குத்தான் அறிவுக்கும், தத்துவத்திற்கும் வழியாக இருக்கிறது. உலகத்தின் நன்மையும், மேதையும் அதன் மூலமாகத்தானே உருவாகின்றன?"

மறுநாள் ஸாந்தஸ், உலகத்திலேயே மோசமான சாப்பாட்டைத் தயாரிக்கும்படி உத்திரவிட்டான். ஈசப் அன்றைக்கும் நாக்கையேதான் சமைத்திருந்தான். ஸாந்தஸுக்கு ஒன்றுமேபுரியவில்லை. நாக்கே, ஒருநாளைக்கு உயர்ந்த ஆகாரமாகவும், மறுநாள் மோசமான ஆகாரமாகவும் ஆவதன் காரணம் அவனுக்கு விளங்கவில்லை. ஈசப் பதிலளித்தான்:

"நாக்கைவிட மோசமானது எதுதான் இருக்கமுடியும்? நாக்கு சம்பந்தப்படாத தீமை உலகத்தில் ஏதாவது இருக்கிறதா? சாம்ராஜ்யங்களுக்கும், நாடு நகரங்களுக்கும், சொந்த நட்பிற்கும் நாக்கே அழிவை அளிக்கிறது. பித்தலாட்டம், பொறுமை, அநியாயம், துரோகம் ஆகிய எல்லாவற்றுக்கும் நாக்குத்தான் காரணம்.

—ஜிப்ஸ்.

# வாழ்வு அளித்தவர்

★

"அஸ்வத்தாமன்"

பாத்திரங்கள் :

வள்ளி, வேலன், டாக்டர், கருப்பையா

காட்சி 1.

[வேலனின் குடிசை. நள்ளிரவு. எங்கும் அமைதி. வேலனின் குழந்தை உயிருக்கு மன்ருடிக்கொண்டிருக்கிறது. அவன் மனைவி வள்ளி அலங்கோலமாக அலறிக்கொண்டிருக்கிருள். வேலன் குழந்தையையே வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருக்கிருன். மங்கலான நாடா விளக்கொளி அவன் கண்ணத்தில் வழியும் கண்ணீரை மின்னச் செய்கிறது.]

வள்ளி : (ஆத்திரத்துடன்) அடபாவி !......கல்லுப் பிள்ளையாராட்டம் உக்காந்திருக்கியே......உம் மனசும் கல்லா ?

வேலன் : என்னே என்னதான் செய்யச் சொல்லுறே வள்ளி?

வ : புள்ளையைப் பார்த்தா புரியிலயா ?

வே: தெரியுது.

வ : தெரிஞ்சும் என் ஒரே புள்ளே சாகட்டுமின்னு குந்திக்கிட்டு இருக்கியா ?

வே: ஐயோ வள்ளி — நீயுமா என் நிலமை புரியாமே இப்படிச் சொல்லுறே?

வ : ஆமா என் புள்ளே செத்தா என்ன புழைச்சா என்ன ? ஐயோ ! மூச்சுவிட முடியாமே தவிக்குதே ! அடராசா.

வே: வள்ளி ! அழுவாதே ..... எல்லாம் ......

வ : சரியாப்போயிடும்...... உம். நீ ஒரு ஆம்பிள்ளையா. எப்படியாச்சும் பெத்த பிள்ளையே காப்பாத்தனும்கிற நினைப்பு இல்லேயே உனக்கு.

வே: இல்லாமலா இருக்கு. பாசம் இருக்கு. பரிவு இருக்கு. ஆசையும் இருக்கு. அதோடே வேதனையும் இருக்கு ஆனல் ஒன்னு இல்லயே ............ பணம்......

வ : பணம்.

வே: ஆமாம் ! நான் ஏழை — ஒருகாசு இல்லே. ஏழை வயித்திலே பொறந்த இந்த சிசுவுக்கு இப்படியாப்பட்ட வியாதியை ஆண்டவன் கொடுத்திட்டான். இதுக்கு வைத்தியம் பார்க்க பெரிய டாக்டரு வேணும். அதுக்குப் பணம் வேணும். நம்மைப்போல ஏழைங்களைக் கவனிக்கிற வைத்தியரு கைவிட்டுட்டார். அப்புறம்

வ : சாகட்டுமிங்கிறியா ?......அட என் மவனே நீ கொஞ்சம் கொஞ்சமா சாவுறதே இந்தப் பாவி கண்ணுலே பாத்துக்கிட்டே இருக்கிறேனே... அட கடவுளே ! (விம்முகிருள்)

[ஆவேசமாக எழுந்திருக்கிருன் வேலன், அவசரமாக ஏதோ எடுத்துக்கொண்டு கிளம்புகிருன்.]

வே: வள்ளி! இரு வர்ரேன். நான் வர்ரவரைக்கு புள்ளேக்கு உயிர் போயிடாமே பாத்துக்க.

வ : இந்தா! எங்கே போரே ?

வே: போரப்பவே கூப்பிடாதே. பேசாம இரு. ஒரு மணியிலே வந்துடரேன். (ஓடுகிருன்)

[கருப்பையா அங்குவருகிருர் வள்ளி அழுவதையும், பிள்ளே கண் சொருகிப் படுத்திருப்பதையும் பார்க்கிருர்.]

வ : பெரியய்யா ! பாருங்கய்யா எம்புள்ளேயே. பொழைக்குமா ...?

கருப்பையா : எங்கெம்மா வேலன்?

வ ; எங்கே தொலேஞ்சுதோ. இந்த நடுராத்திரிலே ஓடியிருக்கு. அதுக்கு என்ன கவலே?

கரு: சே !....அப்படிச் சொல்லாதே வள்ளி.

வ : எவ்வளவு சொல்லியும் கேக்கிலயே.

கரு: என்ன சொன்னே?

வ : யாராச்சும் ஒரு டாக்டரை கூட்டியா....கூட்டியின்னு தலேயிலே அடிச்சுக்கிட்டேன்.

கரு: கையிலே காசு இல்லாதவன் அவன் என்ன செய்வான் ? காசு இல்லாமே எந்த டாக்டர் வருவாரு.

வ : அப்படின்ஞ என் பிள்ளே சாகவேண்டியது தானு?

கரு: வள்ளி ! நம்ம ஊருக்கு புதுசா ஒரு டாக்டரு வந்திருக்காரு. அவர் ஏழைங்களுக்கு ரொம்ப

உதவி செய்யிறாராம். வா.. கடைசியா அவரு கிட்டே போயி கேக்கலாம்.

வ: அப்படியா! வாங்கய்ய அந்த புண்ணியவான் கிட்டே போகலாம்.
[குழந்தையுடன் இருவரும் புறப்படுகிறார்கள்.]

காட்சி 2

(விடிவெள்ளி முளைக்கும் நேரம். வேலனின் குடிசையில் அமைதி குடி கொண்டிருக்கிறது. அவசரமாக வேலன் ஓடி வருகிறான். கதவைத் தட்டுகிறான்.)

வேலன்: வள்ளி! வள்ளி! கதவைத் திற... (அவசரமாக) ஏய் என்ன செய்யிறே கதவைத் திற.

வள்ளி: (கதவைத் திறந்து) எங்கே போயிட்டு வந்து இப்படிக் குதிக்கிறே?

வே: போன இடத்தை அப்புறம் சொல்லுறேன். புறப்படு உடனே.

வ: எங்கே போகனும்.

வே: என் புள்ளே இனிமே பொழைச்சுக்கும். டாக்டரு வீட்டுக்குப் போகனும். புள்ளேயைத் தூக்கிக்கிட்டுக் கிளம்பு.

வ: போவுது இப்பவாவது கரிசனம் பொறந்ததே.

வே: என் புள்ளேமேலே எனக்கில்லாத அன்பா!

வ: வெளியே சொல்லாதே.

வே: வெறும் பேச்சு இல்லே. இப்போ எந்த டாக்டருக்கும் எவ்வள்வு வேணுமானாலும் பணம் கொடுக்கலாம்.

வ: மூளை பிறண்டு போச்சா?

வே: அப்புறம் அப்புறம் பேசிக்கலாம். உடனே புறப்படு

வ: பொழுது விடியட்டும் போயிக்கலாம்?

வே: (கோபமாக) என்ன சொன்னே?

வ: அடே அதட்டாதே! பேசாமே கெட.

வே: தொட்டியிலே புள்ளே உயிருக்கு ஊசலாடுது. நீ என்கிட்டே வழக்கு ஆடுறே.

வ: இப்பத்தான் டாக்டருக்கிட்டே போயி மருந்து வாங்கிக் கொடுத்து... அந்தப் புண்ணியவான் கைபட்டதும் புள்ளேக்குத் தேவலாம். துங்குற புள்ளே முழிச்சுக்கப் போகுது. பேசாம சுருண்டுகெட.

வே: (ஆச்சரியத்துடன்) என்ன சொன்னே! டாக்டர் கிட்டே போனியா?

வ: ஆமா! நம்ம பெரியய்யா கருப்பையா தான் அழைச்சுக்கிட்டுப் போனாரு.

வே: பணம்.

வ: ஏழைங்களுக்கு இரங்கிற ஒரு நல்ல மனுசரு பெரிய டாக்டராயிருக்காரு. அவருதான் தெய்வம். என்ன அன்பா பேசினாரு! ஏன் அப்பவே கொண்டாந்து காட்டலேன்னு கோவிச்சுக்கிட்டாரு. ஒரு காசு வேணான்னுட்டாரு... அவரைப் போல ஒருத்த ரெண்டு பேரு இருக்கிறதுனாலேதான் உலகம் இன்னும் அழியலே.

வே: அப்படியா! அந்த கருணாமூர்த்தி யார் வள்ளி?

வ: நம்ம ஊருக்குப் புதிசா வந்திருக்காரே பெரிய டாக்டர் அவருதான்.

வே: (அதிர்ச்சியுடன்) யாரு? மேலத் தெரு கோடி பெரிய பங்களாவிலே இருக்காரே...

வ: ஆமா! அவரே தான்... பேரு...

வே: ராமசாமி!

வ: உம்.. உம்...

வே: (திகைத்து) அவரா என் புள்ளேக்கு உயிர் கொடுத்தாரு... அந்த உத்தமர்...

வ: என்ன திகைக்கிறே! புள்ளேக்கு சரியாகிற வரை நித்தம் வந்து மருந்து வாங்கிக்கிட்டுப் போகச் சொன்னாரு.

வே: அந்த நல்ல மனுசர்..

வ: சரி சரி. ராத்திரி பூரா முழிச்சது என் கண்ணைச் சுழட்டுது... நான் சித்தே கண்ணை மூடுரேன். புள்ளேயைப் பாத்துக்க.

[வள்ளி படுத்து உறங்குகிறாள். வேலன் குழந்தையை வெறித்தபடி பார்த்துக் கொண்டு இருக்கிறான். அவன் சிந்தனை தடுமாறுகிறது. வெளியே உதயசூரியன் ஒளி பரவுகிறது. ஓர் முடிவிற்கு வந்தவன் போல குழந்தையை முத்தமிட்டுவிட்டு வெளியே செல்கிறான்.]

காட்சி 4

[டாக்டர் வீட்டில் டாக்டர் அமர்ந்து பத்திரிகை புரட்டிக்கொண்டு இருக்கிறார். வேலன் தயங்கியபடி அவர் முன் வந்து நிற்கிறான்.]

வேலன்: (நடுங்கும் குரலில்) சாமி...! சாமி...!

டாக்டர்: யாரப்பா?

வே : கும்பிடுறேனுங்க.

டாக்: என்னப்பா வேண்டும்?

வே : ஐயா ! நான் ஒரு ஏழை.

டாக்: பார்த்தாலே தெரியுதே,

வே : நான் பெரும் பாவிங்க.

டாக்: ஏனப்பா அப்படிச் சொல்லுகிறாய் ?

வே : ஒரே ஒரு புள்ளேங்க எனக்கு. அதைக் காப்பாத்த முடியாமே அது உசிரு போயிடும் போல இருந்தது,

டாக்: என்னப்பா குழந்தைக்கு? போய்க் கொண்டு வா பார்க்கலாம்.

வே : பெரிய பணக்காரங்க வீட்டிலே வர்ர வியாதி. இந்த ஏழைக் குடிசைக்குள்ளே நுழைஞ்சுடுச்சுங்க. பெத்த பாசம்... அதைப் பெத்தவ துடிச்ச துடிப்பு எல்லாமா சேர்ந்து என்னைப் பெரும் குற்றவாளியா ஆக்கிடுச்சு எசமான்.

டாக்: குற்றவாளியா ...! என்ன அப்படித் தவறு செய்தாய்?

வே : எசமான் உங்க வீட்டிலே பணம் திருட்டுப் போயிட்டா என்ன செய்வீங்க சாமி?

டாக்: போலீசுக்கு புகார் செய்வேன்.

வே : போலிசு என்ன செய்யும் சாமி.

டாக்: திருடனைத் தேடுவார்கள். அகப்பட்டால் திருட்டுப் போன பொருளை மீட்டு அவனைத் தண்டிப்பார்கள்.

வே : அப்படியென்றால் போலீசைக் கூப்பிடுங்க எசமான்.

டாக்: ஏனப்பா நீ சுயபுத்தியுடன்தானே இருக்கிறாய்?

வே : சுயபுத்தியுடன் மட்டுமில்லிங்க. நல்ல புத்தியுடனேயும்தான் இருக்கேன்

டாக்: உளருகிறாயே...

வே : உண்மை எசமான் நான் உங்க வீட்டிலே ராத்திரி புகுந்து உங்க மேசையிலே இருந்த நூறு ரூபாயைத் திருடிக்கிட்டுப் போயிட்டேனுங்க. வேணுமானா நீங்க வச்ச ரூபா இருக்கான்னு போய் பாருங்க.

டாக்: (ஆச்சரியத்துடன்) என்ன! திருடியவன் தானே வந்து ஒப்புக்கொள்வதா? ஆச்சரியமாக இருக்கிறதே!

வே : என் புள்ளேயைக் காப்பாத்த பணம் வேணுமின்னு முழியா முழிச்சேன் கடைசியிலே பணம் கொடுத்தாத்தான் வருவேன்னு டாக்டர்கள் சொல்லுவாங்கன்னு நினைச்சு ஒரு டாக்டர் வீட்டிலேயே திருட முடிவு செஞ்சு உங்க வீட்டிலேயே திருடினேன். ஆனால் நீங்க.... நீங்க... ஏழையின்னுகூடப் பார்க்காமெ என் புள்ளேயை காப்பாத்திட்டீங்க.

டாக்: உன் பிள்ளையா?

வே : நேற்று ராத்திரி ஒரு கைப் புள்ளேயைத் தூக்கிட்டு ஒரு பெரியவரும் வள்ளின்னு ஒரு பொம்பளேயும் வந்தாங்களே அதுதான் சாமி......இந்தாங்க நான் எடுத்த நூறு ரூபாய். (அவர் முன் வைக்கிறான்.)

ஐயா! இப்படி இருக்கிறவங்க இல்லாதவங்களுக்கு உதவி செஞ்சா இல்லாதவங்க எப்படி குத்தம் செய்யுவாங்க. எல்லாம் கிடைச்சா அப்புறம் குறை ஏது குற்றம் ஏதுங்க?

டாக்: (ரூபாயை எடுத்து எண்ணிப் பார்த்துவிட்டு) உன் பெயர் என்ன.

வே : என் பெயர் வேலனுங்க. போலீஸ்காரங்க வந்து என்னை அழைச்சுக்கிட்டு போறவரை ஓடமாட்டேனுங்க.

டாக் : சரி! இந்தா. இந்த பத்து ரூபாயை எடுத்துக் கொண்டுபோய் குழந்தைக்கு நல்ல ஆகாரமாய் வாங்கிக் கொடு.

வே : (நாத்தழக்க) என்ன......எசமான்! நீங்க... ஒரு தெய்வங்க......இந்த கள்ளனுக்கும் கருணை காட்டுரீங்களே.

டாக் : கருணை இல்லே வேலா! இருப்பவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுத்தா எல்லோரும் இன்புற்றிருக்கலாம் என்று நீதானே சொன்னே. இருப்பவன் கொடுக்கிறேன் இல்லாதவன் பெற்றுக்கொள். என் தோட்டத்திற்கு ஒரு ஆள் வேண்டும் நாளை முதல் அந்த வேலையைச்செய் சம்பளம் தருகிறேன்.

வே : ஐயா! நீங்கதான் கடவுள்! எனக்கு வாழ்வளித்த தெய்வம் நீங்கள்.

(வீழ்ந்து வணங்குகிறான். டாக்டர் புன்முறுவல் செய்கிறார்.)

# புனையா ஓவியம்

★

திருவேங்கிமலை நடராஜன், பி. ஏ.

1. மன்னர் ராஜேந்திரன்.
2. அமைச்சர்.
3. வீரன்.
4. ராணி வீரமாதேவி.
5. பொன்னி.

## காட்சி—1.

[முன்னிரவு நேரம்...தொலைவில் ஆலயமணியின் ஓசையும், நாதஸ்வர இசையும் காற்றோடு கலந்து வருகிறது.]

ராஜே: தேவி!.........வீரமாதேவி!

தேவி: ம்...பிரபு...

ரா: இதென்ன... ஒரே மோனத்தில் ஆழ்ந்து விட்டாயே...எந்தக் கோட்டையைப் பிடிக்கப்போகிறாய்?

தே: தங்களின் இதயக் கோட்டையையே பெற்றுள்ள எனக்கு வேறு எந்தக்கோட்டையும் வேண்டாம்...

ரா: இந்த நேரத்தில் இங்கு அப்படி எதை ரசித்துக் கொண்டிருக்கிறாய்? நீலவானத்தில் சுடர்விடும் தாரகைகளை எண்ணுகிறாயா?

தே: தாரகைகளை எண்ணிவிடலாம்... ஆனால் தங்கள் வெற்றிச் சின்னங்களை எண்ணமுடியாது பிரபு....

ரா: ஒய்யாரமாக பவனி வரும் அந்த முழு நிலவைப் பார்த்தாயா?

தே: தங்களின் வெற்றிச் சிறப்பால் அமைந்த கங்கை கொண்ட சோழபுரம், நிலவின் தண்ணென்ற ஒளியில் பிரகாசிப்பதைப் பார்த்தீர்களா பிரபு....!

ரா: நானும்தான் பார்க்கிறேன்... நீ சொல்வதுபோல் அப்படியொன்றும் பிரமாதமாகத் தோன்றவில்லையே...

தே: இதை நான் நம்பவேண்டுமாக்கும்? உங்களுக்கு இருக்கும் கலாரசனையில் நூறில் ஒருபங்கு கூட எனக்கு கிடையாதே...கங்கைகொண்ட சோழேஸ்வரனின் கோயில் தெரிகிறது பாருங்கள்.... அந்தக் கோபுரம் வானையளந்து நிற்கிறது...இதோ நாம் இருக்கும் மாடமாளிகைகள்.... வண்ண வண்ண சோலைகள்; அழகிய மண்டபங்கள் அத்தனையும் தங்கள் எண்ணக்கருவில் உதித்ததுதானே பிரபு—

ரா: தஞ்சையைவிடவா அழகாக இருக்கிறது என்று சொல்கிறாய்?

தே: தாங்கள் இருக்கும் இடம் எனக்கு சொர்க்கமல்லவா பிரபு?

ரா: இந்நகரை மேலும் அழகுபடுத்தலாம் என்று கருதுகிறேன் தேவி....உன் அபிப்பிராயம் என்ன?

தே: என் உள்ளத்தில் நிறைந்து கிடக்கும் ஆசையும் அதுதான் பிரபு....

ரா: சொல் தேவி...சொல்...என் நெஞ்சில் நீக்கமற நிறைந்துவிட்ட உன் ஆசையை உடனே நிறைவேற்றுவேன்....

தே: புகழ்மணக்கும் தஞ்சையில் வாழ்ந்தவள் நான்.... இன்னொரு தஞ்சையை இங்கு நாம் உருவாக்க வேண்டும்...நகரின் வாயிலிலே கம்பீரமான உயர்ந்த தோரணவாயில் அமைக்க வேண்டும். இந்நகருக்கு வருவோர் எவராயினும் அவர்களை "வருக, வருக" என்று அழைப்பதுபோல் அவை கம்பீரமாக விளங்கவேண்டும். நகரில் எங்கு பார்த்தாலும், கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் சிற்பங்களும், சித்திரங்களும் அணி செய்யவேண்டும். நகரின் நடுவே, தாமரை மலரின் மொக்குப்போல காட்சி தரும் கங்கைகொண்ட சோழேஸ்வரர் கோயிலின் கோபுரங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். உயர்ந்த கோபுரத்தின் மீது ஏற்றி வைக்கும் தீபத்தின் ஒளி இந்த எழில் நகரத்தின் ஏற்றத்தைப் பிரதிபலிக்கவேண்டும்.

ரா: [மெல்ல நகைத்து] அவ்வளவு தானா? இன்னும் ஏதேனும் சொல்லப் போகிறாயா தேவி...

தே: பிரபு...மாலை மயங்குகின்ற நேரத்தில் இந்நகரின் எழில் தோற்றம் அனைவரையும் கவர வேண்டும். பாவலர்கள் புகழ் கவிதைகள் பாடவேண்டும். தங்களின் அரும்பெரும் வெற்றியின் சின்னமல்லவா இந்நகரம்!...யுகம் யுகாந்திரமாக இந்த சின்னங்கள் நிலைத்து நின்று உலகுக்கு, என் பிரபுவின் வீரத்தை பறைசாற்ற வேண்டும்...

ரா: [அன்புடன்] தேவி...இப்புதிய தலைநகருக்கு புதுப்பொலிவு தரும் காரியத்திற்கு இன்றே கட்டளையிடுகிறேன்...மயன் அமைத்த நகரைப்போன்று இந்நகரை மாற்றுகிறேன்....உன் எண்ணத்தை கோடிட்டு காட்டிவிட்டாய்... அதற்கு வண்ணம் பூசுவது என் பொறுப்பு.. சரிதானே... [கைகளைத் தட்டி] யார் அங்கே? அமைச்சரை வரச்சொல்... கலைப்பணி தொடங்க இன்றே கட்டளை இடுகிறேன்.

## காட்சி—2

(மாறுவேடத்தில் இராஜேந்திரரும் மந்திரியும் குதிரையின்மேல் வருகிருர்கள். நகர எல்லையில் ஓர் மரத்தடி.)

ரா: அமைச்சரே. அதோ அந்த மரத்தின் நிழலில் பெரியவர் ஒருவர். சோர்ந்து கிடக்கிருரே...போய் பார்ப்போம்....வாருங்கள்.

(முதியவர் அருகில் இறங்கி நின்று)

அமை; பெரியவரே...ஐயா...!

ரா: கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாருங்கள்... ஆம் மிகவும் சோர்வாக இருக்கிருர்.

(முதியவர் மயக்கத்தைத் தெளிவிக்கிருர்கள்)

முதி: ரொம்ப நன்றி ஐயா...உங்களுக்கு....ம்....

ரா: எழுந்திருக்க வேண்டாம்.......அப்படியே சற்று களைப்பாறுங்கள்....

அமை; இதோ இந்த நீரைப் பருகுங்கள்...சற்று தெம்பு ஏற்படும்...

ரா: இவ்வளவு முதுமைப்பருவமடைந்த தாங்கள் தனியே வெளியே வரலாமா? உங்களைப் பார்த்தா.....ல் நெடுந்தொலையிலிருந்து வந்தவர்போல் தோன்றுகின்றதே...

முதி: ஆம்....ஐயா...தஞ்சையிலிருந்து வருகிறேன்...

ரா: இல்லை தஞ்சையிலிருந்து இங்கு வரவேண்டிய காரணம் என்னவென்று யோசிக்கிறேன்.

முதி: என்ன செய்வது கால வெள்ளத்தால் நாம் அடிக்கப்பட்டு செல்லும்போது எத்தனையோ மாறுதல்கள்...அதற்கெல்லாம் காரண காரியங்களை ஆராய்ந்துகொண்டிருக்க முடிகிறதா? என்ன அப்படி உற்றுப் பார்க்கிறீர்கள்...உடம்பு எல்லாம் சுருக்கம் விழுந்த இந்த கிழவன் ஏதோ பிதற்றுகிருனே என்று பார்க்கிறீர்களா? தளர்ந்த இந்த கரங்கள் ஒரு காலத்தில் தஞ்சை பெரிய கோவிலின் கோபுரத்தை நிர்மானிப்பதில் பங்கு பெற்றவை.

ரா: ஆச்சரியமாயிருக்கிறதே....!

முதி. மன்னர்பிரான் ராஜராஜர்கூட ஒரு நாள் என் திறமையைக் கண்டு அப்படித்தான் ஆச்சரியப் பட்டார்...ம்...அவரைப்போன்று கலைஞர்களை ஆதரிக்கும் மன்னரை இந்தக் கண்கள் எப்போது பார்க்கப்போகிறது...?

ரா: ஏன் அவர் மைந்தன் ராஜேந்திர சோழர் கலைஞர்களுக்கு ஆதரவு தருவதில்லையா என்ன?

முதி: அப்படியிருந்தால் தஞ்சையிலிருந்து நான் ஏன் இந்த தல்லாத வயதில் வரவேண்டும். இந்த வாழ்வை பொன்னி நதியின் கரையிலேயே கழித்திருப்பேனே.

ரா: தங்களைப்போன்ற கலைஞர்களுக்கு எல்லா ஊரும் சொந்த ஊரைப்போன்றதல்லவா? ஏன் கங்கை கொண்ட சோழபுரத்தைதான் மன்னர் மன்னர் அழகுபடுத்தும் பனியில் ஈடுபட்டிருக்கிருரே...நீங்களும் பங்கெடுத்துக்கொள்ளக்கூடாதா?

முதி: அதற்காகத்தான் இத்தனை தூரம் கடந்து வந்திருக்கிறேன்...

ரா: பின் ஏன் சலிப்பாக பேசுகிறீர்கள்...?

முதி; என்ன இருந்தாலும் தஞ்சையாகுமா இந்த ஊர்?

ரா: இந்த அழகு நகரையாப் பழிக்கிறீர்கள்...?

முதி: (நகைத்து) மன்னவனுக்கு அழகு கற்பனை.... மனப்பக்குவம் அடைந்தவனுக்கு அழகுணர்ச்சி நிதானத்தோடு ஒட்டியது.


# திருச்சிராப்பள்ளி மார்க்கெட் கமிட்டி, திருச்சி.

போன் நெ. 767

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

செயங்கொண்டம், அரியலூர், கரூர், ஆலங்குடி, ஆண்டிமடம், செந்துரை, மணப்பாரை, துறையூர்.

இங்கு

விற்போருக்கு:

1. கமிஷன், தரகு, மகிமை, எடைகூலி முதலிய செலவு கிடையாது.
2. சுத்தமான எடை.
3. உடனடியாகப் பணம். 4. அதிகப்பட்சவிலை.

வாங்குவோருக்கு:

1. ஒரே இடத்தில் அதிகப்படியான சேமிப்பு வசதி.
2. தேர்ந்தெடுத்து வாங்கும் வாய்ப்பு.
3. தரகர்களின் உதவி தேவையில்லை.
4. இருப்பு, தேவை இவற்றை நிர்ணயித்தல்.

5. அன்ருட விலை நிலவரங்கள், சாக்கு வசதி, தகராறுகளை தீர்த்துக்கொள்ளும் வசதி.

இன்னும் ஏராளம் நன்மைகள் உண்டு.

நிலக்கடலை, புகையிலை, மிளகாய், எள், கரும்பு, வெல்லம், வெல்லச் சர்க்கரை, பழுப்பு சர்க்கரை, நெல், முந்திரி இவைகளை விற்று லாபமடையலாம்.

B. வெங்கடாஜலம் பிள்ளை, B.A., B.L., தலைவர்.

அமை : தஞ்சையைப்போல் இந்நகரையும் மன்னர் மாற்றப்போகிருர் ...

முதி : நீங்கள் தஞ்சைக்கு வந்திருந்தால்தான் தஞ்சையின் எழில் தெரியும்..... வற்ருத ஆறும், வளம் கொழிக்கும்வயல்களும்தஞ்சையைப்புகழ் மணக்கச் செய்கிறது வான் பொய்த்தாலும்தான் பொய்யாத காவிரி பரந்து பாய்ந்து ஒடுகிறது. கலையின் நிலைக்காட்டும் கோயில்கள்...அப்பப்பா தஞ்சையெங்கே...இந்த நகரம் எங்கே...?

அமை : இன்னும் ஆறு மாதத்தில் தஞ்சையைவிட எழில் மிக்க நகரம் இங்கு உருவாகிவிடும் என்ற விஷயம் உமக்குத் தெரியாதுபோலும்...

முதி : கலைகளின் பிறப்பிடம் தஞ்சை, வழிவழியாக சோழ மன்னர்கள் வளர்த்த பாரம்பரியம் பட்டுப் போகாமல் இன்றும் ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. இங்கு கலை இரவல் சரக்காகப் பயன்படுகிறது...

அமை : மன்னர் ராஜேந்திரரின் வெற்றிச்சின்னமாக எழுந்தது இந்நகரம் ஞாபகமிருக்கட்டும்.

முதி : வெற்றி......வெற்றி ....மறுக்கவில்லை ஐயா...பல நூறு வீரர்களை அழித்து வெற்றிபெற்றதை மறக்கவில்லை ... நான் ... அதற்காக ஒரு ஞாபகச்சின்னம் இந்நகரம், அதுவும் தெரியும்.

அமை : வீரத்தைப் பழிக்கிருயா பெரியவரே...?

முதி : இல்லையப்பா அழித்தல் மட்டும்தான் வீரம் என்று நீ நினைக்கிருய்...தெருவிலே மதம்கொண்ட யானை கட்டவிழ்த்து ஓடுகிறது... இன்னும் சற்று நேரம் தப்பினுல் பச்சிளம் குழந்தை ஒன்று யானையின் வலிய பாதங்களில் நசுங்கிவிடும்...அந்த நேரத்தில் ஒருவன் யானையை அடக்கி குழந்தையைக் காப்பாற்றுகிருன்....இதுவும் வீரம்தானப்பா...ஒரு உண்மையை மறந்துவிடாதீர்கள்... அசலைப்போல நகலை மாற்ற முடியாது...ம்...சரி... யாரோ நீங்கள்...உங்களோடு என்னன்னவோ பேசிக்கொண்டிருந்து விட்டேன்...... நான் வர்ரேம்பா...

(தாமதம்)

ரா : அமைச்சரே எவ்வளவு கசப்பான உண்மை, அசலைப்போல் நகல் மாற முடியாது தஞ்சை— அசல்—. கங்கை கொண்ட சோழபுரம் நகல்..

அமை : வயதானவர்கள் ஏதேதோ சொல்வார்கள். அதையெல்லாம் நினைத்துக்கொண்டிருக்காதீர்கள் பிரபு... வாருங்கள் போகலாம்...

ரா : இல்லை...அவர் பேசிய பேச்சில் ஏதோ இனம் தெரியாத உண்மை ஒன்று பளிச்சிடுகிறது.

அமை : பிரபு இந்த திண்ணையில் சற்று உட்கார்ந்து களைப்பாறிச் செல்வோம்...


தந்தி : " ANUMETAL " போன் நெ. 403

**அனுப்பர்பாளையம் பித்தளைப் பாத்திரத் தொழிலாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம் லிமிடெட், No. Ind. 291,**

**அனுப்பர்பாளையம் P.O., திருப்பூர்-3.**

*சொந்த தயாரிப்பு ! நீடித்த உழைப்பு !! மலிவான விலை !!!*

எங்களால் தயாரிக்கப்படும் பித்தளை மற்றும் தாமிர வெங்கலப் பாத்திரங்கள் தென்னிந்தியாவில் பிரசித்திபெற்றது.

தமிழ் நாட்டிலுள்ள பாத்திர உற்பத்தி கூட்டுறவு ஸ்தாபனங்களில் இதுவே மிகப் பெரியது.

சென்னை அரசாங்க கைத்தொழில் வர்த்தக டைரக்டருடைய கைத்தொழில் கூட்டுறவு பிரிவின் நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள கைத்தொழில் கூட்டுறவு சங்கம்.

தேவைக்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள். உங்கள் திருப்தியே எங்கள் நோக்கம்.

D. கோவிந்தன், காரியதரிசி, தொழில் கூட்டுறவு அதிகாரி,

A. V. பழனிச்சாமி கவுண்டர், தலைவர்.


## காட்சி 3

(ஓர் சிறிய வீட்டின் திண்ணை. ராஜேந்திரரும் அமைச்சரும் அங்குவந்து அமர்கிருர்கள் வீட்டினுள்.)

வீர : அடடா...இதுவே உன்னுடை பெரிய தொல்லையாப் போச்சு......எப்போ பார்த்தாலும் ஒரே தொன தொனப்பு....ஆமா பொன்னினுட்டு உனக்கு யாரு பேரு வச்சா...?

பொ : அதுக்கென்ன இப்ப வந்ததாம்....?

வீர : இல்லே பொன்னி நதி எவ்வளவு சாந்தமா அமைதியா ஓடுது...அந்தப் பேரை உனக்கு வச்சுருக்காங்களே....

பொ : ஆடி மாசத்திலே பொன்னி நதியை ஐயா பார்த்ததில்லேபோலிருக்கு...சரிசரி பேச்சை மாத்தாதிங்க எனக்கு பொன் சங்கு மாலை வாங்கித் தந்துதான் ஆகணும்....

வீர : சரி இந்த புலி நகச் சங்கிலியை போட்டுக்க...

பொ : வேண்டாம் வேண்டாம் நீங்களே போட்டுக்கங்க...அது அது இருக்கிற இடத்திலே இருந்தாதான்...எதுக்கும் மதிப்பு...உங்க அகன்ற மார்பிலே இருந்தாதான் புலி நகச் சங்கிலிக்கு மதிப்பு.

போட்டோ
சாமான்களுக்கும்
கலை நுட்பம் துலங்கும்
போட்டோ சம்பந்தமான
எல்லா வேலைகளுக்கும்
நம்பிக்கையான
ஊழியர்கள்
டீலக்ஸ்
போட்டோ சர்வீஸ்
கரூர்.

வீர : பொருளுக்கு மதிப்பு இல்லே பிள்ளே இடத்துக்குத்தான் மதிப்பு...

பொ : நீங்க சொல்றதும் வாஸ்தவந்தான். இந்த ஊரையே எடுத்துக்குங்க....என்னமா கிடந்த இடம்?....மன்னர் மனம் வைச்சார்......சொர்க்க பூமியா !மாறப்போவுது... இப்போ.

வீர : ஆனாலும் தஞ்சையின் சிறப்பு இந்த ஊருக்கு வருமா....அசலைப்போல நகல் எப்போவும் மாற முடியாது அதெமட்டும் தெரிஞ்சிக்க....

(வெளியே)

ரா : கேட்டீரா அவர்கள் பேச்சை....

அமை ; கேட்டேன் பிரபு...நாள் ஆக ஆக இந்த நகரின் பொலிவில் எல்லோரும் தங்களை மறந்துவிடுவார்கள் பாருங்களேன்.

ரா : நேரமாகிவிட்டது...அரண்மனை திரும்புவோம்....

காட்சி 4

(அரண்மனையின் அந்தப்புரம். ராஜேந்திரர் சிந்தனையுடன் வருகிருர். வீரமதேவி வரவேற்கிருள்)

தேவி : ஏன் இந்த வாட்டம்..எப்போதும் நகர் உலா சென்ருல் மகிழ்வோடு திரும்பும் தாங்கள் இன்றைக்கு ஏன் சோர்வாக இருக்கிறீர்கள்,

ரா ; ஒன்றுமில்லை தேவி...

தே: என்னிடம் சொல்லக் கூடாத ரகசியமா! சரி பரவாயில்லை. ஊரெல்லாம் உறங்கும் இந்த இரவு நேரத்திலும் காற்ருேடு காற்ருக எங்கிருந்தோ மிதந்து வரும் அந்த இசையைக் கேளுங்கள், தங்கள் உள்ளத்திற்கு இதமாக இருக்கும்...

ரா: தேவி...

தே: பிரபு....சொல்லுங்கள் பிரபு...

ரா: நகல் அசலாக முடியுமா ?

தே: [மெல்ல சிரித்து] அதெப்படி முடியும்? உலகத்தில் அசல் ஒன்றுதான் இருக்க முடியும்.... நகலும் அசலானல், அசலுக்கு மதிப்பேது...வாடைக் காற்றும் தென்றலாக மாறினல் தென்றலுக்கு மதிப்பேது பிரபு...

ரா: இன்றைய நகர் உலா பல உண்மைகளை உணர்த்தி விட்டது. இத்தனை நாள் என் வீரத்தை எண்ணி எண்ணி நானே மகிழ்ந்துவந்தேன்....

தே: அதிலென்ன சந்தேகம். சிங்கத்தின் ஆற்றலில் சிங்கத்துக்கே சந்தேகமா?

ரா: என்னுடைய மூதாதையர்கள் வாழ்ந்த வீர வாழ்க்கையை ஒப்பு நோக்கும்போது என் வீரம் ஒருசிறு துளிதான். அந்த வெற்றியைப் பறைசாற்றுவதற்காக ஒரு நகரையே நிர்மாணிப்பதா... பரம்பரை பரம்பரையாக கலைகளின் உறைவிடமாக விளங்கி வரும் தஞ்சையைப் போல் இந்த நகரத்தையும் மாற்றுவதால் தஞ்சையின் புகழ் இந்நகருக்கு வந்துவிடுமா...?

தே: பிரபு...

ரா: சற்று முன் தான் சொன்ருயே...அசல் வேறு, நகல் வேறு என்று....இப்பூவுலகில் ஒரு நிலவுதான் இருக்க முடியும்.... கேவலம் என் வெற்றிக்காக இந்நகரை அழகு படுத்தி எனக்கு விளம்பரம் தேடப் போவதில்லை. நகரை அழகுபடுத்தும் வேலையை நானே நிறுத்திவிடப் போகிறேன்...

தே: பிரபு....

ரா: நம் எண்ணத்தில் உதித்தவை உருப்பெருமல் புனையா ஓவியம்போல் முடங்கப் போகிறது மனதை தேற்றிக்கொள் தேவி....

தே: பிரபு





## ★ நாவுக்கரசு ★

அப்பர் என்றே அருள்ஞான
அடியார் போற்றும் சிவமே நீ
செப்பும் பாடல் கேட்டன்று
சிவனும் நாவுக் கரசென்றார்
ஒப்பு உயர்வு இல்லா நின்
உண்மை அன்பு கண்டன்று
அப்பில் அமர்ந்த சிவனும்
அமுது படைக்க விரைந்திட்டார்.

நாவுக்கரசர் என்றே திரு
நாமம் வாழ தமிழ் மொழியின்
பாவுக்கரசே எம் துயரைப்
பகிர்ந்து கொள்ள ஒருருவாய்
மேவியிங்கே அவதரித்து
விலகியேகி மீண்டிங்கே
தாவுங் கன்றைப்போல் வந்த
தமிழே அருளே தவம் நீயே

# தங்கத் தமிழகத்தில் எங்கள் மாவட்டம்.



உ

முருகன் துணை

## தலைவர்
## திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களின்
## தலைமைக் கவிதைப்பொழிவு

★

நான்மறைக் குட்பொருள் ஆவன செந்தமிழ் நாவலவர்
தேன்மழை என்னப் பொழிகவி யாடித் திளைத்திடுவ
யான்மனத் துள்ளே புதைத்தின்ப மாரஅங் கேறுவன
வான்மலி தேவர் சிகாமணி வேலன் மலரடியே.

பூவைத் தந்தார் பொருள்தந்தார்
பொன்னைத் தந்தார் பால்வழங்கும்
ஆவைத் தந்தார் என்னுமிந்த
அறங்கள் தாழச் சங்கநூற்
பாவைத் தந்தான் அவர்புகழைப்
பயிலத் தந்தான் எளியேற்கு
நாவைத் தந்தான் தமிழ்ச்சாமி
நாதன் அடியைச் சிரங்கொண்டேன்.

முந்நூல்கள் பலவறிந்து பன்னூல்கள் தான்தந்து
முதல்வன் வாழும்
அந்நூறு நூறுதலம் சென்றுகவி பாடியுல
கார்ந்த மக்கள்
முன்னூறு புகழுடையோன் ஆனாலும் சிரபுரமே
மொழியும் பேரில்
முன்னூரும் மாவித்வான் மீனாட்சி சுந்தரன்சீர்
மொழிந்து வாழ்வேன்.

எண்ணத்தில் கற்பனையாம் வண்ணத்தில் இணையில்லீர்
பண்ணத்தும் பாவல்லீர் பாங்குடைய சொல்வல்லீர்
அண்ணுற்ற இவ்வரங்கில் அனைத்திந்தி யத்தமிழர்
திண்ணத்தை மறவாதீர் செப்புகின்றேன்
என்வணக்கம்.

உள்ளுணர்வு முந்தவரும் உயர்கவியைச் செவிவழியே
வெள்ளமெனத் தேக்கிநுகர் வித்தகத்தில் மிகவல்லீர்
துள்ளுதமிழ்க் காதல்மிகத் துன்னுகின்ற பேரவையீர்
கள்ளமிலா நுங்களையான் கைகூப்பிவணங்குகின்றேன்.

உலகமெலாம் கடவுளெனும் தோட்டக் காரன்
உரமிட்டு நீர்பாய்ச்சி வளர்க்கும் தோட்டம்
இலகுமத னிடையேபல் பகுதி யுண்டால்;
இனிமைதவழ் பாத்திகளாப் படுத்தங் கங்கே
பலபலவாம் மலர்ச்செடியும் கனிகள் ஈயும்
பாங்குடைய வளமரமும் பிறவும் உண்டு
நிலவுமந்தப் பாத்திகளுள் சிறிய பாத்தி
நீர்பாய்ச்ச எளிதாக நிமிரும் அன்றே.

பாரதநா டெனும்பாத்தி பெரிய பாத்தி
பாருக்குக் கூரையெனும் இமயம் ஓர்பால்
நீரியல்பு மகிமைபெறும் குமரி ஓர்பால்
நிலவெல்லை யாகவரும் பெரிய பாத்தி
தேருமிதற் குள்ளேநம் தமிழ்நா டென்னும்
திருவளரும் மலர்ப்பாத்தி மணக்கும் பாத்தி
ஊருடைய எழில்மக்கள் உளத்தின் ஏற்றம்
உலவாத அன்பென்னும் வளஞ்சேர் பாத்தி..

உடம்புக்குள் உறுப்புப்போல் உள்ள நாட்டில்
உறுப்புக்குள் சிற்றுறுப்பு வளர்ந்தொன் ருகித்
திடம்புக்க செயல்போலத் தமிழ்சேர் நாட்டில்
செயலுக்கும் ஆட்சிக்கும் வசதி யாக
இடம்புக்க மாவட்டப் பிரிவு வைத்தார்
இவற்றிடையே எழில்வகையும் தனியே உண்டு
படம்புக்குக் கவியாகக் காட்டல் போலப்
பதினொருவர் அவற்றின்இயல் பாடு வாரே.

தமிழி னேடிணை ந் திருந்தவர் தனிமொழி சார்ந்தே
அமைத ருஞ்சிறு நாடெனக் கேரளம் அலர
நமையும்ங் கேரளர் தமையுநட் டிருந்துயர் நலமார்
குமரி மாவட்டப் பெருமையைக் கூறுபாக் கேட்போம்.

ஒருநல் வாழ்வினில் இறைவனை உன்னிஅன் புளத்திற்
பெருக யாவரும் போற்றுறத் தமிழ்நயம் பேணி
மருவு நாவலர் ரஸிகர்கள் வாழ்தரு வட்டம்
திருநெல் வேலியின் பெருமையைச் செப்புவார் ஒருவர்.

மதுர மாகிய தமிழ்நனி வளரநற் சான்றோர்
முதிரு மன்பினிற் கூடினர் சங்கத்தை முந்நாள்
எதிரொன் றின்றியே வளர்தரச் செய்யும்அவ் வியல்பார்
மதுரை மாவட்ட மாட்சியை வகுப்பது கேட்போம்.

யாது நாட்டினும் வீரமும் காதலும் இணையத்
தீது நாட்டுரு துயரறம் நாட்டிய செல்வச்
சேது நாட்டினை ராமநா தபுரமாச் செப்பி
ஒது மாவட்டச் சீரினைப் பாடுவார் ஒருவர்.

கருத்தி லேயுயர் வுரையினில் விழுப்பம்செய் கையினில்
திருத்தம் மேவிய சோழர்கள் உறந்தையைச் சேரும்
உருத்தி கழ்ந்திடு மண்டிலம் காவிரி யுடைய
திருச்சி மாவட்ட மேன்மையைச் செப்புவார் ஒருவர்.

செஞ்செ வேகலைப் பிழம்பெனத் தெய்வத்தின் கீர்த்தி
மிஞ்சு மாறுள கோயில்கள் எங்கணும் வீறி
மஞ்சு சேர்தரு சோலையும் வயல்களும் மலியும்
தஞ்சை மாவட்டக் கீர்த்தியைச் சாற்றுவார் ஒருவர்.

சீலம் பெருகும் நல்லோர்கள்
சேரும் உழைப்பில் வல்லோர்கள்
ஞாலம் புகழும் மதிபெற்றோர்
நல்ல கவியின் வளமுற்றோர்
கோலும் சுவைசேர் மாங்கனியைக்
குவல யத்திற் சார்விப்போர்
சேலம் மாவட் டப்புகழைச்
செப்பி நிற்பார் ஒருகவிஞர்.

பாவை வளர்க்கும் சபையுண்டு
பஞ்சு நூலாம் தொழிலுண்டு
சேவை வளர்க்கும் திறமுண்டு
சேர்வோர் நிலைக்கும் அறமுண்டு
சாவை அஞ்சா உரமுண்டு
தழைக்கும் பொருளும் உண்டென்னும்
கோவை மாவட்டத் தின்பெருமை
கூற வருவார் ஒருகவிஞர்.

திடஆல் தழைத்த அதுபோலச்
சேரும் சால்பு வழிவழியா
மடவார் கற்பு வழிவழியா
வளரும் பகுதி பாலாறும்
இடமார் பெண்ணை நதியும்பாய்
எழிலார் வளத்த ஊர்படைத்த
வடவார்க் காட்டின் வளம்யாவும்
வழங்கு வாரிங் கொரு கவிஞர்.

பொன்னூர் மருமப் பெருமானைப்
புகழ்ந்து ஞான விளக்கேற்றி
முந்நாள் தமிழாம் அமுதமழை
மூவர் பொழிந்த திருநாடு
நன்னு வலனும் சுந்தரனும்
நாவுக்கரச னும் பிறந்த
தென்னார்க் காட்டு மாவட்டச்
சிறப்பை மொழிவார் ஒருகவிஞர்.

சங்கற் பத்தில் திண்மையுளார்
சாரும் செயலில் உண்மையுளார்
துங்கத் தமிழ்தான் முன்போதத்
தொடர்ந்து திருமால் பின்போதத்
தங்கக் கவியைத் தந்தவர்கள்
சார்ந்த பெருமை மிகவுடைய
செங்கற் பட்டு மாவட்டத்
திருவைப் புகழ்வார் ஒருகவிஞர்.

இவ்வணம் கவிஞர் பல்லோர்
எழிலுறும் கவியைப் பாடச்
செவ்விய சுவையை நன்கு
செவிமடுத் துள்ளம் மாந்தித்
துவ்வுறு மமுதம் ஒப்போ
தூவென எண்ணும் வண்ணம்
அவ்வவர் கவியின் இன்பம்
அறிவுற உள்வீர் நீரே.

ஆதலின் கவிஞர் கட்கும்
அவையினில் தமிழின் வேட்கைக்
காதலார் பெரியோர் கட்கும்
இடையினிற் கல்லே போல
மீதுயர் வெற்று ரைகள்
விரித்தெளி யேனிங் குற்றுல்
தீதென அறிவேன்; இன்னோர்
செப்புவார் கவியை ஈங்கே.

★

தலைவர் :

*முக்கடலும் கூடும் குமரி முனைசாந்து*
*மிக்கபுகழ் நாஞ்சில் விளைந்த ஒருமுத்து*
*பக்கமிகப் பத்திரிகைப் பாங்கெல்லாம் பாவிரிக்கும்*
*அக்கரையார் அன்பர் தமிழழகர் பாவிரிப்பார்.*




## கவிஞர் தமிழழகன்

அவையுடையீர், சான்ற அறிவுடையீர், நல்ல
சுவையுடையீர், பண்ணின் சுகமுடையீர், மற்றும்

தலைமை எனஇங்கு தாமுற்ற நல்லீர்,
கலைமகளே வந்த கனிவென்னும் வான்பெரியீர்,
மாவட்டங் கட்கிதுவே மையவட்டம் என்பதனைப்
பாவட்ட வாணர்க்குப் பக்குவமாய்ச் சொல்வது
[போல்
வந்தநடு நாயகமே, வாய்த்தஇம்மா வட்டம்தான்
சொந்த மெனக்கொண்டு சொல்லும் தமிழ்க்கடலே,
கவியுடையோர் நீங்கள் கவிச்சரக்கைக் காட்டும்
செவியுடையோர் கேட்போம் சிறிதென்று சொன்ன
[தனால்
திட்டங்கள் போட்டுத் தெளிவாக வக்கணையாய்
வட்டங்கள் பற்றி வரிந்துகட்டிப் பாட்டெழுதி
மோனை எதுகை முறைபோலும் இவ்வரங்கில்
தானேவா சிக்கத் தயாரான மெய்ப்புலவீர்,
உங்கள் அனைவருக்கும் உற்றதொரு மெய்வணக்கம்
எங்கள் உரிமை எனஇயம்பி விட்டதன்பின்
கொண்ட தலைப்பாமென் குமரிமா வட்டத்தில்
கண்டவற்றை யெல்லாம் கவியாக்கி உங்கள்முன்
செப்புகிறேன் ; சற்றே செவிமடுத்துக் கேளுமையா !
'ஒப்புகிறோம்' என்ற உயிர்ப்பிருந்தால் போதுமையா !
இங்கே ஓர் சங்கதியை எடுத்துரைப்பேன் என்ன
[வெனில்,

அங்கே எனக்கென்று பாடவந்த மாக்குமரி
சொந்தமெனக் கன்று; சுருங்க உரைத்தால் நான்
வந்த கதை கேளும்; வளர்கதையும் கேளும்!
பிறந்ததுவோ நெல்லை நான் பெண்கொண்டதும்
[சென்னை!
மறந்துமந்த தாய்க்குமரி மாவட்டம் யானறியேன்!

என்றாலும் அந்த இளமைத் திருமண்ணை
நன்றாகப் பாடுமென்று நாட்டுவித்த ஆணையினால், —
உங்கள் திருமுன் உவந்திங்கு பாடுகிறேன்
எங்கேதான் போனாலும் எப்படித்தான் வாழ்ந்தாலும்
யாதுமூற்ற ஊரேயாம்; யாவரும் தாம் கேளிரென்று
ஓதும் தமிழ்க்குடியுற் றோரன்றோ நாமெல்லாம்!

ஆன படியால் அருட்குமரித் தாயகத்தை
நானுமிங்கு பாட நயந்தொப்பி வந்துவிட்டேன்
மன்னிக்க வேணுமெனை மாறாகச் சொல்லிவிட்டால்,
கன்னிக் கவிஞனென்று காட்டும் கருணையினால்!

அன்னை தமிழ்க்குமரி அன்று விரிந்திருந்தாள்;
என்னே கடல்கொள்ள இன்றோ சுருங்கிவிட்டாள்?
ஆனாலும் முன்னை அகலம் உரைப்பதற்கே
மாநாட் டளவிலொரு மாவட்டம் ஆகிவிட்டாள்!
அம்மாவட் டத்தின் அழகெல்லாம் சொல்வதெனில்
இம்மா நிலத்தில் இணையதற்கே இல்லை என்பேன்.

வழிதோறும் நன்செய்; வயல்தோறும் செந்நெல்
மொழி தோறும் எண்ணம்; முகிழ்தோறும் பண்பாடே!
காணுமிட மெல்லாம் கரையில்லாப் பூம் பொய்கை!
வேணுமிட மெல்லாம் விதம் விதமாய் வள்ளன்மை!
மண் வளமும் உண்டு; மன வளமும் உண்டங்கே!
கண் வளமும் உண்டு; கவிதைக்கும் கோயிலதே!

மற்றுமங்கே பொய்கை மணிவயலில் செவ்வாம்பல்
முற்றுமங்கே பூத்து முறுவலிக்கும் காட்சியதில்
'அள்ளல் பழனத் தரக்காம்பல்' என்னுதமிழ்த்
தொள்ளா யிரமூன்று தொன்னூல் உரைத்தபழம்
வெண்பா வரிகள் வியப்போம்; நினைவுவரும்!
கண்பார்த்துக் கொண்டிருக்கக் கற்பனையும்
[துள்ளிவரும்!

ஈங்கிப் படியிருக்க, எல்லைக் குமரிமுனைப்
பாங்கில் இருந்தபடிப் பார்ப்பதற்குச் செல்வோமேல்,
ஆச்சரியம் நம்மையெலாம் அன்பாய் வரவேற்கப்
பூச்சொரிய நீர்நுரைத்துப் பொங்குகடல் காத்திருக்கும்!

இந்து சமுத்திரமாம் என்னுமொரு தாயுள்ளம்
வந்து தவழுமிரு வார்கடலாம் மக்கள் தமை
அள்ளியணைக் கின்ற அமுதமணிக் காட்சியது!
துள்ளித் திரிந்துத் துடுக்கடங்கத் தாய் முகத்தைப்
பார்த்த வுடன்தழுவப் பாய்ந்தோடும் பிள்ளைகள்
[போல்
ஆர்த்தஅர பிக்கடலும் ஆழ்வங்க நீள்கடலும்
அன்னை சமுத்திரத்தின் ஆசைமடி மேல்புரளும்!
இன்னுமுண்டு சொல்ல அங்கே எத்தனையோ
[எத்தனையோ!

(வேறு)

காணுமிடம் எங்கும்அலை வீசும்;-அவை
கற்பனையைத் தூண்டி கவி பேசும்;-பெண்கள்
பூணுமெழில் முத்தைமணற்
பொன் கரையில் கூட்டி ஒளித் தூசும்-கண்கள் கூசும்!

மீனினங்கள் துள்ளி விளையாடும்;-அவை
மீதுமின்ன டித்தடித்துச் சாடும்;-உள்ளம்,
ஏனிதுபோல் முத்திரைப்பொன்
ஈங்கிருப்ப தென்ன? என்று நாடும்-விந்தை யோடும்!

வான் சொரிந்த தேன்மலர்கள் கூடி-மர
வங்கமென மாறியிசை பாடி-ஒளி
மீன் சொரியும் நீர்கிழிய
மெல்லியர் போல் நன்னடனம் ஆடிச்-செல்லும்
ஓடி!

நீர்ப்பரப்பின் மேற்பறந்து சென்றே-தலை
நீள்கயலைத் தாவிப்பற்றித் தின்றே-சிறகு
ஆர்ப்பரித்துக் கொண்டு விண்மேல்
அப்பொழுதே பாய்ந்து செலும் அன்றே-காகம்
நன்றே!

நண்டினம் நுரைப் பெருக்கால் சோரும்;-அவை
நாடியே தளர்ந்துகரை ஏறும்;-எனில்
விண்டெழுந்த வெண்டிரை
விரைந்ததனை நீரிழுக்கப் பாரும்-கடல்
ஓரம்!

(வேறு)

ஒன்றோ, இரண்டோ? ஒருகோடி இன்னுமுண்டு!
நின்ற கரையெல்லாம் நீள மணற்காடாம்!
மஞ்சட் பொடிபோல் மணியரிசி தன்னிறம் போல்
கொஞ்சுமணல் வண்ணங்கள் கூறும் தரத்தனவோ?

வர்ணக் கலவைஎன வான்திகழும் இந்திரனார்
சொர்ணக் கதம்பவில்லைச் சோடித்துக் கொண்டுவந்து
கட்டுக் கடங்காக் கடற்குக் கரையமைத்த
திட்டுப்போல் அவ்வளவு தெய்வீக மண்பரப்பு!

பார்த்திவற்றி லெல்லாம் பரவசமாய் நிற்குங்கால்
காத்திருந்த மாலை கனிவோடு வந்தணையும்!
அன்று முழுமதிக்கே ஆனதொரு நாளென்றால்
குன்று கடலெல்லாம் கொப்புளித்துப் பாலாகும்!

சோதிவெளி மேல்கடலில் சூரியனார் மூழ்குவதும்
ஆதிவெளிக் கீழ்கடல்மேல் அம்புலிதான் தோன்று
[வதும்
விந்தை ஒரேபொழுதில் விண்நிகழும் அற்புதமாம்!
சிந்தையிதை ஊன்றும் சிறுபொழுதில் மேல்கடலின்

ஆதவன்தான் மன்னுயிர்மேல் அன்புகொண்டு
[வெம்மையெலாம்
சீதளமாய் மாறச் சிறிதேநீ ராடிவிட்டுக்
கீழ்க்கடல்மேல் பின்னும் கிளம்பிவிட்டான்,
[முன்னிலவாய்!
வாழ்க அவனென்று வாழ்த்திடவும் நெஞ்சுதுள்ளும்!

விண்நின்ற சொர்க்கமெலாம் விம்மும் கடலலையில்
நண்ணி மிதந்துவந்து நம்கால் வருடிநிற்கும்.
ஆனதினால் அன்றோநம் அண்ணல்விவே கானந்தன்
தானுமிங்கே வந்துத் தவமிருந்தான், முன்னொருநாள்!

தீர்த்தமதில் ஆடித் திருக்கோவி லுள்நுழைய
பூத்த கருணைப் புதுமுகமாய் வாலையுமாய்
நின்றஅன்னை மெய்க்கோலம் நெஞ்செல்லாம்
[உள்நெகிழும்!
அன்றைக் குமரியவள்! ஆனாலென்? இன்றைக்கும்
குன்றாக் குமரியேதான்! கோளுலகை வான்வெளியை
ஒன்றேனும் தன்கருவில் உண்டாக்கித் தந்தவளே
அல்லளவள்; ஆயினுமே அன்னைதான் எவ்வுயிர்க்கும்!
வல்ல திருவருளை வாழ்வுக் கரணமைத்துக்
கன்னித் தமிழகத்தைக் காவல்செயும் பெண்தெய்வம்!
பன்னி குமரி பகவதி என்றெல்லாம்
அன்னவளை நாமும் அடிபரவி மீளுங்கால்
தன்னவளாய் ஆக்கத் தகுமுயற்சி தோற்றசிவன்
வாழும் திருக்கோயில் வானோங்கும் கோபுரங்கள்
சூழும் தலமாம் சுசீந்திரமும் வந்துவிடும்!
மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில்
ஊர்களிப் பாம்கடலின் உள்ளேயே நீச்சலிட
மாப்பிள்ளை யாய்த்தாணு மாலயனூர் நள்ளிரவில்
கூப்பிட்ட வாறே குமரிக் கெழுந்தருள்வார்.
பாதிவரை யும்வழுக்கம் பாறைஎனும் ஊர்வரையும்
ஆதிசிவன் வந்திடுவார். ஆனாலும் கோழியொன்று
போது விடிந்ததென்று பொற்குரலால் கூவிவிடும்!
சேதி தெரியாமல் செய்வதொன்றும் தோாமல்
முற்றுமிர வுக்குள் முடியாத தன்மணத்தைக்
குற்றமென் றன்னை குமரி விலக்கிடுவாள்!
அந்தோ சிவனாரும் அப்படியே ஏமாந்து
வந்தோம்-திரும்பினோம் வாருமென்றே ஊரோடும்
நாணுமா றேகோவில் நாடித் திரும்பிடுவார்
தாணுமா லையன் தலமகிமைச் சேதியிது!

காலை புலராமல் கட்டுரைத்த கோழியதன்
கோலஇரு கால்களுக்கும் கொண்டஇரு நற்றடம்தாம்
பார்க்குமா றேவழுக்கம் பாறையில்தான் இன்றைக்கும்
நீக்க மறஉண்டாம்; நேருங்கால் பார்த்திடுவீர்!
இன்னுமங்கே உள்ளனவாம் எத்தனையோ
[சொல்வதற்கு!
தொன்னூல் புகழான் தொல்காப் பியனை
அரங்கேற்றம் செய்வித்த ஆசான்தன் ஊரும்
மருங்கில்அதங் கோடென்று மாறுமல் உண்டங்கே!

சின்ன மழலைக்கும் சித்திரமாய்ப் பாடிவைத்த
அன்னை கிழவியாம் ஔவைக் கிழவிக்கும்
கோயில் விழாவெடுத்துக் கும்பிடுமாம் பூமியது!
தாயகத்தில் ஔவை தனிக்கோவில் இல்லைஎங்கும்!
இம்மண்ணில் மட்டும்தான் ஆன்றவளின்
[கோயிலுண்டு!
அம்மட்டும் இல்லை; அவள்பெயரைப் பெற்றெடுத்த
பிள்ளைக் கனிகட்கும் பேரிட் டழைப்பதுண்டு!

கொள்ளக் குறையாக் குலதனமாய் இவ்வாறு
நற்றமிழைப் பேணுகிற நல்லாரும் ஆங்குண்டு!
காவலர்கள் என்ன, கலைவாணர் என்னசொல்லின்
நாவலர்கள் என்ன, நயம்நயமாய்ப் பாடவல்ல
பாவலர்கள் என்ன பரிவாரம் அத்தனையும்
ஆவலொடும் பார்த்திடலாம் ஆங்காங்குக்
[கூட்டமதாய்!

சாணக் கியன்தந்த சாத்திரத்தைச் செய்யுளிலே
காணக் குவித்த கணபதிஆச் சாரியரும்
நூறாய் அவதானம் நுன்மதியால் செய்துதனிச்
சீராக வாழ்ந்திருந்த செய்குதம்பிப் பாவலரும்
கற்கண்டாய்ப் பாடிக் கனிந்த கவிமணியும்
போந்ததிரு நாடன்றோ, பொற்குமரி மாவட்டம்!

ஏந்தல் கலைவாணர் என்னெஸ் கிருஷ்ணனையும்
ஓராதார் உண்டோ, ஒருவர் தமிழகத்தில்?
பேராளன் அவனையும் பெற்றநிலம் இந்தநிலம்!

கம்பனையும் பாடிக் கவிஞனெங்கள் பாரதியின்
தெம்பினையும் பாடித் திறம்கொண்டு வாழுவதே
சிந்தனையாய்க் கொண்டதமிழ்ச் செம்மல்ஜீ
[வாவினையும்
வந்தனையாய்ப் பெற்றெடுத்து வாழ்ந்தநிலம்
[அந்தநிலம்!

வாழ்கின்ற ஞானியர்க்கும் வற்றாத மாவட்டம்!
நீள்கின்ற சித்தர் நெடிய பரம்பரையில்
கார்முகில் போலும் கருணைப் பெரும்சித்தன்
பீர்மகம்ம தென்னும் பெரியோன் அடங்கியுள்ள
தக்கலையும் மற்றும் தவஞானி யார்சமாதி
பக்கலிலே கொண்ட பழம்பெருமைக் கோட்டாறும்
சான்றுகளாய் இந்தச் சரித்திரத்தைக் கூறிநிற்கும்,
ஆன்றதிருச் சேவியர்க்கும் அன்றைமுகாம்
[நாஞ்சிலில்தான்

ஞானம் தமிழோடு நாளும் மணக்குமிங்குத்
தேனும் மணப்பதுண்டு, தெய்வீக மண்வளத்தால்!

காலாறு பாய்ந்துக் கரையா மணலாகப்
பாலாறும் சென்னையதன் பக்கத்தே ஓடுமெனில்
நெய்யாறும் இங்குண்டு; நேற்றிருந்த பஃறுளியும்
செய்யபழை யாறென்றே சொல்வதுண்டு,
இன்னுமிங்கு
சந்தமுற்ற பூம் பொதிகைச் சாரலிலே தான்பிறந்து
வந்தமற்றோர் ஆறே வழியும் குழித்துறையாம்!

ஆறெல்லா இவ்வா றதிகவளம் ஊட்டுங்கால்
சேறெல்லாம் நெல்லாய்ச் செழுங்கதிர்கள் ஊட்டும்!
வடக்குதமிழ் நாட்டிற்கு வாய்த்த தஞ்சையைப்போல்
கிடக்கும் தென்னாட்டிற்குக் கிட்டியதே நாஞ்சிலகம்!

வாழைபலா மாவென்று வாசமுள்ள முக்கனிகள்
தாழை நிலாப் பந்தரிலே தானாய் விருந்து வைக்கும்!
கீரித் தலைபோல் கிளர்நீண்ட நேந்திரங்காய்
மீறித்தின் னத்தான் மிகவேட்கை தூண்டிவிடும்!
தக்க பலாச் சுளைகள் தாம் பொறுக்கிக் காய்ச்சியதே
சக்கைப் பிரதமனாய்ச் சாறு பருகவரும்!

மண்ணின்வள மோடு மனவளமும் கூடியங்கே
கண்ணின் வளமாகக் காணுகிற மாவட்டம்
என்வட்டம் மட்டுமல்ல; எல்லார்க்கும் வட்டமன்றே!
பொன்வட்டம் மற்றும் புகழ்வட்டம் என்றெல்லாம்
நீண்ட அரங்கில் நிகழ்த்தினேன். கேட்டவரே,
வேண்டுகிறேன்: தாரும் விடை!

**தலைவர் :**

பிறந்தநிலம் வேருகப் பெற்றாலும், நாடறியச்
சிறந்தஅறம் செய்வதற்குத் தேடும்பெற்
றோர்சொல்லப்
பூமணக்கக் கொண்ட புதுக்குமரி யைப்போலப்,
பாமணக்கப் பாடப் பணிக்கக் குமரியைக்கொள்
பாவல்லான் தமிழழகன் பாடியதைக் கேட்டு
வந்தோம்
நாவல்ல பாட்டில் நயத் தமிழிற் காவியத்தில்
பூத்த அரக்காம்பற் பொற்பை விரித்துரைத்தார்
ஏத்துகின்ற காவடிச்சிந் தின்னிசையிற் பாட்டுரைத்
தார்.

இனிமேல்
வான்மணக்கும் நல்லொலியை எழுப்பும் மதித்
துறைவன்
தேன்மணக்க நெல்லைத் திருப்புகழைப் பாடுவார்.




## கவிஞர் "துறைவன்"

அருமைத் தமிழின் அதிசயத்தை யெல்லாம்
பெருமையோ டென்னிடத்தே பேசினான்—குருவாகி
நெல்லையிலே வைத்தென், நினைவினிலே
கோயில்கொளும்
நல்லோனை வாழ்த்திடுமென் நா!

வேறு

புவியரங்க நாதனெனப்
புகழணையில் கொலுவிருக்கும்
கவியரங்கத் தனித்தலைவன்
"கலைமகளின்" செவிலித்தாய்
நவையகன்ற பெருந்தமிழன்
நாவீறு நலங்கொண்டோன்
தவப்புதல்வன் சகந்நாதன்
தாளிணையைத் தொழுகின்றேன்

இறையனார் பரம்பரையில்
யாம்வந்தோம் எனமுழக்கம்
நிறைபுலத்துக் கவிஞர்களை
நேர்ந்துபதம் பணிகின்றேன்
உறையூரார், சிரபுரத்தார்
ஒள்ளரங்க நகருள்ளார்
குறைவில்லாப் பெருஞ்செல்வர்
குழுமியுளார் அனைவர்க்கும்

முகமனுரை பகருகின்றேன்
மூத்துயர்ந்த தமிழ்க்குலத்துத்
தகவுடையோர் நினைவினிலே
தமிழகத்தை முப்பிரிவாய்ப்
புகன்றனர்காண்! புலவர்கள்யாம்
போட்டியிட்டு இக்கவியரங்கில்
வகைசெய்தோம்! பதினொன்றாய்
வழக்காடத் துணிந்திட்டோம்

முப்பிரிவு காணாத
முத்தமிழைப் பதினொன்றாய்
எப்படிநீர் கூறுவைக்க
இசைந்திட்டீர் எனக்கேட்பீர்.
தப்பிதந்தான், பிழைபொறுத்துத்
தற்காக்க வேண்டுகின்றேன்
ஒப்புக்கே வழக்கன்றி
உண்மையென்று கொள்ளாதீர்

நெல்லைமா வட்டத்தின்
நிகரில்லாப் பெருமையெலாம்
சொல்லத்தான் அடங்கிடுமா?
"துறைவனா"க்கும் ஆற்றலுண்டோ?
வல்லமையில், வளமுறையில்
வளர்கின்ற தமிழ்ப்பாங்கில்
தொல்லுணர்வுச் சிறப்பினிலே
சோடியெமக்கெவர் உள்ளார்?

பொன்திணிந்த பொருநையெனப்
புகழ்க்கம்பன் இசைத்தபின்னால்
என்சொல்ல முடியும்காண்?
எங்கள்திரு நெல்லைபுகழ்
மண்ணுலகம் அறிந்ததுகாண்!
மாவட்டம் இதற்குநிகர்
சென்னையிலே, பிறிதொன்றைச்
செப்பிடவும் துணிவார்யார்?

எண்ணியெண்ணித் துணிகசெயல்
என்பதுவே குறிக்கோளாய்
விண்இடிந்து விழுந்தாலும்
இமைகொட்டா வீரத்தார்
மண்திரிந்த சமயத்தும்
மனந்திரியாப் பழைமையினர்
கண்திறந்த அறிவுடையார்
கணக்கில்லார் நெல்லையிலே

குறமுனிவன் அகத்தியன்தான்
குடிகொண்ட தெது? நெல்லை.
நறுந்தென்றல் கவிபாடும்
நயமெங்கே? அதுநெல்லை!
வெறுந்தரையும் தமிழ்மணக்கும்
விந்தைஎங்கே? அதுநெல்லை.
செறும்ஒருவர் தமக்கும்நயம்
செய்வதெங்கே? அதுநெல்லை

சதுர்வேதம் தமிழ்செய்த
சடகோபன் பிறந்தநெல்லை
மதுநிறைசொல் குமரகுரு
மாதவனார் பிறந்த நெல்லை.
குதுகலமாய் அசைந்துவரும்
குறவஞ்சி திரிந்த நெல்லை
பதுமமெனச் சேற்றில் எழும்
பள்ளுவகை உதித்தநெல்லை!

பின்னமிலாச் சுதந்திரத்தைப்
பேணிடவும், வெள்ளையராம்
அன்னியரை நாட்டினின்றும்
அகற்றிடவும் சூளுரைத்துத்
தன்னுரிமை காப்பதற்குத்
தலைகொடுத்த கட்டபொம்மன்
பொன்னொளிரும் பாஞ்சைநகர்ப்
பூமியெது? அதுநெல்லை.

பெற்றமக்கள் தவிக்கவிடப்
பேதலித்துச் சிறுகுடிலில்
நெற்றியொளி குறைவடைய
நித்தநெடுங் கவலையிலே
வற்றிய தாய்தனையழைத்து
வன்னமணித் துகில் தந்தான்
பொற்றவிசில் அமருவித்துப்
"பொறுப்பாய் எம்பிழையெல்லாம்

பொற்கவிதை மலர்கொண்டுன்
பூம்பாதம் பரவுகின்றேன்
சொற்களெலாம் மின்னொளிபோல்
துள்ளிடயான் பாடுகின்றேன்
நற்கருணைத் தமிழ்த்தாயே
நாடனைத்தும் புதுப்பிறவி
பெற்றிடச் செய்வா" யென்று
பேசியவன் பாரதிகாண்!

செக்கிழுத்த சிதம்பரனார்
செய்தபெருந் தியாகத்தால்
மக்களெல்லாம் மன்னர்களாய்
மகிழ்கின்றோம் நாமின்று!
மிக்குயர்ந்த உளவலிமை
மிக்குயர்ந்த பண்பாடு
தொக்கபெரும் பொதியமெனத்
துவங்கியவர் சிதம்பரனார்!

பாட்டுக்குச் செவிசாய்க்கும்
பண்பயர்த்துப் போனநம்மைக்
கூட்டிவைத்துச் சோறூட்டி
குற்றாலத்தருவியில் நீர்
ஆட்டிவைத்துத் தமிழ்ப்பாடல்
அதிசயத்தை இதயத்தில்
ஊட்டிவிட்ட டிகேசி
ஊர்எதுகாண்? அதுநெல்லை!

கண்ணாடி ஏதுமின்றிக்
காண்பவர்கள் உணர்ந்திடுவார்
விண்ணுளும் அச்சுவையாம்
வேண்டோம், இனியொருகால்
மண்மீதில் பிறவிவந்தால்
மாநெல்லைதனில் பிறப்போம்
அண்ணாச்சி மார்களுக்கு
ஆட்சேபம் இல்லையன்றோ?

வேறு

எங்கூருக் கொருவெதலி
எல்லாரும் வரவேணும்
நொங்குப் பதனியுண்டு
நூறுவகைக் கறியுண்டு
தங்கத் தமிழுண்டு
தாமிர வர்ணியுண்டு!
எங்கனெ பார்த்தாலும்
இனிச்சுக் கெடக்குமையா!

தொண்டர் குழாம்உண்டு.
சுகமான காற்றுண்டு.
கண்டார் துயர்துடைக்கும்
காந்திமதி பாதமுண்டு
வண்டிரையும் காடுண்டு
வடிவேலன் துணையுண்டு
எண்டிசையும் புகழும்எங்கூர்க்(கு)
எம்பம் வருவிகளோ?

★

தலைவர்:

பூசைத் துறையார் பொருநைத் தனித்துறைவன்
ஆசைத் தமிழில் அமுதகவி பாடினான்
குறுமுனிவன் தமிழரசுக் கோலோச்சும் நெல்லை
யென்றான்
நறுந்தென்றல் வீசுநெல்லை, நம்மாழ்வார் பிறந்தநெல்லை
குறவஞ்சி பள்ளாதி குளிர்தமிழ்நூல் தோன்றும்நெல்லை
மறம்விஞ்சும் கட்டபொம்மன், வாழ்ந்தநெல்லை
என்றுரைத்தான்
பாரதிகம் போற்றுபெறும் பாவேந்தன் பாரதியை
சீரதிகம் பெறப்பெற்ற கீர்த்தியினை, சிதம்பரமாம்
தொண்டனைப்பெற் றுயர்ந்தபுகழ் தோன்றநன்குப்
பாடினான்,
மண்டமுதப் பாலூட்டும் டி.கே.சி. மாண்புரைத்தான்
இனிச்சுக் கிடக்கின்ற எழிலெல்லாம் பாடினான்
தனிச்ச மொழித்தன்மை சாற்றிக் கவிசொன்னான்.
இனிமேல்
நாச்சீரார் நாசீர் வரதரா சன்தமிழின்
பாச்சீரில் நன்மதுரைப் பான்மை பரிந்துரைப்பான்.




கவிஞர்
நா.சீ. வரதராஜன்

கவியரங்கத் தலைமைகொளும் கனிவுமிகும்
பெரியவரே, கவிகள் யாத்து
செவிநுகரத் தமிழினிமைத் தேன்தரவே
வந்திருக்கும் திறமை மிக்க
கவிஞர்களே! எமைவாழ்த்தக் காத்திருக்கும்
அறிஞர்களே! களியோ டிங்கே
அவைநிறைந்த நல்லவரே! அஞ்சலிகள்
செய்கின்றேன்! அருள்வீர் ஆசீ!

தென்மதுரை மாவட்டச் சிறப்பெல்லாம்
சொல்ல யெனைத் தெரிந்தெடுத்த
அன்புடைய பெரியவரும் அடியேனின்
மாவட்டம் அழகு நெல்லை
என்பதினை யறியார்கள்! எனினும்ஏன்?
இந்நாள்நான் மதுரை வாசி!
முன்பிறைவன் தமிழாய்ந்த மூதூரின்
புகழ்யானும் மொழிகின் றேனே!

(வேறு)

அன்னை திரு மீனாட்சி யரசாட்சி செய்தாள்!
அருளிறைவன் கடைச்சங்க மணித் தவிசுவீற்றான்!
பின்னையொரு நாளிங்கு பெருவெள்ளம் வந்தே
பேரணையின் கரையுடைத்துப் பெருக்கெடுத்த
போது
அன்னவனே பிட்டுக்கு மண்சுமந்து நின்றான்!
அலகில்லா விளையாட்டின் அற்புதங் களாலே
பன்னரிய வுண்மையெலாம் பாரறியச் செய்தான்!
பழம்பெருமை மிகநிறைந்த பாண்டியர்கள் பூமி!

நிழலடரும் பழமுதிரும் சோலைமலைச் சாரல்
நீலமயில் தோகைவிரித் தாடும்! அருள் வேலன்
கழலிணைகள் கண்ணெதிரில் தோணும்! பரங் குன்றில்
கனிவுடனே யவனமர்ந்த காட்சியினைக் காணும்!
பழநிமலை மீதினிலே பாலகனாய் நிற்கும்!
பரவசமா யுணர்வினிலே பக்திமணம் சூழும்!
அழகனுறை ஆறுபடை வீடுகளில் மூன்றும்
அமைவுறவே பெறுமையுறும் தலமகிமை சேரும்!

சிலைநயத்தில் சிறந்திருக்கும் சிற்பங்கள் சேர்ந்த
திருக்கோவில், கோபுரங்கள், இன்றளவும்
தொன்மைக்
கலைமணக்கும்; நாயக்கர் அரசாட்சிக் காலம்
கட்டிவைத்த அரண்மனையும், மங்கம்மாள் நாட்டில்
தொலைநடக்கும் வழிப்போக்கர் துயராற்றத்
துணையாய்த்
தோற்றுவித்த நெடுஞ்சாலை, சத்திரங்கள் எல்லாம்
நிலைநிறுத்தி விட்டபுகழ் நினைவழிந்து போமோ?
நெஞ்சினிக்கும் தமிழருக்கும் வரைநிலைக்கு மன்றோ?

(வேறு)

சொல்லெல்லாம் அமுதில் தோய்த்து
சுவையெல்லாம் பக்தி யாக்கி,
வெல்லமா யினிக்க, ஞான
வேதமா யொலிக்க, கேட்கும்
கல்லையும் கனியப் பாடும்
கவித்திரு வாசகம் போல்
சொல்லவே றுண்டோ? தேனைச்
சொரிந்தவர் வாத வூரில்

அல்லவோ பிறந்தார்! மற்றும்
அரியபல் போதம் சொல்ல
வல்லநம் கபிலர் தோன்றி
வாழ்ந்ததும் இங்கே யன்றோ?
சொல்லிலே குற்றம் காட்டிச்
சொற்போரில் இறைவ னோடே
மல்லுக்கு நின்று நேரில்
வாதிட்ட நக்கீரன் ஓர்

இலக்கிய புலவர் சிங்கம்
எழுந்தவூர் மதுரை யன்றோ?
நிலைத்திடும் கவிகள் பாடி
நிலைத்தவர் பலரிங் குண்டே!
சொலப்புகின் விரியும் என்றே
சுருக்கினேன்; ஒனினும் இங்கே
சிலச்சில பேரை மட்டும்
செப்புவேன்: சிறிதே கேண்மின்!

(வேறு)

நரிவெரூ உத்தலையர், சீத்தலைச் சாத்தனார்
நச்சினார்க் கினியர், மற்றே
மருதனிள நாகனார், கபிலர்க்கு நண்பராம்
பரணர், கணி மேதவியர்,
பெருமைமிகு பக்திசேர் இடைக்காடர், ஓர்வெள்ளி
வீதியார் என்ற பெண்ணாள்
அரியபல புலவர்பேர் அடுக்கவே வழியில்லை;
அவர்திறம் சொல்வ தெங்கே?

(வேறு)

தேமணத்திடும் செந்தமிழ்ப் பேரினன்,
சித்திரக்கவி யாத்து மகிழ்ந்தவன்,
நாமமேயொளி பொங்கும் பரிதிமாற்
கலைஞனை, நம் நாவலர், பாவலர்
சோமசுந்தர பாரதி யாரினை,
தூயசெந்தமிழ் போற்று முளத்தனைத்
தாமறந்திடுமோ தமிழ் நெஞ்சமே!
சந்ததம் புகழ்பாடி வணங்குவாம்!

(வேறு)

அமுதமான நடையில் முற்றும்
அருமை யான முறையிலே
தமிழிலன்று புதினம் தந்த
தகுதி வாய்ந்த முதல்வராய்
அமையு மெங்கள் ராஜமையர்
ஆன்ற மேதை யல்லவோ?
தமிழில் நல்ல வசனம்தந்த
தகைமை யெண்ணி வாழ்த்துவோம்!

(வேறு)

மானத்தைக் காப்பதற்குத் துணியில்லாமல்
வயிறுரப் புசிப்பதற்கும் உணவில்லாமல்
வானத்தைக் கூரையெனக் கொண்டிந் நாட்டில்
வாழுகின்ற பலர்வறுமை மாறா மட்டும்
நானிந்தத் தவக்கோலம் களையே னென்றே
நாலுமுழத் துண்டுடனே யடிகள் காந்தி
தானளித்த முதற்காட்சி மதுரை மண்ணில்
தந்ததெனும் சரித்திரத்துப் பெருமை
கொண்டோம்!

தாழ்வெல்லாம் பிறப்பினிலே கிடையா தென்னும்
சரியான கொள்கைவழி நடந்து காட்டி
வாழ்வெல்லாம் தேசத்தின் நலனுக் கீந்த
வைத்திய நாதய்யரினை மறக்கப் போமோ?
பாழாக்கி யிந்நாட்டைப் பதங் குலைத்த
பறங்கியரை யெதிர்த்தெழுந்த வேள்வித் தீயில்
கூழாகி யவியான கொள்கை வீரர்
கூட்டுவித்த வாழ்வன்றோ கொண்டோ
மிந்நாள்!

(வேறு)

விடுதலை வேண்டிய வேள்வி நடத்திய
வித்தக மாமுனிதன் — தவச்
சத்திய சுத்த மகன்! — அருள்
மேவிய சுப்பிரமண்ய சிவா வெனில்
வீரம் விளைந்துவரும்! — பயம்
தீரும்! பகைக ளறும்! — சிறைக்
கொடுமையி னுலுடல் குன்றித் தளர்கினும்
கொள்கை மறந்தறியான்! — மனக்
குன்று சரிந்தறியான்! — பெருங்
கூற்றென மேவிய வெள்ளைய ராட்சியைக்
கொய்யத் துடித்தவனை — நினைந்(து)
உய்யப் படித்திடுவோம்!

(வேறு)

கோடையினில் கொடைக்கானல் தேடிவா ருங்கள்!
கொஞ்சுமெழில் வைகையனை நாடிவா ருங்கள்!
ஆடுமயி லோன்பழநி பாடியே றுங்கள்!
ஆழகர்மலைத் தீர்த்தநீர் ஆடியா றுங்கள்!
வாடுமனம் தெளிவுபெற ஓடிவா ருங்கள்!
மதுரை மீனுட்சியருள் கூடவா ருங்கள்!
நாடுபுகழ் பாண்டியர்கள் நாடுசே ருங்கள்!
நம்முயர்வு கண்டகலை கோடிபா ருங்கள்!

(வேறு)

என்றழைத்துக் கரங்கூப்பி யெனக்கிந்த வாய்ப்பளித்த
மன்றத்துத் தலைவருக்கும் மற்றுமுங்கள் எல்லோர்க்கும்
நன்றி பலமுறை சொல்லி நானும் விடை பெறுகின்றேன்
கன்றெனக்குக் கவியளித்த கலைமகளின் தாள்போற்றி!

★

தலைவர் :

கோலெடுத்து வேட்டகத்துக் குடிபுகுந்த சுந்தரன் போ
சீலமுற்ற நெல்வேலி சேரப் பிறந்தாலும்
கூடும் பணிசேரும் கூடல் வளம் மிகவே
பாடும் வரதரா ஜன்பாவைப் பரிந்தறிந்தோம்.

கல்லினைக் கனிவிக் கின்ற
கவின் திரு வாசகத்தைச்
சொல்லிய பெரியோன் ஆதித்
தூயநற் புலவோர் தம்மை
நல்லபா விருத்தத் தாலே
நயம் பெறப் புகழ்ந்து நின்றுன்
எல்லையில் பெருமை யெல்லாம்
இசைத்தனன் யாமும் கேட்டோம்.

முண்டாசு தலையிட்டுச் சட்டை யிட்டு
மூலையிணைக் கச்சமிட்டுப் போந்த காந்தி
துண்டாக நாலுமுழம் அணியச் செய்த
தொன்னகரம் மதுரையென சொன்னுன் மேலே
மண்டார்வ முடன் சந்தப் பாடல் பாடி
வளத்தமிழின் வடிவ மெல்லாம் காட்டிவிட்டான்
இனிமேல்
தொண்டாரும் சேதுபதி வாழும் நாட்டின்
தொல்புகழைப் சகந்நாதன் பாடிநிற்பான்.




## கவிஞர் "ஜகன்"

நினைத்ததும் மனத்தில் இனித்திடும் பனித்தேன்
தனித்தமி ழினிற்கவி யியற்றும்
வினைத்திற மனைத்தும் தனக்கெனக் குவிக்கும்
தனிப்பெருந் தலைவ! நல் வணக்கம்!
தினத்தெழு மலர்ந்தண் புனற்படு வனத்தில்
திளைக்குவண் டெனப்புகழ் மணக்கும்
கனிச்சுவை யெனப்பண் ணிசைத்திடும் கலைப்பெண்
ணினத்தவர் தமக்கும்என் வணக்கம்!

(வேறு)

சந்தமிகும் செந்தமிழில்
சிந்துகவி பாடியிவண்
வந்தபுல வோர்களை யான் வாழ்த்துவேன்!—
அவர்தாம்
தந்ததமி ழுக்குமுடி தாழ்த்துவேன்!—தூய

சிந்தையில் நிறைந்ததமிழ்
உந்திடவு வந்தவையின்
வந்தவர்தம் அன்பையெண்ணிப் போற்றுவேன்—
எனக்குத்
தந்தபணி யைச்சிறிதே ஆற்றுவேன்!

திங்கட் பிறையொடு
கங்கைச் சடையணி
செங்கட் பொறிநுதல் சிவராம

லிங்கத் திறைவனை
வங்கக் கடல்மகள்
பொங்கத் திரைகொடு புகழ்பாட

அங்கக் கதிரவன்
கங்குட் பகைபட
தங்கக் குடமென தனுஷ்கோடி

துங்கத் துறைதொழு(து)
அங்கட் புவிமிசை
யெங்கும் ஒளிவிடும் எழில்தூவும்!

(வேறு)

ஆதவன் முதலாய்
கேதுவின் ஈருய்
ஓதிய கோள்கள் ஒன்பதையும்

தீதறக் கூட்டிச்
சேதுவில் நாட்டிக்
கோதண்ட ராமன் கும்பிட்டு

ஏதமறச் சகந்
நாத னெனப் புவி
மாதவள் புல்லணை மடிமீதில்

சீதையைப் பிரிந்த
வேதனை மறந்து
மாதுயில் வளர்ந்த மாவட்டம்!

ஞானவொளி யானபர மோனவெளி யானவனை
நாதாந்த போதாந்தமாய் — விரித்து
வேதாந்த வித்தாந்தமாய் — உரைத்த

தேனமுத மானதமிழ்க் கானமொழி தானிசையச்
சித்தாந்த வானந்தமாய் — பாடி
முத்தாந்தப் பேரின்பமாய் — தாயு

மானவர்தம் மோனநிலை தான்முகவை மாநகரில்
பாருங்கள்! வாருங்க ளேன்! — களி
கூருங்கள் தேறுங்களேன்! — உயர்

வானதிரு வாசகமு ரைத்தமணி — வாசனைப்
பாடுங்கள்! பாடுங்க ளேன் — பொன்னூசல்
ஆடுங்கள் ஆடுங்களேன்!

(வேறு)

மாணிக்க வாசகர்க்கு
மறையருள் புரிந்து மேலாம்
ஆனிப்பொன் னூசல் ஆடி
ஆட்கொண்ட வள்ளல் தன்னைக்
காணக்கண் கோடி வேண்டும்!
கையிலையில் ஆதியென்னச்
சேனுற்றுப் பொழில் நிறைந்து
சிறந்துநின் றிலங்கு மெங்கள்

உத்தர கோச மங்கை
ஊர்புகழ் உரைக்கப் போமோ?
சத்துடைத் தமிழ் கொணர்ந்து
தந்தநற் புலவனுக்குச்
செத்தபின் பொன்கொடுத்த
செந்தமிழ்ச் சீதக்காதி
உத்தமன் சேது நாட்டில்
உறைவ தோர் உண்மை காணீர்?

மாரிதான் பொய்திட் டாலும்
வளர்தமிழ்ச் செழுமை கொண்ட
வாரிபோல் வாரி வாரி
வழங்கிய எங்கள் வள்ளல்
பாரிதான் பிறந்து வாழ்ந்து
பழந்தமிழ் பண்பைக் காத்த
சீருயர் மாவட்டத் தின்
சிறப்பினை மறப்பார் யாரே!

காவிய நயங்க ளெல்லாம்
கனிந்திடப் பாடுவார் செந்
நாவுயர் யோகி சுத்த
னந்தரும் — "யாதும் ஊரே
யாவரும் கேளீர்" என்னும்
அருந்தமிழ் நாட்டுப் பண்பின்
ஆவியை அமுத மூச்சை
அளித்ததும் எம்மின் வந்த

கவிஞர்பூங் குன்றன்! ஞானக்
கடல்மடை விவேகா நந்தர்
தவப்புகழ் நாட்டின் சீர்த்த
தத்துவச் சமய மாண்பை
புவித்தலம் போற்று மாறு
புத்துல கமெரிக் காவின்
செவிப்புலம் பருகச் செய்த
தெம்முயர் சேது மன்னன்!

(வேறு)

முத்தமிழ்க்குச் சங்கம்வைத்து முறைவகுத்து
மொழிவளர்த்த மூதூர் என்றே
சித்தரித்த தென்மதுரைத் திருநகரில்
திருக்குறளைத் தேடித் தேடி
அத்தினத்திற் கிடைக்காத அவலமிகும்
இழிநிலையின் அவமா னத்தால்
இத்தினத்திற் பொலியுதமிழ்ச் சங்கம்வைத்துத்
துயர்துடைத்துத் திகழ்ந்தான் எங்கள்

தென்பாண்டித் துரைத்தேவன்! சேதுபதிப்
பரம்பரையின் செம்மல் அன்னோன்
பொன்னுண்ட திருநாமம் பூந்தமிழின்
உலகமெலாம் போற்றக் காண்மின்!
தென்பாண்டித் திருநாட்டின் திலகமெனச்
சிவகங்கைச் சீமை யின்கண்
மண்ணுண்ட விறல்மருது பாண்டியர்கள்
மாவீரம் வழுத்தக் கேண்மின்!

மற்போரும் விற்போரும் மாதமிழில்
வல்லறிஞர் வாதப் போரும்
பொற்பாரும் மத்தகங்கள் பொருப்பெனவே
எதிடர்ந்து பொருதும் போரும்
தெற்காரும் பாஞ்சாலத் திறல்மறவன்
கட்டபொம்மன் செருத்த போரில்
நிற்பாரோ வெள்ளையரிங் கென்றவர்க்குத்
தோள் கொடுத்து நிமிர்ந்துநின்று

அந்நியரின் வெந்தலைகள் அடுக்கடுக்காய்ச்
சிதறிவிழ அடுத்த போரும்
துன்னலரின் செங்குருதி தோயவுடன்
மாமலையாய்ச் சுதந்தி ரத்துச்
சின்னமெனத் திகழநெடுஞ் சிவகங்கைச்
சீமையெலாம் செம்மண் மேடாய்
இன்னமுநாம் காணுமொரு எழில்நிறைந்த
காட்சியுற எடுத்த மேடும்

இவ்வாறு யாம்பெற்ற இடையற்ற
போர்கள்பல இணையற் றோங்க
அவ்வாறப் புகழ்பரவ அருந்தமிழில்
பாடல்பல அடுக்கடுக் காய்ச்
சவ்வாதுப் புலவரொடு சார்ந்ததமிழ்க்
கவிஞர்பலர் தழைக்கத் தந்தார்!
எவ்வாறின் றதையிசைப்பேன் என்றெண்ணி
ஏங்கிடுதே ஏழை நெஞ்சம்!

(வேறு)

கலைசொரிந்து நிற்குமுயர் காளலிங்கர் கோவில்!
நலம்புரிந்து புகழ்மணக்கும் நாகலிங்கர் கோவில்!
குலக்குமரன் தமிழ்க்குன்றக் குடியமர்ந்த கோவில்!
நிலைத்தபெரும் புகழனைத்தும் நிகழ்த்திடயார் வல்லார்,

(வேறு)

காடெல்லாம் சுற்றிவந்த
கவிக்கம்பன் செந்தமிழ்த்தாய்
நாடெல்லாம் போற்றுமுயர்
நாட்டரசன் கோட்டையிலே
ஏடெல்லாம் தமிழ்மணக்க
எழிற்கோவில் கொண்டருளும்
ஈடில்லாப் புகழ்மணக்கும்
எங்களது மாவட்டம் !

( வேறு )

புவியோங்கு செந்தமிழின்
புவனேந்தி ரன்கதையைச்
சுவையோங்கச் சொன்னவனுஞ்
சொற்சரவ ணப்பெருமாள் !
கவினோங்கு முகவைநகர்
கவிராயர் பற்பலருள்
செவியோங்கப் பெருந்தொகைநூல்
செப்பியமு. இராகவனார் !

படியேறி இறையவனும்
பசிக்குணவு கேட்க,வுடன்
பிடிசெந்நெல் வடித்தெடுத்து
பெட்புறவே தருமிளையான்
குடிமாறனோடு கவி
குஞ்சரமும், வில்லிப்புத்தூர்
அடியாராம் பெரியாழ்வார்
அவதரித்த புனிதமொடு

எல்லையறும் பரம்பொருளாம்
எழிற்கண்ணன் கணவரெனச்
செல்வியெங்கள் ஆண்டாளும்
திருப்பாவை நோற்றதுவும்
வில்லெடுத்த இராமனுக்கு
விரிஞான வாசிட்டம்
வெல்லுதமிழ் மொழியினிலே
விளக்கிவைத்த பெருமையுடன்

தண்டமிழின், சுவைமணக்கச்
சௌந்தர்ய லகரிதனை
எண்டிசையும் புகழ் மணக்க
இசைத்தளித்த கவிராஜ
பண்டிதரும், சீலேடைமிகப்
பாடுபுலி வேம்பத்தூர்
மண்டுபுகழ்ப் பிச்சுவையர்,
மற்றுமிங்கு தாய்நாட்டின்

(வேறு)

விடுதலைக்கு விதைவிதைத்து
வெள்ளைமேனிக் கொக்குகள்
வெட-வெடக்கச் கலைகொடுத்த
விஸ்வநாத தாசனும்
இடிமுழக்கம் எங்கள்சிங்கம்
முத்துராம லிங்கமும்
கொடைகொடுக்க வள்ளல் காரைக்
குடிகொடுத்த அழ கனும்

நாடுபோற்ற வாழ்வதெல்லாம்
நானுரைக்க நாவிலேன் !
தேடிநின்ற பதவிதன்னைத்
திரணமென்ற தியாகியாய்

கோடிகோடி மக்கள் நெஞ்சில்
குடிமை கொண்ட காமராஜ்
ஈடிலாத எங்கள் செல்வன்,
இந்தியாவின் செல்வமே!

செட்டிநாட்டுச் செந்தமிழும்
சிவகாசிக் கைத்தொழிலும்
திட்டமிட்டுத் தொழில்வளர்க்கும்
திறன்மிக்க பாலையத்தார்
வட்டியிட்டுத் தமிழ் வளர்த்த
வளமிக்க பரம்பரையின்
பட்டியலும் நீட்டியிங்கே
பாடுதற்கு நேரமில்லை!

தெருவெல்லாம் தமிழ்முழங்கத்
தித்திக்கப் பாட்டெழுதித்
தருமெங்கள் கவி கண்ண
தாசனுக்கு நிகருண்டோ?
விரிபுகழ்விஞ் ஞானியென
விளங்கிவரும் எம் டாக்டர்
கிருஷ்ணனுக்கு நிகரெங்கும்
கேட்டதுண்டோ தமிழ்நாட்டில்

(வேறு)

சாத்தூர் மிளகாயில்
சார்ந்திருக்கும் காரத்தைச்
சேர்த்து நான் பாடவில்லை
தித்திக்கப் பாட்டெழுதிச்

(வேறு)

சொல்லவி மைழந்தது பலகோடி
சொல்லமு டிந்தது ஒரு'கோடி'
நல்லதை நாடித் தமிழ்பாடி
வெல்லுவம் உவப்பத் தலைக்கூடி !

நன்றி

மனிதப் பிறப்பிதனை மகிமைப் படுத்துமாம்
புனிதத்த மிழ்க்கவிதை புகலக் கொடுத்திவன்
கனிவுற்றி லங்குபெருந் தகைமைக்கு நன்றியே
இனிதிற்பு கன்றெனது இதயத்தில் வாழ்த்தினே

★

தலைவர் :

புல்லாணிப் பெருமை கூறிப் புகழ்ந்தனண்
சேது நாட்டின்
நல்லாண்மை பாடினன் மெய் ஞானியாம் வாதவூரன்
சொல்லார்வம் கொண்ட தொன்மை உத்தர கோச
மங்கைப்
பல்லாண்டு போற்றுஞ் சீர்த்தி பரவியே பாடினனே
பாரியின் நாடு சேது பதிகளார் ஆண்ட நாடு
வேரியென் றமைதமிழ்க்கு வியன்புறுத் தமிழ்ச்
சங்கத்தை
நாரொடு வைத்த பாண்டித் தேவனர் நண்ணும் நாடு
சீர்பல உறுநா டென்று செகநாதன் செப்பி னனே.

இனிமேல்

திருச்சி வளமெல்லாம் செந்தமிழில் துரைசாமி
விரிச்சுரைப்பான் நாமெல்லாம் விழைந்தினிதே
கேட்டிடுவோம்.




# கவிஞர் வி. துரைசாமி

## தமிழ்த்தாய்

ஆதிப் பரம்பொருளின் அம்சமெலாம் பெற்றவளே!
சேதிசொல்ல வாய்திறக்கச் செங்கரும்பாய்நின்றவளே!
முத்தேவர் பாலும் முகந்துகொண்ட முத்தொழிலால்
சத்துக்குள் சத்தாய்ச் சதிராடும் செந்தமிழே!
பால்வாய்ப் பசுங்குழவி பாட்டிசைக்க வாய்திறக்கக்
கால்வாய்போல் வந்து கவிதைநடை யிட்டவளே!
கம்பனுக்குக் கண்ணுகிச் சேரனுக்குச் செஞ்சிலம்பாய்ச்
செம்பொருளைப் பாடும் அடியார்க்குச் செவ்வாயாய்
ஆனவளே! என்மனத்தை ஆலயமாக் கொண்டவளே!
இலக்கணங்கள் அத்தனையும் என்பாய் அமைந்தவளே!
புலத்தை மயக்கிப் புதுமைச் சுவைகொழிக்கும்
காவியங்கள் என்னும் கனகநிற மேனியளே!
கோலச் சுவைகள் குருதியாய்க் கொப்பளிக்கச்
சிறுகாப் பியங்களெனும் சீறணிகள் பூண்டவளே!
ஈரடியால் இவ்வுலக மெல்லாம் அளந்தபின்னும்
நாலடியிட் டன்பர்தமை நாடிவந்த பெண்ணணங்கே!
வடபுலத்து நீயனுப்பும் வடுதவந்தென் வாயசைப்பக்
கடமைதவ ருதுவந்து கைகொடுத்த கண்ணியமே!
தோலாத நாவின் துரைசாமி நின்னுடைய
மேலாம் திருவடியை மேவி வணங்குகிறேன்.

## தலைவர்

செந்தமிழ்க்கு வீடமைத்த சுவாமிநா தச்செம்மல்
நந்தாக் கருணை நறவுமிழும் மெல்லடியில்
வண்டா யிருந்து வளர்ந்தவரே! சேகரித்த
தண்டேன் அனைத்தையுமே தாய்த்திருநா
டெங்கெங்கும்
சுற்றித் திரிந்து சொரிகின்ற சொற்செல்வ!
கற்றவர்க்கும் மற்றவர்க்கும் கன்னலாய் வாழ்பவரே!
கலைமகளைத் தமதாக்கி நிலமகளை ஆள்பவரே!
மலர்மகளும் உடனுறையும் மாண்புடைய மன்னவரே!
சால்பே உருவாம் ஜகந்நாத மாமணியே!
பால்போல் மனமுடையேன் பாதம் வணங்குகிறேன்.
எட்டுடனே மூவர் இனியகவி பாடுகையில்
குட்டுதற்கும், காதைக் குடைவதற்கும், ஏன், தலையை
வெட்டுதற்கும் யாருமில்லை! வேண்டு மிடங்களில்கை
தட்டுதற்கு வீற்றிருப்பார் தமிழறிந்த நல்லவையோர்!
அமுதருந்த வந்திருக்கும் அவையோர்க்கெல்
லாம்வணக்கம்!

## காவிரி

பொதிகைமலைக் குறுமுனிவன் பொற்கரகம்
கவிழ்த்ததனால்
குடகுமலைச் சாரலிலே வந்துதித்த காவிரியே!
கன்னடர்க்குக் கால்கொடுத்துக் கொங்கருக்கு
கைகொடுத்துத்
தன்னேரில் சோழர்க்குத் தனப்பால் கொடுத்தவளே!
பாலையாய் நிற்குமிடம் பாவையுனைக் கண்டவுடன்
சோலையாய் மாறும்விதம் சொல்லிற் கடங்கிடுமோ?
திருமகளைப் பிரியாத திருமால் இரண்டிடத்தில்
பருவமகள் நின்னருகே பாயல் விரித்தானே!
ஏகன் அநேகனென ஈசனையே கூறிடுவார்,
தோகையே நீயுமந்தத் தொல்பொருளை யேநிகர்ப்பாய்!
காவிரியே! நீவளர்த்த கண்ணும் திருச்சிதனை
நாவிரிய நான்பாடும் நல்லதிரு நாளிதுதான்!

## திருச்சி நங்கை

பச்சைமலைப் பால்சுவைத்தாய் கொல்லிமலைத்
தேன்கலந்து
மெச்ச மருந்துண்டு மேனி வளர்த்தவளே!
திருச்சியெனும் தெள்ளமுதே தெய்வத் திருமகளே!
சிராமலையாம் தொட்டிலிலே சிரம்சேர்த்துக்
கண்வளர்ந்தாய்
அராவணையான் அருகினிலே அமுதாய்நடை நடந்தாய்!
திருவெறும்பூர்த் தென்மலையும் திருவீங்கோய்
மாமலையும்
பெருகு தனங்களெனப் பெற்றவளே பெண்மயிலே!
பராய்த்துறையில் பூப்பெய்திப் பருவம் அடைந்தபின்பு
குளித்தலையில் நீராடிக் குணசீலக் காவினிலே
அளிக்குலங்கள் பாட அரியா சனத்தமர்ந்தாய்!
வாளெடுத்து வந்த வளவன்நின் கண்களெனும்
வாள்தமக்குத் தோற்று வயமிழந்த வாறென்னே!
தஞ்சையெனும் தங்கையுடன் தானுகி நின்றவளே!
கொஞ்சும் இருவருமாய்ச் சோழர் குலம்தழைய
இல்வாழ்வு வாழ்ந்தவிதம் சொல்லும் இயல்பிற்றே?
அன்புக்கோர் கொள்ளிடமாய், அருளுக்கோர்
முக்கொம்பாய்,
முன்பெங்கும் காணு முழுவின்பம் தேக்கிவைக்கக்
கல்லணையாய் நின்றவளே! காலங் கடந்தவளே!
உறையூர் தனிற்செங்கோல் ஓச்சுங்கால் அங்குவந்த
கறையேது மில்லாத கண்ணகியைக், கோவலனை,
செய்தவத்துப் பெண்ணணங்கைச் சீராய் உபசரித்துச்
சேரன் சிலம்பினிலே சிங்கா தனத்தமர்ந்தாய்!
புகழேந்தி வாயிருந்து பொங்கமுதம் கொப்பளிக்க,
ஒட்டக்கூத் தன்வாய் உலாவாக ஓடிவரச்
சோழ னெனும்கணவன் சொக்கும் படிச்செய்தாய்!
தூணில்நர சிங்கம் துளங்கித் தலையசைக்க,
வாணியே கம்பனுய் வந்து திருவரங்கச்
சந்நிதியில் இராமகதை சாற்றியதும் இங்கலவோ?
எந்நிதிக்கும் மேலாம் இனிய தமிழ்நிதியை,
சைவமுத லாய சமயங் கடந்துநிற்கும்
மெய்ப்பொருளைக் கற்கண்டில் மேவக் கலந்துதந்த
தாயுமா னக்கவியால் தாரணியை ஆண்டவளே!
ஆரணத்துக் கப்பாலோர் ஆனந்த மாயவனை,
பூரணத்தை, ஆனைக்காப் பொற்கொடியை வந்தித்த
ஆசு கவியை அகிலமெலாம் போற்றிசைக்கத்
தேசுபெற வைத்தவளே! திருச்சியெனும் தீந்தமிழே!
பல்லவர்தம் கோயிலிலே பரமனூர் வீற்றிருக்கச்
சொல்லைக் குழைத்துக் கவியிசைத்த சம்பந்தர்,
"குன்றுடையா னைக்கூற உள்ளம் குளிரு"மென்றூர்!
"கங்கை யினும்புனிதக் காவிரியின் நடுவிருக்கும்
எங்கள்பிரான்" என்றுரைத்தார் தொண்டரடிப்
பொடியென்பார்!
கொள்ளை யடித்துவந்து கோபுரத்தைக் கட்டுவித்த
வள்ளல் திருமங்கை மன்னனையும் நீவளர்த்தாய்
உச்சிமதில் மேலே உபதேசம் செய்தருளும்
இச்சைமிகும் இராமா னுசவள்ளல் வீற்றிருந்த
பொன்னரங்கம் நின்னரங்கம் அல்லவோ பூங்கொடியே!
மைந்நீலப் பூமலரும் பைஞ்ஞீலிச் செஞ்சடையார்
மெய்ந்நா வரசர் மெலிவிற்குச் சோறளித்தார்!

தித்திக்கும் பாவால் திருவள் ளரையானைப்
பத்திப் பெருக்காலே பாடியருள் ஆழ்வார்தாம்
நித்தியனைக் கண்டிடவே நின்பால் அவதரித்தார் !
கருவூரார் ஆயிடினும் கருவூர் அவதரித்தார்
பொருவாத பாவால் திருவிசைப்பாப்
பொன்கொண்டாய் !
வஞ்சியெனப் பேர்கொண்டு வாழும்போ துன்னிடமே
செஞ்சிலம்பைப் பாடியே சீர்பெற்முன் எம்மிளங்கோ !
யோகி சதாசிவப்பிரம் மேந்திரர்தாம் ஈசனென
ஆகி அமர்ந்தநெரூர் ஆனுய் அதுவன்றி,
காலைக் கடம்பர் கடுவெயிலில் சொக்கர்அந்தி
மாலை திருவேங்கி நாதரென மக்களெலாம்
சென்று துதிக்கும் சிறப்பும் நினக்கலவோ ?
ஆதிவய லூரில் அருண கிரிபொழிந்த
சோதிக் கவியாம் அருவிதனைச் சொல்லிடவோ ?
பராவும் அடியருடன் மயில்களும்சேர்ந் தாடுகின்ற
விராலி மலைக்குமரன் வீற்றிருப்ப துன்னிடமே!
பத்திச் சுவைவெள்ளம் பாயவிட்ட பாவைநீ !
வித்தைக்கும் நீயே விளக்கமாய் நிற்கின்றுய்
பொதிகைப் பொருப்பைவிட்டுப் போந்த முனிவன்
அதவத்தூர் தன்னில் அவதரித்த விந்தையென்னே !
மீனுட்சி சுந்தரமாய் மேவினுன் செந்தமிழைத்
தானுட்சி செய்தான் தலைநிமிர்ந்தாள் தமிழணங்கு !
பற்பலவாம் காவியப்ர பந்தப் புராணவகை
கற்கத் தெவிட்டாத கன்னலாய் ஆக்கினவன்,
நாவாணர்க் கோர்மணியை, நற்புலமை நாயகத்தைப்
பூவாளூர்த் தியாகரா சப்புலமைச் செல்வரையும்,
ஐய ரவர்களெனும் அமுதினையும் தந்துவிட்டு
மெய்யாம் இறையடியை மேவியதும் யாமறிவோம்
மாயூரம் முனிசீப்பாய் மாயாத் தமிழ்தந்த
தூயன் குளத்தூரில் துள்ளும் நடம்பயின்றுய் !
மறைக்குலத்து வந்த மறவன் வ. வே. சு
மறுமலர்ச்சிச் சிறுகதையின் மாமன்னன் என்றிடுவான்
உன்றன் புகழை உயர்த்திவிட்ட உத்தமன்காண் !
உச்சிக் கணபதிபால் உட்கார்ந்தே ஏடெடுத்து
மெச்ச எழுதியின்று மேன்மைபல பெற்றிருக்கும்
வாசன் விகடன் வளமெல்லாம் உன்வளமே !
ராணிமங்கம் மாளின் ரமணீய ஆட்சியதும்,
வாணிகத்தைப் பேண வழிகண்ட வெள்ளையரும்
புதுவைப் பிரஞ்சியரும் போர்தொடுத்துக் கைகலந்த
காட்சிபல கண்டதுவும், காந்திமகான் உத்திரவால்
மாட்சிமிகும் உப்புப்போர் மாமன்னர் பற்பலரும்
நின்பா லிருந்து நெடும்பயணம் மேற்கொண்டார் !
தேவர் எனில்ரத்ன வேலுவெனும் தேவரே !
பாவைப் பருகுவதும் அவர்பெயர்சேர் மன்றமன்ருே ?
மெய்ஞ்ஞானச் செல்வமெலாம் மேவி யிருக்கும்நீ
விஞ்ஞானத் தாலும் விளங்குகின்ற விந்தையென்னே !
ஆவியால் ஓடும் அழகுவண்டி யின்தொடர்கள்
யாவுமே பொன்மலையில் யாத்திடுதல் ஓர்விந்தை !
தென்னகத்துப் புகைநிலைய மெல்லாம் திருச்சியெனும்
நின்னிலையத் துக்கே நிகராமோ நேரிழையே !
புத்தெழிலால் வீடுகட்டப் புதுமைச்சுண் ணும்பியற்றும்
சித்துவித்தை டால்மியாச் சீர்நகரில் காணுகிரும்.
மனரகத்தின் மாதிரியாய் மக்கள் மிடியகற்றும்
கனரகத்துச் சாலையையும் கண்டாயே இன்னுமென்ன ?
சோதரிகள் என்கின்ற சொந்தமா வட்டங்கள்
ஆதரித்து நின்னை அணைத்துமகிழ் வெய்திடுங்காண் !
உன்னிலே உற்பவித்தேன் உன்னையே பாடினேன்
அன்னையே நானல்லால் அயலார்யார் பாடிடுவார் ?
சொன்னதெலாம் கொஞ்சம் எனினும் உளமுருகிப்
பாகாய் ஒழுகிடவே பாடினேன் ஏற்றருள்க
வாகை யெனக்கே வழங்கிக் கவியரங்கில்
தித்திக்கச் செய்க திளைத்து.

★

தலைவர் :

வாயசைக்க ஆந்திரமே வாய்ந்தாலும் நாவசைக்கத்
தாயுவமை யாரும் தமிழ்கொள்ளும் துரைசாமி
காவிரியின் பேரழகு கருமாலின் திருவரங்கம்
பூவையெனப் பூத்துப் பொலியும் திருச்சிமங்கை
சேரன் சிலம்பிற் சிலம்பும் புகழின்ஒலி
சீரொன்றும் கம்பன் திருவரங்கம் போந்தகதை
கானமுகில் பாடியது கான அருட்பாடல்
தாளமுற மூவரிசை சாரவே பாடியது
தேனுட்சி செய்கவிதை செப்பும் திருவாயான் !
மீனுட்சி சுந்தரன் மேன்மை இவையுரைத்தான்
இனிமேல்
விஞ்சை மலிந்து விளங்கும் வயல்மலியும்
தஞ்சைப் புகழ்வரத ராஜனுர் சாற்றுவார்,




## கவிஞர் மா. வரதராஜன்

தென்னுட்டின் களஞ்சியமாய் நெல்லைத்தந்து
தீங்கரும்பின் கட்டியுடன் ஆவின்பாலும்
எந்நாளும் உவந்தளித்து மக்களெல்லாம்
ஏற்றமுடன் வாழ்ந்திடவே வழியைக் கண்டாள்
எந்நாடும் போற்றும்எம தஞ்சைவட்ட
மெல்லியளாம் அன்னையவள் மேன்மையெலாம்
பன்னுளும் பகர்ந்திடினும் முடியாதையா
பாரிலுள்ள வளங்களெல்லாம் இவட்கே உண்டு.

இந்தவித மேன்மையெலாம் இவட்கு வந்த
இரகசியம்தான் ஏதென்னில் இயம்பக்கேளீர் !
வந்தகுறு முனிகொண்ட கமண்ட லத்தில்
வாயசம்தான் நீரையெலாம் வடித்ததாலே
அந்தமிகு காவிரியாம் அணங்கு வந்தாள்
அவளளிக்கும் நீர்வளமாம் அறிவீர் இன்றே
எந்தநாட் டவர்இங்கே வந்திட்டாலும்
ஏக்கமின்றிக் காத்திடுவாள் எங்கள் அன்னை.

(வேறு)

அற்புதம் இதுவே அற்புதம் என்று
இவ்வகிலமே கரம்குவித் திறைஞ்ச
அறமுறை பிழைத்த அரசினை எதிர்க்கும்
ஆண்மையால் பெண்மையை உணர்த்தி
கற்பெனும் கனலால் மதுரைமா நகரே
கரிந்து நீருகிடச் சுட்ட
கண்ணகித் தெய்வம் பிறந்ததால் உயர்வு
கண்டதெம் தஞ்சைமா வட்டம்.

(வேறு)

நாசத்தினின் றிந்நாடேன் இழிந்த
உலகே திருந்தி உயர
பாசந்துறந்த புத்தன் விரைந்த
பாதைத் தடத்தில் யாண்டும்

நேசக்கரத்தை நீட்டித் தொடர்ந்து
நிலமே துதிக்க விரையும்
மாசற்ற செல்வி மணிமேகலைக்கு
மாதாவும் எங்கள் மண்ணே!

(வேறு)

சம்பந்தர் எம்மண்ணில்
பிறக்கா விட்டால்
சந்தமிகு தமிழ்இன்று
நிலைத்தா நிற்கும்?
வந்தனைகள் செய்துசைவம்
தழைக்கச் செய்யும்
வகையான ஆதீனம்
மூன்றும் உண்டு,

(வேறு)

ஒருமைந்தன் தனக்கென்று உணர்ந்திருந்தும்
உயர்நீதி காப்பதுவே கடனென் றெண்ணி
அருமந்த கன்றதனை இழந்த அன்னை
அலறிடவே அதன்கண்ணீர் துடைக்கவேண்டி
தெருவந்த மக்களெல்லாம் திகைத்துநிற்க
சீரான தன்மைந்தன் உடலின்மீதே
வருமந்த தேர்க்காலைச் செலுத்தி ஆண்ட
மனுவேந்தன் ஆண்டவட்டம் தஞ்சைவட்டம்.

கல்லொன்று மில்லாத இந்தநாட்டில்
கண்டவர்தம் மூக்கினிலே கையைவைக்க
மல்லொன்று புயராஜ ராஜமன்னன்
மலையெனவே தஞ்சையிலே அன்றுகண்ட
அல்லொன்று கண்டனுறை பெரியகோவில்
அவனியெலாம் புகழ்ந்திடவே அமைந்ததாலே
சொல்நின்ற சிற்பத்தின் மேன்மைதன்னைத்
தோற்றுதையா எங்கள்வட்டம் சொன்னேன்
சொன்னேன்.

(வேறு)

எத்திசையும் இசைபரப்பி இருந்தபெரும்
இசைக்கலையை எடுத்துக் காட்ட
எழுந்ததிரு மூர்த்திகளால் ஆரூரெம் தியாகேசன்
எண்டோள் வீசி
நித்தநட மாடுபுகழ் நிற்குமதற்கு
ஒப்புவமை நிலமீதுண்டோ?
நிகரிலதிப் பெரும்புகழை நினைக்குமனம்
இனிக்குமெனில் நிஜமேயன்றோ!

இந்தவட்டத்தில் அந்தநாள் வந்தான்
ஏந்தல்வேத நாயகம் பிள்ளை
சந்த வட்டத்தில் தந்தனன் பாடல்
சார்ந்த தமிழ்மணி மாலையும் தந்தான்
பிந்தியநாளில் சொந்தமாய் வந்த
பீடுசால்பேறு மன்னர்கள் எல்லாம்
முந்தியேதந்த முத்தமிழ்ச் செல்வம்
மூவுலகத்திலும் ஈடில்லை கண்டீர்.

சிறுமையுள் பட்டுப் பண்டை
சீரழிந்து அழியுங்காலை
சிறுகதைச் செல்வம் கூட்டி
செந்தமிழ்க் கினிமையூட்ட

மறுமலர்ச்சிக்கு வித்தை
மண்ணிடை விதைத்துவிட்ட
மறையவன் கு.ப.ரா:-முன்
மலர்ந்தது எம் குடந்தையன்றோ?

கூசிய தமிழன் வெற்றி
கூறிமுன் எழுந்துநிற்க
கூவமும் கங்கையாகும்
இலக்கியப் புதுமைகாட்டி
காசினி புகழ்ந்துபோற்ற
காவிரிக் கரையில்பூத்த
கற்பனைச் சிற்பி எங்கள்
கல்கியை மறக்கப்போமோ?

வேறு

தில்லையாடி வள்ளியம்மை வந்ததிந்த வட்டமே
தென்னகத்தின் சர்தார்வேத ரத்னமிந்த வட்டமே
முந்திஉப்பு சத்தியப்போர் புரிந்ததிந்த வட்டமே
முரசுகொட்டி தமிழ்பரப்பி நிற்பதெங்கள் வட்டமே

மூக்கிற்கு நல்லசுகம் தருகுதையா
முழம்முழமாய் விற்கும் தஞ்சைக் கதம்பந்தானும்
தேக்கிமணம் வீசுதையா திருவாரூரின்
தீங்கலவைச் சந்தனத்தின் பெருமை காணீர்!
பார்க்கின்ற பாலர்முதல் விருத்தர் யாரும்
பலதோன்ற நகைக்கும்வகை தலையை ஆட்டி
நேர்நிற்கும் பொம்மையிது எங்கள் வட்டம்
நீண்டநாள் கண்டதொழில் வண்ணம் கண்டீர்!

நெட்டிவேலை செய்திடுவோம்
நெல்லில்மாலை கட்டிடுவோம்
கெட்டிஉப்புக் காய்ச்சிடுவோம்
எட்டுத்திக்கும் தந்திடுவோம்
மட்டில்ஏலக் காயதனால்
மாலைகட்டி மகிழ்ந்திடுவோம்
கொட்டிக்கொட்டி வெண்கலத்தில்
கோடிபண்டம் குவித்திடுவோம்

பட்டினிலும் பருத்தியிலும் ஆடைவேண்டின்
பாருமையா கூறைநாடு கும்பகோணம்
கொட்டியிடும் ஜீனிஒரு நிமிடம்தன்னில்
கோஜிஒன்று ஆலைஉண்டு வந்துபாரும்
மட்டில்புகழ் சரபோஜிகாத்த கலைகள்
வளருதையா தஞ்சையிலே வகைவகையாய்
கெட்டவரைத் தூக்கிலிட்டுத் தண்டிக்கின்ற
கீழான தூக்குமரம் இங்குஇல்லை

பதவிவிட்ட காமராஜர் பாரோர்போற்ற
பாங்குடனே முதன்முதலா எங்கள்வட்டம்
விதவிதமாய் அலங்கரித்து ஏற்றுநிற்க
வீறுகொண்டு முழங்கியதை மறக்கலாமோ?
சோதரர்காள் எங்கள்வட்டம் பெருமைதனை
சொல்வதென்றால் கவியரங்கம் நீண்டுபோகும்
வாதுக்குச் சொல்லவில்லை வந்துபாரும்
வணங்கிஉம்மை அழைக்கின்றேன் வாரும்வாரும்!

★

தலைவர் :

உடலெல்லாம் மணக்க மணப்பொருள் பலவும்
உதவிடும் பெருந்தொழில் உடையோன்
திடமுறும் வரத ராசனார் தஞ்சைச்
சிறப்பெல்லாம் பாவினாற் சொன்னான்
மடமயில் நங்கை கண்ணகித் தெய்வம்
வளத்திரு நெறித்தமிழ் நாவில்
நடமிடும் ஞான சம்பந்தன் வந்த
நன்மையும் எனவும் சொன்னான்.

இனிமேல்

தென்னாற்காட் டுப்புகழைச் சீராய் உரைப்பதற்கு
ஞன்னாகவே கிருஷ்ண மூர்த்தியிங்கு முன்வருவார்.




## கவிஞர் லால்குடி கிருஷ்ணமூர்த்தி

எங்கள் மாவட்டம்
எளிய மாவட்டம் தான்
பொங்கிப புகழ் பரப்பி
பூவுலகின் திலகமெனச்
சங்க முழக்குமுயர்
தங்கத் தமிழ் நாட்டின்
எங்கள் மாவட்டம்தான்
இதயத் திருவட்டம்!

உலகின் கலைச்சின்னம்
ஒப்பிலாப் பெருங்கூத்தன்
இலகும் திருத்தில்லை
எங்கள் நகர்; நிமிர்ந்துரைக்க
நிலவும் பொற்கூரை
நிழலொடு தமிழ்காத்து
பலவும் பயிற்றுவிக்கும்
பல்கலைக் கழகமுண்டு!

நாமார்க்கும் குடியேயல்லோம்
நமனையுமஞ் சோமென்ற
கோமானும் தென்னார்க்காட்டின்
குடிமகனாய்ப் பிறந்தவன்தான்
தாமார்க்கும் குடியேஅல்லாத்
தன்மையான் நாவுக்கரசின்
பாமாலை கேட்கயிங்கே
பாடலியாய் இருக்கைகொண்டான்!

அடிமையாய்த் தானிருந்தும்
ஆண்டவன் தமிழுக்கிங்கே
அடிமைதான் என்றுணர்த்தி
அவனியே வியக்குவண்ணம்

துடியிடை புரவைஊடல்
துடைத்திடத் தூதனுப்பிக்
கடிமணம் புரிந்தநம்பி
பிறந்ததும் எங்கள்மண்ணே!

மூவரும் இரவில் ஓர் நாள்
மொழிவிளக் கேற்றிவைத்து
நாவரும் தமிழால்ஐயன்
நற்கழல் பாடிடும்போது
தேவருங் காணுமாலும்
மூவரை நெருக்கிநின்று
பாவரும் தமிழைக்கேட்ட
கோவலூர் எங்களூரே!

கடையெழு வள்ளல்தம்மில்
திருமுடிக் காரியண்ணல்
குடைநிழல் படர்ந்தபூமி
கோலுடை ஔவையாச்சி
படைமிகு வேந்தர்மூவர்
பார்த்திடத் திருமணந்தான்
நடைபெறச் செய்தாளென்பர்
பாரியின் மகளிர்க்கிங்கே!

வள்ளலார் இராமலிங்கம்
வாழ்ந்ததும் வலிமைமிக்க
சொல்லெல்லாம் சூடுஏற்றிச்
சோதியைக் காணவைத்து
வெல்லலாம் பிறவிநோயை
விளக்குவேன் சாகாவித்தை
கொள்ளலாம் வாரீரென்று
கூவியதும் இங்குநின்றே!

அஞ்சுதல் கப்பமீதல்
அடிமைபோல் வாழ்தலெல்லாம்
நஞ்சுடைச் சொற்கள் சீச்சீ
நமக்கிவை ஒவ்வாச் செய்கை
வஞ்சமாய் என்னைச் சூழ்ந்து
வாளினைக் காட்டினாலும்
கொஞ்சமும் பணியேன் தில்லிக்
கொற்றவன் தலைமை யேற்று

பஞ்சைபோல் பயந்து வாழேன்
என்றவன் எங்கள் தேசிங்
நெஞ்சிலே வீர மேற்றி
நிமிர்ந்த வெண்புரவி பாய
வெஞ்சமர் போந்து ஆங்கு
வீழ்ந்துமே வெற்றி கண்டான்
செஞ்சியின் வீரக் காதை
செவிகளில் ஒலிக்கு தின்றும்

பெண்ணை தானெங்களன்னை
கெடிலமும் செவிலியாவள்
சின்னவள் பம்பை சின்னாள்
சேற்றினைக் குழப்பிச் செல்வாள்

தண்ணியைத் தேக்கிப் பண்ணுன்
 தந்திடுங் குளங்க ளேரி
எண்ணாறும் இறைப்புக்கேணி
 இவையெலாம் நீர்வளங்கள் !

எண்ணெயை பொழியும் மணிலாப்
 பண்ணைகள் மிகுந்தநாடு
செந்நெல் பருத்தி வாழை
 கம்பு கேழ்வரகு சோளம்
கண்ணென நாங்கள் போற்றும்
 கரும்பொடு தெங்கும் சூழ
தன்னகம் நிறை வுபெற்ற
 பொன்னகம் எங்கள் பூமி !

நெய்வேலிச் சுரங்க மென்றால்
 நீங்க ளென்ன உலகனைத்தும்
கை நீட்டிக் கரி கேட்கும்
 கார்த்திகை சுற்ற அல்ல
தொய்வேது இனிநமக்குத்
 துயரேது தொழில் வளந்தான்
உய்விக்கும் நெய்வேலி என்னும்
 உறு துணை நாட்டினிற்கே!

வட்டம் திக்கிற் கொன்றாய் இவன்
 வாழ்வோர் முப்பது லட்சம்
சட்டம் மதித்திடும் மக்கள் இங்கு
 சான்றோர் தொகையும் பெரிது
திட்டம் வகுத்திடில் ஆங்கே உடன்
 செய்கையால் நிற்பவர் நாங்கள்
பட்டம் பதவிகள் தேடிபெரும்
 பல்டியடிப் பவரில்லை!

கட்சிகள் ஆயிரமுண்டு ஆயின்
 காட்டுக் குழப்பங்கள் காண்பதற்கில்லை
நச்சுப்புலமைகள் காணு எனில்
 நாவலர் பாவலர் நாடெங்குமுள்ளார்
உச்சியில் நிற்பவருண்டு கையில்
 ஓடெடுத்து வீதிசுற்று வோரில்லை
எச்சிற் கலைகளைப் போட்டால் உடன்
 ஓடிவரும் தெருநாய்களும் பஞ்சம்

பாரி மிட்டாய்தரும் நெல்லிக்குப்பம் நல்ல
 பலாக் கனிதரும் பண்ணுருட்டி
நாரீ மணிகளின் பட்டுச்சேலை கொள்ளும்
 நாணயம் வாய்ந்த சிறுவந்தாடு
கோரி வருபவர் ஆயிரமாய் நாங்கள்
 கூவி யழைத்திடத் தேவையில்லை
வாரீ ரொருமுறை நீங்களெல்லாம் வந்து
 நேரினில் உண்மையைக் கண்டிடுவீரே !

தலைநகர் ரயிலில் செல்வோர் பின்
 தமிழகம் கண்டிட வருவோர்
தொலைவழிப் பயணச் சோர்வும் அதை
 சுற்றிடும் சுவைமிகு துயிலும்
கலைந்திட நடுநிசிப் போதில் கண்
 கசக்கியே சன்னலில் மெதுவாய்
தலைதனை நீட்டியே பார்க்கும் அந்த
 விழுப்புரம் ரயிலடி எமதே !

எங்கள் மாவட்டப் பெருமையெலாம் இன்னும்
 எத்தனையோ உண்டு சொல்வதற்கே
இங்கு நேரமில்லை அங்குவந்தால் நன்கு
 எல்லா முணர்ந்து வியந்திடுவீர்
சிங்கத் தமிழர்கள் சந்தையிலே எங்கள்
 பிஞ்சுத் தமிழரும் வேங்கைகள் போல்
மங்காப் புகழொடு நின்றொளிர நீங்கள்
 வாழ்த்தி யருள நான் வேண்டுகிறேன்.

★

தலைவர் :

தென்னார்க்காட் டின்புகழைச் செய்ய தமிழ்ப்பாவில்
 பொன்னுப் புகழ்ந்தான் பொருந்துகிருஷ்ண
 [மூர்த்தியிங்கே
இல்லை வளமென் றெவருரைப்பார் இங்கன்றே
 தில்லை வளநகரம் திகழுமென்றான் மூவரிரா
நல்விளக் கேற்றி நயஞ்செய்த சீர் சொன்னான்
 பல்வளங்கள் பிறவும் பரிந்துரைத்துப் பாரித்தான்.

இனிமேல்

சீலமுறு பெரியோர்கள் சேரும் வட்டம்
 தென்னகத்தில் மாம்பழத்தை உலகுக் கேற்றும
ஞாலமிது எனும்புகழ்சொல் குமார சாமி
 நற்றமிழிற் சேலத்தின் பெருமை சொல்வான்.




கவிஞர்

சே. ர. குமாரசாமி

சேலத்து மோகனூரைச் சேர்ந்தவராய்ச் சென்னையிலே
காலம் கழிக்கும் கலைமகள் தொண்டனுர்,

சாமிநா தையர்தமைச் சார்ந்து தமிழ்உணர்ந்து
பூமிநா கூறும் புகழெய்தி ஈண்டுப்

பீடத்தில் வீற்ற பெரியார் சிவாஜ
ஈடற்ற கீர்த்திக்கு இணையேது ; மண்புகழும்

தாங்கிய சான்றோர்கள் தம்மாலே! சேலம்தான்
வாங்கிய சீர்க்கும் வரம்பூண்டோ? பாங்குறவே

பாரதத்தின் உச்சப் பதவி சுரந்திருந்த
வாரணம் ராஜாஜி, வக்கீல் விஜயராக

வாச்சாரி, காந்தீய வாய்மை ஒருசிறிது
மூச்சாரப் பாடிய நாமக் கல்லாரும்,

அருந்தமிழில் நல்லறிவும் ஆராய்ச்சி தானும்
பொருந்த, சிறந்த பொறியியலார் மாணிக்க

நாயகரும் எங்களது நல்லமா வட்டத்தார்
தூய கணிதத்தில் தொல்லறிவு மிக்குடையார்

மெத்த பயனளிக்கும் மேட்டூர் அணைக்கட்டைச்
சித்தத்தி லேவரைந்த சிற்பி, தமிழை

உயிரோ வியமாய் உயிர்ப்புறவே செய்த
பெயரோடு நின்ற பெருந்தகையார்! இன்னோர்கள்

மன்னியது எங்களது மாவட்டம் என்றுரைத்தால்
புண்ணியத்தா லன்றோ பொலிவுற்றோம்! நண்பர்களே?

மாவட்டம்! மாவட்டம்! மாவட்டம்! 'மா'வினுக்கு
நானொட்டும் மூன்றுபொருள் கேளீர்! நெருங்கப்

பெரிதென்றே ஓர்பொருளாம்! பேசற்கே மிக்க
அரிய சிறப்புடைந்தே என்றோர் மறுபொருளாம்;

மற்றோர் பொருளதுதான் மாங்கனிகள் உள்ளதென்றே;
கற்றோரே கேளீர்! கருத்துறவே சொல்லற்காம்.

மாவட்டம் எங்களது மாவட்டம்! மண்பரந்த
மாவட்டம் எங்களது மாவட்டம்! பேர்சிறந்த

மாவட்டம் எங்களது மாவட்டம்! மாங்கனிசேர்
மாவட்டம் எங்களது மாவட்டம்! செந்தமிழில்

மாவட்டம் என்னும் மணிமொழிக்கு ஏற்புடைய
மாவட்டம் எங்களது மாவட்டம்—பூவட்டம்

எங்கள்மா வட்டம் அளிக்கின்ற மாங்கனியை
அங்கை அமுதமென ஆசையொடு தின்றுவக்கும்!

மல்கோவா குண்டு நடுச்சாலை மாங்கனிகள்
நல்கோமென் றாலிந்த நானிலம்தான் தீஞ்சுவையைக்

கண்டு நயத்திடுமோ? நல்ல கனிவகைகள்
உண்டுசே லத்தில்! உயர்வன்றோ? நண்பர்களே!

எங்கள்மா வட்டத்தில் ஏர்க்கா டறிவீரோ?
பொங்கும் பகலவனின் பொல்லா நெருப்பகற்றி

ஆக்கையைக் காக்கும் அழகு மலையாகும்!
நாக்கைச் சுவைபடுத்தி நல்ல எழுத்தாளர்

கற்பனையை நீட்டுகின்ற காப்பிவிளைத் தளித்து
விற்பனைக்குப் போக்குகின்ற விண்ணார் மலையாரும்

குன்றங்க ளுக்குக் குறைவில்லை! மாருதத்து
மன்றங்க ளாகும் மகிமையினைப் பார்க்கலாம்!

திக்கு புகழும் திருச்செங்கோட் டும்மலையில்
குக்குடம் கொண்ட குமரவேள் நின்றருள்வான்

மாதுக்குப் பாதி மறுபக்கம் ஈந்துவிட்ட
ஆதிப் பெருமூர்த்தி அர்த்தனா ரீச்சுரன்

அங்கேதான் உண்டே! அருணகிரி, வள்ளியம்மை
தங்கேள்வ னுக்குத் தமிழ்ப்பாட் டிசைக்கையிலே

நாகா சலமென்று தோத்தரித்த நன்மலையும்
ஆகா இதுவன்றோ? அங்கேதான் கண்ணகியும்

சங்கம் வளர்த்த மதுரைக்குத் தீயூட்டிப்
பங்கமெலாம் நீக்கிப் பதியொடுவா னூர்தியிலே

கட்புலம் கண்டு வியந்து களிகூர
விட்புலம் போயடைந்த விந்தை நிகழ்ந்தது!

பெற்ற புகாரும், பிழைசெய்து கண்ணகியை
மற்றவ னோடே மனங்கலந்து வாழுதற்குக்

கூடாமல் பொல்லாக் குறைசெய்ய, மாமாடக்
கூடற் பதியும்தான் கோவலனைக் கள்வனெனச்

சாற்றி உயிர்வாங்கிச் சாப்பிட்டே ஏப்பமிட,
ஆற்றிக் கணவனொடே ஆகாச ஊர்தியிலே

செல்லப் புரிந்ததெங்கள் சேலம்மா வட்டமே!
நல்ல செயலாளர் நாங்களன்றோ? காண்பவர்க்கு

மால்தந்த கொல்லி மலையிங்கே தானுளது!
கோல்தந்த வேந்தர் கடையேழு வள்ளலுளே

ஒப்பில்லா தோன்வல்வில் ஓரி! அவன்மலையில்
செப்பிடும் கொல்லிமலைப் பாவை திரிந்தாள்!

அதிகமான் ஆண்டதுவும் ஔவை பிறந்து
பொதிவிழ்த்துச் செந்தமிழைப் போற்றக்கொடுத்
துதவும்

எங்கள்மா வட்டமே! என்றால் இதன் சிறப்பை
உங்களுக்கு எவ்வாறு உரைத்திடுவேன் சோதரரே!

ஒப்பில்லா நண்ணீர் ஒகனக்கல் நல்லருவி
எய்ப்பில் பெருநிதியம்! எங்கள்மா வட்டத்துக்

குற்றாலமாகும்! குளித்துச் சுகித்தவர்கள்
பெற்றானந் தப்பேற்றில் பித்துற்றுப் போவார்கள்

நல்லறிவைச் சேர்த்துவைத்து நாட்டுக்கு வேண்டுங்
[கால்
கொள்ளத் தருமறிஞர் கோள்போல் சுழன்றுவரும்

காவிரியின் நண்ணீரைக் கட்டி உழவனுக்கு
மேவிடவே ஈகின்ற மேட்டூர் அணைக்கட்டோ

எங்கள்மா வட்டத்தின் ஏற்றம்! திருச்சிதஞ்சை
பொங்கும்செந் நெல்விளைத்துப்போகமுறத் தாய்போல்

ஊட்டுதற்கு மேட்டூர் உளதென்றால் சேலம்சீர்
காட்டுதற்கு வேறு கழறுவதோ? நண்பர்களே!

மையல்தரும் நல்தார மங்களத்துச் சிற்பத்தில்
எய்தலுறும் ஆனந்தம் ஏதென்று கூறிடுவேன்!

எங்கள்மா வட்டம் இரும்புடைத்து! நீங்களெலாம்
பொங்கி எழுதுதற்குப் பூணுகின்ற காகிதத்தை

ஆக்கித் தருவோமே! ஆடைகளைக் கைத்தறியால்
ஆக்கித் தருகின்ற ஆக்கமுறு மாவட்டம்!

ஆத்தூரின் நல்ல அமுதொக்கும் நல்லரிசி
ஏத்தும் தகைமைத்தே! எங்கள்மா வட்டத்தின்

ஏற்றத்தை யாரால் இயம்புதலாம்? சீர்த்தியெனும்,
நாற்றமெலாம் உண்டே நமக்கன்றோ—நீட்டமுறும்

ஞாலம் நினைவினின்று நீக்காத மாம்பழத்துச்
சேலத்துக் கீடுண்டோ செப்பு.

★

**தலைவர் :**

மாவட்டம் தான்பிறந்த மாவட்டம் என்றுபல
பாவட்ட மாகப் பரிந்துரைத்தான் ராஜாஜி
மாணிக்க மாதி மனிதக் கடவுளரை
ஆணிப்பொன் னுத்தந்த அருமைத் திருவட்டம்
தோப்புமுண்டு குன்றத் தொகையுண்டு மெய்யமுதாம்
காப்பியுண்டு காப்பியத்திற் கண்டபுகழ் தானுண்டு
என்றே குமர சாமி யிசைத்துரைத்து
நன்றாகப் பாடி நலந்தந்து நின்றானே.

இனிமேல்

அருணா சலனார் அறிவோ டுணர்ச்சிமிகத்
தெருளோடு கோவைத் திறம்பேசு வார்கேண்மின்




## கவிஞர் கே. ஸி. எஸ். அருணாசலம்

கருங்கயற் கண்மலர்ந்து காவேரி பாடிவர
கருங்குவளைக் கண்விழித்துக் கரையிரண்டும்
[காத்திருக்க
தேன்கதலிக் குலைதூங்கும் திருச்சிப் பெருநகரின்
வானப் பெருவெளியில் வந்துலவும் மேகமகள்
செந்தமிழைக் கேட்பதற்குத் தீயை நிலவாக்கும்
நந்திக் கலம்பகத்தின் நாயகன்தன் முன்னோரின்
சின்னத்தின் எழில்தேங்கும் சிற்பக் கலவடிவின்
கன்னத்தைத் தொட்டுக் களித்து விளையாடும்
கலைக்காட்சி எத்தனையோ காட்டி மகிழ்விக்கும்
மலைக்கோட்டை தன்னைத்தன் மார்பில் சுமந்திருக்கும்
சோழத் திருச்சிதனில் தோன்றித் தமிழ்த் தெய்வம்
வாழப் பணிபுரிந்து வளர்க்கின்ற மன்றத்தீர்!
பூவூறும் தேனிடையே போயூறி வந்ததென
நாவூறும் தீந்தமிழால் நாடினிக்கப் பாட்டிசைக்கும்
பாவலரே! ''நன்னூல்'' பலகற்ற பண்டிதர்காள்!
தமிழ்வாழக் காண்பதற்கே தான்வாழ்ந்த
[பெருந்தகையின்
அமிழ்தனைய சொற்கேட்டு அன்பு வடிவாகிச்
சுவைதேர்ந்து ''கலைமக''ளின் சொல்தேர்ந்து
[நாடெங்கும்
அவைத்தலைமை பூண்டுவரும் ஆய்வாள! என்
[வணக்கம்!

நாவை யடக்கிவைத்து நல்லபடி சிந்தித்துக்
கோவைமா வட்டத்தின் குரல்கொடுக்க வந்துள்ளேன்!
பொள்ளாச்சி அல்ல பொருளாட்சி அதும்பிசகு!
புள்ளாட்சி சே! சே! சே! பொழில்வாய்ச்சி!
[என்றெல்லாம்
ஆராய்ச்சி செய்திடுவோர் அதில்முடிவு காணுமல்
போராடிக் கொண்டிருக்கும் பொள்ளாச்சிக்
[காரன்நான்
எங்கள்மா வட்டம் எழுந்தருள்வீர் பாவலரே!
தங்கள் வரவுக்குத் தலைவணங்கிக் காத்துள்ளேன்!
கற்பனை என்னும் கனகரதம் பூட்டியதை
முற்றும் தனில்நிறுத்தி முகமலர்ந்து வந்துள்ளேன்
காசு பணம்வேண்டாம் கைநிறையப்
[பொன்வேண்டாம்
காசு பணமிருந்தால் கவிஞரென வாழ்வீரோ?

பொன்தேரி லேறி எழுந்தருள்க! போய்வரலாம்
மின்போலப் பாய்ந்து மேகவழிச் சென்றிடலாம்!
'' குமரி ''க்குப் பூச்சூட்டிக் குங்குமப் பொட்டிட்டு
இமையோரம் மைகூட்டி எழில்காட்ட வந்தவரே!
தேனோடும் மாமலைசூழ் தென்பாண்டி நாடான
நான்மடக் கூடல் நகர்போற்றி நிற்பவரே
சேலத்தின் மாண்புதனைத் திருச்சபையி லுள்ளவர்க்கு
ஏலமிட வந்திருக்கும் எங்கள் குலக்கவிஞ!
வேர்க்கோடு வீழாமல் வெம்மை விரித்திருக்கும்
'ஆர்க்காடு' தன்னை அழகுசெயும் நாவலரே!
' நஞ்சை ' விரித்துவைத்து நல்ல பணங்கொழிக்கும்
தஞ்சை தனைப்புகழத் தருக்கோடு வந்தவரே!
' நெல்லைச் சுமந்தவரே! நீண்டவட கோடிச்செங்
கல்லைப் புகழ்ந்து கவிகட்டி வந்தவரே!
பாளை கமுகு பரிசுடைய பந்தர்க்கீழ்
வாழை தலையசைக்கும் வண்ணக் குலைதூங்க
ஆசை யுடன்செய்த அலங்கார முன்முகப்பு
வாசல் தனில்விளங்கும் வனப்புதனைக் கண்டீரோ?
நெற்றிப் படமணிந்து நிற்கின்ற யானைகளும்
முத்து மணிவரிசை முன்வாசல் தொங்குவதும்
இத்தனையும் உம்மையெல்லாம் எதிர்கொண்
[டழைக்கத்தான்!
முத்தமிழும் கற்று முறைகண்ட பாவலர்காள்!
கோவைமா வட்டத்தின் எல்லைதனைக் கூடிவிட்டோம்
ஆவலுடன் உங்களுக்கு அதன்பெருமை
[கூறுகின்றேன்!
பேரேது தெரிந்தீரோ பேப்பரிலே பார்த்திருப்பீர்
ஈரோடு என்பதுதான் இவ்வூர் அறிந்தீரோ!
பெரியார் என்ற பெயரின் பொருள்தன்னை
அறியார் இருந்திட்டால் ஆரென்று கூறீரோ?
' சில் ' லென்று நெஞ்சம் சிலிர்த்தோடும் காவேரி
' கல் ' லென்று சிரித்துக் களித்தோடும் பெண்ணரசி
நெஞ்சம் குளிர்ந்து நிறைவோடு பொங்குகிறாள்
மஞ்சள் குளித்துநிறம் மாறி மயங்குகிறாள்!
பொன்னியவள் பூவுடலில் பூசியுள்ள மஞ்சளெல்லாம்
என்னருமை ஈரோடு ஈன்றளித்த மஞ்சளையா!
கொங்குவேள் கதைதன்னைக் கொடுத்த பெரும்புலவன்
இங்குதான் இருந்தான் இருவிசய மங்கலம்காண்
கூனிக் குறுகிக் குறைபட்டு நெடுநீல
வானத்தை நோக்கித்தம் வாய்திறந்து நிற்கின்ற
சின்னஞ் சிறுமணச் சிற்றால யமிவைகள்
அன்னவன் ஊருக்கு அடையாளம் காட்டுவன
சிந்தனைத் தேரூர்ந்து சிரித்துவரும் தோழர்களே!
வந்த இடமின்னென்று வரலாறு கொண்டஇடம்

பவானிக் கரையினிலே பாடல்கொளும் மாவீரன்
ஜவானைப்போற் சீறிச் சமர்செய்த கொங்கனவன்
சின்னமலை என்கின்ற தீரன்பேர் கேட்டதுண்டோ ?
சொன்னவுடன் வெள்ளையர்க்குச் சுரம்வந்து
[மெய்நடுங்கும் !

வெள்ளையரை எதிர்த்து வெகுண்டெழுந்த வேளாளன்
தெள்ளுதமிழ் நாடுய்யத் திரண்டெழுந்த
போர்க்கோலம் !

எவர்வீடு சென்ருலும் எடுத்து விரிக்கின்ற
பவானி ஜமுக்காளம் பார்த்தால் பசிதீரும் !
சொல்ல மனமுருகும் துயரக் கதைகேட்க
நில்லுங்கள் உங்களது நெஞ்சில் நிறுத்துங்கள் !
சாந்தி வடிவாகி தருமத்தின் ஒளியான
காந்தி வழிநின்று கரத்தில் கொடியேந்தி
கருப்பூரம் போலெரிந்து கடமை முடித்திட்ட
திருப்பூர் குமரனவன் திருக்கோயில் கொண்டஇடம் !
சனியன் பிடித்தெழுந்த தரித்திரத்தை வெல்லுதற்கு
பனியன் கொடுக்கின்ற பாக்டரிகள் பார்த்தீரோ ?
விண்ணில் வழிமாறி வெண்மேகக் கும்பலெல்லாம்
மண்ணில் இறங்கி மலையாய்க் குவிந்ததுபோல்
பஞ்சு குவிந்திருக்கப் பார்த்திருக்கும் திருப்பூராம்
நெஞ்சம் தனைத்திறந்து நீங்களிதை வைத்திடுங்கள் !
கோவைஒரு "மாஞ்செஸ்டர்" என்று பலகூறிப்
பாவலரே நீங்களெல்லாம் பாடியதை ஏன்மறந்தீர் ?
கல்லின்மேல் காலிடறி வீழ்ந்தாலும் ஏதேனும்
மில்லின்மேல் வீழ்ந்தன்றே வேறுபுறம் வீழ்ந்திடுவீர் ?
பொங்கியெழும் கண்ணீரில் புரையோடும்
[நோய் நொடியில்
தங்கிக் கரைந்தவராய்ச் சாக்காட்டை மேவுகிற
அழுவதற்கும் உழைப்பதற்கும் அவனியிலே
[வந்துதித்த
தொழிலாளி நெஞ்சத்தில் சூரத் தனமேற்றி
கடல்மேல் படைகொண்டு கப்பல் தனையோட்டி
அடலேறு போல்நின்ற ஐயனவன் வ. உ. சி.
சங்க மெனும்கல்ப தருவதனை நட்டஇடம்
எங்களது கோவை எழிலார்ந்த மாவட்டம் !
பணங்குவித்துத் தொழிற்சங்கப் பாட்டாளிக்
[கூட்டத்தின்
பிணங்குவிக்க எண்ணினவர் பெற்றதெல்லாம்
[பெருந்தோல்வி
பேரூர் எனப்புகழும் பேருடைய சிற்றூரைப்
பாரீர் மனமகிழ்ந்து பாவலரே ! நாவலரே !
இறவாப் பனையென்றும் பிறவாப் புளியென்றும்
புரியாக் கதைசொல்லி போற்றும் முறைஉண்டு
கல்லூரி தனிலின்று கல்விபெறும் மாணவிபோல்
மெல்ல அடியிட்டு மினுக்கி மலர்சூடி
கைகால் அசந்து கலங்கி நடைதளரும்
நொய்யல் எனச்சொல்லும் நோஞ்சான் நதிக்கரைகள்
பரந்து மணம்விரிந்து பக்குவமாய்ப் பாத்திகளாய்
மருக்கொழுந்து என்கின்ற மாராப்புப் போட்டிருக்கும்
கனக சபைதன்னைக் காண்பவர்கள் உள்ளத்தின்
நினைவினில் என்றென்றும் நிலைத்திருக்கும் சிற்பங்கள்
உயிரிருக்கும் கண்களிலே ஒளியிருக்கும் அற்புதமும்
வயிறிருக்கும் நல்லமைப்பும் வாலைக் குமரியவள்
கூனப் பிறைநுதலும் குளிர்கருணை விழிமலரும்
தேனூரும் செவ்விதழில் தேங்கும் இளநகையும்
ஊழிப் பருவத்தின் ஓங்காரப் பேரொலியில்
ஆழி கரைபுரள அண்டம் கிடுகலங்க
வேதங்கள் தேடி விழையும் ஒருமுதல்வன்
பாத மெடுத்துப் பயிலும் திருநடனம்
காலமெல்லாம் கண்டாலும் கண்கள் சலிக்காது
ஆலம் தனையுண்ட அன்பன் திருக்கோலம் !
கச்சணிந்த மார்பகத்தாள் கருவிழியாள் தண்ணுசை
மச்சா னுடன்சேர்ந்து மாலைப் பொழுதினிலே
அவிநாசித் தேர்தன்னை அண்ணுந்து பார்ப்பதுதான்
கவிபாடும் கவிஞருக்குக் கரும்பாய் இனிக்காதோ ?
கவிபாடும் பாவலரே கன்னித்தமிழ் நாட்டில்
அவிநாசி லிங்கத்தை அறியாதார் ஆருண்டு ?
நிலைத்த புகழோடு நிலவுலகில் நின்றுலவ
கலைக்க ளஞ்சியமாம் கருவூலம் தந்ததுபோல்
செந்தமிழ் நாட்டுக்குச் செய்த பெரும்சேவை
இந்தத் தலைமுறையில் எவர் செய்தார்இந்நாட்டில் ?

கேளுங்கள்,

நீலகிரி என்றவுடன் நெஞ்சில் குளிரடிக்கும்
ஞாலப் புகழ்கொண்ட நல்ல மலைச்சாரல்
பாரதத்தில் தாம்கொண்ட பதவி பழசாகி
சாரமற்றுப் போன சரக்கான மன்னர்களும்
காசுக்குத் தட்டின்றிக் காலம் கழிப்பவராய்
"ரேசு"க்கு வந்துறங்கும் நிலையான மாளிகைகள் !

கலைவளர்க்க நல்லஎழிற் காட்சிதரும், என்கவிதைத்
தலைவலியைப் போக்குதற்கும் தைலத்தைத் தந்துதவும்
ஆனமலைக்கு அன்பர்களே வந்திட்டோம்.
வானைப் கிளந்து வழிமறிக்கும் நீள்கமுகு
தேனில் குளித்துச் சிரமாட்டும் மரக்கூட்டம்
மானின் விழிகண்டு மயங்குகிற மந்தியினம்
தேக்கு மரம் ஈட்டிமரம் எங்களுக்குப் புகழீட்டித்
தேக்கு மரக்கூட்டம் தேர்க்கூட்டம் போலிருக்கும்
காலில் மிதியுண்டு கசங்கி உடல்நொந்தும்
ஏலம் மணமணக்கும் எண்ணினுல் வாயினிக்கும்
ஆனைப் பெருங்கூட்டம் கண்டவுடன் ஆளோட்டம்
கானில் திரிந்து கலக்கிவரும் காட்டெருமை
துள்ளிவரும் மானினத்தைத் துரத்தும் விலங்கினங்கள்
கொள்ளைநோய் மலேரியாக் கொட்டம் அடக்குதற்கு
சிங்கோனு எஸ்டேட்டை சிந்தித்தால் சுரம்தணியும் !
எங்கேனும் இதற்கு இணையுண்டோ சொல்லுங்கள் !
பொள்ளாச்சிப் பக்கமாய்ப் போய்வரலாம் வாருங்கள்
பொள்ளாச்சி சந்தையிது புகழ்பெற்ற சந்தையிது
நின்றிருக்கும் ரயில்வே நிலையத் தருகினிலே
ஒன்றரை மைலுக்கு உடலின்சுற் றளவாகும்
குன்ருகக் காய்கனிகள் குவிந்திருக்கும் தானியங்கள்
அன்ருடத் தேவைக்கு அத்தனையும் இங்குவரும்
வாரம் ஒருதிருநாள் வரவழைக்கும் சந்தையிதில்
நூறா யிரம்ஆடு மாடு நுழைந்துவரும்
காலனிகள் என்பதெல்லாம் கைநழுவும் காலமிதில்
காலனி ஒன்றிங்கே கட்டியுள்ளோம் காணீரோ !
மிகாமல் உரைத்தாலும் மேலான உண்மையிது
மகாலிங்க புரத்தின் மாட்சிதனை நாடறியும் !
வடக்கிருந்து வருவோர்க்கு வாசல் முகப்பாகக்
கிடக்குமெழிற் காலனிதான் கேடயங்கள்
[பெற்றதுகாண்
ஐய மிருந்தால் அவரே இங்கிருக்கின்ருர்
பொய்யோ நிசந்தானே போய்க் கேட்டுப்பாருங்கள்
கலைக்கடலைத் தாண்டிக் கரைகாண வந்தவரே !
நிலக்கடலை கண்டு நினைவு மயங்காதீர் !
சோழ வளநாட்டில் தோன்றியுள்ள ஆலயத்தில்
வாழை யடிவாழையாய் வைத்திடுவார் நெய்விளக்கு
நெய்விளக்கில் சரிபாதி நிலக்கடலை எண்ணெயுறும்
கைகொடுத்து இருள்தடுத்துக் கடவுளையே
காப்பாற்றும் !

ஏழு மலைகுடைந்து இசைத்துவரும் கால்வாய்நீர்
ஆழக் கடல்போல அணைக்கட்டில் தேக்கமுறும்
நிரம்பி வழிந்தினிமேல் நிலமகளை நீராட்டும்
பரம்பிக் குளத்தணையைப் பார்த்தவர்கள்
[போற்றுகின்றார்
அதற்கும் முன்னோடி யாக உழைத்தவரென்
எதிரினில் இப்போது இச்சபையில் இருக்கின்றார்.
மன்றாடி ஒன்றுரைப்பேன் மறவாது பாருங்கள்
மன்றாடி யார்நமது மந்திரியார் வாழ்பகுதி
சென்றேடி காணுங்கள் சீக்கிரமே திரும்பிடலாம்
காங்கயத்துக் காளைதனைக் கண்டீரோ காளைகளே ?
நீங்கள் இதுகண்டீர் நிகரேதும் கண்டீரோ !
காங்கயத்துக் காளைகளைக் காதலித்துக் காலமெல்லாம்
எங்கும் பசுவினங்கள் இருக்குதையா உம்மூரில் !

கலைக்கடலில் மூழ்காத வாழ்வென்ன வாழ்வே!
கவிரசனை இல்லாத வாழ்வென்ன வாழ்வே!
நிலக்கடலை வேண்டாத நெஞ்சென்ன நெஞ்சே!
நித்தமதை எண்ணாத நெஞ்சென்ன நெஞ்சே!

★

தலைவர் :

கோவைமா வட்டத்தின் கோணுப் புகழெல்லாம்
கோவையுற அருணு சலக்கவிஞன் கூறிநின்றான்
ஈரோட்டு மஞ்சள் எழில்சொன்னான் கொங்குவேள்
சீர்நாட்டும் காப்பியத்தின் செம்மைசொன்னான்
ஆகும் பவானி அமரும் ஜமக்காள [முக்கூடல்
நாகரிகம் சொன்னான் நலங்கோவைச்
[சீர்சொன்னான்
மஞ்சு குவிந்திருந்த மண்ணம்போல் எங்கெங்கும்
பஞ்சு குவிந்திருப் பூரிநலம் பாரித்தான்
கல்லூரிப் பெண்கள் கடுஞ்சினத்தைக் கொள்ள
[நொய்யல்
மெல்லூறற் போக்கை விவரித்தான் அவை
கேட்டோம்.

ஈங்கினித்தான்

சத்துடைய பாப்பாடித் தங்கள்வட வார்க்காட்டை
முத்துக்கிருஷ்ணன் இங்கே மொழிந்துபடம்
காட்டுவார்.




கவிஞர்
பு. ஆ. முத்துக் கிருஷ்ணன்

வரலாற்றுச்சிறப்பு

தொண்டைமான் இளந்திரையன் ஆண்டதாலே
தொண்டை நாடிது சான்றோர் உடையதென்று
பண்டைநாள் ஔவைதமிழ்ப் பாட்டுரைக்கும்
பல்குன்றக் கோட்டமெனும் பெயரும் ஏற்கும்
சண்டையிலே ஆங்கிலர்தம் வரவு சொல்லும்
சரித்திரத்தில் திப்புசுல்தான் வீரம்துள்ளும்
அண்டையிலே ஆர்க்காடு ராணிப்பேட்டை
அரசாண்ட அடையாளம் இன்றும் காண்போம்.

பெயர்க்காரணமும் எல்லைகளும்

ஆலமரம் ஆத்திமரம் அடர்ந்திருந்தாலும்
ஆறுகளும் காடுகளும் நிறைந்திருந்தாலும்
சாலவுமே இதற்குப்பேர் இடப் பொருத்தம் பார்த்து
சரித்திரத்தில் ஆசிரியர் வடஆர்க்காடென்றார்
கோல நெடுமால் குன்றும் சித்தூரும் வடக்கே
கூறும் சிற்றம்பலம் தென்னார்க்காடு தெற்கே
சேலம் செங்கற்பட்டு மேற்கு கிழக்காகச்
சேர்ந்திருக்கும் எல்லைகளாய்ச் சூழ்ந்திருக்கும்
கண்டீர் !

மலையின் உருவகம்

வாசமிகும் சந்தனம் தேன்மணக்கும் சவ்வாது
மலையரசி கொலுவிருக்க மான் மயில்கள் ஆடும்
பாசமிகும் சேயாறு நடைபயிலத் தொடங்கும்
பண்பாடும் நீரருவி பாராட்டும் தருக்கள்
நேசமிகும் மக்களுக்கு முக்கனியின் விருந்து
நிகரில்லா மூலிகைகள் எலுமிச்சைதந்து
வீசவரும் தென்றலுடன் வான்முகில்கள் கூடி
விளையாடும் மலைநாடாம் எங்கள் மாவட்டம்

மலைகளின் சிறப்பு

மாற்றலரும் புகஅஞ்சும் மலையடுத்த காட்டில்
வனவேங்கை சிறுத்தைப்புலி கலைமான்கள் வாழும்
தோற்றமிகும் மூங்கிலொடு கருங்காலி செம்மை
தொடுவேங்கைத் தேக்குமரம் வீடுகட்ட உதவும்
ஏற்றமிகும் சுவாமிமலை ஏலகிரிகாணின்
இயற்கை எழில் இதயத்தைமீட்டி இசைபாடும்
தேற்றமிகும் பருவதமா மலைமீது கோயில்
தெய்வங்கள் வீற்றிருக்கும் எங்கள் மாவட்டம்

ஊரும் நிலமும்

காடுமலைக் கணவாய்கள் ஆறுகுளம் ஏரி
காணுமிடம் எங்கெங்கும் சிற்றூர்கள் வயல்கள்
மேடுநிலம் புன்செய்ப் பயிர் கிணற்றுப் பாசனமாம்
மேனிஎங்கும் தென்னைபனை மாந்தோப்பு விளங்கும்
வீடுகட்ட மரம்கொடுக்கும் கல்கொடுக்கும் மலைகள்
வீரருக்கு கழிகொடுக்கும் சிலம்பம் விளையாட
பாடுபட மக்கள்பலர் இருந்தாலும் இங்கே
பற்றாது தொழில் வளர்ச்சிபெற வேண்டும் இன்னும்

நதிகளும் விளைபொருள்களும்

தென் பெண்ணை பாலாறு சேயாறு நதிகள்
செந்நெலொடு கன்னலதும் நன்செய் விளை
பொருள்கள்
முன்பெண்ணைய் கடலைக்காய் துவரைபுளி மிளகாய்
மொச்சை எள்ளுகொள் உளுந்து முத்துமலைக்
குவியும்
வன்பெண்ண மில்லாமல் வாணிபத்திற்குதவும்
வண்டியிலே ஏற்றிவந்து மண்டியிலே குவிக்கும்
அன்பெண்ணும் உழவர்குலம் ஆக்குமிவை எல்லாம்
அருமை எங்கள் மாவட்டக் கருவூலம் தானே.

தலைநகரின் சிறப்பு

தலை நகராம் வேலூரோ குறிஞ்சி முல்லை நிலமாம்
தழைத்திருக்கும் பூத்திருக்கும் பூங்கொடிகள்
எங்கும்
இலைபோட்டுப் பரிமாறும் விடுதி உணவுண்டு
எழில்மேவும் கடைத்தெருவில் ஏற்றதெல்லாம்
பெறலாம்

கலையழகின் கட்டிடங்கள் தொழிற்பயிற்சிக் கூடம்
கல்லூரி அலுவலகம் கோட்டை மைதானம்
நிலையான அமெரிக்க மருத்துவ நன்மனைகள்
தேசமிகும் பணிஇந்த நிலவுலகே போற்றும்

### கோட்டையும் கோயிலும்

கோட்டைமதில் சூழ்ந்திருக்கும் வீரர்களும்இல்லை
கோயில் மண்டபமிருக்கும் சுவாமிகளும்இல்லை
பாட்டைவழி பரவிவரும் பாலாற்றின்கண்ணே
பாலுமில்லை நீருமில்லை என்பர் ஆனால்
ஏட்டைவிட்டு நீங்காத இலக்கியம் போல்
இளங்கன்றுமுட்ட மடிசுரக்கும் தாய்போல்
நாட்டை வளப்படுத்துகின்ற தன்மைகாட்டி
நயன்கூறும் பயன்கூறும் நாளும்நின்றே

### பண்டகசாலையும் வாசகசாலையும்

வீட்டுக்கு வேண்டிய காய்கறிகள் கீரை
மிக்கசுவை மாங்கனிகள் கதம்பம்முல்லை
நாட்டுவளமெல்லாம் இங்கரில் கூடும்
நல்லதொரு வாய்ப்பாகும் நாளங்காடி
கூட்டுறவு சேமநிதி பண்டசாலை
கொடிப்பிரம்பு நாற்காலி செய்யும்வேலை
ஏட்டுறவின் நூல்நிலயம் யாரும் காண
எடுப்பாக நின்றிருக்கும் கோட்டைமுன்னே

### ஊரும் தொழில் சிறப்பும்

குடியேற்றம் பஞ்சாலை பட்டு நெய்யஆலை
கூடிவளர்பொறி இயலின் தொழிற்பயிற்சிக்கூடம்
கொடிஏற்றும் பாலாறு சர்க்கரை ஆம்பூரில்
குளிர்போர்வை தோல்பதனம் விண்ண
மங்கலத்தில்
நெடிதாற்றும் ரெயில்தொழில் அரக்கோணம்தன்னில்
நிகரில்லா மிதியடிகள் ஆர்க்காடு எண்ணில்
வடிவாக்கும் ஜாடிகளும் பாரிஉரம் மருந்தும்
வழங்கிடவேவரும் ராணிப்பேட்டையதும் காணீர்

### தொழில் சிறப்புள்ள ஊர்கள்

கூடைமுறம் குப்பநத்தம் மண்பாண்டம் கேரி
கோரைப்பாய் நெசவுக்குபேர் வந்தவாசி
ஆடைக்கு சோளிங்கர் குடியேற்றம் மின்னல்
அழகு வண்ணப்பட்டுக்கு ஆரணியே முந்தும்
வாடைக்குப் போர்வை புதுப்பாளையம் வாலாஜா
வண்டிக்குத் திருப்பத்தூர் மரச்சாமான் வேலூர்
மேடைக்கும் பந்தலுக்கும் அலங்காரம் செயவும்
விதவிதமாய் ஜவுளிநகை வாங்கவும் வேலூராம்

### காட்பாடி வேளாண்மை நிறுவனமும், கந்தவேள் கோட்டமும்

பாலாற்றுப் பாலமிதோ வேலூர் காட்பாடி
பரவுமிருகரைகளையும் இணைத்துநிற்கும் இங்கே
மூலாதாரக்கல்வி பெண்கள் கல்லூரி
முன்னேற்ற வேளாண்மை கால்நடையின்
பண்ணை
மேலான காட்பாடி சந்திப்பில் கண்டு
விரிஞ்சிபுரம் பள்ளிகொண்டை கோயில்
சுற்றிவந்து
வேலாயுதாவென்று வள்ளிமலைச் சேர்வோம்
வேலவனைக்கும்பிட்டு திருவலமே வருவோம்

### திருவண்ணாமலையின் பெருமை

திருவண்ணாமலையென்று நினைக்கின்ற போதே
திருப்புகழ் தேவாரம் வரும்தெய்வ ஒளிதோன்றும்
குருவடியாம் ரமணரிஷி தவக்கோலம் திகழும்
குகைக்கோயில் கல்வெட்டு மண்டபங்கள் பலவும்
வருவாரை வருகவென அழைக்கும் மலைக்கோயில்
வல்லாள மகராஜன் கோபுரமுன் வாயில்
பெருகிவரும் பக்திவெள்ளம் சத்திவிலாசத்தில்
பேரன்பு நெறிகாட்டும் எங்கள் மாவட்டம்

### சாத்தனூர் அணைக்கட்டின் சிறப்பு

குன்றுகளைப் பிளந்துவரும் தென்பெண்ணையாற்றில்
குடியரசில் நாம்கண்ட சாத்தனூர்த் தேக்கம்
நின்ற இடத்திருந்து திருக்கோயிலூர் வரைக்கும்
நெடிது செலும் கால்வாய்கள் நிலவளத்தைப்
பெருக்கும்
அன்றன்றும் புதுமைசெய்யும் விஞ்ஞான ஒளிகள்
அமைப்பான கட்டிடங்கள் அமைதிதரும் சூழல்
நன்றமைந்த அணைக்கட்டும் அழகுப்பூங்காவும்
நாற்றிசையும் புகழ்பரப்பும் எங்கள் மாவட்டம்

### சான்றோர்கள்

சுதந்திரத்தின் கனல்மூண்டு கொழுந்து விட்டதிங்கே
தோன்றல் ராஜாஜி தவம் இருந்த சிறை இங்கே
பதஞ்சலியார் சர். சி. பி தோன்றியதும் இங்கே
பார்புகழ் ஜனாதிபதி பயின்ற இடம் இங்கே
இதந்தரும் முத்தமிழ்க் கடலாம் வாரியார் இங்கே
எதிராஜு மு. வ. வை ஏந்தியதும் இங்கே
விதந்தோதும் ஆர்க்காட்டு இரட்டையரும் இங்கே
மீண்டும் தொண்டைமான் பரிதி மேவியதும்
இங்கே

### நாட்டு வாழ்த்து

சென்னை மாநில அரசில் மாவட்ட அமைப்பில்
சேர்ந்த வடார்க்காடிதுவே எங்கள்மாவட்டம்
தன்னையறிந் தின்புறும் தமிழ்மக்கள் கோயில்
சார்புறும் மாதா கோவில் பள்ளிகள் மசூதி
முன்னையோர் வழிபரவி வாழும் இனமக்கள்
முன்னேற உதவிசெயும் கல்வி நிலயங்கள்
அன்னைபோல் அளித்துதவும் அமைதிநிலை காக்கும்
அருமை நம் பாரதத்தின் குடியரசு வாழ்க!

★

தலைவர் :

இசைபாடிக் பாவுரைக்கும் முத்துக்கிருஷ்ணப் புலவன்
இராகங்கள் பலகாட்டி வடவார்க்காட் டின்சீர்
நடையார மிகச்சொன்னான் மொழிற்சீரும் குன்றின்
நலமுமிக உண்டென்றான் காட்டிலுறை விலங்கும்
இசைவாரும் தருவினமும் மிகவுளஎன் றுரைத்தான்
இலங்குகின்ற நதிவயலில் தானியங்க ளாதி
பசையாரும் வளஞ்சொன்னான் ஊர்சொன்னான்
[வேலூர்ப்
பதிமருத்து வச்சாலைத் தனிப்பெருமை சொன்னான்.
அடுத்துபின்
சீரவைத் தான்பிறந்த செங்கற்பட் டின்சிறப்பை
நாரண துரைக்கண்ணன் நவின்றிடுவார்
[செந்தமிழால்




## கவிஞர் நாரண, துரைக்கண்ணன்

தொண்டை நன்ஞடு தன்னில்
தொல்புகழ் சேர்க்குஞ் சான்ருேர்
எண்ணில ராக வாழ்ந்தார் ;
அவர்வழி ஆற்ற லுள்ளார்
'பண்ணெடு பரதம்' போலப்
பரம்பரைப் பெருமை வாய்ந்த
மண்ணியல் கலைவல் லார்கள்
வழிவழி வருகிற் பாரால்.

மன்னிய தொண்டை நாட்டில்
மாண்பமை பலவூர் தம்முள்
உன்னத மாகவே தான்
உயர்புகழ் ஓங்குங் காஞ்சி
நன்னய மாக வெல்லா
நலன்களும் வாய்ந்த தாகித்
தன்னிக ரில்லாச் செங்கல்
பட்டினில் திகழ்தல் காணீர் ?

எங்கணுமே செங்கழுநீர்ப் பூங்கொடிகள் ;
எங்கணுமே சலசலக்கும் ஓடைவாய்க்கால் ;
எங்கணுமே உப்பளங்கள் சவுக்கைத்தோப்பு ;
எங்கணுமே ஆறுகுளம் நஞ்சைபுஞ்சை :
எங்கணுமே இடைக்கழிகள் தென்னந்தோட்டம்;
எங்கணுமே வலைவீசி மீன்பிடிப்போர் ;
எங்கணுமே சமவெளிகள் குன்றுகாடு ;
எங்கணுமே வண்ணவண்ணப் பறவைதாமே;

நீர்வளமும் நிலவளமும் இல்லைஎன்றே
• நயமாகப் பழித்தாலும் எங்களுக்குப்
பார்அறியப் புகழளித்த தனிமாவட்டம்
பாரதத்தில் இதுபோல வேருென்றில்லை ;
யார்அளித்தார் இப்பெருமை ? உன்னவேண்டும்;
எவராலே இதுபோல ஏற்றமுண்டு ?
போர்கொண்ட கலைமறவர் பொலிந்தாரன்றே !
பண்ணிசைபோல் பறந்ததன் புகழேயம்மா !

• கைலாசர் வைகுந்தர் கண்டபேர்கள்
கவின்வாய்ந்த கற்சிலைகள் பேசக்காண்பார்;
கைலாவண் யங்காட்டும் ஓவியந்தாம்
காஞ்சி வரதப்பெருமாள் முன்றில்உண்டே !
மயிலாடுஞ் சோலையெல்லாம் கடவுள்சிற்பம் !
மாண்பாரும் சமயமெல்லாம் சொந்தங்கொள்ளும்:
பூலோகம் புளகித்துப் புகழும்ஊராம்
பெருமைகொள நாங்களெலாம் வாழும்ஊரே.

எழில்கொண்ட சிற்பங்கள் உயிர்சிலைகள்
ஓதரிய கலையழகோடு உயருமாலோ !
கழிகடந்து நிலங்கடந்து கற்கோயில்கள்
காண்பார்கள் உலகிலுள மக்களெல்லாம் ;
வழிவழியே பல்லவர்கள் செதுக்கலுற்ருர்
வான்புகழை யடையுமொரு குறிக்கோளோடு
இழிசெயல்கள் புரியவந்த புலிகேசிக்கு
ஏற்றதொரு படிப்பினையைப் புகட்டினுரால்,

ஒவ்வொன்றும் உயிர்ச்சிலைகள் ; உள்ளங்கொள்ள
ஒவ்வொன்றும் ஒப்பற்ற கதைகள்பேசும் ;
கொவ்வையாய் குமின்சிரிப்பைக் கொண்டுருக்கும் ;
கொள்கைஎழில் மாமல்லை குவிந்திருக்கும் ;
அவ்வையைப்போல் அமரத்வம் பெற்றதாக
ஆயிரமாம் சிற்பங்கள் எங்குமுண்டோ !
இவ்வளவோ ! எத்தனையோ ஏற்றமுண்டு !
ஏத்துதற்கு எம்மாயுள் காணுதம்மா !

பல்லவர்கள் நெடுங்காலம் எம்நாடாண்டார் ;
பண்பார்ந்த தொண்டமான் இளந்திரையனும்
வல்லர சதுவாக்கி வளமாயாண்டான் ;
வாகுதோள் குலோத்துங்கன் வாய்ப்பாய்க்
கொண்டான் ;
வில்லில்வல்ல சோழர்தலை நகராக்கொண்டார் ;
விறல்விஜய நகரமன்னன் விளங்கவைத்தான் ;
சொல்லில்வல்ல புலவர்களும் திறங்காண்பித்தார் ;
சேரவாரும் எனப்பலரை அழைத்தநாடே.

புத்தர்பிரான் புகன்றஅறக் கொள்கைதன்னைத்
*தின்ஞகர் பரப்பிவிட்டார் சீன, ஜப்பான் ;
உத்தமராம் †போதிதர்மர் உலகிற்கீந்தார்
ஒப்பில்லா உண்மையொன்றை உலவவிட்டார் ;
சத்தியமே பேணுவோர்க்குப் பேதாபேதம்
தோன்ருதென் றேமொழிந்தார் †தர்மபாலர் ;
இத்தரையில் இதைச்சொன்ஞர் எங்கள்ஊரார்
எங்கணுமே விழுமியதைத் தேடிச்சேர்ப்பார்.

பல்சமய தத்துவங்கள் போற்றப்பட்ட
பாங்கான மாநகரம் எங்கள்காஞ்சி
வல்லவொரு சங்கரர்வே தாந்தபீடம்
வகையாக ஆதியிலே அமைந்ததிங்கே !
சொல்லில்வல்ல சாணக்கியர், படிக்காசாரும்
சோதிமிக்க இராமலிங்கர், கச்சியப்பர்
கல்விபரி மேலழகர், புகழைஏந்தி
மங்காத புகழ்படைத்து வாழ்ந்திருந்தார்.

சங்கத்தார் வள்ளுவர், நத் தத்தனுரும்,
கடியலூர் உருத்திரங் கண்ணனுரும்,
துங்கசிதம் பரசாமி, அருணகிரி,
பாஷியஇர மாநுஜரும், பவணந்தியும்,
வங்கங் கடந்துசென்ற தர்மவீரர்
வடமொழியும் தென்மொழியும் கரையேகண்டார்;
பங்கமில்லா ஒட்டக்கூத்தர், பாரதத்தார்
பெருந்தேவர் எண்ணிலரே ! எல்லைஎது ?

---

(* கைலாசநாதர் கோயில், வைகுந்தவாசர் கோயில் ஆகிய இரு கோயில்களின் பிரகாரங்களிலுள்ள சிற்பங்களுடைய கலையழகைக் கண்டு உலக மக்களெல்லாம் வியந்து பாராட்டிவருகின்றனர்,)

(* தின்ஞகர் நலாந்தா பல்கலைக் கழகப் பேராசிரியர்களில் சிறந்த ஒருவர். பௌத்த தத்துவத்தில் விற்பன்னரான இவர் பல நூல்கள் இயற்றிச் சீனுவிலும், ஜப்பானிலும் பரப்பிப் பெரும் புகழ்பெற்றவர்.

† தர்மபாலர் உலகப் புகழ்பெற்ற நலாந்தா பல்கலைக் கழகத்துக்கே தலைவராயிருந்தவர். போதிதர்மர் கீழை நாடுகளில் புகழ்பெற்று விளங்கிய பௌத்த பேராசிரியர்.)

'உலகெலாம் வாழ்க' என்றே உரைத்திட்டாரே!
ஒருமைப்பாடு உரைத்திட்டார் ஓங்கவேதான்
அலகில்புகழ் சேக்கிழார் அவதரித்த
அருமைசால் குன்றத்தூர் எங்கள்ஊரே;
பலர்புகழும் பல்வளஞ்சேர் செங்கல்பட்டில்
பன்னூறு புலவோர்கள் புகழில்பூத்தார்;
உலகியலில் ஒப்பற்ற செயல்புரிந்தோர்
ஆயிரமாய் வாழ்வார்கள் எங்கள்ஊரே.

• ஆற்றல்மிக்க அமைச்சர்பலர் எங்கள்ஊரார்;
அனுபவத்தில் பழுத்தவர்கள் அனந்தமுண்டு;
ஏற்றமிகும் எழுத்தாளர், கலைஞரெல்லாம்
எழிலுறவே விளங்கும்ஊர் எங்கள்ஊராம்;
மாற்றஞ்சொல்லா மங்கையர்கள் எங்கள்ஊரார்;
மாண்பாக விடுதலைக்கே பாடுபட்டார்;
போற்றலுறும் பேரறிஞர் புலமையாளர்
பொன்னேட்டில் பொறித்திட்டார் பலரேயம்மா!

உலகுபுகழ் அறிஞரெலாம் எங்கள் ஊரே;
உலகுபுகழ் மறவரெலாம் எங்கள் ஊரே;
உலகுபுகழ் கலைஞரெலாம் எங்கள் ஊரே;
உலகுபுகழ் பாணரெலாம் எங்கள் ஊரே.

• அறமுரைத்த அறவோர்கள் எங்கள் ஊரார்;
மறம்விளைத்த மாமன்னர் எங்கள் ஊரார்;
திறம்புரிந்த தொழில்வல்லோர் எங்கள் ஊரார்;
விறல்கெண்ட சொல்வேந்தர் எங்கள் ஊரே.

---

• சேக்கிழார், தளவாய் அரியநாதர், எம். பக்தவத்ஸலம், பம்மல் சம்பந்த முதலியார், பஞ்சதந்திரம் இயற்றிய தாண்டவராய முதலியார், சி. என். அண்ணாதுரை,, நெ. சி. சுந்தரவடிவேலு; காஞ்சிபுரம் நாயனா பிள்ளை, டைகர் வரதாச்சாரியார், டி. கே. பட்டம்மாள் முதலியோரை உளத்திற் கொண்டே இவ்விரு பாடல்களும் பாடப்பட்டன.

★

தலைவர் :

தொண்டை நன்னாட்டிற் சேர்ந்து
சுலவிய செங்கற் பட்டின்
மண்டிய வளத்தைச் சொன்னான்
நாரண துரைக்கண் ணப்பேர்

அண்டிய தாளா என்,சீர்
ஆனந்த போதி னிக்குத்
தொண்டனாய் நிற்குஞ் செல்வன்
சொன்னவை பலவும் கேட்டீர்.

மன்னர்பலர் மறம்மலிய செய்தவட்டம்
மதத்தலைவர் பெருமையெலாம் சொல்லும்வட்டம்:
நன்னருநு நூலோர்கள் பிறநாடேகி
நயப்புகழ்சேர் தரச்செய்த காஞ்சியிந்த
இன்னலமா வட்டத்துள் இருக்குதென்றான்
இனும்பலராம் புலவர்கள் இருந்ததேசம்
முன்னுபல முயற்சியினில் உயர்ந்தார் வாழ்ந்த
முதல்வட்டம் இவ்வட்டம் என்றே சொன்னான்.

# நன்றி.

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றத்தின் 2-து மாநாடு திருச்சிராப்பள்ளியில் 10—11—63 ஆம் தேதி கூடியபோது நடைபெற்ற கவியரங்கத்தில் இந்தப் பாடல்கள் அரங்கேற்றப்பட்டன. தமிழகத்தின் தலைநகரான சென்னையே கவியரங்கத்தின் தலைமையை ஏற்றது. "கலை மகளே" தலைமை வகித்தாள். பைந்தமிழ்ப் பாடலுக்காக கனிகண்ணன் சொற்படி பை நாகப்பாய் சுருட்டிய ஜகந்நாதனே தலைமை வகித்தார். ஒருமுறை மட்டுமல்ல பலமுறை படித்துப் பார்க்க வேண்டிய கவிதைகள் இவை. தமிழ்க்கவிதையால் தமிழகத்தின் புதிய ஆனால் பழைய சரித்திரத்தைத் தொகுத்துக் கொடுத்த கவிஞர்களுக்கும், அவர்களின் தலைவர் அவர்களுக்கும் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இம்மலரில் எழுதிய ஏனையோருக்கும் நன்றி உரியது.

— ஆசிரியர்.



ஸ்ரீ தாயுமானசுவாமியும், மட்டுவார் குழலி அம்மையும்
தெருவுலா வரும் காட்சி.

மகப்பேறு விரும்பாத மனிதன் உண்டா?
சுகப்பிரசவம் ஆக வேண்டுமென
தொழாத குடும்பம் உண்டா?
தாயுமானுர் ஆலயத்திருப்பணிக்கு
தாராளமாக உதவுங்கள்
ஆயாசம் வேண்டாம் அத்தனையும்
சத்தியமாக சாத்தியமாகும்




# தாயுமானவர் திருக்கோவில்

ரெட்டியார்

அன்பர்களை ஆட்கொள்வதற்கென்றே, ஆதியும் அந்தமுமில்லாத ஆனந்தக் கூத்தன், ஆங்காங்கு கோவில் கொண்டு ஜோதி வடிவாக நின்று துயர் தீர்த்து, உயிர் காத்து வருகிறான்.

ஆண்டவனின் முக தெரிசனத்தைவிட பாத தெரிசனமே பக்தர்களின் உள்ளத்திற்குப் பரமானந்தத்தைத் தரவல்லது. ஞான பூமியாகிய பாரத தேசத்தின் பாதம்போல, பாரத பண்பாட்டிற்கே ஒளி விளக்கமாகத் திகழுவது தமிழகமாகும். பாரதத்தின் தென் பாகமான பாதத்திலிருந்தே மதாச்சாரியார்கள் தோன்றி அருள் ஞானச் செல்வத்தை பாரதத்திற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே வழங்கும் ஆற்றலுடன் திகழ்ந்தார்கள்.

என்னாட்டிற்கும் இறைவனாக விளங்கும் எம்பெருமான் தேன் தமிழ்மணம் நுகர்ந்து தென்னாட்டில் சிவமாக அமர்ந்துவிட்டான் என்று அறிஞர்கள் சொல்லுவதில் எத்தனை எத்தனையோ உட்பொருள்கள் தொக்கி நிற்கிறது.

செந்தமிழ் நாட்டின் நடுநாயகமானதாகவும், சோழ சாம்ராஜ்யத்தின் தலைநகராகவும், புராண காலத்திலும், சரித்திர காலத்திலும் கீர்த்தி மிக்க பதியாகவும் விளங்குகிறது; காவிரிக்கரையின் தென்பால் அமைந்த திருச்சிராப்பள்ளி என்னும் ஸ்தலம்.

இந்த ஸ்தலத்தில் இறைவன் புகழைக் கூறும் கொடிக் கம்பம்போல ஒரே பாறை வடிவத்தில் அமைந்திருக்கிறது! மும்முடி மலை என்னும் திருசிரபுரமலை. இம்மலையில் இறைவன் தாயாகி, தயாபர மூர்த்தமாகி அடியார் உளம் நெகிழ காட்சி தந்த புண்ணிய பூமியாகும்.

எனவேதான் சிராப்பள்ளி குன்றுடையானைக் கூற வந்த நாவுக்கரசர் பெருமான் "திருச்சிராப்பள்ளியென்னலும் தீவினை நரிச்சிராது நடக்கும் நடக்குமே" என்று உலக மக்களுக்கு, உள்ளம் பொங்க, உண்மையைக் கூறுகிறார். ஊர் பெயர் சொன்னாலே போதும் வினை ஓடும், அருள் நாடும் என்று நாவுக்கரசர் சிராப்பள்ளிக் குன்றமர்ந்த கோமானை வாயாரப் புகழ்ந்து மனமாரப் போற்றுகிறார்.

"அப்பர்" என்று அருள் அடியார் போற்றும் ஒப்பில்லாத மூதறிஞராகிய நாவரசு, சத்தியமே செய்கிறார். தாயுமான இறைவனை தரிசித்தால் போதும். அதுகூட முடியாவிட்டால் இங்கு அமர்ந்த இறைவனை நினைத்து திக்கு நோக்கி கரம்குவித்தால்கூட போதும் நம்வினை நாசம் நாசமே என்று அழுத்தம் திருத்தமாக தலையிலடித்துச் சத்தியம் செய்வதுபோல உறுதி கூறுகிறார்.

தாயான செல்வரை தரிசிக்க அப்பர் அழைத்த அருள் அழைப்பை ஏற்று வாருங்கள் திருச்சிக்கு என்று உங்கள் அனைவரையும் அழைக்கிறேன். திருச்சிராப்பள்ளி எல்லைக்கு பத்து மைல் தூரத்திற்கு அப்பால் இருந்து பார்க்கும்போதே, ஒரு யோக யோகீஸ்வரன் நெடிய தவத்தில் அமர்ந்திருப்பது போல மலைக் கோட்டை உச்சிப்பிள்ளையார் கோவில் காட்சி தரும். பக்தர்கள், மனதில் நினைத்துச் செல்லும் காரியம் சித்திபெறவேண்டுமென்று கணபதியைக் கண்டவுடன் கன்னத்தில் போட்டுக்கொண்டு கை தொழுது நிற்கும் காட்சியினையும் கண்குளிரக் காணலாம்.

திருச்சிராப்பள்ளிக்கு வரும் புகை வண்டிகள், நிற்கும் நிலையம் எதில் இறங்கினாலும் மலைக்கோவில் தெரிசனத்திற்குப் போகலாம். திருச்சிராப்பள்ளியிலிருந்து தமிழகத்தின் பிரதான நகரங்கள் அனைத்திற்கும் பஸ் மார்க்கமும் மிக மிக வசதியாகவே அமைந்திருக்கிறது.

மலைக்கோவில் தெரிசனத்திற்கு வருகிறவர்கள் கோட்டையின் ஆசாரவாயிலாக, சரித்திரத்தின் சின்

னமாக, இன்றும் காம்பீர்யமாக மேற்கு புறத்தில் வீற்றிருக்கும் பிரதான வாயில்வழியாக வரும்போது மலைக் கோவில் காட்சி அபூர்வமானதாக காட்சி தரும். கோட்டைவாயில் தாண்டியதும் உன்னதமான முறையில் அமைக்கப்பட்டிருக்கும் தெப்பக்குளத்தையும், அதன் நீராழி மண்டபத்தையும் காணலாம்.

இந்த தெப்பக்குளம் உலகப் பிரசித்திபெற்றது. 'இந்தக் கடிதத்தைத் தெப்பக்குளத்தில் போய் போட்டுவிடுகிறாயா' என்று திருச்சிவாசி தன் நண்பரை கேட்கும்போது அருகே இருக்கும் அயலூர்வாசி அசந்துதான்போவார். கடிதம் எழுதி திருச்சியில் தெப்பக் குளத்தில் போடுவதா? என்று ஆச்சரியப்படுவார். தெப்பக்குளத்திற்குத் தொலைதூரத்திலே இருக்கும் தபால் நிலையத்திற்கு தெப்பக்குளம் தபால் நிலையம் என்று பெயர் அமைந்ததே அயலூர் வாசியின் திகைப்புக்குக் காரணமாகவும், உலகப்பிரசித்தி இந்த தெப்பக்குளம் பெறுவதற்குக்காரணமாகவும் அமைந்து விட்டது.

இந்த தெப்பக்குளத்தின் கிழக்குப் பக்கத்தில் "கிளைவ் ஹவுஸ்" என்று சொல்லப்படும் சரித்திரப் பிரசித்திபெற்ற கட்டிடம் வீற்றிருக்கிறது. இந்தத் தெருவிற்கு நந்திகோவில் தெரு என்று பெயர். மலைமீது அமர்ந்திருக்கும் தாயுமானவர் சன்னதி மேற்குப்பக்கம் பார்த்து அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே மலைக் குன்றின் மேற்குப் பக்கத்தில் இடையாற்றுமங்கலம் ரெங்கசாமி அய்யர் உயர்நிலைப்பள்ளிக்கும், ராஜேந்திரா தனிப் பயிற்சிக் கல்லூரிக்கும் இடையே நந்திகேஸ்வரருக்கு கோவில் அமைக்கப்பட்டிருக்கிறது. நந்தியம் பெருமானை தொழுதுவிட்டுத்தான் சாஸ்திர விதிப்படி தாயுமான இறைவனை தரிசிப்பது முறையானதாகும்.

உயர்ந்தும், காம்பீர்யமாகவும் வீற்றிருக்கும் நந்திகேஸ்வரனைத் தொழுது வணங்கிவிட்டு, உயரே கோவில் கொண்டிருக்கும் இறைவனை நிமிர்ந்து நோக்குவோம். இவ்வாறு பார்க்கும்போது மலைக்கோவில் நிர்மாணம் நமது கண்களுக்குத் தெளிவாகத் தெரிய வரும். "ப" என்ற எழுத்தை "ΓΙ" திருப்பிப்போட்டது போல மலையின் அடிவாரத்தில் ஒரு மதில் சுவர் எழுப்பப்பட்டிருக்கும் செய்தி தெரியவரும். இந்த மதிர் சுவர் மீதே மலைக்கோட்டை மேற்கு, வடக்கு, தெற்குத் தெருக்கள் அமைக்கப்பட்டிருக்கும் வரலாறும் தெரியவரும். கோவிலைச் சுற்றியிருக்கும் மதில் மீது நகரம் நிர்மாணிக்கப்பட்டிருப்பது திருச்சியில் மட்டும் தான் என்பதும் தெரியவரும்.

நந்தியை வலம்வந்து தொழுத பின்னர் வெளியே வரும்போது கம்பீரமாக காட்சிதரும் ஆஞ்சநேயரையும் வணங்கித் துதித்துவிட்டு நந்திகோவில் தெரு வழியாக வடக்கு நோக்கிச் சென்றால் அங்கு நாகநாத சுவாமி கோவில் இருக்கிறது.

இந்த ஆலயத்தை தரிசித்துவிட்டுப் போகலாம். சாரமா முனிவர் என்ற பெருந்தகை நந்தவனம் அமைத்து இங்கு வீற்றிருக்கும் நாகநாதரையும் மலையின்மேல் இருக்கும் தாயுமானவரையும் துதித்து வந்திருக்கிறார். இது மட்டுமல்ல. உலகச் க்ஷேமத்திற்காக மக்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கையூட்டுவதற்காக, சக்தி மானிட உருவம் தாங்கி மண்ணில் பிறந்து இறைவனைப் போற்றி நிற்பதும், இறைவன் சக்தியை ஆட்கொண்டு திருமணம் புரிவதும் தொன்றுதொட்டு நடந்துவரும் புராணச் சிறப்பாகும்.

உமா தேவி திருசிரபுறத்தில் தாமரை மலரில்தான் பிறந்தது. கார்த்திகை முனிவரால் வளர்க்கப்பெற்று, மட்டுவார் குழலி என்ற நாமத்துடன் வளர்ந்து, இறைவனை அடைய தவம் இருந்து இறைவனை பதியாக அடைந்த இடமே நாகநாதர் ஆலயமாகும். கோவிலையும் தீர்த்தத்தையும் வலம் வரும்போது மலைக் கோட்டை வடக்குத் தெருவின் மதில் தோற்றம் காம்பீரமாக காட்சியளிப்பதைப் பார்க்கலாம். இங்கு தொடங்கி வடக்கு ஆண்டார் தெரு புதுப்படி சந்து வரை குறைந்து கொண்டே இச்சுவர் செல்லுகிறது.

வடக்கு ஆண்டார் தெருவைக் கடந்து, கிழக்கு ஆண்டார் தெருவின் வழியாக வரும். இங்கு தாயுமானவர் தேர்முட்டி இருக்கிறது. இதற்கு எதிரில் தளவாய்க் குளம் என்ற பெயரில் ஒரு குளம் இருப்பதையும் காணலாம்.

திப்பு சுல்த்தான் காலத்தில் மலைக்கோவில் தேர் எரிக்கப்பட்டு விட்டதாகவும், அதற்குஈடுசெய்ய துறையூர் ஜெமிந்தார் தளவாய்பிரசன்ன வெங்கிடாஜலரெட்டியார் புதிய தேர் செப்பனிட்டுக் கொடுத்து தேர் இழுப்பவர்களுக்கு தாகம் தணிக்க தளவாய்க் குளம் என்ற பெயரில் ஒரு குளம் வெட்டியிருப்பதாகவும் தெரிகிறது.

தேர்முட்டியைத் தாண்டி சறுக்குப்பாறை சந்து என்று பெயரால் இதுவரை அழைக்கப்பட்டு இப்பால் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளைத்தெரு என்று அழைக்கப்பெறும் தெருவின் வழியாக சென்றால், மலைக்கோவிலின் ஆசார வாயிலான யானை மண்டபத்தின் வாயிலுக்கு வந்து சேரலாம்.

கட்டி முடியாத கோபுரம் எங்கிருந்தாலும் அது ராயகோபுரம் என்று அழைப்பது சரித்திரம் காட்டும் செய்தியாகும். இங்கேயும் பிரமாதமான முறையில் கோபுரம் கட்ட அடித்தளம் போடப்பட்டு தூணும் நிறுத்தப்பட்டிருக்கிறது. கோபுரம் கட்டப்படவில்லை.

யானை மண்டபத்தின் வழியாக மேலே செல்லலாம். ராயகோபுரத்தின் வழியாக கீழே மாணிக்க விநாயகர் சன்னதிக்குச் செல்லலாம். என்றாலும் இப்பொழுது மலைக்கோட்டைத் தெற்குத் தெருவின் தென்மேற்கு மூலைவரை சென்றுவருவது நல்லது. பிரசித்தபெற்றதும் பற்பல சிற்பங்கள் நிறைந்ததுமான கீழ் பல்லவர் குகை அங்கேதான் இருக்கிறது. தாயுமானவர் பள்ளிக்கூடத்தின் பின் பக்கமாக இந்தக் குகை இருக்கிறது. பள்ளிக்கூடத்தின் கிழக்குப் பக்கத்தில் வடக்கு முகமாகச்செல்லும் ஒரு சந்தின் வழியாக சிறிது தூரம் சென்றால் இந்த பல்லவர் குகையை வந்தடையலாம்.

மலைப்பாறையைக் குடைந்து பற்பல சிற்பங்களுடன் குகை அமைக்கப்பட்டிருக்கிறது. எந்த காரணத்தாலே, சிலைகள் சேதப்படுத்தப்பட்டிருக்கிறது. இவைகளை செம்மைப் படுத்திவிட முடியுமானால்

மாமல்லபுரத்து கலைச் செல்வத்தின் தோற்றம் இங்கும் கண்டு மகிழலாம்.

இந்த குகைக் கோவிலின் அருகே இருந்து மலைக் கோவிலையும், அதன் அமைப்புக்கு விளக்கமாக இருக்கும் மதில்ச்சுவரையும்பார்க்கும் போது நம்முடையமுன்னவர்களின் ஆற்றலும், கலையார்வமும், நிபுணத்துவமும், நம்மீது ஆழ்ந்த நம்பிக்கை வைத்து அற்புதமான இந்தக் கலைக்கோவிலை கட்டி முடித்த செயல் திறமையும் நம்மையே பிரமிக்க வைத்துவிடும். பாறைமீது செங்குத்தாக 100 அடிக்குமேலே சுவர் எழுப்பிய கட்டிட கலை நிர்மாணம் இந்த காலத்து நிபுணர்களை மலைக்கவைத்துவிடுகிறது என்பதையும் இங்கு இருந்து காணலாம்.

மீண்டும் யானை மண்டபத்தின் வாயிலுக்கு வருவோம். மேலே செல்ல படி வரிசையாகத் தெரிகிறது. மண்டபத்தின் இடது பக்கத்தில் வாகன மண்டபம் அமைந்திருக்கிறது. இந்த மண்டபத்தில் கோவிலைச் சேர்ந்த எல்லா வாகனங்களும் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த வாகனங்களில் சில தர்மபுரம் ஆதீனத்தைச் சார்ந்த மவுன மடத்தின் ஆதிக்கத்தில் இருக்கிறது.

இந்த வாகன மண்டபத்தை அவசியம் பார்க்க வேண்டும். இந்த வாகன மண்டபத்தின் உள்ளே, தமிழ் கட்டிக்கொடுத்த ஆஸ்தான மண்டபம் ஒன்று இருக்கிறது. ஆச்சரியப்பட வேண்டாம். பூவாளூரில் பிறந்து கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்த பெரும் புலவர் தியாகராஜ செட்டியார் அவர்கள் கட்டிக்கொடுத்திருக்கும் ஆஸ்தான மண்டபத்தைத் தான் தமிழ்க்கட்டிக் கொடுத்த மண்டபம் என்று குறிப்பிட்டேன்.

இதைப்பற்றி கிடைத்திருக்கும் ஒரு பாடல்.

அன்றியுந் தென்கயிலை யெனுந்
திருச்சிராப்பள்ளி யிடை யாகசாலை
முன்றயங்கு மண்டபத்தி லாத்தான
மண்டபமென் முதற் பேர்பூண்டு
மின்றயங்கு மரகதத் தாலியற்றிய
தென்றேயெவரும் விரும்பச் செய்தான்
பொன்றயங்கு மணி புனைந்த
தியாகராசப் பெயர்கொள் புலவரேறே.

வாகன மண்டபத்தைவிட்டு சில படிகள் மேலே சென்றதும் தருமையாதீனத்தின் ஆதிக்கத்தில் உள்ள மவுன மடம் இருப்பதைப் பார்க்கலாம். இந்த மலைக் கோவில் ஆஸ்தியில் பெரும்பகுதியின் நிர்வாகம் மவுன மடத்தின் ஆதிக்கத்தில் இருக்கிறது. தருமையாதீன கர்த்தர் வந்து தங்குவதற்கும், காரியாலயம் நடத்துவதற்கும் இங்கு விசாலமான கட்டிடம் இருக்கிறது.

மவுன மடத்தைத் தாண்டி மேலே சில படிகள் சென்றால் நூற்றுக்கால் மண்டபம் அமைந்திருப்பதைக் காணலாம். இந்த மண்டபத்தில் சமய இலக்கிய சொற்பொழிவுகள் நடைபெறுவதுண்டு. தேவஸ்தான அலுவலகமும் இங்குதான் அமைந்திருக்கிறது.

நூற்றுக்கால் மண்டபத்திற்கு எதிரே ஒரு விசாலமான மண்டபமும் கோவிலும் இருக்கிறது. இதனைக் கலைக்கூடமாக அமைக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். வெகு விரைவிலே இந்த இடம் கலைக்கூடமாக காட்சி தரும்.

இன்னும் சில படிகள் மேலேறிச் செல்வோம். இங்கு ஒரு கோவில் இருக்கிறது. இது பலர் கண்களுக்குப் படுவதே இல்லை. பெரும்பாலும் இது பூட்டி வைக்கப்பட்டிருப்பதால் இங்கு ஒரு சன்னதியிருப்பதையே அறியமுடியாமல் போய்விட்டது. இந்த மண்டபத்திற்கு சகஸ்ர லிங்க மண்டபம் என்று பெயர். ஏராளமான லிங்கங்கள் ஒரு லிங்கத்தில் அமைந்துஇருக்கின்றன. இதனைஒவ்வொருவரும் பார்த்து மகிழவேண்டும்.

இன்னும் சில படிகள் ஏறினால் ஒரு வரலாற்றுக் காட்சியைக் காணலாம். இறைவன் தன் அடியாரின் எத்தகைய கருணை உடையவன் என்பதை காட்டும் காட்சியிது. தாயுமானர் என்ற பெயர் வருவதற்கே காரணமான நிகழ்ச்சியை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா ?

திருச்சிராப்பள்ளியில் தனகுப்தன் என்னும் செட்டியார் ஒருவர் வணிகம் செய்து வந்தார். இவரது இல்லத் தலைவியின் பெயர் இரத்தினவதி. இந்தஅம்மையார் மலைமீது அமர்ந்திருக்கும் சிவபெருமானை அனுதினம் தவருது தொழுது வந்தாள். இறைவன் கருணையால் இரத்தினவதி கருவுற்றாள். பிரசவ காலமும் நெருங்கியது. இரத்தினவதியின் தாயார் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தாள். மகளின் பிரசவத்திற்கு உதவி செய்ய திருச்சிராப்பள்ளியை நோக்கி வந்துகொண்டருந்தாள். காவிரிநதியில் வெள்ளம்பெருக்கெடுத்தோடி, தாய் திருச்சிராப்பள்ளிக்கு வரமுடியாமல் வெள்ளத்தால் தடுக்கப்பட்டாள்.



இரத்தினவதி அம்மையார்

தனது தாயின் வரவை எதிர்பார்த்தஇரத்தினவதி பிரசவ வேதனை தாங்கமுடியாமலும், தனக்கு உதவி செய்ய உற்றார் இல்லாமையாலும், திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்று ஆன்றோர் சொன்ன வாக்கை நினைத்து சிராப்பள்ளி குன்றில் அமர்ந்த கோமானை மனமார துதித்து நின்றாள். அது சமயம் தாய் வந்து சேரவே பிரசவமும் சுகமாக முடிந்தது. கண்ணும் கருத்துமாக பேரக் குழந்தையையும், இரத்தினவதியையும் தாய்க்கிழவி கவனித்துவந்தாள். ஒரு வாரம் ஆயிற்று. உண்மையான தாய் ஆற்றில் தண்ணீர் வடிந்தவுடன் வந்து சேர்ந்தாள். இரு தாய்மாரைக்கண்டு இரத்தினவதி திகைத்தாள். இறைவன் காட்சிதந்து தாமே தாய் வடிவமாக வந்து பக்தையின் துயரத்தைத் தீர்த்ததாக அறிவித்த காட்சியே இங்கு படமாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அன்றிலிருந்து இறைவனுக்குத்தாயுமானவர் என்ற பெயரே நிலைபெற்றுவிட்டது. இன்றும் பிரசவ காலத்தில் இந்த தாயுமானவரை தொழுது வணங்குவோருக்கு சுகப்பிரசவமே ஏற்பட்டு வருகிறது என்பது அனுபவ பூர்வமான உண்மையாகும்.

இம்மலையில் மூன்று சிகரங்கள் இருப்பதால் இதனை திரிசிரபுரம் என்று பெயர் வந்ததாக சொல்லுவார்கள். திரிசிரன் என்ற அரக்க பக்தன் பூசனை செய்தும், இந்த இடத்தை ஆண்டும் வந்ததால் திரிசிரபுரம் என்று பெயர் வந்ததாகவும் சொல்லுவார்கள்.

இந்த வரலாற்றை அறிந்த பின்னர் மேற்குப் பக்கமாக செல்லும் படிகளின் வழியே ஏறிச் சென்று பின் திரும்பி வடக்குப் பக்கம் ஏறிச் சென்றால் இங்கு பாதை பிரிகிறது, உச்சிப்பிள்ளையார் கோவிலுக்குச் செல்லும் பாதை கிழக்குப் பக்கத்திலும் இறைவன் சன்னதிக்குச் செல்லும் பாதை மேற்குப் பக்கமாகவும் பிரிகிறது.

உச்சிப் பிள்ளையாரை தரிசித்துவிட்டு பின்னர் இறைவன் சன்னதிக்குப் போகலாம்: டிக்கட் எடுத்துக் கொள்ளுங்கள். இங்கு விற்கப்படும் டிக்கட் வருமானம் கோவில் நிர்வாகத்திற்கு நிரந்தர வருமானமாக இருப்பதால் தவறாமல் டிக்கட் வாங்கிக்கொள்ளுங்கள். போவோமா ?



பல்லவர் குகை

இதோ இங்குதான் மலைக்கோவிலில் மேல் உள்ள பல்லவர் குகை இருக்கிறது. இந்தக் குகைக் கோவிலில் எத்தனை எத்தனை கல்வெட்டுகள். படிக்கத் தெரியுமா உங்களுக்கு? இல்லாவிட்டால் சொல்லுங்கள். என்ன பொருள் என்பதைச் சொல்லுகிறேன். கேளுங்கள். இந்த குகைக் கோவிலிலுள்ள சான்றுகள் மூலம் 6 வது நூற்றாண்டில் வாழ்ந்த குணபரன் என்னும் மகேந்திரவர்மனால் இந்த குகைக் கோவில் உருவாக்கப்பட்டதாகத் தெரிகிறது. வடமொழியிலும் தமிழிலுமாக இருக்கும் கல்வெட்டுகளில் இருந்து சிலதுமட்டும் சொல்லிவிடுகிறேன்.

நாவுக்கரசரை பலவாறு துன்புறுத்திய மகேந்திர பல்லவனே, தானும் மதம்மாறி சைவனானான் என்று பெரிய புராணம் கூறும் செய்தி அறிவீர்களா? அந்த அரசனே இக் கோவிலை கட்டினான் என்று கல்வெட்டில் தெரிகிறது.

1. குணபரன் என்ற அரசன் இந்த லிங்கத்தினால் திரும்பிய ஞானம் பெற்றான் உலகத்தில் நீண்டகாலம் நிலைத்திருப்பதாக.

2. சோழ நாட்டின் சிகர மலையான இந்த சிவன் கோவில் அழியாத ஆபரணம் போன்றது. இதன் ஜோதி சங்கரனுடைய ஜோதி போன்றது.

3. சத்திய ஸந்தனுடைய பூதவுடல் புகழ்பெற இது கல் தச்சனாலே அமைக்கப்பட்டது.

4. சத்துருமல்ல அரசன் அர்த்தபதியாதலின் மலை அரசன் மகளை மணந்த கிரீசனுடைய பெயரின் பொருளை விளக்க இம் மலையில் ஈசனைப் பிரதிஷ்டை செய்தான்.

5. இறைவருக்குக் குணபரன் வானளாவிய உன்னதமான இக் கோவிலை அமைத்தான்.

தமிழில் சில சாசனங்கள் தானம் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அடுத்து இருக்கும் வசந்த மண்டபம் தளவாய் மண்டபம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இம் மண்டபத்தையும் துறையூர் ஜெமீந்தார் அவர்களே கட்டியிருக்கக்கூடும் என்று தெரிகிறது. சுவாமி சன்னதிக்குப் போகும் சித்திர மன்டபத்தில் தளவாய், துறையூர் ஜெமீந்தார் என்று சிலை வைக்கப்பட்டிருப்பவிருந்து இந்த முடிவுக்கு வரவேண்டிருக்கிறது.

மணி மண்டபம் 1918-ல் கட்டப்பட்டது. இதில் இருக்கும் மணியின் கனம் 2½ டன் ஆகும். 4 அடி 8 அங்குல நீளமும், 4 அடி 6 அங்குல அகலமும் உடையது, இதில் இருக்கும் மணியின் தோற்றம்—உறையூர் உலகநாத செட்டியார் அவர்கள் முயற்சியால்பொதுமக்களிடம் வசூலிக்கப்பட்ட தொகையைக் கொண்டு இது நிர்மாணிக்கப்பட்டது.

இனிமேலே உச்சிப்பிள்ளையார் கோவிலுக்குப் போவோம். மலைப்பாறையிலேயே படிக்கட்டுகள் செதுக்கப்பட்டிருப்பதைப் பாருங்கள். கால் பட்டு

பட்டு கல்லும் தேயும் என்பதற்கு இந்தப் படிக்கட்டு களே சான்று.

மலைமீது இருக்கும் உச்சிப் பிள்ளையார் கோவிலைப் பற்றி ரசமான வரலாறு உண்டு. ராமரிடம் ரங்கநாதர் மூர்த்தத்தைப் பெற்ற விபீஷணன் இலங்கைக்கு எடுத்துச் செல்லும் பாதையில் காவிரியின் வடகரைக்கு வந்தான். ரங்கநாதர் சிலை இலங்கைக்கு போய்விடக் கூடாதென்று அனைவரும் இந்த மலைமீது இருக்கும் விநாயகரை வேண்டினார்கள். கணபதி பிராமணச் சிறுவன் வேடந்தாங்கி விபீஷணனிடம் செல்ல, வேண்டுகோளின்பேரில், ரங்கநாதரை கீழே வைக்காமல் இருப்பதாகச் சொல்லி அவன் உடல் உபாதி முடித்து வருவதற்குள் ரங்கநாதரை கீழே வைத்துவிட்டு ஓடிவந்து மலைமீது அமர்ந்துவிட்டதாக வரலாறு கூறும். ஆத்திரம் கொண்ட விபீஷணன் பிள்ளையார் தலையில் குட்ட அந்த குட்டில் ஏற்பட்ட பள்ளம் இன்னும் உச்சி விநாயகர் தலையில் இருப்பதாக சொல்லுகிறார்கள்.

இந்த இடத்திலிருந்து பார்க்கும்போது அற்புதமான காட்சியாக காவிரியும் திருவரங்கமும், திருஆனைக்காவும், ஏன் திருச்சி நகரமும் தெரியவரும். இந்த உச்சி விநாயகர் கோவிலுக்கு கிறிஸ்தவர்களும், மகமதியர்களும் வருகிறார்கள். வெளிநாட்டு யாத்திரீகர்களும் வராத நாளே இல்லையெனலாம். இந்த உச்சி விநாயகர் கோவிலை கரிகால்சோழன் கட்டி முடித்த பிறகுதான் ஆட்சி கிடைத்தது என்று சரித்திர குறிப்பால் தெரிகிறது.

தாயுமானவர் ஆலயத்தில் திருப்பணி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் திருப்பணிக் கமிட்டி அமைக்கப்பட்டது. சேங்காலிபுரம் பிர்மஸ்ரீ அனந்தராம தீட்சிதர் அவர்களின் உபன்யாசம் மூலம் நிதி வசூலிக்கப்பட்டிருக்கிறது. வசூலிக்கப்பட்ட தொகையிலிருந்து மலைப்பாதைக்கு மின்விளக்குகள் அமைக்கப்பட்டு அண்மையில் ஒளி ஏற்றபட்டது.

மலைமீது ஏறுவதற்குப் பாறையில் செதுக்கப்பட்ட படிக்கட்டுகளை செப்பனிட்டு திருத்தி அமைக்க ஒரு படிக்கட்டு ஒன்றுக்கு 60 ரூபாய் வீதம் அன்பர்கள் வழங்கி வருகிறார்கள். வெகு விரைவிலே இப் படிக்கட்டுகள் சீர்திருத்தப்பட இருக்கிறது. அடுத்து நாம் வரும்போது சிரமமில்லாமல் ஏறி வரலாம், இப்பொழுது தாயுமானவர் சன்னிதானத்துக்குச் செல்வோமா?

மலைப்பாதையிலிருந்து திரும்பி மேற்குப் பக்கமாக இப்பொழுது செல்வோம். துவஜ ஸ்தம்பம் தெரிகிறது பாருங்கள். இங்கு உள்ள விசாலமான மண்டபத்தை ஒரு முறை சுற்றிப்பாருங்கள். சிவபெருமானது விராட் சொரூபம் இங்கு சித்திரமாக தீட்டப்பட்டிருக்கிறது. இந்த மண்டபத்தில் எத்தனை எத்தனை சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. சர்க்கார் சகஸ்ர லிங்கங்களும் இந்த மண்டபத்திலே காணலாம். இதை யெல்லாம் பார்த்தாலும் பார்க்காவிட்டாலும், சன்னதிக்குச் செல்லும் பாதையில், தென் பக்கமாக விநாயகர் கோவிலும், வடக்கு பக்கத்தில் அறுமுகவன் கோவிலும் இருப்பதை பாருங்கள்.

அறுமுகவன் அபூர்வமான கலையழகுடன் ஒரே கல்லில் செதுக்கப்பட்டதாகும். கொஞ்சும் அழகுடன் காட்சி தரும் இந்த மூர்த்தியின் தெரிசனம் எல்லோருக்கும் கிட்ட விசாலமான இடத்தில் திருக்கோவில் கட்டி இந்த மூர்த்தியை பிரதிஷ்டை செய்வதாக திருப்பணிக் கமிட்டியார் முடிவு செய்திருக்கிறார்கள்.

மேலே செல்வோம். இந்த இடத்தில் சற்று பாருங்கள். திருசிரபுரத்தில் உள்ள இந்த மலையைப் பற்றி பூர்வ வரலாறு தெரிந்து கொள்வது நல்லதல்லவா? ஆதிசேடனுக்கும், வாயுவுக்கும் ஏற்பட்ட பலாபல போட்டியின் காரணமாக வாயுவின்தீரத்தால் கையிலை மலையிலிருந்த சிரங்கள் பூமியில் மூன்று பாகத்தில் போய்விழுந்தது அதில் பிரதானமான பகுதியே மும்முடிமலையான இந்த மலை என்று பூர்வவரலாறு கூறுகிறது.

மூன்று முடியில் ஒரு முடியில் விநாயகருக்கும் இரண்டாவது முடியில் சிவபெருமானுக்கும், மூன்றாவது முடியில் அம்மனுக்கும் ஆலயம் அமைத்திருக்கிறார்கள். இந்த மலையின் சிகரத்தையே லிங்க சொருபமாக வடித்துவிட்ட அற்புதம் ஒப்புயர்வற்றது. சைவர்களில் சிலர் கோயில்மீது வந்து இறைவனை தொழாமல் தெருவிலே நின்றபடியே தொழுதுவணங்குவார்கள். காரணம் இறைவன் இந்த மலைவடிவாகவே விளங்குகிறார் என்பது அவர்கள் நம்பிக்கை.

இந்த மலை உச்சிக்குச் செல்ல நாம் இதுவரை ஏறி வந்த படிகளின் எண்ணிக்கை 417 படிகள் ஆகும். படி பூராவும் மேலே கட்டிடம் கட்டி மூடப் பட்டிருப்பது ஒரு சிறப்பானதாகும். மண்டபத்திற்கு மேல் மண்டபம் கட்டி இக்கோவிலை சிறப்பித்திருக்கிறார்கள். இத்தகைய அமைப்பு வேறு எங்கும் அமைக்கப்பட்டதில்லை.

சுவாமி சன்னதிக்குச் செல்லும்போது சித்திர மண்டபம் வருகிறது. இந்த மண்டபத்தில் ஸ்தல வரலாறு பூராவும் சித்திரங்களாகத் தீட்டப்பட்டிருக்கிறதைக் காணுங்கள். தூண்களில் அற்புதமான சிற்பங்கள் செதுக்கியிருக்கிறார்கள். இந்த மண்டபத்தில் இருக்கும் சித்திரங்கள் சிலது சேதமுற்றிருப்பதால் இதனைப் புதுப்பிக்க திருப்பணிக் கமிட்டியார் முடிவு செய்திருக்கிறார்கள்.

இறைவன் சன்னதிக்குப் போகும்போது தட்சிணாமூர்த்தி சன்னதி வருகிறது. இந்த சன்னதியில் தான் மவுனகுருவிடம் உபதேசம் பெற்றார் தாயுமானார் என்ற தமிழ் சித்தர். திருச்சிராப்பள்ளியில், அரசு செலுத்திய விஜய ரெகுநாத சொக்கலிங்க நாயக்கரின் அரசியல் கணக்கரின் புதல்வராக திருச்சியில் தாயுமான அடிகள் அவதாரம் செய்தார்.

வளர்ந்து வருகையில் இந்த சந்நிதியில் உபதேசம் பெற்று தமிழ் உள்ள வரை தானும் வாழும், சிவாநுபூதிச் செல்வராக விளங்குவது இந்த ஸ்தலத்தின் சிறப்புக்கு ஒரு சிறப்பாகும். இராமநாதபுரத்தில் அடிகள் சமாதியடைந்தாலும், தாயுமான இறைவன் புகழை உலகெங்கும் பரப்ப தவமுனிவரான இவரது வர்லாறு தமிழ் மொழிக்கும், சைவ உலகத்திற்கும் பொக்கிஷமாகும்.

தாயாகி வந்த தயாநிதியாகிய எம்பெருமான். அதிருத்ரமூர்த்தியாகவும் விளங்கியவர் என்பதையும் தெரிந்து கொள்வது நல்லது. இந்த மூர்த்தத்திற்கு அபச்சாரம் செய்தால் அதன் பலன் என்ன என்பதையும் அறிந்து, தெளிவடைய வேண்டும்.

நாகநாதர் கோவிலைப்பற்றிச் சொல்லும்போது சாரமாமுனிவர் நந்தவனம் அமைத்து, செவ்வந்தி மலர் செடி பயிரிட்டு மலர் பறித்து சூடி நாகநாதரையும், தாயுமானவரையும் வழிபட்டு வந்தார். (தாயுமான

வருக்கு செவ்வந்திநாதர் என்று பெயரும் உண்டு.) அப்பொழுது உறையூரைத் தலைநகராகக்கொண்டு பராந்தக சோழன் ஆண்டு வந்தான். முனிவருடைய நந்தவனத்தில் புகுந்து ஒருவன் இறையவனுக்காக இருக்கும் மலரைத் திருடிக்கொண்டுபோய் சோழ மன்னனின் மனைவிக்குக் கொடுத்து வந்தான். முனிவர் இந்த செய்கையை கண்டித்து அரசனிடம் முறையிட்டார். அரசன் செவியில்முனிவரின் முறையீடு கேட்கவில்லை. அரசனே நீதி தவறினுல் என்ன செய்வது? முனிவர் இறைவனிடம் முறையிட்டர். கிழக்கு முகமாக கோவில் கொண்ட தாயுமானவர் மேற்கு முகம் திரும்பினுர். உறையூரில் மண்மாரி பொழிந்தது. அரசனும் கருவுற்ற அவன் மனையும் தப்பி ஓடினர், ஓடியவரைத் தொடர்ந்தது மண்மாரி. அரசன் மடிந்தான், அரசனின் மனைவி ஒருபிராமணனுல் காப்பாற்றப்பட்டுஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். இந்தக் குழந்தைதான் கரிகால் சோழன். தந்தை செய்தபிழைக்கு, மலைக்கோவில் உச்சி விநாயகர் கோவிலைக் கட்டி ஊரார் மெச்சும் புகழ் கொண்டான் கரிகால் சோழன்.

சுவாமியையும் அம்மனையும் வழிபட்டுவிட்டு கீழேயிருக்கும் மாணிக்க விநாயகரை வழிபட போகலாம். அதற்கு முன் இக்கோவிலைப் பற்றிய திருப்பணிகள் விபரம் இது.

இயல்பாகவே திருமலைக்கொழுந்தாய் முளைத்திருக்கும் மூலவரான சிவலிங்கமூர்த்தி அமைந்துள்ள கருப்பக்கிருஹம் திரிசிரசு செய்த திருப்பணி.

அதைச் சுற்றிலும் கட்டியிருக்கிற திருமதில் கண்டியன் தேவ மகாராஜா செய்த திருப்பணி.

அதைச் சுற்றிலும் கம்பத்தடி சுற்றுவரைக்கும் மகாபலி சக்ரவர்த்தி செய்த திருப்பணி.

மூல லிங்கமூர்த்திக்கு முன்மண்டபம் சுற்றிலும் சூரராக்க சோழன் சக்ரவர்த்தி செய்த திருப்பணி.

உச்சிப்பிள்ளையார் கோவிலும் சகஸ்ரலிங்கேசர் கோவிலும் சுகந்த குந்தளாம்பிகை திருக்கோயிலும் முன்மண்டபமும் சுற்று மண்டபமும் கரிக்கால் சோழன் செய்த திருப்பணி.

மலையைச் சுற்றிலும் கட்டியிருக்கிற திருமதில் சூரராக்க சோழன் செய்த திருப்பணி.

வன்னியடிக்குத் தென்புறமிருக்கிற வாசல் பிரபுடதேவராயர் கட்டிய திருப்பணி.

(கி. பி. 1522) திருமலை சவுரி நாயக்கர் கம்பத்தடி மண்டபம் கட்டிய திருப்பணி.

(கி. பி. 1565-ல்) திருக்கல்யாண நூற்றுக்கால் மண்டபம் பெரியவீரப்ப நாய்க்கர் செய்த திருப்பணி.

ஷ நாய்க்கர் காலத்தில் கோடைத் திருநாள் மண்டபமும் கொலுமண்டபமும் தீக்ஷப்பய்யர் செய்த திருப்பணி.

(கி. பி. 1619-ல்) விஜயரெங்க சொக்கநாத நாய்க்கர் கொட்டாரம் வன்னியடி மண்டபம் கட்டிய திருப்பணி.

(கி. பி. 1708) விஜயரங்க சொக்கலிங்க நாயக்கர் காலத்தில் ஜெவந்தியாண்டி சேர்வைகாரன் முன்னிலையில் அநுப்பி என்கிற தேவ அடியாள் வன்னியடிக்குக் கீழ் ஐந்நூறு கால் மண்டபம் கட்டிய திருப்பணி. இதனை ஆயிரக்கால் மண்டபம் என்றும் சொல்லப்படுகிறது. (இம்மண்டபத்தின் குறுக்குச் சுவர்கள் அடைத்து கடைகளாக்கி வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன. இவையே மலைவாசல் கடைகள். மலைவாசல் ராஜகோபுரம் கீழ்த்தூணில் அநுப்பியம்மாள் உருவம் அமைந்திருப்பதை நாம் காணலாம். முகம்மதியர் படையெடுப்புக்கு முந்திய காலத்தில் உற்சவதினங்களில் சுவாமி இம்மண்டபத்தில் எழுந்தருளியிருந்து வீதி உலவப்போதல் வழக்கமாயிருந்தது.

(கி. பி. 1540-1552) அரசு புரிந்த விஸ்வநாத நாயக்கர் காலத்தில் தெப்பக்குளம் நடு நீராழி மண்டபம் கட்டிய திருப்பணி. இதைத் தொடர்ந்து நாளது வரை திருப்பணிகள் நடைபெற்று வந்துள்ளன.

சக்தி மிகுந்த, வரப்பிரசாதியான இறைவன் மாணிக்க விநாயகர். தினசரி காலையிலும் மாலையிலும், சிறுவர் முதல் கிழவர் வரை பாப்பா முதல் பாட்டி அனைவரும் தெரிசித்து மகிழும் புனித இடம் மாணிக்க விநாயகர் சந்நிதியாகும்.

இறைவனை வலம் வந்து தெரிசித்து மனதினிலே ஒரு தீர்மானம் செய்யுங்கள்; அது சத்தியமாக சித்தியடையும் காணுங்கள்.

இத்தகைய சிறப்புமிக்க தாயுமான இறைவன் ஆலயத்திற்குத் திருப்பணிசெய்ய திருப்பணிக்கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. இக் கமிட்டியார் மலைப் பாதைக்கு மின் விளக்குகள் அமைத்திருக்கிருர்கள். மாணிக்க விநாயகரின் சன்னதியை விரிவுபடுத்தியிருக்கிருர்கள். மலைப் படிக்கட்டுகள் திருப்பணி தொடங்க இருக்கிறது. இந்தபுனிதமான திருப்பணிக்கு தாங்கள் உதவவேண்டாமா? தங்கள் குடும்பத்தில் உள்ளவர்களைக் கணக்கிட்டு ஆளுக்கு ஒரு ருபாய் வீதம் சேர்த்து

பொருளாளர்,
ஸ்ரீ தாயுமானவர் திருப்பணிக் கமிட்டி
மலைக்கோவில் தேவஸ்தானம்
திருச்சி-2.

என்ற முகவரிக்கு தமிழர்கள் எங்கிருந்தாலும் தாயுமானவர் திருப்பணிக்கு உதவுமாறு வேண்டுகிறேன். தாயுமான இறைவன்கருணை இரத்தினுவதிக்கு கிடைத்தது போல தங்கள் குடும்பத்துக்குக் கிட்டும் என்று வினயமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

குடும்பம் என்ருல் மகட்பேறு ஒன்றுதான் அதன் சிறப்பு. குழந்தையில்லாதவர்கள் திருப்பணிக்கு உதவினுல் புத்ரபாக்கியம் கிடைக்கும். தி ப்பணிக்கு உதவுபவர்கள் இல்லத்தில் சுகப்பிரசவம் நிகழும். சுகப்பிரசவம் நடைபெற வேண்டுமென்ற ஆசையில்லாத ஆண் பெண் உண்டா?

தாயுமானவர் திருப்பணிக்கு உதவுவது ஒன்றே இதற்கு உள்ள ஒரே வழி. மாணிக்கவிநாயகர் சன்னதி வழியாக கடைத்தெருவிற்கு வந்து சேருகிறோம். மீண்டும் மீண்டும் தாயுமானவர் சன்னதிக்கு வாருங்கள் என்று வேண்டி விடை தருகிறேன்.

———

# ROCKFORT TEMPLE

★



*L. C. Richard* M.A.

The Tiruchirapalli Rock has become the legendary symbol of South India. No published reference to the South is complete nor instantaneously recognisable without the picture of the rock on its wrapper. More than the Tiruchirapalli Cigars which remind foreigners of Tiruchi the rock attracts the attention of tourists. No visitor to the town fails to climb its summit and take a panoramic view of the country around and feast his eye on the beauty of the landscape and on the green fertility of Cauvery irrigation. To-day Industrial Development is rapid within the view of the rock. The boiler plant is nearing completion and a rifle factory has been commenced.

The Rock is believed to have been blown off the Mount of Kailas, as a result of a contest for power between Vayu and Athisesha. Athisesha, the God of Nagas had gripped Mount Kailas in a strangle-hold of death. Vayu, the God of Winds, immediately descended into the nether world with all living things Universal death due to suffocation was imminent. Lord Siva intervened and begged Athisesha to relax if only to save life. Vayu then shook himself out of the shackles. Mount Kailas threw off bits in a southerly direction. The first fell in Thirukalashtri, the second in Tiruchirapalli and the third in Trincomalee (Ceylon). Tirusiran, the three headed brother of Ravana who ruled here, is believed to have given his name to this town Tiru-Sira-palli. Others interpret the word as holy rock town or Tiru-Sinna-palli meaning holy little town. It would be more appropriate if Tiruchirapalli is traced to Tiru-Siram-palli meaning holy-head-temple referring to one of the peaks on the rock forming a natural lingam in the temple erected above it [Malaikoluntheeswarar]. Rama is believed to have worshipped the Linga on this rock on his way back to Ayodhiya from Lanka.

The linga is facing west which is unusual. The story goes that the Lord turned west and devastated the Chola ruler of Woraiyur who had failed to render justice to Sarama Munivar on his complaint that Sevvanthi blossoms intended for the worship of the Lord, were stolen from his flower garden by a flower merchant who sold them to the Queen. The devastation took the shape of sand storm which off wiped Woraiyur as well.

Viewed from the South, the Tiruchi Rock resembles a couchant bull on the head of which is planted the temple to Vigneswara. The Rock is otherwise known as Virushapachalam (meaning Bull Mountain) and Uchi Pillaiyar Malai. This temple to Ganesh has a very human story. Vibishna the brother of Ravana stood by Rama in the destruction of Lanka. He accompanied Rama to Ayodhiya and was presented with an image of Vishnu to be taken back to Ceylon. He was instructed definitely not to place it on the earth, under any circumstances But on reaching Srirangam, he had to answer the calls of nature and so he entrusted the image to a young brahmin to hold it for a moment. The brahmin youth was no other than Ganesh disguised! In a playful mood, he placed the image on the ground and escaped to the crest of the rock. On his return, Vibishana could not move the image, try as he might. In a fit of anger he sought out Ganesh and gave him a knock on his head which left a depression! Even to this day, visitors to the Uchipillaiyar Koil are invited to testify to this incident by feeling the head of Pillayar

Another moving story is told of God Thayumanavar. Dhanakupthan, a merchant who lived in Tiruchirapalli married Rathinavathi, daughter of Rathinakupthan of Kaviripoompattinam Rathinavathi never failed in her devotion to the Lord of the Rock, Sevvanthinathar (worshipped with Chrysanthemums). When she grew with child and wished very much for her mother to be present at the time of her confinement Cauvery went into spate. It was humanly impossible for any one to cross the river and reach Tiruchirapalli. But Rathinavathi never ceased in her prayers to the Almighty Sevvanthinathar who assumed the form of Rathinavathi's mother, attended the confinement and rendered human service in time of need to one of his bakthas. Guess the surprise of Rathinavathi when the real human mother walked into her house after the floods in Cauvery had subsided! Hence it is that Sevvanthinathar the Lord of the Rock is also worshipped as "Thayum-Anavar" (i. e. God the father who also manifested himself as God the mother).

Kediliappapillai, once lived in Tiruchirapalli. He was finance Minister to Vijayaragunatha Chokkalinga Naicker who ruled here about 300 years ago.



SAINT THAYUMANAR

Kediliappa Pillai named his son after the God of the Rock, Thayumanavar. He grew up in devotion to the God of the rock and was initiated into the mysteries of religion by Mouna Guru Swamigal who visited the temple. The Lyrics of Thayumanavar in praise of Thayumanaswami are treasured as the highest expression of Saiva Siddhantham. Although he succeeded his father as Minister under Vijayaragunatha Chokkalinga Naicker, he did not continue long and left for Vedaranyam, his native place to pursue his Bakthi Marga. The rock is famous for the two Pallava Cave temples. They were cut out by Mahendra Vikrama Varma who ruled from 600 to 625 A. D. There is an engraving on the pillars bearing evidence of Pallava rule.

In 1748, Mohammed Ali fled to Tiruchirapalli and proclaimed himself as Nabob. Thereafter much fighting ensued between the two rival Nabobs of the Carnatic, Chanda Sahib and Muhammed Ali. The situation grew worse in 1751. Mohammed Ali was hard-pressed by the forces of Chanda Sahib who had marched out from his Capital at Arcot. Chanda sahib and his French allies would have devastated the English force sent to relieve Muhammed Ali but for the strategic attack of Robert Clive on Chanda sahib's capital, namely Arcot. Chanda sahib flew back to save his capital. Thus entered the English into Tiruchirapalli in 1751. The French were stationed across the river Cauvery in Srirangam. The Rock became a fort area and was fortified for defence. The summit which rises 273 feet from the street below gave a perch for look-out during military movements. While the Cauvery bridge commemorates the gallant defence of the town against the Freneh in the 18th century, the thousand pillared mantapam and the Pallava caves remind us that they were once used as gun-powder magazines. A great portion of the 434 steps that lead upto the summit is covered. There is a bell-tower and the Municipal water supply reservoir is located on the Rock. A small town has sprung up around the Rock itself in the lower reaches on the inclined earthern planes formed to roll up stone for building the masonry of the temple and the outer walls. Although further secular use of the Rock is precluded for want of space, there is a burning desire to convert one of the Mantapams into an art gallery. There is mothing more beautiful on the sky line of Tiruchirapalli at night than the Uchipillaiar Koil ablaze with Electric Lights.

The temple needs renovation, on the whole. Every effort should, however, be made to preserve the original beauty of its sculpture and other art treasures of historic and cultural value. Dr. V. K. Ranganathan, Sri A. V. R. Krishnaswami Reddiar, Sri A. Muthukumaran and others deserve all our support in their determination to renovate the Temples on the Rock.

CONNEMARA PUBLIC LIBRARY
28 NOV 1965



134 + 202 + VII + 150
68
25.11.65

# P. R. N. (ஜவுளி) திருச்சி

★

★ பலவிதமான டிசைன்களில் வாயில், லான், சீட்டி தினுசுகள்
★ தரமிக்க சக்தி மில்ஸ் சில்க் ரகங்கள்
★ பம்பாய் நைலக்ஸ், டெரிகாட், சேலைகள் குஞ்சம் கட்டப்பட்டவை
★ இதர சில்குகள்
★ பின்னி கம்பெனியாரின் சூட்டிங் ஷர்ட்டிங்குகள்
★ அரவிந்த், காலிகோ, மற்றும் பல மில் ஷர்ட்டிங், சூட்டிங் துணிகள்
★ சுத்தமான டெரிலீன் சூட்டிங், ஷர்ட்டிங்
★ கைத்தறிச்சேலைகள், வேஷ்டிகள், சுத்தப்பட்டுச்சேலைகள் சோலிகள்
★ ரெடிமேட் ஷர்ட்டுகள்
★ எல்லாம் கிடைக்கும் ஒரே இடம்.
★ எங்கள் ஒருவிலைக் கொள்கை தங்களுக்கு நன்மையே.

## P. R. நாராயணசாமி அய்யர்

Branch :
FANCY HALL,
சைனா பஜார்,
திருச்சிராப்பள்ளி-2.

P. B. No. 401,
பெரியகடை வீதி,
திருச்சிராப்பள்ளி-8.

தந்தி விலாசம் : "BONTEX"

எங்களிடம் மொத்தமாகவும் ஜவுளிகள் கிடைக்கும்.

## P. R. நாராயணசாமி அய்யர் & Co.,

ஜவுளி வியாபாரம், கண்ணன் பஜார், காரைக்குடி.

நாமிருக்க பயமேன்? **R.T.C.** அழைக்கிறது.

# இராஜேந்திரா டுடோரியல் & இன்ஜினீயரிங் காலேஜ்

திருச்சி, தஞ்சை, குடந்தை, சென்னை, கோவை, சேலம், கடலூர், வேலூர், காஞ்சி, நெய்வேலி, காரைக்குடி, உதகமண்டலம்.

RTC

LEAD KINDLY LIGHT

CONNEMARA P...
28 NOV 1965

## COURSES OFFERED:

### Rajendra Engineering College

Overseer, Draughtsman, Tracer, Surveyor, A.M.I.E. (Ind.).
Private Tution for B.E., L.C.E., L.M.E. & L.E.E.

### Rajendra Tutorial College

S.S.L.C. (Oct. & March), Matriculation (Madras),
Pre-University (all parts), B.A., B. Sc., B. Com.

### Rajendra Technical Institute

Typewriting (English & Tamil), Short-hand, Book-keeping,
Theory & Practice of Commerce, Banking, Accountancy,
Commercial Geography, D. Com. etc.

**T. N. RAJENDRAN,**

B.E., A.M.I.E., (IND.), M.I.S.E., (IND.), M.I.C.E., (U.S.A.),
A.I.M.C., (IND.), M.I.C.H., (IND.), M.I.B.M., (U.S.A.),
PRINCIPAL.

Edited & Printed by The Owner A. V. R. Krishnaswamy Reddiar, & Printed by him at his Kannan Press, 24, Theradi Bazaar, Tiruchirappalli-2. Asst. Editor: T. L. Panchapakesan. [Phone: 2203]